

பாலமுருகனும் அடிமையும்

இரத்தினகிரி வரலாறு




பேராசிரியர். ஏ. சுப்பிரமணியம்.

பாலமுருகன் பப்ளிகேஷன்



31-1



ஓம் சரவணபவ

பாலமுருகனும் அடிமையும்.

இரத்தினகிரி வரலாறு.

பேராசிரியர். ஏ. சுப்பிரமணியம்.



பாலமுருகன் பப்ளிகேஷன்ஸ்.
இரத்தினகிரி, வேலூர் மாவட்டம்.

நூல் பற்றிய விவரம்.

பாலமுருகன் ஆசியோடும், பாலமுருகனடிமை சுவாமிகளின் வழிகாட்டுதலிலும்:

நூல் எழுதியது, நூல் வடிவ அமைப்பு, நூலின் முழுமையான எடிட்டிங், புகைப்படங்களின் அமைப்பு, அவைகளின் கீழ் பொருந்திய அறிவு விளக்கம், நூல் தயாரிப்பு, அனைத்தும் பேராசிரியர். ஏ. சுப்பிரமணியம்.

உள் ஓவியங்கள், நூலின் ஓவியம் பற்றிய செயல்கள் அனைத்தும் ஓவியர் தனுசு.

நூல் அச்சு, புகைப்பட அச்சு, அது தொடர்பான அனைத்துக் காரியங்களும். ஸ்நேகா, சென்னை - 14.

நூல் வெளியீடு, மற்றும் விற்பனை. பாலமுருகன் பப்ளிகேசன் அறக்கட்டளை. இரத்தினகிரி. பாலமுருகன் திருக்கோயில் வளாகம். வேலூர் மாவட்டம்.

நூல் வெளியிட்ட ஆண்டு - 2003, ஏப்ரல்.

கிளை அலுவலகங்கள்.

எண். 4, சேர்மன் முனுசாமி தெரு, ஆர்க்காடு. 632503.

எண். 35, பேங்க் காலனி, அன்னை அபார்ட்மெண்ட்,
3ம் தெரு, பால் பண்ணை, மாதவரம், சென்னை - 600051.

இரத்தினகிரி

தொலைபேசி : 66350, 67350
STD : 04172

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி.
கீழ்மின்னல் – 632 517. வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், தமிழ்நாடு.

7.4.2003

அன்புடையீர்!

அருளாசி.

இரத்தினகிரியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் அருள்மிகு பாலமுருகனைப் பற்றியும், அவனால் ஆட்கொள்ளப்பட்ட எம்மைப் பற்றியும் அன்பர்கள் பலர் அவ்வப்போது சிறு சிறு நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்றனர். திருக்கோவில் சார்பாகவும் சில நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

பெரிய அளவில் முழுச் செய்திகளும் உள்ளடக்கிய ஒரு நூல் இல்லையே என்ற குறை பல அன்பர்களுக்கு இருந்து வந்தது. அந்தக் குறையை இந்த நூல் மூலம் எமது உளமன்பர் பேராசிரியர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்.

ஒரு நூல் எழுதுபவர்கள் தாம் எழுத எடுத்துக் கொண்ட நூற்பொருளில் தெளிவில்

இரத்தினகிரி

தொலைபேசி : 66350, 67350
STD : 04172

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி.
கீழ்மின்னல் – 632 517. வட. ஆர்காடு அம்பேத்கர் மாவட்டம், தமிழ்நாடு.

தன்னிறைவு கொள்ள வேண்டும். பேராசிரியர் அவர்கள் அதை உணர்ந்து பெற்றுள்ளார்.

"எனக்கு முருகனைப் பற்றி எழுத வேண்டிய நிலையும், முருகமயமாக வேண்டிய கட்டாயமும் உண்டாயிற்று. அதற்காக மாதக் கணக்கில் முருக நினைவில் இருக்க வேண்டியதாயிற்று. ஒரு காலக் கட்டத்தில் ஒரு நாள் இரவு முழுவதும் முருகனை நினைந்து அழுகின்ற நிலையும் ஏற்பட்டது." என்ற அவரின் கூற்று இந்த நூல் எழுத முருகத் தகுதியும் பெற்ற பின்பே எழுதியுள்ளார் என்பதைத் தெளிவாக்குகிறது.

பேராசிரியர் அவர்கள் புலமை மிக்கவர் என்றாலும் இந்த நூலில் தன் புலமைத் திறத்தைக் காட்டாமல் தொடக்கப் படிப்பவரும் புரிந்து கொள்ளும் எளிய

இரத்தினகிரி

தொலைபேசி : 66350, 67350
STD : 04172

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி
கீழ்மின்னல் – 632 517. வட. ஆர்காடு அம்பேத்கர் மாவட்டம், தமிழ்நாடு.

நடையிலேயே எழுதியிருப்பது மனநிறைவை அளிக்கிறது.

திருக்கோவிலின் தொடக்ககால நிலைகளையும், பின்பு படிப்படியாக வளர்ந்து வந்த நிலைகளையும், வளர்ச்சிக்கு உதவிய அன்பர்களின் தயாள சிந்தையினையும் நிரல்பட எழுதியுள்ளார்.

கோவிலைத் தருவிய மக்கள், மக்களைத் தருவிய கோவில் என்ற நிலையால் இக்கோவில் விளங்குவதைப் பல இடங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

திருக்கோவிலோடும், என்னோடும் தொடர்புடைய அன்பர்களையும், தனை இணைத்தோரையும் நேரில் கண்டு நேர்காணல்களில் சேகரித்த செய்திகளில் கொள்வன கொண்டு தள்ளுவன தள்ளி செவ்வியுடைய பகுதிகள் படிப்போரின்

தொலைபேசி : 66350, 67350
STD : 04172

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி
கீழ்மின்னல் – 632 517, வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், தமிழ்நாடு.

நெஞ்சை ஈர்த்துக் கொள்ளும் திறமையினை,
நேர் காணலில் கேட்டவற்றையெல்லாம்
தொகுத் தெடுத்துத் தன் போக்கில் கட்டுரை
களாகத் தராமல் ஒரு நாடகப் போக்கில்
உரையாடல்களாகவே தந்திருப்பது,
படிப்பவர்கள் தாங்களே வினா எழுப்பி
விடை பெறுவது போன்ற உணர்ச்சியைத்
தந்து மனநிறைவைத் தரும்.

" என் மனத்தின் சாயம் யார்மேலும்
பூசப்படாமல், யாரையும் அவரவர்
இருப்பது போல் காண்பதற்கும், காட்டு-
வதற்கும் நான் எப்போதும் முயன்று
வருகிறேன் " என்பது பேராசிரியர்
அவர்களின் கொள்கை. இக்கொள்கை
யை இந்நூலில் நூற்றுக்கு நூறு
கையாண்டிருக்கிறார்கள். இருந்தது

இரத்தினகிரி

தொலைபேசி : 66350, 67350
STD : 04172

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி,
கீழ்மின்னல் – 632 517. வட. ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், தமிழ்நாடு.

இந்தப்படி இருந்து காட்டியுள்ளார்.

நூல் எழுத பேராசிரியர் அவர்கள் எடுத்துக் கொண்ட உழைப்பும், முயற்சியும், ஏடுதேடி தீர்வை பக்கத்துக்குப் பக்கம் பளிச்சிடுகிறது. உள்ளது உள்ளபடி பளிச்சிடுகிறது.

பேராசிரியர் அவர்கள் சிறந்த நூலாசிரியர் என்பதோடு நில்லாமல், சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்குகிறார்.

புகைப்படங்களை நிறைவாகத் தொகுத்துள்ள பாங்கும், கட்டுரைகளின் விளக்கமாக பொருத்தமான இடத்தில் பொருத்தமான படங்களை வைத்தும் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் இதைக் கொண்டு வந்துள்ளார்.

அன்பர்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பை பேராசிரியர் இந்நூலின் மூலம் நிறைவு செய்துள்ளார்கள்.

இரத்தினகிரி

தொலைபேசி : 66350, 67350
STD : 04172

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி.
கீழ்மின்னல் – 632 517. வட. ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், தமிழ்நாடு.

இந்நூலைப் படிப்பவர்கள் இரத்தினகிரியின்
வரலாற்றையும், திருக்கோவிலின் வளர்ச்சி
யையும், முருகனின் அருளாட்சியையும்
தெரிந்து கொண்டு இங்கு வந்து
அவனை அருள் நோக்கால் கண்டு அருள்
பெற்று மகிழவும், சிறந்த தொண்டு
செய்த எமது உடுவைப் பேராசிரியர்
ஏ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் பெரும்பேறு
பெற்று மகிழவும் எல்லாம் வல்லான்
இக்குன்றுறையோன் எந்தை
இளவழகனை இறைஞ்சி வாழ்த்தும்

பாலமுருகனடிமை
7-4-2003

ஓம் சரவணபவ

'சரவணபவ' என்கிற முருக மந்திரத்திற்கு இராமலிங்கப் பெருமான் கீழ்வருமாறு பொருள் எழுதுகிறார்.

"உண்மையே	'ச்'கரமாய்	-	ச
விஷய நீக்கமே	'ர்'கரமாய்	-	ர
நித்ய திருப்தியே	'வ்'கரமாய்	-	வ
நிர் விஷயமே	'ண'கரமாய்	-	ண
பாவ நீக்க ஏதுவே	'ப்'கரமாய்	-	ப
ஆன்ம இயற்கை குணமே	'வ்'கரமாய்	-	வ."

எனவே 'சரவணபவ' என்று சொல்லும்போது மேற்கண்ட அத்தனை குணங்களும் ஒருமையுடன் ஓதுபவர்களை வந்து அடையும்.

'சரவணப்வ' என்று சொல்லும்போது,

"ஒருவனுக்குச் சத்தியமும், தீய ஆசைகளின் நீக்கமும், ஒவ்வொரு விநாடியும் திருப்தியும், ஆசைகள் அற்ற நிம்மதியும், பாவ எண்ணங்களை நீக்குவதற்கான சக்தியும்,

அண்ட சராசரங்கள் அனைத்தும் நிறைந்து, எல்லாம் கைகூட வைக்கும் இயற்கை குணமும் - இவை அனைத்தும்,

அவன் அந்த மந்திரத்தைச் சொல்லும் அழுத்தத்திற்கும், ஆழத்திற்கும் ஏற்ப உண்டாகும். இந்த அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, இந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.

முதலில் என் தமிழுக்கு
என் ஆழ்ந்த வணக்கங்கள்.

என் தமிழ். என்தாய் பாலமுருகனடிமை சுவாமிகள் போன்ற தமிழ். நான் எப்படி எப்படி எழுத நினைத்தாலும்; எதை எதை எழுத நினைத்தாலும்; அதை அப்படி அப்படி யெல்லாம் என் மனத்தில் ஊற வைத்து,

அதற்கும் மேலாக, "என் மகனே' இப்படி, இப்படி எழுது; இப்படி இப்படி அழகாக வரும்; இன்னும் இன்னும் அழகாக வரும்" என்று,

என் ஆத்மாவில் ஊறி, என் அறிவில் ஊறி, என் உடம்பில் ஊறி, என் எழுத்துக்களுக்கு அமுதத்தன்மையைத் தந்த என் தாய்த் தமிழ்க்கு நன்றி.

தாய்க்கு எவன் நன்றி சொல்ல முடியும்? அவள் தாளடிகளில் என்றும், என்றென்றும், மூச்சுக்கு மூவாயிரம் கோடி, மூவாயிரம் கோடி, என் முகம் கவிழ்ந்த நெடுஞ்சாண்கிடை வணக்கங்கள்.

தாயே! என்னை என்றும் உன் மடியில் வைத்திரு.

ஓம் சரவணபவ

பாலமுருகனும் அடிமையும்

பொருளடக்கம்.

ஓம் சரவணபவ

1. அர்ப்பணம்.

வெற்றி வேல்! வீர வேல்!

எல்லாப்புகழும் இரத்தினகிரி
பால முருகனுக்கே!
எல்லாப்புகழும் அவனடிமை
பாலமுருகனடிமை சுவாமிகளுக்கே!

*** *** *** *** ***

மயிலேறும் மன்னவா!
என்மனம் ஏற இங்கே வா!

*** *** *** *** ***

மலை நின்ற திருக்குமரா! மால் மருகா!
தமிழ்க்கலை தந்த கலைச்செல்வா!
வேல் முருகா! வேல் முருகா!

*** *** *** *** ***

தெய்வீகம் என்ன என்பதை எளிய மக்கள்
முதல் பெரும் சாத்திரிகள் வரை: தெள்ளத்
தெளிந்து கொள்ளும் வேதம்.

இரண்டு அனுபவஸ்தர்களின்
கூட்டுறவில் முருகன் அள்ளி
வைத்திருக்கும் ஞானம்

*****

எல்லாப்புகழும் பால முருகனுக்கே!
எல்லாப்புகழும் பால முருகனுக்கே!
எல்லாப்புகழும் பால முருகனுக்கே!

*** *** ***

எல்லாப்புகழும் அவனடிமை
பாலமுருகனடிமை சுவாமிகளுக்கே!

*****

2. என் தாயின் திருவடிகளில்.

'நண்பனாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய்,

பார்வையிலே சேவகனாய், அருள் பொங்கிப் பெருகி,

என் ஒவ்வொரு எழுத்தையும் சுவைத்துப் பாராட்டும்,

மாபெரும் கலைஞனாய், கவிஞனாய், ஞானியாய், வள்ளலாய்,

முருகனின் வடிவமாய், எனக்கு அமைந்து,

இந்த நூல் உருவாகி, இந்த உலகின் முன்வர முழுமையான காரணமாக அமைந்த தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளின் திருவடிகளில்,

ஓர் ஒருவயதுக் குழந்தை, தன்னைப் பெற்றெடுத்துத், தன் வளர்ப்பு நலம் காத்து வரும், தாயின் திருவடிகளில், தன் சின்னஞ்சிறு கைகளால் மலர்களை வைப்பதுபோல், நான் இந்த நூலை வைத்து வணங்குகிறேன்."

3. சமர்ப்பணம்.

இந்த இரத்தினகிரி என்று தோன்றியதோ அன்று முதல், இன்று வரை;

இதில் பாலமுருகன் அருள் என்று வெளிப்படத் துவங்கியதோ அன்று முதல், இன்று வரை;

ஒரு பைசா முதல்; பல லட்சம், லட்சம், லட்சங்களாக வாரிக் கொடுத்த வள்ளல்கள் வரை;

ஒரு துரும்பை எடுத்துப் போட்டது முதல்; ஒரு பெரிய மலைப் பாறையை வெட்டி எடுத்துத் தன் தோளில் சுமந்தது வரை;

எந்தெந்த வேலைகள், எந்தெந்த நேரத்தில், இந்தக் கோயிலுக்குத் தேவைப்பட்டதோ; அந்தந்த வேலைகளை, அந்தந்த நேரத்தில் செய்து;

இந்தக் கோயிலுக்குப் பாடுபட்ட எல்லாப் புண்ணியவான்கள், புண்ணியவதிகள்.

எதிர்காலத்தில் இந்தக் கோயிலுக்குப் பாடுபடப் போகும் எல்லாப் புண்ணியவான்கள்; புண்ணியவதிகளை வணங்கி,

பாலமுருகக் கடவுள்

அவர் மகன் பாலமுருகனடிமை

ஆகிய இருவரின் எல்லையற்ற கருணையினால்

பாலமுருகனும் அடிமையும் -

"இரத்தினகிரி வரலாறு"

என்னும் மகத்தான இந்த நூலை, அவர்கள் அனைவருக்கும்

மிகுந்த அன்புடனும், மிகுந்த பணிவுடனும், மிகுந்த மரியாதைகளுடனும்

சமர்ப்பிக்கிறேன்.

பேராசிரியர் ஏ. சுப்பிரமணியம்.

தொலைபேசி : 66350, 67350
STD 04172


பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி.
கீழ்மின்னல் – 632 517. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம். தமிழ்நாடு.

அருளாசி.

பாலஅடிமை
1.6.91

எங்கே அறத்தின் ஆலயம் உள்ளதோ
எங்கே அன்பின் வழிபாடு உள்ளதோ
எங்கே அறிவின் திருவோலக்கு உள்ளதோ
அங்கே தர்மமே! ஆமாம் மனிதமே!


சமயப் பணியோடு எம்மை வரம்பு-க்கு உள்ளாக்கிச் செயல்பட்டு வந்த காலகட்டத்தில், 1976-77-வரை, அன்பன் எம்மைச் சமுதாயநலப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற தாக்கமான உள்ளுணர்வு வளர்த்திட ஊன்றுகோலாய், அவ்வப்போது சந்திக்கும் போதெல்லாம் தன் கருத்தினைத் தெளிவாக, உறுதியாக, இத் தமிழ்ச் சமுதாயத் திருத்தொண்டர்கள் செயல்பட்டாக வேண்டும்




இந்த வடிவில் இருக்கும் முருகன்,




இந்த வடிவில் தன்னிடம் வந்த
இளைஞர் சச்சிதானந்தத்தை




தன் கோயிலுக்குள் நுழைந்த ஐந்து நிமிடங்களில், இப்படியாக்கி கோயிலுக்குள் உட்கார வைத்துவிட்டான்.




இப்படிக் கையில் எலுமிச்சை, திருநீறு கொடுத்து நிற்க வைத்துவிட்டான்.




கோயிலுக்குப் பக்கத்தில் மலை பாறைமேல் நிற்க வைத்துத் தன் வேலையை ஆரம்பிக்க வைத்துவிட்டான்.




கொட்டகையும் போட்டுக்கொடுத்துக்,
கூட்டத்தையும் கூட்டி வைத்துவிட்டான்.




தன்னை வழிபட வைத்துத் தன் சக்தியை எப்போதும் அவர் மீது செலுத்தத் தொடங்கிவிட்டான்.




கோலும் கொடுத்து, கண்களில் கூரிய பார்வையும் கொடுத்து, தன்கோயில் வாசற்படி காத்து, மக்களுக்குத், தன் வற்றாத அருளை வாரி வழங்க வைத்தான்.




மக்களை வாட்டி வதைக்கும் துயரங்களை முருகன் அருள்கொண்டு, சீட்டு எழுதி நீக்கும் முருகனின் சீரிய அருட்பணி...




''மக்கள் என் அருள் நிழலில் அமரக் கட்டு கோயில்களை.'' அவன் ஆணை. விநாயகர் கோயிலுக்குக் கடைக்கால்.




"முருகன் என் உள் இருக்கிறான். முடியாத செயல் இல்லை. "என் முருக பக்தர்களே! நீங்கள் தாளில் எழுதித் தருவதை அவன் தாளில் வைக்கிறேன். காலமறிவான்; கருணைபுரிவான்; இரத்தினகிரியான்."




"இங்கே இரத்தினகிரியில் எத்தனை முகங்கள்! எத்தனை, எத்தனை! அத்தனையும் அப்பன் முருகனின் அருள் தோற்றம்!




இங்கே கால் ஊன்றி, கையில் கோல் ஊன்றி, விரலில் சாவி ஊன்றி, கண்களில் ஒளியும் உரமும் ஊன்றி, நடக்கிறது நாயகன் பாலமுருகன் சாம்ராஜ்யம்.




"சிரித்து வாழவேண்டும். முருகன் சிரிப்பில் வாழுகின்றான்."




எழுதும் பணியே பணியாய் வைத்தான் அழுது அரற்றுவோர் துயரம் போக்க. எத்தனை எத்தனைக் கடிதங்கள்! எத்தனை எத்தனைச் சீட்டுக்கள்!




“வாரித் தருகிறான் முருகன். அவன் பக்தர்களே! வாங்கிச் செல்லுங்கள்.”




"இது முருகனின் மூடாத கடை! முடியாத கதை!"




"பார்க்கும் இடமெல்லாம் முருகன்.
பார்வை போகும் திசையெல்லாம் முருகன்."




"அமர்ந்தாலும் முருகன். அருள் ஒளியான் முருகன்.
கண்ணெல்லாம் முருகன். கருத்தானவன் முருகன்."




"முருகன் திருநீற்றை நெற்றியில் வைக்கிறேன். துயர்கள் எல்லாம் தீரும். நன்மைகள் எல்லாம் பெருகும்."



"என்ன சொல்றான் முருகன்? சிரிக்கச் சொல்றானா?"




"வேலும் மயிலும் முருகனின் அருளும், அடிமையும் நமக்குத் துணை."



"சிரிப்புக்கும், சிறப்பிற்கும் முருகன்."



திருநீறு அபிஷேகம் முடிந்து தீராத வினைகளைத் தீர்க்கும் முருகனுக்கும் அம்மாக்களுக்கும் சுவாமிகள் தீபம் காட்டுகிறார்.




அம்மாக்களுடன் இருக்கும் அலங்கார முருகனுக்கு ஆரதி தீபத்தைத் தன் ஆவல் தணியக் காட்டும் முருகனின் அடிமையான சுவாமிகள்.



அருள் பொங்கும் பாலமுருகன்.



தெய்வீகம் பொங்கும் தியான முருகன்.



நிரந்தர அடிமை

தொலைபேசி : 66350, 67350
STD 04172

பாலமுருகனடிமை
அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில், இரத்தினகிரி.
கீழ்மின்னல் – 632 517. வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம். தமிழ்நாடு.

எனச் சுட்டிகாட்டி உரையாடும் எமது உறுவலன்பர் பேராசிரியர் ஏ.சுப்பிரமணியம் அவர்களின் முயற்சி, வரலாற்று முக்கியத்துவம், கற்பனைக்கிடமின்றி, உண்மை நிலையைத் தெளிவுற விளக்கிடுவார் என்பதில் எமக்கும் முழுமையான அழுத்தமான நம்பிக்கையுண்டு.

அவரது முயற்சி வெற்றி பெற உலக தெய்வயின் ஜெகத் செம்மலாம் எந்தன் அண்ணன், இக் குன்றுறை இளவழகனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

பாலமுருகனடிமை

5. நான் நன்றி சொல்ல வேண்டியவர்கள்.

இந்தப் புத்தகம் எழுதுவதில் நூற்றுக் கணக்கானவர்கள் எனக்குப் பலவகையிலும் துணை செய்திருக்கிறார்கள். எல்லோருக்கும் நன்றி சொல்கிறேன்.

அதில் முதன்மையானவர் சுவாமிகள். என் எழுத்தில் துணை செய்தவர் அவர் ஒருவர்தான். நான் எழுதிய 500 பக்கங்களையும் ஒரு முறைக்குப் பல முறை படித்திருக்கிறார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட போட்டோக்களை யெல்லாம் பார்த்துப் பார்த்து ஆலோசனையும் உற்சாகமும் தந்திருக்கிறார்.

ஒரு சில பகுதிகளை எழுதி மேன்மைப்படுத்தி இருக்கிறார். அவர் செய்துள்ள இந்த வேலை மிக மிகக் கடுமையான வேலை. நான் எழுதி எழுதிப் பார்த்து, என் மனம் அதில் நிறைவு கொண்டதும் டைப் செய்து, ஸ்பைரல் பைண்டு செய்து, படிப்பதற்கு எளிதாகவும், மகிழ்ச்சியாகவும், பார்ப்பதற்கும் மனதிற்கும் இதமாக இருக்கும்படி சுவாமிகளிடம் கொண்டு போய் தருவேன்.

முதலில் இருந்து கடைசி வரையில் ஓர் எழுத்தைக் கூட விடாமல், அவர் தன் கவனத்தை எடுத்துச் சென்று அவை சரியாக இருக்கிறது என்று 'டிக்' மார்க் அவர் போடும்

வரையில், இரவு பகல் எந்த நேரமும் அவர் கவனத்தை இந்த எழுத்தின் பக்கம் திருப்பியபடியே இருப்பேன்.

கோயில் கட்டும் பரந்த இடத்தில், நடை பெறுகின்ற பல்வேறு வேலைகளில், அவர் உடம்பு நடந்தபடியும் கவனம் பாய்ந்தபடியும் இருக்கும். நூற்றுக் கணக்கானவர்கள் வேலை செயவதை மேற்பார்வை பார்க்க வேண்டும். கோயில் வேலைக்காக வாங்க வேண்டிய சிமண்டு, மணல், கல், மரம், இரும்பு, தரைபோட கிரேனைட் கற்கள் இவைகளை வாங்க வேண்டும், இந்த வேலை செய்பவர்கள் எல்லோருக்கும் அன்றாடம் ஆகும் கூலிச் செலவுகளும் மற்றச் செலவுகளுமான முப்பதாயிரம், நாற்பதாயிரம் ரூபாய்களைச் சம்பாதித்தும், சமாளித்தும் ஆக வேண்டும்; கோயிலுக்கும், தன்னை நாடியும் வரும் பக்தர்கள் கூட்டம், வி.ஐ.பிக்கள், அரசு அலுவலர்கள்; மருத்துவமனை, பள்ளிக்கூட வேலைகள்.

எந்த வேலையாக இருந்தாலும் முதல் வேலையாக அபிஷேக நேரத்தில் பகலிலும், மாலையிலும் கோயிலுக்குள் முருகன் பக்கத்தில் நின்று, பக்தர்களின் சிட்டுக்கு பதிலும், விபூதியும், பிரசாதமும் கொடுக்கின்ற வேலை. இதற்கு நடுவிலே நான். இரவும் பகலும் முடியாத அந்த வேலைகள் நடுவே என் வேலையையும் முடித்துக் கொடுக்க முனைந்தார். என்னோடு உட்கார்ந்து விடுவார்; அழகாக முடித்து நிறைவு செய்வார். இரவு ஒருமணி, ஒன்றரை மணி, இரண்டு மணி வரை கூட ஆகும்.

அதற்காகச் சுவாமிகளுக்கு என் ஆழ்ந்த நன்றிகளைச் செலுத்துகிறேன்.

ஒரு செய்தி

இந்த நூல்முழுவதும், சுவாமிகள் ஆழ்ந்து நோக்கிய நோக்காலும், முகக் குறிப்புகளாலும் சைகையாலும், எழுதிய காட்டிய குறிப்புகளாலும், வெளிப்படுத்திய செய்திகளை, நான் கட்டுரையின் ஓட்டம் தடைபடக் கூடாது என்பதற்காகப் பல இடங்களில் சுவாமி பேசினார்; கூறினார்; சொன்னார்; என்று குறிப்பிட்டுள்ளேன்.

அவைகளை சாமிகளின் முகக்குறிப்பு, சைகைகள், எழுதிக்கட்டிய குறிப்புகள் என்று படிக்கும்படி படிக்கின்ற மேன்மைமிக்கவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து என் மகள் திருமதி மகேஸ்வரி கணேசன். புத்தகத்தை அச்சிடுவதற்கும், அது தொடர்பான எழுத்து வேலைகளுக்காகவும், நான் சென்னையில் பலமாதங்கள் வசிக்க வேண்டி வந்தது. மாதவரத்தில் அமைதியான சூழலில், தோப்புத் துரவுகளுக்கு அருகே இருக்கும் எங்கள் வீட்டில், தனியாகத் தங்கி அந்த வேலையைச் செய்ய வேண்டி வந்தது.

இந்தக் காலத்தில் நான் பட்ட கஷ்டம் மிக அதிகமான கஷ்டம். மாதவரம், சென்னையின் மையப் பகுதியிலிருந்து 25 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கின்ற இடம். அங்கிருந்து ஏறக்குறைய அன்றாடம் அச்சகம் வந்தாக வேண்டும் அல்லது அதன் தொடர்பான வேலைக்கு வந்தாக வேண்டும். நான் 1960ஆம் ஆண்டில் இருந்து சென்னை வாசி. இப்போது சென்னை நகரத்தின் ரோடும், பஸ்சும், நெருக்கடியும், இருக்கும் கொடுமை எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

அதிலும் மாதவரம் பால்பண்ணைச் சாலையின் கொடுமையும், அதில் ஓடும் பஸ்களின் அலங்கோலமும், மண்ணடி காய்லான் கடையில் போய் நிற்கவும் வெட்கப்படும் அந்த பஸ்கள் சாலைகளில் ஓடும் மாட்சியும்; ஒருநாள் பின்னாலே இருக்கும் சீட்டுகள், வண்டி ரோட்டின் பள்ளத்தில் வேகமாக இறங்கியபோது குதித்து குதித்துப் பறந்தாடிய அழகான நடனங்களும்,

வண்டி ஓடும்போது அதில் இணைந்துள்ள எல்லா இரும்புச் சாமான்களும் 'ஜல, ஜல, ஜல்' என்று போடும் சதங்கைச் சத்தங்களும் அடடா!

இதற்குள்ளே மனிதர்கள்!

இந்த நிலையில் மழைக்காலத்தில் எங்கு வேண்டுமானாலும் பஸ் நின்று விடும். எதிர்பார்த்து, எதிர்பார்த்து இரவு 9 மணி வரைக்கும் கால்கடுக்க நின்று, பஸ் நிலையத்தில் காத்துக் கிடக்க வேண்டி இருக்கும். தோளில் இரண்டு கனமான பைகளை மாட்டிக் கொண்டு, அந்த பஸ்சுக்கும், இந்த பஸ்சுக்குமாக அலைந்து கொண்டு, அடித்துப் பிடித்துக் கொண்டு பஸ்சுக்குள் ஏறி;

அளவில்லாமல் எப்போதும் அடைத்துக் கொண்டு வரும் கூட்டத்தில் இடித்தும், இடிவாங்கியும்; தள்ளிக் கொண்டும், தள்ளப்பட்டுக் கொண்டும்; சத்தம் போட்டுக் கொண்டும், சண்டை போட்டுக் கொண்டும் சாண்டில்யனின் ராஜதிலகம் பரமேஸ்வர வர்மன் படை கங்க மன்னன் படையோடு போட்ட சண்டை கெட்டது!

இரவில் நீண்டநேரம் பஸ்சை எதிர்பார்த்தபடி ஏதாவது ஒரு பஸ் ஸ்டாண்டில், சில நாட்கள் நின்றிருக்கிறேன். வீட்டிற்கு பஸ்நிலையத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் நடந்து போக வேண்டும். ஒருநாள் இரவு 11½ மணிக்கு நடந்து சென்று சேர்ந்திருக்கிறேன். இந்த அறுபது வயதில்.

இதோடு சாப்பாட்டுப் பிரச்சனை. கடவுள்தான், முருகன்தான் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தான். அவருக்கு எப்போது விருப்பமோ அப்போது சாப்பாடு போடுவார். அடிக்கடி விரதம் வைத்து விடுவார். யார் போய் அவரைக் கேட்பது? இந்த என் கஷ்டங்களை எல்லாம் குறைப்பதிலும், நீக்குவதிலும் என் மகள் மேற்கொண்ட காரியங்களும், நான் வீடு போய் சேர்ந்தேனா என்பதை அவ்வளவு இரவிலும் அறிந்த பிறகே, அமைதி கொள்ளும் தாய்மையும்!

கடவுள் ஒவ்வொரு மனிதருக்கும் ஒருமகள் இருந்தாக வேண்டும் என்று வைத்திருப்பதன் ஆழ்ந்த அர்த்தம் எனக்குப் புரிந்தது. மகள் இல்லாதவர்கள் பாவம் செய்த் ஆத்மாக்கள் தாம். என் அன்பான மகளுக்கும் நன்றி சொல்லுகிறேன்.

அடுத்து என் மருமகர் திரு. K. கணேசன். நாடுகள் தழுவிய நல்லவொரு கம்பெனியில் பொறுப்பான பணியில் இருக்கும் அவர், கூடுமானவரை அவர் வீட்டிற்கு வந்து நான் தங்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார். தங்கச் செய்வார். அவர் வீட்டிலிருந்து நான் போக வேண்டிய இடங்களுக்கு முடிந்தவரை அவர் வண்டியில் கொண்டு போய் விடுவார். அதோடு மற்றொரு வகையில் அவருடைய உதவி மகத்தானதாக அமைந்தது.

நான் புத்தகம் எழுதுவது தெரியவந்த நாட்களில் இருந்து, மிகுந்த

ஆர்வத்துடனும் அன்புடனும் "புத்தகம் எழுத ஆரம்பிச்சிட்டீங்களா?" என்று கேட்பார். பார்க்கும் ஒவ்வொரு முறையும் இதே அன்பான கேள்வி. ஒரு ஆறுமாதம் 'ஆரம்பிக்கிறேன். ஆரம்பிக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டே வந்தேன். அதற்கு மேலும் அதை அவரிடம் சொல்வது அவ்வளவு நன்றாக இல்லை. ஒரு நாள் கொஞ்சம் எழுத ஆரம்பித்து விட்டு. 'ஆரம்பித்து' விட்டேன்' என்று சொன்னேன்.

பிறகு "முடிச்சிட்டீங்களா?" என்று அதே அன்போடும் ஆர்வத்தோடும் கேட்க ஆரம்பித்தார். நான் 'முடிஞ்சிடும்! முடிஞ்சிடும்' என்று சொல்லிக் கொண்டே வந்தேன். இது ஓர் ஆறுமாதத்திற்கு ஓடியது.

பிறகு 'எப்ப முடியும்' என்று கேட்க ஆரம்பித்தார். எம்.ஜி.ஆரிடம் அவர் நாடோடி மன்னன் படம் எடுத்த போது படம் பிடிப்பது நீண்டு கொண்டே போனது. 'எப்ப முடிப்பீங்க? எப்ப முடிப்பீங்க' என்று அவரைக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர் சொன்னார். 'இது நான் முடிக்கிற வேலையில்லே. அதுவா முடிய வேண்டிய வேலை' என்று. இதை நான் அவருக்குச் சொன்னேன்.

அப்போதும் பார்க்கும் போதெல்லாம் முடிஞ்சிட்டுதா? என்று கேட்பார். அவருக்கு ஒரு திருப்தியும் மகிழ்ச்சியும் கொடுப்பதற்காக எழுதியுள்ள பகுதிகளையும். எடுத்துள்ள படங்களையும் அவருக்குக் காட்டி விவரம் சொல்லியபடி வேலைகளை வேகமாகத் தொடர்ந்தேன். அப்படி என்னைத் தொடர்ந்து வேலை செய்ய வைத்ததற்கு நான் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

அடுத்து என் மகன் உமாசங்கர். நான் எழுதிக் கொண்டே போவதையும், போட்டோக்கள் எடுத்துக் கொண்டே போவதையும் பார்த்து. "இது ஒண்ணும் முடியற கதையா தெரியலே! ரெண்டையும் நிறுத்திட்டு. எந்த அளவு? எத்தனைப் பக்கம் புத்தகம்னு முடிவு கட்டி, மேட்டரைச் சாமி கிட்டக் கொண்டு போய் குடுங்க" என்று அவர் ஏறக்குறைய அன்றாடம் சொல்ல ஆரம்பித்து விட்டார். அதற்கு ஏற்றார் போல 1000 பக்கங்களுக்குமேல் எழுதுவதும் திருத்துவதும் போய்க்

கொண்டே இருந்தது. முப்பது வருடங்களுக்கு மேலாக அன்றாடம் வளர்ந்து கொண்டே வரும் உயிரோட்டமான நிகழ்ச்சிகளை எழுதிக் கொண்டே போக வேண்டி இருந்தது.

அவர் சொன்னதுபோல் மேலும் எழுதிக் கொண்டே போவதை நிறுத்தி, எழுதியதில் ஒரு பகுதியை நல்ல முறையில் டைப் செய்து, ஓரங்களில் அலங்காரக் கோடுகளால் அழகு படுத்தி, இரண்டு படிகளைப் பார்த்ததும் மனத்தில் ஒரு குளிர்ச்சியையும் அழகுணர்வையும் ஏற்படுத்தும் வகையில் நல்ல முறையில் பைண்டு செய்து, சாமிகளிடம் ஒன்றும் அவரிடம் ஒன்றும் கொடுத்தேன்.

அப்போதுதான் எங்களுக்கே நாங்கள் செய்வதில் ஒரு திருப்தி ஏற்பட்டது. சுவாமிகளுக்கு நல்ல மனநிறைவு. இவர் 'இங்கே அது, சூப்பர்! அங்கே இது நல்லா இருக்கு! அங்கே சரியில்லே. அதை மாத்தணும், இத மாத்தணும். இது தேவையில்லை. இது இத்தனைப் பக்கம்தான் வர வேண்டும்' என்று ஆரம்பித்து விட்டார்.

மிகப் பொறுமையாக அவர் கூறியதை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்தேன். பிறகு மற்ற பகுதிகள் தயாராகியது. படித்து நன்றாக இருக்கிறது' என்றார். அது முடிந்ததும் உடனே பிரிண்டிங்; மார்க்கட்டிங் என்று ஆரம்பித்து விட்டார். புத்தகத் தயாரிப்புக்கான தொகை அதிர்ச்சியூட்டும் அளவில் உயர்ந்திருந்தது. அதிலும் ஒரு கணிசமான தொகை ஏற்பாடு செய்தார். அவருக்கு நான் மிகுந்த நன்றி சொல்ல வேண்டும்.

அடுத்து என் அன்பான துணைவியார். எங்கள் குடும்பமே சுவாமிகளிடம் ஆழ்ந்து பக்தி கொண்ட குடும்பம். என் துணைவியாருக்குக் கொஞ்சம் அதிகம் என்றே சொல்லலாம். புத்தகம் எழுதுவது நீண்டு கொண்டே போவதால், 'உடனே எழுதி சாமிகளிடம் கொடுங்க' என்று ஆரம்பித்துவிட்டார். நான் வேறு புத்தகம் படித்தாலும், தவிர்க்க முடியாதவாறு வேறு எழுத்து வேலையில் ஈடுபட்டாலும் 'உங்களை நம்பி சாமி இந்த வேலையைக் கொடுத்திருக்கிறார். விளம்பரமெல்லாம் கொடுத்திருக்கிறார். ஏதாவது ஆச்சி! உடனே முடியுங்கள்' என்று சத்தம். சாப்பாடு போடும் போதெல்லாம் இதுவே உபதேசம்.

தினமும் சாமி கும்பிடும் போதெல்லாம் 'முருகா! இந்தப் புத்தகம் நல்லா வரணும். சாமிக்கு சந்தோஷமா இருக்கணும். சிக்கிரம் முடியணும்.' இதுவே பிரார்த்தனை. இந்தப் பிரார்த்தனையின் பலனாகவே நான் சென்னை சென்று நூலில் ஆழ்ந்த கவனம் செலுத்தினேன் என்று நம்புகிறேன்.

மனைவியின் ஆழ்ந்த பிரார்த்தனை கணவனுக்கு ஆயிரம் நல்லதைச் செய்யும். அவருடைய நல்ல மனதிற்கும், பிரார்த்தனைக்கும், சத்தத்திற்கும் நான் நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும்.

அடுத்து இரண்டு பேர். ஒன்று திரு. கலைமணி. கோயிலில் நீண்ட நாட்களாக அரசு அலுவலராகவும், சுவாமிகளின் அருகாமைத் தொண்டராகவும் பணிபுரிகின்றவர். முருகனுக்கு அபிஷேகம் நடைபெறும் போதெல்லாம் அருகில் நின்று தமிழிசை பாடும் முருகனின் ஆஸ்தான பாடகர். நாடு முழுதும் இரத்தினகிரி முருக பக்தர்களின் வீடுகளுக்கு எல்லாம் சுவாமிகளின் ஆசிச் செய்திகளையும், ஆறுதல் செய்திகளையும், ஆசிர்வாத அளிப்புகளையும் ஏந்திச் செல்லும் ஆன்மீகத் தூதர்.

இவர் இல்லை என்றால் இந்த நூல் இவ்வளவு சிறப்பாகவும், இவ்வளவு போட்டோக்களோடும், அமைவதற்கு வழியில்லை. இல்லை; நான் மேலும் மிகுந்த முயற்சியும், துன்பமும் பட்டிருக்க வேண்டும். புத்தகத்திற்கு வேண்டிய நான் கேட்கும் செய்திகளையும், போட்டோக்களையும் திக்கெங்கும் தேடிப் பல ஆண்டுகளாகக் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தவர். மிகுந்த அன்போடும் ஈடுபாட்டோடும் இந்த வேலைகளை யெல்லாம் தானே ஏற்றுச் செய்ய முன் வந்தவர். எடுக்கும் காரியத்தை முடித்தே தீர்க்கும் தீர்மானமானவர்

என்னோடு இணைந்தும் இயைந்தும் வேலை செய்வதற்கு மிகுந்த திறனும் வேகமும் வேண்டும். "இந்த ரெண்டு மணிக்குச் சரியாக இந்தக் காரியம், இப்படி; இந்தவகையில்; இந்த மாதிரி செய்து முடிக்க வேண்டும்" என்று தீர்மானம். தீர்மானத்தின்படி செய்து முடிக்கும் பழக்கம்; இறைவன் எனக்கு இளமையிலேயே வைத்து விட்டான்.

எப்போதுமே முன் வைக்கும் கால்தான். நிற்கும் காலோ, பின்வாங்கும்

காலோ, தடுமாறும் காலோ இல்லை. கலைமணி இப்படிப்பட்ட ஆளிடம் மாட்டிக் கொண்டார்.

"இந்தச் செய்தி; இந்த ஆள்; இந்த கங்காதரன்; இந்தப் போட்டோ சாயங்காலம் 4½ மணிக்கு இங்கே வரவேண்டும்" அவர் உடனே சா...ர்... என்பார். உங்களால் முடியாதா? சரி என்னை அங்கே அழைத்துப் போங்கள். பஸ்ஸிலா? ரயிலிலா? காரிலா? நடந்தா? லாரியிலா? புறப்படுங்கள் போகலாம்," அவர் சுற்றும் முற்றும் பார்ப்பார்.

அன்பான, நல்ல காரியங்களை - இரத்தினகிரி முருகனின் காரியங்களைச் செய்வதற்கென்றே பிறந்த ஆத்மா. வீடு, மனைவி, மகன், தான் என்ற நினைப்பே இல்லை. இத்தனைக் காரியங்களும் அவராகவே விரும்பிச் செய்ததுதான். அவருக்கு நான் அவசியம் நன்றி சொல்ல வேண்டும்.

மற்றொருவர், அவரும் கோயிலைச் சேர்ந்தவர். திரு. கிருஷ்ணமூர்த்தி. கடவுள் மனிதர் சுவாமிகளுடன் எப்போதும் இருக்கும் புண்ணியம் செய்தவர். நான் கூட ஏங்கும் ஒரு பெரிய புண்ணிய காரியம் இது. கிருஷ்ணமூர்த்தி இந்தப் புத்தகம் எழுதும் காலத்தில் எனக்கு மிகவும் துணையாக இருந்தார்.

சில காரியம் நான் எவ்வளவு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாலும், நடந்து நடந்து கோயிலுக்குப் படிகள் ஏறிவந்தாலும் நடக்காது. எனக்குச் சலிப்பும் விரக்தியும் வரும். மனசிலே ஆற்ற முடியாத கஷ்டம். அதற்குக் காரணமா இருக்கறவங்க கிட்ட அதச் சொல்ல முடியறது இல்லே. அவங்க மனசு கஷ்டப்படும். எனக்கு அகப்பட்ட ஆள் இந்த முருகன் ஒருத்தன் தான். அவன் கிட்டதான் கொட்டிக்கணும். நாம நேரிலே போய் கொட்டிக்கிறத விட, அவன் கிட்ட எப்பவும் இருக்கிறவங்ககிட்ட சொல்லிச் சொல்லச் சொன்னா, நல்லா இருக்கும்னு தோன்றும்.

"சொல்லுப்பா! உன் முருகன் கிட்ட. என்னா? இப்படியெல்லாம் பண்றார். இப்படியே பண்ணிகிட்டு போனா அவ்வளவு தான்!" கொஞ்சம் மெரட்றது. "கொஞ்சம் பார்த்துச் செய்யச் சொல்லுப்பா"ன்னு கெஞ்சறது.

"என் தலைவிதி! இந்த ஆள்கிட்ட வந்து மாட்டிக்கிட்டேன்" என்று சலிச்சிக்கிறது. "போய் சொல்லுங்க உங்க முருகன் கிட்டே." கொஞ்சம் சத்தம் போடறது. இதெல்லாம் நான் நேரிலும், போனிலும் சொல்லிக் கொள்ளும் ஆளாகக் கிருஷ்ணமூர்த்தி இருந்தார்; இருக்கிறார்.

ஒருநாள் நான் அதிகமாகச் சத்தம் போட்டேன். அவ்வளவு கஷ்டம்! எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட அவர், சிரியஸாகவும் கொஞ்சம் சிரித்தபடியும், "நான் அந்தப் பக்கம் போய் பதினஞ்சி நாளாச்சி சார்" என்றார். அதிர்ச்சியோடு நான் "என்ன விஷயம்" என்றேன்.

"சாமி இவ்வளவு பெரிய வேலய வச்சிக்கிட்டு என்னா கஷ்டப் படறாரு அந்த முருகன் ஒரு பைசா குடுக்கறது இல்லே சார். இந்த முருகன் பேரிலே வெறுத்துப் போச்சி சார்" என்றார். அப்புறம் நான் யாருகிட்டே போய், என்னா சொல்றது?

இப்படி முடியாத நேரத்திலும், முடி சாஞ்ச நேரத்திலும் நான் அவர்கிட்ட என் குறைகளையெல்லாம் கொட்டிக் கொண்டதும், அந்தக் கஷ்டம் தீர்ந்து காரியம் சரியாகி விடும். அப்படியும் சில நேரங்களில் முடியாமல் மனம் வெய்யிலில் பிடுங்கிப் போட்ட கீரைத் தண்டாகச் சுருண்டு வாடிப் போய்விடும். பல வகையான கஷ்டம். பணக்கஷ்டம். உதவி செய்ய வேண்டியவங்க சொன்னபடி உதவாத கஷ்டம். எழுத வேண்டியது மனசுக்குள்ளே தெளிவாகாத கஷ்டம். எழுதி எழுதி கை எல்லாம் வலிக்கிற கஷ்டம். பல்வேறு கஷ்டம்! அப்படிப்பட்ட நேரத்தில் சுவாமியின் முன்னால் போய் உட்காருவேன்.

அப்படி ஒருநாள் போய் உட்கார்ந்தேன். சுவாமி மிகுந்த கனிவோடு என்னைப் பார்த்து "உங்க கஷ்டம் வீண் போகாது" என்றார். நீண்ட நேரம் அவர் அருகிலேயே உட்கார்ந்திருந்தேன். ஓர் ஆழ்ந்த ஆறுதல் எனக்குள் பரவுவதைக் கண்டேன். இப்படி இந்த நூலை எழுதுவது, என்னவோ சொல்வார்களே "பிச்சிப் பிச்சி எடுத்து விட்டது" என்று. அப்படி என்னைப் பிச்சிப் பிச்சி எடுத்து விட்டது. ஒரு "பிரசவம், குழந்தைப் பேறு" என்று தாய்மார்களுக்குச் சொல்வார்களே! அப்படி.

இந்த நேரங்களில் எனக்கு ஊன்று கோலாக இருந்தவர் கிருஷ்ண

மூர்த்தி. வேகமாகக் காரியங்களைச் செய்வதில் என்னிடம் தோற்றுப் போகாதவர் அவர் ஒருத்தர்தான். அவ்வளவு வேகம். ஒருகாரியம் செய்யலாமா என்று சொன்னால் அடுத்த நிமிடமே தயாராகி விடுவார். சாமிகளிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, அதற்கு வேண்டிய பொருளோடு 'வாங்க சார் போவோம்' என்று புறப்பட்டு விடுவார்.

இந்த வேகத்தில் நாங்கள் ரெண்டு பேரும் இருட்டு வேளையில் பாலாத்தங்கரைக் ஒரு காட்டில் வழி தெரியாமல் ஒருநாள் மாட்டிக் கொண்டு பட்டபாடு, கல்கியின் பொன்னியின் செல்வனில் வரும் வந்தியத் தேவன் கெட்டான். இதுபோல் பலமுறை.

நன்றி உரையை இப்படிக் கொஞ்சம் விரிவாக எழுதுவதைப் பார்த்துக் கொண்டிருந்த நண்பர் "என்ன? நன்றி உரையாலேயே புத்தகத்தை நிரப்பி விடுவீர்கள் போல் இருக்கிறதே" என்றார்.

நிரம்பினால்கூட நல்லதுதான். ஆனால் எனக்கு இத்தனை உதவிகள் செய்த இந்த நல்லவர்களுக்கெல்லாம் நான் என்ன வாரிக் கொடுத்து விட முடியும்? இதுவரை புத்தகம் எழுதியவர்கள், பெரியவர்களுக்கு மட்டும் கொஞ்சம் எழுதிவிட்டு, மற்றவர்களில் பேருக்குச் சில வரிகளை எழுதிவிடுவதை நன்றி சொல்வது என்று ஒரு கெட்ட மரபாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னவோ இவர்கள்தாம் எல்லாவற்றையும் தான் ஒண்டியாகவே சாதித்த வீராதி வீரர்கள் போல.

இந்த நூல், எல்லாவற்றிலும் நல்ல முன்மாதிரியாகப் இருப்பது போல இதிலும் இருக்கிறது. இந்த நூல் முழுதும் பார்க்கலாம், யார் ஒரு காரியம் செய்தார்களோ, அவர்கள் பெயர், அவர்கள் செய்த காரியத்தை அப்படியே எழுதி இருக்கிறேன்.

நன்றி சொல்வதற்காகத்தான் நாக்கு என்ற ஒன்றை இறைவன் தனியாகப் படைத்திருக்கிறான். தீனியை உள்ளே அனுப்புவதற்கு இல்லை. அதற்குத்தான் என்றால், மூக்கிலேயே தீனியை உள்ளே அனுப்புவதற்கு மூன்றாவது சந்தை வைத்து அதன் வழியாகவே சாப்பாட்டை வயிற்றுக்குள் அனுப்பி விட்டிருப்பான்.

அடுத்தவர் 'ஆன்மீக ஓவியர்' Divine Artist என்று அவரை ஆழமாக

அறிந்தவர்கள் போற்றும் 'தனுசு' என்ற புனைபெயர் கொண்ட திரு. செந்தில் குமார். நானும் சுவாமிகளும் ஆயிரக்கணக்கான போட்டோக் களின் நடுவில் உட்கார்ந்து கொண்டு "எதைத் தேர்ந்தெடுப்பது? எப்படி அச்சிடுவது? என்றெல்லாம் பல இரவுகள் குழப்பமாகிக் கிடந்த சிக்கலை மடமடவென்று தீர்த்து வைத்தவர்.

திருச்செந்தூர் முருகன், மதுரை மீனாட்சி அம்மா, காஞ்சி ஏகாம்பரநாதர் முதலான பழமையும், தெய்வீகத் திருவருள் கசிந்தும் பெருகுவதுமான சிலைகளின் அருகில் அமர்ந்து, அலங்காரக் கோலங்களுடன் அவைகளின் வளைவு நெளிவுகள், ஆபரணங்கள் ஒவ்வொன்றின் அமைப்பு, ருத்ராட்சத்தின் அமைப்பு, தங்க வைர மாணிக்கமாலைகளின் அமைப்பு, இன்னும் சிலைகளில் சிற்பி வடித்த ஒவ்வொரு அமைப்பையும் ஓவியங்களாக எழுதியவர், எழுதுபவர்.

ஓவியர் சில்பி அவர்களின் பாராட்டுக்கு உரியவரானவர். அவருடைய படங்கள் கல்கி தீபாவளி மலர்களிலும், ஆனந்த விகடன் காலண்டரிலும் வந்து, பார்ப்பவர்களின் கைகள் தானே வணங்கி மகிழும் தெய்வ நிலையை மனத்தில் ஏற்படுத்தியவை.

அண்மையில் கல்கியில் 'தலம் தோறும் தமிழ்க்கடவுள்' என்னும் 35 தொடர்கட்டுரைக்கு 35 கோயில்களுக்குச் சென்று ஓவியம் வரைந்து தந்து முருகனை ஆயிரக்கணக்கான பக்தர்களின் கண்முன் நிறுத்தியவர். இந்த நூல் எந்த அளவு எழுத்திலும் அமைப்பிலும் கருத்திலும் தனித்தன்மையும் பெற்றுள்ளதோ, அந்த அளவு ஓவியம் தழுவிய கலை அழகிலும், கலைநுணுக்கத்திலும் இடம் பெற வேண்டுமென்று நான் பெரிதும் விரும்பினேன். அந்த விருப்பம் அவரால் முழுமையாக நிறை வடைந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

எளிய வாழ்க்கை, இனிய வாழ்க்கை. கடவுள் கனிவோடும் துணிவோடும் இருந்த வேளையில் படைக்கப்பட்டவர். அவருக்கும் நான் மிகுந்த நன்றி செலுத்துகிறேன்.

அடுத்து மூன்று புகைப்பட அன்பர்கள் திரு. மோகன், திரு. ரமேஸ்,

திரு. விடிவெள்ளி ஆறுமுகம். இவர்கள் இந்த நூலுக்காக ஆயிரக்கணக்கில் போட்டோக்கள் எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

கேமராவைத் தன் சொல்படி கேட்க வைப்பவர்தான் திறமையான கேமராமேன். இந்த மூன்று பேரும் அப்படிச் செய்திருக்கிறார்கள்.

இவர்களில் நம்மோடு ஆரம்பகாலங்களில் நீண்ட நாட்களாக மிகுந்த உழைப்பை மேற்கொண்டு அளவில்லாத உற்சாகத்தோடு ஈடுபட்டவர் வேலூர் தேவி ஸ்டுடியோ திரு. ரமேஸ். வீடியோ கேமராவையும் ஸ்டில் கேமராவையும் தூக்கிக் கொண்டு, பாலாறு கடலோடு கலக்கும் கடலூர் என்னும் மீனவர் கிராமக் கடற்கரையிலும், பாலாற்றின் குறுக்கில் அமைந்த அத்தனை பாலங்கள், பாதைகள்; பாலாற்றோடு கலக்கும் ஆறுகள் முதலியவற்றை நூறு கிலோ மீட்டர் தூரத்துக்கும் அதிகமான தொலைவில், என்னுடன் பயணம் வந்து நூற்றுக் கணக்கில் அழகான படங்கள் எடுத்துத் தந்தார். இரத்தின கிரியைச் சுற்றியுள்ள ஓம்மலை, பொன்மலைகளில் எல்லாம் கடும் வெய்யிலில் என்னோடு ஏறி, நான் கேட்ட அமைப்புகளிலெல்லாம் இரத்தினகிரி கோயிலையும் மலையையும், நல்ல காட்சிகளாக எடுத்துத் தந்தார்.

வங்கக் கடற்கரையில் நல்ல வெய்யில் நேரத்தில் 15 கிலோ மீட்டர் நடந்து பாலாறு கடலில் கலக்கும் சங்கமத்திற்குப் போனதாலும், கடல் தண்ணீரிலும் ஆற்று நீரிலும் மூழ்கி மூழ்கிக் குளித்ததாலும், நான் பதினைந்து நாட்கள் கடும் காய்ச்சலில் பாதிக்கப் பட்டேன். அந்தக் காய்ச்சல் வராமல் இருந்திருந்தால், சுவாமிகள் கூறியபடி கர்நாடகத்திற்குச் சென்று பாலாறு தோன்றிப் புறப்படும் இடம் நந்தி மலையையும், அதன் தண்ணீர் எத்தனை இடங்களில் ஏரிகளும் அணைகளுமாகக் கட்டித் தடுக்கப்பட்டு வளமான பாலாற்றுத்தாயை, வறண்டு போன மணல் வெறுமைக் காடாக ஆக்கியுள்ள கொடுமையையும் படங்களாக எடுத்துத் தமிழ் மக்களுக்குக் காட்டி இருப்பேன்.

விடிவெள்ளி ஆறுமுகம் எங்கள் வேலை நிறைவடைகின்ற மிகத் தேவையான நேரத்தில் வந்து மிகுந்த உதவிகள் செய்தார். இரத்தினகிரிக்

கோயிலின் முகப்பு மண்டபம், யாளிகள், முகப்பு மண்டபத்தின் 36 அடி உயரமான மேல் கூரைச் சுவர்களின் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை மிக உயரமான ஏணிகளில் ஏறி நின்று படம் எடுத்தார். பழனி முருகர் கோயிலுக்கும், திருத்தணி முருகர் கோயிலுக்கும் தன் உள்ளூர் வேலைகளை யெல்லாம் துறந்து வந்து நல்ல அழகான கோணங்களில் படம் எடுத்துத் தந்தார். பழனி தண்டாயுதபாணி முருகன் கோயிலில் அவர் எடுத்துள்ள படங்கள் மிக அழகாக அமைந்துள்ளன.

மோகன்ராஜ், ஆர்க்காடு ராஜா ஸ்டுடியோ அன்பர். என் அன்பிற்கினிய மாணவர். இரத்தினகிரியையும், இரத்தினகிரி அமைந்த கீழ்மின்னல் கிராமங்களையும், சுவாமிகளின் வீட்டையும் மற்றும் கோயிலின் பலவேறு பகுதிகளையும், பலவேறு அழகிய கோணங்களில் பலமுறை பலமுறை நான் கூப்பிடும் குரலுக்கெல்லாம் ஓடி ஓடி வந்து படம் எடுத்துக் கொடுத்தார்.

எத்தனை அவசரமான, ஏற்கெனவே ஏற்றுக் கொண்ட வேலைகள் நடுவிலும், திடீர் திடீரென்று கூப்பிடும் என் குரலுக்குக் காமிராவோடு வந்து விடுவார். இந்த மூவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைச் செலுத்துகிறேன்.

இந்த இரண்டு சிங்கங்களுக்கும் நன்றி

நூல் அச்சிடும் நிலை வந்ததும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக என்னோடு பழகிவரும் ஸ்நேகா நூல் வெளி யீட்டாளர்கள், திரு. பொ.வீ. சீனிவாசன், திரு. கோ. பாலாஜி இருவரும் நினைவிற்கு வந்தார்கள்.

இந்த நூலை நான் எழுத ஆரம்பித்ததிலிருந்தே இந்த நூல் பற்றி அவர்கள் அறிவார்கள். தங்களிடம் இந்த மேலான வேலையை ஒப்படைக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். தவத்திரு. சுவாமிகளிடம் அவர்களை அழைத்துக் கொண்டு போய் விட்டேன்.

சுவாமிகளின் அருளாசியில் புதிய தெம்போடும், புதிய திறனோடும், உற்சாகத்தோடும் செயல்பட்டார்கள். அவர்கள் உழைப்பு மகத்தானது.

இரவில் 11 மணி வரைக்கும்கூட அவர்களோடு அச்சகத்தில் இருந்து நான் வேலைகளை கவனித்தபடி, அவர்களையும் கவனித்தபடி இருந்திருக்கிறேன்.

இரண்டு இளஞ்சிங்களுக்கும் நன்றி.

- பேராசிரியர் ஏ. சுப்பிரமணியம்

6. ஓர் ஆச்சரியமான நூல்.

ஒரு சாதாரண மனிதர், சட்டென்று என்லைட்டன்மென்ட் (ENLIGHTENMENT) எனப்படும் தெய்வீக உணர்வு நிலையை அடைந்து, ஒளி பொங்கப் பெற்று, அதனால் ஏற்படும் தெய்வீக குணங்களும்; ஏற்கனவே அவரிடம் உள்ள மனித குணங்களும் இணைந்த தால் ஏற்படும் விளைவுகள்;

இந்தக் குணங்கள் கலந்து செயல் படும்போது, சாதாரண உலகத்தின் பல வேறான; ஒன்றுக்கு ஒன்று முரண் பட்ட; அவர் வாழும் வாழ்க்கைச் சூழல்களோடும்; இவைகளைப் புரிந்து கொள்ளும் நிலை வளராத சராசரி மனிதர்களோடும்; அவர் வாழும் போது ஏற்படும் உரசல்கள்; மோதல்கள்; ரணங்கள், ஆறுதல்கள்; கிளர்ச்சிகள், வளர்ச்சிகள்; சோதனைகள், வேதனை கள்; நிந்தனைகள், வந்தனைகள்;

மற்றும் என்னென்னவோ நிலை களையெல்லாம் தாங்கி; அவைகளை யெல்லாம் கடந்து, இன்று கனிந்து, உன்னதமான நிலையை அடைந்து,

குருவாய், தெய்வ உருவாய், நம்மோடு மனித உடம்பில் வாழ்ந்து, இலட்சக்கணக்கான பக்தர்களை வழி

காட்டிக் காத்து வரும் கடவுள் சக்தியாய், உள்ள முருக சக்தியின் வரலாறு இந்த நூல்.

பாலமுருகனடிமை என்னும் இந்த இரத்தினகிரி முருக சக்தியை ஒருவர் கூர்ந்து கவனித்தால், ஒரு மனித உடம்புக்குள் கடவுள் சக்தி புகுந்ததும் அல்லது மனித சக்தி கடவுள் சக்தியாக மாறியதும், அது அவர் உடம்பிலும், குணங்களிலும், செயல்களிலும் எத்தகைய மாற்றங்களை விளைவிக்கிறது?

எப்படி, எப்படி? எந்த எந்தக் கோணங்களில்? எத்தனை எத்தனை வழிகளில்? எத்தனை எத்தனை வீச்சில்? எந்த எந்தத் திசைகளில் வேலை செய்கிறது; வளர்கிறது; மலர்கிறது;

மற்றவர்களை வாழ வைக்கிறது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். முப்பத்து நான்கு ஆண்டுகளாக இந்தச் சக்தி செயல்பட்டு வருகிறது.

இதை முப்பத்திரண்டு ஆண்டுகள் கூர்ந்து கவனித்து, அவரோடு எல்லையற்ற அன்போடும், மலையில் அவரோடு உண்டும், பல நாட்கள் அவர் அருகில் உறங்கியும், மற்றும் பல வகைகளில் மிகுந்த நெருக்கமாகவும், மிக மிக மிக வணக்கமாகவும், சுவாமிகள் செய்து வரும் பணிகளில் எல்லாம் நெஞ்சம் முழுதும் ஈர்ப்பு கொண்டும், தொண்டு செய்தும் வாழ்ந்த - வாழ்ந்தும் வரும் ஒருவரால் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

அவரும் ஏறக்குறைய நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக அந்தக் கடவுள் நிலையை அடையச் சாத்திரங்கள் கூறும் வழிகள்; இந்தியாவில் உள்ள ஆழ்ந்த, ஆன்மீகப் புண்ணியத்தலங்களான இமயம், ரிஷிகேசம், ஹரித்துவார், காசி, திருவண்ணாமலை, கன்னியாகுமரி முதலான பல்வேறு இடங்களில் தவமும், சாதனைகளும் ஆழ்ந்து, ஆழ்ந்து செய்து,

தெய்வநிலை பெற்ற குருமார்களிடம் தீட்சை பெற்று, அவர்களால் காட்டப்பட்ட வழிகள் மற்றும் பல சாதனைகள் மூலம் படிப்படியாக அந்த நிலையை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருப்பதால், இந்த நூல் அளவற்ற பெருமையையும், மதிப்பையும் பெறுகிறது.

7. முன்னோடி நூல்

மிகுந்த கட்டாயம் காரணமாக நான் இந்தப் பகுதியை எழுதுகிறேன்.

காரணம், இரத்தினகிரியின் கடவுள் பாலமுருகனும், அவருடைய அடியவர் பாலமுருகனடிமை சுவாமிகளும் முருகன் புகழ் பரவியுள்ள உலக நாடுகள் முழுவதும், ஆழ்ந்த பக்தி செலுத்தி வணங்கப்படுபவர்கள். இலட்சக் கணக்கானவர்களின் இலட்சியங்களாகவும், காப்புக் கடவுள்களாகவும், கரையேற்றுபவர்களாகவும் உள்ளவர்கள். அவர்களைப் பற்றிய நூல் இது.

நூலை எடுத்த உடனே மனம் இதனை எழுதியது யார்? இதை எழுத இவருக்கு என்ன தகுதி இருக்கிறது? என்றுதான் பார்க்கும். அந்தப் பார்வைக்குச் சரியான வகையில் நாம் தீனி தர வேண்டும். தராமல் போனால் அதற்குள் நுழைய மனம் முரண்டு செய்யும்; போராடும்; ஒரு வெறுப்பையும், கசப்பையும் ஏற்படுத்தும்.

யாரோ ஓர் அநாமதேயம் இதனை எழுதி இருக்கிறார்; அடிப்படை இல்லாதவர் எழுதி இருக்கிறார்; இதை என்ன படிப்பது? என்று ஏகத்தகராறு செய்யும். அதை மாற்றுவது நூல் எழுதுவோரின் கட்டாயக் கடமையாகும். அதைச் செய்யாமல் போவது ஒருவகையான குற்றம்கூட. அதற்காகவே இது எழுதப்பட்டது.

இதைப் படிப்பவர்கள் இந்த நூலை எழுதியவர் ஓர் அநாமதேயம் - பேர் ஊர் தெரியாதவர் அல்ல. நாமமும் தேயமும் - ஊரும் பேரும் உள்ள ஓர் ஆள்தான் என்பது தெரியவேண்டும். அப்போது படிக்க மனம் தெளிவடையும். மகிழ்ச்சி கொள்ளும். அதனால் விரைவாகப் புத்தகத்துள் நுழைய முடியும். அதற்குத்தான் இது எழுதப்பட்டது.

இதை எழுதி சுவாமிகளிடம் காட்டி, இதை இங்கே போடலாமா? என்று கேட்டபோது, இதனை முற்றிலும் படித்த சுவாமிகள் 'அவசியம் இது இங்கே இருக்கட்டும்.' அப்படியே போடு" என்றும். "அப்போதுதான் நூல் எப்படிப்பட்டவரால் எழுதப்பட்டது, என்பது படிப்பவர்கள் மனத்தில் நூலின் வெயிட் தெரியும்" என்றார்.

எனவே நூல் எழுதியவரின் பிரதாபத்தை விவரிக்கும் நோக்கத்திலோ, அடிப்படையிலோ இது எழுதப்படவில்லை.

அவசியம் கருதி எழுதப்பட்டது.

பகவான் இராமகிருஷ்ணர் வாழ்க்கை வரலாற்றைச் சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி தபஸ்யானந்த மகராஜ் அவர்கள் தமிழில் எழுதித் தரும்படிக் கூறினார். அதுவும் உடனடியாக எழுதி முடிக்க வேண்டும் என்றார். அவர் கூறும் போது அது அவ்வளவு கடினமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

அது மொழிபெயர்ப்பு நூல். ஓர் ஆங்கில நூலிலிருந்து எழுத வேண்டும். ஏற்கனவே இரண்டு முறை அந்த நூலைத் தமிழில் மொழி பெயர்ப்பு செய்து ஒன்றும் சரியாக வராமல், அச்சாகி விற்காமல் அப்படியே கிடந்தது.

நான் மொழிபெயர்க்க ஆரம்பித்த போதுதான் 'ஏன், இதுவரை செய்த மொழிபெயர்ப்பெல்லாம் பெரும் தோல்வியாகப் போய்விட்டது' என்பதற்கான காரணம் தெரிந்தது. அது மிகமிக அதிகமான சாத்திரப்படிப்புப் படித்த, உயர்மட்ட ஆட்கள் மட்டுமே புரிந்து கொள்ளும் வகையில், அதுவும் கொஞ்சம் கடினமான வகையில் எழுதப்பட்டிருந்தது.

சாதாரணமானவர்களுக்கும், சாதாரணத்திற்கு மேற்பட்டவர்களுக்கும் கூட அது புரியாது. இதை எளிதாக்கி எழுதவேண்டும்.

இராமகிருஷ்ணர் கடவுளைக் காணச் சாத்திரங்களையோ, குருமார்களையோ, யாரையுமே, எதையுமே நாடவில்லை. விவேகானந்தர் அதுபற்றிக் கூறுகிறார்:-


"நேராக அவர் இயற்கையிடம் சென்றார். இயற்கை அவருக்கு வழி தந்தது. அதன் விளைவாக விஞ்ஞான மயமாகக் கடவுளைக் கண்டார். அது கடவுள் இருப்பதை நம்பு என்பதல்ல; கடவுளை நேருக்கு நேராகப் பார் என்பது. அந்த வழி அவரைக் கடவுளை நேருக்கு நேர் பார்க்க வைத்தது. அவர் நேருக்கு நேர் கடவுளைப் பார்த்தார்."

கடவுளைக் காண இராமகிருஷ்ணர் மேற்கொண்ட வழிகளோ, நேரடியானதாகவும், புத்தம் புதியனவாகவும் இருந்தன.

இராமகிருஷ்ணர் இராமரைப் பார்க்க விரும்பினார். எல்லா பக்தர்களும் செய்வது போல் அவரும் இராமர் மீது தியானம் செய்து பார்த்தார். காரியம் கைகூடவில்லை; விரைவாகக் கைகூடவில்லை. அவருக்கு விரைவாக, மிகமிக விரைவாக இராமரைப் பார்த்தாக வேண்டும் என்ற வேகம்.

இராமருக்கு மிகமிக வேண்டியவர் யார்? யார் கூப்பிட்டால் இராமர் உடனே வருவார் என்று அவர் யோசித்தார். அனுமன் உடனே அவர் நினைவிற்கு வந்தார். அனுமன் கூப்பிட்டால் இராமர் உடனே வந்துவிடுவார் என்று அவருக்குத் தோன்றியது. உடனே அவர் அனுமனாகவே மனதாலும், உடலாலும் மாறிவிட்டார்.

வேட்டியை இடுப்பைச் சுற்றிக் குரங்குகளுக்குக் கட்டிவிடுவது போல் மடித்துக் கட்டிக் கொண்டார். வேட்டியின் ஒரு முனையைக் குரங்கின் வால்போல் தொங்கவிட்டுக் கொண்டார். குரங்குகளைப் போலவே குதித்து நடந்து சென்றார். குரங்குகளைப்போல் பழங்களையும், கொட்டைகளையும் சாப்பிட்டார். அதையும் குரங்கு போலவே தோலுரிக்காமல் பச்சையாகச் சாப்பிட்டார்.



இவைகளையெல்லாம் விட அவர் ஒரு விசித்திரமான காரியத்தைச் செய்தார். அது தினமும் அவர் பூஜை செய்து கொண்டிருந்த மிகப்பெரிய, காளிகோயிலின் அருகில் இருந்த, மரத்தின் மீது, உயரமான கிளையில் உட்கார்ந்து கொண்டார். 'ராம்... ராம்... ராம் ராம்...' என்று கூறியபடியே இருந்தார். கண்களில் கண்ணீர் பெருகியது. அவர் பார்வை குரங்கைப்போல் பரபரப்பாக மாறிவிட்டது. முகமும் குரங்கைப்போல் மாற ஆரம்பித்துவிட்டது. உடம்பையும் குரங்கைப்போலவே அடிக்கடி சொரிந்து கொள்ள ஆரம்பித்தார்.

இதை விட ஆச்சரியம், இப்படி அவர் அனுமனாக மாறிச் சாதனை செய்த சில நாட்களுக்கெல்லாம், அவர் முதுகெலும்பின் நுனி சிறிது நீண்டு சிறிய வால் போலவும் ஆகிவிட்டது. அவர் இந்தச் சாதனை செய்த சிறிது நாட்களுக்குள் அவருக்கு இராமர் காட்சி கிடைத்தது. அடுத்துச் சீதையின் காட்சியும் கிடைத்தது.

இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால், இந்தச் சாதனையைச் செய்தபோது அவர் அந்தப் பெரிய காளிகோயிலின் பூசாரி. காளி கோயில் இருபது ஏக்கர் பரப்பளவுள்ள காடுபோல் அடர்ந்த பெரிய இடம். கங்கைக் கரையில் இருப்பது. கோயிலில் வேலை செய்பவர்களே ஐம்பது, அறுபது பேருக்கு மேல் இருப்பார்கள். பக்தர்கள் கூட்டம் வந்துபோனபடியே இருக்கும்.

அவர்கள் எல்லாம் இவருடைய இந்தக் கோலத்தையும், செய்கைகளையும் எப்படி ஏற்றுக் கொண்டனர்? இந்த வேடிக்கை பற்றி வெளியே தெரிய, வெளியே இருந்தவர்களும் கூட்டம் கூட்டமாக வந்து அவரைப் பார்த்திருப்பார்கள். சிரித்தும், கிண்டல் செய்தும் இருப்பார்கள். உள்ளே வேலை செய்யும் மானேஜர், மற்றவர்கள் சாதாரணமாகவே அவர் மீது எரிச்சலும், பொறாமையும் கொண்டவர்கள். இந்தச் செய்கையால் மேலும்

அவர்மீது எரிச்சலடைந்திருப்பார்கள். இராமகிருஷ்ணரோ, இவைகளில் எதைப் பற்றியும் கவலைப்பட்டுக்கொள்ளவில்லை. தன் சாதனையில் தன்னை மறந்து மூழ்கியபடியே இருந்தார்.

ஒருவர் வாழ்நாள் முழுதும் தவம் செய்தாலும் காணமுடியாத இராமரின் காட்சியை இந்தச் சாதனையின் மூலம் அவர் சில நாட்களில் பெற்றுவிட்டார்.

அவர் பல்வேறு சாதனைகள் - அறுபத்து மூன்று தாந்த்ரீகச் சாதனைகளையும் செய்தார். இந்தத் தாந்த்ரீகச் சாதனைகளில் சில, பெண்களின் கூட்டுறவோடு செய்யவேண்டும். தானும் அப்படிச் செய்ததாக அவரே கூறி இருக்கிறார்.

பிறகு வைணவம், இஸ்லாம், கிருத்துவ, வேதாந்த சமயச் சாதனைகள் என்று பல்வேறு சாதனைகளையும் செய்தார். காளியைக் காணும் கடினமான சாதனைகளிலும் ஈடுபட்டுக் காளியையும் கண்டார்.

இவைகளை எல்லாம் எழுதும்போது அவர் செய்த சாதனைகள் ஒவ்வொன்றும் என்னோடு கரைந்து, அதன் அர்த்தம், அழகு, திண்மை எல்லாமே என்னுள் காட்சியாகப் படிய வேண்டி இருந்தது. அப்போது தான் அவரைப் பற்றிய நூலை எழுதுவதற்கு மனநிறைவு வந்தது.

அவர் இடுப்பு வேட்டியை மடித்துக் குரங்குகளுக்குக் கட்டுவது போல் கட்டுவது; வால் தொங்கவிடுவது; அவரது அறையிலிருந்து பாதை வழியாகக் கோயிலுக்கு அருகே இருந்த மரத்தடிக்குக் கைகளையும், கால்களையும் ஊன்றி நான்கு கால்களில் நடப்பது; குதித்து குதித்துச் செல்வது, இதையெல்லாம் மனக்கண் முன்னால் கொண்டு வந்து அதைப் பார்த்துப், பார்த்து மனம் ஒரு நிறைவு அடைந்த பிறகே, அவரைப் பற்றி எழுதமுடிந்தது.

பிற்காலத்தில் நான் பலவகையான தியான முறைகளில் பயிற்சி பெறும்போது, இத்தகைய காட்சிகளை மனக்கண்முன் கண்டபடி தியானம் செய்வது 'தெய்வீக சாதனை தியானம்' (MEDITATION ON DIVINE SADANA) என்பதைத் தெரிந்து கொண்டேன்.

இராமகிருஷ்ணர் அறுபத்து மூன்று தாந்த்ரீக சாதனைகளின் வழியாகக் கடவுளைக் கண்டதை மிகமிகச் சுருக்கமாக அந்த ஆங்கில நூலில் எழுதப்பட்டிருந்தது. அதைத் தெளிவாகக் கற்கவும், புரிந்து கொள்ளவும், பல்வேறு தாந்த்ரீக நூல்களைப் படிக்கவும் வேண்டியதாயிற்று. இது குறித்துத் துறவிகளிடமும் கேட்க முடியவில்லை. அப்படிக் கேட்டதற்கு வந்த பதில்கள் யாவும் மிகவும் சங்கடமாக இருந்தன.

இப்படி இந்த நூலை எழுதுவதில் காலம் தள்ளிக்கொண்டே போனது. ஒருவாறு நூல் நிறைவடையும் நேரத்தில் திடீரென்று மனத்தில் மற்றொரு வகையான அழுத்தம் தோன்றி, அடாவடித்தனம் செய்தது.

அது, இராமகிருஷ்ணர் இந்தச் சாதனைகள் நிகழ்த்திய காளி கோயிலையும், அவர் பிறந்து வளர்ந்த, இளம் பருவத்து தெய்வீக நிகழ்ச்சிகள் நடந்த அவருடைய கிராமத்தையும், அவர் வீட்டையும், அங்கே அவர் தொடர்பான இடங்களையும் பார்த்து, அங்கேயே அது பற்றி எழுதவேண்டும் என்ற எண்ணம்.

இது ஆகிற காரியமா? கல்கத்தாவின் அருகே உள்ள, இராமகிருஷ்ணர் வாழ்ந்து சாதனை செய்த தட்சிணேசுவரக் கோயில் எங்கே? கல்கத்தாவில் இருந்து எழுபது மைல் தொலைவில் இருக்கும் அவர் பிறந்து, வளர்ந்த கிராமம் எங்கே? இங்கேயெல்லாம் போவதென்றால் அது நடக்கிற காரியமா? இதை யாரிடமாவது சொல்ல முடியுமா?

ஆனால் இந்தக் காரியமும் நடந்தேறியது.

கல்கத்தா தட்சிணேசுவரக் காளி கோயிலுக்குப் போய், இராமகிருஷ்ணர் தங்கி வாழ்ந்த அறை, அங்கிருந்து அந்தக் கோயில் பகுதிகளில் அவர் சாதனைகள் செய்த இடங்களைக் கண்ணாரப் பார்த்தும், அங்கே மனமார உட்கார்ந்தும், மனம் நிறைவு பெற்றது.

அவர் பிறந்த கிராமமான கமார்புகூருக்குச் சென்று, அவர் வாழ்வோடு இணைந்த இடங்களையெல்லாம் பார்த்து, அவர் வீட்டின் அருகே அவர் வைத்து இப்போது பெரிய மரமாகியுள்ள மாமரத்தின் அடியில் அமர்ந்து



இராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசிகளுடன் நம் சுவாமிகள்.
பேராசிரியரும் உடன் இருக்கிறார்.

சில பகுதிகளையும் எழுதிக்கொண்டு வரும் சூழலும் ஏற்பட்டது. இதற்குள் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

இந்தக்கால கட்டத்திற்குள், தமிழ்நாடு முழுதும் இராமகிருஷ்ண மடத்தின் துறவிப் பெருமக்களை முன்னிலைப்படுத்திக்கொண்டும், மற்ற பக்தர்களையும் முன்னிலைப்படுத்திக்கொண்டும், சிறு சிறு கிராமங்களிலும் இராமகிருஷ்ண - விவேகானந்த மன்றங்களும், பள்ளிகளும் அமைத்து, நாங்கள் நடத்திய இராமகிருஷ்ணர் - விவேகானந்தரின் கருத்துக்களைப் பரப்பும் ஆழ்ந்த செயல்களால், மிகுதியான பக்தர்கள் மடத்தில் தீட்சை பெற்று ஜெபமும், தியானமும் செய்யத் துவங்கினர். பெரும் கூட்டமாகப் பெருகினர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலம் அறியாத தாய்மார்கள். நடுத்தரக் குடும்பத்தினர். நடு வயது ஆண்கள்; ஆர்வம் மிக்க இளைஞர்கள். அவர்கள் அனைவரும் தெளிவான, விரிவான தமிழில் ஒரு நல்ல இராமகிருஷ்ணர் வரலாறு வேண்டும் என்று சுவாமிகளை அடிக்கடி போய் கேட்க ஆரம்பித்தனர்.

ஒருநாள் பொதுக்கூட்டத்திலேயே சுவாமிகள் என்மீது வருத்தப் பட்டுக் கொண்டார். பிறகு நூலின் எழுத்து வேலை முடிந்து, உடனடியாக அச்சுக்குச் சென்று நூலாகியது.

டிசம்பர் 1984இல் அன்னை சாரதாதேவியின் பிறந்தநாள் விழாவின் பெருங்கூட்டத்தில் சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தியான மண்டபத்தில் "பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் வரலாறு" என்னும் அந்தப் புண்ணிய நூல் வெளியிடப்பட்டது.

நூலை வெளியிட்ட இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி தபஸ்யானந்த மகராஜ் அவர்கள் அந்த நூலை வெளியிட்டுப் பேசினார். அதை என் நாட்குறிப்பில் குறித்து வைத்திருக்கிறேன்.

"இன்று எனக்குக் கடுமையான தொண்டைவலி. வேறு சமயமாக இருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன். ஆனால் இன்று ஒரு முக்கியமான நாள். இராமகிருஷ்ணர் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுகின்ற நாள். அதனால்தான் வந்து இருக்கிறேன்.

"சென்னையில் இராமகிருஷ்ண மடம் துவங்கி எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகியும் இதுவரைத் தமிழில் இராமகிருஷ்ணர் பற்றிய தெளிவான - எளிய மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், விரிவான நூல் வரவில்லை.

"இந்தப் புத்தகத்தை நான் சாதாரண படிப்புள்ள பக்தர்கள் பலரிடம் கொடுத்துப் படித்துப் பார்த்து, அவர்கள் மனத்தில் படுகின்ற கருத்தை அப்படியே சொல்லும்படிக் கேட்டிருந்தேன். நான் எதிர்பார்த்ததற்கும் முன்னதாகவே எல்லோரும் புத்தகத்தைப் படித்து விட்டுப் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

"அவர்கள் எல்லோருமே ஏறக்குறைய ஒரே மாதிரியான கருத்தைச் சொன்னார்கள். "புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததும், கீழே வைக்க முடியவில்லை" என்பதுதான் அது.

"ஏதாவது அவசர வேலையாகப் புத்தகத்தைக் கீழே வைக்க வேண்டியிருந்தாலும், மறுபடியும் போய் எடுத்துப் படிக்கும்வரை மனம்

இருப்புக் கொள்ளவில்லை என்றார்கள். "எளிய மொழியில், சாதனைகள் நன்கு புரியும்படி விரிவாக அமைந்துள்ளது. இந்தப் புத்தகத்தைப் படித்ததால் இராமகிருஷ்ணரிடம் மிகுந்த பக்தி வளர்ந்துள்ளது" என்றார்கள்.

"இத்தகைய நூலை மொழிபெயர்த்து எழுதிய பேராசிரியர் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு இராமகிருஷ்ண மடத்தின் துறவிகள், பிரம்மச்சாரிகள், இராமகிருஷ்ண பக்தர்கள்அனைவரும் மிகவும் நன்றி உடையவர்களாக இருக்கிறோம்" என்று சுவாமிகள் விழாவில் பேசினார்கள்.

அந்த நூல் பெரிய அளவான நூல். டம்மி அளவு 535 பக்கங்கள் கொண்டது. இப்போது இராமகிருஷ்ண மடத்தில் ஏழாவது பதிப்பாக வந்து விற்றுக்கொண்டிருக்கிறது. இராமகிருஷ்ண மடத்தில் ஒரு பதிப்பில் 3300 நூல்கள் வெளியிடப்படுகிறது. ஏழு பதிப்புகள் என்றால் இதுவரை இருபத்து மூவாயிரத்து நூறு நூல்கள்.

மற்ற பதிப்பகத்தில் ஒரு பதிப்பிற்கு ஆயிரம் புத்தகங்கள்தான் வெளியிடுகிறார்கள். அந்தக் கணக்குப்படிப் பார்த்தால் அது வெளி வந்த 1984ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பதினெட்டு ஆண்டுகள் - ஆண்டுக்கு ஒரு பதிப்பு என்ற வகையில் பதினெட்டுப் பதிப்புகள் வெளிவந்து விற்றுள்ளன.

இராமகிருஷ்ண பக்தர்களிடமும் மற்றும் பொதுவான ஆன்மீக மக்களிடமும் அந்த நூல் உண்டாக்கிய விளைவு ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தது. ஒரு குடும்பத்தில் கடும் அறுவைச் சிகிச்சை செய்வதற்குத் தங்களுக்குத் தைரியம் தரவும், நம்பிக்கை அளிக்கவும் இந்த இராம கிருஷ்ணரின் நூலை உடன் வைத்து. ஆபரேஷனுக்குப் போகும் வரை படித்துக்கொண்டிருந்த நிகழ்ச்சியும்;

பலர் தங்கள் வீட்டுப் பிள்ளைகள் இந்த நூலைப் படித்துப் பெற்ற உற்சாகத்தால், நல்ல பண்புகள், படிப்பில் உயர்வு, வாழ்க்கையில் பெற்றுள்ள

சிறந்த நிலைகளையெல்லாம் பெற்றுள்ளதாகக் கூறக் கேட்ட போதும் ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

இந்த நூல் மற்றொரு பெரிய காரியமும் செய்தது.

இராமகிருஷ்ணரும், அவருடைய சாதனையும், அவரது உள்ளம் கவரும் வாழ்க்கையும், மிகத் தெளிவாகவும், சுவையாகவும், அழகாகவும், எளிய, இனிய மொழியில் இந்த நூலில் அமைந்ததால், தமிழ்நாட்டு மக்கள் மனத்தில் இராமகிருஷ்ணரிடம் ஆழமான பக்தியை ஏற்படுத்தி விட்டது.

அதன் விளைவுதான் அண்மையில் சென்னை இராமகிருஷ்ண மடத்தினரால் ஏழுகோடி ரூபாய் செலவில் இராமகிருஷ்ணருக்கு அமைத்த மகத்தான புதிய கோயிலுக்குப் பணம், தமிழக மக்களிடம் இருந்து வந்து குவிந்தது.

நான் மொழிபெயர்த்த விவேகானந்தர் நூல்களும் இப்படியே பதினாலு, பதிப்புகள்; எட்டு பதிப்புகள், என்று போய்க்கொண்டிருக்கின்றன. சென்னை இராமகிருஷ்ண மடம் இந்த நூல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

8. முருகமயமாதல்.

இரத்தினகிரி பற்றி இந்த நூல் எழுதும் போது மிகுந்த உழைப்பும், வேலையும் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் இராமகிருஷ்ணரின் நூலை விட இந்த நூல் எழுத இவ்வளவு வேலைகளையும், உழைப்பையும், கடினங்களையும் மேற் கொள்ள வேண்டியிருக்கும் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

எல்லாக் கடும் உழைப்புக்களுக்கும், கடினங்களுக்கும் அடிப்படையான கடினம் முன்பு அங்கே இராமகிருஷ்ண மயமானது போல், இங்கே இப்பொழுது முருகமயமாக வேண்டும்; இரத்தினகிரி பாலமுருகமய்மாக வேண்டும்.

இதுதான் முதன்மையான வேலை யாகவும், கடினமான வேலையாகவும் அமைந்தது.

கடவுள் என்பது வடிவம் அல்ல என்பதை எல்லோரும் தெளிவாக மனதில் கொள்ளவேண்டும். அது ஒரு சக்தி. மின்சக்தி, மின்காந்த சக்தி, புவியீர்ப்பு சக்தி, காந்த சக்தி போன்ற எல்லாச் சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு மகாசக்தி. இந்தச் சக்தி நாட்டின் சில இடங்களில் மட்டும் மிகுந்த அளவில் நிறைந்து செயல்படுகிறது.

என் பெயர் சுப்பிரமணியம். என் பெற்றோர் ஆழ்ந்த முருக பக்தர்கள். எங்கள் ஊருக்கு முப்பது மைல்களுக்கு அப்பால் இருக்கும் திருத்தணி முருகனை ஆடிக்கிருத்திகை தோறும் என் தாய் நடந்து சென்று கும்பிட்டு வருவார். பெண் குழந்தைகளே இருந்த குடும்பத்தில் பிள்ளை ஒருவன் வேண்டுமென்று திருத்தணி சுப்பிரமணியரை வேண்டி, வேண்டித் தவம் இருந்தார்.


திருத்தணி முருகன். உற்சவர்

நான் பதினாறு வயது இளைஞனான பிறகும், என்னையும் நடக்க வைத்துக் கொண்டு, எங்கள் வீட்டுப் பெரிய உறவினர் கூட்டமும் உடன் வர, நடந்தே செல்வார்.

என் தந்தை ஒவ்வொரு கிருத்திகையும் தவறாமல் திருத்தணிக்குச் சென்று முருகனை தரிசித்து வருவார். இது அவருடைய இறுதிக் காலம் வரை நடந்தது.

என் திருமணத்தைக் கூடத் திருத்தணியில்தான் நடத்தினார்கள்.

என் தந்தை ஆடிக்கிருத்திகை அன்று காலமானார்.

என் தாய் மகா சஷ்டி அன்று காலமானார்.

இவ்வளவு இருந்தும் எனக்கோ முருகரிடத்தில் கொஞ்சம் கூட பக்தி ஏற்படவில்லை.

கல்லூரியில் திரு வி.க அவர்களின் 'முருகன் அல்லது அழகு' என்னும் நூல் பல ஆண்டுகள் பாடத்திற்கு இருந்தது. ஒவ்வொரு ஆண்டும், அந்த

ஆண்டுதான், அந்த நூலைப் புதிதாகப் பாடத்துக்கு வைத்தது போல், புத்தம் புதிய சிந்தனையோடு, அப்படிப் பாடம் நடத்துவேன்.

அப்போதும் முருகனிடம் பக்தி ஏற்பட்டதில்லை.

அதிகமாக நான் முருகனைக் கும்பிடுவது கூட இல்லை.

ஆனால், எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் சிவபெருமானிடத்தில் அளவில்லாத பக்தி. என் நாற்பத்தைந்து வருட ஆன்மீக சாதனையில் இராமகிருஷ்ண மடத்தில் நான் தீட்சை பெற்று, இராமகிருஷ்ணர் மீது ஜெபம், தியானம் செய்யத் துவங்கும் வரை, ஒரு இருபத்தைந்து வருட காலம் சிவபெருமான்தான் என் கண் கண்ட தெய்வம்.

இரவும் பகலும் "இராமகிருஷ்ணர் இராமகிருஷ்ணர்" என்று பைத்தியமாக அலைந்த ஒரு கால கட்டத்தில், இராமகிருஷ்ணர் கடவுளாக இருப்பது உண்மைதானா? நான் எழுதுகிறபடி, பேசுகிறபடி அவர் எல்லோரையும் காப்பாற்றுகிறாரா? என்ற அடக்கமுடியாத சந்தேகம் திரும்பத் திரும்ப எழுந்தது.

அதற்கு என்ன செய்வது?

யாருடைய துணையும் இல்லாமல், இமயமலைக்குப் போவதும்; அங்கே தவம், அது, இது என்று மனதிற்கு என்ன தோன்றுகிறதோ அதைச் செய்வோம்; மொழியும் தெரியாமல், ஊர்களும் தெரியாமல், துணையென்று யாரையும் தேடாமல், இராமகிருஷ்ணர் ஒருவரையே நினைத்துக்கொண்டு, போகும் அந்த இடங்களில் இராமகிருஷ்ணர் நம்மைக் காப்பாற்றுகிறாரா பார்ப்போம்; என்று ஒருநாள் ரயில் ஏறி டில்லி சென்று, டில்லியிலிருந்து ஓர் இரவு முழுதும் பயணம் செய்து, ரிஷிகேசத்தில் விடியும் காலை நேரத்தில் இறங்கினேன்.

இவைகளையெல்லாமும், மற்றும் பல செய்திகளையும் அடுத்து வரவிருக்கும் என் "இராமகிருஷ்ணரிலிருந்து ரஜனீஷ் வரை" என்னும் நூலில் விரிவாக எழுதயிருக்கிறேன்.

அந்தப் புனித மண்ணில் காலடி வைத்ததும் என் மனத்தில் பட்டென்று "சிவா - ஸ்ரீராமகிருஷ்ணா" என்ற மந்திரம் ஒலித்தது.

நான் இமயமலையில் சுற்றித் திரிந்த காலம் வரை இந்த மந்திரம் சாதாரணமாக அல்ல; யாரோ என் காதுகளில் உரக்கச் சொல்வது போல் ஒவ்வொரு விநாடியும் பெரிய சத்தமாகவே ஒலித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் விடியற்காலையில் பத்ரிநாத் கோயிலுக்கு அருகே உள்ள சத்திரத்தில் உறங்கியபடியும், விழித்தபடியுமாக இருந்த வேளையில், பத்ரிநாத்துக்கு அருகில் உள்ள நீலகண்ட மலையில் சிவபெருமானை, ஒரு துளி விநாடி காட்சியாகக் கண்டேன்.

ஒரு துளி விநாடி என்றாலும் எவ்வளவோ நேரம் கண்டு கொண்டிருக்கும் உணர்வு. தெள்ளத் தெளிவான காட்சி. கண் கொள்ளாத, மனம் கொள்ளாத காட்சி. இன்றும் அந்தக் காட்சி என் மனத்தில் நிற்கிறது.

அதே போல் பரந்த அருவிகள் எங்கும் வீழ்ந்து கொண்டிருக்கும் இமயமலையில், உயர்ந்த சிகரங்கள் நடுவே, வானவெளியில் இராமகிருஷ்ணரின் காட்சியையும் கண்டேன். இன்றும் அக்காட்சிகள் மனத்தில் அப்படியே நிலைத்திருக்கின்றன. இக்காட்சிகளைக் கண்டபின் அந்த மந்திர ஓசை சட்டென்று நின்றுவிட்டது.

பிறகு அங்கிருந்தபடியே தவத்திரு சுவாமி தபஸ்யானந்த மகராஜ் அவர்களுக்கு நான் கண்ட இராமகிருஷ்ணர் காட்சி குறித்துக் கடிதம் எழுதினேன்.

பிறகு நான் சென்னை இராமகிருஷ்ண மடத்திற்குத் திரும்பியதும் என்னைக் கண்ட சுவாமிகள் என் கடிதத்தை முன்பே படித்திருந்ததால் "நல்லது! இப்போது இராமகிருஷ்ணர் பற்றிய உன் சந்தேகம் தீர்ந்தது அல்லவா?" என்றார்.

இந்தக் காலக் கட்டங்களில் கூட முருகர் பற்றிய நினைவு கொஞ்சமும் வரவில்லை. பிறகு கைலாசத்துக்குப் பயணமாகிய போது கூட வரவில்லை. அறுபடை வீடுகள் அனைத்துக்கும் போயிருந்த போதும் முருகபக்தி என்னிடம் தோன்றவில்லை.

தவத்திரு வாரியார் சுவாமிகள் மீது எனக்கு அளவற்ற அன்பும், ஆழ்ந்த மதிப்பும் உண்டு. அதற்குப் பல காரணங்களில் ஒன்று - தமிழ்ப் பேராசிரியரான

நானே மகிழும்படி, அவருக்குத் தமிழ் இலக்கணப் பயிற்சியும், இலக்கியப் பயிற்சியும் இருந்ததுதான். அதோடு நான் அவரோடு பழகிய காலத்தில் நேரடியாக அவரிடம் கவனித்து, அனுபவித்த, அற்புதமான குணங்களும், செயல்களும் ஒரு காரணம்.

அவருடைய சொற்பொழிவை ஒருநாள் கேட்டுக் கொண்டிருந்த போது, 'சுப்ரம்மண்யம்' என்னும் பெயருக்கு விளக்கம் தந்து கொண்டிருந்தார்.

'சுப்ரம்மண்யம், சுப்ரம்மண்யம், சுப்ரம்மண்யம்' என்று குனிந்து தாளத்தை மடமடவென்று தட்டிக்கொண்டு, பலமுறை இந்தப் பெயரைப் பாடிவிட்டுச் சொன்னார். "இந்த மந்திரம் மகா மந்திரம். இதற்கு மேல் மந்திரமில்லை."

"சு - பிரம்மம் - மண்யம். இவ்வாறு இந்தப் பெயர் பிரிகிறது.

"பிரம்மம் என்றால் எவ்வளவு உயர்ந்தது; இணையற்றது என்று வேதாந்தம் பழகுபவர்களுக்குத் தெரியும். கடவுள் சக்திக்கு மிகமிக மேன்மையான, 'இதற்கு மேல் மேலான வேறு பெயர் இல்லை என்ற அளவுக்குச் சிறப்பான பெயர் பிரம்மம்.

'சு' என்பதற்கு சுத்தம் - தூய்மை என்று பொருள்.

'மண்யம்' என்றால் மணி - ஒளி.

"தூய பிரம்மமாகிய மகா ஒளி" என்பது இதற்கான பொருள் என்றார். "என்ன அற்புதமான பெயர்? இதற்கு மேலான கடவுள் பெயர் இல்லை.

"இதைத்தான் அனுபவசாலிகளான தமிழர்கள் ரத்தினச் சுருக்கமாக "சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை; சுப்ரமண்யருக்கு மிஞ்சிய கடவுளும் இல்லை" என்று சொல்லிவிட்டார்கள்" என்றார்.

அதைக்கேட்டு" அடே! அடே! நம்முடைய இந்தப் பெயருக்கு இவ்வளவு மேன்மையும், அர்த்தமும் இருக்கிறதா என்று மகிழ்ச்சி அடைந்தேன்.

என்றாலும் அப்போதும் எனக்கு, சுப்ரமணியர் மீது ஈடுபாடு வரவில்லை.



நாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் பள்ளியில் மாதந்தோறும் ரேங்க்சீட் தரும்போது அதில் என்னுடைய இந்தப் பெயரை நூற்றுக் கணக்கில் சொல்லிக்கொண்டே சுருக்கமாகக் கையெழுத்து இடுவேன். அப்போதும் ஈடுபாடு வந்ததில்லை.

எனக்கு இரத்தினகிரி முருகன் என்றால் பாலமுருகனடிமை சுவாமிகள்தான். ஒரு கடுமையான காலகட்டத்தில் இரத்தினகிரி முருகன் குரலைக் கேட்க நேர்ந்தது. அதன் பிறகு அவரிடம் போவதையே தவிர்க்க ஆரம்பித்தேன்.

சில நேரங்களில் என்னையும் அறியாமல், முருகன் சிலை மீது எழும் அன்பால், அருகில் சென்று சிறிது நேரம் சிலையையே பார்த்தபடி இருப்பேன். சில நேரங்களில் எங்கள் வீட்டில் உள்ளவர்கள் அபிஷேகம் செய்யும்போது உடன் அமர்ந்திருப்பேன்.

அப்போதும் எவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து போகலாம் என்றே பார்ப்பேன். அப்பேர்ப்பட்ட எனக்கு முருகனைப் பற்றி எழுதவேண்டிய நிலையும் முருகமயமாக ஆகவேண்டிய கட்டாயமும் உண்டாகிவிட்டது.

அதற்காக மாதக்கணக்கில் முருக நினைவில் இருக்க வேண்டியதாயிற்று. ஒரு காலகட்டத்தில் ஒரு நாள் இரவு முழுதும் முருகனை நினைத்து அழுகின்ற நிலையும் ஏற்பட்டது.

அதற்கு ஏற்றாற்போல் கோயில் கும்பாபிஷேக நாள் ஆண்டுக்கணக்கில் மாறிக் கொண்டிருந்தது. என் முருகமயமாகும் சாதனைகளும் தொடர்ந்த படியே இருந்தன.

இதன் பிறகு இரத்தினகிரியில் பள்ளி அமைக்கும் பணியைத் தவிர்க்க முடியாத அவசியம் கருதி, நான் சுவாமிகளைத் தொடர்ந்து வற்புறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரத்தினகிரி கோயிலில் அப்போது அர்ச்சகராக இருந்த திரு. சந்தான ஐயரின் மகனும்; தற்போது இரத்தினகிரி கோயிலில் தலைமை அர்ச்சகராக இருப்பவருமாகிய திரு. பிரசாத்தும், சுவாமிகளின் தம்பி மகனையும் ஆற்காட்டில் என்னுடைய பள்ளிக்கு ஆங்கிலம் பயிற்று மொழிவழிக் கல்விக்காக ஆறு ஆண்டுகள் அனுப்பினார்கள். எல்.கே.ஜி வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரையில் 13 கிலோமீட்டர் பஸ்ஸில், சின்னஞ்சிறு குழந்தைகள் வந்து சென்றார்கள்.

நல்ல கல்விக்கு அங்கே அனுப்புவதைத் தவிர, வேறு வழியில்லை. அந்தக் குழந்தைகள் வந்து போகவும், படிக்கவும் ஏற்பட்ட அளவற்ற துன்பங்களும், அப்படியும் அந்த உத்தமமான குழந்தைகளுக்கு, அவர்கள் பெற்றோர்களும், நானும் மனநிறைவு கொள்ளும் அளவு கல்வியை; தூரம், நேரம் இல்லாமை ஆகிய காரணங்களால் கவனிக்க இயலவில்லை. இதனால் எல்லோர் மனமுமே வருந்தியது. எனக்குப் பெரும் சோர்வு ஏற்பட்டது. சுவாமிகளுக்கும் அந்தக் குறை இருந்தது.

அதற்குள் கோயிலில் பணிபுரிந்து, கோயில் அருகில் குடியிருக்கும் மற்ற பணியாளர்களின் பல குழந்தைகளும் பள்ளிக்குச் செல்லும் வயதை அடைந்தனர். அவர்களும் ஆற்காட்டிற்கு இந்தச் சின்னஞ்சிறு இளம்வயதில், என் பள்ளிக்கு வரும் நிலை ஏற்பட்டது. அந்தக் குழந்தைகளும் பட இருக்கும் துன்பங்களை என்னால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. சுவாமிகளிடம் பெரும்பாலும் எதையுமே கேட்டு, எந்தவிதத்திலும் அவருக்குச் சிறு துன்பமும் கொடுக்காத நான், இப்போது இரத்தினகிரியிலேயே பள்ளியை ஆரம்பிக்கும்படி நிர்ப்பந்தம் செய்தேன். நிர்ப்பந்தம் மகா நிர்ப்பந்தம் ஆகியது.

பள்ளியின் கடுமையான அவசியத்தைச் சுவாமிகள் உணர்ந்தார். ஆனால் மிகவும் தயங்கினார். காரணம் பள்ளிக்கூடம் துவங்குவது அவருடைய ஆன்மீக வேலைகளை அடியோடு பாதிக்கும்.

பள்ளி என்பது நாளுக்குநாள், மாதத்திற்கு மாதம், ஆண்டிற்கு ஆண்டு வளர்ந்துகொண்டே போவது. அன்றாடம் ஒவ்வொரு மணிநேரமும் அதை கவனித்தாக வேண்டும். சுவாமி எதையாவது ஒன்றை ஆரம்பித்தால் நூறு விழுக்காடு சரியாக வரும்படிக் கண்காணிப்பது என்பது சுவாமிகளின் இயல்பு. என்ன துன்பம் நேரிட்டாலும் செய்வார்; அதில் மூழ்கி விடுவார்.

ஒரு நாள் மிகவும் வற்புறுத்திவிட்டு, மிகவும் மனம் நொந்து, இந்த முருகனைப் பிடித்தால் காரியம் ஆகுமோ என்று அவனிடம் சென்று மனம் உருகப் பள்ளியை இங்கே உருவாக்கு என்று கண்கள் நீர் கசியப் பிரார்த்தனை செய்தேன்.

பள்ளிக்கூடம் வந்தது. ஆனால் அதற்காக அவன் என்னைப் படுத்திய பாடும், பிடித்த பிடியும், காட்டிய பயமும், அதே நேரத்தில் அணைத்த கருணையும், அனுபவம்! அதோடு மிகவும் கருணைமயமான அனுபவம்! அந்த அனுபவம் முருகன் என்னோடு இருக்கிறான்; என் உணர்வு முருகமயம் ஆகிவிட்டது என்ற நம்பிக்கையையும், உறுதியையும் எனக்குத் தந்தது. பிறகு முருகனைப் பற்றி எழுதுவது ஆரம்பம் ஆகியது.

9. தலை காய்ந்த மலை.

இப்போது வேலூர் மாவட்டம் என்று அழைக்கப்படும், பழைய வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூருக்கும், ஆர்க்காட்டிற்கும் நடுவே, சென்னை, பெங்களூர், கோயம்புத்தூர் சாலையில், தலை காய்ந்து, ஒரு கிலோமீட்டர் சுற்றளவும், நூறு அடிக்கும் சற்று அதிகமான உயரமுமான ஒரு சிறிய மலை; குன்று உள்ளது. இதுதான் இரத்தினகிரி மலை.

மிகப் பழைய கோயில்

குண்டும் குழியும்; மேடும் பள்ளங்களும், புலியும் நரிகளும் புகுந்து தங்கியிருக்கும் குகைகளும் நிறைந்தது அந்த மலை. அந்த மலையின் தெற்குப் பகுதியின் உச்சியில் செங்கற்களாலும், சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட ஒரு மிகப் பழைய கோயில் இருக்கிறது; இருந்தது!

அதில் சுப்பிரமணியசுவாமி என்கிற பாலமுருகன் சுவாமி, வள்ளி, தெய்வயானையின் சிறிய சிலைகள் இருக்கின்றன.

இந்த மலையும், கோயிலும் அங்கிருந்து வடக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிழ்மின்னல் என்னும் கிராமத்திற்குச் சொந்தமானவை.

ஆடுகள் மேயும்.

இந்த மலையிலிருந்து கீழ்மின்னல் கிராமம் வரை நஞ்சை நிலங்கள், களிமண் பூமி. ஊருக்கும் கோயிலுக்கும் போய்வர நல்ல பாதை கிடையாது. கழனி வரப்பின் மீதுதான் நடந்து வரவேண்டும். அதிலேதான் போகவும் வேண்டும். ஒரு கல்ரோடு அந்த ஊரின் கிழக்குக் கோடியிலிருந்து நேராக நந்தியாலம் எனப்படும் ஊருக்கும், ரோடிற்கும் வரும். அந்த ரோடிற்கும் மலைக்கும் ஒரு கிலோமீட்டர் தொலைவு. மேற்கு நோக்கி வரவேண்டும். ஊரிலிருந்து அந்த ரோடின் வழியாக பஸ் ஓடும் தார் பாதைக்கு நடந்து வந்து, அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் நடந்து மலைக்கு வரவேண்டும்.

மலையின் அடிவாரத்தில் முள்செடிகள், புதர்கள், புல், நெருஞ்சிமுள் எல்லாம் முளைத்துக் கிடக்கும். ஆடுகளும், மாடுகளும் மேய்ந்து கொண்டிருக்கும். மலையின் மீதும் ஆடுகள் ஏறிப்போய் மேயும்.

பாழடைந்த அந்தக் கோயிலுக்குக் காலையில் ஓர் ஐயர் வாரத்திற்கு இரண்டுநாள் பூஜை செய்வார். ஒரு வருடமாக அவருக்குக் கொடுக்க வேண்டிய மாதம் எட்டு ரூபாய் சம்பளம் கூடக் கொடுக்கப்படவில்லை.

பூஜை.

பூஜை என்பது என்ன? அந்த மலை உச்சியில் கோயில் அருகே மூன்று சுனைகள் இருந்தன. அதில் நீர் ஊறி வரும். முருகனுக்கும், இரண்டு அம்மாக்களுக்கும் அபிஷேகம் செய்யும் அளவிற்கே அவைகளில் தண்ணீர் வரும். அதைக் கொண்டு வந்து மூன்று சிலைகள் மீதும் ஊற்றுவார். அவர்கள் மூன்று பேர் உடம்பில் ஏற்கனவே இருந்த கிழிந்து போய் கிடந்த துணிகளை எடுத்து மறுபடியும் கட்டுவார். விபூதி வைப்பார். கோயிலைப் பெருக்குவார். கொண்டு வந்திருக்கும் பிரசாதத்தைப் படைப்பார். கற்பூர ஆரத்தி செய்வார் அந்தக் கோயிலில் நல்ல பாம்பு ஒன்றை அவர் பார்த்து விட்டார். அதனால் அங்கு நல்லபாம்பு இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டே, பயந்து கொண்டே, இந்த பூஜையைச் செய்வார் அந்த ஏழைக்கோயில் ஐயர். சந்தானகிருஷ்ணன் என்று பெயர். நல்ல பக்திமான். முருகரிடம் ஆழ்ந்த பக்தி. அதனால் இந்தக் கோயிலும், இந்த முருகரும் இப்படி இருக்கிறார்களே என்று வருந்துவார்.

மற்றவர்கள் யாரும் முருகனின் இந்த நிலை குறித்து வருத்தப்படுவதே இல்லை. ஆனால் அந்த மணியக்கார ஆத்மா மட்டும் எந்த நேரமும். இந்த முருகன் கோயிலைக் குறித்தும், முருகனைக் குறித்தும் ஓயாத கவலையும், பக்தியும் கொண்டு, அதே பிரார்த்தனையும், புலம்பலுமாக இருந்து வந்தது.

விளக்கு: அன்றைக்கு.




இரத்தினகிரி கோயிலில் விளக்கு ஏற்றவும் கதியில்லை. அவர் ஏழை. அன்றாடம் மலைமேல் ஏறிக் கோயிலில் விளக்கு ஏற்றும் அளவுக்கு அவருக்கு வசதியும் இல்லை. யாரும் அவருக்குத் துணை செய்யவும் தயாராக இல்லை. என்ன முயன்றும் அவராலும் அதைச் செய்ய முடியவில்லை.

முருகனிடம் போகும்போதெல் லாம் "முருகா! ராத்திரியில் ஒரு மின்சார விளக்கு உன் கோயிலில் எரியாதா? எரிய நீ மனசு வைக்கக்கூடாதா?" என்று மனதிற்குள் அழுதுகொண்டு, சில நேரம் வாய்விட்டும் அழுவார்.

இன்றைக்கு.

புத்தகத்தில் இந்தப் பகுதியை நான் எழுதுகின்ற இன்று பால முருகனடிமை சுவாமிகள் இந்தக்கோயிலுக்கு வந்து பல ஆண்டுகள் ஆனபிறகு. கி.பி 2000 ஆண்டு ஆடிக் கிருத்திகை நாள். இரத்தின கிரியில் அமர்க்களமோ அமர்க்களமான நாள். கோயிலின் மேலாளர் திரு. சிவா (என்கிற) சிவனார் அமுது அவர்களுக்குப் போன் செய்கிறேன்.

"இன்று ஆடிக்கிருத்திகையில் இரத்தினகிரி மலை மீது எவ்வளவு விளக்குகள் எரிகின்றன" என்று. அவர் என் அன்பான மாணவர். கொஞ்சம்



ஓர் ஆடி கிருத்திகை நாள் கொண்டாட்டத்தின் போது எரியும் விளக்குகள்.

விவரமான தகவல் வேண்டும். அதாவது எத்தனை ட்யூப் லைட்? எத்தனை சீரியல் லைட்? 40 வாட்ஸ், 1000 வாட்ஸ் எத்தனை? என்ற விளக்கம்."

திரு. சிவா அவர்கள் சொன்ன தகவல்:

"நிறைய விளக்கு போட்டிருக்கோம் சார். இதோ ஃபைலைப் பார்த்துச் சொல்றேன். "ட்யூப் லைட் 530; சீரியல் லைட் 2000; 1000 வாட்ஸ் லைட் 100; 40 வாட்ஸ் பல்பு 800; மெர்க்குரி வேப்பர் லேம்ப் 10; இது தவிர 'ஓம் முருகா', 'வருக'. இப்படி ரன்னிங் போர்ட் விளக்குகள் - பெரிய விளக்கு, பெரிய போர்டு, ஒரு குத்துவிளக்கு . 400 சீரியல் பல்பு. அது மாதிரி நாலு குத்துவிளக்குகள். சாமி உருவம், முருகன் உருவம் ஒவ்வொன்றும் 300 சீரியல் பல்பு. பெட்ரோமாக்ஸ் 13 லைட்; 9 குத்துவிளக்கு. விநாயகர் சந்நிதிக்கு - மூலவர் சந்நிதிக்கு, தங்க ரதத்துக்கு ட்யூப் லைட் மற்றும் சீரியல். அதோடு வழக்கம்போல் கோயிலிலும் கோயிலைச் சுற்றிலும் எரியும் மிக அதிகமான 300க்கும் மேற்பட்ட 100 வாட்ஸ் விளக்குகள்.

"மக்கள் கூட்டம் எவ்வளவு இருக்கும்?"

"ஒரு லட்சம்."

"அடுத்த ஆண்டு 2001 அதே ஆடிக்கிருத்திகை - நாள்"

அதே அளவு விளக்குகள். மக்கள் கூட்டம் ஒரு லட்சத்து 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை. சிவா சொல்கிறார். இது இன்றைய நிலை. அன்று.

பரணி, கிருத்திகை என்று வரும் நாட்களில் இந்த மணியக்காரர் தான் அர்ச்சனையோ, அபிஷேகமோ, அதுவும் அவரது கடும், கடுமையான முயற்சியால் எற்பாடு செய்வார். அப்போது ஒரு நான்கைந்து பேர் - பத்துப்பேர் அல்லது அதற்குச் சற்று அதிகமாக அந்தக் கோயிலில் இருப்பார்கள். அதன் பிறகு அந்தக் கோயிலுக்கு யாருமே வரமாட்டார்கள்.

பகலில் ஆடு மேய்க்கிற பையன்கள் வந்து எட்டிப் பார்ப்பார்கள்.

அது ஒரு அநாதைக்கோயில்.

அந்த அநாதை மலைக்காட்டுக் கோயிலில்தான், இந்த அதிசயம் நடந்தது.

சங்கராச்சாரியார் சுவாமிகளும், இரத்தினகிரியும்.

1984ல் ஆந்திராவிலிருந்து காஞ்சிபுரம் திரும்பும் வழியில் பௌர்ணமியன்று ஒருநாள் மட்டும் தங்கும் எண்ணத்தோடு வந்த மூன்று சங்கராச்சாரியார் சுவாமிகளும் இரத்தினகிரியில் மூன்று நாட்கள் தங்கினார்கள்.

ஆழ்ந்த, மிக மிக ஆழ்ந்த, தமிழ்நாட்டில் இன்று தெளிவான ஆன்மீகப் பாராம் பரியத்தைப் பள்ளிகள் வைத்தும், ஆசிரமமும், ஆசிரமக் குடியிருப்புக்களும், கிராமப்புற ஏழை, எளியப் பஞ்சைப் பராரிகளின் உடல் நலம், வாழ்க்கை நலம், ஆன்மீக நலங்களை வளர்ப்பதில் தன்னைக் கரைத்துக் கொண்டும் இருக்கும் ஓர் ஆன்மீகக் கடவுள் தெளிவு பெற்ற உழைப்பாளி எழுதுகிறார்.

"இரத்தினகிரி சுவாமிகள் காஞ்சி பெரிய பரமாச்சாரியார் மீது மிக ஆழ்ந்த அன்பு கொண்டிருக்கிறார். அதுபோல காஞ்சி பரமாச்சாரியாரும் இரத்தினகிரி சுவாமிகள் மீது பேரன்பும், இரத்னகிரி முருகன்மீது பாசமும் கொண்டிருந்தார். இதைநான் இரண்டொரு நிகழ்ச்சிகள் மூலம் நேரில் உணர்ந்தேன்.

"ஒருமுறை இரத்தினகிரியிலிருந்து காஞ்சிபுரம் சென்று பெரியவரை தரிசித்தேன்.

அப்போது இரத்தினகிரி விபூதி பிரசாத பாக்கட்டைப் பெரியவரிடம் தர முயன்றேன்.

"அவரைச் சுற்றியுள்ள மடத்துச் சிப்பந்திகள் "பேப்பரில் வைக்காதே. இலையில் வைத்து மூங்கில் தட்டில் தான் தரணும்" என்று சட்டதிட்டம் சொன்னார்கள்.

"காஞ்சிப் பெரியவர் என்னைப் பார்த்தார். என்னை அருகே அழைத்து அவரது மேனா (பல்லக்கின்) மீது விபூதியை வைக்கச் சொன்னார். தனது முழுவிரல்களால் விபூதியை எடுத்துத் தனது நெற்றி முழுக்கப் பட்டையாகப் பூசிக் கொண்டார். என்பக்கம் பார்த்துத் "திருப்திதானே" என்பதுபோல் புன்னகை செய்தார்.

"பிறகு அந்த விபூதிப் பொட்டலத்தைப் பத்திரமாக எடுத்து மடித்துத் தானே மேனாவிற்குள் குனிந்து உள்ளே நுழைந்து, ஜாக்ரதையுடன் அந்தப் பொட்டல விபூதியை உள்ளே செருகி வைத்து, விட்டு வெளியே வந்தார். என்னைப் பார்த்தார். தமது நெஞ்சில் கையை வைத்து, "எனக்கு உவப்பானது" என்ற பாவனையோடு புன்னகைத்தார்.

"கோடி ஜென்மப் புண்ணியத்தை இந்த நிகழ்ச்சியைப் பார்த்து நான் அடைந்தேன்.

"1985 ஆம் ஆண்டு! ஆன்மீக நாட்டம் என்னை உந்த மகேந்திரகிரி மலைக்குச் சென்று - (திருநெல்வேலி அருகே அடர்ந்த காடு - காட்டு விலங்குகள் நிறைந்த மலை) தவத்தில் அமர்ந்து விட நான் முடிவெடுத்தேன். மாங்காடு, மற்றும் காஞ்சி காமாட்சியம்மன் கோயில் பிரசாதங்களுடன் காஞ்சிப் பெரியவர்களை தரிசிக்கப் போனேன்.

"மகேந்திரகிரி போக உங்க ஆசிதேவை" என்றேன் "ஊஹூம்" என்று மறுத்து, வலது கையை இப்படியும் அப்படியுமாக ஆட்டினார். சற்று நேர நிஷ்டைக்குப் பிறகு "இரத்தினகிரி மலை இருக்கும் போது உனக்கு மகேந்திரகிரி மலை எதற்கு?" என்று கேட்டார். நான் அதிர்ச்சியில் அயர்ந்து போனேன். இரத்தினகிரி பற்றி எவ்வளவு உயர்ந்த கருத்தைப் பெரியவர் வைத்துள்ளார்?

"மன்னு மகேந்திர மாமலைமேல் ஈசன் அருளிய பனுவல். வேதங்கள்" என்று மாணிக்கவாசகர் போற்றிப் பாடிய மகேந்திரகிரியை; பரசுராமரும், ஆஞ்சிநேயரும், போகரும் எண்ணிறந்த ரிஷி, முனிகளும் தவம் செய்யும், மகேந்திரகிரியை, இரத்தினகிரிக்கு இணையாக்கி, "இரண்டும் ஒன்றே" என்று பெரியவரே சொல்கிறாரே என்று அறிந்து கொண்டேன்.

"பிறிதொரு முறை; ஆடிப் பரணியன்று இரத்தினகிரி சென்றேன்.

"கிருத்திகைக்குப் பெருங்கூட்டம் வரும் என்பதால் முந்திய நாளே சென்று தரிசித்து, வருவது எனது வழக்கம். பாலமுருகனடிமை சுவாமிகள் சற்றுக் கவலையுடன் காணப்பட்டார். "ஏன்" என்று விசாரித்தேன். "நாளை ஆடிக்கிருத்திகை. எக்கச் சக்கமான ஜனம் வரும். நாளை மழை வந்தால், அவர்களுக்குச் சிரமம் ஏற்படும். விழாவிற்கும் இடைஞ்சல்; எனவே இன்றைக்கே மழை பெய்து விட்டால், நாளைவராது'' என்று பிரார்த்தித்துக் கொண்டு இருக்கிறேன்! என்றார்.

"அடுத்து நான் காஞ்சிக்குச் சென்றேன் ஆயினும் பாலமுருகனடிமை அவர்கள் 'இன்றே மழைபெய்ய வேண்டும்' என்றாரே என்ற எண்ணத்தில் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.

"நான் பெரியவர் எதிரில் தரிசனத்திற்கு நின்றதும், "ஸ்ரீகண்டா! வெளியே மழை தூத்தல் போடறதா பாரு" என்றார். நிஜமாகவே மழை தூற ஆரம்பித்தது. பெரியவர் ஒன்றுமே பேசாமல் என்னை நோக்கிச் சிரித்தார்!

"ஆகம சாத்திரங்களில் ஏதாவது ஐயங்கள் ஏற்பட்டால் காஞ்சிப் பெரியவரிடம் ஆளனுப்பித் தெளிவு பெறுவது இரத்தினகிரி சுவாமிகளின் வழக்கம். கருவறைத் திருப்பணியில் கோபுரத்தின் உயரம், கோபுரம் மண்டபத்திற்கு வெளியே வரலாமா அல்லது உள்ளேயே இருக்க வேண்டுமா, பீடத்தில் புதிய குடமுழுக்கின்போது அமைக்க வேண்டிய யந்திரம், கல்தேரில் பாலாலயம் அமைக்கலாமா? போன்று பல ஐயங்கட்கு காஞ்சிப் பெரியவர் பதில் கொடுத்திருக்கிறார்

"இரத்தினகிரிக் கோயிலில் பூசைகளை 1968க்கு முன்பிருந்தே பரம்பரை பரம்பரையாகச் சோழிய அந்தணக் குருக்களின் குடும்பம் செய்து வருகிறது.

இன்றும் சுவாமிகளின் மனதிற்கு இயைப, காசு பணத்திற்கு ஆசைப்படாமல் சந்தான குருக்களும், அவரது குடும்பத்தாரும் முறையாகச் செய்து வருகின்றனர். குருக்கள் வசிக்க குடியிருப்புக்கள், நல்ல ஊதியம், அவர்தம் குடும்பத்தவர் நலன்கள், அணிந்துகொள்ள ருத்ராட்சர மாலை போன்று பல வசதிகளையும் இரத்தினகிரிசுவாமிகள் அளித்துள்ளார்கள்.

"புதிய கருவறை திருப்பணி முடித்து, குடமுழுக்கு செய்தபின் "சிவாசாரியார்கள் தான் பூசை செய்ய வேண்டும்" என்று ப்லரும் அடிகளாரிடம் சொல்லி வந்தனர். சுவாமிகட்கு அது சம்மதமில்லை. காஞ்சிப் பெரியவர் இரத்தினகிரியில் தங்கியிருந்த போது இதுகுறித்து விளக்கம் கேட்டார். அதற்குப் பரமாச்சாரியார், "கோயில்ல கும்பிடறத்துக்கு பக்தர்களே இல்லாதிருந்த காலத்தில், மண்சட்டியில் நீர் சுமந்து, படியேறி நிதமும் வந்து, தன் வீட்டுச் சாதத்தைச் சுவாமிக்குப் படைத்து பூசித்து வந்த பழைய குருக்கள்தான் பூசையைத் தொடர வேண்டும். எந்த மாற்றமும் தேவையில்லை" என்று கூறிவிட்டார்கள்.

ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இரத்தினகிரி அடிகளாரைப் பற்றி கீழ்க் கண்ட வாழ்த்தை எழுதி வழங்கியுள்ளார்:

"இரத்தினகிரி மலையில் நின்று அருள் பாலித்து வரும் ஸ்ரீ முருகப்பெருமானுக்கு ஆலயம் எழுப்பி, மண்டபம் நிர்மாணம் செய்து வாஹனங்கள், தங்கரதம் முதலிய திருப்பணிகள் செய்து முடித்ததுடன் நித்ய பூசைகள், விசேஷ பூசைகள் நடக்கப் பல அறக்கட்டளைகளை ஏற்படுத்தி, அதன் மூலம் பூசைகளைச் சிறப்பாக நடத்திக் கண்காணித்து வருகிறார் ஸ்ரீ பாலமுருகனடிமை." இவை அந்தக் கடவுள் மனிதர் எழுதியவை.

காஞ்சிப் பெரியவர்களிடமும் குறிப்பாகப் பெரும் பெரியவர் சந்திர சேகரேந்திர சுவாமிகளிடம், இரத்தினகிரி சுவாமிகள் கொண்டிருந்த அன்பு அதிசயமானதும், ஈடு இணையற்றதுமாகும். இதை நானே நேரில் கண்டிருக்கிறேன்.

"மூன்று சங்கராச்சாரி சுவாமிகளும் இரத்தினகிரி வருகை! சுவாமிகளின் டைரியிலிருந்து...

இரத்தினகிரி. 16.2.84

"முதலில் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி களும், இளையவரும் காலை ஒன்பது மணிக்கு வந்தனர். பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றேன். பின்னர் திருமுருகன் திருமண மண்டபத்தில் உட்கார்ந்தனர். அறிமுகம் முடிந்தது. சிறிது நேரம் அவர்களுடன் உட்கார்ந்து பொதுவான விஷயங்கள் - முன்பு சுவாமிகள் இங்கு வந்தது பற்றி நினைவு கூர்ந்து உரையாடல் நடந்தது.

"பத்து நிமிடம் இருந்துவிட்டு "மலைமீது திருக்கோயில் வழிபாட்டுக்கு எப்போது சுவாமிகள் வருவார்" என்று கேட்டேன். "மழை பெய்கிறது. தோதுப்படி வருகிறேன்" என்று கூறினார்.

"பிறகு நான் அங்கிருந்து புறப்பட்டேன். பெரியவர் (சந்திரசேகரேந்திர சுவாமிகள்) இரத்தினகிரி மலைக்கு ஐந்தரை மணிக்கு வருவதாக முதலில் கூறினார். ஆனால் எதிர் பாராத விதமாக அவர்கள் தங்குவதாக முன்பு ஏற்பாடு செய்திருந்த அரப்பாக்கத்தில், அது வேலூருக்கும், இரத்தினகிரி கோயிலுக்கும் இடைப்பட்ட சிற்றூர்; வசதி குறைவின் காரண மாக நேராக இரத்தினகிரிக்கு வந்தார்கள்.

"முதல் பெரியவர் காலை, பத்து மணி, இருபது நிமிடத்துக்கு வந்தார். பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்றோம். ஜகதாம்பா கல்யாண மண்டபத்தில் - இப்போது அறநிலைய அலுவலகம் இருக்கும் இடத்தில், அவர்கள் தங்குவதற்கு அழைத்துச் சென்றேன். வாசற்படிக்கு வந்தவுடன் அங்கு நின்று கொண்டு மந்திரஜெபம் செய்யத் துவங்கினார். ஜெபம் முடிய இருபது நிமிடம் ஆயிற்று. பிறகு உள்ளே நுழைந்து உட்கார்ந்தார். அனுஷ்டானம் முடிந்ததும் பெரியவருடைய உதவியாளர்கள் என்னைப் பெரியவருக்கு அறிமுகப்படுத்தினார்கள். பெரியவர் சிரித்தார். ஐந்து நிமிடம் உடன் இருந்துவிட்டு நான் அங்கிருந்து புறப்பட்டேன்.

"அதன் பிறகு பெரியவர் நம் கோயில் குருக்களோடும், மற்றவர்களோடும் பேசிக் கொண்டிருந்தார். பெரியவர் மண்டபத்தை விட்டு, பதினொன்றரை மணிக்கு வெளியே வந்து ராஜகோபுரம் உள்ளதா? என்று கேட்டதாகவும், இருப்பதாகக் கூறியதும் அருகில் உள்ள விநாயகர் கோயிலுக்குவந்து விநாயகரைத் தரிசித்து விட்டு, சற்று தூரம் வந்து ராஜகோபுரம் நோக்கி வணங்கிவிட்டு, அதில் எத்தனைக் கலசம் இருக்கிறது? என்று கேட்டாராம், 'ஏழு கலசம்' என்று கூறப்பட்டதும் 'சரி' என்று தலையை அசைத்தாராம். பிறகு "மலைலே உள்ளே இருக்கும் மூலஸ்த்தான கோயிலின் விமானம் தெரியுமா? என்று அதுபற்றி விசாரித்தராம். கோயில் விமானம் பழையது; சுண்ணாம்பால் அமைந்த விமானம்; சுவாமிகள் இங்கு வருவதற்கு முன்னேயே விமானத்தில் கலசம் இல்லை என்று கூறினார்களாம்.

"பிறகு விநாயகர் கோயிலில் இருந்த கல்வெட்டைப் படித்துப் பார்த்தாராம், அன்று மாலை நான்கரை மணிக்கு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் மற்றும் மூன்றாவது பெரியவரும் மலைக்கு வழிபாடு செய்ய வந்தனர். நான் இரண்டாவது மண்டபம் வரை போய் அவர்களை அழைத்து வந்தேன்.

"அவர்களுடன் கூட வந்தேன். பிறகு விநாயகர் கோயிலில் தரிசனம் செய்துவிட்டு வந்தபின், மூன்றாம் பெரியவர் உடன் வருபவர்களிடம் அங்கு நடக்கும் செயல்களைப் பற்றி விசாரித்தபடி, கோயிலைப் பார்த்தக்கொண்டு வந்தார். விநாயகர் கோயிலில் அவருடன் வந்து அணுக்கத்

தொண்டர்களைக் கொஞ்சம் விலகச் சொல்லி என்னைப் பார்த்துக் "கூட வாருங்கள்" என்று இரண்டாம் பெரியவர் என்னை அன்போடு சிரித்துக் கொண்டே கூறினார்.

"பிறகு மூலஸ்த்தான கோயிலுக்குள் தரிசிக்கச் சென்றார்கள். முருகனுக்கு அலங்காரம் செய்திருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார். அந்த அலங்காரத்தைப் பார்த்து மூன்றாம் பெரியவர், 'ஓங்காரம் புஷ்பத்தில் அழகாகச் செய்திருக்கிறார்கள் என்றார். "ஓங்கார மூர்த்தி," "அலங்காரப் பிரியன்" முருகன் என்றார் இரண்டாம் பெரியவர். என்னிடம் முருகனுக்கு நிறைய நகைகளைச் செய்யுங்கள் என்றார்.

"கோயிலுக்குள் சுவர்களில் கண்ணாடி டைல்ஸ் ஒட்டப்பட்டு இருந்தது. அதைப் பார்த்த மூன்றாம் பெரியவர், "இது சலவைக்கல் தானே" என்றார். அதைக் கேட்ட இரண்டாம் பெரியவர் ஜெயேந்திர சுவாமிகள் "இது சலவைக்கல் அல்ல; செயற்கைக் கல் - செராமிக் ஓடு" என்றார். நான் "கீழே பதித்துள்ளதுதான் சலவைக்கல்" என்றேன். இருவரும் சிரித்தனர். பிறகு நாங்கள் மூன்று பேரும் கோயிலை விட்டு வெளியே வந்தோம்.

"பிறகு கோயிலைக் காட்டி, ஜெயேந்திர சுவாமிகள் இளைய பெரியவரிடம் கூறினார். "இந்தக் கோயில் ஒன்றுதான் முதலில் இருந்தது. இவர் தனி மனிதனாக, எங்கும் போகாமல், இருந்த இடத்திலேயே இருந்து, இவ்வளவு வளர்ச்சியையும் செய்து வருகிறார்! இதை இடித்து விட்டுக் கருங்கல்லில் கோயில் கட்டப் போகிறார். அது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இப்போது ஓர் ஆள் கூலி முப்பத்தஞ்சு ரூபாய்க்கு மேலாகிறது. திருப்பதி, ஆந்திரா மற்ற மாநிலங்களில் கல் திருப்பணி அதிகம். இப்போ ஆட்கள் - சிற்பிகள் குறைவு. வெளிநாடுகளிலும் இப்ப கோயில் கட்ட ஆரம்பிச்சுட்டா. அங்கே சிற்பிகள் பணம் சம்பாதிக்க ஓடுகிறார்கள்" என்றார்.

"பிறகு பார்வையாளர்களைச் சந்திக்கின்ற என்னுடைய அறைக்கு வந்தோம். முதலில் 1979 ஆம் வருடம், பிறகு 1982ம் வருடம் மார்ச் 21 ஆம் தேதி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இங்கு வந்தபோது உட்கார்ந்த இடத்திலேயே இப்போதும் சுவாமிகளை உட்காருமாறு செய்தேன். அவர்

உட்கார்ந்ததும் எதிரில் அருகில் வடபுறத்தில் நான் உட்கார்ந்தேன். சுவாமிகளை ஒட்டி இளையவர் உட்கார்ந்தார். கதவை முக்கால் பகுதி சாத்திவிட்டோம். உடன் அறைக்குள் மாலைமுரசு நிருபரும், அவருடைய போட்டோ கிராபரும் வந்துவிட்டனர்.

"மாலைமுரசு பேப்பரையும், போட்டோக்களையும் நிருபர் சுவாமிகளிடம் தந்தார். இரத்தினகிரிக்கு வருவதற்கு முன்பு சுவாமிகள் மூவரும் வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோயிலில்' பத்துநாட்கள் தங்கி இருந்தனர். அது பற்றிய செய்தியும், போட்டோவும் பேப்பரில் வந்து இருந்தது. நான் பேப்பரை வாங்கிச் சுவாமிகளிடம் கொடுத்தேன்.

"ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பேப்பரை எடுத்துப் படித்தார். இளையவர் எதிரில் ஒரு செய்தித்தாள் வைக்கப்பட்டிருந்தது. பெரிய சுவாமிகளிடம் இளைய சுவாமிகள் தான் படிக்கும் பக்கத்தை அவருக்குச் சுட்டிக் காட்டினார். இந்தநேரம் பெரிய சுவாமிகள் பேப்பர் படித்ததைப் போட்டோகிராபர் படம் எடுத்தார். அது சமயம் இளையவர் தன் எதிரில் இருந்த மாலைமுரசு பேப்பரை - தனக்கு எதிரில் இருந்த பேப்பரை அப்பால் தள்ளிவிட்டார். முகத்தையும் போட்டோவில் விழாதபடி மறைத்துக் கொண்டார்.

"நான் அவர் செயல்களைக் கூர்ந்து கவனித்தேன். அவர் செயல்கள் எல்லாம் எனக்கு ஆச்சரியத்தை ஊட்டின. அவர் எவ்வளவு கூர்மையாகவும், எச்சரிக்கையாகவும் தன் செயல்களில் இருக்கிறார்!

"நான் உடனே அந்த போட்டோகிராபரை, 'போ, வெளியே' என்று அனுப்பிவிட்டேன். நிருபரையும் வெளியே அனுப்பி விட்டேன். உடனே கதவைச் சாத்திவிட்டோம்.

"கோயிலுக்கு எப்போதும் வரும் ஒரு பக்தர் உடன் இருந்தார். பிறகு கதவை முழுமையாகச் சாத்திய பின், இளையவர் பேப்பரை எடுத்துக் படித்தார். பிறகு எங்களிடம் 'போட்டோ கிராபர்கள் பேப்பர் என் எதிரில் இருந்தாலும் நான் பேப்பர் படிக்கிறேன்' என்று விளம்பரப் படுத்தி விடுவார்கள்" என்றார்.

"அந்த பேப்பரை எடுத்துப் படித்த இளைய சுவாமிகள், "அந்தப் பேப்பரில் இரண்டு பேர் பெயர்தான் போட்டிருக்கிறது" என்று இரண்டாம் பெரியவரைப் பார்த்துச் சொன்னார். அதில் அவர் பெயர் இல்லை.

"போட்டோ எடுக்க முயன்ற போட்டோகிராபருக்கு முகம் கூடக் காட்டாமல், பேப்பரை அப்பால் தள்ளிவிட்டேனா? இல்லையென்றால், 'இளைய சாமி கூடப் பேப்பர் படித்தார்' என்று மாலை முரசில் போடுவார்கள். அதனால் தள்ளினேன்" என்றார். நாங்கள் எல்லோரும் சிரித்தோம்.

"அதன் பிறகு கல்தேர் பற்றி உரையாடல் துவங்கியது. அந்த சமயம் இரண்டாம் பெரியவர் 'இளைய சுவாமி, சிலைகளும், ஆபரணங்களும் இருக்கும் உள்ளறையைப் பார்க்கட்டும்" என்றார். உள்ளே அந்த அறையைப் பார்ப்பதற்கு இளைய சுவாமிகளோடு அங்கிருந்த அந்த அறை பற்றித் தெரிந்த அன்பரையும் உடன் அனுப்பினேன். அந்த அன்பர் அந்தப் பாதுகாப்பு அறையைத் திறந்து சாமிகளை உள்ளே அழைத்தார். இளையவர் அந்த அன்பரை முதலில் 'நீங்கள் உள்ளே போங்க நான் பின்னால் வருகிறேன்" என்றார்.

"உள்ளே போய் எல்லாம் பார்த்துவிட்டு, "ஏன் கம்பி கிரில் போட்டிருக்கிறீர்கள்' சுவர் நல்ல கணமோ" என்று கேட்டாராம். "பாதுகாப்புக்காக இப்படி கிரில் வச்சிருக்கு" என்று சொன்னதும் "மதில் கிரில்' போடுங்க" என்றாராம்.

"திரும்ப வெளியே வரும்போது கதவில் மின்சார மணி அமைத்திருப்பதைப் பார்த்து' ஏன் கதவில் சுரண்ட்டு வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டாராம். "கதவு திறந்தால் எச்சரிக்கை மணி அடிக்கும்" என்று அவரிடம் சொல்லப்பட்டதாம்.

"உண்மையிலேயே மூன்றாம் பெரியவர் மிகவும் கூர்மையான அறிவுள்ளவர். அவர் நம் மலைக் கோயிலில் ஒவ்வொரு இடத்தையும் அங்கு செய்யப்படும் வேலைகள் ஒவ்வொன்றையும் கூர்மையாக கவனித்து வந்தார்.

"அவர் உள்ளே சென்றிருந்தபோது நானும், இரண்டாம் பெரியவரும் மலையில் தற்போதுள்ள கோயிலை இடித்துவிட்டு, அதில் தற்போது இருக்கும் மூலவர் முருகனை அமைப்பதற்கான பாலாலயம் பற்றி உரையாடினோம். இந்து தர்மம் மற்றும் மதமாற்றம், இஸ்லாமிய அன்பருக்கு அளித்த பேட்டி முதலியன பற்றிக் கூறினார்! தற்போது நாட்டில் ஆன்மீகத்தைப் பெரிய அளவில் விளம்பரத்தோடு நடத்துபவர்களைப் பற்றிப் பேச்சு வந்தது. "என்னமோ சொல்கிறார்கள். பணக்காரர்கள் போய் பணம் கொடுக்கிறார்கள். அவர்கள் சொல்வது நடக்கிறதாம். ஆனால் அவர்களுக்குக் கோயில்களைப் பற்றி என்ன தெரியும்? கோயில், அதன் அமைப்பு இவைகளைப் பற்றி ஒன்றும் தெரியாது" என்றார்.

"நான், நம் கோயிலில் உள்ள பழைய கோயிலை இடிப்பதைப் பற்றிப் பலபேர் கூறிய பல கருத்துக்களைச் சுவாமிகளிடம் கூறினேன். அதைக் கேட்ட சாமி, "பல பேர் பலபடியாகக் கோயில்களைப் பற்றியும், செய்யும் திருப்பணிகள் பற்றியும் பேசுவார்கள். இதெல்லாம் பற்றி நாம் சிந்திக்கக் கூடாது. 'அவன்' - 'கடவுள்' நமக்கு உணர்த்துகிறான். நாம் செயல்படுகிறோம். பகவான் சிந்தனையில் இருக்கும் நமக்கு என்ன வரும்? தாராளமாக இந்தப் பழைய கோயிலை இடித்து விட்டுப் புதிய கோயிலைக் கட்டலாம்" என்றார்.

"ஆகமம் பற்றிப் பேச்சு வந்தது". "சிற்பியால் உருவாக்கப்படும் எந்த விக்ரகத்தையும் நமது விருப்பப்படி இடம் மாற்றி வைக்கலாம். இப்போது கோயிலில் நடைபெற்று வரும் வைதீக பூஜை இதே குருக்களைக் கொண்டு தொடரட்டும். சுயம்பு விக்ரகத்தை - லிங்கத்தைத்தான் அப்புறப்படுத்தக் கூடாது. சிற்பியால் செய்யப்பட்ட லிங்கத்தையும் அப்புறப்படுத்திப் பிறகு வைக்கலாம். ஜலகண்டேசுவரர் கோயில் லிங்கத்தை நாம் அப்படி வைத்தோமே" என்றார்.

"நான், "இதையெல்லாம் யார் சொன்னார்கள்" என்று கேட்டால் நான் என்ன சொல்வது? என்று கேட்டேன். "காஞ்சி சங்கராச்சாரி சாமி கூறினார்

என்று சொல்லுங்களேன்" என்று சிரித்துக் கொண்டே ஒரு போடு போட்டார்.

"கோயில் கட்டியதும் கும்பாபிஷேகத்திற்கு நீங்கள் வரவேண்டும் என்றேன். "அப்போது நான் வடநாட்டு யாத்திரையில் இருப்பேன். இவர் இளைய பெரியவரைக் காட்டி, "இனி இவர்தான் இரத்தினகிரியோடு நெருக்கமாக இருக்கப் போகிறவர். நான் உற்சவமூர்த்தி" என்று சிரித்தார்.

"கர்பகிருகத்தின் உள்ளே கருங்கல் பாலிஷ் போட்டு, கீழே, கிரே, சிவப்பு கல் போடவும்." என்றார்.

பிறகு "கிராமத்தில் ஒரு கதை உண்டு. 'சும்மா இருப்பவனுக்கு ரெண்டு பட்டை சாதம் என்று" என்றார்.

"சிலர், துறவிகள் சோம்பேறிகள், சுயநலவிரும்பிகள் இவர்கள் என்ன பலன் அனுபவிக்கப் போகிறார்கள்? என்று யாரோ கேட்டார்களாம். அதற்குத்தான் இந்தக் கிராமத்துக் கதை. "சும்மா இருப்பவனுக்கு ரெண்டு பட்டை சாதம்" என்றார்.

"பெரிய சாமிகளும் இங்கே மேலே வந்து தரிசிக்க வேண்டும்" என்று கேட்டேன்.

"சிரமம்தான். டோலியில் வரமாட்டார்" என்றார். "கேட்டுப்பாருங்கள்" என்றேன். "இரவு கீழே மண்டபத்துக்குப் பெரியவரிடம் வாங்க. நான் சொல்லி அனுப்புகிறேன்" என்றார். "ஆர்க்காடு முகாம் நாளை என்றும் கூறியுள்ளார்கள்.'' என்றேன். உடனே சுவாமி, ''நாளை நான் போகமாட்டேன். இரத்தினகிரியில் தங்குகிறேன். நாளை மறுநாள் போகிறேன்" என்றார். மகிழ்ச்சியுடன் சிரித்தார்.

"ஜலகண்டீஸ்வரர் கோயிலில் மழையில் நனைந்ததில் சிரமம். அங்கு வசதி இல்லை. இங்கு நல்ல வசதி. பக்தர்களும் நல்ல முறையில் தரிசனம் செய்ய வசதி. பூஜைக்குப் பெரிய மண்டபம் சௌக்கியமாக இருக்கிறது. வெள்ளிக்கிழமை மாசி மகம். ஸ்நானம், பூஜை முடித்து மறுநாள் காலைதான் போகிறோம்" என்றார். பெரியவரும் இருக்கணும்" என்றேன்.

"அவரைப் பற்றி என்ன சொல்ல முடியும்?" திடீரென்று காலை புறப்படலாம் என்பார். புறப்படனும். இரவு அவரிடம் சொல்கிறேன். "இங்கே ஒருநாள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்கப்போகிறேன்" என்றார்." இரவு நான் வரும்போது கூறுங்கள்" என்றேன்.

"மூன்று பேரும் அந்த அறையை விட்டு வெளியே வந்தோம். கல்தேர் செதுக்குகின்ற இடத்திற்குச் சென்றோம். அங்கு நடக்கும் வேலையைப் பார்த்தார். "கோயிலைப் பிரதட்சனம் வருவதற்கு இடம்விட்டு அமையுங்கள் என்றார்.

"நம் ஆட்கள் அங்கிருந்தவர்கள் சுவாமிகளிடம் ஆசி பெற்றார்கள். அருளுரை வழங்கினார். கீழே இறங்கிச் செல்லும் வழியில் நின்ற அருணாவைப் பார்த்தார். "சுவாமியின் மகள்" என்று உடன் இருந்தவர்கள் கூறினார்கள். அப்போது அருணாவிற்குத் திருமணம் ஆகல்லே. சிரித்தபடி "நல்லது நடக்கும்! மகிழ்ச்சி" என்றார்.

"இருவரும் இறங்கும்போது நானும் கூடவே சென்றேன். அவர்கள் தங்கியிருந்த மண்டபத்தை அடைந்தோம்.

"நாங்கள் போய் ஸ்நானம் பண்ணனும். சொல்லி அனுப்புகிறோம்" என்றார்கள். ஐந்து நிமிடத்தில் என்னைக் கூப்பிட்டார்கள். சென்றேன். பெரியவர் முன் போய் நின்றேன். பெரியவர் சிரித்து கையை அசைத்து அருகே வரச் சொன்னார். "மேலே வந்து முருகனை தரிசிக்க வேண்டும் என்றேன்." காலைக் காட்டி" எங்கே? எப்படி ஏற முடியும்?" என்றார்.

17.2.84 காலை 4.30 மணி.

"நாம் தோண்டியிருக்கும் குளத்தில் குளிக்க முடியாதாகையால் மோர்க்குளம் குளத்தில் மூவரும் குளித்தார்கள். சுவாமிகளுடன் வந்தவர்கள் மயில்தோகை ஒரு கட்டு கொண்டு வந்து கோயிலில் முருகனுக்கு அலங்காரம் செய்யக் கொடுத்திருந்தார்கள். அந்த மயில் தோகையைக் கொண்டு முருகனுக்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அப்போது கோயிலில் ஒரு அபிஷேகத்திற்கு ரூ. 66/- கட்டணமாக

வைத்திருந்தோம். ரூ. 66/- ம் முருகனுக்குச் சாத்திட ஒரு சால்வையும் சுவாமிகளிடமிருந்து நம்மிடம் அளிக்கப்பட்டது.

"முதல்நாள் 16.2.84 அன்று சந்திரமௌலீஸ்வரர் பூஜை செய்து, பூஜை முடிந்ததும் சுவாமிகள் பிரசாதம் மேலே நமக்கு அனுப்பி வைத்தார்கள்.

"17ந்தேதி காலை கீழே சுவாமிகள் மண்டபத்தில் பூஜை செய்தார்கள். கர்ப்பகிருகம் கட்டச் சிற்பிகள் வேலை செய்து கொண்டிருந்த கல்லைச் சிற்பிகள் பல்லக்கில் வந்த பெரிய பெரியவரிடம் காட்டினார்கள். அவர் பல்லக்கில் அமர்ந்தபடியே தன் கையில் இருந்த தண்டத்தால் தொட்டு ஆசிர்வாதம் செய்தார். பிறகு மகிழ்ச்சியோடு சிரித்தபடியே மண்டபத்திற்குச் சென்றார்.

"இதனிடையில் காலையில் ஏழு மணிக்குக் கோயிலில் பூஜை செய்யும் கோபி குருக்கள் ஆசி பெறப் பெரிய பெரியவரிடம் சென்றபோது, பெரிய பெரியவர், 'நீ யார்?' என்று கேட்டதாகவும், முருகர் கோயிலில் குருக்கள் என்று கூறியதற்குச் "சம்பளம் எவ்வளவு? நைவேத்தியப் படி எவ்வளவு? சுவாமிகள் இவ்வளவு கட்டிடம் கட்டப் பணம் வரவு எப்படி? அரசு நிர்வாகம் எது? எது? திருப்பணிகள் எப்படி" செய்கிறார்கள் என்று விசாரித்திருக்கிறார்கள்.

"மாலை 4.30 மணி. ஆசிரமத்தில் இருந்த எனக்குத் தகவல் வருகிறது. பெரிய பெரியவர் படிகள் மீது ஏறி மேலே கோவிலுக்கு வந்து கொண்டிருக்கிறார் என்று. நான் கீழே செல்வதற்குப் புறப்பட்டுப் படிகளில் வருவதற்குள், மேலே கோயில் வாயிற்படி அருகே வந்துவிட்டார். உடனே ஓடிப்போய் ராஜகோபுரத்துக்கு அருகில் பூர்ண கும்ப மரியாதை அளித்துக் கோயிலுக்கு அழைத்து வந்தோம்.

"விநாயகர் கோயிலில் கும்பிட்டு விட்டுப் பிறகு மேலே கோயிலுக்கு வந்தார். தங்கரதம் ரூமிற்குச் சென்று, பத்து நிமிடம் தேர் அருகே நின்று ஒவ்வொன்றாய் உற்றுப் பார்த்தார். பிறகு அங்கே பதித்திருந்த கல்வெட்டை முழுமையாகப் பார்த்தார்.

"மூலஸ்தானத்திற்குப் படிக்கட்டில் உயரமாக இருந்த கல்லின் மீது, யார் துணையும் இல்லாமல் ஏறி உள்ளே சென்றார். ஆராதனை காட்டினார்கள். அது முடிந்ததும் கற்பூரம் நிறையப்போட்டு முருகனுக்கு அணிவித்திருந்த ஆடைகளை நீக்கி முகம் முதல்பாதம் வரை காட்டச் சொல்லி, ஒவ்வொரு பகுதியையும் உற்றுப் பார்த்தார். அதே மாதிரி அம்பா வள்ளி, தெய்வயானை சிலைகளையும் பத்து நிமிஷம் இருந்து பார்த்துவிட்டுப் பிறகு கோயிலில் இருந்து வெளியேவந்தார்.

"நம் ரூம் பக்கம் வந்தபோது, "நகைகள், உற்சவமூர்த்தி இவைகள் உள்ளே ரூமிற்குள் இருக்கு. அவைகளைப் பார்க்கலாம் என்றேன். ரூம் வாசற்படி வரை வந்து அங்கிருந்தே பார்த்தார். உள்ளே வரவில்லை. நகைகள் என்றதும் 'இருக்கட்டும்' என்று சைகை காட்டிவிட்டுப்போனார். சந்நியாசி நகைகளைத் தொடக்கூடாது; பார்க்கக்கூடாது என்ற எண்ணமாக இருக்கலாம்" என்று நினைத்தேன்.

"அங்கே கோயிலில் மேலே போர்டிகோவில் - இப்போது புதுக்கோயிலுக்குப் படிகள் அமைக்கப் பட்டிருப்பதோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்த உட்காரும் மண்டபத்தில், இப்போது முகப்பு மண்டபம் கட்ட இடிக்கப்பட்டு விட்டது. நின்றபடி கீழே அடிவாரத்தில் தெரிந்த குளம் பார்த்தார். பிறகு மலை மேலே இருந்து கீழே இறங்கிச்சென்றார்.

"6.45 மணிக்குப் பெரிய பெரியவர் என்னைப் பார்க்கனும்னு சொல்றார்" என்ற தகவல் வந்தது. உடனே நான் சென்றேன். அதற்கு முன்பாக நம் கோயில் பற்றிய சுருக்கமான வரலாற்றை நான் பெரிய சுவாமிகளுக்குப் படித்துக் காட்ட எழுதி வைத்துக்கொண்டேன். போனவுடன் நான் வந்திருப்பதாகச் சொல்லி அறிமுகம் நடந்தது. என்னைப் பார்த்துச் சிரித்தார். நான் எழுதிக்கொண்டுப் போனதைப் படித்தேன். அதில் "கட்டத் துணி இல்லை: கற்பூரம் இல்லை" என்று வந்த வாசகங்களை நான் படிக்கும் போது உற்றுப் பார்த்தார். 'ச்சோ' என்று குரல் கொடுத்தார். அந்தக் குரலில் பரிவு மண்டிக் கிடந்தது. உள்ளத்தில் ஆதங்க உணர்வு. உதவியாளர் தொடர்ந்து படிக்க, ஆழ்ந்து கேட்டார்.

"மலை மீது பழைய கர்ப்பகிரகம் மட்டும்தான் இருந்தது. படிகள் இல்லை. 20.3.1968 வரை நித்திய பூஜை கூட இல்லை. வருட வருமானம் ரூ. 200/- தான். முருகனுக்கும், அம்மனுக்கும் கட்டத் துணி கூட இல்லை. கற்பூரம் ஆராதனையும் இல்லை; துண்டு ஊதுவத்தியும் இல்லை. மண் குடத்தில் ஒரு குடம் தண்ணீர், அபிஷேகம் என்று பெயரளவிற்கு வாரத்தில் ரெண்டு நாள் நடக்கும்.

"இன்று தினமும் இருகால பூஜை; வருட வருமானம் மூன்று லட்சத்திற்கும் மேல். ஆபரணங்கள், வெள்ளி, தங்கக் கவசங்கள் என்று இருபது லட்சம்ரூபாய் மதிப்பிற்கு. நிலங்கள் 22ஏக்கர் வாங்கப்பட்டுள்ளது. இதுவரை நடந்துள்ள திருப்பணிகள் அறுபது லட்சமாகும்.

"கர்ப்பகிருகம் முழுதும் கருங்கல்லில் கட்டுவதற்கு ஏழு லட்சம்; மகா மண்டபம் ஆறு லட்சம் செலவில்; தெப்பக்குளம் பதிமூன்று இலட்சம். குளம் தற்போது பதினோரு அடி ஆழம் தோண்டப் பட்டுள்ளது. கல்தேர் ஒன்று செய்யப்பட்டு வருகிறது. பன்னிரண்டரை அடி உயரத்தில் சண்முகர், குளத்தில் ஸ்தாபனம் செய்யப்பட இருக்கிறது.

"இருபத்தைந்து படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. சித்த மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. கும்பாபிஷேகம் 1985 - ல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

"வளர்ச்சிப் பணிகளைப் பற்றிப் படித்தபோது சுவமிகள் முகம் மலர்ந்தது. அரசு நிர்வாகம் என்று கூறினோம். 'ஏன் அரசு எடுத்தது?' என்று கேட்டார். இதன் மூலம் அவர் குரலைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. "பொது கோயில், அதிகமான வருவாய் வரவே அரசு எடுத்துக் கொண்டது. அரசு திருப்பணிகளுக்கு முழு ஆதரவு கொடுக்கிறது. திருப்பணிகளின் நிர்வாகப் பொறுப்பும் தந்துள்ளது. என்றோம்." சிரித்து மகிழ்ந்தார்.

"பழைய கோயிலைக் கருங்கல்லில் கட்டுவதற்குக் கலசம் ஸ்தாபிதம் செப்புதான்' உசிதம் என மெதுவான குரலில் கூறினார்.

"மூலவரை அப்புறப்படுத்தித் தற்காலிக உற்சவரை ஸ்தாபனம் செய்யலாமா" என்றதற்கு "ஸ்தாபனம் செய்யலாம்" என்றார்.

"கருங்கல்லால் கலசம் அல்லது செப்புக்கலசம் இரண்டில் எது உசிதம்? என்றோம். இரண்டும் உசிதம். செய்யலாம் என்றார். செப்புக் கலசத்தில் வரகு தானியம் போடலாமா என்றதற்குப் போடலாம் என்றார்.

"புதிய கோயிலில் மூலவரை வைப்பதற்குப் பழைய பீடமே வைப்பதா அல்லது புதிய பீடம் வைக்கலாமா? என்று கேட்டேன். "பழைய பீடம் அவ்வளவு நன்றாக இருக்காது; புதிய பீடம் செய்யலாம்" என்றார்.

"பிறகு நான் மூவரையும், வள்ளி, தெய்வயானையையும் ஒரே பத்மகமல பீடத்தில் வைக்கலாமா? அல்லது தனித்தனி பத்ம பீடத்தில் வைக்கலாமா? என்றேன்.

"தனித்தனி" என்று குரலில் கூறினார்.

"ஆறுமுகம் குளம் பற்றிக் கூறினோம். உற்றுக்கேட்டார். அதில் நீராழி மண்டபம் கருங்கல்லில் கட்டலாமா? ஆர்.சி.சி சிமெண்ட் ஜல்லி கலந்து கட்டலாமா? என்றேன். ஆர்.சி.சி சிமெண்ட் காரையில் கட்டலாம்" என்றார்.

"நீராழி மண்டபத்தில் ஆறடி உயரத்தில் ஆறுமுகம் சிலை வைக்கலாம் என ஆசை" என்றேன். "பாதி உருவம், மார்பு வரை, இரண்டு கைகளுடன் மட்டும் பத்மாசனத்தில் வைக்கலாம்" என்றார்.

"தாங்கள் மலைக்கு 148 படிகளையும் ஏறி வந்து வழிபாடு செய்ததில் முழு திருப்தி" என்றேன். வாய்விட்டுச் சிரித்தார்.

கையை அசைத்தார். மேனா எனப்படும் அவர் உட்காரும் பல்லக்சில் உட்கார்ந்து கொண்டிருந்தார். நான் எட்டிப் பார்த்தேன். இரண்டு நாட்கள் இரத்தினகிரியில் தாங்கள் தங்கியதற்கு மகிழ்ச்சி. ஆனந்தவிகடன் பரணீதரன் அடிக்கடி கூறுவார். "பெரியவர் ஒருமுறை இரத்தினகிரிக்கு வந்தால் சிறப்பாக இருக்கும் என்று" என்று கூறினேன். ஒரு சிரிப்பு.

"இங்கு தங்கிய வகையில் தங்களுக்கு ஏதாவது அசௌகரியம் இருந்ததா? என்று கேட்டேன். 'முழு திருப்தி' என்றார்.

"கும்பாபிஷேகம் தாங்கள் வந்து நடத்தி வைக்க வேண்டும் என்றேன். சிரித்து சைகை காட்டினார். "நல்லா நடக்கும். என்னால் இங்கே வந்து கலந்துக்க முடியுமா?" ஆசிர்வாதம் என்பது போல் கையைக் காட்டிச் சிரித்தார். பெரியவர்களிடம் விடைபெற்றுத் திரும்பினேன்.

மூன்று சங்கராச்சாரி சுவாமிகளின் வருகையால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். பெரிய பெரியவருடன் பேசியதும், அவர் அருளாசிகள் தந்ததும் எனக்கு மேலும் மிகுந்த மகிழ்ச்சியையும் தைரியத்தையும் தந்தது.

பழைய பெரியவரின் தவவலிமையும், எளிமையும், தன் கடமைகளைத் தானே செய்து கொள்வதும், பிறர்உதவி இன்றித் தன் தள்ளாத வயதிலும் ஆத்ம பலத்துடனும், திடத்துடனும், ஜபத்துடன், நடக்கும் குழந்தை நடை; மலைப்படிகளைப் 15 நிமிடத்தில் ஏறிவந்த பாங்கு. நடை பயிலும் குழந்தை படியேறும்போது, எப்படி ஒரு காலைத் தூக்கி வைத்து ஏறுமோ அப்படி அவர் படிகள் மீது ஏறி வந்த நடை, என் உள்ளத்தை விட்டு அகலவே இல்லை. என்று சுவாமிகள் எண்ணி, எண்ணி மகிழ்வதாக எழுதிக் காட்டினார். இது பற்றிச் சுவாமிகள் மேலும் எழுதுகிறார்.

"இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் மீது ஆழ்ந்த ஈடுபாடு காஞ்சிப் பெரியவரின் உள்ளத்தில் ஆழ்ந்து இருந்தது. திருக்கோயிலின் கும்பாபிஷேகத்தின் போது அவர் நிலையையடைந்து விட்டாலும், அவருடைய "பரமாத்மா" அன்று இங்கு வந்து கட்டாயம் மகிழ்ந்திருக்கும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்."

இவருக்கு நான் மிக ஆழ்ந்த நன்றி சொல்லவேண்டும்.

அவர் கோயமுத்தூர் பி.கே. துரைசாமி அவர்கள்

இவரை நான் பார்த்தது கூடக் கிடையாது. இவரோடு எனக்கு எந்த விதத் தொடர்பும் கிடையாது.

எல்லோரும் பணம் சம்பாதிக்கிறார்கள். அவர்களில் நல்லவர்கள் எல்லோருமே தருமம் செய்கிறார்கள். அந்த நல்லவர்கள் எல்லோரிலும் இறைவன், ஒரு சிலருக்கு மட்டும் அவர்கள் செய்யும் ஒரு ரூபாய் தருமத்துக்கு ஒரு கோடி ரூபாய் பலனை கொடுக்கும் தருமத்தை ஒதுக்குகிறான். அப்படிப்பட்டவர் ஏ.ஆர்.சி பார்சல் சர்வீஸ் திரு. பி. கே. துரைசாமி அவர்கள்

இரத்தினகிரி கோயில் கட்டுவதற்காக இலட்சங்கள் இலட்சங்களாகக் கொடுக்கிறார்கள்; கொடுத்திருக்கிறார்கள். பாலமுருகன் கல்யாண மண்டபம் கட்டக் கொடுத்திருக்கிறார்கள்; அன்னதானம் செய்ய அள்ளிக் கொடுக்கிறார்கள்; பள்ளிக் கூடம் கட்டக் கொடுக்கிறார்கள்

இவையெல்லாம் கண்களால்

நேராகச் சுவாமிகள் செய்வதைப் பார்த்துப் பார்த்துச் செய்கின்ற தருமங்கள். ஆனால், இவைகளுக்கு எல்லாம் மேலானதும் துணிச்சலானதுமான தருமம் செய்ய திரு. ஏ.ஆர்.சி துரைசாமி அவர்களுக்கு பாலமுருகன் அருள் செய்திருக்கிறான்.

என்னதான் சுவாமிகள் சொன்னாலும் கூட, முன்னாள் தெரியாத ஓர் ஆள்; இந்தக் கோயிலுக்கும் இந்தக் கோயிலைக் கொண்டாட வைக்கும் பாலமுருகன் மற்றும் பாலமுருகனடிமை சுவாமிகளையும் பற்றி ஒரு காரியம் செய்கிறார்; புத்தகம் எழுதுகிறார்; அதற்காக தருமம் வேண்டும்; அதுவும் மிகப்பெரிய தருமம் வேண்டும் என்றால், கொடுக்க மனம் வருவதற்கு இரண்டு வேண்டும். ஒன்று மகாத் துணிச்சல். மற்றொன்று மகாதருமகுணம்

இந்த இரண்டும் நிரம்பியவராக திரு பி.கே. துரைசாமி அவர்கள் இருகிறார்.

சுவாமிகளிடம் கொண்ட ஆழ்ந்த அன்பின் காரணமாக முன்பின் தெரியாத என்னை நம்பி; என் எழுத்தை; என்தமிழ்த்தாயை நம்பி இவ்வளவு தொகையைத் தானும், தன்னைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் செக்காகவோ, டி.டி. யாகவோ, இல்லாமல், ரொக்கத்தாள்களாக ஒரு காகிதப் பையில் போட்டுச் சாமியிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்.

முருகனையும் சுவாமிகளையும், மலையையும் பற்றிச் சுவாமிகளின் கட்டளைப்படி "கற்பனைசிறிதும் கலவாத வாலாற்றை" எழுத முற்பட்டு, எழுதி சுவாமிகளிடம் கொடுத்ததும், சுவாமிகளுக்கு அதைப் பிடித்திருந்தது. வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்.

இன்றைய தமிழில் ஆன்மீகம் பற்றி. ஏட்டுச் சுவடி எழுதியகாலம் முதல் இன்றுவரை உரைநடையில் இப்படிக் "கற்பனைக் கிடமில்லாத கடவுள் நூல்" வந்ததில்லை.

இந்த நூலை ஆன்மீகத் தாகம் கொண்ட முருகபக்தர்களுக்கும் பக்தியுள்ளம் கொண்ட மற்ற மேன்மையான பெருமக்களுக்கும், தங்களிடம் நீண்டகாலம்; குறைந்தபட்சம் ஒரு முந்நூறு ஆண்டுகளாவது ஒவ்வொரு

குடும்பதிலும் ஒரு நான்கு தலைமுறைக்கு இந்தப் புத்தகம் நிலைக்கும் வகையில் தர வேண்டும் என்று நினைந்தேன்.

ஒஷோரஜனீசின் பல புத்தகங்கள், அப்படிப்பட்ட நிலையில்; அதற்கேற்ற, தாளில், அதற்கேற்ற பைண்டிங்கில்; அச்சில்; அவை ஜெர்மனியில் உருவாக்கப் படுவதை; உருவாக்கப்பட்டுள்ளதைப் பூனாவின் அவர் ஆசிரமத்தோடும், மற்ற ஆசிரமங்களோடும் பழக்கமுள்ள நான் அறிவேன்.

விலை அதிகம் என்றாலும், காலத்தால் அவ்வளவு விரைவில் அழிக்க முடியாதவை அவை. அந்த நூல்களில் பலவற்றை நான் வாங்கி ஆயிரக் கணக்கான பக்கங்களைக் கொண்ட அந்த ஆழ்ந்த அறிவு விண் ஞானத்தைப் படித்தேன். அன்றாடமும் படித்துக் கொண்டும் இருக்கிறேன்.

அப்படிப்பட்ட புத்தகம் ஒன்றைச் சுவாமிகளிடம் கொண்டுவந்து கொடுத்து, 'இப்படி, இந்தப் புத்தகத்தை, உருவாக்கி வெளியிட வேண்டும்' என்றேன்.

சுவாமிகள் இதை அச்சிடுபவரைத் தேர்ந்தெடுத்ததும் அந்தப் புத்தகத்தை அவரிடம் கொடுத்து, "இப்படிப்பட்டதாள்; இந்த பைண்டிங், இப்படிப்பட்ட அச்சு; இதைவிடப் பல மடங்கு சிறப்போடு முருகனின் நூல் வரவேண்டும்" என்றேன். சுவாமிகளும் "ஆமாம்" என்று ஆழ்ந்த விருப்பத்தைத் தெரிவித்தார்.

நூலை வாங்கியவுடன் தாள்களைப் பார்த்த அந்த அச்சிடுவோர் "சுவாமி! இருப்பதிலேயே இது பெஸ்ட் பேப்பர். நேச்சுரல் ஷேட் என்று பேர். இது பெஸ்ட குவாலிடி. இந்தப் பேப்பர் இந்தக் குவாலிடியில் இங்கு மார்க்கட்டில் கூடக் கிடைக்காது. பேக்டரியில் ஆர்டர் குடுத்து, அதுவும் ரெண்டு மாசத்துக்கு முன்னால் ஆர்டர் குடுத்தால்தான் நேரத்திற்குத் தருவார்கள். அதுவந்து ஒரு ஒரு மாசம் நிழலில் இருக்க வேண்டும். அது ஆந்திராவில்; ஒரு மில்லின் பெயரைச் சொல்லி; அங்கே உடனடியாக நேராகவோ அல்லது இங்கு உள்ள அந்த் மில்லின் ஏஜென்ட் மூலமாகவோ ஆர்டர் கொடுக்க வேண்டும்" என்றார்.

கணக்கு போட்டதில் இந்தப் பேப்பருக்கு மட்டும் லட்சத்திற்கு மிகவும் மேலாகப் பணம் தேவைப்பட்டது.

சுவாமிகள் யோசித்தார். "யாரிடம் கேட்பது? யாரிடம் கேட்பது? முருகன் யார் மூலம் குடுக்கப் போறான்? என்று சொல்லியபடி ஆழ்ந்து சிறிது நேரம் கண்கள் மூடி யோசித்தபடி இருந்தவர். "ஆ! இந்தப் புண்ணியவான். குடுக்கக் கூடியவர்" என்று இவர் பெயரை எழுதிக் காட்டினார். அந்தப் புண்ணியவனிடம் சொன்னார். எழுதினார் அந்தப் புண்ணியவான் உடனே ஒரு பைமுட்டையில் கொண்டு வந்து கொடுத்தார்.

நான் சுவாமிகளிடம் போனதும் ஒரு பேப்பர் பையை எடுத்து சுவாமி என் முன் வைத்து, "நான் பிரிச்சிக் கூடப்பார்க்கல" என்று பிரித்தார். நோட்டுக்கள்! அந்தப் பேப்பருக்குத் தேவையானபடி. அவருக்கு அந்தத் தொகைக்கு நான் வருமானவரித்துறை, இந்த நூல் வெளியீட்டு அமைப்பிற்கு அளித்துள்ள 80G வருமானவரி விலக்கு சலுகைப் படி ரசிதுகளையும், சுவாமிகள் பார்வையிட்டுக் கையெழுத்திட்ட, நன்றிக் கடிதத்தையும் அனுப்பி வைத்தேன்.

தரும உள்ளம் கொண்ட மேன்மையானவர்களுக்கு இந்த நூல் வெளியீட்டு அமைப்பான பாலமுருகன் பப்ளிகேஷன் பற்றிய தகவலை இங்கே சொல்லி விடுவது மிகவும் தேவையானது என்று நினைக்கிறேன். சுவாமிகளிடம் கேட்டபோது அவர்களும் எழுதச் சொன்னார்கள். எழுதியதுப் பார்த்துச் சரியென்று டிக் மார்க்கும் செய்தார்கள்.

இது யாருக்கும் தனிப்பட்ட சொந்தமான அமைப்பல்ல. சேவை செய்யலாம்; நிர்வாகம் செய்யலாம். வருமானவரி அலுவலகத்தின் கீழ் ஆண்டுதோறும் ஆடிட் செய்து அதற்குமேல், மற்றும் சுவாமிகளின் ஆசிகளோடும் கண்காணிப்பிலும் இயங்கும் அமைப்பு இது.

இதற்குத் தரும் தருமங்களும், வருவாய்களும், இதன் பிரம்மாண்டமான வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் என்றே அமைந்த அமைப்பு விதிகளைக் கொண்டது.

இந்தப் புத்தகத்திற்கு ஆதிமுதல், அந்தம் வரையிலான செலவைக்கேட்டால் நீங்கள் நம்புவது கடினம். பத்து லட்ச ரூபாய் செலவாகிறது.

ஆதிமுதல் என்று சொல்லுகிறேன். இதை எழுதத் துவங்குவதற்குப் பேப்பர் வாங்கிய செலவு முதல். அதுவும் செலவு தானே. அதை மட்டும் சொல்கிறேன். அத்தனை வருடங்கள்! கட்டுகட்டாகப் பேப்பர்கள்! எத்தனை, எத்தனை வகையான பேப்பர்கள்! எல்லாம் ட்ரஸ்ட் கணக்கு என்பதால் எழுதி வைக்கப் பட்டிருக்கிறது.

எல்லாம் கடன்கள்; கை மாற்றுகள்; வட்டிக்குக்கடன்; வட்டியில்லாக்கடன்; சீட்டுகள்; இப்படி வகையறாக்களில்...

இந்த வகையில் ஒரு புத்தகத்தின் விலை ரூபாய் 350 ஆகிறது. திரு. பி.கே. துரைசாமி அவர்கள் கொடுத்த தருமத்தால் ஒரு புத்தகத்தின் விலை 34 ரூபாய் குறைகிறது.

அவருடைய தருமமாக இந்த நூலை வாங்கும் மேன்மையானவர்கள் ஒவ்வொருவருக்கும்; ஏழையர், பணக்காரர், நடுத்தரத்தர், செல்வந்தர், இலட்சர், கோடியர் என்ற வித்தியாசமில்லாமல், உலகம் முழுவதற்கும் செல்கிறது.

இதைவிட மிகுந்த பலன் வேறு எந்த தருமத்தால் ஒருவருக்குக் கிடைக்க முடியும்?

இந்த ஒரு மகாதர்மநூலைக் குறைந்த பட்சம் 10பேர் பார்ப்பார்கள்; படிப்பார்கள். அதன் மூலம் இந்த தருமத்தின் அளவும் பரிமாணமும் கூடுகிறது.

இப்போது புத்தகம் விற்கும் விலையோ 200 ரூபாய். கொஞ்சம் நிறையவே ரூபாய், இந்த முதல் பதிப்பில், 'இழப்பாக' 'நட்டமாக' அமையும். இது பணவகையில் மட்டும். உழைப்பு வகையில்...? 'இழப்பு;' 'நட்டம்' என்ற வார்த்தைகளை நான் பயன்படுத்த விரும்பவில்லை. "இந்த ஆகாத

வார்த்தைகளைப் பயன்படுத்தாதே" என்று பாலமுருகன் என்னைத் தடுத்திருக்கிறான்.

இதைத் தருவதற்கு பாலமுருகன் ஏற்பாடு செய்வான். சுவாமிகள் சொன்னார். "உங்கள் கஷ்டம் வீணாகாது" என்று. வீணாகவில்லை. சுவாமி பேசும் வார்த்தைகள் முருகன் பேசும் வார்த்தைகள். அதற்குத் திரு. பி.கேடி. அவர்களே இப்போது சாட்சி.

அவருக்கு நான் என் ஆழ்ந்த நன்றிகளைச் செலுத்துகிறேன்.

பாலுமுருகன் அவருக்குச் செலுத்தும் அருள் பற்றி பாலமுருகனுக்கும் அவருக்கும் அமைந்த "அப்பன் பிள்ளை விவகாரம்."

4000 புத்தகங்கள். 4000 பேருக்கு ஞானமாக ஒவ்வொரு புத்தகத்தோடு அவருடைய தர்மம்; முருகனின் விண் ஞானம் இரத்தினகிரி சுவாமிகளின் விண் ஞானம், தமிழ்நாடு முழுவதும் போகிறது. தமிழ் பேசும் மக்கள் வாழும் இந்தியா முழுவதும் போகிறது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, பிரான்சு, நெதர்லாந்து, ஆஸ்திரேலியா மற்றும், உலகம் முழுவதும் வாழும் பாலமுருகனின் பக்தர்கள்; தமிழ்மக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் இந்த புண்ணியவானின் புண்ணியம்,

இந்தப் புத்தகத்தோடு போகிறது. இந்த புண்ணியத்தைப் பற்றி பிடித்துக்கொண்ட இவருடைய பூர்வ கால புண்ணியத்தையும் இவருடைய குடும்பத்தாருடைய பூர்வ காலப் புண்ணியப் பலன்களையும் இவரிடமும் இந்த குடும்பத்திடமும் இத்தகைய அருளை தந்திருக்கும் இரத்தினகிரி பாலமுருகனும் - பாலமுருகன் சுவாமிகளின் அருளையும் என்னவென்று சொல்வது! என்னவென்று சொல்வது!

பி.கே. துரைசாமி அவர்களைப் போன்ற புண்ணியவான்கள் இதற்குத் தங்களால் இயன்ற் பணத்தையும் இந்த நூலைகளைப் பரப்பி மார்க்கட்டிங் செய்வதில் ஆழ்ந்த உதவியையும் செய்தால்

இந்த நூலைப் போன்று இன்னும், பாலமுருகன், பாலமுருகன் சுவாமிகள் மற்றும் இரத்தினகிரிபற்றிய "கற்பனையில்லாத கடவுள் விண்ஞான நூல்களைத்" தமிழ் பேசும் உலகம் முழுதும் பரப்பலாம்.

எழுதப்பட்டு அச்சிடப்பட வேண்டியவை, இன்னும் நிறையவே இருக்கின்றன. அப்படிச் செய்யும் பணியில் பங்கு கொள்ள விரும்பும் புண்ணியவான்கள் "பாலமுருகன் ப்பளிகேஷன்ஸ். இரத்தினகிரி" என்ற பெயருக்கு டிடி செக், மற்றும் ரொக்கமான பணத்தை அளிக்கும் படியும், அவைகளைத் தவத்திரு. பாலமுருகனடிமை சுவாமிகள் அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில். வேலூர் மாவட்டம். 632517 என்ற முகவரிக்கு அனுப்பும்படியும் மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கான 80G வருமானவரி விலக்கிட்ட ரசீதுஉடன் அனுப்பப்படும். அவர்களின் பெயர்களும் நூலில் வெளியிடப்படும்.

என்றும் மறவாத, மங்காத, ஒளிவிட்டு எழும் அன்புடனும், நன்றியுணர்வுடனும்

பேராசிரியர். ஏ. சுப்பிரமணியம்.

தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் திரு.பி.கே. துரைசாமி அவர்களைப் பற்றிக் கீழ் வருவனவற்றை எழுதி, இதனோடு சேர்க்கும் படிக்கூறுகிறார்.

"கோவை என்றாலே ஆன்மீக அன்பர்களுக்கு 'ஈச்சனாரி விநாயகர்' கோயில் நினைவுக்கு வரும். இவர் அதன் பரம்பரை அறங்காவலர். எமது உழுவலன்பர். பி.கே. துரைசாமி அவர்கள் சிறந்த ஆன்மீக அருளாளர். திருப்பணியில் நாட்டம் கொண்டவர். நம் இரத்தினகிரித் திருக்கோயில் திருப்பணிகளில் பங்கு கொண்டு உதவி புரிபவர்.

"பழனி போன்ற புண்ணிய திருத்தலங்களில் விழா நாட்களில் "தாகதீர்த்தம்" செய்வதில் ஈடுபாடு கொண்டவர்.

"இந்நூல் வாசகர் கரங்களில் தவழ்கிறது என்றால் பெரும்பொருள் ஈந்த அவரின் கொடைக்கரம் தான் காரணம்.

அவ்வறப் பணியாளருக்கு அகம் நிறைந்த நன்றி."

சுவாமிகள் கையெழுத்து.

10. இவர்கள் சொல்கிறார்கள்

இரத்தினகிரி கோயிலின் ஐயர் திரு. சந்தானம் சொல்கிறார்:

ஒண்ணும் கிடைக்கலே!

"கோயிலிலே பூஜையை முடிச்சிட்டு, மலையிலிருந்து கீழே இறங்கத் தயாராக இருந்தேன். அப்போது இவர் - இப்போது பாலமுருகனடிமை என்று அழைக்கப்படும் திரு சச்சிதானந்தம் வந்தார். வந்ததும் கற்பூரம் கொளுத்திக் காட்டச் சொன்னார். நான் கற்பூரத்தை அங்கும், இங்கும் கோயிலில் தேடினேன். ஒரு துளிக் கற்பூரமும் கிடைக்கலே. பிறகு... ஊதுவத்தி. ஒரு ஊதுவத்தித் துண்டாவது இருக்கிறதா என்று தேடினேன். ஒன்னும் கிடைக்கலே.

"அவருக்கு வெறுப்பும், எரிச்சலும், கோபமும் வந்துவிட்டது. "என்ன முருகன்? தரித்திரம் பிடிச்ச முருகன். ஆறுபடை வீடுகளில் இருப்பவனும் முருகன்தானே? அங்கெல்லாம் என்ன ஒரு அமர்க்களம்? இங்கே ஒரு துண்டு கற்பூரத்துக்குக் கூட கதியில்லாமல் இருக்கிறியே?" என்று சொல்லிக் கொண்டே இறங்கினார்.

"எனக்கு மனசு மிகவும் கஷ்டமாக இருந்தது. கோயிலை விட்டு இறங்கப்போனவரை, "சார்" என்று கூப்பிட்டேன். அவரை 'சார்' என்றுதான் கூப்பிடுவேன். கற்பூரம், தீபம்

இல்லையென்றாலும் பரவாயில்லை. கோயிலை மூன்று சுற்று, சுற்றினால் சுற்பூர தீபம் காட்டிய பலன் கிடைக்கும். கோயிலை மூன்று முறை சுற்றிவிட்டுப் போங்கள்" என்றும் சொன்னேன்.

தடாலென்று விழுந்து விட்டார்.

"அவர் கோயிலைச் சுற்ற ஆரம்பித்தார். கோயில் சுற்றுப்புறம் - பின்புறம் இப்போது இருப்பது போல் சமமானதல்ல. பின்னால் கோயிலை ஒட்டிக் கொஞ்சம் அடுத்துப் பெரிய பள்ளம் இருந்தது.

"முதல் சுற்று சுற்றினார். இரண்டாவது சுற்று சுற்றும்போதே, அவர் பார்வை ஒரு மாதிரியா இருந்தது. நடையும் ஒரு மாதிரியா இருந்தது. மூன்றாவது சுற்று வரும் போது கால்கள் பின்ன - பார்வையெல்லாம் மாறி, ஆளே ஒரு மாதிரி இருந்தார். மூன்றாவது சுற்று முடித்துவிட்டுக் கோயிலுக்குள் போய் முருகன் சிலையையே கொஞ்ச நேரம் பார்த்தார்.

"அவர் வாய் என்னவோ முணுமுணுத்தது. 'நான் இந்தக் கோயிலை ஆறுபடை வீடுகளைப் போல் ஆக்குகிறேன் என்றோ' இதுபோல் என்னவோ சொன்னார். பிறகு தடாலென்று கீழே விழுந்துட்டார். எனக்குக் கை கால் எல்லாம் உதறல் எடுத்திர்ச்சி - மனசு அடிச்சிக்கிட்டது. அவரைத் தனியாக விட்டு வரவும் பயந்தேன். உள்ளேயும் என்னால் இருக்க முடியலே. துணைக்கு யாரையாவது கூப்பிடவேண்டும். பயந்தபடியே கோயிலுக்கு வெளியே ஓடி மலை மேல் நின்றபடி கீழே மாடு மேய்த்துக்கொண்டிருக்கும் பையன்களைக் கூச்சல் போட்டு, "டேய்! மணியக்காரர் பிள்ளை மயக்கம் போட்டு விழுந்துட்டார். ஓடியாங்கடா! ஓடியாங்கடா!" என்று கத்தினேன்.



திரு. சந்தான குருக்கள்

"அந்தப் பசங்களுக்கு நான் சொன்னது சரியா காதுல விழலே. "ஐயரே! பிரசாதம் தானே. கீழே எடுத்துக்கினு வா. சாப்பிடலாம்!" னு சத்தம் போட்டார்கள்.

"அப்புறம், திரும்பவும் நான் சத்தம் போட்டுக் கூப்பிடவும், ரெண்டு பசங்க மேலே கோயிலுக்கு வந்தாங்க. நான் உள்ளே போய் பார்த்தேன். அவரு தன் வேஷ்டி சட்டையை எல்லாம் கழற்றிவிட்டு, முருகன் மேலிருந்த அழுக்குத் துணியை எடுத்துக் கோவணமாகக் கட்டிக்கிட்டு, கோயிலுக்குள்ளே உட்கார்ந்திருந்தார்.

"நான் 'சார்', 'சார்' என்று கூப்பிட்டேன். ஒன்னும் காதுல போட்டுக்கல. ஒரு பதிலும் சொல்லலே! "இன்னா சார், இப்படி சட்டையையும், வேட்டியையும் கழட்டிட்டுக் கோவணம் கட்டிக்கிட்டு. எழுந்து துணியைக் கட்டிக்கிட்டு ஆபீசுக்குப் போங்க சார். நேரமாகுது" என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அங்கிருந்த விபூதி டப்பாவிலிருந்து விபூதி எடுத்து உடம்பெல்லாம் பூசிக்கொண்டார். எனக்கு ரொம்ப பயமாயிடிச்சி!

அதுக்குள்ள மாடு மேய்க்கிற பசங்களும் வந்துட்டானுங்க. அவங்ககிட்டே நிலைமையைச் சொல்லி, அவங்க வீட்லே போய் சொல்லச் சொல்லி அனுப்பினேன்!

சுவாமியின் தந்தை.

அப்புறம் சுவாமியின் தந்தையார் கேள்விப்பட்டுப் பதறிப்போய் கோயிலுக்கு ஓடிவந்தார். மகனின் கோவணாண்டிப் பண்டார நிலையைப் பார்த்ததும், துடிதுடித்து அவரைக் கட்டிக் கொண்டு அழுதார்! "என்னப்பா கோலம் இதெல்லாம்! வேண்டாம்ப்பா! வீட்டிற்குப் போகலாம் வாப்பா" என்று என்னென்னமோ சொல்லிக், கெஞ்சிக் கூத்தாடிக் கூப்பிட்டு இருக்கிறார். ஊஹூம், கோவணாண்டி அசையவில்லை. தரையிலே விபூதிக் கட்டியிலே எழுதிக் காண்பித்தார். "இது முருகனின் லீலை. அவனுடைய வேலை" மணியக்காரர், மகனை முருகராகக் கும்பிட்டபடியே, "முருகா! என் மகன் குடும்பஸ்தன். அவனுக்கு மூன்று

சின்னஞ்சிறு குழந்தைகள்; இளம் மனைவி இருக்கிறாள். என்னை உன் வேலைக்கு எடுத்துக்கொள்! என் மகனை விட்டுவிடு" என்று முருகனிடம் கெஞ்சி இருக்கிறார்.

முருகன், கோவணாண்டி மூலமே, "ஒரு படிக்கட்டு ஏறவே எவ்வளவோ நேரம் ஆவுது உனக்கு உன்னை வைத்துக்கொண்டால் நீ என்ன சேவை செய்வாய்? போ, போ" என்று எழுதிக் காண்பித்து விட்டார்.

பாவம் மணியக்காரர். அதோடு புலம்புவதையும் விட்டு விட்டுப் பேசாமல் இருந்துவிட்டார்.

சுவாமிகளின் அண்ணன்:

"இவரு கோயில்ல போயி உக்காந்த அன்னிக்கு நானு காஞ்சிபுரம் போயிருந்தேன். அங்கே எங்க அத்தை வீடு இருக்கு. அவர் வீடு குமரக் கோட்டம் கோயிலுக்கு எதிரே. அவரிடத்திலே கொஞ்சம் ரூபா வாங்கி வரணும். அதுக்காகப் போயிருந்தேன். எங்க மாமா "எதிர்லேதான் குமரக்கோட்டம் கோயில் இருக்கு. போய் கும்பிட்டுட்டு வாடா"ன்னு சொன்னாரு."நமக்கு இந்தக் கோயில், சாமியெல்லாம் புடிக்கிறதே இல்ல. நான் போகமாட்டேன்னேன். "நீ கோயிலுக்குப் போயிட்டு வந்தாதான் உனக்கு டிபனுன்னு எங்க அத்தை சொன்னாங்க," சரின்னு, கோயிலுக்குப் போயிட்டு, பஸ் ஏறி ஆற்காட்டுக்கு ரெண்டு மணிக்கு வந்தேன். பஸ் டிரைவர் என்னைப் பார்த்து. "உங்க தம்பி சாமியாராகி இரத்தினகிரி மலையிலே, கோயில்லே உக்காந்திட்டிருக்கார். நீ இங்கே இருக்கியேன்னு" சொன்னார்.

"என்னடா இதுன்னு, நான் பஸ் ஏறி, மலையாண்ட எறங்கிக் கோயில் மேல ஏறி ஓடிப் போய் பார்த்தேன். பார்த்தா, இடுப்பிலே லங்கோட்டா மாதிரி துணியை மடிச்சிக் கட்டிக்கிட்டு கோயில்லே இருந்தாரு. என்னாலே பேச முடியலே. அவருக்கும் என்னைப் பார்த்த உடனே கண் கலங்கிடுச்சி. சுத்தி ஜனங்க கூட்டமா இருந்தாங்க.

"நான் அவரிடம் போயி, 'என்னப்பா இதெல்லாம்'னு கேட்டதுக்கு, 'அஞ்சி மாசம் இருக்குது. அஞ்சி மாசத்துக்கு அப்புறம் வந்தடறேன்னு' எழுதிக் காட்டினாரு."

"உங்களைப் பார்த்ததும் அவரிடம் என்ன ரியாக்ஷன் தோணிச்சி? என்ன பண்ணார்? கட்டிட்டு அழுததாச் சொல்றாங்க!"

"அதெல்லாம் இல்ல சார். காலையிலே அவர் இப்படி உக்கார்ந்ததும், எங்க அத்தை அவங்கதான், எங்க அம்மா காலமாயிட்டதுக்கு அப்புறம் அம்மாவா இருந்து எங்கள வளர்த்தவங்க; அவங்க; எங்கப்பா மணியக்காரர், சாமியின் மைத்துனன் கணேசன், மற்ற எல்லா உறவுக்காரங்களும் வந்து பாத்துட்டு போயிட்டு இருந்தாங்க, அப்ப இந்த அழுகை எல்லாம் நடந்து கொஞ்சம் தெளிஞ்சிட்டு இருந்தாரு. என்னைப் பார்த்ததும் கொஞ்சம் கண்கலங்கினார். அப்புறம் சகஜமாயிட்டார்."

"அவரை வண்டியிலே தூக்கிப்போட்டு, வீட்டுக்குப் பலவந்தமா கூட்டிட்டு வந்துடறதா, நீங்க வண்டி கட்டிக்கிட்டுப் போனதாகவும் சொன்னாங்க?"

"அது நான் இல்ல சார். காலையிலேயே எங்க அத்தை, வீட்டிலிருந்து ஆட்களைக் கூட்டிக்கிட்டு வண்டிய கட்டிக்கிட்டுப் போனாங்களாம். ஆனா வழியிலேயே வண்டி கொட சாஞ்சிக் கவிழ்ந்துட்டதாம்."

"அந்த நேரத்திலே, சாமி கோயில்லே மணியக்காரரிடம் " வீட்டிலே இருந்து என்னைக் கட்டிப்போட்டாவது தூக்கிக்கிட்டுப் போயிடணும்னு வண்டி கட்டிக்கிட்டு வராங்க. அவங்களாலே அது முடியாது. வண்டி வழியிலே கொட நாட்டிக்கும். ஆனா யாருக்கும் அடி படாது'ன்னு எழுதிக் காட்டினாராமே".

"ஆமாம். அப்படித்தான் சொன்னாங்க. வண்டி கொட நாட்டிக் கிட்டதாம்!"

"அப்புறம் நீங்க அவரோடு ஒன்னும் பேசலியா!"

"ஏம்பா! இது என்ன கோலம்? வீட்ல கொழந்தைங்க, சம்சாரம் இருக்கு. வாப்பா போகலாம்ன்னு" கூப்பிட்டேன்.

"கோயில் கட்டணும், கட்டிட்டு வரேன்"னு சொன்னாரு. நான் "நம்மாலே இதெல்லாம் ஆகிற கதையாப்பா, பெரிய பெரிய பணக்காரங்க,

மடத்திலே இருக்கிறவங்களாலேதான் கோயில் கட்ட முடியும். அதெல்லாம் வேண்டாம். வாப்பா"! ன்னு வீட்டுக்குக் கூப்பிட்டேன்.

"நானு, அவருக்குக் கடவுள் நிலை ஏற்பட்டிருக்கு. முருகர் அருள் வந்திருச்சின்றதை நம்பவேயில்ல. ரொம்ப நாளா நம்பவே இல்ல. அவரே அடிக்கடி சொல்வார்.

"நீ நம்பனாதானே மத்தவங்க நம்புவாங்கன்னு"!

"இப்ப அவர் கோயில் கட்டியிருக்கிறது. அங்கு நடக்கிற மத்த விஷயங்களையெல்லாம் பார்க்கும்போது, இப்பதான் எனக்கு நம்பிக்கை வருது.

"இத்தனை வருஷமாக.. ஒரு நாற்பது வருஷமா முருகனைக் கும்பிட்டது கூட இல்ல. இப்பதான் என் பொண்ணு கல்யாணத்தப்பத்தான் கும்பிட்டேன்" என்றார்.

எனக்கு அது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இவர் ஒருத்தர்தான் முருகனுக்கு நாற்பது வருஷமா தொந்தரவு கொடுக்காத ஆள்ன்னு. மனத்திற்குள் சிரித்துக் கொண்டேன்.

சுவாமியின் துணைவியார் சொல்கிறார்:

டேப் ரிகார்டர் ஒலித்துக்கொண்டிருக்கிறது. நான்தான் டேப் செய்தேன்.

"அவர் கோயில்லே உக்காந்த ஒன்றரை மணி நேரத்துக்கெல்லாம் வீட்டிற்கு ஆள் வந்திடுச்சி. சந்தான ஐயரு ஆள் அனுப்பிச்சி இருந்தாரு. "கோயில்லே போய் உக்காந்திருக்காரு. ஆபீசுக்கும் போகலே; வீட்டுக்கும் வரமாட்டேங்கறாருன்னு" சொன்னாங்க. "சாமி மேல இருந்த துணிய எடுத்துக் கீழ்பாய்ச்சு மாதிரி மடிச்சிக் கட்டிக்கினு இருக்கிறாருன்னு" சொன்னாங்க.

"வீட்லே யாருமில்லே. எல்லாரும் அவரைப் பார்க்க மலைக்கு ஓடிப்போயிட்டாங்க. என்னை இங்க சாப்ட்டியான்னு கேட்கக்கூட நாதியில்லே. கலங்கிப் போயிட்டேன். என்ன செய்யறது? ஏது

செய்யறதுன்னே தெரியலே. எங்க வீட்டுக்கு. எங்க அப்பாவுக்கு ஆள் அனுப்பிச் சொல்லியனுப்பிச்சேன். அவுங்க வந்தாங்க. நாங்க எல்லாருமா சாயங்காலமா மலைக்குப் போய் பார்த்தோம். அப்ப அபிஷேகம் நடத்துக்கிட்டு இருந்தது. அவருக்குப் பேச முடியாம ஆயிடுச்சி - காலையிலேயே ஆயிடுச்சி.

"எங்க அக்கா, தங்கச்சி, எங்க அம்மா எல்லோரும் - எங்கப்பாவைத் தவிர - அவரைப் பார்த்து அழுதாங்க. நான் மட்டும் அழலே. எல்லோருக்கும் அது ஆச்சரியமா இருந்தது. அப்பவே, 'சரி, இது மாறிவராது'. இது எத்தனையோ தலைமுறைக்கு ஆனது. எத்தனையோ தலைமுறையா வந்தது. எப்ப இருந்தாலும் இது இப்படித்தான் இருக்கும்னு தோணிச்சி."

"இந்தப் பக்குவம் எப்படி வந்தது?"

"என்னவோ தெரியலே! மனசிலே அப்படித் தோணிச்சி.

"ஒரு வருஷம் கஷ்டப்பட்டேன். அதுக்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமா அப்படியே நெலச்சி நின்னுட்டது அந்த நெனப்பு."

11. அன்று திண்ணன் - இன்று சச்சிதானந்தம்

சில நூற்றாண்டுகளுக்கு முன்:

சுவாமிகளின் வீட்டார்களும், மற்றும் அவரது சுற்றத்தார்களும், அவரைக் கோயிலில் இருந்து பலமுறை வீட்டிற்கு அழைத்துச் செல்லப் பல வழிகளில் முயன்றார்கள். ஆனால் ஒன்றும் முடியவில்லை. பிறகு அவர் வழிப்படியே விட்டுவிட்டார்கள்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் இப்படி நடந்தவொரு நிகழ்ச்சி, தெய்வீக உணர்வைப் பெற்ற கடவுள் மனிதர்களின் வரலாற்று நூலான பெரிய புராணத்திலும் உள்ளது.

ஒன்றுமே படிக்காத முரட்டுத் தனமான ஒரு வேடுவ இளைஞன், வேட்டையில் தன் அம்புக்குத் தப்பிய பன்றியைக் கொன்றே ஆகவேண்டும் என்ற வெறியோடு, அதைத் துரத்திக் கொண்டு வருகிறான். அவனைக் காடெல்லாம் அலைக்கழித்த பன்றி, அங்கிருந்த மலை உச்சிக்கு ஓடுகிறது. அங்கும் துரத்திக்கொண்டு சென்றவன், கோயில் இல்லாமல் வெட்டவெளியில் சிவலிங்கம் ஒன்று அங்கு இருப்பதைக் கண்டான்.

கண்ட அந்த விநாடியே என்லைட்டன்மென்ட் (ENLIGHTENMENT) என்று இன்று விவரிக்கப்படும் 'கடவுளின் உணர்வு பொங்குதல் அவனிடம் பொங்கி மேலெழுந்து விடுகிறது.

இலிங்கத்தில் சிவபெருமானைக் காண்கிறான்.

சேக்கிழார் பெருமான் அதுபற்றிக் கூறுகிறார்.

"இலிங்கத்தைக் கண்டதுமே 'உம்மோடு துணையாக இந்த மலைக்காட்டில் ஒருவரும் இல்லையே; இதைக் கண்டு என் உயிரே நடுங்குகிறது. இந்த மலையில் நீர் ஏன் இப்படித்தனியாக இருக்கிறீர்? என்று அழுதான்.

அடிமையாகி விட்டான்:

சிவபெருமானை விட்டு அவனால் பிரிய முடியவில்லை. "இவருக்கு உணவு அளிப்பவரும் இல்லையே" என்று வருந்தினான். அதனால் சிவபெருமானுக்கு உணவளிக்கவும்; சிங்கம், புலிகள் திரியும் காட்டில் சிவபெருமானுக்குக் காவல் தரவும்; அங்கேயே - சிவபெருமானிடமே அவன் தங்கிவிட்டான்.

ஆனால், அவன் உடன் வந்த காடனும், நாணனும் "உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? வா, வீட்டிற்குப் போகலாம்" என்று வருந்தி வருந்தி அழைத்தார்கள்.

நாணன் காடனிடம், "திண்ணன் - அதுதான் அந்த வேடுவ இளைஞனின் பெயர். அவனுடைய நிலையை,

"அங்கு இவன் தேவர் - சிவலிங்கம் தம்மைக் கண்டு அணைத்துக்கொண்டு, நம் குலத்தின் தலைமையை விட்டுவிட்டான். சிவபெருமானுக்கு அடிமையாகிவிட்டான்" என்றான்.

இருவரும் அங்கிருந்து திண்ணனின் பெற்றோரிடம் சென்று திண்ணனின் நிலையைக் கூறி, "இலிங்கத்திடமே அவன் உட்கார்ந்து கொண்டான். நாங்கள் எவ்வளவு அழைத்தும் எங்களோடு வரமறுத்து விட்டான்" என்று கூறினார்கள்.

வேடுவர் தலைவனாகிய திண்ணனின் பெற்றோர்களும் சுற்றமும், அலறி அடித்துக் கொண்டு பெருங் கூட்டமாகத் திண்ணனை வந்து கண்டனர். தங்களோடு வீட்டுக்குத் திரும்பும்படி எவ்வளவோ வேண்டினார்கள்.

திண்ணன் மறுத்துவிட்டான். மிகுந்த வேதனையோடு அவர்கள் ஊர் திரும்பினார்கள்.

பிறகு, திண்ணன் சிவபெருமானுக்குத் திருச்சேவைகள் செய்ய ஆரம்பித்தான். சிவபெருமான், தன்னிடம் அவனுக்கு ஏற்பட்ட பக்தி நிலையைக் கோயில் பூஜை செய்யும் சிவகோசரியாருக்குக் கூறியதாகச் சேக்கிழார் பெருமான் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

"அவனுடைய வடிவமே நம்மிடம் கொண்டுள்ள அன்பு."

"அவனுடைய அறிவெல்லாம் நம்மை அறியும் அறிவு".

"அவனுடைய செயல்கள் எல்லாம் நமக்கு இனியன".

"அவனுடைய நிலை இவ்வாறு. அறி நீ"



இங்கு சச்சிதானந்தம் என்னும் இளைஞரின் நிலையும் அப்படித்தான் ஆகிவிட்டது.

அன்று ஒரு திண்ணன் என்னும் கண்ணப்பன்.

இன்று சச்சிதானந்தம் என்னும் பாலமுருகனடிமை.

கல்லூரியில் பி.ஏ;பி.எஸ்சி பட்ட வகுப்பிற்குப் பல ஆண்டுகள் 'கண்ணப்ப நாயனார் புராணம், செய்யுள் பகுதியில் பாடமாக இருந்தது. அவ்வளவு மனம் ஒன்றிப் பாடம் நடத்துவேன். மாணவர்கள் தங்களை மறந்து கேட்பார்கள்.

காளத்தி மலைக்குப் பலமுறை சென்று மலையின் உச்சியில் இருக்கும் கண்ணப்பர் கண் அப்பியலிங்கத்திற்கு எதிரில் மணிக்கணக்கில் உட்கார்ந்து தியானம் செய்திருக்கிறேன்.

அங்கு பெரிய புராணப் பாடல்களிலும் காளத்திமலையின் சிவலிங்கத்திலும் நான் கண்டதை இங்கே பாலமுருகனடிமை சுவாமிகளின் வாழ்வில் நேருக்கு நேர் கண்டுவிட்டேன். கண்டு கொண்டிருக்கிறேன்.

12. ஆறு நாள் முதல், ஆறு மாதங்கள் வரை.

இரவு நேரம். அன்னை சாரதா மேல் நிலைப்பள்ளி அலுவலகம். மிகமிக ஆழ்ந்த வேலையில் இருக்கிறேன், உதவியாளர்களோடு.

திரு. கலைமணி அவர் சொன்னது போல் திரு. கங்காதரனை அழைத்து வருகிறார். செய்து கொண்டிருந்த முக்கியமான வேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு உட்கார்ந்தேன். உடன் பணி செய்து கொண்டிருந்தவர்களை உடனே அனுப்பிவிட்டேன். திரு. கங்காதரனோடு பேச ஆரம்பித்தேன்.

நான்: கங்காதரன்! என்ன இப்போ கஷ்டம்னா. சுவாமி கோயில்லே உக்காந்த நாள் முதற்கொண்டு, ஒரு நாளையடுத்து மறுநாள்; அதற்கு மறுநாள், அது முடிந்தபிறகு அடுத்த நாள்; அதற்கு அடுத்த நாள் என்று, நடந்த நிகழ்ச்சிகளைக் கோர்வையாய் எழுதிக்கொண்டே போகிறேன். அப்போதுதான் படிப்பவர்களுக்கு ஒரு தெளிவு இருக்கும்.

"முதல்நாள் கோயிலில் சுவாமிகள் உட்கார்ந்த அன்று இரவு எப்படித் தூங்கினார்? என்ன பேசினார்? எப்படி இருந்தார்னு தெரியணும்? நான் ஒரு கற்பனையா "இப்படி அப்படி"ன்னு எழுதிவச்சிருந்தேன். ஏன்னா, நேத்து ராத்திரி தன் விட்டிலே இருந்தார். வீடு, நல்ல அறை,

குழந்தைகள், மனைவி, அண்ணன், அப்பா - மறுநாள் விடிஞ்சா வேலைக்குப் போற நினைப்பு இப்படி இருந்தார்.

"ஆனா இன்னைக்கி எல்லாம் மாறிப்போச்சி. காட்டு மலை, மேல ஆகாயம், நல்ல விளக்கு வெளிச்சம் கூட இல்லே. உடம்பிலேயும் கோவணம் தவிர வேற துணி இல்லே. இந்தச் சூழ்நிலையில் இரவு எப்படிக் கழிஞ்சிருக்கும்? எப்படி இந்தப் பெரிய மாற்றம் இருந்திருக்கும்.

"இத நெனச்சிப் பாத்தா என்னென்னவோ மனசில கவலை! வேதனை நமக்கு. நம்மை மாதிரிதான் அவருக்கும் மனம் இருந்திருக்குமோ? அப்படீன்னு நெனப்பு. நம்ம புத்தி நமக்கு! என்னமோ எழுதினேன். ஒண்ணும் சரிப்பட்ட மாதிரி இல்ல. அப்புறம் சாமிக்கே போன் பண்ணிக் கேட்டேன். சாமி சொன்னத அப்படியே எழுதி இருக்கிறேன். சாமி கடைசியா சொன்ன வார்த்தை எனக்கு ரொம்ப மனக்கஷ்டத்தைக் குடுத்திட்டது. அவரு என்னவோ எப்பவும் கூறுகிற மாதிரி குழந்தையாச் சிரிச்சிட்டேதான் சொன்னார். நான் சுவாமிகளைக் கேட்டேன்:

"சாமி! கோயிலுக்கு வந்தீங்க. கோயிலில் அந்த முதல் நாள் ராத்திரி படுக்கறப்போ சுவாமிக்கு என்ன மாதிரி உணர்வு இருந்தது? ஏன்னா, அதுக்கு முன் நாள் ராத்திரி வீடு, குழந்தைங்க, நல்ல படுக்கை இப்படி அனுபவம்.

இன்னக்கு ராத்திரி எதுவுமே இல்லாத மலைமேலே ஒரு வெட்ட வெளி... சின்ன கோயில்.

சுவாமி சட்டென்று கொஞ்சம் உரத்தகுரலில். பிறகு வழக்கம்போல் சிரித்துக்கொண்டே.... "என்ன நீ இதெல்லாம் கேக்கறே?"

"இல்லீங்க சாமி. நிகழ்ச்சிகளைக் கோர்வையா எழுதிட்டு வர்றேன். இது இப்ப தட்டுப்படுது.

சுவாமியின் குரல் சிரித்தபடி, இப்போது சீரியஸாகவும், வேகமாகவும் மாறுகிறது. அவர் ஒரு விநாடி நேரத்தில் மடமடவென்று பல கருத்துக் களை - பல காலக் கட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கொட்டி விடுகிறார். அதை வாரி மனத்திற்குள் வைத்துக்கொள்ள நான் போராடவேண்டும்.

"நான் கோயிலுக்குள்ளே நுழைஞ்சி, முருகர் முன்னே கீழே விழுந்தேன் இல்லையா? அப்ப ஒரு கல்லு மேல விழுந்துட்டேன். அந்தக் கல்லையே தலைக்கு வச்சிக்கிட்டுப் படுத்துட்டேன்".

அவ்வளவுதான். "அது முடிஞ்சி போச்சு".

அவ்வளவுதான். "எல்லாமற என்னை இழந்த நலம்." முன் வாழ்க்கை அனைத்தும் துடைத்துப் போட்டாய் விட்டது. நிம்மதி. மிக நிம்மதி. புத்தம் புது மனிதன் - மனிதத்தைத் தாண்டிய நிலை."

பிறகு அவர் கல்லைப் பற்றிக் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்டதும், என்னென்னவோ என் மனக் கற்பனையில், அந்த இரவு குறித்து எழுந்ததெல்லாம் தூள் தூளாகி விட்டது.

பெரிய ஞானம் - புரிந்து கொள்ளல் - ஏற்பட்டது. இந்தப் புரிந்து கொள்வதுதானே ஞானம்.

சுவாமி தொடர்ந்து சொன்னார்:-

"நான் ஒரு கல் மேல விழுந்தேனே! அந்தக் கல்லைப் பழைய கோயில் இடிச்சி, அதே இடத்திலேயே புது கோயிலுக்கு இப்பக் கட்டியிருக்கிற கோயிலக்குக் கடைக்கால் போட்டேன் இல்ல, அப்ப அதுல போட்டுடலாம்னு பார்த்தேன். வேண்டாம்னு நிறுத்திட்டேன். அந்தக் கல்லை என் சமாதியிலே வச்சிக் கட்டிடலாம்ன்னு நிறுத்திட்டேன்." கலகலவென்று சிரிப்புக் குரல்.

என் இதயத்தில் ஓங்கிப் பட்டென்று அடித்ததுபோல் வேதனை. கப்சிப். அப்படியே மனம், அறிவெல்லாம் ஆடிப்போய்விட்டது.

"ஏன் சாமி இப்படியெல்லாம் பேசறீங்க. வணக்கம் சாமி" என்று போனை வைத்து விட்டேன்.

"ஏறக்குறைய ஒரு மணி நேரம் ஆயிற்று. என் இயல்பான நிலை என்னிடம் வருவதற்கு.

"இதோடு அவருகிட்டே போய் அடுத்தநாள், அப்புறம் என்னாச்சி, என்னாச்சின்னு நச்சரிக்கறது ஒரு கொடூரமா தெரியுது. அவருக்கு இருக்கிற

பெரிய வேலையில, நாம் வேற பெரிய கஷ்டத்தைக் குடுக்கற மாதிரி தோணிச்சி. ஆனா அப்படி எழுதினாதான் ஒரு சரியான வரலாறா இருக்கும்னும் தோணிச்சி. உங்ககிட்ட முன்ன பண்ண டேப் பொதுவான விஷயங்களா இருக்கு. அது இப்போ, புத்தகம் எழுத ஆரம்பிக்கறதுக்கு முன்னாலே பண்ணது. இல்ல!?

"இப்போ பாயிண்ட்டுக்கு அப்புறம் பாயிண்டா கோர்வையா எழுதணும். அதுக்குத்தான் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டியிருக்கு.

கங்காதரன்: "எனக்கு ரொம்ப வேலைதான். இப்ப தீபாவளி சீசன். ஊர் ஊராப்போய் புடவைங்கள வித்தாகணும். இருந்தாலும் நீங்க; அவ்வளவு கஷ்டப்பட்டு, உங்க வேலைகளையெல்லாம் விட்டுட்டு, நாள்கணக்கா மாசம், வருஷக் கணக்கா செய்யறீங்க. சாமிக்காக. நம்ம சாமிக்காகக் கொஞ்ச நேரம், நான் செய்யக் கூடாதா?

"ரொம்ப நல்லது. நான் கேள்வி கேக்கறேன். நீங்க அழகாத்தான் பதில் சொல்றீங்க. ஆரம்பிக்கலாமா?"

"ஓ. ஆரம்பிக்கலாம்."

"நீங்க என்னைக்கு, எப்போ, எதுக்காகச் சாமிகிட்ட வந்தீங்க?

"நாங்க விருதம்பட்டு மோட்டூர்ல குடியிருந்தோம். வேலூரிலிருந்து ஒரு அஞ்சி, ஆறு கிலோமீட்டர் தூரம். நாங்க போனது சுவாமிகள் மலையில் உட்காந்து ஆறாவது நாள். நான் அன்றுதான் இரத்தினகிரி மலைக்கு வந்தேன். என் அப்பாவும், அம்மாவும் என்னைக் கட்டிட்டு வந்தாங்க. அப்போது எனக்கு பதினாறு வயசு இருக்கும். அந்த வயதில் எனக்கு அடிக்கடி மயக்கம் வரும். அப்படியே கீழே விழுந்துடுவேன்.

"அப்போ எங்க ஊர்லே, யாரோ சிலர் 'ஆற்காட்டுக்கும், வேலூருக்கும் நடுவுல இருக்கற ஒரு மலையில, புதுசா ஒரு சாமியார் வந்திருக்கிறார். அவர் எல்லா நோய்களையும் குணமாக்கறார்'ன்னு சொன்னாங்க. அதனால என் அப்பா, அம்மா என்னை அவரிடம் அழைச்சிகிட்டு வந்தாங்க.

"அப்போ இந்த மலையை இரத்தினகிரி மலைன்னு சொன்னா யாருக்கும் தெரியாது. அந்தப் பேர்ல யார்கிட்ட கேட்டாலும் தெரியாதுன்னு சொன்னாங்க. ஆனா பஸ் டிரைவரிடத்தில் புதுசா சாமியார் வந்திருக்கிறாரே, அங்க எறங்கணும்ன்னு சொன்னா, மலைக்குப் பக்கத்துல ரோட்டுலயே பஸ்ஸ நிறுத்துவாங்க. அந்த மாதிரி நாங்களும் எறங்கனோம். அப்போ மணி பன்னிரண்டரை - ஒன்னு இருக்கும். கோயில் சாத்துற நேரம்.

"நாங்க ரோட்ல எறங்கி, உள்பக்கமா வடக்கு நோக்கி நடந்து மலைகிட்ட வந்தோம். உள்ளே புல், செடி கொடி, முள்ளு மரமெல்லாம் பொதரா மொளச்சிக்கிடந்தது.



"மலைக்கு மேல ஏறும் படிக்கட்டு கிட்ட, பாதி வழியில நீளமா ஒரு பந்தல் போட்டு இருந்தது. அதுல ஜனங்க இருந்தாங்க. அவங்களை விசாரிச்சோம். அவங்க கோயில்ல சாமிகிட்ட நோய்களைத் தீத்துக்கிறதுக்கும், பேய் பிசாசுங்கள ஒட்டிக்கிறதுக்கும் வந்து தங்கியிருக்கறதாச் சொன்னாங்க. நாங்க மேல படியேறிக் கோயிலுக்குப் போனோம்.

"அப்போ கோயிலு இப்ப பாக்கற மாதிரி இல்ல. இதோ இந்தப் போட்டோவுல இருக்கற மாதிரி இருந்தது. சுத்தி ஒரே மேடு பள்ளமா;

குண்டும் குழியுமா இருந்துது. இப்பப் படி ஏறி நேராக் கோயிலுக்குப் போறமே, அப்ப அது மாதிரியும் இல்ல, போக வழியும் கெடயாது. தெற்கு பக்கமா திரும்பி, பாறைங்க மேல ஏறி, மறுபடியும் வடக்காத் திரும்பிக் கோயில்ல பலிபீடத்துக்குக்கிட்ட போகணும். நாங்களும் அப்படிக் கோயில்கிட்ட போனோம்.

"அங்க கோயில் எதிர்ல சாமியார் உட்கார்ந்திருந்தார். எங்க அப்பா அவரிடம் என்னைக் காட்டி எனக்கு அடிக்கடி மயக்கம் வருதுன்னு சொன்னார்."

"போன உடனே என்ன செஞ்சீங்க."

"மூணு பேரும் தரையில விழுந்து அவரைக் கும்பிட்டோம்."

"அப்புறம்?"

"சாமி ஜாடையிலேயே என்னவோ கேட்டார். என்னைக்கிட்ட வரச்சொல்லி என் நெத்தியில விபூதி இட்டார். விபூதி இட்டுட்டுச் சரியாயிடும்னு சொன்னார். கொஞ்ச நாள் இவன் இங்கியே இருக்கட்டும்னு சொன்னார்."

"சொன்னார்னா. சாமியார் வாயில வார்த்தைல பேசிச் சொன்னாரா?"

"இல்ல. அவரால பேச முடியல. பலகையில எழுதிக் காட்னாரு. அத அவர் கூட இருந்த ஐயருதான் படிச்சிக் காட்னாரு.

"அதக் கேட்டதும் எங்கப்பா, சரி தங்கறோம். ஆனா, சாப்பாட்டுக்கு இன்னாபண்றது? ன்னு தெரியலைன்னு சொன்னாரு.

"இதுக்கு சாமி 'அத நான் பாத்துக்கறேன்னு' சொன்னதால நாங்களும் அங்கத் தங்கினோம். அதுக்கப்புறம் ஏறக்குறைய பத்து வருடங்கள் சாமியோடதான் இருந்தேன்."

"சரி. அப்புறம் என்னாச்சி?"

"நாங்க அன்னிக்கி மலைக்கு வரும்போதே சாப்பாடு கட்டிக்கிட்டு வந்தோம். அதை நாங்க மூணு பேரும் சாப்பிட்டோம். ஐயரும் கோயில

மூடிட்டுச் சாப்பிடப் போயிட்டார். அங்க கோயிலுக்கு எதிர்ல கொட்டாப் போட்டு இருந்தது. சாமி அங்க தரைல உக்காந்திருந்தார். அப்போ கோயிலுக்குக் கரண்ட் லைட் போடற வேலை நடந்துக்கினு இருந்தது. அங்க இருந்த ஜனங்களும் சாப்பிடக் கிழே போயிட்டாங்க. நாங்க அங்கேயே இருந்தோம்."

"அப்புறம் சாமி சாப்பிட்டாரா? அவருக்குச் சாப்பாடு எங்கிருந்து வந்தது?"

"அவர் வீட்லயிருந்து ஒரு வயசானவர் சாமிக்குச் சாப்பாடு எடுத்து வந்தார்.

"சிலசமயம் மழைக்காலத்துல கழனியில, சேத்துல வருவாரு. இப்ப சாமி வந்தபிறகுதான் அந்த ஊருக்குத் தார் ரோடு போட்டாரு. அதுக்கு முன்னல்லாம் ஒரே கழனி, பயிரு, சேறுதான். அந்தச் சேத்துல மழை பெய்ஞ்சா அந்தப் பெரியவரால வரமுடியாது. அதனால நான் இங்க கோயிலுக்கு வந்தப்புறம், நான்தான் போய் வாங்கிவருவேன்.



"முருகர் கோயிலுக்குக் கொஞ்சம் கிழ, ஒரு சின்ன விநாயகர் கோயில் இருந்தது. அத இடிச்சிட்டாங்க. அங்க சாமி சாப்பாட்ட எடுத்துக்குனு போய் சாப்பிட்டார். அந்த விநாயகர் கோயிலுக்குள் ஒருத்தர்தான் போகமுடியும். ரொம்ப நெருக்கடியான எடம். அங்க போயி ஒரு பிடி சாப்பாடுதான் சாப்பிட்டார். அவ்ளோதான். ஒரு வேளை சாப்பாடு, அதுவும் ஒரு பிடி சாதம்தான். அப்புறம் சாயங்காலம் ஆனதும் ஜனங்க எல்லாம் வந்தாங்க. பேய் பிடிச்சவங்க எல்லாம் வரிசையா

நின்னாங்க. அவங்கள எல்லாம் கோயிலைச் சுத்திவரச் சொன்னார். ரொம்பப் பேர் அவரிடம் அவங்கவங்க கஷ்டத்த சொல்லிச் சீட்டு எழுதிக் கொடுத்தாங்க. அவரும் அத எல்லாம் படிச்சி, பலகையில அததுக்குப் பதிலை எழுதிக் காட்னாரு. கோயிலு ஐயருதான் அதப் படிச்சிச் சொன்னாரு.

அப்ப நானும் கூட உதவி இருக்கேன்."

"என்ன உதவி இருந்திங்க?"

"சாமிகிட்டே விபூதி தட்டு வச்சிக்கினு நின்னுக்கிட்டிருப்பேன். அப்போ சாமிகிட்ட விபூதி வாங்க நிறைய பேர் வருவாங்க. அப்புறம் மத்த வேலைங்க, இத, அத எடுக்கறதுன்னு செய்துட்டிருப்பேன். சாயங்காலம் ஆனதும் என்னை மட்டும் இங்கே விட்டுட்டு எங்க அப்பா, அம்மா ஊருக்குப் போயிட்டாங்க.

"இருட்ட ஆரம்பிச்சதும், மலை மேல யாரும் இருக்கக் கூடாதுன்னு எல்லாரையும் கீழே அனுப்பிட்டாங்க. பலபேர் வீட்டுக்கும் போயிட்டாங்க."

"அப்போ மலையில யார் சாமிகூட படுத்துக்கறது?"

"நான்தான் சாமிகூடப் படுத்துக்கிட்டேன். சாமி எனக்கு ஒரு கோணிப்பை கொடுத்தார். அப்போ சிமெண்ட் தரையெல்லாம் போடல. வெறும் மண்தரைதான். சாமி அந்த வெறும் தரையிலேயே படுத்துக்கினார். எப்பவும் அவர் அப்படித்தான் படுப்பார். நான்தான் அதுக்கப்புறம் அவரிடம் கெஞ்சி சொல்லி ஒரு மாசத்துக்கப்புறம் கோணிபோட்டுப் படுக்க ஆரம்பிச்சார்.

"சாமி கூட அவர் அப்பா மணியக்காரர் படுத்துக்குவார். அவர் கூடத் தோட்டி, சிப்பந்திகள் ரெண்டு பேர் வந்து படுத்துக்குவாங்க. மணியக்காரர் ஆறுமாசம்வரை சாமிகூடப் படுத்திருந்தார். சாமி சும்மா பேருக்குத்தான் படுத்துக்குவார். ஆனா தூங்கமாட்டார். நான் பத்து, பதினோரு மணிக்காத் தூங்கிடுவேன். காலைல நாலரை மணி ஆனதும் சாமி கையில் வைத்திருக்கும் பிரம்பால் தரையில தட்டி, "ஹேய்... ஹேய்ன்னு" எழுப்பிவிட்டு, அவர் மலை பக்கமாகப் போய் காலைக்கடன்

எல்லாத்தையும் முடிச்சிட்டு, வருவார். பிறகு முகம் கழுவிப் பல் வெளக்க மாட்டார் - சும்மா பற்களைக் கையிலே தேச்சிக் கொப்பளிச்சிடுவார்."

"எவ்வளவு நாள் இப்படி இருந்தார்?"

"ஏறக்குறைய ஒரு வருஷம் இருந்தார். முகம் கழுவினதும் அப்புறம் கோயிலுக்குள் போய் பூஜைக்கு உட்காருவார். விபூதிய எடுத்து நெத்தியிலும், உடம்பிலும் பூசிக்குவார். கையில எப்பவும் எலுமிச்சம்பழம் வச்சிருப்பார். அதுதான் அவருக்குப் பெரிய சக்தி. பூஜை முடித்து வெளியே வந்ததும், எலுமிச்சம்பழத்தைக் கோயில சுத்தி நசுக்கிப் போடுவார். அதே மாதிரி, ராத்திரி பொழுது போனதும் செய்வார்."

"சரி! மறுநாள் காலைல என்ன நடந்தது?"

"சாமிகோயில் முன்னால உக்காந்திருந்தார். கொஞ்சநேரம் ஆனதும் ஆறு மணிக்கு பூஜை செய்யற குருக்கள் வந்து, முருகருக்கு அபிஷேகம் செய்து பூப்போட்டுப் பிரசாதம் படைச்சார்."

"ஆமா, ராத்திரி என்ன சாப்பிட்டீங்க?"

சிரித்துக்கொண்டே "ஆறு வாழைப்பழம் சாப்பிட்டேன்."

"அது என்ன கணக்கு? ஆறு வாழைப்பழம்."

"ஆமா. கோயில்ல நிவேத்தியம் பண்ண ஆறு பழம். அன்னையிலிருந்து ஒரு வருஷம் வரைக்கும் மூணு வேளைக்கும் இந்தப் பழம்தான். வேளைக்கு ஆறு பழம்.

"பூஜை ஆரம்பிச்சதும் ஜனங்க ஒவ்வொருத்தரா வர ஆரம்பிச்சாங்க. அதுல பேய் பிடிச்சவங்க, அஞ்சி, ஆறு பேர் பெண்கள்; ஒண்ணு அமைதியா இருக்கும்; ஒண்ணு அப்படியே மொறச்சிப் பாக்கும்.

'சாமி அவங்கள எல்லாம் வரிசையா நிக்கவச்சி, கையில விபூதிய வச்சிக்கிட்டு, அவங்க முகத்துல படும்படி வேகமா ஊதுவார்."

"விபூதி பட்டதும், பேய் பிடிச்சவங்க முகத்துல பட்டதும், பயங்கரமா கத்துவாங்களா?"

"ஆமா. இவ்வளவு நேரம் அமைதியா இருந்த பேய்ங்க கூட' இப்பக் கூச்சல் போடும். நான் 'போமாட்டேன், போமாட்டேன்னு" கத்தும். தலையைச் சுத்தி ஆடும்' அதப் பார்க்க பயங்கரமா இருக்கும். அப்பா!"

"சாமி திருநீறை எப்படி ஊதுவார்?"



"வலது உள்ளங்கையில திருநீற வச்சிக்கிட்டு, அவங்க மூஞ்சியில படறமாதிரி வாயாலே ஊதுவார். விபூதி அவங்க முகத்துல அப்பிக்கும். அப்போ சாமி முகத்தப் பார்க்க பயங்கரமா இருக்கும். ஆவேசமா இருப்பாரு. கண்ணுல நெருப்பு பறக்கும். அப்போ அவர் ஒடம்பே 'ஓம்' மாதிரி வளஞ்சிடும். அப்பா! அத நெனச்சாலே இப்பவும் பயமா இருக்கு!

"சாமி ஊதின விபூதியால பேய்ங்க ஆடும். அப்போ அந்தக் கோயிலுக்குள் ஒரு சூலம் இருந்தது. அது சக்தி வாய்ந்தது. அதக் கையில வச்சிக்கிட்டு ஆட்டம் போடற பேய்பிடிச்சவங்களைப் பாத்து ஆவேசத்தோட சாமியும் அந்த சூலத்த ஓங்கி ஓங்கி அங்கே கட்டியிருந்த மூங்கில் மேல, தட்டி, 'போறேன்னியே என்னாச்சி?' ன்னு என்னைக் கேட்கச் சொல்வார் ஜாடையிலே.

"சாமி நல்லா நெனவு வச்சிப்பார். எந்தெந்தப் பேய் என்னென்னைக்குப் போறேன்னு சொன்னத நினைவு வச்சிக்கினு ஏன் இன்னும் போகலைன்னு சூலத்தைக் காட்டி மிரட்டுவார்.

"அப்புறம் விபூதி, வேப்பிலை, எலுமிச்சம்பழம் நசுக்கி அப்படியே அதுங்க வாயில திணிப்பார்."

"திணிச்சா சாப்டுங்களா?"

"ஊம். சாப்டும். பூராத்தையும் அப்படியே சாப்டுடும். இப்படியே ஒவ்வொருத்தரையாப் பேசி பயமுறுத்தி, வேப்பிலை, விபூதி, எலுமிச்சம்பழம் குடுத்திட்டு வருவார். நான் சாமி பக்கத்துலயே விபூதி தட்ட வச்சிக்கிட்டு நின்னுட்டிருப்பேன்.

"முதல்நாள் எனக்குப் பயமா இருந்துது. புதுசா பேய் பிடிச்சி வந்திருப்பவர்களும், ஏற்கனவே இங்க தங்கி இருக்கறவங்களையும், பேய் ஓட்டி முடிஞ்சதும் எல்லாரையும் கோயில சுத்தி வரச் சொல்வார். அப்போ கோயிலுக்குப் பின்னால பெரிய பள்ளம். அதனால அந்தப் பள்ளத்துல யாராவது விழுந்துடப்போறாங்கன்னு, யாரையாவது அங்க நிக்க வச்சிருப்போம். ஒரு தட்டியும் கட்டியிருக்கும். எல்லாரும் கோயில சுத்தி வந்தபிறகு எலுமிச்சம்பழம் சுத்திப் போடுவார்.

"சாமி பேய் ஓட்னதுல, நல்லாயிட்டவங்க, சாதாரணமா சத்தம் எதுவும் போடாம கோயிலச் சுத்துவாங்க. மத்ததுங்க கத்திக்கினு, ஆடிக்கினு வரும்.

"நல்லா ஆயிட்டவங்கள சாமி விபூதி, எலுமிச்சம்பழம், வேப்பில குடுத்து "உங்களுக்கு நல்லா ஆயிடிச்சி. நீங்க வீட்டுக்குப் போங்கன்னு" சொல்வார். அவர்கள் மனம் தெளிவுற்று முடிஞ்ச காணிக்கை செலுத்திட்டுப் போவாங்க. மத்தவங்க எல்லாரையும் அவங்க இருந்த கொட்டாயிலேயே இருக்கச்சொல்வார்.

"அதுக்குள்ள சீட்டு எழுதிக் கேக்கறவங்க வந்துடுவாங்க. ஒரு சீட்டுக்கு ஒரு ரூபாய். அந்தப் பணம் வாங்கறதக்கூட சாமி வேணாம், வேணாம்ன்னு சொல்வார். நாங்கதான் சாமிகிட்ட சொல்லி அதுக்குச் சம்மதிக்க வச்சோம். இங்கே செலவுக்குக் கொஞ்சமாவது பணம் வேணுமே.

"பக்தர்கள் எழுதிக்கொடுத்த சீட்டுகளுக்கு பதில பலகையில மடமடன்னு எழுதிக்காட்டுவார். அத உடனே, அவர் எழுதற வேகத்திலேயே படிச்சிக் காட்டணும். அவர் எழுதனத அழிக்கறதுக்குள் நாம வேகமா சொல்லிடனும். சொல்லலைன்னாலோ, தப்பா படிச்சிட்டாலோ, அப்படிப் படிச்சவரை சாமி விளாசித் தள்ளிடுவார். அதனால சாமி எழுதறதப் படிச்சிக் காட்றவங்க நடுங்கிக்கிட்டுதான் சாமிக்குப் பக்கத்துல நிப்போம். அந்த ஐயருதான் படிச்சிச் சொல்வார். அவருக்குத்தான் அடி விழும். சாமியோட அப்பா மணியக்காரரும் படிச்சிச் சொல்வார். அவருக்கும் அடிவிழும்.

"ஒருமுறை அப்படித்தான் சாமி எழுதிக்கினே வந்தத, ஐயரு சரியா படிச்சிச் சொல்லிக்கினே வந்தாரு. திடீர்னு ஐயரு கவனம் எங்கியோ

போயிடுச்சி. தப்பாப் படிக்க ஆரம்பிச்சார். சாமியும் இதக் கவனிச்சிட்டு. "ஹை... ஹைம் னு" சொல்லிக்கினே வந்தாரு. மறுபடியும் ஐயரு கவனம் தவறி தப்பாப் படிச்சதால, பக்கத்துல நான் விபூதித் தட்ட வச்சிட்டு நின்னுட்டிருந்தேன். என் கையிலிருந்த விபூதி தட்ட, "ஹைம்"ன்னு ஆவேசமா தட்டி விட்டாரு. அந்த விபூதி தட்டு ஐயரு மூஞ்சியில பட்டு மூஞ்சியெல்லாம் விபூதி அப்பி, பல்லு ஒடஞ்சி போச்சி."

"மூணு பல்லு ஒடஞ்சிதுன்னு சொன்னாங்களே?"

"இல்ல, ஒரு பல்லுதான்!

அப்புறம் ஐயரு அங்கிருந்து ஓடிட்டாரா?

"'இல்ல. அப்படியே, அங்கியே விபூதி அப்பின முகத்தைத் தொடச்சிக்கிட்டு, வேலய செய்துக்கிட்டுத்தான் இருந்தாரு."

"அப்புறம்?

"வேல எல்லாம் முடிஞ்ச பிறகு சாமி அன்பா சிரிச்சித் தடவிக்குடுத்தார். வலி சரியாயிடுச்சி. அப்புறமா ஐயரு எங்கிட்ட, "டேய்! ரெண்டு பேருமா சேர்ந்து என் பல்ல ஒடச்சிட்டீங்களேன்னு சொன்னாரு."

"சாமி அப்பா மணியக்காரரும் சாமிகிட்ட அடிவாங்கனாரு. அவரு சாமிய பாத்து, "என்னமுருகா? இப்படி எல்லாம் அடிக்கிறயே! என்னால தாங்க முடியலைன்னு" அழுதார். சாமி அதுக்கு, "எல்லாம் விளையாட்டு தான். போகப் போகச் சரியாயிடும்னு" சமாதானப் படுத்துவார்."

"சிட்டு ஒரு நாளைக்கு எவ்வளவு வரும்? நெறய வருமா?"

"ஐயோ! நிறைய வரும். ஒரு ஞாயிற்றுக்கிழமை இருநூறு சிட்டு வந்தது."

பரவாயில்ல, இரநூறு ரூபா. நல்ல வருமானம்தான். அப்ப காலேஜில எங்களுக்கு மாசச் சம்பளமே நானூறு ரூபாய்க்குக் கொஞ்சம் மேலதான்." எல்லோரும் சிரிக்கிறோம்.

"அந்தச் சிட்ட எல்லாம் எங்கள வாங்கி வக்கச் சொல்லிட்டுக் கீழே மலையடிவாரத்துக்குப் போயி, அங்க தங்கிஇருக்கற நோயாளிங்க, கை, கால் நடக்க முடியாதவங்களைப் பாத்து விபூதி, வேப்பல குடுத்திட்டு

வருவார். அந்த விபூதியையும், வேப்பலையையும் அரைச்சி, புண்ணுங்க மேல; கை, கால் வராதவங்க - அவங்க கை, கால்ல பூசச்சொல்வார்.

"அப்ப நானும் சாமி கூடவே போயிச் சாமி கூடவே வந்துடுவேன்.

"அப்போ சாமி அவ்ளோ வேகமா படி ஏறி எறங்குவார்! அப்பா, நமக்கு பயமா இருக்கும். ஒரு நிமிஷத்துல ஏறிடுவார்; ஒரு நிமிஷத்துல எறங்கிடுவார். மறுபடியும் கோயிலுக்கு வந்து, வாங்கி வச்சிருக்கிற சிட்டுகளுக்கு பதில் எழுதி, எழுதி, நாங்க படிச்சிக் காட்டக் காட்ட அழித்துக்கொண்டே வருவார். இப்போ மாதிரி அப்போ லெட்டர்பேடெல்லாம் கிடையாது. எழுதி முடிச்சதும் எல்லார் நெத்தியிலும் விபூதி வச்சிடுவார்.

"தனக்கு இது நடக்கணும்; பொண்ணுக்குக் கல்யாணம் நடக்கணும்; பசங்களுக்கு நல்ல வேலை கெடைக்கணும்; அப்புறம் குழந்தை இல்லாதவங்க, இப்படிக் கஷ்டப்படறவங்க, அவங்கவங்க கஷ்டத்தைச் சொல்லிச் சாமிகிட்ட சிட்டு எழுதிக் கேப்பாங்க. அதுல ரொம்ப கிராமத்து ஏழை ஜனங்கதான் வருவாங்க. சாமி அவங்க கேக்கறதுக்கெல்லாம், "நடக்கும்", 'இப்ப நடக்கும்', 'இவ்வளவு நாள் பொறுத்து நல்லாகும்' ன்னு ஜாடையிலே சொல்வார். எழுதியும் காட்டுவார். அப்படிக் குறை தீர்ந்தவங்க சாமிகிட்ட வந்து, சாமி நீங்க சொன்னது போலவே நல்லாச்சி சாமின்னுவாங்க. அவங்களும், முன்னே சாமி சொன்ன மாதிரி முருகனுக்குக் காணிக்கையா ஒரு பதினோரு ரூபா இல்லனா இருபது ரூபா, அதுக்கு மேல சாமி கேக்கமாட்டாரு. அவங்களும் அந்தக் காணிக்கைய சந்தோஷமாக் குடுத்துட்டுப் போவாங்க. இல்லைனா அங்க உண்டியல் இருக்கும். அதில போட்டுட்டுப் போவாங்க."

"நீங்க மலைக்கு - கோயிலுக்கு வந்தப்போ இங்க மலைமேல கற்பூரம், பூ கடைங்க எல்லாம் இருந்துதா?"

"அப்ப எந்தக் கடையும் இல்ல. மலைமேல கடைங்க எதுவும் வரக்கூடாதுன்னு சாமி ரொம்பக் கண்டிப்பு. கடைங்க எல்லாம் கீழதான் - மலையடிவாரத்துலதான்.




"அப்பல்லாம் சாமி, இப்ப இருக்கற மாதிரி இல்லீங்க. நீங்கள்லாம் வரும் போது, அந்தக் கொலை நிகழ்ச்சிக்கு அப்புறம் சாமியோட ஆவேசம் தணிஞ்சிடுச்சி. நல்லா அமைதியா இருப்பாரு. ஆனா சட்டுன்னு அந்த ஆவேசம் வந்துடும். அந்த ஆவேசம் வந்திடுச்சின்னா, அந்த நேரத்துல ஏதாவது தப்பு செய்தவங்க சாமிகிட்ட மாட்டனாங்கனா அவ்ளோதான். மொறச்சிப் பார்ப்பார். அதுலயே அவங்க சரியாயிடனும். இல்லே அவ்ளோதான். நல்ல அடிதான்."

"அடின்னா எப்படி?"

"கையிலேயே அடிப்பார். கையிலேயே கொம்பு வைச்சிருப்பார். அதுலயே அடிவிழும்.

"நான் விபூதி தட்ட வச்சிக்கினு பக்கத்துல நின்னுக்கிட்டு இருப்பேன். அவருக்கு கை வலிக்குமோ வலிக்காதோ! வர்றவங்களுக்கெல்லாம் விபூதிய எடுத்து எடுத்து நாள் முழுதும் குடுத்திட்டே இருப்பார். வர்றவங்க முகத்தப் பார்த்துப் பார்த்துக் குடுப்பாரு. அவங்க நெத்தியிலயும் இட்டு விடுவாரு. இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் வர்றவங்களுக்கும் சாமியும் அவங்களுக்காக அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் திரும்பித்திரும்பி விபூதி இட்டுவிடுவாரு. ஆனா அவர் எந்தப் பக்கம் திரும்பினாலும் அவர் கை மட்டும் தட்டுலயிருந்து விபூதிய எடுத்துக்கிட்டே இருக்கும். அவர் தட்டுல கை வைக்கிற இடத்துல நிறைய விபூதி இருக்கணும். அப்படி இல்லே அடிதான். அந்த மாதிரி சில நேரங்கள்ல கையிலேயே அடிப்பார்; திட்டுவார். அந்தத் திட்டு நமக்குப் புரியாது. ஆனா அந்தக் கண்ணால மொறச்சிப் பார்ப்பார். பயமா இருக்கும். அதனால எப்பவும் அந்த நேரத்துல ஜாக்கிரதையாய் இருக்கணும்.

"அப்போ சாமி அவ்ளோ கறார் - நெருப்பு. அவரு கோயில்ல பூஜைய முடிச்சிட்டு, கையிலே கொம்போட, ஒடம்பெல்லாம் விபூதியோட,



கோயில் கூரை கொட்டகை மாறி, சிமண்டு சீட் வந்திருக்கிறது.



சுவாமி மலையில் வந்து அமர்ந்த போது கோயில் இருந்த நிலை.
படிக்கட்டு. சுவாமி போட்ட கூரைப் பந்தல்.
படியின் முன் மண்டபம் அமைக்க நிறுத்தப்பட்டுள்ள கல்.



1974ல் ராஜகோபுர கட்டுமானம் நடக்கும் போது மலையின் தோற்றம் - மலைகள் இரண்டு பிரிவாக இருப்பதை இங்கே தெளிவாகக் காணலாம். தென் பகுதியில் கோயில் வட பகுதியில் - பாலாற்று நீர்த் தேக்கத் தொட்டி - மலைப்பாதை பின்னால் அமைக்கப்பட்டது.



முருகன் மூலஸ்தானம் விஸ்தரிப்பு. விநாயகர் கோயில் கட்டுமான வளர்ச்சி.

எலுமிச்சம்பழத்த எடுத்துகினு நடந்து வந்தார்னா, எப்படிப்பட்டவனும் பயந்து நடுங்குவான்.

"அப்போ வேலூர் ஜெயில் சூப்பரின்டென்டென்ட் ஒருத்தர் அடிக்கடி கோயிலுக்குச் சாமியப் பார்க்கக் குடும்பத்தோட வருவார். அவர் பெயரைச் சொல்கிறார். அவர் பெரிய மீசை வச்சிருப்பாரு. அவரு சொல்வாரு. "என்னைப் பார்த்தா ஜெயில்ல எல்லோரும் பயப்படறாங்க. ஆனா நான் சாமியப் பாக்கும்போது எனக்கே பயமா இருக்கு"ன்னு சொல்வாரு. அப்படி இருப்பாரு சாமி!

"பெண்கள் ஜெயில் சூப்பிரண்டெண்டென்ட் அம்மாவும் அடிக்கடி வருவாங்க." அவர் பேரையும் சொல்கிறார். "அவங்களும் அமைதியா வந்து சாமியப் பாத்து ஒண்ணு, ரெண்டு, வார்த்தைகள் பேசிட்டுப் போயிடுவாங்க.

"சாமிகிட்ட அடின்னாலும் அப்படிப்பட்ட அடிதான். அன்புன்னாலும் அப்படிப்பட்ட அன்புதான்.

"எங்கள எப்பப் பார்த்தாலும்" சாப்டீங்களா, சாப்டீங்களா"ன்னு கேப்பாரு. அப்பப்பா! எவ்ளோ அன்பு! எவ்ளோ பெரிய வி.ஐ.பிங்க வந்தாலும், எல்லார் முன்னாடியும் கோயில்ல வச்சித்தான் பேசுவாரு. தனியா பேசமாட்டாரு.

"அப்போ சாமியோட சம்சாரம் - அந்த அம்மாவை நான் பேட்டி எடுக்கும்போது, இதோ இந்தக் கலைமணிதான் அதுக்கு ஏற்பாடு செய்தாரு. இதுக்கெல்லாம் கலைமணி எவ்ளோ கஷ்டப்பட்டிருக்காரு.

"அம்மாவே சொன்னாங்க "நான் இந்த மூணு கொழந்தைகளையும் கூட்டிக்கிட்டு, தினமும் சாயங்காலம் மலைக்குப்போவேன். முருகருக்கு அபிஷேகம், அர்ச்சனை நடக்கும். தொலைவிலே இருந்தபடியே நின்னு பாத்துட்டு வந்துடுவேன். கொழந்தைங்க சாமி கிட்டப்போவும். ஆனா வீட்ல இருக்கறவங்க, 'ஏன் இப்படி தெனமும் அங்கக் கோயிலுக்குப் போறேன்னு' கேப்பாங்க. ஏன் போவேன்? ஏன் அப்படிப் போறேன்னு எனக்கே

தெரியாது! போகனும்னு தோணிச்சி. போனேன்! ஒரு மூணு மாசம் வரைக்கும் போனேன்"னு சொல்லி இருக்காங்க."

"நீங்க இருக்கும் போது அம்மா அங்க வந்து இருக்காங்களா?"

"ஆமா வருவாங்க! மூணு மாசம் என்ன! அதுக்கு மேல கூட இருக்கும். வந்தா தொலைவா நின்னுட்டு இருப்பாங்க. பெரிய பொண்ணு சாமிகிட்ட வரும். கூட்டம் குறைவா இருந்தா சின்னக் கொழந்தைய கிட்ட கொண்டாந்துக் காட்டச் சொல்வாரு. பையன் பகீரதன் மட்டும் கிட்டவே வரமாட்டான். பதினஞ்சி வயசு வரைக்கும் அவன் சாமிகிட்ட வரவே இல்லை. தொலைவிலேயே இருப்பான். அப்புறம் சுவாமி எல்லோருக்கும் விபூதி குடுக்கும்போது அம்மாவும் வரிசையில நின்னு வாங்கிட்டுப்போவாங்க. கொழந்தைகளுக்கும் இடுவாரு.

"சாமிக்கு நாங்க வேப்பில ஒடச்சிட்டு வருவோம்."

"தெனமும் போயி யார் மரத்த மொட்ட அடிப்பீங்க? உங்களுக்கு மரம் ஏற வருமா?"

"எனக்கு மரம் ஏற வராதுங்க. கழனியெல்லாம் போயி கைக்கு எட்டறவரைக்கும் ஒடச்சிட்டு வருவேன். கன்னிகாபுரத்திலே" ஒருத்தர். பேரைச் சொல்கிறார். "அவர் தினமும் வேப்பில ஒடச்சிட்டு வந்து கொடுப்பாரு. விபூதியும் அவர்தான் ஆரம்பநாள்ல வாங்கிட்டு வந்து தருவாரு."

"நோயாளிகளுக்குச் சாப்பாடு எப்படி? சாமி போடுவாரா?"

"இல்ல. டீக்கடையிலே தான் காசு குடுத்து வாங்கிச் சாப்பிடுவாங்க. பிறகு கோயில் கட்ட ஆரம்பிச்சதும் மேஸ்திரிகளுக்குச் சாப்பாடு ஒரு ரெண்டு வருஷம் வரைக்கும் அந்த ஓட்டல்லியேதான் செய்தாங்க!

"அப்பல்லாம் காசு வசூலே வராது. கோயிலுக்கு வர்றவங்க அப்பல்லாம் காணிக்கை, நன்கொடைன்னு வர்றதே ரொம்பக் கொறவு. அப்பவே ஆஸ்பத்திரி கட்டறது பத்தி சாமி பேசஆரம்பிச்சிட்டாரு.

சாயந்திரத்திலிருந்து ராத்திரி எட்டு மணி வரைக்கும் கோயில்ல சாமி கூடவே இருப்பேன்.

"அப்போ ஒருத்தர் அவரோட மாடு பால் கறக்கலேன்னு, சாமிகிட்ட வந்து, "சாமி! பால் கறக்க ஏதாவது செய்யுங்க சாமி"ன்னு கேட்டாரு. சாமியும் விபூதியும், வேப்பிலையையும் குடுத்து, "இத அரச்சி பசுமாட்டுக்குக் குடு சரியாயிடும்னு" சொல்லி அனுப்பினார். அவர் அடுத்த முறை கோயிலுக்கு வந்தபோது "சாமி, பசு பால் நல்லா கறந்ததுன்னு" கோயிலுக்கு - முருகர் அபிஷேகத்துக்குப் பால் கொண்டு வந்தார்.


"அப்புறம் இங்க கோயில்ல வேலை நடந்துக்குனு இருந்தது. ஒரு ரூம் தளம் போடற வேலை. அதுக்கு முட்டுக்கொம்புங்க, சென்ட்ரிங் பலகைங்க சேலத்துல இருந்து வாங்கியாரப் போனாங்க. இருந்த காசையெல்லாம் தேடித்தேடிக் குடுத்து அனுப்பிச்சாரு சாமி. காலையில அந்தச் சாமான்களையெல்லாம் எடுத்துக்குனு லாரி இங்க வந்துடும். வந்தா அதுக்கு லாரி வாடகை குடுக்கணும். சுத்தமா அந்த நேரத்துக்கு துட்டு இல்ல. பணம் போட்டு வைக்கிற பக்கெட்லேயும் இல்ல; உண்டியிலேயும் இல்ல. சாமி பரபரன்னு ஆயிட்டாரு.

"அன்னிக்கி இருந்த சூழ்நிலை ரொம்....பக் கஷ்டம். அன்னிக்குன்னு கோயில்ல யாரும் வரல; பணமும் குடுக்கல. இருந்த சில்லரைப் பணத்தையும்கூட எண்ணி எண்ணிக் குடுத்து அனுப்பிச்சிட்டோம். சாமான் எறக்கறப்ப அவங்களுக்குக் கட்டாயம் பணம் குடுத்தே ஆகணும். இதே நினைப்பு... எதிர் பாராமல் பக்தர்கள் அப்போது காணிக்கை செலுத்தினாங்க. அது கொண்டு சாமி ஈடு செய்தார்.

"டி.வியில 'ஓம் நமசிவாய' பார்க்கும்போது அதுல சிவபெருமான் முகத்துல அனல் தெறிக்குது. இதப் பார்த்த பிறகுதான் சுவாமிகள் முகத்தில் அன்னைக்கு இப்படிப் பறந்தது எல்லாம் தெய்வீக அனல்ன்னு புரிஞ்சுது.

"அப்போ எனக்குச் சினிமா பாக்கணும்னு ஆசை. சாமிய கேக்க முடியுமா? ஒரு நாள் என்னவோ ஸ்டிரைக். அதனால கோயில்ல

அவ்ளோவா யாரும் வரல. வேலை இல்லாம ஒய்வா இருந்ததால சாமிகிட்டப்போயி, இன்னொரு பையன் பேரையும் சொல்லி "நாங்க வேலூருக்குப்போய் சினிமா பாத்துட்டு வரோம்னு கேட்டேன். அதுக்கு சாமி, "150 மூட்டை சிமெண்ட் மலையடிவாரத்துல இருக்குது. அந்த மூட்டைகளை மேல எடுத்தாந்து போட்டுட்டு வேணாப் போங்க"ன்னாரு. சினிமா பாக்கற ஆசை! ரெண்டு பேரும் சேர்ந்து 150 மூட்டை சிமெண்ட்டையும் மேல கொண்டாந்து போட்டோம்." இதைச் சொல்லிவிட்டு கங்காதரன் பொங்கிப்பொங்கிச் சிரிக்கிறார். "சாமி எங்களுக்கு நெறய துட்டு குடுத்தாரு. நாங்க வேலூர்போயி ஓட்டல்லே நல்லா சாப்டுட்டு, சினிமாவும் பாத்துட்டு வந்தோம்.



"இப்ப இருக்கிற கோயிலுக்கு நேரா பின்னால இருக்கிற மலையிலே ஒரு பாறை இருக்குது. அதுக்கு சக்திப்பாறைன்னு பேரு. அந்தப் பாறைக்குப் போற வழியில முள்ளு, செடி, கொடி, ஒயரம் ஒயரமா புல்லுங்க மொளச்சி இருக்கும். நடந்து போகவே முடியாது - நடக்க வழியும் கெடயாது. ஒருநாள் ராத்திரி எட்டு மணி இருக்கும். சாமி இங்க கோயிலிலிருந்து, அந்தப் பின்னால இருக்கற மலைப்பாறைக்கு குதிச்சி, வேகமா அந்த புதர்ல, நடக்க ஆரம்பிச்சாரு. மடமடன்னு நடந்துபோறாரு. கூட நானும், ஐயரும் ஓடறோம். அவ்ளோ வேகம். சாமி நடக்கறாரு. நாங்க ஓடறோம். என்னா வேகம்! என்னா வேகம்! கூடவே கையில திருநீறு, கற்பூரம் கொளுத்தி, விபூதி, வேப்பில எல்லாம் தூவி பாறைமேல எலுமிச்சம்பழத்த ஒடச்சிப் போட்டுட்டு, உடனே அங்கிருந்து போன வேகத்திலேயே திரும்பி மடமடன்னு நடந்து வந்திட்டார். நடையா அது? மூச்சு எல்லாம் வாங்குது?"

"எத்தினி முறை அந்த மாதிரி போனீங்க? ராத்திரியிலே போனா கல்லு, முள்ளெல்லாம் கால்ல குத்தலியா?"

"ஒன்னும் பொத்துக்கல. போன மாதிரியே திரும்பி நல்லாவே வந்தோம். அந்த மாதிரி ஒரு ரெண்டு முறைதான் ஓடி இருக்கோம்."

"சாமி ஆறுபடை வீடுகள் மாதிரி கோயில கட்டணும்னு சொல்றாரு இப்பவும்தான் சொல்றாரு. அதுவும் கோயில இடிச்சப்புறம்தான். அதாவது அவர் கோயிலுக்கு வந்து உட்கார்ந்தபிறகு, பதினைந்து வருஷங்களுக்கு அப்புறம்தான். புதுக்கோயில் கட்டப் பழைய கோயில இடிச்சாரு. ஆனால் அது பற்றி நான் கேட்டப்போ, 'நான் என்னிக்கிக் கோயில்ல உக்காந்தனோ, அன்னிக்கே கோயில் கட்ட ஆரம்பிச்சேன்'னு சொன்னாரு? அது பற்றி ஏதாவது சாமி பேசி இருக்காரா?

தன் பக்தர்களிடம் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் போது ஆறுபடை ஏழுபடைவீடு மாதிரி மட்டுமல்ல, அந்தக்காலத்திலே பெரிய பெரிய ராஜாக்கள் கட்டின மாதிரி கோயிலை நாமும் பெருசா கட்டணும்னு தன் எண்ணத்தை வெளிப்படுத்துவார்.

"நான் அடிக்கடி கோயிலுக்கு வரும்போது அவங்க ஊரிலிருந்து சாமியோடு சொந்தக்காரங்க அவரோட உக்காந்து பேசிக்கிட்டிருப்பாங்க. ஊர்க்கதை, குடும்பக் கதை, என்னென்னமோ பேசுவாங்க. அப்ப ஆரம்பத்திலே இவங்கல்லாம் வருவாங்களா?"

"அவர் அண்ணன்", இன்னும் மற்ற சில அவர் உறவினர் பெயர்களைச் சொல்கிறார். "மணியக்காரரும் வருவாரு. ஒரு ஆறு மணிக்கா வேலை முடிஞ்சதும் மேல வருவாங்க. கொஞ்ச நேரம் - ஒரு அரைமணி நேரம் இருப்பாங்க. ஆனா சாமி அவங்ககிட்ட கண்டும் காணாமல் இருப்பார். ஒரே ஆக்ரோஷம். நீங்க இப்ப பாக்கிற சாமி இல்ல அப்ப. அவர்கிட்ட பேசறதுக்கே எல்லாரும் பயப்படுவாங்க.

"ஒருநாள் இவங்கெல்லாம் கோயிலுக்கு வந்திருக்கும்போது ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதே மாதிரி சாயங்காலம் ஆறு மணி - லேசா இருட்டு. இவங்க எல்லாரும் சாமிக்குக் கொஞ்சம் தள்ளி உக்காந்துட்டிருந்தாங்க என்னவோ சாப்ட்டுக்குனும் இருந்தாங்க. சாமிக்கும் கொஞ்சம் குடுத்தாங்க. அதுல கல்லு இருந்திருக்குது. சாமி அந்தக் கல்லை எடுத்துப்போட்டுட்டு சாப்பிட்டாங்க. அதப் பார்த்த சாமி உறவுக்காரர் ஒருவர் குரல்ல கொஞ்சம் கிண்டலா, "சாமிக்குக் கல்லு கூட தெரியுதுப்பா'ன்னு மெதுவாக இன்னொருத்தரிடம் சொன்னார். அவர் அப்படி சொன்னது சாமிக்குக்

கேட்டுடுச்சி அவரைப் பாத்து சாமி தலையை ஆட்டி "ஹும். என்னா சொன்ன'ன்னு கேட்டதுக்கு அவர் தயக்கத்தோடும், பயத்தோடும் மறுபடியும் தான் சொன்னதச் சொன்னார்... அதைக் கேட்டு சாமி கொஞ்ச நேரம் அப்படியே உக்காந்திருந்தார். உடனே தரையில கிடந்த கல்லு, மண்ணு. தேங்காய் ஓடுங்க எல்லாத்தையும் அப்படியே கையில அள்ளி வாயில போட்டு நறநறன்னு அப்படியே கடிச்சி மென்னு முழுங்கிட்டாரு. அதப் பார்த்த அவங்களுக்கும், எங்களுக்கும் ரொம்ப பயமாயிடிச்சி. அப்புறமா அவங்க மெல்ல எழுந்து "நாங்க வரோம் சாமி"ன்னு கும்பிட்டுட்டுப் போயிட்டாங்க.

"சாமிக்கு அவ்ளோ ஆக்ரோஷம். சக்தி வந்துட்டா முகத்துல அனல் தெறிக்கும். கண்ணு ரெண்டும் நெருப்பு மாதிரி ஆயிடும்.

"சாமி காலையிலேயும், சாயங்காலமும் கோயில்ல பூஜைய முடிச்சிட்டு வெளியில வேகமா வருவாரு. அப்ப யாரும் குறுக்க வரக்கூடாது. யாரும் பேசவும் கூடாது. வந்தா நல்லா அடிச்சிடுவாரு. அப்படி ஒரு நிகழ்ச்சியும் நடந்தது ஒரு மிலிட்டரிக்காரனோட.

"அப்ப எல்லாம் ஒரு வேல் - சின்ன வேல் சாமி எப்பவும் கூடவே வச்சிருப்பாரு. இடுப்பில துணியில சொருகி வச்சிருப்பாரு. எப்பவும் அது அவர்கூடவே இருக்கும். ராத்திரியில படுக்கும்போது, அந்த வேலை பக்கத்துல தலைமாட்டுல வச்சிட்டுப் படுத்துக்குவார். அது வெளிச்சத்துல 'பளபள'ன்னு மின்னும். எப்பவும் விபூதியிலயே போட்டு வச்சிருக்கறது இல்லையா!

"சாமி என்னிடமும் பலமுறை அந்த வேலைப்பற்றி சொல்லி இருக்கிறார். அவர் கோயிலுக்குள் மயங்கி விழுந்துபோது, அந்த ஓட்ட ஒடசல் கோயில்ல இருந்த ஒன்னு, ரெண்டு பொருள்களில் இந்த வேலும் ஒன்னு. அந்த வேல் மிக சக்தி வாய்ந்தது என்றும், எப்பவும் அத இடுப்பிலே வச்சிருப்பேன்' என்றும் சாமி சொன்னார்.

"இப்பவும் அந்த வேலை வச்சிருக்கேன். ஒரு நாள் வந்து பாருன்னு சாமி சொன்னாரு இன்னும் நான் அதப் பாக்கல."

பிறகு ஒருநாள் அந்த வேலைப் பற்றி நான் கேட்டேன். சாமி சொன்னார். "அந்த வேலை வாரியார் சாமி பார்த்துட்டு 'குடுங்க சாமின்னு' வாங்கிட்டுப் போயிட்டார். அவர் பூஜை செய்து கிட்டிருந்த வேலை எங்கிட்டே குடுத்திட்டார்."

"ஐயருக்கு ரெண்டாவது கல்யாணம் ஆச்சே! அப்ப அதுக்கு நீங்க போனீங்களா? எப்ப, எப்படி நடந்தது?"

"ஆமா! நடந்தது. எனக்கு அதுபற்றி ரொம்பத் தெரியாது."

"சாமி பேய் ஓட்டறத பத்தித் தப்புந்தவறுமா சாமிய பற்றி வந்த ஒரு செய்திய, சின்னப் பத்திரிகையில் படிச்சேன். அது என்ன விஷயம்?"

"ஆமா, அன்னிக்கி மழை தூறிக்கிட்டே இருந்தது. மணியும் பதினொன்றரை இருக்கும். கோயில்ல கூட்டம் கூட இல்லை. சாமியும், நானும் பலிபீடத்துக்குக்கிட்ட நின்னுட்டிருந்தோம். அப்ப மணியக்காரர் ஒரு பேப்பரை எடுத்துக்கினு அழுதுக்கினே வந்தார். வந்தவர் பேப்பரைக் கொஞ்சம் தொலைவில வச்சிட்டு, சாமி பாக்கற மாதிரி முருகனைப் பாத்துத் திட்றாரு.

"என் பிள்ளையையும் எடுத்துக்கிட்டு, என்னையும் இப்படி ஊரானுங்க கேவலமாப் பேசற மாதிரியும் செய்யறியே; இது உனக்கே ஞாயமா"ன்னு ஒரு அஞ்சி நிமிஷம் அழுதுகிட்டே பேசிக்கிட்டிருந்தார். சாமி ஒண்ணுமே பேசல. அப்போ மெட்ராசில இருந்து ஒரு பக்தரும் சாமியோட இருந்தாரு. அவர் சொன்னார், 'முதல்ல இப்படித்தான் இருக்கும். அப்புறம் சரியாயிடும்"னு சொன்னாரு. சாமி கொஞ்ச நேரம் பொறுத்து, பலகையில, "என்னை இந்த முருகன் ஆட்கொண்டு விட்டான். இப்படியும் நடக்கும். கவலை வேண்டாம். எல்லாம் சரியாகிவிடும். மனம் தளராதே; நடப்பது நடக்கட்டும்" என்று எழுதிக் காண்பித்தார்.

"அப்புறம் மணியக்காரர், 'இந்தப் பேய் ஓட்றதையெல்லாம் நிறுத்திடு. வேண்டாம்'னு சொல்லிட்டுப் போயிட்டார். சாமியும் வருத்தமா இருந்தார். அன்னிக்கி மத்தியானம் வழக்கமாய் சாப்பிடும் ஒரு பிடிச் சாப்பாடும் சாமி

சாப்பிடலே. சாப்பாடு வேண்டாம்ன்னு சொல்லிட்டுக் கோயிலுக்குள் போயி ரெண்டு கதவையும் மூடிட்டு உள்ளே முருகர் முன்னால ஒக்காந்து இருந்தார். பிறகு அரைமணி நேரம் கழிச்சி வந்தார்.

"மணியக்காரர் குரல் அவ்ளோ கம்பீரமாய் இருக்கும். ஜிப்பா போட்டுட்டு இருப்பார். ஒரே அதிகாரம்; பெரிய இது மாதிரி இருப்பாரு. அப்புறம் அந்தப் பேப்பரை வாங்கியாரச் சொல்லி சாமி படிச்சிட்டிருந்தார். நாங்களும் படிச்சோம்.

"அதுல தப்பு தப்பா எழுதியிருந்தது. சாமி சூலத்தாலே குத்தறதாகவும், அரளிவிளார்லே அடிக்கறதாகவும், இன்னும் என்னென்னவோ பொய் பொய்யா எழுதியிருந்தது.

"சாமி பேய் பிடிச்சவங்கள மெரட்டுவாரு. அப்போ கோயில் முன்னால பக்தர்கள் முருகரை தரிசிக்க ஆரத்தி காட்டும்போது வரிசையா நிக்கறதுக்கு மூங்கில்ல வழிவிட்டுக் கட்டியிருப்பாங்க. இந்தப் பேய் பிடிச்சவங்க அதன் நடுவிலதான் வரிசையா நிப்பாங்க. அப்போ அந்தச் சூலத்தால அந்த மூங்கில் மேல அடிப்பாரு; ஆவேசமா அடிப்பாரு; சத்தம் போடுவாரு. அவ்வளவுதான். பேய் பிடிச்ச மனிதர்களை அடிச்சதெல்லாம் கெடயாது. என்மேல விபூதி ஊதுவாரு."

"உங்க மேலயா? உங்க மேல எதுக்கு?"

"அந்தப் பேய்ங்ககிட்ட சில கேள்விங்கல்லாம் கேப்பாரு. சாமிக்குத்தான் பேசவராதே. அதனாலே அவர் சக்தியை என் மேல விபூதியில ஊதுவாரு."

கலைமணி சொல்றார். "அப்ப சிலநேரம் நான்கூட இருந்திருக்கிறேன். சாமி இவர் மேல விபூதி ஊதின உடனே இவரும் சத்தமா, அந்தப் பேய்ங்ககிட்ட 'எப்போ போற! எங்கயிருந்து வந்த? யார் நீ?' ன்னு அவங்ககிட்ட சாமி கேக்கவேண்டிய கேள்விகளையெல்லாம் இவர் கேப்பாரு. இந்த சக்தி சாமி ஊதின விபூதியில இருந்து வந்தது."

கங்காதரன் சொல்கிறார்:

"ஒரு வருஷம் வரைக்கும் அவர் எதையுமே சாப்பிடல. ஆப்பிள் ஒரு துண்டு. சாத்துக்குடி ஒரு பீஸ். மிஞ்சிப்போனா இதுதான் சாப்பிடுவாரு.

"அதுக்கே சாமி வீட்லயிருந்து மத்தியானம் சாப்பாடு வரும்போது, அதுல சாமி பணத்தை வச்சி அனுப்புறாருன்னு எழுதனாங்க; பேசனாங்க. இதையெல்லாம் பார்த்து சாமி ரொம்ப வருத்தப்படுவார். அப்புறம் "நாம என்னா செய்யறது"ன்னு விட்டுட்டாரு.

"அப்போ மலையில தண்ணி கெடயாது. மலையடிவாரத்துக்குப் போயி, இப்ப மொட்டை அடிக்கறமே அந்த மண்டபம் இருக்கு இல்லையா? அங்கக் கழனியில நல்ல பயிர். அங்க காவாய்ல தண்ணி போகும். அந்தத் தண்ணியதான் பூஜைக்கு எடுத்து வருவேன்.

"1976 - 77 வரைக்கும், இந்தக் கொலை கேசு முடியற வரைக்கும், பகல் சாப்பாடு வீட்டுச் சாப்பாடு. ராத்திரியில சாப்பிடறது இல்ல. நாங்க சாப்ட்டுடுவோம்.

"அவங்க வீட்டுக்கு நீங்க சாப்பாடு எடுத்துக்கினு வரப்போனீங்களே. அப்ப சாமியார் சாப்பிட்டாரா? என்ன சொன்னார்ன்னு, சாமிய பத்தி யாரும் கேட்கமாட்டாங்களா?"

"அவங்க அத்தை இருந்தாங்க. அவங்க சாமிய பத்தி விசாரிப்பாங்க. அவங்கதான் சாமியோட அம்மா காலமாயிட்ட பிறகு சாமிய அன்போட வளர்த்தவங்க. அந்த அத்தைதான் பாசத்தோட, ஆதங்கத்தோட சாமி சாப்பிட்டாரான்னு அன்பா கேப்பாங்க. சாமியப்பத்தியும் ரொம்ப கவலைப்படுவாங்க."

"ஆமா கோயில்ல எப்ப பேய் ஓட்றத நிறுத்தனீங்க? எப்படி அது நின்னது?"

"கொஞ்ச கொஞ்சமா தானா நின்னுபோச்சி. நெறய பேர் சரியாயிட்டாங்க. அப்படியே நின்னுப்போச்சி. பேய் பிடிச்சி நல்லா

ஆனவங்க அப்புறம் வருவாங்க. சாமி பேய் ஓட்ன பிறகு, கல்யாணமாகி, குழந்தை பொறந்ததுன்னு, குழந்தையை எடுத்துக்கினு வந்து சாமிகிட்டக் காட்டுவாங்க. சாமி ரொம்ப சந்தோஷப்பட்டு, குழந்தையின் நெத்தியிலேயும், அவங்க நெத்தியிலயும் விபூதி இட்டு அனுப்புவாரு.

“1977 வரைக்கும் சாமிக்கு இந்த ஆவேசம் இருந்தது.”

“அப்புறம் கோயில கவர்ன்மெண்ட் எடுத்துக்கிச்சி இல்லியா? அவங்க என்ன சொல்லிக் கேட்டாங்க? எப்படி எடுத்துக்கிட்டாங்க?”

“அப்ப கோயில்ல லட்சக்கணக்குல வருமானம் இருந்தது இல்லியா? அதனால இவ்வளவு வருமானம் வர்ற கோயிலை எப்படி ஒரு தனிப்பட்ட ஒருவரிடம் விட்டுவைக்கலாம்னு பேப்பர்ல கன்னாபின்னான்னு எழுதினாங்க.”

“ஒருநாள் கோயில்ல நானும் சாமியும் உக்காந்துட்டு இருக்கோம். அப்போ கவர்ன்மெண்ட்லே இருந்து ஒரு ஆளு வந்தவரு, சாமிய பவ்யமா கும்பிடு போட்டாரு. அப்புறம் ஏதோ கவர்ன்மெண்ட் ஆர்டர்ன்னு ஒரு லெட்டரைச் சாமியிடம் குடுத்தாரு. சாமியும் அத வாங்கிப் படிச்சாரு. படிச்சிட்டு வந்தவரைப் பாத்து “இன்னா செய்யப்போறீங்கன்னு” ஜாடையில கேட்டாரு. அப்புறம் அவங்ககிட்ட எழுதிக் கேட்டாரு.

“அதுக்கு அவர் “உங்க அபிப்பிராயம் கேட்டு செய்யச் சொல்லி இருக்காங்க. கோயில கவர்ன்மெண்ட் கிட்ட ஒப்படைக்கச் சொல்லியிருக்காங்க.” அப்படின்னு சொன்னாரு. அதுக்கு சாமியும் என்னவோ சொன்னாரு.

“மறுநாள் ராணிப்பேட்டை ஆர்.டி.ஓ, போலீஸ் இன்ஸ்பெக்டர் இவங்களோட அவரும் வந்தாரு அவங்களோட நகைகளை எடை போடற ஆளும் வந்தாரு. சாமிநகைங்க, கோயில் சாமான்களை சிலைங்க, பாத்திரங்கன்னு ஒன்னுவிடாம எல்லாத்தையும் கணக்குல எழுதிக்கினாங்க.”

“அவைகளை எழுதி எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்களா?”

“இல்லை. எடுத்துக்கிட்டுப் போகலே.

"கவர்ன்மெண்ட்லே ஒப்படைச்சிட்டேன்"னு சாமிகிட்டே எழுதிக் கையெழுத்து வாங்கிக்கிட்டாங்க. சாமான், மத்த பொறுப்பெல்லாம் சாமிகிட்டவே விட்டுட்டு, கணக்குல மட்டும் எழுதி எடுத்துக்கினு போனாங்க."

"அப்புறம் நீங்க ஏன் கோயிலை விட்டுப் போனிங்க?"

"கோயில கவர்ன்மெண்ட் எடுத்துக்கின பிறகு, எல்லாமே தலைகீழா போயிடுச்சி. எல்லாம் அவங்க அதிகாரமா போயிடுச்சி. அமர்க்களமா போயிடுச்சி.

"இந்தப் பத்து வருஷமா கோயிலுக்குன்னு ராவு, பகல்ன்னு ஒழச்சி, வெறும் பாறையா கெடந்த கோயிலைப், படாத பாடுபட்டுக் இந்த நிலைக்கு - இவ்ளோ பெரிய நிலைக்குக் கொண்டாந்தார் சாமி. நாங்களும் ஒழச்சோம்.

"நாங்க தங்கி இருந்த, சாமி கட்டி குடுத்த குடிசை வீட்டுக்கு வாடகை குடுக்கனும்னு அந்த ஆபீசர் கேட்டாரு. வாடகை குடுக்கற அளவுக்கு அவ்ளோ வருமானம் எங்களுக்கு இல்ல. நாங்க ஏழைங்க. எங்களால முடியாது, நாங்க கோயில நம்பிப் பொழைக்கறோம்னு" எங்க அப்பா சொன்னாரு.

"மரியாதையா குடுங்க. இல்லைன்னா சாமான் எல்லாம் எடுத்து வெளியில் விசிறி அடிப்போம்னு" சொல்லி எங்களை மிரட்டினாரு.

"கோயிலுக்குக் கூட்டமே வர்றதில்ல - கூட்டமே இல்ல. நாங்கப் பிழைக்க வச்சிருந்த கடையிலயும் வியாபாரம் இல்ல. இவங்களும் இப்படி மெரட்டறாங்க. இன்னா பண்றது? வாங்க ஊருக்கே போயிடலாம்னு எங்க அப்பாவும் அம்மாவும் எங்க ஊருக்குப்போயிட்டாங்க. நானும் என் சம்சாரம் மட்டும் அந்த வீட்ல இருந்தோம். போஸ்ட் ஆபீஸ்லே டெம்பரரி வேல. அந்தக் காலத்துல அந்தச் சம்பளம் ஒன்னும் குடும்பம் நடத்தப் போதலே.

"அதனால நான் சாமிகிட்டப் போனேன். சாமி பேசாம உக்காந்து இருந்தார். முன்னெல்லாம் சாமி பணம் குடுத்து உதவினாரு. இப்ப சாமி தேவைக்கே கஷ்டம் வந்திடுச்சே. சாமி சொல்றார், "நீ தான் பாக்கறயே

நெலமைய. என்னாலே ஒன்னும் இப்பச் செய்ய முடியலே. முடியாத நிலையில இருக்கறேன்"னார். ரொம்ப கஷ்டங்க. சாமிய நெனெச்சி நான் அழுதேன். குடும்பத்து வறுமையைத் தாங்க முடியல. அதனால நாங்களும் ஊருக்கே போயிட்டோம்.

"சரி. இப்ப எப்படி இருக்குறீங்க? எத்தனைப் பசங்க உங்களுக்கு? சௌகர்யமா இருக்கீங்களா?"

சாமிகிட்ட ராத்திரியும் பகலுமா வேலை செய்துக்கிட்டு எத்தனையோ பேர் இருந்தோம். இந்த கவர்ன்மெண்ட்கிட்ட கோயில் போயிட்ட பிறகு எல்லாரும் போயிட்டோம். ஆனா அப்படிப் போன நாங்க எல்லாருமே "ஓஹோ"ன்னு இல்லன்னாலும் நல்லாதான் இருக்கோம். ஒருத்தர் கூட சோடப் போகல. சாமி எங்களப் பழக்கின பழக்கம் அதுமாதிரி. நல்ல ஒழுக்கம், தெய்வ பக்தி, பொய் சொல்றதில்ல. ஒருத்தர் பொருளுக்கு ஆசப்படறதில்ல. உண்மையா ஒழைக்கறது. இதெல்லாம் சாமிகிட்ட இருந்தவர்களுக்குத் தானாவே வந்திடுச்சி. அதனால நாங்க நல்லாவே இருக்கோம்.

"என் பெண் குழந்தைகளுக்கு நான் கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டேன். என் பையன் பி. காம் படிச்சிருக்கான். நான் ஊர், ஊராப்போயி பொடவை வியாபாரம் பண்றேன். அதிக ஆசையில்ல. குடும்பம் நல்லபடியா நடக்குது."

"வேற எதுனா சொல்றதுக்கு விரும்பறீங்களா?"

"என்னா சொல்றது சார்? சாமி நல்லா இருக்கணும். இந்தக் கோயில் வேல நல்லபடியா முடியணும். அன்னிக்கி நாங்க பட்ட மாதிரியே கோயில்ல இன்னிக்கும் சாமிக்குப் பணக்கஷ்டம் இருக்குது. ஆனா சாமி நல்லா செய்வாரு. அவர்கிட்டே இருக்கற சக்தி மகாசக்தி. தனக்குன்னு எதையும் செய்துக்க மாட்டாரு சாமி."

நாங்க மூச்சுவிட்டு உட்காருகிறோம். இனிமே இந்தக் குறிப்பை சரிபார்த்து எழுதி, டைப் பண்ணி சாமிகிட்டே காட்டிட்டு, திருத்தம்

செய்தால் அதைச் சரி செய்து, மறுபடியும் டைப் பண்ணி இதுக்கு வேண்டிய போட்டோங்க, டிராயிங் எல்லாம் சேத்துச் சரி பண்ணணும்.

டீ சாப்பிட்டுவிட்டு எழுந்திருக்கிறோம். இன்னும் சில முக்கிய செய்திகளைப் பேசிக் கொண்டிருந்துவிட்டு எழுந்தோம். அவர்கள் இரத்தினகிரிக்கும், வேலூர் தாண்டியும் போகணும். நான் அவர்களை பஸ்நிலையம் வரை சென்று வழியனுப்பி விட்டு வருகிறேன். மணி இரவு ஒன்பதரை ஆகிவிட்டது. ஒரே முச்சாக நாலரை மணி நேரம்! நாலரை மணி நேரமும் எனக்குக் குறிப்பெடுக்கும் வேலை. பக்கம் பக்கமாக. அவ்வளவு நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருந்ததால் உடம்பு கொஞ்சம் வலிக்கிறது.

13. பாலமுருகனடிமை வரலாறு.

அருணாசல மகிமை: பரணீதரன் எழுதுகிறார்.

"ஸ்ரீ துரைசாமி சாது சுவாமிகளைப் போளூர் ஸ்ரீவிட்டோபா மடத்தில் இறக்கிவிட்டுவிட்டு, வேலூரில் ஆகாரத்தை முடித்துக்கொண்டு, நண்பர் சேஷாத்திரியும் நானும் ஐந்தாவது மைலில் இருக்கும் இரத்தினகிரிக்கு வந்து சேர்ந்தபோது, மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. பத்தரை மணிக்குத் திரு. மகாதேவனை அங்கு சந்திப்பதாகச் சொல்லி யிருந்தேன். அவசரம் அவசரமாக இரத்தினகிரி மலை ஏறினோம். செங்குத்தாக நூற்றைம்பது படிகள் ஏறவேண்டியிருந்தாலும் சிரமமாக இருக்கவில்லை.

மேலே ஏறிச் சென்றதும் முப்பது வயது மதிக்கத்தக்க சாமியார் ஒருவர் கோவணாண்டியாக உடல் பூராவும் விபூதியைப் பூசிக்கொண்டு எதிரில் வேகமாக நடந்து வந்தார். நாங்கள் சற்று தயங்கி நின்றோம். புது முகங்களைக் கண்டு அவரும் சற்று தயங்கினார். முதலில் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். 'ஓ' என்று ஆர்வம் மிகுந்த சிரிப்புடன் எங்களை வரவேற்றார் அந்த இளம் சாமியார் "மகாதேவன் வந்திருக்கிறாரா" என்று விசாரித்தேன். 'அவர் இன்னும் வரவில்லை என்றும் ஒரு மணிக்கு வருவார்' என்றும் எங்களுக்கு சைகை காட்டி விட்டு எங்களைச் சன்னதிக்கு அழைத்து சென்றார் சாமியார். ஸ்ரீவள்ளி, தெய்வானை சமேத ஸ்ரீ ஆறுமுகப்பெருமானுக்கு வெள்ளிக் கவசங்களுடன் மிக நேர்த்தியான மலர் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. சாமியார் தீபாராதனை காட்டிவிட்டு எங்களுக்கு விபூதி பிரசாதம் அளித்தார்.

பின்னர் பக்தர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்காக வாசற்படியில் வந்து அவர் அமர்ந்தார். அங்கு பத்துப் பதினைந்து பேர் உட்கார்ந்து இருந்தனர். வரிசைப்படி ஒவ்வொருவராக, தங்கள் குறை களையும், கேள்விகளையும் எழுதிச் சாமியார் இடம்கொடுக்கிறார்கள். அவர் அதைப் படித்து உற்று நோக்குகிறார். கௌளி சுத்துவது போல் சற்று உரக்கச் சப்தித்துக் கொண்டே குத்திட்ட பார்வையுடன் மெல்லத் தலையைத் திருப்பி ஆறுமுகனின் கண்களை ஊடுருவிப் பார்க்கிறார். அந்தக் கணமே மின்சாரம் பாய்வதுபோல் முருகனின் அருள் அவர் உள்ளத்தில் பிரகாசிக்க, நம் பிரச்னைகளுக்குப் பரிகாரம் பாய்வதுபோல், முருகனின் அருள் அவர் உள்ளத்தில் பிரகாசிக்க, நம் பிரச்னைகளுக்குப் பரிகாரம் கிடைத்து விடுகிறது. உடனே அந்தக் காகிதத்தில் எழுதி விபூதியையும், வேப்பிலையையும் போட்டு மடித்துக் கொடுத்து விடுகிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கட்டளை பிறக்கிறது.

அந்த இளம் சாமியாரிடம் வருகிறவர்கள் நம்பிக்கையோடு வருவதைக் கண்டேன். அவர் இதுவரை எத்தனையோ பேய்களை ஓட்டியிருக்கிறார்; இளம்பிள்ளை வாதத்தைச் சரி செய்து நடக்க வைத்திருக்கிறார்; ஊமையைப் பேச வைத்திருக்கிறார்; பைத்தியத்தைத் தெளிய வைத்திருக்கிறார். இதெல்லாம் அங்கு வந்தவர்களுடன் பேசியதிலிருந்து தெரிய வந்தது.

இப்படி வருபவர்கள் தங்களுக்கு இஷ்டமான பணத்தைத் தருகிறார்கள். இவ்வாறு முருகன் சன்னிதியில் சேரும் ஒவ்வொரு காசும் அவன் கோயில் திருப்பணிக்கே செலவாகிறது. இரண்டு வருடங்களுக்கு முன் கல்லும், முள்ளும், புதருமாகக் கிடந்த இடம் இன்று சீராகி வருகிறது. தங்கும் அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆஸ்பெஸ்டாஸ் கூரைகள் போடப்பட்டிருக்கின்றன. சுற்றிலும் மதில் சுவர்கள் எழும்பிக்கொண்டிருக் கின்றன.

இது மட்டுமா? வெள்ளிக் கவசங்கள், சர விளக்குகள், பித்தளை, எவர்சில்வர் பாத்திரங்கள், காட்ரேஜ் பீரோக்கள் என்று சொத்துகள் சேர்ந்து கொண்டிருக்கின்றன. "என் முருகன் கட்டத் துணியற்ற ஏழை

முருகனாகத்தான் இருந்தான். இப்போது அவன் சக்தியைக் காட்டத் தொடங்கிவிட்டான். ஆறுபடை வீடுகளிலும் இதே முருகன் தானே வீற்றிருக்கிறான். அவர்களுக்கு இருக்கும் பெருமையும், புகழும் இவனுக்கும் சீக்கிரத்திலேயே வரப்போகின்றன" என்று பெருமிதத்துடன் சிலேட்டில் எழுதிக் காட்டினார் சாமியார்.

பின்னர், ஒருநாள் வீட்டிலிருந்து அலுவலகத்திற்குச் செல்லும் வழியில் தமக்கு திடீரென்று அந்த நிலை ஏற்பட்ட விதத்தையையும், மாறிய நிலையில் தாம் பெற்ற அனுபவங்களையும், எதிர்காலத் திட்டங்களையும் பற்றி இருபது பக்கங்களுக்கு மேலாக அசுர வேகத்தில் எழுதி என்னிடம் தந்தார். அப்போது மகாதேவனும் அவரது நண்பரும் வந்து சேர்ந்தார்கள். சேஷாத்திரியின் கையில் இருந்த கடிகாரத்தைப் பார்க்கச்சொன்னார் சாமியார். மணி சரியாக ஒன்று. ஒரு மணிக்கு வருவார், என்று அவர் சொன்னது பலித்து விட்டது. மகாதேவன் வரும் நேரம் சாமியாருக்கு எப்படி தெரிந்தது என்ற என் ஆச்சரியத்தை என் முக பாவத்திலிருந்து புரிந்து கொண்ட சாமியார், என்னைப் பார்த்து வாய்விட்டுக் கலகலவென்று ஆனந்தமாகச் சிரித்தார்."


இரத்தினகிரி அதிசயம் என்ற தலைப்பில் திரு. பரணீதரன் அவர்கள் 34 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் 26.1.2003 ஆனந்த விகடனில், சுவாமிகளைப் பற்றியும், இரத்தினகிரியைப் பற்றியும் எழுதி இருக்கிறார். அது கீழே இடம்பெற்றுள்ளது.

"இரத்தினகிரி அதிசயம்" பரணீதரன்.

கடந்த 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் நாள். வேலூருக்கும் ஆற்காடுக்கும் இடையேயுள்ள இரத்தினகிரி குன்றில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ முருகப் பெருமானைத் தரிசிப்பதற்காக, அடுத்துள்ள கீழ்மின்னல் கிராமத்தைச் சேர்ந்த 27 வயது இளைஞரான மின்வாரிய ஊழியர் சச்சிதானந்தம் அலுவலகம் செல்லும் வழியில், அவசர அவசரமாகப் படிகளேறிச் சென்றார்.




செதுக்கும் சிற்பிகள் நடுவே சுவாமிகள்.



புதிதாகக் கட்டப்பட்டுள்ள விநாயகர் கோயில்

கட்டுமானப் பணிகள்





ஆனால், அன்று முதல் அவர் பணிக்குச் செல்ல முடியவில்லை. தம் பணிகளைக் கவனிப்பதற்காக முருகன் அவரைத் தடுத்தாட் கொண்டு, அங்கேயே தங்க வைத்துக்கொண்டு விட்டான். பாலமுருகனடிமையாக அவர் இன்றும் அங்கேயேதான் தங்கியிருக்கிறார்.

1969ம் ஆண்டு 'அருணாசல மகிமை'யை எழுதும் நோக்கத்துடன் முதல் பயணம் மேற் கொண்ட நான், இரத்தினகிரியில் நடைபெற்ற அந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டு அங்கு சென்றேன்.

கோவணாண்டியாகக் காட்சி தந்த அந்த இளம்துறவி, மறக்கமுடியாத அந்த நாளன்று நிகழ்ந்தவற்றை ஒரு காகிதத்தில் எழுதித் தந்தார். அதைப் பற்றி அப்போது விகடனில் எழுதி இருந்தேன்.

அன்று நடந்தது இதுதான்.

குன்றேறிச் சென்றவர், அச்சிறுகருவறையில் நின்றிருந்த அர்ச்சகரிடம் கற்பூரம் ஏற்றி தீபாராதனைக் காட்டச் சொன்னார். 'கற்பூரம் இல்லை' என்று கூறியவரிடம் ஒரு ஊதுவத்தியாவது கொளுத்தச் சொன்னார். அதற்கும் வழியில்லை என்று அறிந்ததும், பகுத்தறிவில் ஊறியிருந்த அந்த இளம் ரத்தம் கொதித்துப் பொங்கியது. 'அறுபடை வீடுகளில் கோலோச்சும் குமரன் என்று உன்னைக் கொண்டாடுகிறார்களே, ஒரு கட்டிக் கற்பூரத்துக்குக் கூட உனக்கு கதி இல்லாமல் போய்விட்டதா?' என்று ஆவேசம் வந்தவர் போல் குமுறியிருக்கிறார். அடுத்த கடுஞ்சொல்லுக்காக வாயைத் திறந்தவருக்கு நா எழவில்லை. ஏனோ முருகன் அவர் பேச்சைப் பறித்துக் கொண்டு விட்டான். குதித்தார், அரற்றினார், ஆடினார், ஓடினார். ஆடைகளைக் களைந்தெறிந்தார். கந்தன் தன் இடுப்பில் சுற்றியிருந்த அழுக்கேறிய கந்தலாடையை உருவிக் கோவணமாகக் கட்டிக்கொண்டார். கந்தவேளுக்குக் காலமெல்லாம் அடிமையானார்.

அந்த முதல் சந்திப்புக்குப் பின் ஐந்தாறு வருடங்கள் அவ்வப்போது அவரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருப்பேன். நான் பேசுவேன். அவர் சிலேட்டில் எழுதிக் காட்டுவார்.

பின்னர், எழுத்துப் பணி காரணமாக நான் ஓயாத பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்ததாலும், ஓய்வு பெற்ற பிறகு உடல்நலம் குன்றிய காரணத்தாலும் நான் இரத்தினகிரி செல்ல இயலாமல் போயிற்று. ஆனாலும், அங்கு தொடர்ந்து நடைபெற்று வந்த ஆலய விரிவாக்கப் பணிகள் பற்றி பாலமுருகனடிமை கடிதங்கள் மூலமும் புகைப்படங்கள் மூலமும் நாங்கள் சந்திக்க முடியாததற்கு ஈடுசெய்து கொண்டிருந்தார்.

அண்மையில் அவரிடமிருந்து வந்த கடிதத்தில் 'படிகளேறி வரமுடியாத தங்களைப் போன்ற அன்பர்களுக்காகக் கார்பாதை ஒன்று அமைத்திருக்கிறேன்' என்று எழுதி அந்தப் புகைப்படத்தையும் அனுப்பியிருந்தார். அடுத்த சில நாட்களில் நான் அங்கு புறப்பட்டுச் சென்றேன்.

அலங்கார வரவேற்பு வாயிலுக்குள் நுழைந்ததுமே 'அந்த நாட்களில் நான் கண்ட இடமா இது?' என்று பிரமித்துப் போனேன். பச்சைப்பசேலென்ற சூழலைக் கடந்து, கம்பீரமாக ஓங்கி நின்ற ராஜகோபுரத்தை நெருங்கி, சிற்பக்கலையும், சித்திரவேலைப்பாடுகளும் பின்னிப் பிணைந்து எழில் நடம் புரியும் அரங்கமாக வண்ணக்கூடமாக காட்சி தந்த முன்மண்டபத்தில் கால்பதித்து, கண்ணாடிபோல் வழுக்கிய தரையில் அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்து, சோழர்பாணி கலைத்திறனுக்குக் கட்டியம் கூறும் வண்ணம் புதுவடிவம் பெற்று வரும் கருங்கல் கருவறையைக் கண்டு அதிசயித்து, அழகு தவழும் தங்கத் தேரையும் கண்கவர் கல்தேரையும் அடுத்துள்ள அற்புத கணபதி சந்நிதியையும் பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போனேன்.

அதோ, அதே எளிமைக் கோலத்தில், கனிந்த பார்வையுடன், இயல்பான புன்முறுவலுடன், உண்மையான உள்ளப் பூரிப்புடன் பாலமுருகனடிமை...

அடுத்த நான்கு மணி நேரமும் தன்னருகிலேயே என்னைத் தங்க வைத்து, மீண்டும் ஒவ்வொரு பகுதியாக அழைத்துச் சென்று அத்தனை சிற்பங்களையும் காணச் செய்து, அலங்கார அணிகலன்களையும் மணி மகுடங்களையும் பளடுத்துக்காட்டி, அபிஷேக ஆராதனைகளில் திளைக்கச் செய்தார் அவர்.

'அறுபடை வீடுகளில் கோலோச்சும் முருகன் ஒரு நாள் இங்கும் எல்லா பெருமைகளும் செல்வாக்கும் பெற்றுச் சிரோடும் சிறப்போடும் விளங்கப் போகிறான்' என்று 1969ல் அவர் சிலேட்டில் எழுதிக்காட்டியது என் நெஞ்சில் நிழலாடியபோது நான் சற்று உணர்ச்சிவசப்பட்டேன்.

குன்றிலிருந்து இறங்கி வந்தோம். திருக்குளத்தின் திருப்பணி தொடங்கப் பட்டிருப்பதைக் காட்டி அது விரைவிலேயே நிறைவுபெற்றுவிடும் என்று கூறியவர், மலைவலம் வருவதற்கு சௌகரியமாக அக்குன்றைச் சுற்றிச் சீரான மலைப்பாதை ஒன்று அமைக்கும் எண்ணமும் உள்ளது என்று கோடி காட்டினார்.

சமயப்பற்றுடன் சமுதாயப் பற்றும் மிகுந்த அருளாளர் நிறுவியுள்ள திருமணக்கூடங் களையும் தொடக்க வகுப்பிலிருந்து உயர்நிலை வகுப்புகள் வரை நடைபெறும் பள்ளியையும் அனைத்து வசதி களும் கொண்ட மருத்துவ மனையையும் பக்தர்கள் தங்குவதற்கான குடில்களை யும் காட்டினார். மாதந் தோறும் கண்சிகிச்சை முகாம் நடைபெறுவதையும் அப்போது ஏழை எளியவர் களுக்கு இலவசமாகவோ குறைந்த கட்டணத்திலேயோ காட்டராக்ட் அறுவைசிகிச்சை அளிக்கப்படுவதாக அறிந்தேன்.



சுவாமிகளுடன் திரு. பரணீதரன்

பாலமுருகனடிமை ஒரு 'நடமாடும் சாதனையாளர்.' முப்பத்துநான்கு ஆண்டுகளாக ஆலயத்தைவிட்டு அவர் வேறு எங்குமே சென்றதில்லை. அந்த வளாகத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து, சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எல்லாம் அவர் மேற்பார்வையிலேயே நடைபெற்று வருகின்றன.

வருகிற பிப்ரவரி மாதம் 6ம் தேதி நடைபெறவிருக்கும் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவிலேயே அவர் கவனமெல்லாம் முழுமையாக ஈடுபட்டிருந்ததைக் கண்டேன்.

அந்த விழாவில் கலந்துகொண்டு இரத்தினகிரி பாலமுருகனையும் பாலமுருகனடிமையையும் ஒருங்கே தரிசிப்பவர்கள் பெரும்பேறு பெற்றவர்களாவார்கள்.

14. சுவாமிகள் சொல்கிறார். "இன்ன வரைக்கும் தெரியலே"

நான் கொடுத்த கேள்விகளை எல்லாம் சுவாமி வாங்கிப் படித்தார். ஆழ்ந்த பெருமூச்சு விட்டு அமைதியாக நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"நான் சாமியாராகிவிட்டேன்!"

"நீ எழுதியிருப்பது மிக நன்றாகப் பொருத்தமாக, மனதில் அப்படியே படிவதாக உள்ளது. நான் சாமியாராகி விட்டேன். சாமியாராகி நான் அந்த முருகனோடு எங்காவது காட்டிற்குள் ஓடிவிட்டிருந்தால், மனிதர்களையே பார்க்காமல் தனித்திருந்தால், நான் பிள்ளை, மனைவி, சுற்றம், மற்றவர்கள் என்று யாருமே வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளி விட்டிருப்பேன். நான் அப்படிப் போகலையே. இங்கே, இங்கேயே மனிதர்களோடு தானே இருக்கேன்."

"நீங்கள் கேட்கும் இதே கேள்விகளை வாலாஜாவில் இருக்கும் ஒருவர் கேட்டார். நான் இளமைக்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் அவ்வளவு ஆசையும், பற்றும் உடையவனாக இருந்தேன். அவர் கேட்டார், "இளம் வயதில் மனைவியோடு இருந்து, வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டு இருந்து, இப்பொழுது எல்லாவற்றையும் விட்டுவிட்டு இங்கே தனிமையாக உன்னால் எப்படி இருக்க

முடியுது" என்றார். "அங்கே ஒருநாள் ராத்திரி ரோட்டின் பக்கத்திலே அப்படிக் கேட்டார்.

"ஊம். நீ கேட்பதும் சரிதான். நான் ஏன் என் சுற்றம், பிள்ளைகள் மீது பாசத்தோடு இருக்கிறேன். அவர்களுக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்கிறேன், என்கிறாய்.

"சந்நியாசி என்பவன் நம் பழைய சம்பிரதாயங்களின்படி பிள்ளை, உற்றார், மனைவி முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்க்கக் கூடாதே. இந்த சந்நியாசம் அது இல்லையே என்கிறாய்.

"நீ சொல்வது சரி. நான் இந்த முருகனைப் பிடித்துக்கொண்ட அந்த நாளில் இங்கே இல்லாமல் முழுக்க முழுக்க ஒரு காட்டிற்கு, மனித சஞ்சாரமே இல்லாத குகைக்கு ஓடிப் போய், அங்கேயே என்னைப் புதைச்சிக்கிட்டிருக்கலாம்; அப்ப நீ சொல்கிற எல்லாவற்றையும், எல்லா மனிதர்களையும் துறந்து ஒதுக்கி, தூக்கி எறிந்துவிட்டு இருக்க முடியும்.



"ஆனா நான் அப்படிப் போகலே. ஏன் போகலேன்னு கேக்குறியா? போகமுடியல. போகல. எனக்கே தெரியல. இன்னவரைக்கும் தெரியலே."

இது வைகாசி மாதம். இன்று வைகாசிப் பௌர்ணமி - புத்த பூர்ணிமா நாள். புத்தர் பிறந்தது; ஞானம் பெற்றது; சமாதி அல்லது நிர்வாணம் அடைந்தது ஆகிய இந்த மூன்று பெரிய நிலைகளும் இந்த வைகாசி மாதப் பௌர்ணமியில்தான் அவருக்கு ஏற்பட்டன; நடந்தன. எனக்கு இது மிக மிகப் பிடித்தமான நாள்.

கி.மு. 563 ஆம் ஆண்டு, இன்றைக்கு 2563 ஆண்டுகளுக்கு முன் இமயமலைச் சாரலில் கபிலவஸ்து நகரை அடுத்த உலும்பினி என்னும் சோலைவனத்தில் கௌதமபுத்தர் பிறந்தார்.

அவர் பிறந்த இடத்தையும், அவரது அரண்மனை இருந்த கபிலவஸ்து பகுதிகளையும், நேபாளத்தின் தலைநகரான உயர்ந்த இமயமலைச் சிகரங்களை அடுத்த பள்ளத்தாக்கில் இருக்கும் காட்மாண்டுவிற்கும், அங்கு உள்ள புத்தர் கோயில்களுக்கும் சென்று புத்தரைத் தரிசித்திருக்கிறேன். உலும்பினியின் இப்போதைய பெயர் கும்மிந்தேவி. உலும்பினி வனம் என்னும் மிகப்பெரிய பூங்கா கிராமமாக உள்ளது. மிகவும் பரப்பளவு உள்ளதாகவும் இருக்கிறது. அது சித்தார்த் நகர எல்லைக்குள் உள்ளது. அந்த நகர எல்லை நீங்கும் வரை எனக்கு ஏற்பட்ட புத்தரின் காட்சி - என் மனத்தில் எத்தனையோ வகையான புத்தர் சிலைகளைக் காணும்போதெல்லாம், கமண்டலத்தைக் கையில் ஏந்தியபடி நின்ற நிலையில், நான் பஸ்சில் பயணித்து வந்த பாதை முழுதும் நான் கண்ட அவரது நெடிய பரந்த முழுக்க முழுக்க (TYPICAL) நேபாளி முகமே என் கண் முன் வந்து நிற்கிறது.

அன்று இரவு நிலவு தன் ஒளியைப் பால்போல் இரத்தினகிரி மலையின் மீது கொட்டிக்கொண்டிருந்தது. நான் சுவாமிகளிடம் வந்தபோது - சாமியிடம் ஓர் ஏழை மாணவன் அவனுக்கு என்ஜினியரிங் கல்லூரியில் இடம் வாங்கித்தர வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனது மார்க் ஒன்றும் மிக அதிகமில்லை. அவனுக்கு ஒரு என்ஜினியரிங் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதற்கான சூழல்களைப் பற்றி எல்லாம் நினைத்து, அந்த மாணவனுக்கு அறிவுறுத்தினார்.

அவன் போனதும் மலையில் யாரும் இல்லை. இருந்த சில பணியாளர்களும் தொலைவிலேயே இருந்தனர். நான் என் கையில் இருந்த கேள்விகள் எழுதிய பேப்பரைச் சாமிகளிடம் கொடுத்தேன். அதில் எழுதியிருந்த கேள்விகள் அப்போது சில நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை ஒட்டியது.

அந்த நிகழ்ச்சி சுவாமிகளின் மகன் திருமணம். மிக எளிமையாக நடந்தது. ஆனால் மிகமிகச் சிறப்பாக நடந்தது. சுவாமிகள், திருமணத்திற்கு

வருபவர்களையெல்லாம் தெய்வீக அன்போடு வரவேற்றது; அவர் அதில் எடுத்துக்கொண்ட ஆழ்ந்த ஈடுபாடுகள்; திருமணம் முடிந்ததும் எங்கள் எல்லோரையும் அழைத்து அரிசி இட்டுத் தன் மகனை அன்போடு வாழ்த்தச்சொன்னது, இவை எல்லாம் இன்னும் என் கண்களில் நிற்கின்றன.

சிவபெருமானின் திருமணத்திற்கு நந்திதேவன் என்னென்ன செய்தார்; எவ்வளவு உற்சாகத்தோடு செய்தார் என்று நான் புராணத்தில் படித்திருந்தது, அப்போது என் நினைவிற்கு வந்தது.

ஆனால் இவையெல்லாம் திருமணத்திற்கு வந்திருந்தவர்களிடையே சில விமர்சனத்தை உருவாக்கின. என் மனத்தில் இது போன்ற விமர்சனம் இல்லை என்றாலும் சந்நியாச ஆசிரமம் பற்றிய பொதுவான நிலையோடு சுவாமிகளின் செயல்பாடு மாறானதாக அமைந்தது போல் தோன்றியது. அதில் ஒன்றும் மாறுபாடு இல்லாமலும் இருந்தது. காரணம்

விவேகானந்தரின் வாழ்வு.

சந்நியாசம் பெற்ற பிறகும் விவேகானந்தர், அவருடைய குடும்பத்தின் வழக்கைக் கோர்ட்டில் நடத்தியதும், தாய், தங்கை, தம்பிகளின் குடும்ப நலன்களைச், சோற்று நலன்களை, வாழ்க்கை நலன்களைப் பார்த்துக் கொண்டதும்தாம் அவை.

சுவாமிகளின் நினைப்பு இது பற்றி எப்படி இருக்கிறது என்று அறியவும், சின்னஞ்சிறு சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளவும் அது பற்றிய கேள்விகள் எழுதி சுவாமிகளிடம் கொடுத்தேன். அதற்கான பதில்தான் சுவாமிகள் மேலே சொல்லத் துவங்கியிருப்பது.

நான் நிச்சயமாக ஆயிரம் சந்நியாசிகளோடு, சிலரோடு மிக ஆழமாகவும் சிலரோடு மேலோட்டமாகவும் கலந்து பழகி இருக்கிறேன். அதில் பெரும்பாலானவர்களிடம் இத்தகைய கேள்விகளைக் கேட்டிருந்தால் அவர்களின் ரியாக்ஷன் - எதிர்கொள்ளும் நிலை எவ்வளவு எதிர்ப்புணர்வாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

சந்நியாசிகள் தாங்கள் மிகவும் மேலானவர்கள் என்றும், உயர்வானவர்கள் என்றும், குடும்பஸ்தர்கள் தங்களை விடத் தாழ்ந்தவர்கள்

என்றும் அவர்கள் மனத்தில் அவர்கள் அறியாமலே ஓர் எண்ணம்; ஒரு கர்வம் படிந்தும், படர்ந்தும், ஆழ்ந்தும் இருக்கிறது.

ஓர் இளம் சந்நியாசியிடம் நான் ஒருமுறை கேட்டேன். அவர் சந்நியாசம் வாங்கி மிகச்சில ஆண்டுகள் தாம் ஆகியிருந்தன. நான் சேவை செய்த சந்நியாச இயக்கத்தைச் சேர்ந்த அவர், தமிழ் சரளமாகப் பேசியதாலும், அந்த அமைப்பில் உள்ளவர்களில் எழுபத்தைந்து விழுக்காட்டினருக்கு மேல் தமிழ் பேசமாட்டார்கள் என்பதாலும், "உங்கள் ஊர் என்ன" என்றேன். அவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் அல்ல. உடனே அந்த இளம் சந்நியாசிக்குக் கோபம் வந்துவிட்டது.

சந்நியாசி மூலமும், நதிமூலமும் பார்க்கக் கூடாது; கேட்கக் கூடாது என்கிற மூடத்தனமான வார்த்தைகளின் முற்றிய போக்கு இது.

நான் செய்து வந்த சைக்கோ அனாலிசிஸ் - மனத்தின் ஆய்வுநிலை ஆராய்ச்சியில், இவர்களின் இந்தச் செயல்பாடுகளும், பேச்சுக்களும் அதில் சொல்லப்படும் கருத்துக்கு மிகச் சரியான (EGO) - ஈகோ - இறுமாப்பு என்பதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது.


ஈகோ இருப்பவன் எந்த காலத்திற்கும் மனிதனாகவே கூட இருக்க முடியாது.

இரத்தினகிரி சாமிகளிடம் நான் கேட்டது போன்ற கேள்விகளை அவர்களிடம் கேட்டிருந்தால் அவ்வளவுதான்! ஆனால் சுவாமிகளோ மிகவும் அமைதியாகவும், பொறுமையாகவும், ஆழமாகவும், மிக நீண்டநேரமும் இதற்கான பதில்களைச் சொல்லிக்கொண்டே வந்தார்.

இதனாலும், இது போன்ற மிகப்பல பண்புகளாலும் அவர் என் மனத்தில் இந்த முப்பது ஆண்டுகளாக, மேலே மேலே; மேல் நோக்கிச் சென்றுகொண்டே இருக்கிறார்.

"பேய் ஓட்ட ஆரம்பிச்சேன்"

"நீங்க இந்தக் கோயிலுக்கு வந்தீங்க. திடீர்னு இந்த மாற்றம் நேரும்போது என்ன ஏற்பட்டது? இங்கே, இந்தக் கோயில்லயே



உக்காந்திருக்கணும்னு எப்பத் தோணிச்சி? எழுந்து எங்காவது போகலான்னு கூடத் தோணலையா?

"தோணலே! கோயிலுக்குள்ளே நுழைஞ்சேன். இந்த மலைமேலே கற்பூரத்துக்கே கதி இல்லாம இவ்வளவு ஏழையா இந்த முருகன் இருக்கறதப் பாத்ததும், அவனிடம் நீயும் முருகன்தான், ஆறுபடை வீடுகளில் இருப்பவனும் முருகன்தான். அங்கே என்ன செழிப்பு, செல்வம், அலங்காரம், அமர்க்களம், கூட்டம் எல்லாம்! இங்கே என்ன இப்படி ஒரு தரித்திரம்! 'உனக்குச் சக்தியில்லையே."

"அப்படி நினைப்பா, பேச்சா?"

"ஏதோ ஒரு சக்தி! ஆவேசம்! என்னான்னு தெரியல. கட்டியிருந்த வேட்டிய அவிழ்த்துப் போட்டுட்டேன்.

"வாட்சைக் கழட்டி விசிறி அடிச்சேன்."

"எங்கே...?"

"அவன் - முருகன் மேலதான்."

"முருகன் மீது இருந்த அழுக்குத் துண்டை எடுத்துக் கட்டிக்கிட்டேன்."

"எப்படிக் கட்டிக்கிட்டீங்க?"

"இதே மாதிரிதான், இப்ப கட்டிட்டு இருக்கற மாதிரிதான் அன்னைக்குக் கட்டிக்கிட்டேன். கட்டினதும் எனக்குப் பழைய நினைப்பு ஒன்னும் இல்ல.

விபூதியை எடுத்துப் பூசிக்கிட்டேன். ஒரே ஒரு எண்ணம்தான் மனத்தை அப்படியே அழுத்திப் பிடிச்சிக்கிட்டுது. இந்தக் கோயிலை ஆறுபடை வீடு கோயில்கள் மாதிரி ஆக்கணும், ஆறுபடைவீடு கோயில்கள் மாதிரி

ஆக்கணும்' இதே நினைப்புத்தான். இங்கியே கோயிலுக்கு வெளியிலேயே உக்காந்துட்டேன். எங்கேயும் போறது இல்ல."

"கோயிலில் உட்கார்ந்த அன்னிக்கும், அந்த இரவும், அடுத்தப் பத்து நாட்களில் உங்க மனநிலை எப்படி இருந்தது. என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்தன?"

"உட்கார்ந்தேன். வெளியிலே உட்காந்திருப்பேன். அப்பப் பேய் ஓட்ட ஆரம்பிச்சேன்" சுவாமி சிரிக்கிறார்.

"பேய் இருக்கிறதா? அது ஒரு மனநிலையா?"

"நான் உட்கார்ந்திருக்கும்போது என்னைப் பார்க்க நிறைய கூட்டம் வந்தது."

"வந்தவர்களுக்கு நீங்கள் விபூதி தந்தீர்களா? முதலில் இந்தத் திருநீறு தருவது எப்போது துவங்கியது?"

"அன்னைக்கே ஆரம்பமாயிட்டது".

''இந்த ஆவிகள், பலவீனமான மனம் கொண்டவர்களிடம் தங்கிவிடுகிறது. அப்படிப்பட்டவர்கள் என் எதிரில் வருகிறார்கள் என்றால் என் உடம்பில் திடீரென்று சிலிர்ப்பு ஏற்படும். அப்படியே சிலிர்த்துக்கொண்டுவிடும். உடனே நான் தெரிந்துக்கொள்வேன். ஏதோ ஆவி வருதுன்னு. **உடனே விபூதிய எடுத்து நான் உடம்பு முழுவதும் தடவிக்கொள்வேன். உள்ளுக்குள் சக்தி பொங்கும்.**

"அந்த ஆவி தன்னைப் பற்றிச் சொல்லும். இந்த நேரத்தில் என் புருஷர் என்னைக் கொடுமை பண்ணினதால இந்த இடத்துல, கிணத்துல விழுந்து செத்தேன். நான் இவன் சம்சாரம். நான் இந்த துக்கம் காரணமாய் இந்த இடத்துல, இன்ன நாள்ல ரயில்ல தலையைக் குடுத்தேன். என்பேரு இது. நான் இவ இவங்களுக்கு இந்தச் சொந்தமுன்னு சொல்லும்.

"நான் இங்கே ஆக்சிடெண்ட்லே செத்துப்போனேன்னு சொல்லும். இதை எல்லாம் விசாரிச்சிப் பார்த்தால் அப்படியே உண்மையாய் இருக்கும். சிலதுகள் பொய் சொல்லும். உண்மையானவை அமைதியில்லாம தவிக்கும்."

“எப்படி இந்தப் பேய்களை ஓட்டுவீங்க?”

“விபூதி கொண்டு. எலுமிச்சம்பழம் வச்சிருக்கிறேன்.”

“அதில் மந்திரம் சொல்வீர்களா?”

“எலுமிச்சம்பழத்தில் மிகுந்த சக்தி இருக்குது. என்னைப் பொறுத்தவரையில் அதில் மிகுந்த நம்பிக்கை.

சுவாமி இதைச் சொன்னது பல வருடங்களுக்கு முன்பு. ஆனா மிக அண்மையிலே 2002 ஆம் ஆண்டு மே மாதம் கடைசியிலே இந்த நூலை டைப் செய்து நான் சுவாமிகளிடம் கொடுக்க, இருவருமாகப் பார்த்துத் திருத்தும்போது இதே பகுதி வந்தது. “இப்பவும் எலுமிச்சம் பழம் வச்சிருக்கிங்களா சாமி” என்று கேட்கிறேன்.

“ஓ! வச்சிருக்கனே!”

“அதோ பார் என்று ஆசிரமத்தில் நாங்கள் இருவரும் இருந்த புத்தகம் போட்டோக்கள் கேசட்டுகளுக்கு அப்பால் கையைக்காட்டி, “எப்பவும் அது என்னோடு இருக்கு” என்று சற்றுத் தொலைவில் இருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார். “அது என்ன ஒரு கவசமா?”

“ஆமாம் கவசம் மாதிரி! மற்றவங்களுக்கு வந்த கஷ்டங்களைப் போக்க எலுமிச்சம் பழத்தை முருகன் கிட்ட வச்சிக் குடுப்பேன்” என்றார். அந்த ஆரம்பகாலம் பற்றிச் சுவாமிகள் சற்று ஆழ்ந்த வேகத்தோடு நினைவு கூர்ந்தார்.

“அப்ப இந்த எலுமிச்சம்பழத்தை உடச்சி சாறை அப்படியே உறிஞ்சிக் குடிச்சிடுவேன்.”

“இப்ப?”

“இப்பகூட அப்படிக் குடிச்சிடுவேன். பல்லே வெளக்க மாட்டேன்.இந்த எலுமிச்சம் சாறை உறிஞ்சிப் பல்லுங்களை ஒரு தீட்டு தீட்டிக்குவேன்.”

கண்களை விழித்து ஆழ்ந்து உற்று நோக்கிச் சிரித்தபடி சொல்கிறார்.

“குளிச்சதே கெடயாது. ஒரு ஆறு வருஷம்.”



''குளிக்கலே. தண்ணி எடுத்து ஒடம்பைக் கழுவிப்பீங்க இல்லியா?"

"ஊ..ம் அதுகூடக் கெடயாது. சாப்பிட்டா கை கழுவறது கூடக் கெடயாது. அப்படியே உடம்பிலே தொடச்சிக்குவேன். கண்ட இடத்தில மண்ணுலே, கல்லு, பாறைங்க மேல படுத்துக்குவேன். கூட இருக்கறவங்க தான். கோணிமேலேயாவது படுங்கன்னு கோணி கொண்டாந்து போடுவாங்க.

"இப்ப தோள்மேலே இந்தச் சின்ன டவலைப் போட்டுக்கிட்டு இருக்கேன். அப்ப அதுகூடக் கெடயாது.

"இந்தக் கொலை கேசிலே வேலூர் கோர்ட்டுக்குச் சாட்சி சொல்லப் போனேன் இல்ல? அப்ப வியர்வையைத் தொடச்சிக்க இந்தச் சின்ன டவலை எடுத்துத் தோள்மேலே போட்டுட்டுப் போனேன். அது அப்படியே நின்னுப் போச்சி."

சுவாமிகளிடம் குழந்தைச் சிரிப்பு என்கிறார்களே எந்த விதத் தகிடுத்தத்தமும் சேராத, உள் அர்த்தமும் இல்லாத, அதைப் பார்த்தாலே, கேட்டாலே மனசெல்லாம் மகிழ்ச்சியிலே பொங்கற அந்தச் சிரிப்பு. அது பொங்குகிறது.


பகலெல்லாம் இந்தக் கோயில் கட்ற இடைவிடாத வேலை; பக்தர்கள் சந்திப்பு; ஸ்கூல், ஆஸ்பத்திரி; கஷ்டங்களுக்குத் தேடி வந்து சீட்டு எழுதிக் கேக்கறவங்க. கோயிலுக்கு வருகிற வி.ஐ.பி களைப் பார்த்து அவங்க நீண்ட நேரம் இருக்கிற வரைக்கும் அவர்களோடு பேசி, அவர்கள் தேவை. கவலைகளைப் போக்கி அனுப்பற வேலை.

இதனாலே எல்லாம் இந்தப் புத்தகவேலைக்கு நாங்கள் சேர்ந்து பகல்லே உக்கார முடியாம, ராத்திரியிலே, பன்னிரண்டு வரைக்கும், ஒன்றரை மணி வரைக்கும், வேலை செய்யற இந்த நேரத்திலும், இந்த

அறுபத்தி ஒன்றாம் வயசிலும் சளைக்காம களைக்காம துல்லியமாக வேலை செய்யும் சாமியைப் பார்க்கிறேன்.

இப்ப இப்படி இருக்கிற இவர் அந்த ஆரம்ப நாட்களிலே எப்படி இருந்திருப்பார்? இந்தச் சக்தி எப்படி இரவும் பகலும் எப்படிப் பொங்கியபடி இருந்திருக்கும்? அவரை ஆட்டிப் படைத்திருக்கும்.

என் நினப்பைப் புரிந்து கொண்டவர்போல சுவாமி சொல்கிறார் "ஒரே வேகம்; வேகம்; வேகம்; காரியம்; காரியம்." அப்போது அங்கே குவிந்து கிடந்த போட்டோக்களில் மேலாக இருந்த ஒரு போட்டோவை எடுக்கிறார்.



"இதோ பாரு. இந்தக் கோயில் மாடல் அப்போ செய்து வச்சது. இப்ப ஏறக்குறைய முப்பத்து நாலு வருஷத்துக்கு அப்பாலே ஏறக்குறைய இதே மாடல்ல தான் இப்ப கோயில் கட்டி முடிச்சிருக்கேன்."

அந்தப்படத்தை எடுத்துச் சுவாமி சொல்லிக் கொண்டே போகிறார். நான்: "சுவாமி! அதெல்லாம் அந்தப் போட்டோவில், பின்னாலே எழுதுங்க சாமி என்கிறேன்." சாமி எழுதுகிறார்.

"6 மாத காலத்திற்குள்

"1968 - 69ல் இக்கோயில் எப்படி அமைக்கப்பட வேண்டும் என்று எனது உள்ளத்தில் எழுந்த நிலை வரைப்படமாய், ஆணை மாடலாகச் சிமைக்களி மண்ணில் (Plaster of paris) செய்தேன்.

"காற்றோட்டம் அமைந்த நிலையில் அன்றே திட்டமிட்டபடி 30 ஆண்டுக்குப் பின்பு முருகன் அருளால் பல்வேறு சோதனை, மனத்தொய்வு ஏற்பட்டும் இப்பணி, கோயில் முடிக்க முடியுமா என்ற, மன ஆதங்கம் ஏற்பட்டும் கூட, அவன் திருவருள் கருணையால் இன்று கட்டி முடித்திட வழி வகுத்தான். **சரவணபவனின் அருட் கடாட்சத்தால்.**

சரவணபவன் என்று சாமி எழுதிவிட்டுக் கடகடவென்று மகிழ்ச்சி யோடு சிரித்தார். "புரிந்து கொள்பவர்கள். புரிந்து கொள்ளட்டும்" என்றார்.

இந்தக் கோயில் மாடலில் அமைக்கப்பட்டுள்ள காற்றுச் சாளரங்கள் இப்போது கட்டப்பட்டுள்ள கோயிலில் நீக்கப்பட்டுள்ளது. சுவாமி அதற்கான காரணங்களை விளக்கினார்.

இப்போது பழையகால நிகழ்ச்சிக்குச் செல்கிறோம்.

"அதைச் சுற்றி உடைத்ததும் ஒரு தெளிவு வந்திடும். ஆவி "எனக்குச் சாந்தி வேண்டும். எத்தனை நாள் அலையறது" என்று கேட்கும்; அழும். பிறகு விட்டுட்டுப் போய்விடும். இந்தப் பேய் ஓட்டுவதுதான் இப்படி மக்களுடன் கலந்து பழகி அவர்களுடன் ஒன்றிப்போகும் நிலையை ஏற்படுத்துச்சு. இந்த நிலையில்தான் என் பணி ஆரம்பித்தது. நான் இங்கு வந்த காலத்திலிருந்து எப்போதும் கூட்டம், கூட்டம்; ஜனங்க, ஜனங்கதான்."

என்னைவிட மிகப் பெரியதுறவி.

சுவாமி நான் மறுபடியும் கொடுத்த கேள்விகள் எழுதிய பேப்பர்களை வாங்கி வைத்துக் கொண்டு தொடர்ந்து சொல்கிறார்:

"நான் துறவி! சாமி என்கிறார்கள். ஆனால் என்னைவிடப் பெரிய துறவி என் மனைவி. நான் அப்படித்தான் சொல்வேன். இது உறுதி. ஆயிரம் மடங்கு துறவி. நான் அந்தக் குடும்பத்தை விட்டுட்டேன்.

அன்றைக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு வரும்வரை அவ்வளவு அன்பாக, நெருக்கமாகக் குடும்பத்தோடு இருந்தேன்.

"இந்தக் கோயிலுக்கு வந்து இந்த நிலை வந்ததுமே அப்படியே விட்டுட்டேன். என்னைச் சுற்றிக் கூட்டம்; எனக்குச் சேவை செய்ய ஆட்கள். இப்படியே இருந்தேன். ஆனால் அவருக்கு யாரும் இல்லே. யார் இருந்து என்ன? இருக்க வேண்டியவன் வந்துவிட்டேன்.

"நான் வரும்போது பெரிய பெண்ணுக்கு நாலரை வயது. பையனுக்கு இரண்டரை வயது. கடைசி மகள் பதினோரு மாதக் குழந்தை. இந்த மூன்று குழந்தைகளையும் வைத்துக்கொண்டு அவர்களின் எதிர்காலம், வளர்ச்சி இதை மட்டுமே நினைச்சி, கடவுளே! என் குழந்தைகளை நன்றாக வைக்க வேண்டும்" என்று எண்ணிக்கொண்டு, "இவர் எங்காவது ஓடிப்போய் விடுவாரா? இப்போதாவது தூரத்திலிருந்தாவது பார்க்கிறோம். அதுவும் இல்லாமல் போய்விடுமோ? முருகா! அவர் நன்றாக இருக்கவேண்டும்." இந்த நினைப்பு தவிர, வேற நினைப்பு அவருக்கில்லை. எனக்கோ ஆயிரம் நினைப்பு. இதில் யார் சிறந்த துறவி? தவசி?" உணர்ச்சி மிகுதியுடன் கூறுகிறார்.

"இங்கே அவர் வருவார்; குழந்தைகளோடு வருவார். குழந்தைகளில் சிறியது பக்கத்தில் அமர்ந்து பேசும். சாப்பிடச் சொல்வேன். சிறிய குழந்தை வரும். மற்ற குழந்தைகள் அதுபோல் வராது; தொலைவிலேயே நிற்பார்கள். அவர்கள் புரிந்து கொண்டார்கள். இவர் நமக்கு மட்டுமல்ல. நிறைய பேருக்குச் சொந்தமானவர்ன்னு. எட்ட இருந்தே பார்த்துட்டுப் பேசிட்டுப் போவாங்க. அவரும் தொலைவிலிருந்தே பார்த்துவிட்டுப் போவார்.

"நான் என் குடும்பத்திற்கு ஒன்றும் செய்யலைன்னு சொல்லமாட்டேன். படிக்க வைச்சிருக்கேன். சின்ன சின்ன உதவிகள் சாதாரண வடிவில் செய்திருக்கேன். என்னிடம் வருபவர் எல்லோருக்கும் படிப்பிற்கு - வைத்தியத்திற்கு என்று எவ்வளவோ உதவிகள் செய்கிறேன். அப்படி இந்தக் குழந்தைகளுக்கும் செய்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. நான் இங்கே

வருவதற்கு முன் பத்து ஏக்கர் நிலம் எங்களுக்கு இருந்தது. நாங்கள் நாலுபேர் அண்ணன், தம்பிகள். இன்னும் எங்களுக்கு அதே நிலம்தான் இருக்கு," என்றார்.

சில நாட்களுக்கு முன் நான் அவர் குடும்பத்துடன் பேசிக் கொண்டிருந்தபோது கேட்ட செய்தி நினைவிற்கு வந்தது. சுவாமிகளின் மூத்த சகோதரர் மிகுந்த வருத்தத்தோடு பேசினார். "ரொம்ப கஷ்டப்பட்டோம் சார்! எங்க பேர்ல இல்லாததும் பொல்லாததும் எல்லாம் சொன்னாங்க; எழுதினாங்க. அப்ப ஆரம்ப காலத்திலே இவர் எங்கியும் சாப்பிடமாட்டார். அதனால ஒரே ஒரு வேளைக்கு மட்டும் எங்க வீட்ல இருந்த எங்க அத்த சாப்பாடு குடுத்து அனுப்புவாங்க. அதுக்கு அந்த டிபன் பாக்ஸ்ல பணம் வச்சி அனுப்பறார்னு எங்க காதுபட எதிர்லயே பேசனாங்க. பேப்பர்ல எழுதினாங்க.

"தான் கோடீஸ்வரனாவரதுக்குத் தம்பியக் கோவணம் கட்டிக் கோயில்ல உக்கார வச்சிட்டான்னு" சொன்னாங்க. நாங்க ரொம்ப மனக் கஷ்டப்பட்டோம் சார்" என்றார். மேலும் சொன்னார்:

"சார், கடந்த நாலு, அஞ்சி வருஷம் ரொம்பக்கஷ்டம். சொல்ல முடியாத கஷ்டப் பட்டுட்டேன் சார். வேலூரில் டி.வி.எஸ் ஏஜென்சி நடத்தி, சாமானெல்லாம் திருட்டுப் போய் ஐயாயிரம் ரூபாய்க்கு நஷ்டம். அதைக் கட்டுவதற்கு எங்களுக்குப் பெரும் பாடாகிவிட்டது. அதோடு குடும்பத்தில் மற்றொரு தம்பி அலுமினியப் பேக்டரி திறந்து, பாங்க்கில் லட்ச ரூபாய் கடன் வாங்கி, அந்தக் கடனுக்குக் குடும்பச் சொத்தான பத்து ஏக்கர் நிலத்த ஈடுகட்டி, நஷ்டம். பாக்டரியும் மூடியாச்சி. வேலையும் செய்ய முடியல. யாருக்காவது விற்கப் பார்க்கிறோம். பாங்க்லே கடன் நிக்குது. கேக்கறாங்க. கட்ட முடியல. அது பெரிய கஷ்டம் சார்."

பல நாட்களுக்குப் பின்பு ஓர் இரவு! பட்டுக்கோட்டையிலிருந்து பக்தர் இருவர் வந்து சுவாமிகளோடு பேசியபோது அவர்கள் செய்யும் தொழில் அலுமினியப் பாத்திரம் என்று கூறியதும், இந்தக் குடும்பத்திலும் துவங்கப்பட்டு, தொடர்ந்து செய்ய முடியாமல் நிறுத்தி, பாங்க் கடனில்

அவதிப்பட்டுக்கொண்டிருப்பதை மிகுந்த வருத்தத்தோடு சாமி அவர்களிடம் கூறி, அதை விற்க ஏற்பாடு செய்ய முடியுமா? அவர்களுக்கு உதவி செய்ய முடியுமா? ன்னு கேட்டது நினைவிற்கு வந்தது.

சிப்காட் பகுதி கிராமத்தார் அப்போது ஒரு கூட்டமாய் வந்தார்கள். அவர்கள் மாரியம்மன் கோயில் கட்டப்போவதாகவும் அதற்கு ஏதாவது நன்கொடை வேண்டுமென்றும் கேட்டனர். அவர் ஆர்வத்தோடு அது பற்றி விசாரித்துக், கோயில் அமைப்பு, கட்டிட மதிப்பீடு என்றெல்லாம் கேட்டுத், தானே அதற்கு ஆலோசனை சொல்லி, இறுதியில் அம்மன் கற்சிலை ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகும். அதைத் தானே செய்து தந்து விடுவதாகவும் கோயில் கட்டி முடிக்கும்படியும் உற்சாகமாகச் சொன்னார். அவர்கள் அங்கிருந்து சென்றதும், நான் கொடுத்த கேள்விக் கடிதங்களைப் பார்த்தபடி மேலும் சொன்னார்.

தமிழ் நாட்லே ஒரு புண்ணியவான்.

“இந்தத் தமிழ்நாட்டில் ஒரு புண்ணியவான் - பரம்பரைச் செல்வந்தர். அவருக்கு ஒரு பல்கலைக்கழகம் இருக்குது. இங்கே கோயிலுக்கு ஒருமுறை வந்தார். வந்தபோது கோயிலுக்கு நன்கொடை கேட்டேன். அவர் சொன்னார். ‘சாமி! இந்த நாட்டிலே இருக்கிற ஜனங்களெல்லாம் கோயிலுக்கு ஆதாரமானவங்களைக் கவனிக்க மாட்டாங்க. கோயிலுக்குக், கும்பாபிஷேகத்துக்கு, மதில் கட்ட, கொடிக்கம்பம் கட்ட, சிலை வைக்கணும்னா பணம் வாரித் தருவாங்க. அதுக்கெல்லாம் அடிப்படை காரணமா நீங்க இருக்கறீங்க. இவரும் மனிதர்தானே! அவருக்கும் சொந்தத் தேவைகள் இருக்குமே; அவரைச் சார்ந்த குடும்பம் இருக்குதே; குழந்தைகள் இருக்குதே; அதை கவனிக்க வேண்டாமா? அதுங்களுக்கு நல்லது செய்ய வேண்டாமா? என்ற எண்ணம் இருக்கணும். ஆனா அவங்களுக்கு அது கிடையாது. அப்படி நடப்பது தெரிஞ்சா பெரிய குழப்பம் பண்ணுவாங்க. அதனால இந்த முருகனுக்கோ, கோயிலுக்கோ நான் ஒன்னும் தரமாட்டேன். அந்த முருகன் அடிமையான உங்கள் குடும்பத்துக்கு, உங்க அண்ணன், தம்பி பசங்களுக்கு ஏதாவது வேணும்னா எனக்குச் சொல்லுங்க. நான் செய்றேன்னு சொல்லிட்டுப் போனார்.

"இருந்தாலும் நான் அவரையும் விடலே. முருகனுக்காக அவரிடமும் வாங்கி கொண்டு தான் வருகிறேன் இன்று வரை." குழந்தை போல ஆனந்தமாகச் சிரிக்கிறார்.

"என் சின்னப்பொண்ணு கல்யாணம். காதுல, மூக்குல கூட ஒன்னும் இல்ல. பெண்களை அதிகமா படிக்க வைக்கலே. **அப்பனே இல்ல; சாமியாராயிட்டான், அதுங்கள எங்க படிக்க வைக்கறது?** முதல் பெண்ணை மனைவி தம்பிக்குக் கொடுத்தேன். அவருக்கு ஒரு ஆதரவு - பிறந்த வீட்டு ஆதரவு. அவர்கள் கொஞ்சம் வசதியானவர்கள். நம்மை ஒன்னும் தொந்தரவு படுத்தலே. அடுத்த பொண்ணை அக்கா மகனுக்குக் கொடுத்தேன். எளிமையான குடும்பம்; அவனும் வேலை செய்யறான். அதனால நமக்குத் தொந்தரவு இல்லே.

மகனுக்கும் அவன் அம்மான் மகளையே கட்டிவச்சேன். இதில் சிக்கல் வராமல் அவரவர்கள் உழைப்பை நம்பி எளிமையாக அவர்கள் வாழ்கிறார்கள். பெரிய ஆச இல்ல.

"நான் மனைவி மீது மிகவும் ஆசை வைத்திருந்தேன். சராசரி மனிதனைக் காட்டிலும் மிக மிக அதிகமாக. நானே எதிர்பாக்கல. இப்படி ஆயிட்டது. இளம்வயதில். அப்போ இருபத்திஎட்டு வயது எனக்கு. வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருந்தேன். அப்ப ஒருநாள் கோயிலைச் சுற்றிப் பெரிய கூட்டம். அப்போது அந்த வாத்தியார். அவர் பெயர் சொன்னார்.

"உன்னால் இல்லறத்தில் வாழ்ந்துவிட்டு இப்ப எப்படி இது போல வாழ முடியுதுன்னு கேட்டார். அதை ஒட்டி நிறைய கேள்விகள் கேட்டார். **அப்போது நான் தினமும் டைரி எழுதுவேன். அன்றாடம் நிகழ்ச்சிகளையெல்லாம் - மனநிலைகளையெல்லாம் எழுதி வைப்பேன்."**

"டைரி இருக்கா சாமி?" சுவாமிக்கு அது காதில் விழவில்லை. தொடர்ந்து ஆற்றொழுக்காகச் சொல்லிக் கொண்டே போகிறார்.

"அப்போது நான் மிகுந்த கட்டுப்பாட்டோடும், உக்கிரத்தோடும் இருந்ததால், யாரையும் என்னிடத்தில் நெருங்க விடமாட்டேன். பெண்கள்

முகத்தைப் பார்க்கவே மாட்டேன். கால்களைத்தான் பார்ப்பேன். யாராவது பெண்கள் என் முகத்தைப் பார்த்தால் பளார் என்று அடித்துவிடுவேன்".

"பிரம்பிலா?"

"ஊஹூம்... கையிலேயே பளார், பளார்ன்னு அடிச்சிடுவேன்." சுவாமி வேகமாகச் சத்தமாகச் சிரிக்கிறார். "அப்போ உணவிலும் மிகுந்த கட்டுப்பாடு. இப்போ அப்படி இல்ல. இப்போ வேற ஒரு ஸ்டேஜ். எந்தக் கட்டுப்பாடும் இல்லே. அப்போது ஓட்டலில் இருந்து வரும் உணவைச் சாப்பிடமாட்டேன். பக்தர் வீட்டில் செய்து எடுத்து வந்தால்தான் சாப்பிடுவேன். இப்போது எந்தக் கடையில் வாங்கி வந்தாலும் சாப்பிடறேன். அப்போது சொந்த வீட்டிலிருந்து ஒருவேளை சாப்பாடு வரும். நான் சாப்பிடமாட்டேன். கங்காதரன்னு ஒருவன் இருப்பான். அதை அவன் சாப்பிட்டு விடுவான்." சிரிக்கிறார். "வீட்டிலிருப்பவர்கள் அந்தச் சாப்பாட்டை நான் சாப்பிட்டுவிட்டதாக நினைச்சிக்குவாங்க.

"இப்போ அந்தக் கட்டுப்பாடு எதுவும் இல்ல. யார் கொடுத்தாலும் சாப்பிட்டு விடுவேன்.

"இப்போ பெண்கள் வருவார்கள்; பேசுவார்கள்; போவார்கள். அப்போ ஐந்து வயது சின்னக் குழந்தையாக இருந்த பெண்கள் எல்லாம் இப்பப் பெரிய பெண்கள் ஆகிவிட்டார்கள். ஆனாலும் முன்பு போலவே குழந்தையாகவே பழகுகிறார்கள்."

சுவாமிகள் தொடர்ந்து சொல்லிக் கொண்டேவந்தவர்,

திடீரென்று நான் எதிர்பார்க்காதபடி மிகுந்த உணர்ச்சி வசமாகி விட்டார். உடம்பு நடுங்க அதே உணர்ச்சியோடு கூறுகிறார்.

"ஆனால் இன்னும் என் மனத்தில் ஆழ்ந்து பதிந்து போய் இருக்கிறது. அதை நான் தேடிக்கொண்டிருக்கிறேன். ஆயிரம் அடி ஆழத்தில் இருப்பதை நான் அழுத்தத்தோடும், வேகத்தோடும் தேடிக்கொண்டிருக் கிறேன். ஆழமாகப் பார்த்தால் "நான் அதை இன்னும் தேடிக் கொண்டே இருக்கிறேன். எதை விட்டுட்டேன்? எதற்காக இது நடந்தது? இந்த முருகன் ஏன் இப்படிச் செய்தான்? என்று. இப்போது நான் சாதாரண

மகிழ்ச்சி நிலையில் இருப்பது போல் தோன்றினாலும் இன்னும் நான் அதைத் தேடிக்கொண்டே இருக்கிறேன்."

"என்ன சொல்றீங்க?"

"அந்த நிகழ்ச்சி... அந்த நிகழ்ச்சி நடந்ததே அந்தச் சாமியார்தானே இவர்னு என் காதுபடவே பேசறாங்க. அதை நினைத்து... நினைத்து... அதன் விளைவுதான் உடம்பில் வந்த இந்த வெள்ளை."

உடம்பில் தோன்றிய வெள்ளைத் தழும்புகளைக் காட்டிச் "சில டாக்டர்கள் இதை ஆராய்ந்துப் பார்த்து, உடம்பையும் ஆராய்ந்து பார்த்துச் சொல்கிறார்கள். உங்கள் உடம்பிற்கு இந்த நோய் வரவே கூடாது. அது வருவதற்கான அடிப்படை எதுவுமே உங்க உடம்பில் இல்லை. அது உங்களுக்கு வந்ததன் காரணம் உங்கள் மனநிலைதான். நீங்க வெளிய சொல்ல முடியாத ஏதோ ஒன்றை - ஏதோ ஒரு நினைப்பை உங்களுக்குள் போட்டுக் குமுறிக்கொண்டும், குழப்பிக்கொண்டும் இருக்கிறீர்கள். அதன் விளைவுதான் இது" என்றார்கள்.

''அது உண்மை. 'அது முழுக்க உண்மை' எப்படின்னா எப்போதெல்லாம் என் மனம் அந்த நிகழ்ச்சியில் அலைமோதி குழம்புகிறதோ அப்போதெல்லாம் நான் கவனித்து இருக்கிறேன். அன்றைக்கு இந்த வெள்ளைத் தழும்புகள் அதிகமாகவும், உடம்பின் தோல் மேலும் கொஞ்சம் கருப்பாகவும் ஆகிறது."

உடம்பில், கையில் உள்ள இடங்களில் சிலவற்றைக் காட்டி "இங்கெல்லாம் அதிகமாகப் பரவுகிறது, அப்படியே அந்த எண்ணம் கொஞ்சமும் இல்லாமல் மனம் நிம்மதியாக, சந்தோஷமாக இருக்கும்போது பார்க்கிறேன். இது கொஞ்சம் கொஞ்சமாக மழுங்கிக் கருப்பாவதைப் பார்க்கிறேன். இது அதிசயமாக இருக்கலாம். ஆனால் உண்மை. அடித்துச்சொல்வேன். "இந்த நோய்க்குக் காரணம் வேற எதுவுமில்லை. என் கர்ம பலன்தான். அதை இந்தப் பிறவியில் அனுபவிக்கிறேன். இப்படி நான் சொல்லலாம். தட்டிக்கழித்துவிடலாம். ஆனா இது நான் என்னையே ஏமாற்றிக் கொள்வது"

"அப்படின்னா என்ன சொல்றீங்க? இந்தப் பிறவியில் நீங்கள் செய்த தன் விளைவுதான் இதற்குக் காரணம்ன்னு சொல்றீங்களா?"

வலது கையைக் குவித்து இடது உள்ளங்கையில் வேகமாகக் குத்தி, "நிச்சயமாக! நிச்சயமாக நான் அப்படித்தான் நினைக்கிறேன். அதனுடைய விளைவுதான். அதனால்தான் அந்த வினை; நிகழ்ச்சி ஏற்பட்டது. அது நடந்ததுக்குக் காரணம் என்ன? எங்கே நான் வழி தவறி விட்டேன்? முருகனை நான் எங்கே விட்டுவிட்டேன்'' என்று தேடிக் கொண்டிருக்கிறேன். மனவேதனை. மன நிம்மதியற்றுக் கிடக்கிறேன்" என்று உணர்ச்சி மயமாகப் பேசிய சாமி கொஞ்ச நேரம் அமைதியாய் இருந்துவிட்டு, தன் பெரிய விழிகளால் வெட்டவெளியைப் பார்த்தபடி இருந்தார்.

"என் மனத்தில் ஏற்பட்ட அந்த அலைப்பின் காரணமாக, அதற்கு முன்பு இல்லாத நிலையில் நான் அகலக் காலை வைத்துவிட்டேன். அப்போது கர்ம யோகம் 20பர்சண்ட். இப்போது 60பர்சண்ட். அந்த நிகழ்ச்சி நடந்தது அல்லவா? அதை மறப்பதற்கு பல்வேறு காரியங்களில் ஈடுபட்டேன்.

"பள்ளிக்கூடம், கல்யாண மண்டபம், தங்க இடம், இப்படி இப்படி; இரவும் பகலும் காரியம்; காரியம் செய்தபடி; விழாக்கள், விழாக்கள் நடத்தியபடி; அந்த நிகழ்ச்சி பற்றிய நினைவை யாரிடமும் எழமுடியாத படிக்குக் காரியங்களைச் செய்துகொண்டே இருக்கிறேன். என்றாலும் அந்த நிகழ்ச்சி என் மனத்தில் இருந்துகொண்டே இருக்கிறது.

"மனத்தின் கான்சன்ட்ரேஷன் முன்பு எப்படி இருக்கும்? இப்போ அப்படி இல்ல. அப்படியே பிரிந்து பிரிந்து போறது." சுவாமி நீண்டநேரம் ஆவேசத்திற்குப் பிறகு தணிகிறார்!

"என் மனைவி மக்கள் நான் எங்கும் ஓடிப்போய்விடாமல் இங்கேயே இருக்க வேண்டுமென்று கடவுளை ராத்திரி பகலும் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கிருந்து நான் ஆற்காட்டுக்குப்போய் ஏதாவது ஓர் ஆசிரமம் அமைத்துக்கொண்டு விடலாமல்லவா?


சுவாமிகளுடன் திரு. முனுசாமி ரெட்டி குடும்பத்தினர்

"அந்த நிகழ்ச்சி நடந்தபிறகு பலபேர் என்னை அழைத்தார்கள். ஆசிரமம் கட்டித் தருகிறேன்; வந்துவிடுங்கள்" என்று. "இங்கு கோயிலை உருவாக்க வேண்டி இருந்தது; உருவாக்கி விட்டீர்கள். முடிந்தது. இன்னும் நீங்கள் இங்கே இருக்கவேண்டாம். வந்துவிடுங்கள்" என்றார்கள்.

"பெங்களூரில் ஒருவர் முனுசாமி ரெட்டி என்று பெரிய பணக்காரர். அவர் வந்து இங்கு நடப்பதையும், மக்கள் என்னிடம் அன்பில்லாமல் வெறுப்போடு நடந்து கொள்வதையெல்லாம் பார்த்து மனம் உருகினார்.

"பெங்களூருக்கு வந்துடுங்க"

"1976ல் நீங்க வந்துடுங்க. என்னோடு. பெங்களூருக்கு வந்துடுங்க. அங்கே நான் தனியாக நல்ல ஆசிரமம் கட்டித்தர்றேன். என்ன? இரண்டு, மூன்று லட்ச ரூபாயாகும்! முருகன் கோயிலும் கட்டித் தர்றேன். அங்கேயே இருந்துக்குங்க என்றார். வரமுடியாதுன்னு சொல்லிட்டேன்.

"சென்னையில் ஒருவர் வீட்டிலேயே முருகன் கோயில் கட்டி வைத்திருக்கிறார். ஏர்கண்டிஷனில். அந்த முருகனுக்குக் கோயில் கட்டி வைத்திருக்கிறார். அவர் கூப்பிட்டார். இங்கே என்னோடு வந்துடுங்க. இங்கேயே முருகனோடு இருக்கலாம்" என்றார்.

"பிறகு ஒருநாள் மற்றொருவர் பெங்களூர் அருகே ஒரு மலையடிவாரம் இருக்கு. அதன் பக்கத்திலே என் பேக்டரி இருக்குன்னு ஒரு பெரிய

பணக்காரர் சொன்னார். "அந்த மலையடிவாரத்துக்கு அருகே ஆசிரமம் ஒன்னு கட்டித் தர்றேன். நிம்மதியாக அங்கேயே இருந்துக்கோங்க. என்ன? சில லட்சங்கள் செலவாகும். அவ்வளவுதானே" என்றார். அதற்குப் மறுத்துவிட்டேன்.

"இந்த முருகனை விட்டு என்னால் எங்கேயும் வரமுடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிட்டேன்."

"பிறகு L.S. ரெட்டி "அங்கேதான் வரமாட்டேங்கறீங்க. பரவாயில்ல. நீங்க இந்த மலைமேலே தங்கி இருக்கவேண்டாம். கீழே, மலையடி வாரத்துக்கு வந்துடுங்க. கீழே ஆசிரமம், பெரிய வீடு கட்டிக்கொடுக்கிறேன்" என்றார். கடைசியில் இப்போது இருக்கிறேனே அந்த ஆசிரமம் அதை இந்த மலை மேலேயே ஒரே மாதத்தில் கட்டிக் கொடுத்தார்."

அந்த வீட்டில்தான் சுவாமி இப்போது தங்கியிருக்கிறார்.

"காலையில் எழுந்து குளிச்சிடுவேன். அங்கேயே இருக்கின்ற பூப் பறித்துப் போட்டு ஒரு அரைமணிநேரம் தியானம் செய்வேன்; வேல் மீதுதான் தியானம். பிறகு இங்கே கோயிலுக்கு வருவேன்.

"நான் முருகனிடம் வந்ததும் சட்டையைக் கிழித்து எறிந்துவிட்டேன். வேட்டியை அவிழ்த்து எறிந்துவிட்டேன். சட்டைப்பையில் மணிபர்ஸ் இருந்தது. அதில் இரண்டு ரூபாய் - அன்றைக்கு என் மனைவி, நான் பஸ் ஏறிக் காட்பாடிக்கு, ஆபிஸ் போகக் கொடுத்தனுப்பியது இருந்தது. அதை நான் இன்னும் அப்படியே வைத்திருக்கிறேன்.



இரண்டு ஒரு ரூபாய் நோட்டுகள், மணிபர்ஸ்.

"அதை முனிசாமி ரெட்டி, 'என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் அதற்கு ஐயாயிரம் தருகிறேன். அந்த அம்மாள் பெயரில் டெபாசிட் செய்துவிடுகிறேன்' என்று எவ்வளவோ கேட்டுப் பார்த்தார். ஐயாயிரம் என்ன;

ஐந்து லட்சம் கொடுத்தால் கூட நான் தரமாட்டேன் என்று சொல்லிட்டேன். இன்னும் அது என்னிடம்தான் இருக்கிறது. அது என் மனைவி தந்தது!

"இப்போதுள்ள பாலாலயத்தின் முன் ஏறி முருகன் பக்கத்தில் அவன் காலடியில் அமர்ந்து, பத்து நிமிடங்கள் உட்கார்ந்து, அவனை நினைத்து தியானம் செய்வேன். மனத்தில் புத்துணர்ச்சி வரும். இப்போது உடம்பு பருத்துவிட்டது. இந்த உடம்பின் கனம் முழுதும் கால்களை அழுத்திக் கால்கள் மரத்துப்போகிறது. அதனால் காலை நீட்ட முடியவில்லை. நீட்டினால் காலிலிருந்து இடுப்பு வரையில் "விண், விண்" என்று வலிக்கிறது. மடக்க முடியலே. அதனால் இப்போதெல்லாம் ஏறி அமர்ந்து தியானம் செய்ய முடிவதில்லை; செய்வதில்லை. சும்மா பத்து நிமிடங்கள் முருகன் அருகில் தியானித்தபடி நின்றிருந்துவிட்டு வந்துவிடுவேன்.

"சில நேரங்களில் மனத்தில் வெறுமை வந்துவிடும் ஒரு சலிப்பு வரும். அப்போ எல்லாம் முருகனிடம் போய், "இதோ பார்" என்று தன் நெற்றியை என்னிடம் காட்டுகிறார். "நெற்றியில் கருப்பாக ஒரு காயம். தெரியுது இல்லையா." அதை நான் தொட்டுப் பார்க்கிறேன். கல் மாதிரி காய்த்து கருத்துப்போய் இருக்கிறது. "தடால், தடால் என்று முருகன் பீடத்தில் அவன் கால்களில் முட்டிக்கொள்வேன். அழுது கண்ணீரைக் காணிக்கையாக்குவேன். "என் கோரிக்கையை நிறைவேற்று" என்று அழுவேன். நிறைவேறும் என்று என் மனத்தில் நிறைவு ஏற்படும்வரை தலையால் முட்டிக்கொண்டே கதறிக்கொண்டே இருப்பேன். அதன் பிறகு மனம் சாந்தி அடையும். அப்புறம்...

அப்புறம், நினைப்பது நடக்கும்.

இதே நேரத்தில் முன்பு ஒரு முறை அவர் கூறியது நினைவிற்கு வந்தது.

"காலையில் நான் தியானம் செய்யும்போது, நான் முருகனிடம் "அருள் முருகா! என்னிடம் நம்பிக்கை வைத்துத் தங்கள் துயரம் தீரும்; குறைகள் தீரும் என்று பக்தர்கள் வேண்டிக் கொள்கிறார்கள். அவர்களின்

குறைகளையெல்லாம் நீ தீர்க்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டு முருகனிடம் அழுவேன். மனம் சாந்தி அடையும்வரை அழுவேன். அந்த நாளே அந்த பக்தருக்குக் குறை தீரும்.

"அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரண்டு காலங்களில் ஏதோ ஒரு சக்தி எனக்கு உள்ளே சிலிர்த்துக் கொண்டே வரும். அந்தக் கலகலத்த சிலிர்ப்பு. அது என்னவென்று என்னால் தெளிவாகச் சொல்ல முடியலே. அருள் மிகுந்த சக்தியின் சிலிர்ப்பு. அன்று நடு இரவு பன்னிரண்டு மணிக்கு முருகனிடம் போவேன்; தியானம் செய்வேன். ஒரு அரைமணிநேரம் தியானம் கூடிவிட்டால் போதும். ஆ! அதற்கு மேல் அங்கு உட்கார்ந்திருக்கவே முடியாது எழுப்பித் தள்ளிவிடும்.

"அந்த அரைமணி நேர தியானத்தில் ஒரு பத்து, பதினைந்து நாள்வரை" கையைச் சிட்டிகை போட்டபடியே "ஆ! அந்த அரைமணி நேர சக்தி கிடைத்துவிட்டால், அடுத்த பதினைந்து நாட்கள் ஒரே உற்சாகம். சக்தி உடம்பில் பொங்கியபடி இருக்கும். நினைக்கும் காரியங்களைச் சாதிக்க முடியும்.

"இப்போதெல்லாம் மனம் கர்மயோகத்திலிருந்து விடுபட்டுத் திரும்ப தியானத்திற்கும், பக்தி மார்க்கத்திற்கும் போய்விடுகிறது. இந்தக் கோயிலைச் சீக்கிரம் கட்டியாக வேண்டும் என்ற அரிப்பு, மனஉறுத்தல், மிகுந்த அழுத்தம் ஏற்படுகிறது.

இந்தக்கோயிலை நான் இடிச்சிட்டேன். புதுக்கோயில் கட்டுவதற்கு அருள் கிடைப்பது பற்றிய நினைப்பு வந்ததும், "இடிப்பதா, வேண்டாமா" என்று தயங்கித் தயங்கிப் பல்வேறு நினைவுகளால் ஒரே குழப்பமாக இருந்தேன்.

இந்த வெள்ளை நோய்க்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

"காரணம் மலைமீது படி எதுவும் இல்லாத, தண்ணீரே இல்லாத, விளக்கு ஒளியே இல்லாத காலத்தில், அந்தக் காலத்தில் யாரோ ஒருவன் இந்தக் கோயில் கட்டியிருக்கிறான். அவனுக்கு முருகன் மீது எவ்வளவு பக்தி இருந்திருக்கும்!"

திரும்பத்திரும்ப இந்தக் கருத்தையே ஆழ்ந்து, ஆழ்ந்து, மிகமிக ஆழ்ந்து சுவாமிகள் கூறுகிறார். "அவனுக்கு பக்தி, அளவில்லாத பக்தி இருந்திருக்க வேண்டும். அந்த பக்திக்குரிய கோயிலை நாம் இடித்துத் தள்ளுகிறோமே. இது சரியா என்ற குழப்பம், நினைப்பு மனத்தில் எழுந்து கொண்டே இருந்தது. பிறகு நானே மூன்று நாளில் இடித்துத் தள்ளிவிட்டேன். மேல் கோபுரம் நான் இடித்ததும் 'டமால்' என்று விழுந்துவிட்டது. அவ்வளவு இற்றுப்போய் விட்டிருந்தது சுண்ணாம்பு." நான் ஒருவனே மூன்றே நாளில் இடித்துவிட்டேன். அந்தக் கல் முழுவதையும் கூடக் கடக்காலில் போட்டு அதன்மேல்தான் இந்தப் புதுக்கோயில் கட்டி இருக்கு. இப்போது இந்தக் கோயிலைக் கட்டி முடிக்க வேண்டும்! அதே சிந்தனை.

"கோயிலை அப்படியே வைத்துக்கொண்டு அதன் மீது இருந்த சுண்ணாம்பைத் தட்டி எடுத்துவிட்டுச், சிமெண்ட்டைச் சொர சொரப் பாகப் பூசி, இது மாதிரி, அருகில் பூசப் பட்டிருந்த சுவரின் சொர சொரப்பைக் காட்டுகிறார்." பூசி அதன் மேல் செப்புத்தகடு வேய்ந்து பொன் முலாம் பூசிப் பொன் கோயிலாக்கி விடலாமா" என்று கூட நினைத்தேன்.

"பிறகு முதலில் நன்றாக இருக்கும். பிறகு காளான் பூத்துச் சிதைந்து போய்விடும் என்று முடிவு செய்து, கருங்கல் கோயிலைக் கட்டலாம் என்று முடிவு செய்தேன். கல் வேலை முடிந்துவிட்டது. இப்போது இந்தக் கற்களைப் பாலிஷ் செய்து, கோயில் கட்டி இந்தப் பிரகாரத்தை அப்படியே வெட்ட வெளியாக விட்டுவிட்டுக் கும்பாபிஷேகம் செய்துட்டும் இருக்கலாம். அப்படிச் செய்துட்டு இருந்தால் யாரும் என்னைக் கேட்க மாட்டார்கள். ஆனால் அது நல்லதல்ல. முறையாகக் கான்கிரீட் போட்டுச் சுற்றிலும் பிரகாரம் கட்ட வேண்டும். அதை இப்படி இந்தப் பிளான்படி அழகாகச் செய்ய வேண்டும். எந்தவிதமான வசதியோ, தண்ணீரோ மலைமேல இல்லாதபோது சுண்ணாம்புக் கல்லில் கோயில் கட்டி வைத்தானே, அந்தக் கோயிலைக் கட்டியவன்; அவனின் அந்த பக்திக்கு ஈடாக நாம் செய்ய வேண்டும் என்ற நினைப்பு தோன்றியது.

"இப்போது மனத்தில் அந்தக் கருத்துதான் ஆழமாக நிரம்பி இருக்கிறது. 12 அடி ஆழம், 25 அடி உயரம், பாறையைத் தோண்டிப் பில்லர் எழுப்பிக் கடக்கால் போடவேண்டும். ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்.

"இரண்டு மாதமாக ஒருவரை எதிர்பார்த்துக் கடிதம் எழுதிக்கொண்டே இருக்கிறேன். அவரும் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். அதற்குள் தேர்தல் வந்துவிட்டது.

"அவர்கள் முழுநேர அரசியல்வாதிகள் அல்ல. தொழில் செய்பவர்கள்தான். தேர்தலால் அவருடைய தொழில் பாதிக்கும். அதனால் ஒரு நிச்சயமற்ற தன்மை உள்ளது. "தேர்தல் முடிந்ததும் சுவாமி கேட்ட இரும்பை நாங்களே அனுப்பிவிடுகிறோம்" என்று சொல்லியனுப்பி இருக்கிறார்கள். அதுவரை கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கம்பி வந்துவிட்டால் வேலை ஆரம்பித்துவிடலாம். பிறகு தளம் போட வேறு ஒருவர். ஒரு பெரிய கம்பெனியின் பெயரைச் சொன்னார். அவர்கள் செல்வந்தர்கள். மணல் வேண்டும். அதற்கும் நாங்களே எங்கள் லாரியை வைத்துக்கொண்டு மணல் ஓட்டித் தளம் போடச் சென்ட்ரிங் போட்டுத் தந்துவிடுகிறோம் என்றார்கள். கீழே இவ்வளவு அகலத்திற்கும் இரும்புத்தகடு வைத்திருப்பார்கள். எல்லாம் நட்டு, போல்டு போட்டு பூட்ட வேண்டியதுதான். ஒரே சமம். முட்டுக்கொம்பு இல்லை. எல்லாம் இரும்பு பைப்புகள்தான். ஒரே சீராக இருக்கும். "நாங்கள் தளம் போட்டுக் கொடுத்து விடுகிறோம். பிறகு பூசற வேலை, மத்த வேலைங்களை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, "இதை ஒன்றரை மாதத்தில் முடித்துவிடுவோம்" என்றார்கள்.

"ஆறு லட்சம் ரூபாய் ஆகும். அந்தச் சாமான்கள் எல்லாம் அங்கிருந்து கொண்டுவர வேண்டும். டிரான்ஸ்போர்ட்டு செலவு. அதோடு அவர்களைப் போலத் திறமையாக வேலையாட்கள் இங்கே யார் கிடைப்பார்கள்?

"பில்லர் போடுவதற்குக் கம்பி தயாராக உள்ளது. இப்போது வேண்டுமானாலும் பில்லர் போட்டு நிறுத்தி விடலாம். மேல் சாமான் சேகரிக்காமல் பில்லர் மட்டும் மொட்டையாகப் போட்டு நிறுத்தினால் நன்றாக இருக்காது.

"எங்க அம்மாகிட்ட இருந்து வந்த குணம்"

"இந்தக் கோயில் கட்டுவதற்கு ஒரு ஆறு லட்சரூபாய் சேர்த்துடுவேன். ஒவ்வொரு கம்பத்திற்கும் இருபத்தைந்தாயிரம் ரூபாய் ஆகும். 'பெயர் கம்பத்தில் போடுகிறேன்' என்று சொன்னால் நாலஞ்சி லட்சம் சுலபமாச் சேந்துடும். ஆஸ்பத்திரி கட்ட ஆறு லட்ச ரூபாயை அப்படித்தான் சேர்த்தேன். நிறைய பேர் தருவார்கள்.

நான் கேட்கிறேன்.

"நான் அந்தக் காலத்திலிருந்து பார்த்து வருகிறேன். எப்போதும் யார் வந்து கேட்டாலும் புத்தகம், படிப்பு, சாப்பாடு, வைத்தியம் என்று கொடுத்துக்கொண்டே இருக்கிறீர்கள்! ஏன் இப்படிக் கொடுக்கிறீர்கள்? இது நீங்கள் இங்கு வந்தபிறகு, இந்த மாற்றம் ஏற்பட்டபோது, இப்படிச் செய்யவேண்டும் என்ற உணர்வு உங்களுக்குத் தோன்றியதா?"

"இல்லே, அதுக்கு முன்னே இருந்தது. எங்க அம்மாகிட்ட இருந்து இந்த குணம் வந்தது. எங்கம்மாவுக்கு நாங்க நாலு பிள்ளைங்க. ரொம்ப சாதாரண குடும்பம். காலையில பழையது பிசைந்து எங்க எல்லாருக்கும் கையில போடுவாங்க. அப்போ யாராவது கதவைதட்டி "அம்மா பசி" என்றால் எங்கள் நாலுபேர் கைகளில் இருப்பதைக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து, வந்தவங்களுக்கு இல்லேன்னு சொல்லாம போடுவாங்க.

"நாங்க 'எங்களுக்கே போதல, இதுல வந்தவங்களுக்கு எல்லாம் போடறியே' ன்னு பேசுவோம். அதுக்கு அவர் "வேண்டாண்டா, இங்கன்னு இல்ல, எங்க இருந்தாலும் நீங்க சாப்பிடும்போது பசின்னு யாராவது வந்தா அவங்களுக்குக் குடுக்க எதுவும் இல்லைன்னாலும் சாப்பிடவாவது அவங்களுக்குக் குடுங்க. உங்களுக்கும் அந்த மாதிரி பசி நேரங்கள்ல கடவுள் கொடுப்பார்ன்னு" சொல்வாங்க. அது மனசில அப்படியே பதிஞ்சி போச்சி".

"அப்படி நீங்க பசியா இருந்தபோது யாராவது எப்பவாவது உங்களுக்குச் சாப்பாடு கொடுத்திருக்காங்களா?"

"ஓ! கொடுத்தாங்களே. நான் 1957லே எஸ்.எஸ்.எல்.சி எழுதினேன். பெயிலாயிட்டேன். அம்மூர் ரயில்வே ஸ்டேசன்ல பேப்பர்ல ரிசல்ட் பார்த்தேன். அவ்வளவுதான். ஊருக்கே வரல. அப்படியே அங்கயிருந்து நேரா எங்க பாட்டி வீட்டுக்கு - அம்மாவோட அம்மா வீட்டுக்குப் போயிட்டேன். பாஸ் பண்ற வரை ஊருக்குத் திரும்பறது இல்லேன்னு வைராக்கியம். ஒரு சப்ஜெக்ட்லே போயிடுச்சி. ஆற்காட்ல ஒருவர், உங்க ஊர்லதான்" அவர் பேரைச் சொல்லி "ஃப்ரீயா பாடம் சொல்லிக்குடுத்தார். படிச்சி, பாஸ் பண்ணி அப்புறம்தான் வீட்டுக்கு வந்தேன். வேலை தேடினேன்.

"அப்போ மெட்ராஸ்லே, எலக்ட்ரிகல் டிபார்ட்மெண்ட்ல வேலை கிடைச்சிது. மூணு ரூபா தினக்கூலி. ஞாயிற்றுக்கிழமை, அப்புறம் வேலை இல்லாத நாள்ள கூலி கிடையாது. அந்த டிபார்ட்மெண்டல ஒரு சீஃப் என்ஜினியர் இருந்தார். அவர் மூலமாகத்தான், அந்த வேலை கெடச்சிது. அப்போ எல்லாம் செருப்பே போட்டுட்டுப்போக மாட்டேன். நாலு முழ வேட்டிதான். அந்த என்ஜினியர் வீடு மெட்ராஸ்ல தி.நகரில் இருந்தது. தற்போது அந்தவீடு MGR அ.தி.மு.க. அலுவலகம் என்று நினைக்கிறேன். அது இப்ப MGR நினைவகம். காட்சிச் சாலையா இருக்கிறது எனக் கருதுகிறேன். ஆற்காடு ரோடு. தி.நகர். நான் அவரைப் பார்க்க, அவர் வீட்டுக்குப்போவேன்.

பெரிய பணக்காரர். பங்களா. மொசைக் தரை. அந்தக் காலத்திலேயே நான் செருப்பு இல்லாம வீட்டுக்குள்ள வந்ததைப் பார்த்ததும், அவர் மனைவி "பிளாட்பாரத்துல செருப்பு போடாம நடந்து, அப்படியே வீட்டுக்குள் நுழைஞ்சி, வீட்ட அசிங்கம் பண்ணிட்டியே"ன்னு திட்டுவாரு. பிறகு காலைக் கழுவிக்கொண்டு உள்ளே போவேன். தங்கறதுக்கு இடம் இல்லே. அங்கேயேதான் தங்கினேன். படிக்கட்டுக்குக் கீழே சின்னரூம். அதிலேதான் தங்கணும்னு சொல்லிட்டாங்க. அப்ப, அப்படியெல்லாம் சிரமப்பட்டேன்."

"இப்போ அந்தப் பொண்ணில்லே." இப்போது சாமி நடத்தும் பள்ளியில் வேலை செய்யும் ஓர் ஆசிரியையின் பெயரைச் சொல்லி, "அவர்

அப்பா என் சொந்தக்காரர். பெரிய மேட்டில் ரூம் எடுத்துத் தங்கியிருந்தார். அவரிடம் போய், நான் தங்கறதுக்கு இடம் வேணும்னேன். "சரி இங்கியே தங்கிக்க" என்றார். "ஆனா ரூம நல்லாப் பாத்துக்க. தெரு, வீடு எல்லாம் நல்லா அடையாளமா பார்த்துக்க. எங்கியாவது தெரியாமல் போயிடப்போறேன்னு" சொன்னார்.

"ஆபீஸ் எங்க இருந்தது?"

"கரீம் பீடி பேக்டரி தாண்டி? கிருஷ்ணா தியேட்டர் பக்கத்துல. பெரிய மேட்டிலிருந்து வால்டாக்ஸ் ரோடு வழியா போயி, கரீம்பீடி பேக்டரி தாண்டி, கிருஷ்ணா தியேட்டர் பக்கத்துல."

"இவ்வளவு தொலைவும் நடந்தா போவீங்க?"

"ஆமா! வேற வழி! மெட்ராஸ் புதுசா இருந்தது. எலக்ட்ரிக் வண்டி முன்னும் பின்னும் ரெண்டு பக்கத்திலும் ஓடறது எனக்கு வேடிக்கையா இருக்கும். நின்னு பாத்துக்கிட்டே இருப்பேன். ஒரு நாள் போனேன். கொஞ்சநேரம் நின்னுக்கிட்டு இருந்தேன். ட்ரெயின் இந்தப் பக்கம் போவுது. உடனே அந்தப் பக்கமா வருது. இப்பத்தானே இந்தப் பக்கம் போச்சி. அதுக்குள்ளே எப்படி அந்தப் பக்கம் வந்துச்சின்னு ஒரே ஆச்சரியம்! அது வேற ட்ரெயினு, இது வேற ட்ரெயினுன்னு தெரியல. ஒரே மாதிரி தான இருக்குது. அப்போ பீச் ஸ்டேஷன்லே இருந்து ட்ரெயின் தாம்பரம் வரைக்கும் போயிட்டு இருந்தது.

பாக்கெட்ல கொஞ்சம் பணம் வச்சிக்கிட்டு இருந்தேன். டிக்கெட் வாங்கிட்டு வடக்கு பக்கம் ட்ரெயின் ஏறிட்டேன். அடுத்த ஸ்டேஷன்லேயே பீச் ஸ்டேஷன் வந்திடுத்து "என்னடா இவ்வளவு சீக்கிரமா வந்திட்டதேன்னு" கொஞ்ச நேரம் நின்னுட்டிருந்தேன். மறுபடியும் ஒரு ட்ரெயின் தெற்கு பக்கமாப்போச்சி. சரி. அது எங்கே போவுது பாக்கலாம்னு அதுலையும் டிக்கட் வாங்கி ஏறி உக்காந்தேன். அது போச்சி. போச்சி. ரொம்ப சந்தோஷமா இருந்தது.

தாம்பரத்துல போயி நின்னுது. நானும் இறங்கினேன். ஒரே தாகமாக இருந்துது. ஸ்டேஷன்லே சர்பத் வித்துக் கிட்டிருந்தான். அவன்கிட்ட

போய் சர்பத் போடச்சொன்னேன். சர்பத் போட்டுக் குடுத்தான். வாங்கிக் குடிச்சேன். காசு கொடுக்கப் பாக்கெட்ல கையை விட்டா... பிளேடால பாக்கட்ட அப்படியே அறுத்துட்டு இருக்குது. 'ஒ'ன்னு அழ ஆரம்பிச்சேன்". சுவாமி கலகலவென்று சிரிக்கிறார்.

"சர்பத் கடைக்காரர் "ஏம்பா, என்னான்னு" கேட்டார். பிளேடால அறுத்திருந்த பாக்கெட்டைக் காட்டினேன். என்னைப் பற்றிய விவரம் கேட்டார். சொல்லிட்டு 'ஓ'ன்னு அழுதேன். அவரும் "சரிப்பா, நீ காசு கொடுக்க வேண்டாம். போ"ன்னு சொன்னார். எனக்கு துக்கம் தாங்க முடியல. தேம்பித் தேம்பி அழுதேன்.

"ரூமுக்குப் பெரியமேட்டுக்கு வரணும். பார்க் ஸ்டேஷனுக்கு வரணும். வரத் தெரியல. டிக்கட் வாங்கவும் காசில்லே. என்ன பண்றது? அந்த ட்ரெயின் பார்க் ஸ்டேஷன்லே இருந்துதான இங்க வந்தது. அது போற வழியிலேயே போனா ஸ்டேஷன் வந்துடும்னு ரயில் லைனிலேயே நடக்க ஆரம்பிச்சேன். தாம்பரத்துக்கும் பார்க் ஸ்டேஷனுக்கும் முப்பது கிலோமீட்டர் இருக்குது. நடந்தே வந்தேன். காலெல்லாம் வலி. அழுதுகிட்டே நடந்து வந்தேன். ட்ரெயின் வரும்போது லைன்ல இருந்து கீழே இறங்கி ஓரமா நடப்பேன். இப்படியே முப்பது கிலோமீட்டரையும் நடந்தே வந்தேன்.

"சைதாப்பேட்டை ஸ்டேஷனுக்கு வந்தேன். கால் வலி. மேல நடக்க முடியல. பிளாட்பாரத்துல தண்ணிய குடிச்சிட்டுக் கொஞ்ச நேரம் உக்காந்துட்டு நடக்கலாம்னா; பசி.


"அப்போ பிளாட்பாரத்துல ஒரு கிழவி கூடையிலே இட்லி வச்சி வித்துக்கிட்டிருந்தது. சாதாரணமா அப்படி விக்கறவங்க சுத்தமில்லாம, அழுக்கா இருப்பாங்க. ஆனா இது ரொம்ப ஹைஜீனிக்கா இல்லேன்னாலும் சுத்தமா இருந்தது. நான் பசியாலே துவண்டு உக்காந்திருந்தேன். அந்தக் கிழவி என்னைப் பார்த்து, 'என்னப்பா பசியா'ன்னு கேட்டது. "ஆமான்னேன்." "துட்டு எங்கிட்ட இல்லைன்னும்" சொன்னேன். உடனே அஞ்சி இட்லி, ஒரு இட்லி அஞ்சி பைசா, நாலணாக்கு இட்லி வச்சி, சட்னி ஊத்தி ஒரு இலையில குடுத்தது. சாப்பிட்டேன்.



சுவாமிகள் எழுதுகிறார் "எளியவனை ஈன்றெடுத்த அன்னையார் திருமதி சிங்காரம்மாள்."



சுவாமிகளின் தந்தையார் மணியக்காரரர்
திரு. கே.ஆர். கந்தசாமி முதலியார் அவர்கள்.




நம் தவத்திரு. சுவாமிகள்.



சுவாமிகள் பிறந்த, வாழ்ந்த ஊர் - கீழ்மின்னல்.



சுவாமிகள் பிறந்து வளர்ந்த வீடு.



பேரன் குருபரனுடன் தவத்திரு. சுவாமிகள்.

"அப்பா! பசி தீர்ந்தது. அப்போ எங்கம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. தண்ணீர் குடிச்சிட்டு அங்கிருந்து திருப்பியும் ரயில் லைன் வழியாவே நடந்து ராத்திரி பதினொன்றரை மணிக்கு ரூமுக்கு வந்து சேர்ந்தேன். காலெல்லாம் வலி.

"நீங்க முதல்லே, முருகன் கோயில்ல உக்காந்திங்க. எங்க, கோயிலுக்கு உள்ள உக்காந்திங்களா?"

"இல்லே. வெளியிலதான் எதிர்லதான் உக்காந்தேன்."

"அப்போ இப்படி மத்தவங்களுக்கு உதவணும்னு எப்படி தோணிச்சி? யாராவது உங்களுக்கு பணம் கொடுத்தாங்களா?"

"யாரும் பணம் குடுக்கல. உண்டி ஒன்னு கட்டி வச்சிருக்கும். அதுல பத்து காசு. நாலணா இப்படிப் போடுவாங்க. மொத்தமா அத எடுத்த உடனே, அத அங்க வந்திருக்கும் ஏழைங்களுக்குக் கஞ்சி காய்ச்சி ஊத்தச் சொன்னேன். அதிலிருந்து தான் ஆரம்பிச்சுது. எல்லோருக்கும் உதவணும்னு.

"ஆரம்பத்திலிருந்து ஏழைங்களுக்கு ஏதாவது உதவி செய்யணும்; அவங்க வயித்துக்குச் சோறு போடணும்; அவங்களுக்கு வேல குடுக்கணும்; கூலி குடுக்கணும். அதுக்காகக் கட்டிட வேலை ஆரம்பிச்சேன். கோயில ஒட்டிக் கட்டிடம். கல்லு உடைக்கணும். மேஸ்திரி, சித்தாள்னு நிறைய வேலைங்க. இதுல என்ன ஆச்சின்னா, நாளாக, நாளாகக் கல்ச்சர் டெவலப்மெண்ட் இல்லாத கூலி ஆட்களே வேலை செய்ய, அதுவே வேலையா போயிடுச்சி. பண்பாடு பாக்கல."

நீ சொன்னப்ப நான் ஸ்கூல் ஆரம்பிச்சிருந்தா, இந்நேரம் ஒரு பெரிய பண்புள்ள கூட்டம் கூடவே வளர்ந்திருக்கும். இப்போ என்ன ஆச்சி? எங்கிட்டே இருந்து எப்போதும் எதையாவது எதிர்பார்த்துக்கிட்டு, அதற்காக வேலை செய்யற கூட்டம் பெருகிப்போச்சி.

"என்னிடம் பலபேர் வருவாங்க. நல்லவங்களும் வருவாங்க. உடம்பு சரியில்ல, குடும்பத்துல பலவகையான தொந்தரவு. அதுக்கு இங்கே வந்து சாமியப் பார்த்தால் ஆறுதல் கிடைக்கும்னு வருவாங்க. சிலர் சாமியாரிடம்

போனா என்ன கிடைக்கும்? எது வாங்கலாம்னு கணக்கு போட்டுகிட்டு வர்றவங்களும் இருக்காங்க. கோயில், பள்ளிக்கூடம் கட்டணும். அதுக்கு சாமி உதவி கேக்கலாம்னு வர்றவங்க இருக்காங்க. கேட்கிற உதவி பொது உதவியா இருந்தா, தனிப்பட்டவங்களுக்கும், குடும்பங்களுக்கும் அவங்க மனசுக்கு நிம்மதியா, அதனால அவங்க கஷ்டம் போறதுன்னா அந்த உதவியச் செஞ்சேன்; செய்வேன்."

ஆர்க்காட்டில் நான் பதிவு செய்யப்பட்ட இராமகிருஷ்ண விவேகானந்த மன்றத்தில் பள்ளி கட்டும்போது சுவாமி இருபது மூட்டை சிமெண்ட்டும் ரூ. 111ம் அன்பளிப்பாகத் தந்தார்.

"அவங்க சுயநலத்துக்கு என்னைப் பயன்படுத்தற மாதிரி தெரிஞ்சா, அப்படி என் மனசுக்குப் பட்டுதுன்னா அந்த உதவியச் செய்ய மாட்டேன். அத செய்யறதா வாக்கு குடுத்திருந்தாலும் செய்ய மாட்டேன். ஆமா!" சுவாமி மிகவும் உறுதியாகக் கூறுகிறார்.

"நிச்சயமா செய்ய மாட்டேன்." அடித்துச் சொல்கிறார். "என்ன இந்தச் சாமி செய்யறேன்னு சொல்லிட்டு இப்ப இப்படிச் சொல்றாரேன்னு பேசிக்கிறதும் கேட்கும். ஆனா செய்யவே மாட்டேன்."

இதை சுவாமி எத்தனையோ வருடங்களுக்கு முன்னே சொன்னார். அதை நான் இப்போது எழுதி, அவரிடம் கொடுக்கிறேன். இப்போது அச்சிலிருந்து வந்த புரூப்பை இரண்டாவது முறையாகச் சுவாமி இதைப் படித்து வரும்போது மறுபடியும் அதை மிக மிக அழுத்தமாகக் கையை உதறி "இப்பவும் சரி, செய்ய மாட்டேன். நிச்சயம் செய்ய மாட்டேன்" என்கிறார்.

"செய்யற தொழில்தான் தெய்வம்! வேற எது தெய்வம்?"
சுவாமிகள் தொடர்ந்து சொல்கிறார்:

"அக்டோபர் மாசத்துல இதுபோல ஒரு நாள் ராத்திரி தீபாவளிப் பலகாரம் எடுத்துக் கொண்டு, எனக்கு ரொம்ப ரொம்ப நெருக்கமான சொந்தக்காரப் பையன் வந்தான். அவனை நல்லாத் திட்டினேன். **செய்யற தொழில்தான்**

தெய்வம். வேற எது தெய்வம்? ஒரு வேல எடுத்தோம்னா அதையே தொடர்ந்து செய்யணும். அதுல கஷ்டங்களும் வரும். அதத் தாங்கணும். நானும் கோயில் காரியம் செய்யறேன். அதுலயும் எவ்வளவோ கஷ்டங்கள் வருது. அதுக்கு முருகன்கிட்டே வேண்டறேன். கஷ்டங்களைக் குடுக்காதேன்னு இல்ல. அந்தக் கஷ்டங்களைத் தாங்கிக்கற மனசக் குடு; தைரியத்தக் குடு; துணிச்சலைக் குடுன்னுதான் வேண்டறேன். எப்பவும் வேண்டறேன்.

"ஒரு காரியத்த எடுக்கற. கஷ்டம் வருது. அத விட்டுட்டு வேற ஒண்ணு செய்யற. அதுலயும் கஷ்டம் வருது. அத விட்டுட்டு வேற ஒன்னு செய்யறே. இப்படியே. ஒன்னு விட்டுட்டு ஒன்னுன்னு போய்க்கிட்டே இருந்தா என்னாகும்? எதிலுமே நிக்க முடியாது. நெலச்சி நிக்க முடியாது. நிக்காமப்போயிடுவன்னு" திட்டி அனுப்பினேன். எல்லாத்தையும் தாங்க உறுதி இருக்கணும். அப்போதுதான் ஏதாவது செய்ய முடியும்.

"நான் குடும்பத்துல இருந்தபோது சின்னக் குடும்பமா இருந்தேன். இப்ப என் குடும்பம் பெரிசாயிடுச்சி. என்னை நம்பி இந்த மலையடிவாரத்துல எத்தனை குடும்பங்க இருக்கு! மாசம் பொறந்தா அவங்களுக்குச் சம்பளம் கொடுத்தாகணும். பள்ளிக்கூடம்! ஆஸ்பத்திரி! இங்கே கோயில்ல வேலை செய்யறவங்கன்னு எல்லோருக்கும் கொடுத்தாகணும். எங்க போறது? முருகன் தான் குடுக்கணும்.

"இந்த முருகன் பயங்கரமானவன். நான் ஏதாவது ஒரு வேலைக்கு, முக்கியமாக ஒரு காரியத்துக்குப் பணம் குடுக்கறதா வாக்கு குடுத்திட்டிருப்பேன். தவிர்க்க முடியாத காரியமா இருக்கும். அன்னைக்கின்னு ஒன்னும் வராது. என்ன முயற்சி செய்தாலும் ஒன்னுமே வராது. மனசு கலங்கி ராத்திரி அவன்கிட்ட போயி அழுவேன்."

"அவன்கிட்ட போயின்னா எங்க போவீங்க?"

"முருகன்கிட்டதான். முருகன் சிலைகிட்ட போவேன். 'என்ன நீ இப்படி செய்யறே'ன்னு அழுது புலம்பி மனசில இருக்கிற ஆத்திரம், ஆவேசம், வேதனை, ஏமாற்றம் எல்லாத்தையும் சொல்லி, அவன் கால்ல - முருகர் சிலையின் கால்ல என் நெத்தியால இடிச்சிப்பேன். இந்த மாதிரி

அரைமணிநேரம் கூட நடக்கும். அப்புறம் பாத்தா திடீர்னு நம்ப முடியாத நிலையில, நான் ஒரு சிறு தொகைக்கு அழுதுகிட்டிருப்பேன்; ஆனா ஒரு லட்சம் ரூபாய் வரும். அப்புறம் அந்தப் பணத்தை வச்சிக்கினு என்ன செய்யறதுன்னே தெரியாது. முழிச்சிட்டிருப்பேன். அப்படி எல்லாம் செய்வான் முருகன். சுவாமிகள் முகத்தில் பெருமிதம்.

"அப்படின்னா, முருகன் உங்களுக்கு, உங்களோடு பேசற, உங்கள் குறையெல்லாம் கேட்கிற, அதைத் தீர்க்கிற, உங்களோடே ஐக்கியமாயிடற தெய்வமா இருக்கார். அப்படி நீங்க நம்பறீங்க."

"நம்பறது இல்ல. அவன் அப்படித்தான்!

"என் குடும்பப் பொறுப்பு - பாரம் தீர்ந்திட்டது. ஒரு ரிலீஃப் கிடைச்சிடுச்சி. மனைவிக்கு, அவரது கடைசி காலம் வரையில் யார் கையையும் எதிர்பார்க்காமல், வாழ ஒரு வழி செய்யணும். பிள்ளையக் கூட எதிர்பார்க்கக்கூடாது. யாருடைய கையையும் எதிர்பார்க்கக் கூடாது. அது ஒண்ணுதான் பாக்கி. அதுக்கு ஏற்பாடு செய்துவிட்டால் என் பொறுப்பு முழுதும் தீர்ந்திடும். என்னுடைய பெரிய பாரம் இறங்கிடும்.

ஒருவர் பெயரைச் சொல்கிறார். நான் அடையாளம் சொல்றேன்.

"ஆமாம். அந்த ஆள்தான். அவர்தான் பையன் கல்யாணச் செலவு முழுவதையும் ஏற்றுக்கொண்டார். அவர்தான் அந்த அம்மாவுக்கும் ஏதாவது செய்வதாகச் சொல்லியிருக்கிறார். நமக்கும் எப்போதெல்லாம் பணம் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் பணம் கொடுப்பவரும் அவர்தான். இந்தக் கோயில் கட்டுவதற்கு பதிமூணு லட்சம் கொடுத்தார். அதன் செலவு முழுவதையும் அவரே ஏற்றுக்கொண்டார். நான் சிமெண்ட்டில் கட்டிப் பூசிடலாம் என்று இருந்தேன். ஆனால் அவர்தான் "இல்ல சாமி! நான் தர்றேன்"னு சொன்னார். பிறகு கல் கோயிலை ஆரம்பிச்சேன். இது காஸ்ட்லி. காலமும் ரொம்ப ஆகும்.

"கருங்கல்லால் கோயில் கட்டினேன். உண்மையில் இந்தக் கோயில் கட்டுவதற்கு அவர்தான் பணம் கொடுத்தார்.

உன்னைப்போலவே அவரும் "பள்ளிக்கூடம் கட்டு, பள்ளிக்கூடம் கட்டுன்னு" சொல்லிக்கிட்டே இருப்பாரு. கட்டிடத்துக்கு எங்கே போறது? ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்தார். இப்போ பள்ளி ஆரம்பிச்சி இருக்கிற கட்டிடத்தைப் பாத்து, "இது நல்லா இல்ல சாமி. வேற ஒரு பக்கா ப்ளான் ஒன்னு போடுங்க. நான் பணம் தர்றேன்னார். அதனாலதான் இந்த நிலம் வாங்கி, இதோ இந்தப் பள்ளிக்கூடப் ப்ளான் போட்டு இருக்கேன்." சுவாமி ப்ளானைக் காட்டுகிறார்.

"எனக்கு எப்போதாவது பணம் போதாம குறை ஏற்பட்டா அவரிடம்தான் கேட்பேன்."

"இவ்வளவு தருமங்களை உங்கள் காரியத்துக்கு கொடுத்திருக்கிறார். ஏன் கொடுக்கிறார்? நீங்க அவருக்கு என்ன செய்யறிங்க?"

"எல்லோருக்கும் போல தான் பிராத்தனை. அவருடைய தொழிலில் முன்னேறப் பிரார்த்திக்கிறேன்.

என் நடுத்தம்பி உடம்பு சரியில்லாதவன். அவனுக்கு ஒரு பையன். ஒரு பொண்ணு. பையன்தான் உன் ஸ்கூல்ல படிச்சான். அவன் இப்போ நல்லா படிக்கறான். பொண்ணும் நல்லா படிக்குது. ப்ளஸ் 2 பாஸ். வாலாஜா காலேஜ்ல கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கணும்னு சொல்லிச்சி. இங்கே எங்கிட்ட படிப்பு, பீஸ் என்று பொதுவா மற்றவங்க எல்லாம் வந்து கேட்பது போல அதுவும் வரும். மனு எழுதி குடுத்துட்டுப் போயிடும்.

"பணமா யாருக்கும் தரமாட்டேன். ட்யூஷன் வெச்சிட்டாப் பணம் தருவேன். ஆனா ஒவ்வொரு முறையும் வரும்போதும், போன டெஸ்ட்டுல வாங்கின மார்க்கைவிட இப்போ மார்க் அதிகமா காட்டணும். அதிகமாக வாங்கலைன்னா கேப்பேன். சரியான பதில் வரலைன்னா நான் பணம் தரமாட்டேன். ஊர்ப் பசங்களுக்கு எல்லாம் கொடுக்கறேன். என் சொந்தப் பசங்க என்பதற்காக நான் அவர்களை இதுவரை ஒதுக்கியதில்லே. ஆனா எல்லோருக்கும் ஒரே ரூல். நல்லா படிச்சாதான் உதவி.

"அதிலும் இந்த தம்பி - உடம்பு சரியில்லாதவன். வருமானம் அதிகமில்லாதவன்.

"ஒரு நாள் முன்னே இருந்த ஓர் ஊரைச்சொல்கிறார். அங்க இருந்து கூடமான ஆசாமிங்க இங்க வந்தாங்க. சாமி ஸ்கூலுக்கு இருபது நாற்காலி வேணும்னு சொன்னாங்க. நான் சொன்னேன். எம் பள்ளிக்கூடத்துக்கே சேர் வேணும். இல்லேன்னேன்.

"நாலு சேர் தர்றேன்னேன். அது வந்ததும் போன் பண்ணிச்சொன்னேன். சாமி இருபது சேர்ன்னாங்க. சரின்னு வந்ததும் போன் பண்ணி குடுத்தனுப்பிச்சேன். அவங்க போனதும் ஒரு அம்மா. "என் தம்பி பொண்ணு இவ்ளோ மார்க் எடுத்திருக்கின்னு வந்தாங்க. கம்ப்யூட்டர் கோர்ஸ் கேட்டதுக்கு உதவறேன்னு சொன்னேன். யாரோ முஸ்லீம் பிரின்சிபால். உங்க காலேஜ் பிரின்சிபால் தான். அவர நான் பார்த்தது கூட இல்ல. அவரக் கேட்டதுக்கு, "அதுக்கு என்னங்க சாமி, உடனே குடுத்திடறேன்னு" சொன்னார். ஒரு நாளைக்கு வந்து உங்களைப் பாக்கறேன்னும் சொன்னார்.

சுவாமிகளிடம் ஒரு புதிய நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொடுத்து, "சுவாமி நான் முன்பு ஒரு தேவனும் தேவாலயமும் என்று எழுதி உங்களிடம் கொடுத்தேன். இப்போது அந்தத் தலைப்பில் உங்களைப் பற்றியும், கோயிலைப் பற்றியும் எழுதப்போறேன்" என்றேன்.

உடனே நோட்டுப் புத்தகத்தை எடுத்து வேகமாக ஒரே சீராக எழுதத் துவங்கினார். அது அருமையான முன்னுரை. அது இந்த நூலின் முன்பகுதியில் அமைந்துள்ளது.

சுவாமிகள் கூறுகிறார். "நேற்று சோமு ஆச்சாரி இறந்ததைக் கேட்டதும் மனசுக்கு சிறு அதிர்ச்சியாகவும், மிகுந்த வருத்தமாகவும் இருந்தது. அதைக் கேள்விப் பட்டதிலிருந்து என்னால் எதுவுமே செய்ய முடியலே. என் பலம் முழுவதும் போயிட்டது போல் இருக்குது. பேசாமல் ஆசிரமத்துக்குள் போய் விட்டேன். மனம் கலங்கிப்போயிட்டது. தாழ்ப்பாள் போட்டுக்கிட்டு 'தொந்திரவு செய்யவேண்டாம்'ன்னு வெளியே எழுதிவிட்டு அப்படியே படுக்கச் சென்றேன். காலையில் அந்தச் செய்தி வந்ததும் அப்படியே படுக்கையில் விழுந்தேன். இப்பதான் சாயங்காலம் எழுந்தேன். குளிச்சிட்டு இதோ வந்தேன்.

"எப்படிப்பட்ட மனுசன் போயிட்டான்! என் பலம் முழுதும் போயிட்டது" என்று திரும்பத் திரும்ப அதையே கூறினார். அருகில் அவர் அண்ணன் இருந்தார். குடும்பத்தவர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். சாமி மகன் திருமணத்திற்குக் குடும்பத்தாருக்குத் துணி எடுப்பது என்று பேச்சு நடந்தது.

சாமி சொல்றார். "இப்ப நிலைமை சரியில்ல. எதிர்பார்த்த பணம் வரல. முன்னே சொன்ன மாதிரி நிறைய பணத்துக்கு துணி எடுக்க முடியாது. 250, 300 அப்படிக் கொஞ்ச பணத்திலேயே முடிச்சிடு."

"நான் செயற்கை சந்நியாசி இல்லே"

"இந்த முருகன் யாரெல்லாம் எனக்குக் கைகள் மாதிரி இருக்கறாங்களோ அவங்களை எல்லாம் எடுத்துக்கறான்" என்று மிக வருத்தமாகக் கூறினார்.

"நான் துறவி. மரணம் என்பது சாதாரணம் என்று எனக்குத் தெரியும். பற்று, பந்தம், பாசம் இல்லாமல் இருக்க முடியும். உணர்ச்சி இல்லாமல் இருக்க முடியுமா? ஒரு ஆடு, கோழி மரணத்துக்கு நான் அப்படி வேதனைப்படமாட்டேன். இந்த சோமு ஆச்சாரி மரணத்துக்கு வேதனையால ஒரு ரெண்டு, மூணு நாள் ஒன்னுமே செய்ய முடியல. அவ்ளோ வேதனை. இது ஏன்னே எனக்குத் தெரியல. இயல்பாவே பொங்கிட்டு வருது. இத அடக்கவும் முடியல. ஏன் அத அடக்கிச் செயற்கையாக்கணும். நான் செயற்கைச் சந்நியாசி இல்லே.

"அப்போ அந்த கலாட்டா நிகழ்ச்சியின் போதுகூட அவன் நாள்தோறும் வருவான். போலீஸ்காரங்க அவனைத் தடுத்து," யார் நீ? தினந்தோறும் மலைமேலே போறே"ன்னு கேப்பாங்க. அதுக்கு அவன், "நான் இன்னைக்கு, நேற்றல்ல, எத்தனையோ வருஷமாப் போறேன். முருகனைப் பாக்கப் போறேன்; சாமியப் பாக்கப் போறேன். நீ யார் போகக் கூடாதுன்னு தடுக்கறது"ன்னு கேட்பான்.

பெரும்பாலும் அவர் டாக்சியிலே வருவதாகச் சாமி சொல்வார். அவரோடு நிறைய நான் பேசி இருக்கிறேன். குழந்தைபோல் மிகுந்த

அன்போடு பேசுவார். ஒருநாள் நானும் மலையடிவாரத்துல அவர் டாக்சியில வருவதைப் பார்த்தேன். சுவாமிகளும் நானும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். சாமியைப் பார்த்ததும் அவர் அந்த டாக்சியில் சாமியை ஏறச்சொன்னார். சுவாமியும் ஏறிக்கொண்டார். டாக்சி புறப்படுவதற்கு முன் அருகில் நின்றிருந்த என்னிடம் "என்னை அவர் ஊருக்குக் கார்லே வாங்கன்னு கூப்பிட்டுக்கிட்டே இருக்கார். ஒவ்வொரு வாரமும் வரும்போதும் கூப்பிடறார். அவர் திருப்திக்கு இங்கிருந்து ஆஸ்பத்திரி வரை அவருடன் இந்தக் கார்லே போறேன்னு" சிரித்தபடியே சொல்லிவிட்டு, அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு போனார்.

சுவாமிகள் தொடர்ந்து சொல்கிறார்:

கோயிலில் சுவாமிகளின் அறை. சுவாமிகள் சுகமாக - ரிலாக்ஸ்டாகத் தன்னுடைய அறையில் அவர் வழக்கமாக உட்காரும் சிறிய பெஞ்சில் அமர்ந்து சுவரில் சாய்ந்தபடி, மிகுந்த ஓய்வாகத், தனக்குள்ளேயே ஆழ்ந்து கூறுகிறார்.

மிக ஆழ்ந்த நிலையாக நாம் என்னென்ன கேட்க வேண்டுமென்று நினைத்தோமோ, அவையெல்லாம் பொங்கி வெள்ளம்போல் தாமாக வந்தபடியே இருந்தன. அதில் மூழ்கியபடி காதுகளை மிகமிகக் கூர்மையாக வைத்துக் கொண்டு, இதயத்தை அடி ஆழம்வரை திறந்து வைத்துக் கொண்டேன்.

"இந்த முருகன் எனக்கு எப்படி அருள் செய்யறான். கடவுள் சக்தின்னா என்ன?


"இவ்வளவு பெரிய காரியங்கள் எப்படி நடக்குது. இதற்கான பணம் எப்படி வருது?"

இதற்கு முன்பு இதுவரை ஆகியிருக்கும் செலவுகளையெல்லாம் தாளில் எழுதி அவ்வளவு உற்சாகத்தோடு இனி ஆகவேண்டிய செலவுகள். வேலைகளைப் பற்றியும் கூறிக்கொண்டே வருகிறார். அது கோடிக்கணக்கில் வந்து கொண்டிருக்கிறது.

"நான் சாப்பிட்ட உடனே தூங்கிடுவேன். ஆமாம். பசி எடுத்ததும் அது ஏழு மணி, ஆறரை மணியாக இருந்தாலும். களைப்பா, ஒரு மாதிரியா இருந்தா உடனே தூங்கிடுவேன். ஒரு ஒருமணி நேரம், ஒன்றரை மணி நேரம் என்னை மறந்து நல்லாத் தூங்கிடுவேன். அப்படித் தூங்கிட்டா அப்புறம் அன்னைக்கு முழுதும் உற்சாகந்தான். மனமும், உடம்பும் நல்லா வேலை செய்யும்," என்றார் சிரித்தபடி.

என்சிலை தியானவடிவில்:

"என் சிலையை தியானவடிவத்தில் கணபதி ஸ்தபதி, துவாரபாலகராகப் புதுக் கோயிலில் செய்து வைத்திருக்கிறார். நான் வேண்டாம்ன்னு சொன்னேன். அவர் 'இல்ல சாமி! கோயில் கட்டியவர்களின் சிலை



கோயிலில் இருக்க வேண்டும். இராஜராஜன் கூடத் தன் சிலையைப் பெரிய கோயிலில் வைத்திருக்கிறான்" என்றார்.

"அதை இதுவரை யார்கிட்டேயும் சொல்லலே".

நான் சொன்னேன். "சுவாமி! சிலைகள் வைப்பதோடு அது பற்றிய அழகான குறிப்பும் எழுதி வைக்கவேண்டும். ராஜராஜன் கோயில்லே அந்தச் சிலையில் அது தெளிவா இல்ல. யார் சிலைன்னு கூடத் தெரியல."

கும்பாபிஷேகம் நிறைவு அன்று அந்தச் சிலையைப் பார்த்தேன். சுவாமிகளின் பெயர் எழுதி இருந்தது. இந்தக் கும்பாபிஷேகம், போட்டோ அது, இது என்று வேலையில் அதை நான் மறந்து போனேன். எளிய மக்களுக்கும் நன்றாகப் புரியும்படி அதைக் கொஞ்சம் அழகாகவும் விரிவாகவும் எழுதியிருக்க வேண்டும்.

"எனக்கு ஒரு கஷ்டம் இருந்துதுன்னா, ஆசிரமத்திலே கீழே, தரைக்கு அடியில் இருக்கும் தியான ரூமுக்குப் போவேன். அங்கிருக்கும் கண்ணாடி முன்னாலே ரொம்ப ரிலாக்ஸ்டா, கால்களை இப்படி வேல்மேலே படும்படி கூடச் சுகமா நீட்டி உக்காந்துக்குவேன். ஒரே ஒரு ஊதுவத்தி மட்டும் ஏத்திக்குவேன். கீழே பள்ளம் இல்லையா, காத்து ஒரு மாதிரி குறைவா இருக்கும். விளக்கு ஏத்தி வச்சிருப்பேன். அதுவும் கண்ணாடியிலே நல்லாத் தெரியும். கண்ணாடியிலே அதப் பார்த்தபடி இருப்பேன். ரொம்ப ரிலாக்ஸா இருப்பேன்.

"மனசிலே இருந்து நினைப்புகளெல்லாம் வரும். கொஞ்சம் கொஞ்சமா மேல வரும். நான் அவைகளைச் சும்மா கவனிச்சபடி இருப்பேன். எதையும் தடுக்கமாட்டேன். என்னென்னவோ நினைவு வரும். அன்னைக்கு நடந்த நிகழ்ச்சிகளை ஒட்டிய நினைவுகள்; உயர்ந்த நினைவுகள்; சாதாரண நிகழ்ச்சிகள்; நினைவுகள். சராசரி மனிதன், மிகமிகச் சராசரி மனிதனுக்குரிய நினைவுகள். அதற்கும் கீழான நினைவுகள். அவன் நம்மை இப்படித் திட்டினானே... பேசினானே... அதுக்கு இப்படி பதில் சொல்லி இருக்கணும்; பேசி இருக்கணும் விட்டுட்டமே. அவனை இப்படிப் பேசியிருக்கணும்ன்னு சராசரிக்கும் கீழான நினைவுகளும் வரும். பேசாம, தடுக்காம கவனிச்சிக்கிட்டே இருப்பேன்."

தியான நிலையில் மிகமிக உச்சமான தியானநிலையாக இதுதான் சொல்லப்படுகிறது. பத்மாசனத்தில் அமர்தல், முதுகை நிமிர்த்துதல், சீரியஸாக உட்காருதல், ஜெபம் அல்லது மந்திரம் சொல்லுதல், ஜெபித்தல் இவையெல்லாம் மிகமிக ஆரம்பகால தியான நிலைகளாகும். இப்போது சுவாமிகள் இருக்கும். இந்த தியான நிலைக்குச் "சாட்சியாகப் பார்த்தல் (WITNESSING) என்று யோக நூல்களில் சொல்லப்படுகிறது. இதுதான் தியானநிலைகளில் மிகமிக உச்சமான நிலை.

"முன்பெல்லாம் முருகன் சிலைக்கு முன்னாலே தியானத்தில் இருப்பேன். அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, பாதங்களைப்

பிடித்துக் கொண்டு, ரொம்பப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு இருப்பேன். இப்போது இருக்கும் பாலாலயத்தில் அப்படி உட்கார முடியலே. உடம்பு முடியலே.அதனாலே நடுராத்திரியில வேலைகள் முடிந்தபிறகு ஒரு பத்துப், பதினோரு மணிக்குச், சில நேரங்கள்ல ஒன்னு, ஒன்னரை மணிக்குத் தியான அறையில் போய் உட்காருவேன். ஒரு பதினஞ்சி, இருபது நிமிடம் உள்ளே இருந்து நினைவுகள் எல்லாம் வரும். அதை அப்படியே பார்த்துக்கொண்டு இருப்பேன்.

"இந்தக் கோயிலுக்கு வந்தாச்சி. இவ்வளவு பெரிய வேலையை எடுத்திட்டோம். இத முடிக்கணும். என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? என்ற யோசனை வரும். அதே நினைப்பு. அது வந்ததும் முன்னே வந்த சாதாரண நினைப்புக்கள் எல்லாம் போயிடும். மேலான நினைப்பு - ஆழமான நினைப்பு வரும். எப்படிக் கோயில் கட்றது? எடுத்துட்டு இருக்கற வேலைகளையெல்லாம் எப்படி நிறைவேற்றுவது என்ற நினைப்புக்கள்.

"பிறகு கொஞ்ச நேரம் கழிச்சி அதற்கான வழிகளும் வரும். லேசா, கொஞ்சம் கொஞ்சமா வர ஆரம்பிக்கும். அதையும் சும்மா கவனிச்சிட்டு இருப்பேன். அதுவே தெளிவான வழிகளா உருவாகும். மனசிலே ஒரு தெளிவும், உறுதியும் கொஞ்சம் கொஞ்சமா திடப்படும். மிகுந்த உற்சாகம் ஏற்படும்; வலிமை வரும்; உடம்பிலும் சக்தி பிறக்கும்; நெறஞ்சி இருக்கும். எண்ணங்களில் தெளிவு... தெளிவான வழி - பாதை தெளிவுபடும். காரியங்களைத் துவங்கிடுவேன். நாள் முழுதும்; மாசம் முழுதும்; எடுத்துக்கிற அதே வேலையிலே மூழ்கிக்கிட்டே இருப்பேன். வேலைங்க ஒன்னு; அடுத்து ஒன்னு; அடுத்து, அதை அடுத்து, அதை அடுத்து; அதற்கான ஆட்கள்; பணம்; வழிமுறைகள்; தடைகள் வந்தால் தீர்க்கும் முறைகள்ன்னு சலிக்காம தடையே இல்லாம செய்துக்கிட்டே போவேன்.

"மறுபடியும் தளர்ச்சி, உற்சாகக் குறைவு, உடம்பு களைப்பு வந்துடும். மறுபடியும் அவங்கிட்டப்போயி, சிலைக்குப் பக்கத்திலே உட்கார்ந்து என் பிரச்னைக்கு வழி கெடைக்கிற வரைக்கும் அவனை விடமாட்டேன்.

அங்கிருந்து எழுந்திருக்கவே மாட்டேன். அவன் மேலேயே தலையை இடிச்சிக்குவேன்.'' இப்படி இடிச்சி காய்ந்து போன நெற்றியின் மேல்பகுதியைக் காட்டுகிறார்.

"ஒரு பக்தருக்கு ஒரு பெரிய கஷ்டம். அவராலே தாங்க முடியாம, சாமிகிட்ட சொன்னா திரும்ன்னு நம்மகிட்ட வர்றார். நம்ம பக்தர். நாம அதைத் தீர்த்து, அவருக்கு அமைதியும், நிம்மதியும் தரணும். அதனால முருகன் கிட்டப்போய் அதைச் சொல்லுவேன். வாய்விட்டுச் சொல்லுவேன். அவர் இப்படிக் கஷ்டப்படறார்; நீ தான் தீர்த்து வைக்கணும்னு. வழி சொல்லுன்னு.

"வழி சொல்ல மாட்டான் திருடன். நானும் விட மாட்டேன். அந்த பக்தருடைய கஷ்டம் போறதுக்கு ஒரு வழி எம் மனசிலே தெளிவா பிறக்கிற வரைக்கும் அவன்கிட்டே மன்றாடிக்கிட்டே இருப்பேன். ஒன்னும் வழி பிறக்கலேன்னா, என் தலையை அவன் மேலே பக்கத்திலே இருக்கும் கல்லிலே டங், டங்ன்னு இடிச்சிக்குவேன். 'ஓ'ன்னு அழுவேன். திட்டுவேன்; கதறுவேன்".

இப்படி சாமி அடிக்கடி மோதி, அழுவதைப் பார்த்திருப்பதாக நெருக்கமான பணியாளர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

"இது தொடர்ந்து நடக்கும் நெற்றியெல்லாம் வீங்கும். அதற்குப் பிறகுதான் திருடன் வழி சொல்லுவான். அந்தப் பிரச்சனைக்கான வழி லேசா, தெளிவா மனசிலே வரும். அப்படியே உக்காந்து கவனிச்சிட்டு இருப்பேன். கொஞ்சம் கொஞ்சமா தெளிவு வரும். மனமும் உற்சாகமாகி, உடம்பிலும் களைப்புபோய் வலிவு வரும். தெளிவான செயல்திட்டம், காரியம் செய்யற நிலை வரும். அதற்குத் தகுந்த சூழல் வரும். ஆட்கள் வருவார்கள். யாரிடத்தில், யார் மூலமா செய்யறதுன்னு மனசிலே வரும். அதன்படி விடாம தொடர்ந்து காரியம் செய்துக்கிட்டே போவேன். காரியம் தெளிவா முடியும்.

"அப்படித்தான் என்னுடைய இந்தப் பிரம்மாண்டமான காரியம் நடக்குது."

"முப்பத்து நாலு வருஷமா இப்படித்தான் நடக்குது."

இந்தக் கோயிலை புதுசாக் கட்ட, ஏற்கனவே இருந்த பழைய கோயிலையும் இடிச்சிட்டமே, எப்படிடா கட்டப்போறோம்ன்னு பயம் வந்திடிச்சி.



சுவாமி பழைய கோயிலை இடிக்கிறார்.
'தொபால்'னு விழுந்திடுச்சி

"பாலாலயம் கட்டி வச்சாலும் அதுவே கோயில் ஆயிடாது. பிறகு சுற்கோயிலும் கட்டி முடிச்சோம். முன்பு இருந்தது சுண்ணாம்பிலே கட்டின செங்கல் கோயில். அது உளுத்துப் போனதால நான்தான் இடிச்சேன். இடிச்சதும் 'தொபால்'ன்னு விழுந்திடுச்சி.

"சுவாமிகளின் தந்தையும், "அப்பா... அப்பா" என்று எல்லோராலும் அழைக்கப் பட்ட திரு. மணியக்காரரையும் அந்தப் பழைய கோயில் இடிப்பு விழாவில் கலந்துகொள்ளும்படிச் செய்தார்கள்.



சுவாமியின் தந்தை மணியக்காரரும் அந்த பூஜையின் போது கோயில் இடிப்பதை ஆரம்பித்து வைக்கிறார்.

"இந்தக் கோயில் கட்டி முடிந்தது. கோயிலைச் சுத்தி விஸ்தாரமா மண்டபம் கட்டினாத்தான் கிருத்திகை, ஆடிக்கிருத்திகை நாட்களில், விழாக்காலங்களில் சரிப்பட்டு வரும். இப்பவே சாதாரண

நாட்களிலேயே வெளியூர்களிலிருந்து டூரிஸ்ட்கள் கூட்டம் கூட்டமா வந்திட்டுப் போறாங்க. திருச்செந்தூர், கன்னயாகுமரி இந்த ஊர்களிலிருந்து எல்லாம் கூட்டம் வருது." இதுக்கு, சுவாமி "சீட்டு எழுதிக்கொடுப்பது" ஒரு காரணம்.

"மழை வந்தால் தடையில்லாம பக்தர்கள் உட்கார, வழிபட, வெய்யில்லயிருந்து தப்பிக்க ஒரு மண்டபம் அவசியமாயிட்டுது. சின்ன மண்டபமா போட்டு, அதுவே கொஞ்சம் கொஞ்சமா விஸ்தாரமாயி இருபத்தி நாலு லட்சத்திலே போட்டது, இன்னிக்கி ரெண்டு கோடிக்கு வந்திருக்கு.

"இடையிலே பணம் கிடைக்கலே. லட்சம் லட்சமா பணம் வேணும், கீழேயிருந்து கல்லு, மண்ணு, சிமெண்ட், இரும்பு எல்லாத்தையும் மேல மலைக்கு எடுத்தாரனும். ஒரு மூட்டை சிமெண்ட்டைக் கீழே இருந்து மேலே கொண்டு வர அஞ்சு ரூபா ஆகுது. இப்ப ஏழு ரூபா ஆவுது. ஒரு லாரி மணலைக் கொண்டு வரணும். ஜல்லி கலக்கிற மிஷினை மேலே கொண்டாரனும். சென்ட்ரிங் போடணும். அது பெரிய வேலை.

"கடைக்கால். மண்டபத்துக்கு பெரிய தூண்களைப் போட்டேன். தரைமட்டம் கொண்டு வந்தேன். அன்றாடம் பணம் தேவை. பொருள் தேவை. ஆள், கட்டிட ஆலோசனை தேவை.

"ஒரு காலக் கட்டத்தில் கோயில் கட்டற வேலையை அப்படியே நிறுத்திட்டேன். ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் என்று வேற காரியங்கள்லே ஈடுபடுத்திக்கிட்டேன்.

"என்றாலும், எல்லாம் முருகனைக் கேட்டு, அவனைத் தியானம் பண்ணி அவன் காட்டுற வழியிலேதான் நடந்தது; நடக்கிறது. முருகன் சரியான வழி காட்டறவரைக்கும் காத்துக்கிட்டிருப்பேன்.

"இப்ப பாரு, தமிழ்நாட்டில் சமீபத்தில் ஏழையாக இருந்த, தன் உழைப்பாலும், முருகனிடம் கொண்ட மிகுந்த பக்தியாலும் உயர்ந்து செல்வநிலைக்கு வந்த ஒருவருக்குப் பத்து வருஷத்துக்கு முன்னேயே எழுதினேன். 1988லே. எந்தப் பதிலும் வரலே. அப்புறமும் நான் எழுதினேன்.

"நான் இப்படியெல்லாம் முருகன் திருப்பணி செய்றேன். இந்தக் கோயில் வேலை எடுத்தது நிக்குது. நீங்க உதவி செய்யுங்க"ன்னு ஓரிரண்டு கடிதம் எழுதினேன். அதுக்கும் பதில் இல்லே. இப்படியே பத்துப், பதினைந்து வருஷம் அவரைப் பத்தி நினைப்பேன்; நம் கோயில் காரியங்கள், நடப்பது பற்றி எழுதிப், பிரசாதம் அனுப்பிவைப்பேன்.

"ஒருநாள் வந்தார். நாம நம்ம கோயிலுக்கு வரும் பக்தர்கள் - முக்கியமான வி.ஐ.பி.க்களுக்குத் தரும் முறையான வரவேற்பை அவருக்கும் செய்தோம். நாம் செய்யும் திருப்பணிகளையெல்லாம் அமைதியாகக் கூர்மையாகப் பார்த்தார். ஒவ்வொரு நுட்பத்தையும் பார்த்தார். நாமும் ஒண்ணும் கேட்டுக்கல. அதன் பிறகு மறுபடியும் வந்தார். வந்து நாம் கோயில் கட்டச் செய்யும் ஒவ்வொன்னையும் கவனிச்சி இருக்கார். இங்கே ரூமிலே வந்து சொன்னார். "உங்க லெட்டருங்க எல்லாம் கெடச்சிக்கிட்டே இருந்தது. ஆனா இப்பத்தான் வர்றதுக்கு டைம் வந்தது"ன்னார். நாம கோயில் கட்டறதைப் பற்றி விரிவாகவும், கணபதி ஸ்தபதி வேலை செய்யறது, கல் கோயில் கட்டிமுடிச்சி இருக்கிறது, மண்டபம் கட்றது, கொஞ்சம் கொஞ்சமா அதனுடைய அளவு அதிகமாயிட்டே போறது, தவிர்க்க முடியாத நிலையில் அதைக் கட்ட வேண்டி வந்தது, பணம் தேவைப்பட்டது, வேலைகள் நிறுத்தி வச்சி இருக்கிறது.

"நாற்பது கைவினை மேஸ்திரிகள் கோபுரம் கட்ட ஈடுபடுத்தி இருக்கிறது, அவர்களுடைய ஒருநாள் செலவு ரூபாய் பத்தாயிரம் - அதற்கான மேஸ்திரிகள்; சிமெண்ட் மற்றும் சித்தாட்கள், ஒரு மாசத்துக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவழிஞ்சிக்கிட்டிருக்கிறது. எல்லாம் தெளிவாச் சொன்னேன். ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார். "தொடர்ந்து நீங்க கட்டுங்க" சாமின்னு சொன்னார். நமக்கு மனசிலே ஒரு பிடிப்பும், கொஞ்சம் உற்சாகமும் வந்தது. ஆட்களைக் கொஞ்சம் அதிகமாக்கி வேலையைத் தீவிரப்படுத்தினோம்.

"இப்படியே அவர் அடிக்கடி வந்து பார்த்து உற்சாகமும், வரும்போதெல்லாம் பணமும் கொடுத்தார்.

"கோயிலுக்குப் பலபேர் குடுத்திருக்காங்க. அவரைவிடப் பணக்காரங்க இருக்காங்க. ஒரு புண்ணியவான் இருக்கார். அவருக்கு இருக்கிற பணத்திலே, அவரைச் சார்ந்தவங்க, அவருடைய தொழில்லே வீணாக்கிற பணத்திலே கொஞ்சம்; சில லட்சங்கள் சுலபமாகக் குடுக்கலாம். ஆனா இந்தக் கோயில் கட்டறதிலே அவருக்கு ஆர்வம் இல்லே. வருஷத்துல ஒரு லட்ச ரூபா கொடுப்பார்.

"இப்படித்தான் முருகன் அருள் வந்துக்கிட்டிருக்கு. அன்னாடம் அவனிடம் பிரார்த்தனை, தொடர்ந்து வேலைகள், விடாம வேலைகள், விடாம முயற்சி. விடாம பொறுமை.

"எனக்கு முருகன் அருள் கிடைக்கிறது இப்படித்தான்."

அவர் உட்கார்ந்திருக்கும் அறையின் தெற்குப்பக்கச் சுவரில் மாட்டியிருக்கும் முருகனின் பெரிய படத்தைக் காட்டி "முருகன் இப்படித்தான் அருள் செய்யறான்." மற்றவங்க எல்லாம் இதை பகவான் அருள்னு காட்டுவாங்க. அது, இதுன்னு சொல்லுவாங்க; பத்திரிகையிலே போடுவாங்க; விளம்பரம் பண்ணுவாங்க.

"நமக்கு அதெல்லாம் இல்லே. இந்த முருகன் கோயில் வேலைகள் இந்த முப்பத்து மூணு வருஷமா இப்படித்தான் நடந்துக்கிட்டு இருக்கு! இப்ப இந்தக் கோயில் கட்ற செலவு கும்பாபிஷேகம் முடிய ரெண்டரை கோடி ரூபாய்க்கும் மேல் வந்துட்டது.

"தமிழ்நாட்டிலே எந்தக் கோயிலும் ரெண்டு கோடி ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டுக் கோயில் வேலை நடந்ததில்லை. மதுரை மீனாட்சிக் கோயிலும், பழனி முருகன் கோயிலும் கூட ஒன்றரைக் கோடி ரூபாய் அளவில்தான் நடந்திருக்கு.

"அதெல்லாம் பழம் பெரும் கோயில்கள். கோடிக்கணக்கான சொத்துக்கள், ஆயிரம் ஆண்டுகளான பெரிய கோயில்கள். ஒரு பெரிய வியாபாரி. "பத்து லட்சம் ரூபாய் பதினைந்து லட்சம் ரூபாய் திருப்பணியா நான் செய்யறேன், எனக்கு ஒதுக்குங்க"ன்னு முன்னே வந்து எடுத்துச் செய்யறாங்க.

"நம்ம கோயிலுக்கு இதெல்லாம் எதுவுமே இல்லியே.

"இன்னொன்னு தெரியுமா?

"அந்த அறநிலையத்துறை ஆணையர் மறுபடியும் வந்தார்."

நான்: "அவரா?"

சுவாமி: "உம்... அலுவலகத்திற்கு உதவியாளர் சென்றபோது, பிரசாதத்தைக் கையில் கொடுத்தபோது, அதை வாங்கக்கூட மறுத்து பி. ஏ க்கிட்ட குடுங்கன்னு கையைக் காட்டினார்.

"என்னய்யா, இந்தச் சாமியாரு? ஒன்னு, ஒன்ணே கால் கோடி எஸ்டிமேட்டு! ஒன்றரைக் கோடி செலவழிச்சேன்னு சொல்றாரு. பழனிக் கோயிலும், மதுரை மீனாட்சிக் கோயிலும்தான் தமிழ்நாட்டிலே ஒரு கோடி ரூபாய் அளவிலே திட்டம் போட்டுச் செய்ற கோயிலு. இவரு என்னவோ பேசறார்" என்று பேசினார்.

"இப்போ வந்தபோது நாம் குடுத்த பிரசாதத்தை எழுந்து அன்பா வாங்கிக்கிட்டார். கோயில், கோபுரம் எல்லாம் சுற்றிப் பார்த்தார். "இவ்வளவு பெரிசா? சாமி ஒருத்தரே முயற்சி பண்ணிக் கட்டியிருக்கிறாரே!" என்றார். ஏதோ அவர் மனசிலேயும் மாற்றம் வந்திருக்கு!"

நான்: "இன்னும் அவர் எவ்வளவு நாள் சர்வீசிலே இருப்பார்."

சாமி: "ஒரு மாசமோ, ஒன்றரை மாசமோ இருப்பார்."

நான்: "சாமி! எவ்வளவு ரூபாய் இதுவரைக்கும் செலவாயிருக்குன்னு கொஞ்சம் எழுதிக் காண்பியுங்க."

லெட்டர் பேடில் காகிதத்தைக் கிழித்துச் சாமி அவருக்கே உரிய வேகப்படியும், உன்னிப்போடும், உற்சாகத்தோடும் வேகமாக எழுதினார்.

ரெண்டு கோடிக்கு வந்தது.

"மலைபாதை அமைக்கிறோம். அரசாங்கம் "நமக்கு நாமே திட்ட"த்தின் கீழ் என்ன செலவானாலும் அதில் முக்கால் பங்கு தருகிறேன் என்று ஒப்புதல் தந்திருக்கிறது. கலெக்டர் ஆர்டர் போட்டிருக்கிறார். 20 லட்சம்

ஆனா 5 லட்சம் நாம கட்டணும். அமைச்சர் துரைமுருகன் வர்றாரு சனிக்கிழமை அடிக்கல் நாட்டுவிழா. - அவர்தான் இதெல்லாம் ஏற்பாடு செய்யறாரு. அவருக்கு ஒரு கவுரவம் செய்தமாதிரியும் இருக்கும். அதுக்குத்தான் அடிக்கல் நாட்டு விழா." சொல்லிவிட்டுச் சுவாமிகள் சிரிக்கிறார். அந்த நிகழ்ச்சியின் அழைப்பிதழ் நமக்கும் வந்தது.

"மலைபாதைக்காக மலையை உடைக்கப் பதிமூணு குடும்பம் இங்கேயே குடிசை போட்டுக் கொடுத்திருக்கேன். ஒரு எழுபதாயிரம் கல் உடச்சி விழுந்திருக்குது. சுவர் கட்டுவதற்கு உதவும். இன்னிக்கு இன்னும் உடைச்சிக்கிட்டிருக்காங்க."

முதலில் போனதும் சுவாமி பாலாற்றில் புதுக்கிணறு அமைப்பது பற்றிக் கூறினார். அதில் அவருக்கே உரிய வேகம்... ஆர்வம்... சிரிப்பு... உணர்ச்சி இவைகளொடு பேசினார். "பிறகு இந்தப் பாலாத்திலே புதுசா பெரிய கிணறு போடறேன். மலைமேல இப்ப இருக்கிற டேங்க்க இடிச்சிட்டுப் பெரிய டேங்க் கட்றேன். இப்ப இருக்கிற தண்ணி டேங்க். கீழே இருக்கற குடியிருப்புங்க. கல்யாண மண்டபம், அதுக்கு அப்பாலே இருக்கும் ஊர் மக்களுக்கும் குடிக்கத் தண்ணி.

"கும்பாபிஷேகம் முடிஞ்சதும், புஷ்பாஞ்சலி ட்ரஸ்ட், - அன்றாடம் முருகனுக்குப் பூ சாத்துவதுக்கு ட்ரஸ்ட். 365 நாளுக்கும் 365 பேர் பூ சாத்த ட்ரஸ்ட். இவ்வளவு ரூபாய்; ரெண்டாயிரம், மூவாயிரம் கட்டினா. பேங்கிலே, போட்டா, ஒரு வருஷத்துக்கு வரும் வட்டியை எடுத்து அன்றாடம் பூ அலங்காரம்.

"முருகன் அலங்காரத்துக்கு அரசாங்கத்தை நம்பி இருக்க வேண்டியதில்லே. தனிப்பணம்.

"அதுபோல அன்னாடம் புதுஆடை அணிவிக்க அதுக்கும் வருஷத்துக்கு ஒருத்தர் என்று 365 பேர் ட்ரஸ்ட். ஈசியா குடுப்பாங்க.

"ஒரு நாள் போட்ட துணிய அடுத்த நாள் போடறது இல்ல. எடுத்து ஒரு வாரம் பத்து நாள்ன்னு சேர்த்து வச்சி எத்தனையோ அக்கம்பக்கம் கோயிலுக்குக் குடுக்கிறேன். வந்து வாங்கிக்கிட்டுப் போறாங்க.

"நல்ல துணிக்கு வசதி இல்லாம கிழிஞ்சிபோன துணியை இந்த முருகன் கட்டிக்கிட்டிருந்தான். இப்ப அவன் மற்றவங்களுக்குத் துணியைக் குடுக்கிறான். இப்ப நிறைய கற்பூரம் வருது. சுத்துவட்டாரக் கோயிலுக்குக், கீழ்மின்னல் கோயிலு, இப்பவே நெறய குடுக்கிறேன். கற்பூரம் பிளாஸ்டிக் கவர்லே வந்ததும் ஏத்தினது போக, ஒரு பக்கட்டிலே சேத்து வைக்கிறேன். நிறைய வருது. எல்லாத்தையும் கொளுத்த முடியல. அதனாலே பக்கத்துக் கோயில்களுக்குக் குடுக்கிறேன்.

"அன்னைக்கு ஒரு துண்டு கற்பூரத்துக்குக் கதியல்லாம இருந்த முருகன் இன்னைக்குக் கற்பூரம் நிறஞ்சி, அக்கம்பக்கம் கோயிலுக்கும் தர்றான்."

மகிழ்ச்சிச் சிரிப்பு.

"அரசாங்கப் பணத்தை, அறநிலையத்துறைப் பணத்தைப் பூவுக்கோ, துணிக்கோ, கற்பூரத்துக்கோ என் முருகன் எதிர்பார்க்கக் கூடாது."

கையையும், கால்களையும் நீட்டி அசைத்தபடி புருவங்களை மேலிமைக்கு மேல் தூக்கியபடி, நடு நடுவே 'ஹங்' என்று சொல்லியபடியே, அவ்வளவு சிரிப்போடு கூறுகிறார்.

"உண்டியலில் விழற பணத்தை எடுத்து அவங்க கரண்ட் லைட் சார்ஜ் கட்டிட்டு, அவங்க சம்பளத்துக்கு எடுத்துக்கட்டும், முருகனுக்கு ஒன்னும் செய்ய வேண்டாம். முருகனை அவங்க தயவிலே வைக்கமாட்டேன்.

"அதோடு மதியத்திலே ஒரு ஐம்பது பேருக்குப் பிரசாதம்." சாமி இத அரசாங்கத்திலே திட்டம் கொண்டு வர்றதுக்கு முன்னதாவே சொன்னது. "ஒரு பதினொன்னு, பதினொன்றரை மணிக்குத் தயிர் சாதம், ஒரு தொன்னையிலே இருநூறு கிராம் வர்ற மாதிரி. இங்கே இருக்கிற பிச்சைக்காரங்களுக்கு, அவங்க, இவங்களுக்கு இரவிலே இங்கே முருகனைச் சேவிக்க வரும் சேவார்த்திகளுக்கு, கோயிலை மூடுவதற்கு முன்பாக வரும் பக்தர்களுக்குக் குடுக்கறதுக்கு ஒரு ட்ரஸ்ட் ஏற்பாடு. வேறு எந்த சாதமும், புளியோதரை.. எலுமிச்சை... எதுவும் இல்லே. தயிர்சாதம்தான்.

"ரத்தினகிரின்னா தயிர்சாதம் தான் பிரசாதம்ன்னு எங்கும் தெரியணும்."

நான்: "செய்யலாம். தயிர் சாதத்தையே பத்து வகையாகச் சமைக்கலாம். ரொம்ப ருசியா இருக்கும். சூட்டோட குடுத்தா இன்னும் ருசியா இருக்கும் சாமி."

சுவாமி "ஆமாம். அப்படித்தான்."

அவருடைய அறையின் தென்மேற்கு மூலையில் கோயில் கோபுர உச்சியில் வைக்கும் பெரிய செப்புக் கலசங்கள் கீழே ஒரு இருக்கையில் வைக்கப்பட்டிருந்தன.

"இந்தக் கலசம் கோபுர உச்சியிலே வைக்கறதுக்குப் பொன் முலாம் பூசறேன். தங்கத் தகடு பதிக்கலாம்னு பார்த்தேன். தகட பேத்து சுருட்டி எடுத்தும் பூடுவான். அதனால பொன்னைக் கொழம்பு மாதிரி உருக்கிப் பூசிடணும்.

இங்கே ரூமுக்கு உள்ளே வருபவர்களின் பார்வையிலே கட்டாயம் நன்றாகப் பட்டு உறுத்தும்படி சுவாமி கலசங்களை மேற் சுவரோரத்தில் வைத்திருக்கிறார். வருபவர்கள் சாமிகளின் எதிரே உட்காரும்போது அவர்கள் பார்வை நிச்சயம் அந்தக் கலசத்தில் பட்டே ஆகவேண்டும். இது சாமிகளின் டெக்னிக்.

கண்களைச் சிமிட்டிவிட்டு "ஹா. சித்தூரிலிருந்து ஒருத்தர் வந்து கலசத்தைப் பார்த்தார். பொன்முலாம் பூசவேண்டுமென்று சொன்னேன். இத்தனை கிராம் பொன் கொடுக்கறதா சொன்னார்.

"இன்னொருத்தர் ஒரு நகைக்கடையிலே வேலை செய்பவர். இவ்வளவு தருவதாகச் சொன்னார். எங்கக் கடை முதலாளி கூடக் குடுப்பார். ஆனா அதுக்கு நான் கேரண்டி சொல்லமுடியாது. நான் நிச்சயம் இத்தனை கிராம், அது இத்தனை சவரனா வரும்போது கொண்டு வர்றேன் சாமின்னு சொன்னார்.

"நீங்க 78, 79லே சொன்னீங்க. அப்பவே ஒரு பாலிடெக்னிக், ஒரு என்ஜினியரிங் காலேஜ் கட்டியிருந்தா, இப்பக் கோயில் கட்டப் பணத்துக்கு

இப்ப கஷ்டப்படற மாதிரி படவேண்டியதில்லே. நான் அப்பக் கேக்காமப் போயிட்டேன். இப்பப் பணம் சுலபமா வந்திருக்கும். சுலபமா கட்டியிருக்கலாம். இப்ப கஷ்டமாயிருக்கு."

சுவாமி அதை மூன்றாவது முறையாகச் சொல்கிறார். நானும் மூன்றாவது முறையாக ஒவ்வொரு முறையும் சொன்னதையே திரும்பச் சொல்கிறேன். "இல்ல சாமி. இன்ஜினியரிங் காலேஜ், பாலிடெக்னிக் கட்டியிருந்தா பணம் கிடைச்சிருக்கலாம். ஆனா உங்க கவனம் சிதறிப் போயிருக்கும். பார்த்துப் பார்த்து இவ்வளவு பிரம்மாண்ட மண்டபம் கட்டும் ஓய்வும், யோசனையும் கிடைச்சிருக்காது. இப்ப கட்றதுதான் சரி. பாலிடெக்னிக், காலேஜெல்லாம் கட்டாமப் போனதே நல்லது."

சுவாமி: "ஆமாம். அதுவும் உண்மைதான். இப்ப எல்லாப் பெரிய வேலைகளும் தீர்ந்திடுச்சி. இன்னும் கும்பாபிஷேக வேலை இருக்கு. இதுக்கு முன்னே நாம இவ்வளவு பெரிய கும்பாபிஷேக வேலை நடத்தலே. பாலாலயம் நடத்தினேன். அது மிகவும் சுலபம். கோயில இடிச்சோம். முருகன வெளியே எடுத்து பாலாலயத்திலே வச்சோம். புதிய கோயில்லே முருகனுக்கு உயிர்சக்தித் தரவச்சி ஆவாகனம் செய்து அப்படியே எடுத்து வச்சிட்டோம்.

"அதே மாதிரி ராஜகோபுரம் செய்யும்போதும் அவ்வளவு பெரிசு இல்லே. இது ரொம்பப் பெரிசு. இருபத்தைந்து லட்சம் தேவைப்படும். அது சுலபமா கிடைக்கும். ஒவ்வொருத்தர் ஒரு வேலையை எடுத்துக்குவாங்க. சாஸ்திரிகளுக்குப் புதுத் துணி குடுக்கணும். இதுக்கு இத்தனை ரூபா ஆகும். ஒருத்தர்கிட்டே நீங்க இது எடுத்துக்குங்கன்னா அவங்க அத எடுத்துக்குவாங்க.

"சாஸ்திரிகள், சிவாச்சாரியார், வேதவிற்பன்னர்கள், ஓதுவார்கள் வந்து போக, தங்க, சாப்பிடற செலவு இவ்வளவு ஆகும். அதையும் ஒருத்தர் எடுத்துக்குவாங்க. இப்படி ஒவ்வொரு செலவு. அவங்களுக்கு. ஒரு கால் சவரன்லே தங்கக்காசு போட்டுப் பையிலே பிரசாதமா குடுத்தா "சவரனை பூஜையிலே வச்சிக்குவாங்க. திருப்தி இருக்கும்." இப்படி ஒவ்வொன்றையும் சாமி தன் எண்ணங்களை வெளிப்படுத்திக் கொண்டே வந்தார்.

"கும்பாபிஷேகத்துக்கு வேண்டிய பணம் கிடைச்சிடும். கொஞ்சம் பணம் தேவைப்படும்.

"அப்ப, அப்ப அவன் நினைப்பு வந்துடுது." கலங்கிய குரலில் "பகீரதன் நினைப்பு. அவன் முடிவுக்கு நாம்தான் ஒரு காரணமா என்கிற நினைப்பு. இப்ப உங்களைப் பாத்ததும் அந்த நினைப்பு வருது. ராத்திரியில ஒரு மணி, ரெண்டு மணிக்கு நினைப்பு வந்ததும் அப்புறம் தூங்க முடியலே."

எனக்குள் மிகப்பெரிய வேதனை எழுந்தது.

15. மணியமான பக்தர்.

எவ்வளவு வரலாற்றுச் செய்திகள், எந்தக் காலத்திலிருந்து கிடைக்கிறதோ, அதைத் துல்லியமாக, பக்தர்களுக்கும், அன்பர்களுக்கும் தெரிவிப்பது என்ற பணியில் மிகத் தீவிரமாக முயன்று கொண்டிருந்தேன்.

அப்போது ஒருநாள் இரத்தின கிரியில் திருவிழா. இப்போதுதான் எந்தக் காலமும் அங்கே திருவிழா மயமாக இருக்கிறதே! பந்தலில் நான் என் வழக்கப்படி என்னைச் சுற்றிலும் நடப்பதைக் கவனித்து, மகிழ்ந்தபடி உட்கார்ந்திருந்தேன்.

அப்போது திரு. கலைமணி வேகமாக வந்து என்னை வணங்கி விட்டு, "மணியக்கார அப்பா உங்களைப் பார்க்க வேண்டுமென்று பல முறை சொல்லி இருந்தார். அவர்தான் இரத்தினகிரி கோயில் தர்மகர்த்தாவாக நீண்ட காலம் இருந்தார். அவரிடம் கோயில் பற்றிய நிறைய செய்திகள் இருக்கின்றன. உங்களுக்கு அவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வாருங்கள்" என்றார். நானும் எழுந்து சென்றேன்.

சிறிது தூரத்தில் நாற்காலியில் ஒரு பெரியவர் முன்பற்கள் எல்லாம் போன நிலையில், ஒல்லியான உருவமாக உட்கார்ந்திருந்தார். நிச்சயம் அவருக்கு வயது எழுபதுக்கு அருகில் இருக்கும். தோல் சுருங்கி,

இந்த வயதிலும் சிவப்பு நிறம் மங்காமல் இருந்ததால், வாலிபத்தில் நல்ல சிவப்போடு இருந்திருக்க வேண்டும்.

அவர் பக்கத்தில் அவரை விட உயரமாகக் கொஞ்சம் கருப்பு நிறத்தில், ஒல்லியாக உட்கார்ந்திருந்த ஒருவரோடு அமர்க்களமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார். அவர் அவருடைய சம்பந்தி. அவர் மகளைத் தான் சுவாமிக்கு மணம் முடித்திருந்தார்கள். அவரை எனக்கு முன்பு தெரியும். நல்லவர், உற்சாகமானவர். நாங்கள் அடிக்கடி பேசி மகிழ்வோம்.

என்னை அழைத்துச் சென்ற கலைமணி மணியக்காரரிடம், "அப்பா! இதோ, பேராசிரியர் வந்திருக்கிறார். உங்களிடம் பேச வேண்டும் என்கிறார்" என்றார். உடனே, அவர் சட்டென்று இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு எழுந்து நின்று கொண்டார். நான் அவர் இரண்டு கைகளையும் பிடித்து வணங்கியபடி உட்காரவைத்து, அவர் அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

"நீங்கள் இங்கே மலையில் மாநாட்டிலும், கூட்டங்களிலும் பேசுவதைக் கேட்டு ரொம்பச் சந்தோஷப்பட்டிருக்கிறேன். அதைவிட ரொம்ப சந்தோஷம், நீங்க எழுதின பகவத்கிதை உரை புத்தகத்தைப் படித்தேன்.

"என்ன அழகா, தெளிவா எழுதியிருக்கீங்க! இந்த பகவத்கீதையைப் படிக்கணும்னு வேறு யார் யாரோ, உரை எழுதின புத்தகங்களையெல்லாம்", பல பெயர்களைச் சொல்கிறார் - "படித்தும் ஒன்னும் புரியலே.

"ஒன்று புரிஞ்சுது. நமக்குத் தூக்கம் வரலைன்னா, இந்த மாதிரி உரை எழுதின புத்தகங்களைப் படிச்சா உடனே தூக்கம் வந்திடும்னு. என்னமா தூக்கம் வருது!" என்று சொல்லிக் குழந்தையைப் போல் "கலகல" வென்று நீண்ட நேரம் சிரித்தார். எனக்கும் கட்டுக்கடங்காத சிரிப்பு வந்துவிட்டது.

'இவர் சாதாரண ஆளாக இருக்க மாட்டார்' என்று நினைத்தேன்.

"உங்களுடைய 'ஒவ்வொருவருக்கும் பகவத் கீதை' படிச்சேன். சாங்கிய யோகம் - மத்தவங்க உரை எழுதின சாங்கிய யோகம்; அதப் படிச்சாதான் பகவத்கிதையிலேயே ரொம்பத் தூக்கம் வரும். அதுவே உங்க புத்தகத்திலே

எவ்வளவு அழகா புரிஞ்சுது! என்ன மாதிரி விளக்கம்! என்ன மாதிரி தமிழ்! அடடா! அதப் படிச்சதிலிருந்து எனக்கு ஏற்பட்ட சந்தோஷம்! அன்னையிலிருந்து உங்களைப் பார்த்துப் பேசணும்னு தேடிக்கொண்டிருக் கிறேன்" என்றார்.

பிறகு, மணியக்காரரைப் பலமுறை சந்தித்துப் பேசினேன். கோயிலைப் பற்றிய பல செய்திகளை அவரிடமிருந்து அறிந்துகொள்ள முடிந்தது. அவருடன் இருக்கும்போதும், பேசும்போதும் எப்போதும் ஒரே சிரிப்பும், குதூகலமும்தான்; ஒரு பெரிய மகானோடு இருக்கும் உணர்வே எனக்குத் தோன்றும்.

பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில், இரத்தினகிரி மலையை உள்ளடக்கிய வளமான ஊரான கீழ் மின்னலையும், அதைச் சார்ந்த கிராமங்களையும் அந்த ஆட்சியினுடைய, அந்த ஊரின் மணியக்காரராக ஆட்சி செய்து வந்த பிரிட்டிஷ் ராஜா அவர்தான். அந்த ராஜகம்பீரத்தோடு கனிந்துபோன பக்தியும் இப்போது அவரோடு சேர்ந்துகொண்டு இருக்கிறது. அவர் இரத்தினகிரி கோயிலின் தர்மகர்த்தாவாகவும் இருந்தவர். நமக்குத் தெரிந்தவரையில் இரத்தினகிரி முருக சக்தியின் எலும்பும், தசையுமாக நெடுங்காலமாக இருக்கின்றவர். இப்போது காலமாகிவிட்டார்.

அவர் அப்போது சொன்ன கோயில் பற்றிய செய்திகளை டேப் செய்வது பெரிய உதவியாக இருக்கும் என்று ஒருநாள் மாலை நானும், திரு. கலைமணியும் அவர் வீட்டிற்குச் சென்றோம். மூன்று மணிநேரம், இரத்தினகிரி கோயில், இரத்தினகிரி முருகன், கீழ் மின்னல் ஊர் ஆகிய வற்றின் மணியக்காரர் - ஆங்கில ஆட்சிக்காலத்தின் ஊர் அதிகாரி என்ற அதிகாரத்திலும், கோயில் அறங்காவலர் என்ற உரிமையிலும், மகத்தான முருகபக்தர் என்ற நெகிழ்ச்சியிலும் கோயில் செய்திகளை, வரலாறுகளை, அவர் அறிந்த வகையில், அவர் முன்னின்று நடத்திய வகையில் அழகாகச் சொன்னார். அவர் சொன்னதையெல்லாம் டேப் செய்தோம்.

அன்று காலையிலிருந்து பல பேரிடமாக நாங்கள் கோயிலையும், சாமிகளையும் பற்றிய செய்திகளை டேப் செய்தபடியே இருந்தோம். இவரிடம் டேப் செய்தது, ஆற்றொழுக்காக, அழகாகச் சிரமமில்லாமல்,

சீராக இருந்தது. தெளிவாகச் செய்திகளைப் பேசினார். அப்போதும் அதே வெடிச்சிரிப்புத்தான்.

இரவு ஏழரை மணி. புறப்படும் பொழுது, "நீங்கள் எழுதுகிற 'இரத்தினகிரி வரலாறு ரொம்ப நல்லாயிருக்கும்! நானும் ஒன்னு எழுதி வச்சிருக்கேன். அதைச் சாமிகிட்ட குடுத்துப் புத்தகமாப் போடலாம்னு சொன்னேன். அவர் இதப் படிச்சிட்டுக் "கற்பனை நெறய இருக்கு. இதெல்லாம் போட முடியாது"ன்னு திருப்பிக்கொடுத்துட்டார். இது உங்களுக்கு உதவியா இருக்கும் வச்சிக்குங்க" என்று ஒரு பெரிய நோட்டைக் கொடுத்தார்.

அப்போதும் அதே சிரிப்புதான். சுவாமி திருப்பிக் கொடுத்த கதையை, அவர் என்னிடம் சொன்ன விதம் எனக்குச் சிரிப்பை உண்டாக்கிவிட்டது.

முன்னே "என்னைச் சேவைக்கு வெச்சிக்கினு என் மகனைக் குடுத்துடு"ன்னு முருக வடிவில் இருந்த தன் மகனிடம், அவர் கேட்டபோது, 'நீ கிழவன், ஒரு படிக்கட்டைத் தாண்டறதுக்கே நேரமாவுது. நீ என்னா திருப்பணி செய்வேன்னு அனுப்பிச்சிட்டாரு முருகன். இதைச் சுவாமிகளின் துணைவியார், மணியக்காரரே இப்படிச் சொன்னதாக என்னிடம் சொன்னார். அது டேப்பிலும் இருக்கிறது.

"இப்ப முருகனைப் பத்தி வரலாறு எழுதிக்கொண்டு போனா, 'இதுல உண்மையில்லே, கற்பனை நிறைய எழுதியிருக்கே. நீயே வச்சிக்கோ!" ன்னு' திருப்பிக்கொடுத்துட்டார்ன்னு சொன்னார்.

நான் அந்த நோட்டை வீட்டிற்குக் கொண்டு வந்து படிக்க ஆரம்பித்தேன். ஆங்காங்கே கையெழுத்தைப் புரிந்து கொள்வது கொஞ்சம் கடினமாக இருந்தது. கல்லூரிப் பணியிலிருந்து விடுபட்டதும், பத்து நாட்கள் தனிமையில், என் சென்னை வீட்டில் உட்கார்ந்து கொண்டு, அந்த நோட்டில் இருந்ததை எல்லாம் எடுத்துத் தனியாக மற்றொரு நோட்டில் எழுதிக்கொண்டு, பலமுறை படித்துப் பார்த்தேன்.

சுவாமி இதில் கற்பனை அதிகம் என்று ஏன் ஒதுக்கினார் என்று தெரியவில்லை. அதில் இருந்தவை பெரும்பாலும், மணியக்காரரை மையமாகக் கொண்டு நடந்த நிகழ்ச்சிகள்தாம்.

சுவைபடவும், ஆழ்ந்த உணர்வோடும் எழுதி இருந்தார். இரத்தினகிரி முருகரிடம் அவர் கொண்டிருந்த இணையற்ற பக்தியும், அந்தக் கோயிலை நல்ல நிலைக்குக் கொண்டுவர உழைத்த உழைப்பெல்லாம் அதில் தெளிவாக விளங்கியது. ஓர் அறுபது ஆண்டு வரலாற்றை, அறிந்து கொள்ள முடிந்தது.

தனக்குத் தெரிந்தவரையில், இரத்தினகிரிக்கு ஒரு சீரான வரலாற்றை எழுதிக், கோயிலையும் பாதுகாத்து வந்த மாபெரும் மகானும், இரத்தினகிரி முருக சக்தியின் மகத்தான பக்தருமாகிய அவர், அந்த வரலாற்றை, எழுதி இருக்கிறார்.

அதில் அவசியமில்லாத பகுதிகளை நீக்கியும், சுருக்கியும், அவசியம் கருதிப், புரிவதற்காகச் சிறு சிறு விளக்கங்கள் சேர்த்தும், முடிந்த வரையில் அவர் தொடர்களையே எடுத்துக் கொண்டும், இன்றைய நடைமுறைத் தமிழுக்கு அவசியமான இடங்களில் என் மொழி சேர்க்கப்பட்டும் உள்ளது. சுவை கருதி சிறு தலைப்புக்களும் சேர்க்கப்பட்டன.

இப்படிச் செய்ததும் அழகான தல புராணமும், வரலாறும் உருவாயிற்று.

16. இரத்தினகிரி தல வரலாறு.

இந்த நூலை அவர் இப்படித் துவக்குகிறார்!

"வட ஆர்க்காடு மாவட்டம், இப்போது வேலூர் மாவட்டம் வாலாஜா வட்டம், கீழ்மின்னல் கிராமத்தைச் சேர்ந்த இரத்தினகிரி தேவஸ்தான ஸ்தலவரலாறும், ஸ்ரீபால முருகனடிமை சுவாமி அவர்களின் சரித்திரமும்".

87 வயது கொண்ட பெரியவர் முன்னுரையில் எழுதுகிறார்.

"எழுத்து வாசனையும், இலக்கண அறிவும் இல்லாத இச்சிறுவனாகிய நான் எழுதத் துணிந்தது திருமுருகன் பெருமையே இந்த முயற்சிக்கு ஆளாக்கியிருக்கிறது. இதில் பல பிழைகள் இருப்பின் அன்பர்களும், பக்தர்களும், கல்வி அறிவாளிகளும் பிழை பொறுத்து ஆட்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

கே.ஆர். கந்தசாமி முதலியார்.

கிராம மணியம் மற்றும் கிளை அஞ்சலகத்தலைவர்.

ஒரே சிலை:

"கீழ்மின்னல் கிராமத்தின் தென்மேற்கு மூலையில், ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு மலையின் பெயர்தான் இரத்தினகிரி. இதனைச் சுப்பிரமணிய சுவாமி மலை என்றும் சொல்வார்கள்.

இந்த மலை மீது கோயில் ஒன்று இருந்தது. இதில் ஒரே ஒரு சிலை - சுப்பிரமணியசாமி சிலை மட்டும் இருந்தது. இந்தக் கோயிலுக்குச் சொந்தமாக மலையடிவாரத்தில் மூன்றரை ஏக்கர் இனாம் நிலம் இருந்தது.

பண்டாரங்கள்:

"அதில் பண்டைக்காலத்தில் பண்டாரங்கள் குடியிருந்து கொண்டு மலை மீது இருந்த இந்த தேவாலயத்தைத் தங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொண்டு, பூஜை முதலியவற்றையும், திருவிழா முதலியவற்றையும் நடத்திக் கொண்டிருந்தார்கள்" என்று கூறப்படுகிறது.

"அந்தக் காலத்தில் அந்த தேவாலயத்தில் மிகவும் சிறப்பாக உற்சவங்கள் முதலியனவும், ஆடிக்கிருத்திகைக்குக் காவடி முதலியனவும் நிறைய வந்து, சிறப்பான வழிபாடுகளும், திருவிழாக்களும் நடந்து, பக்தர்கள் பெரும் கூட்டமாக வந்து கண்டு களித்தனர்.

"தேர் சுற்றுவதற்கு மலையைச் சுற்றி ஒரு மண்பாதை இருந்த அடையாளமும் இருந்தது.

"பிறகு என்ன காரணமோ, கோயில் சிறப்பை இழந்தது.

"இந்த நிலையில் அந்தக் கோயிலை நம்பி அந்த மலையின் அடிவாரத்தில் குடியிருந்த பண்டாரங்கள் பிழைப்பைக் கருதி வெளியேறி விட்டதாகவும் செய்தி உள்ளது.

"இது நடந்தது இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பாகும்.

இருநூறு ஆண்டுகளுக்குப் பின்பு:

"அதற்குப்பிறகு சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப் பின்புக் கீழ் மின்னல் கிராமத்தில் வாழ்ந்து வந்த சர்மா குருக்கள் என்பவர் சிதிலமாகிப் போயிருந்த அந்தக் கோயிலின் கருவறையைப் பழுது பார்த்துக் கும்பாபிஷேகம் செய்ய முனைந்தார்.

உடன் வள்ளி தெய்வயானை சிலை:

"அப்போது, கிராமமக்கள் தனியாக முருகர் சிலை மட்டும் கோயிலில் இருப்பதால், ஊருக்குக் கெடுதலாக இருக்கிறது என்றும்; கிராமம் நாளுக்கு நாள் வளம் குன்றிச் சிரழிந்து வருவதாகவும், முருகன் கோயிலில் அடிக்கடி பூஜை முதலியன நடைபெறுவது கடினமாக இருக்கிறது என்றும், முருகரோடு வள்ளி, தெய்வயானை வைத்து மூவருமாக இருப்பது நல்லது என்றும் சொன்னார்கள். அதன்படியே சர்மா குருக்கள், முருகரோடு வள்ளி, தெய்வயானை சிலைகளையும் உடன் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தார் என்றும் தெரிகிறது.

"பிறகு, அவர் முருகன் கோயிலுக்கு எதிரே ஒரு மகாமண்டபம் கட்ட மலையில் கம்பங்களும், உத்திரங்களும் பாறையிலிருந்து உடைக்கச் செய்தார். ஆனால் மண்டபம் கட்டி முடிப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார்.

"அவைகளில் சிலவற்றை இப்போதுள்ள பாலமுருகன் சுவாமிகள் கோயில் திருப்பணிக்குப் பயன்படுத்திக்கொண்டார்.

"சர்மா குருக்களின் மரணத்திற்குப்பின் பூஜை முதலியன குறுகிய காலத்திற்குள் நின்றுவிட்டன.

பிற்கால நிர்வாகம்:

"மேற்கண்ட கீழ்மின்னல் கிராமத்தில் பெரிய நிலச்சுவான்தாரராகவும், மணியக்காரராகவும் வேலை பார்த்து வந்தவரை கிராம மக்கள், முருகர் கோயிலின் தர்மகர்த்தாவாக நியமித்துக் கோயிலுக்கு வேண்டிய காரியங்கள் செய்ய ஏற்பாடு செய்தனர்.

"அவர் அதன்படி சர்மா குருக்களின் உறவினரான குருக்கள் ஒருவர், கோயிலின் பூஜை முதலியவைகளைச் செய்து வந்ததாகவும், ஆனால், முருகன் கோயிலில் பெரிதும், முக்கியமானதுமான பிரம்ம உற்சவம் நடத்த இயலவில்லை என்றும், ஆடி, கார்த்திகை, தை மாதக் கிருத்திகைகள் மற்றும்

மாதக் கிருத்திகைகளுக்கு மட்டும் உற்சவம் செய்து, சாமியைத் திருவீதி உலாவாக எடுத்துச்சென்று வந்ததாகவும் தெரிகிறது.

"பிறகு கோயில் நிர்வாகம் குருக்களிடமே முழுவதுமாகச் சுவாதீனமாகக் கொடுக்கப்பட்டு விட்டது.

"அவர்கள் கோயிலின் பூஜை முதலானவற்றைச் செய்து வந்தார்கள். ஆனால், கோயில் பரிபாலனம் யாருடைய மேற்பார்வையிலும் இல்லாதபடியால், நாளடைவில் நிர்வாகம் பாழடைந்து மீண்டும் கோயிலில் பூஜை முதலியன நின்றுவிட்டன.

"அதன்பிறகு கோயிலின் நிலைமை கேட்பாரற்றுக் கிடந்தது.

"இவையெல்லாம் 1923க்கு முன் நடந்தவை.

1923க்குப் பின் வரலாறு துவங்குகிறது:

1916, 17, 18 ஆகிய இந்த ஆண்டுகளில் முருகனிடம் ஆழ்ந்த பக்தி கொண்ட இராணுவத்தில் இருந்த கீழ்மின்னல் கிராமத்தில் வாழ்ந்த பக்தர் ஒருவர், மாதந்தோறும் முருகனுக்கு ஐந்து ரூபாய் அனுப்பி வந்தார். அன்று ஐந்து ரூபாய் என்பது இன்று இரண்டாயிரம் ரூபாய்க்குச் சமம்.

அந்தப் பணத்தைக் கொண்டு கோயிலில் கிருத்திகை தோறும் உற்சவம் நடந்து வந்தது. அது எனக்குக் கனவு கண்டது போல் தெரிகிறது.

"பிறகு அந்த உற்சவமும் நின்றுவிட்டது.

ஆங்கிலம் படித்துவந்தோம்:

"இப்போது இரத்தினகிரி கோயிலில் பூஜை செய்துவரும் சந்தான கிருஷ்ண சர்மாவின், இவரும் காலமாகிவிட்டார் தந்தை சீதாராம சர்மா என்பவரும், நானும் கிராமத்திற்கு அப்போது வந்திருந்த நாராயண பிரசாத் என்ற சாமியாரிடம் தனியாக ஆங்கிலம் படித்துவந்தோம்.

"அப்போது, அதாவது, 1922ல், அந்தச் சாமியார் ஆசிரியர் என்னையும், சீதாராமசர்மாவையும் அழைத்துக்கொண்டு இரத்தினகிரியில் உள்ள

முருகனுக்குச் சாத்துபடி செய்து, பொறி, கடலை, தேங்காய், பழம் இவைகளைப் படைத்து, நாங்கள் மூவரும் முருகனுக்குக் கட்டுக் கட்டி திக்பந்தனம் செய்துள்ள சக்கரத்தை அக்கம் பக்கம் மலைகளில், ஒவ்வொரு கல்லாகத் தேடிப்பார்ப்பது வழக்கம்.

"இவ்வாறு தினமும் காலை பத்து மணி முதல் தேடுவோம். அவ்வாறு தேடிக்கொண்டு வரும் போது ஒரு நாள் இரத்தினகிரி சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குப் பின்புறம் உள்ள மலைமீது மூலத்தானத்திற்கு நேராகப் பின்புறம் ஒரு பெரிய குன்றில் ஒரு சக்கரம் இருக்கக் கண்டோம்.


"அதே போல் இன்னொரு சக்கரமும் எங்கேயோ பார்த்ததாக நினைவு இருக்கிறது. இப்போது அது என் கவனத்திற்கு வரவில்லை. பல முயற்சிகள் செய்தும் கிடைக்கவில்லை.

"இப்போது கீழ்மின்னல் கிராமத்தின் பஞ்சாயத்து போர்டு தலைவருக்கு அந்தச் சக்கரம் தெரிந்தது. அவருடன் சென்று பார்த்ததில் இரத்தினகிரிக்கு வடமேற்கு மூலையில் ஒரு பாறையின் மீது தமிழில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தோம். அவைகள், பாறைகள் பெயர்ந்து சிறு சிறு துகள்களாகி இருப்பதால், அவைகளைச் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டு பிடிக்க முயலுகிறோம்.

"உடனே அந்தச் சக்கரத்தின் காப்பி ஒன்று எடுத்து, யார் யாருக்கோ காண்பித்து, அதை நிவர்த்தி செய்ய முயன்றும் நீண்ட நாள் வரையில் எங்கள் முயற்சி பலனளிக்கவில்லை. "பிறகு சுவாமி நாராயண பிரசாத்தும் காலகதி அடைந்துவிட்டார்.

"அப்போது யாராவது கிருத்திகையின்போது முருகனுக்கு அபிஷேகம் செய்ய விரும்பினால், சீதாராம சர்மா அல்லது அவருடைய அண்ணனாகிய பிரபல சோதிடர் சுந்தரராம சர்மா அவர்களை அழைத்துப்போய், அபிஷேகம் செய்து, முருகனை தரிசனம் செய்து வருவோம்.

"அப்போது மலைக்குப்படி ஏதும் கிடையாது.



படி இல்லாத மலை.

''கீழ்மின்னல் கிராமத்தவர்கள், கிராமத்தில் மகாபாரதவிழா நடத்தி, தருமருக்குப் பட்டாபிஷேகம் முடித்த மறுநாள், இந்த ஆலயத்தில் உள்ள தேவதைகளுக்கு ஊர்மக்கள் பொங்கலிட்டு பலி கொடுத்து அந்த உணவுகளை ஏழை மக்களுக்கு வாரி வழங்குவார்கள். அப்போது சோற்றையும், சாம்பாரையும் ஊற்றிக் கலப்பதற்கு எதிரில் ஒரு பாறை இருக்கிறது.

"இரத்தினகிரிக்கு வடபுறத்தில் அதனோடு இணைந்த உயரமான ஒரு மலை உள்ளது. இப்போது அதன் உச்சியில் 'வாட்டர் டேங்க்' சுவாமி கட்டி இருக்கிறார். அந்த மலை மீது ஒரு குகை இருந்தது. அதற்கு இருளன் குகை என்று பெயர். அங்கு சில வருடங்களுக்கு முன்னால், சில இருளர்கள் குடியிருந்து கொண்டு, அங்கு புலி ஆட்டம் ஆடினார்கள். அங்கு புலிக்கோடும் உள்ளது.

"இது தவிர புலி, சிறுத்தை, நரிகள் தங்கும் பல குகைகளும் மலை அடிவாரத்தில் உள்ளன.

சுவாமிகள் வரும் முன்:

"பாலமுருகனடிமை சுவாமிகள் வருவதற்கு முன்பு மேற்கண்ட மலைக்குகைகளில் வருடாவருடம் காட்டு மிருகங்கள் வந்து தங்கி, அக்கம் பக்கமுள்ள கிராமங்களில் புகுந்து ஆடுமாடுகளை அடித்துக் குகைக்குத் தூக்கிக்கொண்டு போய்விடும்.

"கிராமமக்கள் அதைக் கண்டுபிடித்துத் துப்பாக்கி முதலிய ஆயுதங்களால் சுட்டும், குகை வாயிலின் வாயிலில் கல் முதலியவைகளை அடைத்து நெருப்பு மூட்டியும் அந்த மிருகங்களைக் கொல்வது வழக்கம். வருடாவருடம் வைகாசி மாதங்களில் இந்த நிகழ்ச்சி நடக்கும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக:

"சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இப்போது மலை மீது முருகன் கோயில் மூலத்தானத்துக்கு - கருவறைக்குக் கீழ் ஒரு குகை இருந்தது. அதில் ஒரு சிறுத்தை இருந்தது. அதைக் கீழ் மின்னல் கிராமத்தில் இருந்த முஸ்லீம் ஒருவர் அக் குகைக்குள் வைக்கோல், மஞ்சம்புல் கொண்டு புகை உண்டாக்கி, அந்தச் சிறுத்தைக்குச் சிறிதும் காயம் படாதபடி கொன்று, வண்டியில் ஏற்றிக் கிராமத்து மக்களுக்கு ஊர்வலமாகக் கொண்டு வந்து காண்பித்து, அதற்கு அரசாங்கத்திடமிருந்து பரிசும் பெற்றார்.

கந்தசாமியின் பக்தி:

"1923ஆம் ஆண்டு முதல் கந்தர்சஷ்டி பாராயணம் செய்து கொண்டு வந்தேன். நாளடைவில் காலையும், மாலையும் கவசம் பாராயணம் செய்வது என் வழக்கமாகிவிட்டது.

"அதற்குப்பிறகு 1925ல் இருந்து ஒவ்வொரு ஆடிக்கிருத்திகையும் திருத்தணி சென்று, முருகனைச் சேவிப்பது எனது தவறாத வழக்கமாயிற்று.

"இதுபோலவே ஒவ்வொரு வருடமும் ஆடிமாதம் இரத்தினகிரி முருகனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை ஊர்ப்பொது மக்களைக்கொண்டு ஏற்பாடு செய்துவிட்டு, நான் திருத்தணிக்குச் சென்றுவிடுவேன்.

"இரவு 12 மணிக்கெல்லாம் ஊருக்குத் திரும்பிவிடுவேன். அது சமயம் இரத்தினகிரி முருகன் ஊருக்குள் ஊர்வலம் வந்துக்கொண்டிருக்கும். சில நாட்களில் என் வீட்டண்டை நிறுத்திப் பட்டுவாடா செய்து கொண்டிருப்பார்கள். இந்த நேரத்தில் முருகனைத் தரிசிக்கும் பாக்கியம் சில சமயம் எனக்குக் கிடைக்கும்.

கனவு ஒன்று கண்டேன்:

"இவ்வாறு இருந்து வந்தபோது 1932ஆம் வருஷம் ஜனவரி மாதக் கடைசியில் ஒருநாள் இரவு கனவு ஒன்று கண்டேன். அதாவது கீழ்மின்னல் கிராமத்தில், ஈசானிய மூலையில் பாலாற்றங்கரை ஓரத்தில், வடகிழக்கு மூலையில், ஒரு மாந்தோப்பு செழுமையாக இருந்தது. அதில் ஒரு மயில் தோகை விரித்துக்கொண்டு மாமரத்தடியில் நிற்கவும், அதன் பக்கத்தில் குழந்தை வடிவில் முருகன் செந்தாமரை நிறத்தில் கழுத்துவரை இருந்த கர்லிங் முடியுடன்,

"அரையில் சதங்கை ஒலிக்கக் கோவணம் கட்டிக்கொண்டு, கையில் வேலுடன் நின்று தரிசனம் கொடுத்தார்.

"இந்தக் கோயிலில், இந்த நிலையில் தான் முன்னர் கூறப்பட்ட அதிசயம் நிகழ்ந்த்து.

"இதைக் கனவில் பார்த்த அன்றே இரத்தினகிரிக்குப் பிரமாதமாக ஒரு விழா செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அன்றே பத்திரிகை ஒன்று அச்சடித்து மாசிக்கிருத்திகை அன்று விழா செய்ய வேண்டி பாலமுருக பக்தர்களிடம் பத்திரிகை கொடுத்துக் கொஞ்சம் பணம் வசூல் செய்தோம். எங்கள் கிராமச் சிப்பந்திகள் எல்லோருமாக ஒரு மாதச்சம்பளத்தை இந்த விழாவிற்குக் கொடுத்தார்கள்.

"மாசிக்கிருத்திகை அன்று ஜனங்கள் எல்லோரும் குடும்ப சகிதம் கோயிலுக்கு வந்து முருகனுக்குச் செய்த மகா அபிஷேகம், தீபம், தூபம், ஆராதனையை தரிசித்துப் பிரசாதம் பெற்றுக் கொண்டு மலையடி வாரத்தில் பெரிய பந்தல் போட்டு ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப் பட்டது பகல் மூன்று மணி அளவில்.

வள்ளித் திருமணம் சொற்பொழிவு செய்யப்பட்டது.

"இரவு மயில் வாகனத்தில் முருகனும், பெருச்சாளி வாகனத்தில் மகா கணபதியும், ரிஷபவாகனத்தில் அழகாம்பிகை சமேத அம்மையப்பருமாக

அலங்காரம் செய்து, கிராமத்தில் சுவாமி வீதிவலம் வந்தது. என் வீட்டு எதிரில் வள்ளி, தெய்வயானை அம்மையாருக்கு என் சொந்த செலவில் மாலை மரியாதை செய்துத் திருக்கல்யாணம் செய்யப்பட்டு, வாணவேடிக்கைகள் முதலியன நடத்தப்பட்டு, விழா இனிது நிறைவுற்றது.

"இந்த அளவில் அந்த முருக ஆலயத்தை மகா உன்னத நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பது எனது அவா.

"முருகப்பெருமானுக்கு விவாகம் செய்ததால் அடுத்த மூன்றாவது மாதம் எனக்கும் திருமுருகன் திருஅருளால் திருமணம் நடந்தேறியது.

கன்னத்தின் மீது ஓர் அறை:

"1933ஆம் வருடம் அதே மாசி மாதம் கிருத்திகைக்கு விழா செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் முருகன் உத்தரவுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயம். தை மாதம் ஒரு நாள் கனவில், நான் தெருத் திண்ணையின் மீது உட்கார்ந்து வழக்கம்போல், ஒரு பெட்டியை வைத்துக் கொண்டு நிலத்தீர்வை வசூல் செய்து கொண்டிருந்தேன்.

"அப்போது ஒரு பரதேசி ஐம்பது வயதுள்ளவராகவும், தாடி முதலி யவைகளுடன் காவி உடை அணிந்து என் எதிரில் வந்து, "டேய்! எனக்குச் செய்ய வேண்டியதைச் செய்யேண்டா!" என்று அதட்டிக் கேட்டார்.

"நான் உடனே, "என்ன அய்யா? பெரிய மனிதனாக இருக்கிறீர்? காவி உடை வேறு அணிந்திருக்கிறீர்! உனக்கு வேண்டியதை மரியாதையுடன் கேட்டு வாங்கிக்கொண்டு போயேன். நான் ஒரு கிராம அதிகாரி என்று கூடப் பார்க்காமல் 'அடேய்' என்று மரியாதையில்லாமல் பேசுகிறாயே" என்று கேட்டதற்கு -

"உடனே, அந்தப் பெரியவர் என் கன்னத்தின் மீது ஓர் அறை கொடுத்தார். உடனே நான் திடுக்கிட்டு எழுந்து, 'இது என் அப்பன் திருமுருகன் திருஅருள்' என்று அன்றே பத்திரிகை அச்சிட்டுச், சென்ற ஆண்டு போல் சுமார் நூற்றைம்பது ரூபாய் வரையில் வசூலித்து, அதே மாசிக்கிருத்திகை விழா சிறப்பாகக் கொண்டாட உத்தேசித்து இருக்கும் சமயம்:

ஒன்பது அடி உயரத்தேர்:

"திருவலத்திலிருந்து ஒரு பக்தர் வந்து, நான் இரண்டு தோள்களிலும், நாலு அடி வேல் குத்திக்கொண்டு, ஒன்பது அடி உயரத் தேர் இழுக்க, அதை நீங்கள் செய்து கொடுத்தால், அதை என் முதுகில் ஊக்கினால் குத்தி இழுத்து வருகிறேன்" என்று சொன்னார்.

"அந்த பக்தர் கேட்டதையும் செய்து கொடுத்து, அந்த வருட விழாவினையும் சிறப்பாகக் கொண்டாடிட உத்தேசித்துப் பொது மக்களைக் கூட்டி ஆலோசித்தேன்.

"அவர்களும், மற்ற ஊர் ஜனங்களும் வந்து பந்தல் போட்டு உதவினார்கள். கிருத்திகை அன்று காலை மோர்க்குளத்தண்டை எல்லா ஜனங்களும் வந்து சேர்ந்தபிறகு, முருகனுக்கு மகா அபிஷேகம், தூபம், தீபம் ஆராதனைகள் செய்து, குளத்தண்டை வேலுக்குப் பூஜை செய்து, ஒன்பது அடி உயர இரதத்தில் முருகனை அமரச் செய்து, முன்பு என்னிடம் கேட்ட அந்த பக்தரின் முதுகில் ஊக்கினால் சொருகினோம்.

"நாலு அடி வேல் இரண்டு பக்கமும் தோள்களில் குத்தி, மேளதாளம், பம்பை உடுக்கையுடன், கன்னிகாபுரம், நாராயணபுரம், பூட்டுத்தாக்கு, மேல் மின்னல், அரப்பாக்கம், கீழ்மின்னல், நந்தியாலம் முதலிய ஊர்களின் வழியாகச் சுமார் நாலு மைல் தூரம் அந்த இரதம் சுற்றி வந்து, மலை அடிவாரத்துக்கு அன்று பிற்பகல் இரண்டு மணி அளவில் வந்து சேர்ந்தது.

"மூன்று மணிக்குப் பிரசங்கியால் பிரசங்கம் செய்யப்பட்டது. அன்று பகல் கன்னிகாபுரத்தில் உள்ள ஒருவரால் ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. அன்று இரவு சென்ற வருஷம் போல் திருவிழா. பஞ்ச மூர்த்திகளின் ஊர்வலத்தில், என் வீட்டண்டை திருமுருகப் பெருமானுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டு, பாண வேடிக்கையுடன் விழா இனிது நடைபெற்றது.

முருகன் கோயில் கதவு:

"அடுத்த வருஷம் சில சூழ்நிலைகளின் காரணமாக விழா செய்ய இயலவில்லை. ஆனால் மகா அபிஷேகம் மட்டும் நடந்தது. பூஜையும் செய்ய

இயலாத காரணத்தால் ஒவ்வொரு மாதம் பரணிக் கிருத்திகைக்கு அபிஷேகம் மட்டும் பல அன்பர்களால் செய்விக்கப்பட்டு வந்தது.

"இதன்பிறகு சுமார் இரண்டு வருஷம் கடந்தபிறகு, முருகன் கோயில் கதவு தக்கப் பாதுகாப்பு இல்லாமல் பாழாகி நலிந்து விட்டிருந்தபடியால், யாரோ துட்டர்கள் உள்ளே நுழைந்து, முருகன் சிலையை மட்டும் பெயர்த்துக் கீழே போட்டுத் தலையை உடைத்து விட்டார்கள். அதிலிருந்து பூஜைகள் நின்றுவிட்டன.

"பிறகு இது விஷயமாய் மிகவும் மனம் நொந்து, கிராமப் பொது ஜனங்களின் உதவியால், இப்போது இருக்கும் முருகன் சிலையை வேலூர் வேலப்பாடியில் இருந்த ஒரு வயது முதிர்ந்த சிற்பியிடம் ஆர்டர் கொடுத்தேன்.

கும்பாபிஷேகம்:

"அவர் அந்தச்சிலையை நாற்பது ரூபாய்க்குத் தயார் செய்து கொடுத்தார். அந்தச் சிலையை நீரில் சில நாளும், தானியத்தில் சில நாளும் வைத்து இருந்தோம். பிறகு கோயிலில் எழுந்தருளச்செய்து, அஷ்டபந்தனமும், கும்பாபிஷேகமும் செய்யவேண்டி இருப்பதால், கிராமப்பொது மக்களைச் சேர்த்து, ஆலோசனை செய்து, தலைக் கட்டுப்படி பிரிவு போட்டு, இருநூறு ரூபாய் வரையில் வசூல் செய்து கொடுத்தார்கள்.

"அதைக்கொண்டு கும்பாபிஷேகம் செய்ய வேண்டி, நாள் முதலியவை பார்த்து, நடக்க வேண்டியவைகளுக்காகப் பேசி ஏற்பாடு செய்ய வேண்டி ஊர்ப்பொது மக்களைக் கலந்துக் கோயிலின் கும்பாபிஷேகத்திற்கு நல்ல நாள் குறித்தோம்.

"கும்பாபிஷேகத்திற்கு ஒரு வாரம் இருக்கும் சமயம் என் மகன் சண்முக சுந்தரத்திற்கு பேதி ஆரம்பித்துக் குழந்தை ஆபத்தான நிலையில் இருந்தான். அவனை வேலூரில் தனி டாக்டரிடம் அழைத்துப் போனதற்கு, அங்கேயே தங்கி வைத்தியம் பார்க்கவேண்டும் என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

"அதனால் வேலூரில் தனி வீடு ஒன்று வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கேயே சிகிச்சை பார்த்து வந்தோம். இப்படி நான் இரவில் வேலூரில்

தங்குவதும், பகலில் கிராமத்தில் மணியம் தொழிலையும், உடன் கோயிலின் குடமுழுக்குக்கு வேண்டிய வேலைகளைக் கவனிப்பதுமாக இருந்தேன்.

குடமுழுக்கும் கோயில் திருட்டும்:

“குடமுழுக்கு விழாவிற்கு நாள் நெருங்க, நெருங்க என் மகனின் வியாதியும் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. இந்த நிலையில் கிராம மக்கள் “குடமுழுக்கு விழாவைத் தாங்கள் மனம் நிம்மதி இல்லாமல் இருக்கும்போது செய்ய இஷ்டம் இல்லாமல், மகன் குணமான பிறகு செய்து கொள்ளலாம்” என்று கூறினார்கள், பல பெரியவர்கள் விழாவை ஒத்திப்போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு என் மனம் இடந்தரவில்லை.

“எனவே அவர்களுக்கு எல்லாம் “திருமுருகன் திருஅருள்படி நடப்பது நடந்தே தீரும்! அதனால் ஏற்பாடு செய்த குடமுழுக்கு விழாவை நிறுத்துவதில் எனக்கு விருப்பம் இல்லை. ஆண்டவன் வேலையை நம் இஷ்டப்படி மாற்றிக்கொள்வதில் எனக்குப் பிரியமில்லை. எனவே, நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். இறைவன் எனக்கு அருள் புரிவான்; நல்லதையே செய்வான். விழாவை ஒத்திப் போட வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட நாளிலேயே ஏற்பாடு செய்தபடி விழா நடக்கட்டும். அதற்குப் பந்தல், யாகசாலை முதலியவைகளைச் செப்பனிடும் வேலை நடக்கட்டும்” என்று ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, மாலையில் வேலூர் போய்விடுவேன்.

முருகன் வேலை நிற்கக் கூடாது:

“கும்பாபிஷேகத்து முன் நாள், குழந்தை அதிகமாக நோயால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருப்பதாய் ஆள் வந்தது. “முருகா! இதுவும் உன் திருவிளையாடல். அதற்கும் நான்தான் அகப்பட்டேனா?” என்று தீர்மானித்துக்கொண்டு –

“பொது ஜனங்களுக்கு, “இந்த முருகப்பெருமான் வேலை நிற்கப் படாது. என் மகனுக்கு என்ன ஆனாலும் குறிப்பிட்ட நாளில் குட முழுக்கை

என்னை எதிர்பார்க்காமல் நடத்திவிடுங்கள். அவன் அருளால் குழந்தை கொஞ்சம் சுகமானால் விழாவில் நானும் கலந்து கொள்கிறேன். இல்லையேல் அவன் திருவருள் என்னவோ அதன்படி நடக்கட்டும்" என்று சொல்லிவிட்டு,

"குறித்த காலத்தில் குடமுழுக்கை நடத்தவும் ஏற்பாடு செய்து விட்டு, எங்கள் ஊர் மேஸ்திரியிடம் சொல்லி, வள்ளி, தெய்வயானை சிலைகளைத் தக்கபடிச் செப்பனித்து வைக்கும்படி ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, நான் குழந்தையைப் பார்க்க வேலூர் சென்றுவிட்டேன்.

"குடமுழுக்கு நாளும் வந்தது. அன்றும் என் குழந்தை ஆபத்தான நிலையிலேயே இருந்ததால், எனக்கு அன்று முருகனை தரிசிக்கும் பாக்கியம் இல்லை. எனவே, என் மனத்தில் முருகனை நினைத்து ஆத்ம தரிசனம் செய்து கொண்டேன்.

"ஆனால் அன்று மாலை குழந்தை தெளிவாக இருந்தபடியால், நான் கோயிலுக்கு வந்து முருகனை தரிசனம் செய்தேன். மேற்கொண்டு உற்சவத்தை நடத்தவும் ஏற்பாடுகள் செய்து விட்டு நான் குழந்தையைப் பார்க்க வேலூர் போய்விட்டேன்.

"அடுத்த நாள் குழந்தையை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்து, இங்கே நாட்டு வைத்தியம் பார்த்தும், அதிலும் குணமாகாததால், மலையாள வைத்தியம் பார்த்தோம்.

"கோயிலில் முருகனுக்கு மண்டலாபிஷேகம் செய்து வந்தோம்.

என் குழந்தை.

மண்டலாபிஷேகம் செய்து வந்த அர்ச்சகர் தினந்தோறும் குழந்தைக்கு விபூதிப்பிரசாதம் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந்தார்.

"குடமுழுக்கு நடந்த நாற்பத்தெட்டாம் நாள் சிறப்பாக முழு மண்டல அபிஷேகம் நடத்தப் பட்டது.

"அன்றைய மறுநாள் என் குழந்தை, எங்களை விட்டுப் பிரிந்து முருகனின் திருவடிகளை அடைந்து விட்டான்.

"குடமுழுக்கு செய்தமைக்கு முருகன் அவரது மகனைக் காப்பாற் றாமலேயே பலி கொண்டு விட்டாரே! இதுதானா திருப்பணியின் பலன்?" என்று ஊர்மக்கள் வருந்தினார்கள். அப்போது எனக்கு முப்பது வயது.

"அறியாத சிறுவர்கள் எல்லாம் கோயில் திருப்பணியில் ஈடு பட்டது தப்பிதம். அதனால்தான் இப்படி நடந்தது என்றும் சொன்னார்கள்.

திருட்டு

"இது நடந்த ஆறு மாதத்தில் பூஜை செய்து வந்த அர்ச்சகர் நின்றுவிட்டார். அது சமயம் இப்போது கோயிலில் பூஜை செய்து வரும் சந்தான கிருஷ்ண ஐயரின் தகப்பனார், சீதாராம சர்மா என்பவர், அவர் தமையனார் சுந்தரராம ஐயர் அவர்களிடம் சொல்லி, பூஜை செய்ய சீதாராம சர்மாவை ஏற்பாடு செய்யப்பட்டது.

"அது முதல் பூஜை தவறாமல் நடந்து வந்தது. பரணி, கிருத்திகைக்கு அபிஷேகம் நடந்து வரும். ஆடி, தைக் கிருத்திகைக்கு உற்சவம் நடந்து வந்தது.

"இவ்வாறு நடந்து வந்தபோது, சில காலம் கழித்துக் கோயிலின் கதவு சரியானபடி இல்லாததால், அதைத் திறந்து கோயிலில் இருந்த பூஜைமணி, தட்டு, தூப ஆர்த்தி இவைகள் களவு போய்விட்டன. போலீசுக்குத் தெரிவித்தும் ஒன்றும் கிடைக்கவில்லை.

"அப்போது வடஆர்க்காடு பகுதி முழுவதும் கோயில்களில் திருடு போவது மிகுதியாக இருந்தது. அதனால் அரசாங்க உத்தரவிற்கு இணங்க இரவு, பகலாகக் கோயில்களுக்கு பந்தோபஸ்து அளிக்கப்பட்டது. அவ்வாறு இருக்கும்போது ஒருநாள் என் வீட்டின் அருகே இருந்த கோயிலில் தோட்டி இரவு காவலில் இருந்துவிட்டு உறங்கும் போது, அவன் தலைமாட்டில் ஒரு கடிதம் வைக்கப்பட்டு இருந்தது. அவன் அதை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

திருடனின் கடிதம்.

அந்தக் கடிதத்தில் கீழ்க்கண்டபடி எழுதி இருந்தது.

"திரு. கிராம அதிகாரி அவர்களுக்கு நமஸ்காரம். நான் பல கோயில்களில் திருடி இருக்கிறேன். இந்த மலை மீது உள்ள முருகன் போல் சக்தியுள்ள முருகனை நான் கண்டதில்லை. வேலாயுதம் வந்து என் கண்ணைக் குத்தியதைப் போல் கண்ட கனவினால் பயந்து விட்டேன். உங்கள் வீட்டு எதிரில் கால்வாய் கரையில் அலரிப்பூச் செடியண்டை பூக்குடலையில் முருகன் ஆலயத்தில் களவாடிச் சென்ற சாமான்களையும், அத்துடன் ஒரு செண்டு புஷ்பமும், கற்பூரமும் வைத்திருக்கிறேன். அதை முருகனுக்கு அர்ப்பணித்துவிடுங்கள். என்னை வருகிற ஆடிக்கிருத்திகையில் சந்திக்கலாம். இப்படிக்கு" என்று ஒரு பெயர் இருந்தது.

"இம்மாதிரி அந்த லெட்டரில் எழுதப்பட்டிருந்தது. உடனே போய் எல்லோருமாகப் பார்க்கப் பூக் குடலையில் கடிதத்தில் கண்ட சாமான்களும், பூச்செண்டும் ஒரு பலம் கற்பூரமும் இருந்தன.

கடிதத்தில் கண்டபடியே அவை முருகனுக்குச் சேர்ப்பிக்கப்பட்டது.

எட்டு ரூபாய் சம்பளம்:

"ஆடிக்கிருத்திகைக்கு கவனமாய்ப் பார்த்து, இந்த ஆளைப் பிடித்துவிடவேண்டும். இந்த நபர் தென்னாட்டு நபராகத்தான் இருக்க வேண்டும். கோவிலில் யாராவது புதிய மனிதன் தெரிந்தால் அவனை நிறுத்தி வைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, நான் வழக்கம்போல் திருத்தணிக்குச் சென்றுவிட்டேன்.

"நான் திரும்பி வந்து விசாரிக்க, "அம்மாதிரி நபர் யாரும் வரவில்லை" என்று சொல்லி விட்டார்கள்.

"தென் நந்தியாலயத்தில் இருந்த பக்தர் ஒருவர் கோயிலுக்காகப் புதிய கதவு, ஒன்றைச் செப்பனிட்டுக் கொடுத்தார். அதோடு, கோயில் பூஜை காரியத்துக்காகக் கோயிலுக்கு நிலமும் எழுதிவைத்தார்.

"அதற்குப்பிறகு இப்போது பூஜை செய்து வரும் சந்தான கிருஷ்ணன் ஐயர் மாதம் ஒன்றுக்கு, எட்டு ரூபாய் சம்பளம் என்று ஏற்பாடு செய்து வாரத்துக்கு இரண்டு நாள் பூஜை செய்து... பூஜை தொடர்ந்து நடந்து வந்தது.

வேட்டி, பாவாடைக்கும் ரொம்ப கஷ்டம்:

மேற்கண்ட சம்பளத்தையும், மேற்கண்ட நிலங்களில் இருந்து வந்த வருவாயால் சரிகட்ட முடியாததால், ஐயருக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் போய்விட்டது.

"இதனால் அவருக்கு 1967ஆம் வருஷம் ஒரு வருஷ சம்பள பாக்கி நின்றுவிட்டிருந்தது.

"அது சமயம் கிராமமும் ஒற்றுமை தளர்ந்திருந்ததால் சரிவரச் சம்பளம் தரமுடியவில்லை.

"முருகனுக்கு பரணி அபிஷேகமும், கிருத்திகை அபிஷேகமும் சுமார் இரண்டு ரூபாய் அளவில் திட்டமிட்டு நடத்தி வருவதே கஷ்டமாக இருந்தது. யார் யாருக்கோ சொல்லி ஏற்பாடு செய்யவேண்டி இருந்தது. யாரும் செய்ய முன்வராவிட்டால் அந்த அபிஷேகத்தை நானே செய்துவிடுவேன்.

"இந்த நிலையில் முருகனுக்கு இரண்டு வருடத்திற்கு ஒருமுறை கூட வேட்டி, வள்ளி, தெய்வயானை அம்மாக்களுக்குப் பாவாடை முதலியன எடுப்பதும் ரொம்ப கஷ்டம். "துணிகள் யாவும் கிழிந்து லாயக்கற்று இருக்கிறது" என்று ஐயர் முறையிடுவார்.

"அது சமயம் யாரையாவது ஏற்பாடு செய்து அவைகளை வாங்கித் தருவேன். முருகன் கோயிலுக்கான தீர்வைகள் உயர்ந்துவிட்டு இருந்த படியாலும், நிலமும் சரிவரப் பயிரிடப்படாமல் நின்றுவிட்டிருந்ததாலும், முருகனை வறுமை வாட்டியது என்றே சொல்லலாம்.

முதலியாரே! சாவியை வைத்துக் கொள்ளுங்கள்:

"அது சமயம் ஒரு நாள் சந்தான கிருஷ்ண ஐயர் என்னிடம் வந்து, "முதலியாரே! எனக்கு ஒரு வருட சம்பளம் இன்னும் கொடுக்கப்பட வில்லை. கோயில் சாவியை வைத்துக்கொள்ளுங்கள். என்னால் பூஜை செய்ய முடியாது" என்று சொன்னார்.

"கோயிலுக்குப் படி அமைக்கும் திருப்பணி முடிக்க, மேல்நோக்கி என்ன செய்வது என்ற நிலையில், இப்போது ஐயரும் பூஜை செய்ய முடியாது என்று கையை விரித்து விட்டார். உடனே நான் ஐயரிடம்,

"சாமி! இது சமயம் பூஜையை நிறுத்தாதீர்கள். முருகன் கோயிலை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஒரே எண்ணத்தினால், திருவலம் சுவாமிகளிடம் கோயிலுக்குத் திருப்படி அமைக்க இடை விடாது முயற்சிகள் செய்து வருகிறேன்.

தங்கள் கஷ்டம் வீண் போகாது; முருகன் உங்கள் கஷ்டத்துக்குக் கூலி தருவான்; பூஜையை நிறுத்தாதீர்கள். தாங்களே தொடர்ந்து பூஜை செய்து வாருங்கள். உங்கள் சம்பளத்தை கவுண்டமார்களுக்குச் சொல்லி வாங்கிக் கொடுக்கிறேன்'' என்று ஆறுதல் சொல்லியதன் பேரில், அவரும் தொடர்ந்து பூஜையை நிறுத்தாமல் செய்து வந்தார்."

இந்த நிலையில்தான் ஒருநாள் சச்சிதானந்தம் அந்தக் கோயிலுக்குச் சென்றார்.

17. சிவ சங்கர் பாபா சொல்கிறார்.

மாலைநேரம் மணி 6க்கு மேல் இருக்கும். சென்னையில் நீலாங்கரையில் இருக்கும் சிவசங்கர் பாபாவின் ஆசிரமம். எல்லோரும் போய்விட்டார்கள். ஒரே ஒரு இளைஞர் மட்டும் சோபா நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். பாபா என் பக்கம் திரும்பி, எழுத்தில் வரவழைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டும் கூட, இயலாத அத்தகைய கனிவோடு “இன்னும் சற்று அருகில் வந்து உட்காருங்கள்'' என்று கூறியபடி, “உம்... சொல்லுங்கள்” என்றார்.

அவருடைய அன்பும் கனிவும் என் மனத்தைத் தொட்டன. சில நிமிடங்கள் பேச முடியவில்லை. பிறகு கேட்கிறேன்: “இரத்தினகிரி சுவாமி 1968 ஆம் வருடம் கடவுள் உணர்வு அடைந்தார். இப்போது நமக்கு அது பற்றி பெரிய விளக்கங்கள், வியாக்கியானங்கள் எல்லாம் தோன்றியுள்ளன. அப்போது அது இல்லை. அது ஓர் அதிசயமாகவும், விபரீதமாகவும் கூட அவர்கள் சுற்றம், தெரிந்தவர், வேண்டியவர்களால் பார்க்கப்பட்டது. அந்தக் காலக் கட்டத்திலேயே உங்களுக்கு அவரிடம் ஈடுபாடு வந்துள்ளது.

சுவாமியும் அதைச் சொல்லி இருக்கிறார். அவரிடம் அடிக்கடி வந்து செல்வீர்கள் என்று. அந்தக் காலக் கட்டத்தில் உங்களை அவரிடம் ஈர்த்தது எது?”

அன்னை சாரதா பதிப்பகம்



5, புருஷோத்தமன் தெரு,
ஆர்க்காடு - 632 503,
வேலூர் மாவட்டம்,
☎ 35206, 35883.

9, பவுடர்மில் முதல் தெரு,
(கச்சேரி ரோடு, அருண்டேல் தெரு,
விநாயகர் கோவில் அருகில்),
மயிலாப்பூர், சென்னை - 4,
☎ 4982845.

பேராசிரியர். ஏ. சுப்பிரமணியம். நாள்: 24.12.02


வழிபாட்டிற்குரிய பாபா அவர்களுக்கு வணக்கங்கள்!

தங்களின் அன்புமயமான அஞ்சல் கிடைத்தது. இத்துடன் "இரத்தினகிரி வரலாறு" நூலில் அச்சிட எழுதியுள்ள "பாபா இரத்தினகிரி சுவாமி" பற்றிய பகுதியை அனுப்பி இருக்கிறேன். என் இயல்பு சுவாமிகளிடம் காட்டி சுவாமிகள் தன் கருத்தை எழுதி வெளிப்படுத்தியதும் அல்லது மேன்மைப்படுத்தியதும் அச்சிட வைத்துக் கொள்வேன். சுவாமிகளிடம் தந்து, அதைத் தங்களுக்கு அனுப்புவது குறித்தும், அவரிடம் தெரிவித்துவிட்டு, இதை அனுப்புகிறேன். தாங்கள் அதை அருள்கூர்ந்து படித்து மேன்மைப் படுத்த வேண்டிய இடங்களில் மேன்மைப்படுத்தி, எனக்கு முடிந்த விரைவில் திருப்பி அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்

பாபா: "எது ஈர்த்தது என்று சொல்ல முடியவில்லை. அப்போது எனக்கும் பெரிதாகக் கடவுள் ஈடுபாடு, அது... இது, ஆன்மிகம் என்றெல்லாம் ஒன்றும் கிடையாது. இல்லை. நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன். என் அப்பா ஓர் ஆசிரியர். நான் அப்போது தான் பி.எஸ்.சி படித்து முடித்துச் சென்னையில் வேலைக்குச் சேர்ந்திருந்தேன். வாழ்வில் முன்னுக்கு வர வேண்டும்; பெரிய ஆளாக வர வேண்டும் என்ற துடிப்பும், ஆர்வமும் இருந்ததே தவிர, இப்படி இன்றைக்கு இருக்கிற இந்தக் கடவுள்நிலை, ஆன்மீகம் இப்படி ஆவேன் என்று நினைக்கக் கூட இல்லை.

"அவரும் அந்தக் காலத்தில், ஆரம்ப காலத்தில் இப்போது இருப்பது போல் இவ்வளவு சாந்தமாகவும், இவ்வளவு அமைதியாகவும் இல்லை. உடம்பெல்லாம் ஒரே விபூதி பூசிகொண்டு விபூதிமயமாகவே இருப்பார்.

தாடி. மீசை... ஒரு முரட்டுத் தோற்றம், முரட்டுப் பார்வை. ஆனால் எனக்கு ஏதோ ஈர்ப்பு அவரிடம் இருந்தது. அடிக்கடி அவரிடம் போவேன் பேசுவேன்; இருப்பேன்.



அவர் அந்தக் காலகட்டங்களில், இப்போது எனக்குப் புரிகிறது - தன்னை மறந்து கடவுள் வெறியில், சக்தியில் இருந்தார். பேய் ஓட்டுவது, உணர்ச்சி வயப்பட்டு கத்துவது என்பதெல்லாம் அப்போது இருந்தது.

"கடவுள்சக்தி அவர் உடம்பில் திடீரென்று பெருக்கெடுத்து அபரிமித மாக அளவில்லாமல் பாயத் தொடங்கிவிட்டது. அவர் உடம்பால் அதைத் தாங்க முடிய வில்லை. ஒரு சின்ன பாத்திரத்தில் ஓர் ஆற்று வெள்ளம் பாய்ந்தால் எப்படி ஆகும்? அப்படி இருந்தது அவர் நிலை.

"அடிக்கடி அவரைப் போய் பார்ப்பேன். அவரோடு தங்குவேன். அவர் என் வாழ்க்கையைப் பற்றியும் சொல்வார். என் உலகியல் வாழ்க்கை மேலோங்க ஆரம்பித்தது. என் பொருளாதார வாழ்க்கை வளர்ந்து, வளர்ந்து மேலே போய்க்கொண்டே இருந்தது.

"அப்போது அண்ணாநகரில் மிகப்பெரிய வீடு கட்டினேன். அரண்மனை போல் பெரிய வீடு. 1984ல் அதில் ஒரு கோயில் கட்ட விரும்பினேன்.

"ஆனால் சுவாமி அதை ஒரு குறிப்பிட்ட திசையில் கட்டச் சொன்னார். தென் மேற்கு திசையில் கட்டச் சொன்னார். நான் அந்தத் திசை தெரியாமல் தவறாகப் புரிந்துகொண்டு தென்கிழக்குப் பகுதியில் கட்டி விட்டேன். என் வீழ்ச்சியும், கடுமையான துயரங்களும் ஆரம்பமாகி விட்டன.

"இன்னொன்று எனக்குத் திருமணம் நடந்தது. அந்தத் திருமணத்திற்கு அவர் எனக்கு விருந்து வைப்பதாகச் சொன்னார். நாம்தான் அவருக்கு

விருந்து கொடுக்க வேண்டும். ஒரு சந்நியாசி விருந்து கொடுப்பதாகச் சொன்னார். நான் அந்தத் தாத்பர்யத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அவர் சொன்ன அன்றைக்குப் போனேன். வெறும் காலி டிபன் பாக்ஸ். பெரிய டிபன் பாக்ஸ். அதில் சாப்பாடு ஒன்றும் இல்லை. ஒரே ஒரு மிளகாய்தான் இருந்தது.

"அதை அவர் அவருடைய சந்நியாச தருமத்தின்படி நான் கொண்டுபோனதைச் சாப்பிட்டாக வேண்டும். அந்த மிளகாய் காரம். காரத்தை அப்படியே சாமி சாப்பிட்டார். அந்தக் காரத்தின் வினையை, சுமையை 18 வருடங்கள் என் மணவாழ்வில் நான் அனுபவித்தேன். இதில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

"பிறகு என் பிசினஸ்... என் பணக்கார வாழ்க்கை எல்லாம் பெரும் நஷ்டம் அடைய ஆரம்பித்தது. நான் அப்போது டிராவல்ஸ், லாரி சாமான் போக்குவரத்து நடத்தி வந்தேன். வண்டிகள் அடிக்கடி ஆக்சிடெண்ட் ஆகும். என்னென்ன கஷ்டமோ ஏற்பட்டது. இப்படி எல்லாம் போய் நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் வந்து, பெரும் கடனாளியாகிவிட்டேன். ஆனால் கடவுள் மீது பக்தி மிகவும் ஆழமாக ஊற ஆரம்பித்தது. எனக்காக சாமி - என் வாழ்வின் நலனுக்குப் பல வழியில் முயன்றார். அளவில்லாத வேதனை. ஆனால் நான் மிகவும் தைரியமானவன். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் தாங்கிக் கொண்டு மேலே எழுந்துபோக முயல்வேன். அந்தத் துன்பம் போக எல்லாக் கடவுளையும் வணங்கினேன். வழிபட்டேன். மகான்கள் எல்லோரிடமும் சென்று வணங்கினேன். அவர்களும் என்னிடம் அன்போடு இருந்தார்கள். ஆன்மிக வழியில் இந்தத் துன்பம் தீர என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் நான் செய்தேன் ஆனால் என் துன்பம் மட்டும் குறையவேயில்லை. மேலும் அதிகமாகிக்கொண்டே வந்து கடனில் வீடு போச்சி; செல்வம் போச்சி; செல்வாக்கு போச்சி; எல்லாமே போச்சி. நடுத்தெருவுக்கு வந்து விட்டேன்.

பாபா நான் எதுவும் கேட்காமல் ஒரு நிகழ்ச்சி முடிந்ததும், தானாகவே அடுத்த நிகழ்ச்சி, அதற்கு அடுத்த நிகழ்ச்சி என்று அழகாகத் தொடர்ந்து, ஆழ்ந்த அன்போடும், அக்கறையோடும், மிகப்பெரிய ஆட்படுதலோடும் அவ்வளவு அழகாக, மென்மையாக, மேன்மையாக சொல்லிக் கொண்டே போனார். தேவாமிர்தம் காதில் வந்து அளவாக, ஆழகாக, ஈர்ப்போடு;

என் உள்ளம் எப்படி சொன்னால் அது ஒரு சொட்டையும் வீணாக்காமல் ஈர்த்துக் கொள்ளுமோ, அப்படி ஒரு தேர்ந்த இசைக்கலைஞன் இசைக் கருவியை மீட்டுவது போல் சொல்லிக்கொண்டு வந்தார்.

''அந்தக் கஷ்ட காலங்களில் சுவாமிகள் எனக்குப் பெரும் ஆறுதலாகவும் ஆதரவாகவும் துணையாகவும் இருந்தார். நிறைய கடிதங்கள் எழுதுவார். அந்தக் கடிதங்களையெல்லாம் நான் அப்படியே வைத்திருக்கிறேன்" என்று சொல்லி அருகில் அவருடைய செயலாளரைப் பார்த்தார். அவர் உள்ளே சென்று சுவாமிகள் எழுதிய கடிதத்தின் பைலை பாபாவிடம் கொண்டு வந்துகொடுத்தார்.

அதைக் கையில் வாங்கிக்கொண்ட பாபா ஒவ்வொரு கடிதத்தையும் ஒவ்வொரு வரியையும் படித்துக்காட்டி எனக்கு அதில் ஊறி இருக்கும் நிகழ்ச்சிகளை விளக்கிச் சொல்ல ஆரம்பித்தார்!

"சுவாமி எழுதியிருந்த "நம் 16 ஆண்டு பழக்கக் காலத்தின் பலனை நான் இப்போது அனுபவித்தேன். I Joined Duty." அதாவது அவரால் கோயிலுக்கு வந்து முருகனுக்கு அபிஷேகம் செய்யும் வேலையைச் செய்ய ஆரம்பித்ததை இப்படி எழுதுகிறார்.

"அந்த கால கட்டத்தில் அவரால் எழுந்து நடக்கவே முடியாதபடி முட்டிகள் எல்லாம் இழுத்துக்கொண்டு பெரும் கடினமான நோய் தோன்றியது. அவரால் கோயிலுக்கே வரமுடியாமல் போய்விட்டது. அப்போது நான் அவர் உடல் நலம் பெற பிரார்த்தித்தேன். சுவாமி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

"அதைத்தான், நம் 16ஆண்டு காலத்தின், பழக்கத்தின் பலனை அனுபவித்தேன்" என்று எழுதியிருந்தார்.

"இன்னொன்று சுவாமிகளிடம் இருக்கும் மிக மேன்மையான குணம் - யாராவது ஒருவர், எவ்வளவு சின்ன பொருள் கொடுத்தாலும் அதை அவ்வளவு அன்போடும் ஆனந்தத்தோடும் உன்னிப்போடும் உள்ளன்போடும் வாங்கிக்கொள்வார். அப்போது அவர் முகத்தில் தோன்றும் ஆனந்தம் கொடுப்பவரின் மனம் முழுவதும் போய் நிறைந்து விடும். அது ஒரு சிறிய பென்சிலாக இருந்தாலும் சரி!"

பாபா மிக ஆழ்ந்த, மிகச்சிறந்த சொற்களால், ஓடிக் கொண்டேயிருக்கும் காட்சியை - ஓடிக் கொண்டே இருக்கும் நிலையிலே - இந்த ஓட்டம் அப்படியே ஓடும்படி - அது நம் மனத்தில் அவ்வளவு அழகும் திருப்தியும் உண்டாக்கும்படி காட்சிகளை விளக்க வல்லவர்.

சுவாமிகளிடம் இருந்த இந்த மேலான குணத்தை எவ்வளவு அழகாக ஓர் உயிரோட்டமுள்ள காட்சியாக இங்கு கூறுகிறார்! நானும் அந்தக் காட்சியை இந்த நூலில் சில, ஏன்? பல இடங்களில் எழுதிக் காட்டிக் கொண்டு இருக்கிறேன். ஆனால் மிகச் சுலபமாக நான் பெறமுடியாத வெற்றியை பாபா பெற்றுவிட்டார்!

பிறகு பாபா தன்நிகழ்ச்சியைப் பற்றிக் கூறினார். தன் ஆன்மிகநிலை மிகமிக ஆழமாகச் செல்ல ஆரம்பித்ததும், நிலைக்க ஆரம்பித்ததும் குடும்பத்திலிருந்து முற்றிலுமாக அவர் கழன்று விட்டதை, கழற்றிவிடப்பட்டதை அவ்வளவு அழகாகக் கூறினார். "அது சாமிக்கு நன்றாகத் தெரியும். மனிதர்கள் இப்படித்தான். குடும்பமாக இருந்தால் என்ன? எதுவாக இருந்தால் என்ன? எனக்கும் குடும்பத்திற்கும் எந்த உறவும் இல்லை. உறவு அறுந்து போனது. இந்தப் பரந்த உலகம், இந்தப் பரந்த மக்கள் கூட்டம், என்னைப் படைத்த கடவுள், என்னை ஒவ்வொரு நிமிடத்திலும் வழி நடத்திச் செல்லும் இந்தக் கடவுள் சக்தி, இவை தான் என் உறவு... உலகம்."

"சுவாமி என்னிடத்தில் இன்றும் ஒரு தாயின் ஆழமான அன்பை வைத்திருக்கிறார். அன்பு காட்டி வருகிறார்.

"என்னிடம் எவ்வளவு அன்பு வைத்து - ஆதரவாகவும் இருக்கிறாரோ, அதே அன்பையும் ஆதரவையும் அந்தக் குடும்பத்திடமும் வைத்திருக்கிறார். அவர்கள் அடிக்கடி ஆதரவுக்கும், வழிகாட்டுதலுக்கும் அவரிடம்தான் வருகிறார்கள். நான் அவரிடம் போகும்போதெல்லாம் ஜாடைமாடையாகக் குடும்பத்தின் நிகழ்ச்சிகளையும் நிலையையையும் சுட்டிகாட்டுவார். **யாருக்கும் அவர் ஆறுதல் ஏற்படும்படி மட்டுமே வெளிப்படுத்துவார்; காரியங்களைச் செய்வார்.**

பாபாவிடம் கொண்டிருக்கும் ஆழ்ந்த அக்கறையும், அன்பும் போலவே ஆழ்ந்த அன்பையும் அக்கறையையும், தலைவன் இல்லாத அந்தக்



குடும்பத்திடம் கொண்டிருக்கும் சுவாமிகளின் பரிவு கலந்த பொறுப்பும் என் நினைவிற்கு வந்தது.

பாபா சுவாமிகள் திருப்பணிக்கு பெரிய தொகைகளைக் கொடுப்பது பற்றியும், அண்மையில் இரண்டு முறையாகக் கொடுத்துள்ள தொகையினையும் மிகுந்த நன்றி உள்ளத்தோடும், கனிவோடும் சுவாமிகள் என்னிடம் கூறியிருந்தார்.

இதை நான் பாபாவிடம் கூறி னேன். பாபாவின் மனமும் சுவாமிகள் அதை என்னிடம் கூறும்போது எத்தகைய மென்மை உணர்வும், ஆழ்ந்த அன்பையும், உணர்த்தியதோ அதே உணர்வினை அடைந்தார்.

இரத்தினகிரி சுவாமிகள், "பாபா எங்கே வெளியூருக்குப் போனாலும் தன்னிடம் வந்து சொல்லிவிட்டுத்தான் போவார்" என்று கூறுவார். மாதத்திற்கு ஒரு முறையாவது தன்னை வந்து பார்ப்பதாக அவ்வளவு மகிழ்ச்சியோடும் - மனம் பூரிப்போடும், வெளிநாட்டில் வாழும் மகன் தன்னைக் காண மாதம் ஒருமுறை வந்தால் அந்தத் தாய், தன்னைச் சார்ந்தவர்களிடம் எப்படிச் சொல்லிப் பூரிப்பும், பெருமையும் அடைவாளோ, அப்படி பாபா வந்துத் தன்னைப் பார்த்துவிட்டுப் போவதைக் கூறுவது கேட்டு என் உள்ளம் மிகவும் மகிழ்ந்தது.

பாபாவிடமும் அதே மனநிலை, சுவாமிகளைக் காண்பதிலும், அது பற்றிக் கூறுவதிலும் இருந்ததை நான் முன்பே கேட்டிருந்தேன்.

விஜயதசமி அன்று பாபாவின் ராமராச்சிய ஆசிரமக் குடியிருப்பில் பூரணபிரம்மக் கோயில் கொடிமரம் நடும் நிகழ்ச்சி நடந்தது. யாக மண்டபத்தில் பெரிய கூட்டத்தில் அதுபற்றிப் பேசியபோது, பெரும் உற்சாகத்தோடு, "நான் இரத்தினகிரி சுவாமிகளிடம் போய், அங்கே சாமி

அவர் கோயிலில் கொடிமரம் நாட்டினார் இல்லியா? அது எவ்வளவு செலவாச்சி சாமி, அதன் விவரமெல்லாம் என்னன்னு சாமிகிட்ட கேட்டுக்கினு வந்திட்டேன்" என்று அப்படி ஒரு மகிழ்ச்சியோடு சொன்னார்.

அதாவது "நான் இதுமாதிரி வேலைக்கு அதாரிடியா இருக்கிறவங்க கிட்டயே கேட்டுக்கிட்டேன்" என்கிற மாதிரி மகிழ்ச்சி.

மேலும் பாபா சொன்னார்," சாமிகிட்ட இருக்கிற இன்னொரு பெரிய விஷயம், யாராக இருந்தாலும் எவ்வளவு வேண்டியவர்களாக இருந்தாலும் ஞாயம்தான் பேசுவார். அவங்க எப்படிப்பட்டவங்களா இருந்தாலும்" என்று அவர் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை சுவாமிக்கும் மிக வேண்டிய பக்தர் ஒருவரோடும் தனக்கும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைச் சொன்னார்.

"இது பற்றி அவர் பாபாவின் செயலைச் சுவாமியிடம் சொல்லியிருக்கிறார். சாமிக்கு அவர் ரொம்ப ரொம்ப வேண்டியவரா இருந்தும் சுவாமி 'நீ செய்தது தப்பு; நீ அப்படி செய்திருக்கக் கூடாது, சிவசங்கருக்கு எப்பவும் உதவற மனசு. என் பக்தன்னு தானே உனக்கு உதவி செய்தான்? நீங்க சரியா நடந்திருந்தா உங்களுக்கு இன்னும் கூட உதவியிருப்பான்னு' சாமி சொன்னதை நான் கேள்விப்பட்டேன்" என்றார்.

மணி ஓடிக்கொண்டே இருந்தது. இரண்டு பேருக்குமே நேரம் போவது தெரியவில்லை. மேலும் இனிய இசையை பிக்கல் பிசிறு இல்லாமல் தன்னை மறந்து இசைக்கும் ஒரு மகா இசைக்கலைஞன்போல் பாபா சாமிகளைப் பற்றிப் பேசிக்கொண்டே வந்தார்.

தன் மகனுக்காகச் சென்னைக் கல்லூரியில் படிக்க சீட் விஷயமாக ஏதாவது செய்ய முடியுமா என்று சாமி கேட்டதையும், பிறகு வேண்டாம்; கஷ்டம் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று எழுதியிருந்ததையும் காட்டினார்.

அவர் எழுதியுள்ள பூரணபிரம்மம் நூல் - இரண்டாம் பகுதியில், அவருடைய நிலை குறித்துப் பக்கம் 16 ல் பல்வேறு கடவுள்களின் ஒளியை எடுத்துப் படம்போட்டு விளக்கியிருக்கிறார். அதில் மேலும் கொஞ்சம்

துல்லியமான விளக்கம் எனக்குத் தேவைப்பட்டது. நீண்டநேரம் அதைப் படிக்கும்போதும் பார்க்கும்போதும் ஆழ்ந்து படித்தேன். விளக்கம் தேவையேற்பட்டது.

பேச்சின் போக்கில் நான் இரத்தினகிரி சுவாமிகளின் இடுப்புடை பற்றி எனக்கு என்னுடைய 'அனுபவ சாதனையில்', எனக்குத் தெரிந்த, தெளிவாக உள்ள கருத்தை பாபா விடம் கூறினேன்.

"தாந்த்ரீக வழியில் கடவுள் உணர்வைப் பெருக்க, Enlightmentக்கு இடுப்பு ஆடையோடும் அதற்குக் குறைவாகவும் கூட இருந்து தியானத்தைத் துவங்கவேண்டும்" என்று நான் சொன்னேன்.

அதற்கு பாபா "எனக்கோ, சாமிகளுக்கோ இந்தக் கடவுள் நிலை சாதனைகள் மூலம் படிப்படியாக வந்ததல்ல. சட்டென்று 'வெடித்து' "மூரி எழுந்து சிங்கம் மாபோல்" என்று ஆண்டாள் பாடல் வரியைச் சொல்லி "அப்படி, வந்தது" என்றார்.

பாபாவோடு பேசும்போது பூரண பிரம்மம் நூலில் படித்தது பற்றி மேலும் விளக்கம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். பேச்சின்போக்கில் பாபாவே இதுபற்றிப் பேச ஆரம்பித்தார்.

அவருக்குள் வந்த ஜோதி - ஒளி உருவங்களாகப் புத்தகத்தில் அச்சிடப்பட்டு இருந்தது. அந்த ஏழு ஒளி உருவங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

'இதப் பாருங்க' என்று அவற்றைக் காட்டினார். எல்லாமே போட்டோவாக எடுக்கப்பட்டு சிறிய அளவில் ஒன்றாக ஒரு பெரிய அட்டையில் ஒட்டப் பட்டுக் கண்ணாடிச் சட்டம் போட்டு இருந்தது.

"இதப் பாருங்க. இது பெருமாள். இத பாருங்க நாமம் தெரியுது பாருங்க" என்று ஒவ்வொன்றையும் விளக்கினார். இப்போது அது தெளிவாகப் புரிந்தது. தெரியவும் செய்தது.

"இது உங்களுக்கு எங்கே தெரிந்தது? எப்படிப் போட்டோ எடுத்தீர்கள்? "இது நரசிம்மர், "இது அம்பாளின் வாகனமான சிங்கம், இது இவையெல்லாம் எனக்குள் தோன்றியவை" என்றார். இந்த வடிவங்கள்

எல்லாம் நான் தியானம் செய்யும்போது தியான ஒளியில் தனக்குள்தெரிந்தவை" என்று அவர் கூறியதும், நான் சிக்கலில் இருந்து விடுபட்டேன். இது இயல்பாகத்தோன்றக் கூடியது. நான் வடிவங்களை நினைத்து ஆழ்ந்து தியானிக்கும்போது அவை துல்லியமாக, ஒளிமயமாகத் தோன்றும்.

"ஆனால், இதை எப்படி போட்டோ எடுப்பது?" பாபா சொன்னார், "இப்படி ஆழ்ந்து தியானிக்கும்போது போட்டோ எடுத்தால் இதுவும் வரும்" என்றார். "வெறும் காமிராவிலா?"

"ஆமாம் வெறும் காமிராவில்தான்." என்றார்.

"இது நான் புதிதாகக் கற்றுக் கொள்ளும் ஆன்மீக சாதனையின் உண்மை"

பாபா மேலும் சொன்னார். "நாம் ஆழ்ந்து தியானிக்கும் போது நம்மைச் சுற்றி ஒரு குறுகிய எல்லை வரைக்கும் இந்த ஆழ்ந்த ஒளி பரவுகிறது. இது அழுத்தமாக இருக்கும் வேளையில் போட்டோ எடுத்தால் நம்மோடு சேர்ந்து நிழல்போல, நமக்குள் இந்த உருவங்களும் தோன்றும்" என்றார்.

இப்போது எனக்குத் தெளிவாகிவிட்டது. ஜோதி... ஜோதி ஒளிவடிவம் என்பதற்கு, எல்லாம் விலக சட்டென்று மாயத்திரைகள் அத்தனையும் விலகியதுபோல், பெரும் அந்த ஒளி தோன்றிவிட்டது போல் என் மனத்தில் உணர்வு எழுந்தது.

பிறகு என்லைட்டன்மென்ட் - கடவுள் உணர்வு நிலை பொங்குவது என்பது; இந்த உடம்பிற்குள் உள்ள பலவகையான கோசங்கள் நீங்கவேண்டும் என்று சாத்திரத்தில் - யோகா நூல்களில் கூறப்படுவது. அவைகளின் பெயர்களையும், தன்மைகளையும் இரண்டு பேரும் கொஞ்சநேரம் பேசினோம். "இந்த ஐந்து கோசங்கள் - 5 உடம்பு உறைகளோடு மற்றொரு உறையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அது ஆடைமயமான கோசம் - ஆடை அணியப்பட்ட உடம்பு. அது சாத்திரங்களில் நம் இந்த உடம்புக்குள் ஒன்றுக்குள் ஒன்றாக இருப்பதாகச் சொல்லப்படும். 5 உடம்புகளில் முதல் உடம்பு 'அன்னமய கோசம்' என்பது உணவால் ஆகி அமைகின்ற இந்த உடம்பு.

"அதற்கு முன்னும் ஒரு கோசம் இருக்கிறது. அது தான் ஆடைமயகோசம். இது எந்தச் சாத்திரத்திலும் சொல்லப்படவில்லை. ஆடைகளால் உடம்பை மறைத்துக் கொள்ளாமல் யார் இருக்கிறார்கள்?"

"முதலில் நாம் காண்பது ஆடை உடம்பு."

"அது முதலில் போகவேண்டும்" என்று அது பற்றிப் பேசினோம். பாபா இரத்தினகிரி சுவாமிகளுக்குக் கோயிலில் சட்டென்று ஏற்பட்ட உடம்பு ஞானமய கோசம் - விஞ்ஞானமய கோசம் என்றார். நான் இது பற்றி முன்பே சுவாமிகளின் இடுப்பு உடை பற்றிக் கூறும்போது என் அனுபவத்தைச் சொல்லியிருக்கிறேன்.

பிறகு பாபா "சொன்னார்: என்னுடைய வாழ்க்கையில் - நான் மிகவும் துன்பப்பட்ட நிலையில், ஒருநாள் சுவாமிகளிடம் கேட்டேன்."

"நான் இவ்வளவு ஆழமாக, இவ்வளவு மனப்பூர்வமாகக் கண்ணீர்விட்டு எல்லாக் கடவுளிடமும் பக்தி செலுத்துகிறேன்; வணங்குகிறேன்; பூசிக்கிறேன். ஆனால் நான் இவ்வளவு செய்தும் என் துன்பங்களும் துயரங்களும் அதிகமாகிறதே தவிர குறையவே இல்லையே? அது ஏன்? என்றேன். கடவுள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்." என்று கேட்டேன்.

அதற்கு சுவாமி எழுதியிருந்தார். 'நீ இன்றிலிருந்து ஒரு 48 நாளைக்கு எந்த சாமியையும் கும்பிடாதே. நினைக்கவும் நினைக்காதே! அப்புறம் சொல்லு" என்று எழுதியிருந்தார்.

அதைப் படித்ததும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படித்தான் இருக்கலாமே என்று ஆரம்பித்தேன். உடனே ஒரு பயங்கர எண்ணம் என்னைப் பிடித்துக் கொண்டது. சுவாமிகளுக்கு நான் எழுதினேன்.

"சுவாமி, ஆண்டவன் எத்தனையோ உயர்ந்த பக்தனை எல்லாம் பார்த்தவன். ஆயிரக்கணக்கான வருடங்களாக இறைவன் பக்தியினுடைய உச்சியிலே இருந்த அன்பர்களை எல்லாம் பார்த்தவன்.

• தொண்டு செய்து நாளாறில் கண் இடந்து 'கண் அப்ப வல்லேன் அல்லேன்' - கண்ணப்பனை மாதிரி சிவபெருமானின் கண்ணில் ரத்தம் வந்தால் நான் என் கண்ணைக் கொடுப்பேனா என்று எனக்குத் தெரியாது.

"வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்" - சிறுத்தொண்ட நாயனாரிடத்தில் பிள்ளைக் கறி வேண்டும் என்று கேட்டபோது தன் பிள்ளையையே வெட்டுவதற்குத் தயாராக இருந்தாரே சிறுத்தொண்டர் என்று சொல்லக் கூடியவர். கடவுள் வந்து பிள்ளைக் கறி போடு என்று கேட்டால் நான் செய்வேனா, இல்லையா என்று எனக்குத் தெரியாது.

"அந்த மாதிரி மிக உயர்ந்த பக்தர்களை எல்லாம் பார்த்துவிட்ட அந்த பகவான் after all நான் கொஞ்சம் க்ஷேத்திராடனம் போயிருப்பேன்; தீர்த்த ஸ்நானம் செய்திருப்பேன்; நாலு மந்திரம் தெரியும். அவ்வளவுதான். நீ எல்லாம் என்ன பெரிய பக்தனா? என்று சொல்லி என்னை அப்பால் தள்ளிவிட்டால் நான் எங்கே போவேன்?

"நீங்கள் என்னைச் சுவாமியை விடச் சொல்கிறீர்கள். எனக்கு இருப்பதே சுவாமி ஒன்றுதான். அப்போ சுவாமியையும், விட்டுவிட்டு நான் என்னதான் சாதிக்கப் போகிறேன்? மிகப் பெரிய பக்தியை எல்லாம் கண்ட அந்த இறைவன் என்னை, 'நீ என்ன சாதாரண பக்தன் தானே, நான் பெரிய பெரிய பக்தனை எல்லாம் பார்த்துவிட்டேன், போடா' என்று சொல்லிவிட்டால் நான் எங்கே போவேன்?" என்று சொல்லிக் கடிதம் எழுதினேன்.

"அதற்கு மூன்று நாட்கள் கழித்து சுவாமி எனக்கு 'உன்னுடைய பக்தியை நான் சோதித்துப் பார்த்தேன். நீ வென்றுவிட்டாய்' என்று கடிதம் எழுதியிருந்தார்கள்.

நான் தொழிலில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் ஒருநாள் - சாமி,

பாபா ஒரு நாளைத் தேதி வருடங்களோடு கூறுகிறார் - காலை ஒன்பதரை மணிக்கு - ஒரு பெரும் தொகையையும் குறிப்பிடுகிறார்' - "உனக்குக் கடனாகக் கொடுத்து உதவுவதற்கு ஒருவர் வருவார். நீ அப்போது அங்கேயிருந்து அதை வாங்கிப் பயன்படுத்திக் கொள். கஷ்டம் தீரும்' என்று எழுதினார்.

"நான் ஒன்பது மணி வரைக்கும் அவர் வருகைக்காக நாங்கள் சந்திப்பதற்கும் ஏற்பாடு செய்துக் கொண்டிருந்தவர் வீட்டில் இருந்தேன். ஒன்பது வரைக்கும் அவர் வரவில்லை என்பதால் நான்

திருவண்ணாமலைக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டேன். மறுநாள் வந்து நான் நண்பரைப் பார்த்தபோது, 'என்ன நீ போய் விட்டாய்? நேற்று அவர் அந்தப் பெரும் தொகையோடு வந்தார்; நீண்ட நேரம் காத்திருந்தார்' என்று சொன்னார்.

"அவர் வந்த நேரம் காலை ஒன்பதரை மணி. சாமி எனக்கு எழுதிய அந்தச் சரியான நேரம். நான் அங்கிருந்து அதை வாங்கியிருந்தால் என் கஷ்டம் அப்போது தீர்ந்திருக்கும். நான் அப்படிச் செய்யாததால் மேலும் கஷ்டப்பட்டேன்.

இது சாமியினுடைய வாக்கு அப்படியே பலித்ததை என் வாழ்க்கையில் பலமுறை பார்த்திருக்கிறேன்.

"என் வாழ்க்கையில் நான் சாதாரணமாக; வாழ்வில், முன்னுக்கு வரவேண்டும்; பணக்காரனாக வேண்டும்; இப்படி இருக்கவேண்டும்; அப்படி இருக்கவேண்டும் என்ற வெறியோடு உழைத்த காலத்திலும் சரி; வெற்றி மேல் வெற்றி வந்து என் மீது குவிந்து அரண்மனைபோல் வீடு, கார், ஆள், அம்புகள், செல்வம், செல்வாக்கு என்று மேலே மேலே சென்று உயர்ந்தபோதும் சரி; எல்லாம் போய் நடுத்தெருவில் நின்று, ஒரு ஜோல்னாப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு கோயில், குளம், குடிசைகள், ஆசிரமங்கள், மலைகள், மகான்கள் முனிவர்கள், ஆறு, காடுகள் என்று ஒரு பக்கிரியாக அலைந்த காலத்திலும் சரி; இப்போது இப்படி ஆசிரமம், பக்தர் கூட்டம் என்று பெரிதாக ஆகியிருக்கும் நிலையிலும் சரி; என்னிடத்தில் **ஒரே மாதிரியான தாயின் அன்பைக் காட்டியவர், காட்டுபவர் சாமி ஒருவர்தான்**" என்றார்.

அதைச் சொல்லும் போது பாபாவின் குரல் தழுதழுத்தது.

அப்போது, பாபாவைப் பற்றி சுவாமிகள் முன்பு சொன்னது நினைவிற்கு வந்தது. "அப்போ பாபாவின் ஆரம்ப காலத்தில், கல்யாணம் ஆவதற்கும் முன்பும் சரி, ஆகி, பெரும் பணக்கார நிலையில் இருந்தபோதும் சரி, இப்போ, பாபாவாகி தனக்கென்று பக்தர்கள் கூட்டம், ஆசிரமங்கள், வெளிநாட்டில் பக்தர்கள், பயணங்கள், கார், பள்ளிக்கூடம் என்று வந்த பிறகும் சரி, அன்றைக்கு முதல்நாள் என்னிடம் எத்தகைய அன்பு, பரிவு,

பணிவு, அடக்கம், மரியாதை காட்டினாரோ, அதே அளவு பரிவு, மரியாதை எல்லாம் இன்னும் காட்டிக்கொண்டிருக்கிறார். அது சிறிதும் மாறவில்லை."

"ஒரு மாதத்திற்கு ஒருமுறையாவது என்னை வந்து பார்த்துவிட்டுப் போகிறார்" என்றார்.

சாமி இதை குறிப்பிடும் போது மகனைப் பற்றி ஒரு தாய் கூறும், பரிவும் பாசமும் ஆழமான அன்பும் தெரிந்தது.

இப்படி இரண்டு தெய்வீக அன்புக்கடல்கள். ஒன்று தேன்கடல். இன்னொன்று பழச்சாற்றுக் கடல்.

நான் இரண்டிலுமாக மூழ்கி இன்பமாக இருக்கிறேன்; பக்தர்கள் இருக்கிறார்கள்; தமிழ்நாடு இருக்கிறது. அதனால்தான் அவ்வப்போது தமிழ்நாட்டில் கொஞ்சம் மழை பெய்து கொண்டு இருக்கிறது.

18. சுவாமி சச்சிதானந்தம் எழுதுகிறார்.

இரத்தினகிரி கோயில் விழாக்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் செல்பவர்கள் - சென்றவர்கள் - ஒரு காட்சியைத் தொடர்ந்து பார்த்திருப் பார்கள். நம் சுவாமிகளுக்கு அருகில் காவி கட்டி தாடியைக் 'கட்' செய்த, கொஞ்சம் திடகாத்திர மான சுவாமி ஒருவர் உட்கார்ந்திருப்பார்.

நான் பல ஆண்டுகளாகப் பார்த்து வருகிறேன். 1982ல் தான் இரத்தினகிரி சுவாமி களை முதலில் தரிசித்ததாகவும் அப்போதி லிருந்து இரத்தினகிரி கோயிலுக்கு வந்து கொண் டிருப்பதாகவும் அவர் சொன்னார். அவர் இந்தியா முழுதும் சுற்றிய சாமி.

கர்நாடகாவில் அவர் தவத்தில் அமர்ந் திருந்த கால கட்டத்தில் மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அவரைக் கண்டு பேசி இருப்பதாக அவர் சொன்னார்.

இரத்தினகிரி சுவாமிகளிடம், அன்பு மரியாதை முதலான சொற்களை யெல்லாம் தாண்டிய அளவில் இயல்பானதொரு மகா ஈர்ப்பு ஒருவயது; ஒன்றரை வயது குழந்தைக்குத் தன் தாயிடம் உள்ள ஈர்ப்புத் தன்மை வாய்ந்தவர். பேசுவதில்லை. எழுதித்தான் காட்டுகிறார்.

முதன்முதலில் பாலமுருகன் சுவாமிகளைச் சந்தித்த போது மிகவும் நீளமான தாடி வைத்திருந்தாரம். சுவாமிகளின் தாடிக்குச் சமமாகவோ நீளமாகவோ அந்தத் தாடி இருந்ததாம். சாமிக்குச் சமமாகவும், நீளமாகவும் தனக்கு தாடியா? என்று 'கட்' செய்து விட்டதாக



அவ்வளவு சிரிப்போடும், அவ்வளவு ரம்மியமான ஜாடை மொழியில் கூறி குதூகலமும் அருளும் பொங்கச் சிரித்தார். "நான் எந்த சாமியார்களிடம் போவதில்லை. போகத் தோன்றுவதும், இல்லை." இங்கே கலவையில் கூட பெரிய சுவாமி கள் வந்து தங்குவார்கள். போன தில்லை; போவதில்லை. போகவும் தோன்றியது இல்லை.

'பார்ப்பது என்பது நம்ம சாமியைத்தான்', 'பார்த்து அவரோடு என்ன பேசுகிறீர்கள்?' "ஹூம். ஒண்ணுமே பேசறது இல்லே. சும்மா... ஜெஸ்ட் போவேன். சுவாமிகளைப் பார்ப்பேன். கூட இருப்பேன். வந்திடுவேன். அதுவே பெரிய திருப்தி. "ஒரு சின்ன குழந்தை அம்மாவைப் பாக்கறதுக்கு ஓடறமாதிரி."

நான் அவரோடு சில விஷயங்கள் பேசவேண்டும் என்று சொல்லிக் "கலவைக்கு வருகிறேன் சாமி. எப்ப வரட்டும்" என்று கலவை சென்று அவரைப் பார்த்தபோது கேட்டேன். ஒருநாள் சொல்லி அன்று "மாலை நாலுமணிக்கு வந்து விடுங்கள்" என்று சொன்னார். அன்றைக்கு நான் போனேன். அவர் அங்கு அவருடைய கோயிலில் இல்லை. வெளியே ராணிப் பேட்டைக்குப் போய்விட்டார்' என்றார்கள்.

கலவை என் ஊர் ஆற்காட்டிலிருந்து 20 கி.மீட்டருக்கும் அதிகமான தூரம். மறுபடியும் அவரைக் கலவையில் கண்டபோது, அன்றைக்கு வந்து போனதைச் சொன்னேன். அவர் குழந்தையைப் போலச் சிரித்துக் கொண்டே நினைவு இருந்தது. சட்டென்று சாமியைப் பாக்கணும்னு தோணிச்சி. இரத்தினகிரி கோயிலுக்குப் போயிட்டேன்'னு மகிழ்ச்சியாக சிரித்தார். வேறு எங்காவது அவர் போக நேர்ந்திருந்தால், என்னை வரச் சொல்லிவிட்டு அப்படிப் போனதற்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்திருப்பார். இப்போது ஒன்றும் காணோம். அதற்கு பதில் அதற்காக மகிழ்ச்சியாகவே

இருந்தார். அப்படிப்பட்ட அன்பை அவரிடம் இரத்தினகிரி சாமிகளிடம் பதினேழு வருடங்களாக இரத்தினகிரி சுவாமிகளின் அருகில் இருந்து பார்த்துக் கொண்டே வருகிறேன். ஒரு நாள் கூட ஒரு சின்ன வணக்கம் கூட நான் அவருக்குச் சொன்னதில்லை. பார்ப்பேன் ஆழ்ந்து அவர் அருளோடு பார்ப்பார்; கனிவோடு பார்ப்பார். இரத்தினகிரி சுவாமிகளும் அவர் யார். இன்னார் என்று சொல்லியதும் இல்லை.

இப்படிப் 17 ஆண்டுகள் வந்து மௌனமாக வந்து, உட்கார்ந்து, இருந்துவிட்டுப் போகும் அவரிடம், அதற்குப் பிறகு ஒரு மரியாதை, பிடிப்பு தோன்ற ஆரம்பித்தது. தலைகுனிந்து வணக்கம் சொல்வேன். அதே அருள் பார்வையோடு கைகளை உயர்த்தி ஆசி சொல்வார். மனம் நிறைவு கொள்ளும்.

கோயில் மேலாளர் சிவாதான் அவரோடு மிகநெருக்கமாவும் கலகலப்பாகவும் பழகுவார். அவரிடம் சுவாமிகளைப் பற்றி விசாரித்தேன். "கலவையிலிருந்து வர்றார். அங்கே ஒரு கோயிலில் இருக்கிறார். அதுக்கு மேலே ஒன்னும் தெரியாது சார்" என்றார்.

பிறகு நானே சுவாமிகள் இருக்கும் கலவைக்குப் போய் அவரிடமே அவரைப் பற்றிக் கேட்டும், சில நூல்களில் எழுதப்பட்டுள்ளதைப் படித்தும் மிகவும் விரிவான, மிகவும் ஆழமான செய்திகளை, நிகழ்வுகளை அவரைப் பற்றித் தெரிந்து கொண்டேன்.

'நீங்கள் எங்கே சந்நியாசம் வாங்கினீர்கள்? "அல்மோராவில்", இந்த அல்மோரா என்ற வார்த்தையைக் கேட்டதுமே என் உடம்பு சிலிர்த்து விட்டது. விவகானந்தரோடும், இராமகிருஷ்ணர், இராமகிருஷ்ண இயக்கத்தோடும் மிக ஆழ்ந்த தொடர்பும், இரத்த சம்பந்தமும் கொண்டவர்களுக்கு, இமயமலையில் இருக்கும் அந்த ஊரின் பெயர் அப்படிப்பட்ட சிலிர்ப்பை ஏன் உண்டாக்குகிறது என்பது தெரியும்.

"யாரிடம் வாங்கினீர்கள்." ஒரு வங்காளிச் சந்நியாசி இடம். "எவ்வளவு நாட்கள் அங்கே இருந்தீர்கள்? நாள் கணக்கு என்ன? மூன்று வருஷங்கள் இருந்தேன்." இருந்த குடியிருப்பின் பெயரைச் சொன்னார். பிறகு எவ்வளவோ; எவ்வளவோ; எவ்வளவோ பேசினோம்.

பிறகு நீண்ட காலமாகக் காவி உடையின் மீதும் அதை அணிந்து 'சந்நியாசிகள்' என்று தங்கள் தலையை நிமிர்த்திக் கொள்பவர்களிடமும் எனக்கு ஏற்பட்டுள்ள கசப்பு உணர்வையும், எரிச்சலையும் அவரிடம் கூறி அதற்கான காரணங்களைக் கூறினேன்.

ஆழ்ந்த அமைதியோடு கேட்டுக் கொண்ட அவர் மிகுந்த உணர்ச்சியோடு தான் உடுத்தியிருந்த காவி ஆடையைக் கையில் பிடித்து என்னிடம் உயர்த்திக் காட்டி "இது மிகவும் புனிதமானது. இதைக் கட்டிக் கொள்ளும் தகுதியில்லாதவர்களால் உங்களுக்கு இதன்மீது கசப்பு உணர்வு ஏற்பட வேண்டாம்" என்றார்.

என் மனத்தின் ஒரு மூலையில் நீண்ட நாட்கள் இருந்து வேதனைப் படுத்தி வந்த துயரம் நீங்கியது. மேலும் அவரைப் பற்றி அறிய அறிய, அவரிடம் இரத்தினகிரி சுவாமிகள் பற்றிய எண்ணங்களை இந்த நூலில் எழுதி வாங்கிப் போட வேண்டும் என்ற எண்ணம் ஆழ்ந்து எழுந்தது. நான் எழுதித்தரும்படிக் கேட்டேன்.

அதற்கு அவர் " சந்நியாசிகளைப் பற்றிய செய்திகளை நூல் எழுதி வெளிப்படுத்துவதில் எனக்கு விருப்பம் இல்லை" என்றார். நான் இவ்வளவு காலம் இவ்வளவு முயற்சிகளிடையே உருவாக்கி வரும் சுவாமிகளின் நூல் பற்றி இவருக்கு இருக்கும் இப்படிப்பட்ட எண்ணம் என்னைச் சிறிது நேரம் அசைவில்லாமல் ஆக்கியது.

பிறகு நான் இதுவரை எழுதி, அச்சிட்டு வைத்திருந்த பகுதியில் 'சுவாமி சொல்கிறார்' என்பதை எடுத்துக் கொடுத்து 'இதைப் படியுங்கள்' என்றேன்.

கையில் வாங்கிய சாமி படிக்க ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் அசைவற்றுச் சூழலையும் மறந்து அதிலேயே மூழ்கிப் போனார். படித்துக் கொண்டே இருந்தார். கலவையில் அவருடைய ஆசிரமத்தில் மாடியில் கட்டப்பட்டிருக்கும் அம்மா மகாலட்சுமியின் கோயில் கருவறையில் தென்மேற்கு மூலையில் உள்ள அறையில் இது நடந்து கொண்டிருந்தது.

இருட்டிக் கொண்டு வந்தது. நேரம் 6.50. கோயிலில் பூஜைக்கான மணி அடிக்கும் ஒலி கேட்டது. சுவாமி மிகுந்த உணர்வோடு மூச்சுவிட்டபடி. "ஒரு புதிய கோணத்தில் ஆழமாக நான் ஒன்று எழுதித் தருகிறன். அச்சிட்டுள்ள நூல் பகுதி முழுவதையும் என்னிடம் கொடுங்கள். ராத்திரி

12 மணியானாலும் படித்து முடித்துவிட்டு எழுதித் தருகிறேன்." என்றார் "காலையில் வந்து வாங்கிக் கொள்ளுகிறேன். சாமி! என்றேன் சாமி "இல்லை" ஒருநாள் டைம் குடுங்க என்று கனிவோடு கேட்டார்.

அவர் சொல்லிய நாளில், நேரத்தில், போன உடனே இந்தக் கட்டுரையை என்னிடம் கொடுத்தார். அவர் முகத்தில் ஆழ்ந்த ஒளி மேலும் சுடர் விட்டது.

இன்னும் ஒருநாள் டைம் கொடுத்து இருந்தால், இன்னும் நன்றாக எழுதி இருப்பேன்' என்றார்.

சரி! சாமி செய்யுங்கள் என்றேன். "இல்லை மனம் நிறைந்து விட்டது. இதை எழுதி முடிக்கும்போது ராத்திரி 12 மணி" என்றார். அந்தக் கட்டுரைதான் இது.

19. அவர் ஆத்மாவாக இருக்கிறார்.
- சச்சிதானந்த சுவாமிகள்

"அவர் ஆத்மாவாக இருக்கிறார். யாருடைய சாயலையும் அவரிடம் காணமுடியாது"

"அவர் அன்பின் வடிவம்! அழியாத பேரறிவு!"

"எங்களுக்கெல்லாம் ஞானத்தை வாரி வழங்கும் போதி மரம்."

"சாதி சமயம், சடங்கு போன்ற கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறிந்த ஆன்மீக உலகின் புதுக்கவிதை."

"ஒருமுழம் துண்டில் உடலை மறைத்துக் கொண்ட உத்தம தவச்சீலர்."

"அவர் சித்துக்கள் செய்வது இல்லை. ஆனால் சித்தர்கள் போற்றும் மகாசித்தர் அவர்."

"இருபத்திரெண்டாம் நூற்றாண்டின் இணையற்ற அருளாளர்."

"அவர் வித்து இல்லாமல் வளர்ந்த ஞான விருட்சம். குருபீடம் செதுக்காத சுவாமிகள் அவர். எனவேதான் அவர் ஆத்மாவாக இருக்கிறார். யாருடைய சாயலையும் அவரிடம் காணமுடியாது."


"ஓய்வறியா கர்மயோகி."

"ஒப்பற்ற தவஞானி."

"திட்டமிட்டுச் செயலாற்றுவதில் தனக்குவமை இல்லாத சிந்தனாவாதி."

"அவர் யாருக்கும் உபதேசம் செய்து போதிப்பது இல்லை. ஆனால், அவர் வாழும் வாழ்க்கையே மற்றவர்களுக்கு வேதமாகி விட்டது."


இரத்தினகிரிக்கு வருகை புரிந்த ஆன்மீகப் பெரியோர்கள்.




காஞ்சி காமகோடி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள்.




காஞ்சி காமகோடி
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.



திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்.




தவத்திரு. திருவலம் சுவாமிகள் அவர்கள்.




தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள்.



தவத்திரு. பெங்களூர் சிவபுரி சுவாமிகள்.




தவத்திரு. கலவை சச்சிதானந்த சுவாமிகள்.



தவத்திரு. மயிலை குருஜி அவர்கள்.




தவத்திரு. சிவசங்கர் பாபா அவர்கள்.



ஆன்மீக பெரியார்களுடன்.



திரு. தனுசு அவர்களின் ஓவியத்தில் பாலமுருகன்.



திரு. தனுசு அவர்களின் ஓவியத்தில் பாலமுருகனடிமை

"திரை உலகில் அமரர் சிவாஜி கணேசன் நடிக்க வந்த பின், நடிக்க வருபவர்கள் எல்லாம் சிவாஜியின் நடிப்பின் தாக்கம் இல்லாமல் நடிக்க முடியவில்லை என்று சொல்வார்கள்."

"அதுபோல் நம் சுவாமிகள் ஆன்மீக உலகிற்கு வந்தபின் அதுவரை ஆன்மீக உலகில் இருந்தவர்களும், அவருக்குப்பிறகு ஆன்மீக உலகில் அடியெடுத்து வைத்தவர்களாலும், நம் சுவாமிகளின் தாக்கம் இல்லாமல் ஆன்மீக வாழ்க்கையை நடத்தவே முடியவில்லை."

"சுவாமிகள் பலசாதனைகளுக்குச் சொந்தக்காரர். முற்றும் துறந்த மகாபுத்தர்கூட ஒரே இடத்தில் தங்கி இருந்தது இல்லை.

ஆனால் நம் சுவாமிகள் மட்டுமே 35 ஆண்டுகள் தன் சாம்ராஜ்ஜியத்தை அரைகிலோ மீட்டருக்குள் அடக்கிக் கொண்டவர். வெளியுலகம் எங்கும் செல்லாமல் இப்படிப் பெரிய தவம்."

"அவர் கட்டியுள்ள பாலமுருகன் திருக்கோயில் அவர் நிகழ்த்திய சாதனைகளின் சிகரம்."

"அவருக்கு ஈடு அவர் தான்!

அவர் வாழும் நாளில் நாம் வாழ்வது நாம் பெற்ற பிறவியின் பெறும் பேறு."

"அவர் பொன்னார் திருவடிகளுக்கு வந்தனம்

அவர் பொன்னார் திருவடிகளே எமக்கு அடைக்கலம்."

20. ஒரு மகாசிற்பி பேசுகிறார்.

வஸ்து - வாஸ்து வழியில் கடவுளைப் பார்ப்பது; கடவுளை உணர்வது என்று ஒருவழி இருக்கிறது. இது மிகமிக எளிமையான வழி. இப்போதும் நன்றாகச் செல்லுபடியாகிக் கொண்டிருக்கிற வழி; எப்போதும் செல்லுபடியாகக் கூடியவழி.

இந்த வழிதான் நாட்டில் வானளாவிய கோயில் களையும், மனம் அளாவிய சிலைகளையும் இந்த பூமி முழுதும் அமைத்துக் கடவுளின் கண்காணும் சாம்ராஜ்ஜியத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. இதை முதலில் உருவாக்கியவன் மயன் என்னும் தேவதச்சன் என்றும் அழைக்கப்படுகிறவர்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மயன் நிறுவிய கடவுளைக் காணும் மரபை - வழியை "கைவினைக் கம்மியர் காணா மரபின; மயன் விதித்துக் கொடுத்த மரபின்" என்று கூறுகிறார். கோயில், சர்ச், மசூதி மற்றும் வழி பாட்டு இடங்களும், அதற்குள் அமைக்கப்படும் சிற்பங்களும் சிலைகளும் இந்து வாஸ்து விஞ்ஞான அடிப்படையில் தான் அமைந்துள்ளன. இந்த வழியேதான், தஞ்சைப் பெரிய கோயிலும், பெரிய கோயிலின் 221½ அடி உயரமுள்ள பெரிய கோபுரமும் கோயிலில் உள்ள பெரிய லிங்கமும் அமைந்துள்ளன.

உலகத்திலேயே மிகச்சிறந்த மெய்யறிவாளன் வள்ளுவனுக்கு 133 அடி உயரத்தில் கடல் அலை வீசும் பாறைகள் மீது, கடைக்கால் எதுவும் இல்லாமலேயே அமைக்கப்பட்டுள்ள சிலையும் இந்த அடிப்படையில் தான் அமைக்கப்பட்டுள்ளது.

தஞ்சையின் அவ்வளவு பெரிய கோயிலைக் கட்டிய அந்தச் சிற்பியின் பெயரை மட்டும் அந்தக்



கோயிலைக் கட்ட வைத்த இராஜராஜன் தன் பெயரோடு சேர்ந்து அந்தக் கோயில் கோபுரத்தின் கல்லில் செதுக்கி வைத்திருக்கிறான். அப்படியென்றால் அந்தச் சிற்பி எப்பேர்பட்ட பெருமையும் ஆக்க எனர்ஜியும் ஊக்க எனர்ஜியும் நிறைந்தவனாக இருந்திருக்க வேண்டும். அவன் பெயர் அங்கே கல் வெட்டில், "திரு. குஞ்சரமல்லன் ராஜராஜப் பெருந்தச்சன்" என்றிருக்கிறது.

இந்தக் குஞ்சரமல்லன் ராஜராஜப் பெருந்தச்சனின் குடும்பத்தில் வழிவழிப் பரம்பரையில் இந்த இருபதாம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்து கொண்டிருப்பவர். இந்த 133 அடி உயராமான வள்ளுவர் சிலையை ஓர் ஆண்டு, 7 நாட்களில் வான் வெளியில் நிறுத்திய சிற்பி திரு வை . கணபதி சிற்பி அவர்கள்.

மயனின் இந்த இருபதாம் நூற்றாண்டின் வடிவம். அவர் மயனுடைய இந்த "வஸ்து வாஸ்துவாகிறது." அதாவது கண்ணுக்குத் தெரியாத உணர்வுமயமான கடவுள் எனர்ஜியே கண்ணுக்குத் தெரியும் சிலையாகிக் கடவுள் எனர்ஜியின் காணும் வடிவம் ஆகிறது என்ற விஞ்ஞான உண்மையை அழுத்திக் கூறுகிறார்.



உலகம் இதுவரை கண்டுள்ள மாபெரும் உலகப் பொருள் இயல் விஞ்ஞானி எனப்படும் ஐன்ஸ்டீனின் $E=MC^2$; $MC^2=E$ என்ற சமன்பாட்டோடு மயனின் வஸ்துவிலிருந்து வாஸ்து



வருகிறது என்ற சமன்பாடு (equation) இயைந்து நிற்கிறது என்பதைப் பொருந்தக் காட்டி நிறுவிக்காட்டி யுள்ளார். இன்றைய விஞ்ஞான உலகம் இதை எதிர்ப்பில்லாமல் ஆராய்ந்து கொண்டும் ஏற்றுக் கொண்டும் வருகிறது.

அப்படிப்பட்ட தேவ தச்சனான கணபதி சிற்பி தான் சுவாமி 30 ஆண்டுகளாகக் கட்டி வரும் இரத்தினகிரி கோயில்களுக்கு இராஜராஜ சிற்பியாவார்.

சுவாமிகளைப் பற்றி இதுவரை நான் என் கருத்தாக இந்த நூலில் ஒன்றையும் எழுதவில்லை. நான் இந்த நூல் எழுத சுவாமிகள் அடி எடுத்துக் கொடுத்த போது. "கற்பனைக் கிடமின்றி, உண்மை நிலையினைத் தெளிவாக விளக்குவார் என்பதில் எமக்கும் முழுமையான அழுத்தமான நம்பிக்கை உண்டு" என்று அடி எடுத்துக் கொடுத்தார்.

நான் எழுதிவந்த பகுதிகள் அனைத்தையும் படித்துவந்த சுவாமிகள் "உங்கள் கருத்தென்று எதுவும் இல்லாமல், கற்பனையே இல்லாமல் எழுதி இருக்கிறீர்கள் என்று முழுமையான அழுத்தமான திருப்தியை மிகுந்த மகிழ்ச்சியோடு அனுபவித்துக் கூறுகினார்."

இதற்கு நான் செய்து வரும் வழி, தன்னை அறிந்து உணர்ந்தவரும், முருகனை அறிந்து உணர்ந்துவருமான சாமிகளே தன்னைப் பற்றியும் முருகனைப் பற்றியும் கூறுவதை அப்படியே கொடுத்து விடுவதுதான். இது மகாக் கடுமையான காரியம்தான். செயலில் ஈடுபடும் போதுதான் இது தெரியும். சுவாமிகளின் கருணையும் சுவாமிகளின் வழியாக வரும் பாலமுருகனின் கருணையும் இதை எளிமையான காரியம் என்று சொல்ல முடியாவிட்டாலும், முடிகின்ற காரியமாகச் செய்து கொண்டிருக்கிறது.

அதோடு நான் மேற்கொள்ளும் மற்றொரு வழி சுவாமிகளோடு நெருங்கிய உணர்வு இணைப்பு இருக்கின்ற கடவுள் மனிதர்களின் சுவாமிகள் பற்றிய உணர்வுகளை அவர்கள் சொல்லக் கேட்டுப் புரிந்து கொண்டு, எழுதி அதைச் சுவாமிகளிடத்திலும், சொல்லிய மகான்களிடமும் காட்டி அவர்கள் சரியாகவே அமைந்திருக்கிறது என்று மனநிறைவு கொண்டதும் அதை அச்சிட்டிருக்கிறேன். அப்படி அச்சிட்டது தான் நம் சிவசங்கரபாபா அவர்களின் உணர்வுகள். மற்றொன்று தானே கைப்பட எழுதிக் கொடுத்து விட்ட நம் சச்சிதானந்தம் சுவாமிகளுடையது.

அதுபோலவே ஒரு கடிதத்தை நம் பாலமுருகனடிமை சுவாமிகள் ஒருநாள் என்னிடம் தந்தார்.

"கணபதி ஸ்தபதி எழுதியிருக்கிறார். அவரைப் பாக்கணும்னு சொன்னீங்களே வரும்போது பார்க்கலாம். அப்ப நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இதப்பாருங்க என்று கடிதத்தைக் கொடுத்தார்.

ஒரு மகா சிற்பியின் கடிதம்

ஸ்தபதி திரு.வை. கணபதி அவர்கள்

சுவாமிகளுக்கு எழுதிய கடிதம் அப்படியே தரப்பட்டிருக்கின்றது.

படிப்பவர் மனத்தில் அவர் கூறும் கருத்துக்கள் பதியும் பொருட்டாகச் சொற்கள், குரல், உணர்வு, உணர்ச்சிகள் பொருள் சிறிதும் மாறாமல் மங்காமல் அவை ஒளிவிடும் அளவு அந்தக் கடிதம் சிறிது எடிட் செய்யப்பட்டிருக் கிறது.

நாள் 16.9.2001

"இரத்தினகிரி அருள்மிகு பால முருகன் மலைக்கோயில் சுமார் ஐநூறு ஆண்டு தொன்மை உடைய ஒரு மலைக்கோயில்

"அங்கு சுமார் முப்பது ஆண்டு களுக்கு முன்பு செங்கல்லால் கட்டப் பட்டதும், சுவர்கள் பல இடங்களில் வெடித்தும், சிதிலமுமான நிலையில் அது இருந்தது.

"அதனுள்ளே கல்லால் ஆன முருகன், வள்ளி, தேவசேனை - தெய்வயானை ஆகிய உருவங்கள் - சிலைகள் நிறுவப்பட்டிருந்தன.

"இத்தகைய கோயிலில் குடி கொண்டிருந்த முருகன் திருவருளால், அந்த முருகனின் ஒளிமயமான தரிசனத்தைக் கண்டு சுவாமிகள் ஞானம் பெற்ற இடமே இன்று முருகன் திருத்தலமாக விரிந்துள்ளது.

இந்த நிலையில், அந்தத் திருக்கோயிலுக்கு பக்தர்கள் ஆதரவைக் கொண்டு, விழாக்கால நெருக்கடிகளில் பக்தர்கள் இறங்க கற்படிகள் அமைத்து, அவர்கள் தரும் நன்கொடையில் அம்மலையைச் செப்பனிட்டு,

அவ்வப்பொழுது ஒவ்வொன்றாக அமைத்துக் கொண்ட, கோயிலைச் சுவாமிகள் அவர்கள் இன்று வாஸ்து ஆகம இலக்கணப்படி பெரியதொரு மலைக்கோயிலாக உருக்கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த முப்பது ஆண்டு காலத்தில் மலையின் மீது பழைய கோயிலின் சுற்றுப்புறங்களிலும், மலை அடிவாரத்திலும் சிறுசிறு கோயில்களை நிர்மாணித்து, இதனை மாபெரும் ஆன்மீக ஸ்தலமாக மாற்றி இருக்கிறார்கள்.

இக்கோயிலுக்கு அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும், பக்தர்களும் ஏராளமாக வருகை தந்து, அவர்தம் அருளாசி பெற்று, அவரது பணிகளை வெகுவாகப் பாராட்டிச் செல்கிறார்கள்.

அந்தக் காலத்தில் இவரது ஆலய அமைப்பை நூறாண்டுகள் வாழ்ந்து அருள் பாலித்த காஞ்சி காமகோடி பீடாதிபதி மறைந்த மகாசுவாமிகள் ஸ்ரீசந்திரசேகரேந்திர சுவாமிகள் நேரில் வந்து பார்த்து அவர்தம் பணிகளை ஆச்சரியத்தோடு பாராட்டியிருக்கிறார்கள்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளும் வந்து பார்த்து மகிழ்ந்து சமயச்சொற்பொழிவுகள் பல ஆற்றிய இடம் இதுவாகும்.

இக்கோயிலானது கர்ப்பகிருஹம், முக மண்டபம், விமானம் ஆகிய மூன்ற உறுப்புகள் கொண்டதாகத் தொடக்கத்தில் இருந்தது. இக்கோயிலை

இப்போது அதே இடத்தில் அதே திசையில், அதே அளவு முறைகளில் கற்கோயிலாகச் சுவாமிகள் மாற்றி அமைத்திருக்கிறார்கள்.

மேலும் இக்கோயிலைச் சுற்றிப் பள்ளம், படுகுழியாக இருந்த இடங்களைத் திறமை வாய்ந்த தலைமைப் பொறியாளர்களைக் கொண்டு, சமதளப்படுத்தி எழில் மிகுந்த எடுப்பான - ஒரு சுற்றுப்பிராகாரத்தை இப்போது கட்டியிருக்கிறார்கள். இந்தப் பிராகாரத்தில் தங்கரதம் இழுத்துச் செல்வதற்கு ஏற்ற இடவசதியையும் எடுப்பான தோற்றத்தையும் வாஸ்து இலக்கணப்படிச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

இந்தப் பிராகாரமானது இன்று எவரும் செய்து பார்த்திடாத உயரமும், கவர்ச்சியும் கொண்டதாக மிளிர்கிறது. மேலும் திருமுருகனின் திருவிளையாடல்களை இப்பிராகார மண்டபத்தில் மேல்நிலைகளில் சாதைச் சிற்பங்களாய் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இவை அனைத்தும் சிற்ப இலக்கணத்தின் அமைதி கொண்டவையாகும்.

"கருவறையின் சுற்றுப்புறத்தில் ஆறுபடை வீட்டு மூலச் சிற்பங்களையும், கோஷ்ட விக்ரகங்களையும் சிற்ப முறைப்படி அமைத்திருக்கிறார்கள். மேலும் முருகனைப் பாடிய ஆன்மீகப் புலவர்களையும், கற்சிற்பங்களாகச் சுவர்ப்பகுதியில் கவர்ச்சிகரமாய் அமைத்திருக்கிறார்கள்.

"இத்தகைய சிறப்பு வாய்ந்த அமைப்பு கொண்ட கோயில் மலைக்கோயிலாக இருப்பதால் வெகுதூரத்தில் இருந்து செல்லும் மக்கள் இக்கோயிலைப் பார்த்து வணக்கம் செய்வதற்கு ஏற்றவாறு உயர்ந்த கூரை கொண்டதாக அமைத்து மேலும் சிகரம் ஒன்றை அதன் மீது கட்டியுள்ளார்கள். இது தூரப்பார்வையாளர்களுக்கு உரியதாகும்.

"உள்ளே கல்லால் அமைந்த கருவறை மீது கல்லாலேயே ஒரு விமானத்தையும் கட்டியுள்ளார்கள். அங்கே விமானப் பரிவாரங்களும் உள்ளன. எனவே மலை உச்சியில் கட்டப்பட்டிருக்கும் இந்தத் திருக்கோயில், வாஸ்து சிற்ப இலக்கணப்படி கட்டப்பட்டிருப்பதோடு, பக்தகோடிகள் வருகைதரும் பெரும் கோயிலாகவும் அமைந்திருக்கிறது.

"உற்சவ காலங்களில் மக்கள் திரண்டு வந்து சுவாமி தரிசனம் செய்து

கொள்வதற்கு ஏற்றவாறு உயர்ந்த பிராகாரத்தைக் கட்டிக் காற்று நிறைந்த இடமாக ஆக்கி, வாஸ்து இலக்கணத்தின் மகத்தான விரிவை உணர்த்தியிருக்கிறார்கள்.

"மேலும் மலைக்கோயிலிலிருந்து கீழே இறங்கிச் செல்வதற்கு ஏற்றவாறு படிகளை அமைத்து, அதன் முன்புறத்தில் தக்க உயரம் கொண்டு எழிலார்ந்த முகப்பு மண்டபம் ஒன்றையும் கட்டியிருக்கிறார்கள்.

இங்கு வெகுதூரத்தில் இருந்துவரும் பக்தர்கள் நீண்டநேரம் உட்கார்ந்து செல்வதற்கு ஏற்ற வசதியையும் செய்திருக்கிறார்கள். இங்கும் பல சிற்பக் காட்சிகளை நிறுவி சமய வரலாற்றைக் காட்சிப்படுத்தவும் திட்டம் வைத்திருக்கிறார்கள்.

"இக்கோயில் சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பதோடு இக்காலச் சிற்பிகள் தெரிந்துகொள்ள வேண்டிய சிறப்பான அமைப்பும், அழகும் கொண்டிருப்பதை சுட்டிச் சொல்லிட விரும்புகிறேன்.

"சுவாமிகளுக்கு தரிசனம் தந்திட்ட அந்தப் பழைய கால விக்ரஹங்களையே கருவறையில் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

"ஏறிவரும் படிக்கட்டின் உச்சியில் இந்தக் கோயில் பெரிய அளவில் கட்டப்படுவதற்கு முன்பு மலையில் கிடைத்த சமதளத்தில் ஒரு கோபுரத்தைக் கட்டியிருக்கிறார்கள். (ராஜகோபுரம்) இது திருப்பதி மலைப் பாதையில் இருக்கும் கோபுரங்களை நினைப்பூட்டும். அது மலைப் படிக்கட்டுகளின் முடிவைக் காட்டுகிறதே ஒழிய, இப்போதிருக்கும் கோயிலின் துவார கோபுரமல்ல.

"இக்கோயில் திருப்பணி வரலாறு தெரிந்தவருக்கு இது நன்கு தெரியும். இதோடு இக்கோயிலின் விஸ்தரிப்பை விட்டுவிடாது, மலையடிவாரத்தில் ஆறுமுகத் தெப்பக்குளம் ஒன்றைக் கட்டி அதன் நடுவில் ஆறுபக்கமுடைய ஆறுமுக மண்டபத்தை அமைத்து, அதன் நடுவிடத்தில் ஆறுமுகங்கள் கொண்ட ஆறுமுகப்பெருமானின் சிலை, கல்லால் அமைத்து ஆறுபடைவீட்டில் ஒன்றாகக் கட்டி முடித்திடத் திருவுள்ளம் கொண்டிருக்கிறார்.


"இந்தப் பணி குன்றுதோர் ஆடல் என்ற ஆறாவது படைவீட்டைச் சேர்ந்ததாக மிளிர்கிறது. அதற்கான கூறுகள் அனைத்தும் இம்மலைக் கோயிலில் உருவாகிவிட்டன. என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

"இத்தகைய சிறப்புகளை இந்த மலையில் செய்திட திருமுருகனா னவன் பாலமுருகனடிமைக்குக் காட்டிய ஒளிமிகுந்த அருட்காட்சியே காரணம் என்பதை நினைத்துப் பார்த்திடல் வேண்டும்.

இது ஒரு புதிய கோயில் அல்ல: பழமையான கோயில் புணருத்தாரணம் - புதுப்பித்தல் செய்து விரிவாக்கிய முருகன் திருத்தலம்.

இந்தக் கோயிலில் அமைந்திருக்கும் சிறப்பு என்னவென்றால் **"ஒரு தனி மனிதன் இறையருள் பெற்று அதன் வழியாக உருக்கொடுத்த மாபெரும் திருத்தலமாகும்.** இது அனைவரும் பாராட்டி மகிழத்தக்கதாக உள்ளது. வெறும் பெயரும், புகழும் சேர்ந்திடக் கட்டிய கோயில் அல்ல இது." என்றும் சொல்லிட விரும்புகிறேன்.

21. கொஞ்சம் இருக்கச் சொல்.



"பேராசிரியர் வந்ததைப் பார்த்தேன். கொஞ்சம் இருக்கச்சொல்" என்று சாமி சொல்லியதாக ரமேஷ் வந்து சொன்னார்.

பிறகு கொஞ்சநேரம் பொறுத்து அறை காலியாகிவிட்டதை அறிந்தேன். அவர் அறைக்குப்போனதும் என்னுடன் கோயிலின் அரசுச் செயல் அலுவலரும் வந்தார். ஊர் மக்கள் வந்து போனதைப் பற்றிப் பேச்சு துவங்கியது. இருவரும் அது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். கோயிலையும் மலையையும் உள்ளடக்கிய சமாச்சாரம் அது. அது ஒரு பெரிய கதை. மணி ஒன்பது ஆகிவிட்டது. சாமிகளிடம், "சாமி! செயல் அலுவலர் உங்களிடம் தனியாகப் பேச வந்திருப்பார். நான் பிறகு வருகிறேன்" என்று எழுந்து வந்துவிட்டேன். மணி ஒன்பதரை ஆயிற்று.

கோயிலுக்கு வரும்போது என் மகன் உமாசங்கர் காரில் கொண்டுவந்து விட்டுவிட்டுப்போனார். திரும்பி வரும்போது பஸ்ஸில் வருவதாகச் சொல்லி,

"வரவேண்டாம்" என்று அனுப்பிவிட்டேன். கடைசி பஸ் இரவு பத்து மணிக்கு. மலையிலிருந்து ஒன்பதரை மணிக்குக் கீழே இறங்கினால்தான் பஸ்ஸைப்பிடிக்க முடியும். கிருஷ்ணமூர்த்தியிடம் "சாமி வந்தால் சொல்லிடுங்க. நான் போறேன்" என்று பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். அவர் உடனே பரபரப்பாக "வேண்டாம்சார், சாப்டுட்டுப் போங்க சார். மத்தியானம் வந்திருந்த போது நீங்கள் சாப்பிடாமலேயே கிளம்பிட்டீங்க. சாமி எங்களைத் திட்டினார். கொஞ்சம் இருங்க" என்று தடுத்து இலையைப் போட்டார். சாமிகளைப் போய் அழைத்துவந்தார். இரண்டு பேரும் சாப்பிட உட்கார்ந்தோம்.

சாமியின் முன்னால் நான் இருக்கும்போது எனக்குப் பொதுவாக மனத்தில் எதுவும் தோன்றுவதில்லை. நேரம், காலம், வேலைகள், பஸ், வீடு, அது, இது, லொட்டு, லொசுக்கு மற்ற எதுவும், எதுவும். அது ஒரு கடவுள் மனிதர் முன் - கடவுள் உணர்வு பெற்றவர் முன் இருக்கும்போது ஏற்படும் நிலை. இதை நான் சுகமாக அனுபவிப்பவன்.

சாப்பிட்டு முடிந்ததும் 'சாமி, 'வாங்க!' என்று தன் அறைக்குள் சென்றார். நான் ஸ்பைரல் பைண்டிங் செய்து கொடுத்திருந்த 'முருகனும் அடிமையும்' நூலின் தட்டெழுத்துப் படியைப் பக்கத்தில் இருந்த ஒரு பையிலிருந்து சிரித்துக்கொண்டே எடுத்தார்.

"என் கூடவே வச்சிருக்கிறேன். எப்ப நேரம் கிடைக்கிறதோ அப்பல்லாம் படிக்கிறேன். உண்மையிலேயே ரொம்ப நல்லா இருக்கு." மனமாற சொல்லிக்கொண்டே பிரித்தார். சாமிகளிடம் யாராவது ஒருவர் ஒரு 15பைசா பென்சிலைக் கொடுத்தாலும் நாலுமுறை நன்றாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டேயிருப்பார். அதைச் சொல்லும்போது அவர் முகத்தில் தோன்றும் ஆனந்தமும், சிரிப்பும் குழந்தமையும் இருக்கிறதே அது கண்டு கண்டு அனுபவிக்க வேண்டிய அனுபவம். புண்ணியம் செய்தவர்களுக்குத்தான் அது கிடைக்கும்.

இது அவருடைய வரலாறு. அவர் மனத்திற்குப் பிடித்ததுபோல் அமைந்துவிட்டது. மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா? அவ்வளவு மகிழ்ச்சியோடு அதைச் சொன்னார்.

இதற்கான பெருமையோ, மரியாதையோ எழுதிய எனக்கொன்றும் இல்லை. இது முழுக்க முழுக்க முருகனும், சுவாமிகளும் போட்ட பிச்சை.

பிறகு சுவாமி மிகவும் கடினமான ஒரு செய்தியைச் சொல்ல வருவதைப் போல், மிகமிக அன்பாகவும், பக்குவமாகவும் அவருக்கே உரிய மற்றும் சகலவிதமான கனிவோடும் கூறுனார்.

"சில இடங்களில் கொஞ்சம் கொஞ்சம் நீக்க வேண்டும்."

"நானே ஓரங்கள்லே எழுதி வச்சிருக்கேன்" என்றார். பிறகு கொஞ்ச நேரம் அமைதியாக இருந்துவிட்டு, ஆழ்ந்து குறிப்பிடுகிறார்.

"அந்த நிகழ்ச்சி நடந்து இருபது வருஷங்கள் ஆயிடுச்சி. இவங்க கொடுத்த கஷ்டங்கள், படுத்திய வேதனைகள், நாம் பட்ட பாடுகள் எல்லாம் உங்க எழுத்துல படிச்சப்போ, மனசு உருகிப்போச்சு. அவ்வளவும் உண்மை. அப்படியே இருக்கு."

நான் பலநாட்களுக்கு முன்பு நூலின் அந்தப் பகுதியின் பல பக்கங்களைச் சுவாமிகளிடம் கொடுத்தேன். அதை வாங்கிப் படிக்க ஆரம்பித்தவர் சிறிது நேரத்தில் தன்னையும் சூழலையும் மறந்தபடி அதிலேயே மூழ்கிப்போனார். அவர் எதிரில் அமர்ந்தபடி அவரையே நான் பார்த்துக்கொண்டிருந்தேன். ஏதோ ஒரு பெரிய பாதாளத்தில் இறங்கிவிட்டது போல அவர் தோற்றம். அதை முழுதும் படித்துவிட்டு பிறகு நிமிர்ந்து உட்கார்ந்து ஒரு பெரிய சோகப்பெருமூச்சு விட்டார். கொஞ்சநேரம் பேசவே இல்லை. அவ்வளவு பெரிய பாதிப்பை அவருக்குச் சம்பந்தமே இல்லாத ஒரு விவகாரத்தால், அவர் பட்ட துன்பங்களைச் சில பத்திரிக்கைக்காரர்களும், வயிற்றெரிச்சல்காரார்களும், அரசியல்வாதிகளும் நல்லதைக்கண்டு எப்போதும் வயிறு எரிந்து போகின்றவர்களும் கொடூரமானவர்களும் சுவாமிக்கு ஏற்படுத்திவிட்டிருந்தார்கள்.

அந்த நினைவு வரும்போதெல்லாம் அவர் பட்ட வேதனையை ஒரு பத்து, பதினைந்து வருடங்கள் அருகிலிருந்து பார்த்து, வேதனைப் பட்டவன் நான். மனம் கொதித்தவன்.

இவர் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல் அந்தக் காலகட்டத்தில், அந்த நேரத்தில் அவருடன் இருந்த சில இளைஞர்களுக்கும், அவர்கள் உடம்பால் பட்ட வேதனைகளையும், பாதிப்புகளையும் சித்ரவதைகளையும் அவர்கள் அழுதழுது சொல்லக்கேட்டபோது இரத்தக்கண்ணீர் என்பார்களே அது வடிக்கப்பட்ட வேதனை. அது கேட்டு பல இரவுகள் என்னால் தூங்கவே முடியவில்லை. தேவையில்லாத சித்ரவதை, தேவையில்லாத கொடுமை, சம்பந்தமே இல்லாதவர்களுக்கு இழைக்கப்பட்டன.

அதுமட்டுமல்லாமல் கோயிலின் வளர்ச்சியில் வயிற்றெரிச்சல் படுபவர்கள் அதன் பிறகும், சுவாமிகளைக் கோயிலில் பார்க்கும்போது, 'ஆ! அந்தச் சாமிதானே' என்றும், கோயிலின் பெருமை பேசப்படும்போது 'ஆ! "அந்தக் கோயில்தானே" என்று சொல்லக் கேட்டு இருந்ததால் நான் மிகவும் மனம் நொந்தும், கரிந்தும், கசந்தும், எரிந்தும் போயிருந்தேன். இப்படியே உண்மையான கோயில் பக்தர்களும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

"சாமி அந்த நிகழ்ச்சியை" அத அப்படியே எழுதியிருக்கீங்க. இதுல ஒரு வார்த்தை கூட உங்க சொந்த வார்த்தை இல்ல. ஒரு சின்ன கற்பனை கூட இல்ல. நான் உங்களிடம் இந்த நூல் எழுதும்போது சொன்னது 'கற்பனையே இருக்கக்கூடாது' என்று. நான் சொல்லியபடியே முழுவதையும் அப்படி எழுதியிருக்கீங்க! இது மிகவும் ஆச்சரியமானது!

"ஆனால், நான் அதப் படிச்சதும்,"

சுவாமி இப்போது என்னைக் கனிவோடு நிமிர்ந்து பார்த்தார். "என்ன மனத்தில் தோணிச்சின்னா, நாம ரொம்பவும்தான் கஷ்டப்பட்டுட்டோம்.

"அது ரெண்டு தலைமுறையாயிடுச்சி. ரெண்டு தலைமுறைக்கு அது தெரியும். அடுத்து வரும் இளைய தலைமுறைக்கும் இது தெரியவேண்டுமா?ன்னு நான் யோசிக்கிறேன். அது எழுத்தில், அதுவும் உங்க எழுத்தில் வந்தால் அப்படியே நிலைச்சிடும். அதனால அது முற்றிலும் வேண்டாம்னு நெனக்கிறேன். இதில் ஒரு 50 பக்கங்கள் நீக்கிவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்." என்று மிகமிக பக்குவமாக,

அதற்கு மேல் யாராலும் சொல்லமுடியாத பக்குவத்தோடும், நயத்தோடும், அன்போடும், கனிவோடும் வேண்டுகோள் போன்றும் சாமி சொன்னார்.

சுவாமிகளின் வார்த்தைக்கு என்ன மறு வார்த்தை? அந்த 50 பக்கங்களும் நீக்கப்பட்டுவிட்டன. அது முடிந்துபோன விஷயம். ஆனால் அது எனக்குப் பெரிய அதிர்ச்சி! அந்த அதிர்ச்சியில் எனக்குக் கொஞ்சநேரம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு தெளிவும் விழிப்புணர்வும் ஏற்படுத்திக் கொள்ள மிகவும் முயன்று கொண்டிருந்தேன்.

சுவாமிகள் இதையெல்லாம் நன்றாக உணர்ந்தவர் போல் "அந்த இடத்தில் என்ன எழுதலாம் என்பதை நான் கொஞ்சம் எழுதி வைத்திருக்கிறேன்" என்று ஒரு ஐந்தாறு பக்கங்களில் அவருடைய அழகான கையெழுத்தில், அவர் பர்சனலாகத் தன் பக்தர்கள் மட்டும் உணர்ந்துகொள்ளப் பயன்படுத்தும் தனி நிற மையில், எழுதிய காகிதங்களை என்னிடம் கொடுத்தார்.

"பழைய சம்பவத்தினைப் பொதுவாகப் பேட்டி கண்டதும், மற்ற விவரங்களையும், கோடிட்டுக் காட்டலாம் என விரும்புகிறேன். இரண்டு ஜெனரேஷன்களுக்கு உலகறிந்த நிகழ்வாகிவிட்ட இதனை வருங்கால சந்ததியினருக்குத் - தற்போதுள்ள இளைஞர் சமுதாயத்திற்கு மேலும் உந்துதலான உணர்வினை இதனை படிக்கும்தோறும் எழுப்பிவிடுமோ என்ற தயக்கம். அடுத்து வருவது சுவாமிகள் எழுதிய பகுதி.

"முறையாக வளர்ந்து வந்த இத்திருக்கோயிலின் ஒரு பகுதியில் விரும்பத்தகாத, நடக்கக்கூடாத ஒரு கொடிய நிகழ்ச்சி நடந்துவிட்டது உண்மை.

"கோயில் பகுதியில் - மிக அருகில் நடந்துவிட்ட கொலை ஆதலால் கொலையைத் துப்புத் துலக்க வேண்டிக் கோயிலைப் போலீஸ் தன் பொறுப்பில் வைத்துக்கொண்டு (யாரையும்) கோயிலுக்குள் அனுமதிக்கவில்லை.

"நாட்டு நடப்புகளை உள்ளது உள்ளபடி தெரிந்து மக்களுக்குத் தெரிவிக்கவேண்டிய பத்திரிகைகள் சில தங்கள் விற்பனை ஒன்றையே

கருத்தில் கொண்டு இல்லாததும், பொல்லாததுமாகச் செய்திகளை வெளியிட்டு மக்களிடம் பரப்பின.

“வழக்கு நடந்து கொலைக்கும், திருக்கோயில் பொறுப்பாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று ஆனதற்குப் பின் உண்மை உணர்ந்த மக்கள் கோவிலுக்குப் பழையபடி வரத்தொடங்கினர்.

“கெட்ட கனவு போல் நடந்த இந்த நிகழ்ச்சி கனவுபோலவே மக்கள் மனத்தில் நிலைகொள்ளாமல் மறைந்துபோனது.

சுவாமிகளின் புனிதத்தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொண்டு நடந்து கொண்டதால், மலைபோல் வந்த பழி பனிபோல் நீங்கித் தற்போது கண்டோரும், கேட்டோரும் அதிசயிக்கும்படி கோயிலும், கோயில் வளாக நிலையங்களும் ஓங்கி வளர்ந்து உன்னத நிலையில் காட்சியளிக்கிறது.

“கோயிலின் வளர்ச்சியில் பொறாமைகொண்டு வதந்தியைப் பரப்பி சூது செய்தோர் வெட்கித் தலைகுனியும் வண்ணம், கோயில் முன்னிலும் பொலிவு பெற்று வலிவு பெற்று வளர்ந்து வருகிறது.

“தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடியும் வெல்லும்” என்னும் மொழி மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது”. சுவாமி படித்து முடித்ததும், “ஜீப் வரச்சொல்லி, தன்னைக் கீழே பள்ளிக்கூடத்திலே விட்டுவிட்டு, பேராசிரியரை வீட்டிலே கொண்டுபோய் விட்டுவரச்சொல்” என்றார்.

சாமி புறப்பட, நானும் புறப்பட்டேன்.

மணி பத்துக்கு மேல் ஆகியிருந்தது.

சுவாமியின் ஆசிரமத்துக்கு முன்னால் இருந்த மதில்சுவர் இடிக்கப்பட்டுக் கோயிலுக்குள்ளே ஏறிச் செல்லப் படிகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். மலைபாதை சுவாமிகளின் ஆசிரமத்திற்கு அருகே வரை போடப்பட்டிருந்தது. மலைபாதை மேட்டில் ஜீப்

நின்றுகொண்டிருந்தது. சுவாமி முன்சீட்டில் உட்கார நான் பின்சீட்டில் உட்கார்ந்தேன். மனம் ஒன்றுமே இயங்கவில்லை. "எழுதுவது என்றால் ஒரு மூட் இருந்தாதான் எழுதமுடியும்! இல்லையா?" என்றார் சுவாமி. என் மூட் அவுட் ஆகிப்போனது சாமிகளுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

பகலெல்லாம் உழைத்த சாமி, பள்ளிக்கூடத்தில் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு அரசுத் தேர்வு நெருங்கிவிட்டதால், ஒன்றிரண்டு மாதமாக இரவு வகுப்பு நடத்துகிறார். இரவு எட்டு மணி வரை மாணவிகளும், ஆசிரியர் பாதுகாப்பில் படிக்கிறார்கள். பிறகு அவர்கள் பெற்றோர்களால் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட, மாணவர்கள் மட்டும் இரவும் அங்கே தங்கிப் படிக்கிறார்கள். சில ஆசிரியர்களும் உடன் தங்கிப் பார்த்துக்கொள்ளுகிறார்கள்.

அதைக் கவனிக்க சுவாமிகள் இரவில் இரண்டு மூன்று நாட்கள் போய்க்கொண்டிருக்கிறார். இப்போதும் அங்கேதான் போகிறார்.


பள்ளியின் வாயில் எதிரே ஜீப் நின்றது. சுவாமி இறங்கி என்பக்கம் திரும்பிப் "போய் வாருங்கள்" என்று கையை ஆட்டினார். நான் சுவாமிகளை வணங்கினேன். ஜீப் புறப்பட்டது.

கோயிலிலிருந்து என் வீடு 13 கிமீ தூரம். மனம் மௌனமாகி விட்டிருந்தது. என்ன ஆயிற்று அதற்கு? என்னவென்று தெரியவில்லை. அதற்கு என்னவோ ஆகிவிட்டது. எல்லாவற்றையும் இழந்துவிட்டது போன்ற ஒரு நிலை. பாவம்! வீட்டை அடையும்போது பத்தே முக்கால் மணி.

மிகுந்த சோர்வு எனக்கு ஏற்பட்டது.

எனக்குத் தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாக அரசியல், அரசு, ஆன்மீகம், தொழிற்துறை, வாணிபம் முதலியவற்றில் குறிப்பிடத் தக்கவர்களோடு நேரடியாகவும், கடிதங்கள் மூலமாகவும் ஆழ்ந்த பழக்கம் உண்டு.

வாழ்க்கையை மிகமிக ஆழ்ந்து, துடித்தும், துயருற்றும் அகழ்ந்து நோக்கும் பார்வையும், அவைகளை ரசித்தும், ருசித்தும் காணும் இயல்பு எனக்கு உண்டு.



பழனித்திருக்கோயில்தங்கும் மாளிகையில் பழனி முருகனையும் கோயிலையும் வணங்கி, தகவல்கள் சேகரித்துப் புகைப்படங்கள் எடுத்த பின்னர், இரவு 11.30 மணிக்கு அமர்ந்து பேராசிரியர் அந்தக் குறிப்புகளை வைத்து நூலின் பகுதியை எழுதுகிறார்.



தவத்திரு சுவாமிகளுடன், பேராசிரியர், ஓவியர் திரு. தனுசு, திரு. ஸ்நேகா சீனிவாசன்.



திருத்தணிகை மலைப்பாதையில் இரத்தினகிரி பக்தர்கள் பேராசிரியரும், திரு. கிருஷ்ணமூர்த்தியும்.



பொன்மலையில், வெய்யிலில் மகிழ்ந்தபடி எதிரில் தெரியும் இரத்தினகிரி கோயில் காட்சிப் படப்பிடிப்பில் பேராசிரியரும். திரு. கலைமணியும்.

'தன்னையறிய தனக்கொரு கேடில்லை' என்று அன்றாட வேலையெல்லாம் முடித்து அக்கடா என்று உறக்கத்தில் விழுவதற்கு முன் அன்றாடம் என்னையே நான் தராசுத்தட்டில் ஏற்றி அன்று நான் செய்த காரியங்களை எல்லாம் பார்க்கும் ஆழ்ந்த தியானப்பழக்கமும் உண்டு.

என் மனத்தின் சாயம் யார்மீதும் பூசப்படாமல் யாரையும் அவரவர் இருப்பதுபோல் காண்பதற்கும், காட்டுவதற்கும் நான் எப்போதும் முயன்று வருகிறேன்.

இங்கே சுவாமிகளின் வாழ்விலும் அப்படித்தான் முயன்றேன். ஆனால் அவர் அதன் ஒரு பகுதியை அப்பால் அப்படியே எடுத்து வைத்துவிட்டார்.

நம் எழுத்தெல்லாம் அவர் எழுத்துக்கு முன் என்ன தாங்கும்? அவர் எழுதியதை அப்படியே நீக்கப்பட்ட அந்த ஐம்பது பக்கங்களின் இடத்தில் வைத்துவிடலாம் என்று எடுத்து வைத்தேன்.

மணி பார்த்தேன். மூன்று. நான் வழக்கமாக எழுந்து தியானம் செய்யும் நேரம். சிறிது நேரம் தியானம் செய்தேன். உடம்பு கொஞ்சம் துவண்டது. படுத்தேன். என் இயல்புப்படி அடுத்தநொடியே தூங்கிவிட்டேன்.

22. தங்கத் தேரும் அந்தத் தங்கமான மனிதரும்

சுவாமி சொல்கிறார்:

"அது ஆரம்பக் காலம் நான் கோயில்லே நின்னுட்டு இருந்தேன். கூட்டம் கூட அதிகம் இல்லை. இது பழைய கோயிலில்லே. அப்போ நல்ல டிப்டாப்பாக் களையான முகம், நல்ல உயரம் அதுக்கேற்ற பருமன். அதோடு ஒயிட் அண்ட் ஒயிட்லே கம்பீரத்தோடு ஒருத்தர் வந்து நின்றார். நானும் அவரைப் பார்த்தேன், அவரைப் பார்த்ததும் நீங்க இவரு பிள்ளை தானே? உங்க பேரு இது தானேன்னு சொன்னேன். அவர் அப்படியே திகைச்சி நின்னுட்டார். நான் எப்படி சொன்னேன்னு எனக்கே தெரியலே. அவர் அப்பா அப்போ சட்டசபையில் சபாநாயகராக இருந்தார். எப்படியோ தோணுச்சி. சொன்னேன். கொஞ்சம் நேரம் பேசிக்கொண்டிருந்தோம். போகும்போது ரூபாய் நோட்டு கத்தையாகக் கொடுத்துத் திருப்பணிக்கு என்று கொடுத்தார். நான் அசந்து போயிட்டேன். நமக்கு அதிகபட்சமாக கொடுத்தது ரூபாய் நூறு தான். இப்பதான் ஒரு கத்தையாக நோட்டு. ரூபாய் ஆயிரம். முதல் முதலாகப் பாக்கறேன்.

அப்புறம் கொஞ்சநாள் பொறுத்து வந்தார். அப்பவும் அப்படித்தான் கொடுத்தார். கடலூரிலே அவங்க பத்திரிக்கையின் கிளை நிலையம் ஆரம்பிக்கறதுக்கு முயற்சி பண்ணிட்டு இருந்தாங்க. அப்போ இந்திராகாந்தி பிரைம் மினிஸ்டரா இருந்தார். இங்கே உள்ளவர்களுக்கும், அவர்



களுக்கும் கொஞ்சம் சரியில்லாமல் இருந்தது. அதனாலே அதற்கான ஆர்டர் வரலே. அது பற்றிக் கேட்டார். நான் எழுதிக் காட்டினேன்.

நான் எந்தத் தேதியிலே அதற்கான ஆர்டர் கிடைக்கும்னு எழுதி காட்டினேனோ அதே தேதியிலே அது கிடைச்சிருக்கு என தகவல் அனுப்பினார்.

அப்புறம் ரொம்பநாள் கழிந்தது. இன்னோரு நிகழ்ச்சி. அது என் மனத்தில் ஆழ்ந்த வேதனையை ஏற்படுத்தியது.

அன்றும் இது போன்ற நேரம் தான் சுவாமி கூறுகிறார்.

"நான் இங்கே இந்தக் கோயில்லே வந்து உக்காந்த சில வருஷங்கள். ஒரு ஏழு, எட்டு வருஷங்கள் ஆகி இருக்கும். 75லே ஒரு நாள். கோயில்லே வரும் பக்தர்களுக்கு விபூதி குடுத்துக்கிட்டும், சீட்டு எழுதிக் கொடுத்துக்கிட்டும் இருந்தேன்.

ஒரு குடும்பம் வந்தது. கணவன் - மனைவி. ரெண்டு குழந்தைகள். நாலு பேருமே மொட்ட அடிச்சிக்கிட்டு இருந்தாங்க. ரொம்ப நேரமாத் தயங்கித் தயங்கி நின்றார்கள். பிறகு சீட்டு எழுதி எங்க எதிர்காலம் நல்லா இருக்குமான்னு கேட்டாங்க. அந்த அம்மா 'ஓ' ன்னு அழுதிடுச்சி.

அந்தக் குடும்பத்திலே ஏதோ ஆழ்ந்த கஷ்டம் இருக்குது என்பது எனக்குத் தெரிஞ்சது. என்னான்னு கேட்டேன்.

அந்தக் குடும்பஸ்தர் - கணவர் சொன்னார். நாங்க நல்ல நிலையிலே இருந்தோம். சாமி! கோயிலுக்கெல்லாம் தர்மம் செய்தோம். ஏழை, பாழைகளுக்குச் செய்தோம். அந்தக் காலத்திலே, பழனி முருகன் கோயில்லே

தங்கத்தேர் இழுத்து முருகனுக்குப் பிரார்த்தனை நிறைவேத்தறதா வேண்டிக்கிட்டேன். என்னவோ வேலைங்கள்லே உடனே செய்யாம விட்டுட்டேன். அப்படியே மறந்து போச்சு.

"கொஞ்ச நாள்லே செய்து வந்த தொழில்லே கஷ்டம் வர ஆரம்பிச்சுது. சரியாயிடும், சரியாயிடும்னு தொழிலைப் பார்க்கப் பாக்க நாளுக்கு நாள் மோசமாகி அன்றாட சாப்பாட்டுக்கே கஷ்டமாயிடுச்சி சாமி.

"அப்ப திடீர்னு நினைவுக்கு வந்தது. அடடா, நாம பழனி முருகனுக்குத் தங்கத்தேர் இழுக்கறதா வேண்டுதல் செஞ்சிக்கிட்டோமே. அத நிறைவேத்தலையே. அதனால்தான் இந்தக் கஷ்டம்னு தோணிச்சு.

"பழனி கோயில்லே போய்க் கேட்டா 250 ரூபாய் கட்டணும், தங்கத்தேர் இழுக்கறதுக்குன்னு சொல்லிட்டாங்க. அந்த 250 ரூபாய் அந்தக் காலத்திலே எனக்கு ஒன்னும் அதிகப் பணமில்லே சாமி. இப்ப ரொம்ப அதிகப் பணம். என்ன செய்யறதுன்னே தெரியலே. எங்கெங்கியோ, யார் யாரையோ கேட்டுப் பார்த்தேன் சாமி. ஒண்ணும் பெயரல. குடும்பத்திலேயே மனம் வெறுத்துப் போச்சி சாமி. அத நிறைவேத்தினாதான் குடும்பம் நல்ல நிலைக்கு வரும்னு தோணிச்சி.

"திடீர்னு பொண்டாட்டி கழுத்திலே தாலி இருக்கிறது நினைவுக்கு வந்தது சாமி. அவளை மஞ்சளைக் கட்டிக்கச் சொல்லி, அந்தத் தாலிய வித்து, தேர் இழுத்துப் பிரார்த்தனையை நிறைவேத்திட்டு, குழந்தைகளோட மொட்டப் பொட்டோம் சாமி. ஆறு படை வீட்டுக்கும் போய் வரோம். இரத்தினகிரிக்கும் வந்தோம் சாமின்னு" சொல்லி கண்ணீர் வடிச்சாங்க.

"இதக் கேட்டதும் என் மனசு ரொம்பவும் வேதனைப்பட்டது. அன்னிக்கெல்லாம் அதே பாதிப்பு. அன்னைக்கு ராத்திரி முருகன் கிட்ட போய்" முருகா என்ன கொடுமை இது? மனைவியுடைய தாலிய வித்து, அதுல உனக்கு காணிக்கை செலுத்தறதா? இப்படி ஒரு நிலையான்னு வேதனைப்பட்டேன்.

"அன்னைக்கு ராத்திரி கோயிலுக்கு வெளியே, அப்ப இந்த ரூமெல்லாம் ஏது? வெறும் பாறைதான் கோயிலைச் சுத்தி. அந்தப் பாறை மேலே

படுத்தபடி வானத்தைப் பார்த்துக்கொண்டே 'முருகா, இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு ஒரு மாற்றம் செய்ய வேண்டாமா? ஏழை ஜனங்க தங்கத்தேரைத் தொட்டு, இலவசமா இழுத்துப் பிரார்த்தனை செய்யற நிலையை உருவாக்க வேணாமா? உருவாக்கணும்னு நினைப்பு திரும்பத் திரும்ப வந்தபடியே இருந்தது. ராத்திரியெல்லாம் தூக்கமே இல்லெ"

"சரி, நாமே தங்கத்தேர் செய்து, இலவசமாகவே பக்தர்கள் இழுத்துப் பிரார்த்தனை நிறைவேற்றி வெச்சா என்னான்னு நெனப்பு திடீர்னு தோணிச்சி. ஆகற காரியமா அது? அப்பவெல்லாம் நமக்குக் காணிக்கையா பத்து பைசா, நாலணா, அதிகமாப்போனா ஒரு ரூபாய் போடுவாங்க. அதெல்லாம் பக்கெட்டிலும், ஒரு சின்ன எவர்சில்வர் பக்கெட் வச்சிருந்தேன் அதுலயும், அண்டாவிலேயும், அப்ப பிஸ்கட்டெல்லாம் டின்னிலே வரும். அந்த டின்னிலேயும் போட்டுக் கோயில்லே வச்சிருப்பேன்.

"தங்கத்தேரெல்லாம் நம்மாலே நெனச்சிப் பாக்கவே முடியாது. அப்புறம் வேற வழி? மனசு இதுக்கு ஏதாவது செய்யணும், ஏதாவது செய்யணும்னு துடிச்சிக்கிட்டே இருந்தது. ஒண்ணும் வழி தோணலே. மனசு வேதனையும் நின்னபாடில்லே. இப்படியே சில நாட்கள் இருந்தது."

"அப்போ அவர் முன்னே சொன்னேன் பார். அவர் அன்னிக்குப் பகல்லே வந்தாரு. அதே ஒயிட் அண்ட் ஒயிட். பேண்ட் சர்ட் இன் பண்ணி கம்பீரமான உருவம்.

அவரப் பத்தி சுவாமி அதிசயத்தோடும் ஆழ்ந்த அன்போடும் செய்திகளைச் சொன்னார்.

அவரிடத்திலே என்னுடைய இந்த மனவேதனையைத் தாளமுடியாம சொல்லி ரொம்ப வேதனைப்பட்டேன். என்னைக் கொஞ்ச நேரம் நின்னு பாத்த அவர்" "இதுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் சாமி"ன்னு கேட்டாரு."

"அதுக்குள் நான் ஆச்சாரிங்க, மத்தவங்க, விவரம் தெரிஞ்ச நம்ம பக்தர்களை எல்லாம் ஒரு தங்கத்தேர் செய்ய ஆகிற தங்கம்; வெள்ளி; செய்யற ஆச்சாரிங்க கூலின்னு மற்ற செலவுங்கன்னு போட்டு விவரங்க எழுதி எல்லாம் வச்சிருந்தேன்.

''மூன்றரை லட்சம் ரூபா தேவைப்பட்டது. அந்த விவரம் எல்லாத்தையும் காட்டினேன். பார்த்தார். ஒரு கட்டு நூறு ரூபாய். "சாமி, இத வச்சி வேலய ஆரம்பிங்க. மீதியும் நானே குடுத்திடறேன்''னு சொன்னாரு. இது 1974லே நடந்தது.

"நானு அப்படியே திக்பிரம அடஞ்சிட்டேன். என் வாழ்நாள்லே மொதல் மொதலா அவ்வளவு பணத்தை அப்பதான் பாக்கறேன். உடனே, தங்கத்தேர் செய்யறதுன்னா.. தங்கம் வாங்கறதுன்னா அதுக்குன்னு இருக்கற எல்லா விதிமுறைங்களைக் கேட்டு விவரமெல்லாம் திரட்டினேன்... சென்ட்ரல் கவர்ன்மெண்ட் கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து பர்மிஷன் வாங்கணும். தங்கம் வாங்கினது பற்றி அவங்ககிட்ட சர்டிபிகேட்டும் வாங்கணும்.

"வேலூர்லே கஸ்டம் ஆபிசுக்கு ஒரு பிராஞ்ச் இருக்கு. அதிலே வேலை செய்யறவரு நம்ம கோயிலுக்கு வருவாரு. நல்ல பக்தர். அவருகிட்ட விஷயம் சொன்னேன். அவர், சாமி, இது மாதிரி கோயிலுக்குத் தேர் செய்யணும்னா, பக்தர்கள் காணிக்கையாத் தங்களுடைய பழைய நகைகளைக் குடுக்கலாம். புதுசா தங்கம் வாங்கியும் குடுக்கலாம். இத ஒரு அறிக்கை எழுதிப் பொதுமக்களுக்குத் தெரிவிச்சிட்டு, அதுக்குன்னு ஒரு உண்டி வச்சிடுங்க. அதுல வர்ற தங்கத்தை, நாங்க வந்து எடைபோட்டு, அந்த எடையிலே இருக்கிற நகை அளவுக்கு ஒரு சர்டிபிகேட் குடுத்திடறோம். அத வச்சி நீங்க தங்கத்தேர் செய்யுங்க"ன்னு சொன்னார். அப்படியே அறிவிப்பு விட்டு, அதுக்குத் தனியா உண்டியும் வச்சோம். பக்தர்கள் பழைய நகைகளைப் போட்டாங்க. புதுசும் வாங்கிக் குடுத்தாங்க.

"அந்த அன்பரும் வருவாரு. முருகனைக் கும்பிடுவாரு. கொஞ்சநேரம் பேசிக்கிட்டிருப்பாரு. பிறகு இயன்ற பணத்தைக் குடுத்திட்டுப் போவாரு. அவர் ஒரு சிறந்த முருக பக்தராவார். நாட்டு நடப்புகளைப் பாமரன் முதல் படித்தவர் வரை அறிந்து கொள்ளும் வாய்ப்பினை அன்றாடம் நல்கி வருபவர்.

"அந்தப் பணத்துக்கும், பழைய நகைகளை வாங்கிக் கணக்கிலே சேர்த்திட்டோம்.

"கஸ்டம்ஸ் ஆபீசில் இருந்த அந்த அதிகாரி வந்து, அப்பப்ப சேரும் தங்கத்தை நிறுத்துக் கணக்கு போட்டு, அவங்க அபீஸ் ப்ரொஸீஜர் படி அவங்க ரிஜிஸ்டர்லே பதிஞ்சிட்டு நமக்கு சர்டிபிகேட் குடுத்திடுவாரு. நான் பைல் பண்ணி வச்சிடுவேன்.

"இரத்தினகிரி கோயில்ல தங்கத்தேர் செய்யறாங்கன்னு செய்தி தமிழ்நாடு முழுதும் பரவிடுச்சி. அதுக்கு முன்னாலே மூனு நாள்லே கரண்ட்டு இழுத்து லைட்டுங்க போட்டது. அப்புறம் கொஞ்ச நாள்லே பாலாத்துல தனியா கிணறு எடுத்து, மோட்டாரு வச்சி ஒரு கிலோ மீட்டருக்குப் பைப்பு பொதச்சித் தண்ணிய மலைக்கு ஏத்தி டேங்க் கட்டித் திறப்பு விழாபண்ணது.

"அப்புறம் யாருமே நினச்சியும் பாக்காத அளவு பெரிய கல்யாண மண்டபம் கட்டி உள்ளே திருக்குறளெல்லாம் எழுதி, அப்போ முதல் அமைச்சரா இருந்த கலைஞர் மூலமா திறந்தது.

"கல்லும், குகையும், பள்ளமுமாய்க் கிடந்த மலையிலே, அதையெல்லாம் தூர்த்து மலையை ஒடச்சி, அந்தக் கல்லைக் கொண்டு கோயிலைச் சுத்தி மண்டபம், ரூமுங்க இதெல்லாம் கட்டறது. அதுக்காக நூத்துக்கணக்கிலே அன்றாடம் ஆளுங்க வேலை செய்யறது. வெளியூரிலிருந்தெல்லாம் பஸ்ஸிலே எப்பப் பார்த்தாலும் பக்தர்கள் கூட்டம் வந்து பாத்துக்கிட்டுப்போறது.

"இதையெல்லாம் பாத்து, கோயிலுக்கும், எனக்கும் எதிர்ப்பா ஒரு கூட்டமே தோனிச்சி. அதோடுகூட இந்தச் சினிமாக்காரங்க வந்து இங்கே சினிமா எடுத்து வெளியிட்டது.

"தமிழ்நாடு முழுவதும் பேரு, அதோடு ஒரு எதிர்ப்புக் கூட்டம். இந்த நேரத்திலே தங்கத்தேரு செய்யறது.

"நாம வாங்கின தங்கத்தைத் தகடுகளாக்கி வேலையும் ஆரம்பிச்சிட்டோம்.

"அந்த நேரத்திலேதான் இந்த நிகழ்ச்சி நடந்தது. இதிலே அரசியல் அதிகம். சில கட்சிக்காரங்களுக்கு இது ஒரு பெரிய கொண்டாட்டமாயிடுத்து.

"போலீசிலேயே இங்கே தங்கக் கடத்தல் செய்யறதாகவும், அது அந்தப் போலீஸ்காரர் பாத்துட்டதாகவும், அதனாலே கொலை செய்யப்பட்ட தாகவும் பேச்சு. தங்கத்தேர் செய்யறதுக்கெல்லாம் தங்கம் எங்கே கெடச்சதுன்னு போலீஸ் விசாரணையிலும் கேட்டாங்க.

"நான் கஸ்டம்ஸ் ஆபீஸ் சர்டிபிகேட் காட்னதும் பேசாம விட்டாங்க. அது இல்லாம இருந்திருந்தா அரஸ்ட் பண்ணி இருப்பாங்க.

முருகர் எத வச்சி, என்ன பண்ணி இருக்கார். இதுக்கு என்ன சொல்றது?

இரவும், பகலும் இப்போதெல்லாம் எனக்கு முருகச் சிந்தனைதான். இத நெனக்க, நெனக்கத் தூக்கம் என்பதே போய்விட்டது.

தங்கத்தேர் வெள்ளோட்டம்

தங்கத் தேர் செய்து முடிப்பதற்கும் சுவாமிகளிடமிருந்து அரசு



கோயிலையும் சொத்தையும் - கோயில்? கோயிலில் என்ன இருந்தது? அல்லும் பகலும் அனைத்து நேரங்களும் என்பார்களே, அப்படி முருகனை மையமாக வைத்து, சுவாமிகள் உழைத்துச் சேர்த்த சொத்துக்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டது. எடுத்துக்

கொண்டது என்பதை விடப் பிடுங்கிக் கொண்டது என்றே சொல்லாம். இதைச் செய்தபோது சுவாமிகளிடம் அரசு கொஞ்சம் நிதானமாக நடந்து கொண்டிருக்கலாம்.

இந்த நேரத்தில் அறநிலையத்துறை ஆணையராக இருந்தவர் தேவையில்லாத அளவு கடுமையாக சுவாமிகளிடம் நடந்து கொண்டார். சுவாமிகள் மிகவும் மனம் நொந்து போயிருந்தார்.

மக்கள் தம்மை நம்பிக் கொடுத்த பணத்தில் திருப்பணிகளைத் தொடர்ந்து செய்வது தன்னுடைய தார்மீகப் பொறுப்பு என்பதை உணர்ந்து, அந்த நேரத்திலும் அதற்கான பணிகளில் எப்போதும் ஈடுபட்ட படியே இருந்தார்.

அதில் முதலாவது தங்கத்தேர் வெள்ளோட்டம். இரண்டாம் முருகனுக்கு அழகான திருக்குளம் அமைப்பது. இரத்தினகிரியில் செய்யப்பட்ட தங்கத் தேருக்குத் தமிழ்நாடு முழுவதிலும் ஏழை எளிய மக்கள் முதல், செல்வந்தர்கள் வரை அவரவர் நிலைக்கு ஏற்ப ஐம்பது காசுகள் முதல் ஆயிரக்கணக்கில் நிதியளித்திருந்தார்கள்.

அப்போது தமிழ் நாட்டிலேயே பழனியை அடுத்து முருகன் கோயிலில் செய்யப் படும் தங்கத்தேர் என்பதாலும், தங்கத்தேருக்காக நிதியளித்த பக்தர்களுக்கு அவ்வளவு பெரிய தங்கத் தேரில் தாங்கள் அளித்த காணிக்கையும் இருக்கிறது என்று பார்க்கும் வாய்ப்பையும் அளிக்கவேண்டும் என்பதாலும், அந்த விழாவை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும். என்று சுவாமி விரும்பினார்.

இதற்கு அந்த ஆணையர் இடமளிக்க வில்லை. அவர் இது குறித்துச் சுவாமிகளிடம் சொன்னார். "அரசாங்கத்திலே பெரிய அதிகாரிகளோ, அரசியல் தலைவர்களோ இந்தக் கோயில்லே தங்கத்தேர் இழுக்க வரமாட்டாங்க. சாதாரணமா கிருத்திகை நாள் ஒரு நாள்லே நாமே இழுத்து எளிமை யாகச் செய்திட வேண்டியதுதான்."



சுவாமி சொன்னார். "நான் சொன்னேன். இந்தத் தேரோட்டம் துவங்கரதுன்னா கவர்னர்தான் வரணும்"னு அப்ப தமிழ்நாட்லே கவர்னர் ஆட்சி. அப்பா மத்தியிலே ஜனதா கட்சி யினுடைய ஆட்சி. இந்திரா காந்தியின் அவசர நிலை ஆட்சி போயி மத்தியிலே ஜனதா கவர்ன்மெண்ட் ஆண்டு கிட்டிருந்தது. பா. இராமச்சந்திரன் மத்திய அமைச்சரா இருந்தார். அவர்மூலம் சென்ட்ரல் கவர்ன்மெண்டைத் தொடர்பு கொண்டேன். மற்றொருவரோடும் தொடர்பு கொண்டேன்." சுவாமி அவருடைய பேரைச் சொன்னார்.

"அப்ப பரமசிவம் நம்ம மாவட்ட கலக்டரா இருந்தார். அவருக்கு எழுதினேன். பிறகு அப்படியே சரியாகி கவர்னர்ப் பட்வாரி ஒத்துக்கிட்டார். அழைப்பிதழ் எல்லாம் போட்டுட்டேன். எல்லோருக்கும் அனுப்பலே. ஆணையருக்கு மட்டும் ஒன்னு அனுப்பினேன்.

"அதைப் பார்த்ததும் அப்படியே அவர் அதிர்ச்சி ஆயிட்டாராம். அப்ப கோயில்லே செயல் அலுவலரா இருந்தவரைக் கூப்பிட்டு நல்லா திட்டியிருக்கார்.

"என்னய்யா வேலை செய்றே? சாமி நம்ம மூலமாக தான் கவர்னர் வர்றதுக்கு ஏற்பாடெல்லாம் செய்யணும். அது தான் முறை. நீ இந்தக் கோயில்லே செயல் அலுவலரா இருக்கே. இவ்வளவு ஏற்பாடும் நடந்து முடிஞ்சுருக்கு அழைப்பிதழும் அச்சடிச்சி நமக்கே அனுப்பறாங்க. அது வரைக்கும் நீ விஷயம் தெரிஞ்சிக்காம என்ன செய்துகிட்டு இருந்தேன்னு திட்னாராம்.

"அப்புறம் அவர் என்னை வந்து பார்த்தார். "சாமி! நீங்க சவால் விட்டதைச் சாதிச் சிட்டீங்க. கவர்னருக்கு அழைப்பிதழ் கொடுக்கும்

பொறுப்பையாவது எங்கிட்டே குடுத்திருந்தா, எனக்குக் கவனர்ரை நேரே பார்க்கும் வாய்ப்பு கிடைச்சிருக்கும்னு சொன்னார்.

"இவங்கள்லாம் கவர்னரை நேரிலே பார்க்கமுடியாது. கவர்னர் ஆபீசிலே இருக்கிற அந்த ஆபிசரைத்தான் பார்க்கலாம்.

அப்படி நடந்து முடிஞ்சிது தங்கத்தேரின் வெள்ளோட்டம்."

கோயில் விழக்களில் நான் நேரடியாக முதல் முதலில் கலந்து கொள்ளும் விழாவாக இந்தத் தங்கத்தேர் வெள்ளோட்டமாக அமைந்தது. பெரிய கூட்டம். மிகச்சிறப்பாக நடந்தது.

அந்த விழாவில் கவர்னரோடு என்னுடைய கல்லூரித் தோழரும், அப்போது பார்லிமெண்ட் அங்கத்தினரைராகவும் இருந்த திரு. தண்டாயுதபாணியும் கலந்து கொண்டார்.

தங்கத்தேர் ஓட்டக் கட்டணம்

தங்கம் ஒரு சிக்கலான பொருள் இந்தக் கோயிலில் பல சிக்கல்களை அது ஏற்படுத்தி விட்டது. அது தொடர்பாக சுவாமி, பொறுப்பில் இருந்த ஆணையருக்குக் கடிதம் எழுதுகிறார்!

சுவாமிகளின் கடிதம்

பொருள் : கட்டணம் - தங்கரதம் - உற்சவம் நடத்தக் கட்டணம் நிர்ணயித்தது சம்பந்தமாக - துணை ஆணையரின் உத்தரவினை மறுபரிசீலனை சம்பந்தமாக

பார்வை 1. எனது கடிதம் நாள். 29.3.78

2. நிர்வாக அதிகாரி கடிதம். நாள். 27.5.78

3. துணை ஆணையரின் கடித எண். ந.சு 7913/78. அ2 நாள். 23.6.78

பார்வையில் குறிப்பிட்டுள்ள மூன்று கடிதங்களின் நகல்களைத் தங்கள் பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

ஆணையர் அவர்கள் "இக்கோயிலைப் பொறுத்த மட்டில், தங்கள் கருத்துக்களுக்கும் விருப்பத்திற்கும் இசைவாகவே நடைமுறை வழிபாடுகள் நடக்கும்"

என அளித்த உறுதிமொழியினைத் தொடர்ந்து, முடக்கப்பட்ட வேலைகள், வளர்ச்சிப் பணிகள் துவக்கப்பட்டு வேலைகள் உத்வேகத்துடன் நடைபெற்று வருகிறது.

"கருவறைத் திருப்பணிக்காகச் சுமார் 56000/- செலவிடப் பட்டும்; சித்த மருத்துவப் புறநோயாளிகள் பிரிவுக் கட்டிடம், ரூ. 4000/- செலவிட்டு முடிக்கப் பட்ட நிலையிலும், 10 ஊழியர் குடில்கள் கட்டுமான வேலை தொடங்கி இன்னும் 30 நாட்களில் முடியும் நிலையில் சுமார். ரூ. 40,000 செலவினையும் மேற்கொண்டு நடந்து வருகிறது.

"பக்தர்களின் அபிமானத்திற்கும், நம்பிக்கை உணர்விற்கும் பங்கமின்றி திருப்பணிகள் வளரும் இச்சூழ்நிலைக்கு பக்தர்களின் உணர்வுதான் அடிப்படை.

"இத் தங்கரதம் செய்ய என்னைத் தூண்ட வைத்ததே ஒரு சாதாரண, பாமர, வறிய உள்ளத்தின் இயலாமையே. அவ்வுணர்வுகளை மதித்தால் தானே கோயிலுக்கு உடமைகளைச் சேர்த்திடவும், கோயில் நலனையும் பாதுகாக்கவும் முடியும்?

"ஏற்கெனவே உத்தரவுகள் போடப்பட்டுள்ள கருத்தினை மேற்கோள்காட்டி, இந்தக் கோயிலுக்கும் மெக்கானிக்கலாக அதைப் பின்பற்றி உத்தரவு போடுவது நிர்வாகத்தினைச் செழுமைப் படுத்திவிடாது என அஞ்சுகிறேன்.

"நிர்வாக அதிகாரியின் அறிக்கையினை ஏற்கும் துணை ஆணையர், இப்பொருளை உருவாக்கியவனின் கருத்தினை - உணர்வினை புறக்கணித்ததற்கான தாத்பர்யம் புரிந்து கொள்ள முடியவில்லை.

"என்னுடைய இக்கருத்தால், சேவையால், கோயில் நலன் பாதிக்கப் பட்டுள்ளதா? அல்லது வருவாய் குறைந்துள்ளதா? அல்லது சேவிக்க வருபவர்களுக்குத்தான் இடையூறு உண்டா?

“இக்கோயிலின் நடைமுடை செலவுகட்கும், கோயில் நலனும் எந்த விதத்திலும் பாதிக்கப்படாத இச்சூழ்நிலையில் தங்க ரதம் இழுக்க ரூ.151/- கட்டணம் என நிர்ணயித்து பணம் தருபவர்கட்குத்தான் இழுக்க உரிமையும் தகுதியும் உண்டு என்ற பேத உணர்வு, ஏற்பட

“பாமர, வறிய உள்ளங்களிடையே வழிகோளும் என்பது மறுக்க முடியாத தாகும்.

“கட்டணம் நிர்ணயித்துள்ளதனைத் தேரைச் செய்தவன் என்ற முறையில் அல்ல; சாதாரண பக்தன் என்ற முறையில், துணை ஆணையரின் முடிவினை மறுபரிசீலனை செய்யத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஒவ்வொரு திருக்கோயிலிலும் பழக்க வழக்கங்கள், வழிபாடு முறைகள், உற்சவ நியதிகள், இடத்திற்கு இடம் மாறுபட்ட நியதியினைப் பின்பற்றும் நாம், இந்தக் கோயிலில் ரதத்தினைப் பிரதி கிருத்திகை தோறும் இலவசமாகக் கண்டு தரிசிக்கும் பொதுவிழாவாக இருக்கட்டுமே.

மற்ற நாளில் அனைவரும் பார்த்து தரிசித்து இன்புறும் நிலையில் இருக்கட்டும்.

கட்டணம் நிர்ணயித்தல் தவிர்க்க வேண்டும் என விரும்புகிறேன்.

பாலமுருகனடிமை. 12.7.78

சுவாமிகளின் மேற்கண்ட கடிதத்திற்கான ஆணையரின் பதில் கடிதம்.

பெறுவோர்.
தவத்திரு. பாலமுருகனடிமை.
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில்
இரத்தினகிரி. வட ஆற்க்காடு மாவட்டம்.

பொருள் : கட்டணம் - தங்கரதம் ஓட்டக் கட்டணம் நிர்ணயம் -

அருள்மிகு பால முருகன் என்கிற சுப்பிரமணிய சுவாமி கோயில் - இரத்தினகிரி வட ஆற்க்காடு மாவட்டம்.

பார்வை: 1. தங்கள் கடிதம் நாள் 12.7.78.

2. சென்னை துணை ஆணையரின் ந.க. 19685/78/அ2 நாள். 27.10.78.

"மேற்படி கோவிலில் ஒவ்வொரு மாதமும் கிருத்திகை அன்றும், மற்றும் விசேட நாட்களிலும், ஆலய உற்சவங்கள் சமயத்திலும், தங்கரதத்தில் அருள்மிகு பாலமுருகனை அனைவரும் தரிசிக்கலாம்.

"இதுதவிர, சாதாரண நாட்களில் சேவார்த்திகளில் சுவாமிகளை வணங்குபவர்களில் அவர் புறப்பாடு செய்ய விரும்பினால், கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வாறு கட்டணம் செலுத்தவில்லை என்றால், நாள்தோறும் தங்கரதம் புறப்பாடு செய்யக் கோரிக்கைகள் வரக்கூடும்.

"கட்டணம் நிர்ணயிப்பதால் பிராத்தனை உள்ளவர்களை மட்டுமே, சாதாரண நாட்களில் புறப்பாடு செய்வதற்கு முன்வருவர். மேலும் விலைமதிப்புள்ள தேரினைப் பாதுகாக்க இம்மாதிரி கட்டுப்பாடுகள் அவசியமாகிறது.

"எனவே, தங்கரதம் ஓட்டுவதற்குக் கட்டணம் வசூல் செய்து, ஒரு ஆறுமாத காலம் ஓட்டிய பிறகு தாங்கள் தெரிவித்துள்ள ஆலோசனை மீண்டும் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது."

இந்தக் கடிதத்தின் ஓரத்தில் சுவாமிகள் எழுதி இருக்கும் குறிப்பு

"எனது விருப்பத்தினை ஆணையர் தவறாகக் கருதியுள்ளார். புறப்பாடே பிரதி கிருத்திகை மட்டிலும்தான். மற்ற நாட்களில் பார்வைக்காக அனுமதிக்கப் பட்டு வருகிறது.

"தங்கரதப் புறப்பாட்டிற்குக் கட்டண முறை கூடாது என்பது தானே என் விருப்பம். உற்சவ காலங்களில் தங்கரதம் புறப்படாமல், மற்ற நாட்களில் கட்டணம் வாங்கிப் புறப்புறப்படும் வழிபாடே இத்திருக்கோயிலைப் பொருத்த வரையில் அவசியமற்றதாகும்.

"விலைமதிப்புள்ள தேரினைப் பாதுகாக்கக் கட்டணம் என்ற முறையில் கட்டுப் பாடுகள் அவசியம் என்கிற ஆணையரின் கூற்று ஏற்புடையதல்ல. நிர்வாகத்திற்கு இலகு வானதாக இருக்கலாம். உடைமைகளைப் பாதுகாக்க என்ன முன்னுரிமை அளிக்கிறதோ இலாகா, அதே நோக்கில் உணர்வுகளையும் மதிக்க வேண்டாமா?

"கட்டணமற்ற தங்கரத வழிபாடுதான் தேவை இங்கு. கட்டணம் என்றால் கட்டணம் வசூலிக்கும் திருக்கோயில் போவார்கள்.

11.7.79. ஆணையரின் உத்தரவு
ஆணையர் அலுவலகம்.
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை - 34.

பார்வை : 1. செயல் அலுவலர். கடிதம். ந.க. 249188/ நாள் 20.3.79

2. சென்னை துணை ஆணையர்கடிதம் ந.க. 19865 / 78 பி.2. நாள் 28.6.79

மேற்படி ஆலயத்தில் தங்கத்தேர் இழுப்பதை மாதாந்திர கிருத்திகை மற்றும் விழா நாட்களில் ஆலயச் செல்விலேயே செய்யலாம் என்று அறிவிக்கப் படுகிறது.

ஆணையருக்காக.

11/7/79.

பெறல் - நகல்

தவத்திரு பாலமுருகனடிமை அருள்மிகு பாலமுருகன் கோயில் ரத்னகிரி வாலாசாவட்டம் வடஆர்க்காடு மாவட்டம்.

இவ்வாறாக சுவாமிகள் எந்த, ஆழ்ந்த உணர்வோடு பாறையின் மீது படுத்தபடி தங்கத்தேர் வேண்டும் என்று முருகனிடம் பிராத்தனை செய்து கொண்டபடி ஏழை, எளியவர்களும் தொட்டு இழுக்கும்படிக் கோயிலை வலம் வந்து கொண்டிருக்கிறது.

ஏழைமுருகன் தன் அந்தக்கால ஏழ்மைநிலையையும் தன் ஏழை பக்தர்களையும் மறப்பானா?

கும்பாபிஷேக அழைப்பிதழில் அவர்களைத் தானே அவனும் சுவாமிகளும் சிறப்பாகக் குறிப்பிட்டு அழைத்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு மகன்! இப்படி ஒரு தந்தை!!

கும்பாபிஷேகம் நிகழ்ந்து நிறைவுற்ற கோயிலில் வழவழப்பான கிரேனைட் தரையில் விழாக்கள் தோறும் தங்கத்தேர் வலம் வருகிறது.

சுவாமிகளின் தங்கத்தேர் சிந்தனை - ஏக்கம் செயலாகக் காரணமானவரின் ஒரு செயல் தங்கத்தேரை விட ஆயிரம் மடங்கு எண்ணங்களை என் மனத்தில் சென்னையில் எழும்பூர் பகுதியில் நான் செல்லும் போதெல்லாம் எழுப்பியபடியே உள்ளது.

முருகன் பண்பாட்டின் உச்சம். தெய்வம் கடவுள் என்பதே ஓங்கி உயர்ந்த பண்பாடு தான். அப்படிப்பட்ட உயர்ந்த பண்பாட்டினையும். அப்பண்பாட்டைப் போற்றிக் காப்பவரையும் போற்றியாக வேண்டும். இல்லையென்றால் மனம் குறைப்பட்டுப் போய் விடும். பண்பாட்டில் வளர வேண்டிய புதிய பரிமாணங்கள் வளராது.

சென்னை எழும்பூரில் மிகவும் சுறுசுறுப்பான, போக்குவரத்து நெருக்கடியான பலதிசைப் பாதைகள் - இணைந்து பிரிகின்ற பாதைகளின் மையம், ஒன்று இருக்கிறது. அதில் அழகான பூந்தோட்டம் கடும் கோடையில் கூடப் பார்த்திருக்கிறேன் பூக்களோடு, பச்சைப் பசேலென்று சிரிக்கும் அந்தப் பூங்காவில் நின்ற நிலையில் வடக்கே பார்த்தபடி நிற்கும் ஒருசிலை!

அந்தச் சிலைவடிவமாக நிற்கும் நிற்கும் அந்த மனிதர் தமிழின் வளர்ச்சிக்கும் தமிழன் வளர்ச்சிக்கும் செய்திருக்கும் தொண்டு தமிழ்த்தாயின் உடலையெல்லாம், உயிரை எல்லாம் நெகிழ்ச்சி பெறச் செய்து விட்டது.

அதனால் பூரித்த தமிழ்த்தாய் அந்த அருமை மகனை இந்த நாட்டின் சட்டமன்ற நாயகனாகவும், தமிழ் மக்களின் அமைச்சனாகவும் ஆக்கி உச்சி குளிந்திருக்கிறாள். அவருடைய சிலை; நன்மைகள் செய்த எல்லோருக்கும் தான் சென்னையில் சிலை இருக்கிறது. இவருக்கு இருப்பதில் என்ன பெரிய சிறப்பு இருக்கிறது? என்று கேட்கலாம். சிறப்பு இருக்கிறது மாபெரும் சிறப்பு இருக்கிறது. மற்ற சிலைமன்னர்களுக்கு எல்லாம் இல்லாத சிறப்பு இந்தச் சிலைமன்னருக்கு இருக்கிறது.

நான் எழும்பூர் பக்கம் போக வாய்ப்பு - வேலை இருக்கும் போதெல்லாம் அந்தச் சிலையைக் காணத்தவறுவது இல்லை. அதை ஒரு நன்றிக் கடன் போலவே வைத்திருக்கிறேன்.

புழுதிகள், சுற்றி ஓடும் வாகனங்களின் ஓட்டத்தில் பறந்து அந்தச் சிலையில் படிந்து விடும். ஆனால் நாள்தோறும் அந்தச் சிலை காலையில் குளிப்பாட்டித் தூய்மை செய்யப் பட்டு, அன்றாடம் அதன் கழுத்தில் புத்தம் புதுமாலை கழுத்திலிருந்து கால்வரையில் அணிவிக்கப் படும். இதை எல்லோரும் கவனித்திருக்கலாம்.

இரத்தினகிரிகோயில் தங்கத்தேர் பெறக் காரணமாக அமைந்த அந்தத் தங்க மகன் அன்றாடம், சென்னை நகரின் நடுபாதைப் பகுதியில் வைக்கப் பட்டிருக்கும் தன் தந்தைக்கு, அன்றாடம் செய்கின்ற வழிபாடு - பூஜை இது!

எந்த பூஜை இந்த பூஜைக்கு நிகராகும்?

பிறந்தால் இப்படிப் பட்ட மகனுக்குத் தந்தையாகப் பிறக்க வேண்டும்!

பெற்றாலும் இப்படிப்பட்ட மகனை, மகனாகப் பெறவேண்டும்!

வள்ளுவன் இந்த இரண்டு பேரையும்தான் உதாரணமாக வைத்து,

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்"

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி; அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

"பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை; அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

என்ற குறள்களை எழுதினாரோ!

ஓம் சரவண பவ!

எல்லாப் புகழும் பாலமுருகனுக்கே! எல்லாப் புகழும் பாலமுருகனடிமை சுவாமிகளுக்கே.

தமிழ் நாட்டின் தவம்

சுவாமிகளுக்கு அவரிடம் உள்ள அன்பின் ஆழத்தைக் கண்டு நான் வியந்திருக்கிறேன். ஆஸ்பத்திரி நடத்துவதில் சுவாமி அன்றாடம், பணத்துக்காகவும், மருத்துவர்களுக்காகவும் கஷ்டப்படுவார்.

அப்போதெல்லாம் "அவர் அப்போதே சொன்னார். சாமி ஆஸ்பத்திரி கட்றதுக்குப் பணம் குடுப்பாங்க! அப்புறம் ஆஸ்பத்திரியை நடத்துறதுன்னு ஒன்னு இருக்கு! அதுதான் பொல்லத கஷ்டம். நீங்க ஆஸ்பத்திரியைக் கட்றீங்கன்னு சொல்வார். அவர் சொன்னத இப்ப அன்றாடம் அனுபவிக்கிறேன்னு" சொல்வார்.

அவர் நடத்தற கல்விக் கூடங்கள், அறநிலையங்கள்; வடநாட்டவர்களுக்கு நிகராகத் தேசிய விளையாட்டுத் துறையில் அவர் பெறும் பதவிகள் செய்யும் சாதனைகள் பற்றிக் கூறுவார்.

நீண்ட நாட்கள் அவருக்கு இருக்கும் தொழில் - சமூகப்பணி, அரசுப் பணிகள். இவைகளின் காரணமாகவும், வெளிநாட்டுப் பயணங்கள் காரணமாகவும் அவரால் கோயிலையும் சுவாமிகளையும் பார்க்க இயலவில்லை.

ஆனால் அந்த ஆதிகாலத்தில் தன்னிடமும் தன் முருகனிடமும் அன்பு கொண்ட அந்த முருக பக்தர், தான் இத்தனை ஆண்டுகள் உழைத்து உருவாகி இருக்கும் கோயிலைக் கண்டால் எப்படி மகிழ்வார் என்று சுவாமிகள் நினைப்பார்; சொல்வார். மலைபாதை போட்ட பிறகு அந்த நினைப்பு அதிகமாகியது.

கும்பாபிஷேக அழைப்பிதழ் முதலில் ஐந்து வந்தது. வந்தபோது லட்சக்கணக்கான தன் பக்தர்களில் தானே நேரில் சென்று கொடுப்பது போல் தன் அன்பிற்கு உரியவர்களிடம் கொடுத்தனுப்பியதில் இவருக்கும் ஒன்று கொடுத்து அனுப்பினார்.

அவர் கும்பாபிஷேகத்திற்கு வந்து, சுவாமிகள் அன்று தான் கண்டபோது பாறையாகவும் பள்ளங்களாகவும் இருந்த இடம், பளிங்குக் கோயிலாக இருப்பதைக் கண்டு இந்த முருக பக்தர் மனம் பொங்க; ஆத்ம பொங்க, அகம் மகிழ்ந்தார்.

அந்த மகிழ்ச்சியான நேரத்தில், சுவாமி யாரிடமும் இதுவரை சொல்லிக் கொள்ளாத தன் சோகத்தைத் - தனக்கு அண்ணன் போல் ஆதிகாலம் தொட்டு இருந்த பழம் பக்தர் இறந்து போனதைச் சொல்லிக் கண்கலங்கி ஆறுதல் பெற்றார்.

இவரும் அந்த அண்ணன் போல் நான் இருக்கிறேன்' சாமி என்று கூறிய ஆறுதல் மொழிகளைக் நெருக்கமான அன்பர்களிடம் சுவாமிகள் கூறி மன ஆறுதல் பெற்றார்.

ஒருபக்தர் அடைந்தால் இப்படிப்பட்ட சுவாமியை அடையவேண்டும்.

ஒரு சாமி அடைந்தால் இப்படிப்பட்ட பக்தரை அடைய வேண்டும்.

இரண்டு வகையிலும் அந்த முருக பக்தர் மகாமகா புண்ணியவான்.

23. கோயில் பணிகள் நின்று போன காலம்.

இந்தக் காலக் கட்டத்தில், சுவாமி கோயிலுக்கு மேற்கில், மலை சுற்றும் பாதை அருகே 'அந்த நிகழ்ச்சி' நடப்பதற்கு முன்பே, சித்த மருத்துவமனை கட்டிக்கொண்டிருந்தார். அது இப்போது நிறைவடைந்து கொண்டிருந்தது.

அரசு, கோயிலின் அதிகாரத்தை எடுத்துக் கொண்டதும், அரசு அதிகாரிகள் சுவாமிகளிடம் தாறுமாறாக நடந்து கொண்டதால் கோயிலில் எந்தவிதப் பணிகளும் நடைபெறாமல் கிடந்தது.

கல்லும், பாறையும், முள்ளும், முரட்டுமாக இருந்த மலையில் சுவாமிகள் உழைப்பாலும், முருகன் அருளாசியினாலும் ஏற்பட்டு வந்த உன்னதமான வளர்ச்சிகள் ஒடுங்கி, நின்றுபோய் கிடந்தன.

சுவாமிகள் மீது தேவையில்லாத வன்மம் கொண்ட ஓர் அரசியல் கூட்டம், அப்போது ஆட்சிக்கு வந்த அரசைச் சுவாமிகளுக்கு எந்தவித ஆதரவும், தரவிடாமல் தடுத்தும்: தவறான கருத்துக்களைப் பரப்பியபடியும், மலையில் வளர்ச்சிப் பணிகள் எதுவும் செய்யக்கூடாத படியும் செய்துவந்தது.

மருத்துவமனையை யாரைக் கொண்டு திறக்கலாம் என்று சுவாமிகள் யோசித்து, அவருடைய அன்புக்குரிய, நெருக்கமானவர் களிடம் ஆலோசனை செய்தார். என்னைக் கேட்ட போது.



அப்போது திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறநிலையத்துறை அமைச்சராகப் பதவி ஏற்றிருந்தார். திரு. ஆம்.எம். வீரப்பன் அவர்களின் தெளிவான கருத்துக்கள். விசாலமான மனம், நேர்மைக்குப் பாராட்டும், துணை செய்யும் பண்பு, துணிவு எல்லாம் எனக்குக் கொஞ்சம் தெரியும்.

அதனால் அவரை மருத்துவமனைத் திறப்பு விழாவிற்கு அழைக்கும் படியும் நம் கோயிலில் சுவாமிகள் செய்துள்ள அரும்பணிகளை அவர் பார்வையிட்டால் நமக்குச் சாதகமான நல்ல விளைவுகள் ஏற்படும் என்றும் சொன்னேன்: திரும்பத் திரும்ப வலியுறுத்தினேன்.

மற்ற அன்பர்களும், சுவாமிகளிடம் சொல்லியிருப்பார்கள் சுவாமிகள் மனத்தில் அது பட, தகுந்தவர்கள் மூலம், சித்த மருத்துவமனை திறப்பு விழாவிற்கு, அமைச்சர் அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று, அழைப்பிதழும் அச்சிட்டு வழங்கிவிட்டார்கள்.

1.12.78 அன்று திரு. ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் இரத்தினகிரியில் ஏழைமக்களுக்கான, இலவச சித்த மருத்துவமனையைத் திறந்து வைத்தார்கள்.

அந்த விழாவிற்காக அருகில் உள்ள இராணிப்பேட்டை விருந்தினர் மாளிகையில் அமைச்சர் அவர்கள் தங்கி இருக்கும்போது, அவரைக் கோயிலுக்கு வரவிடாதபடி சுவாமிகளின் எதிர்ப்புக் கூட்டத்தார் தடுத்தும், காலம் கடத்தியும், பலவிதமான தடைகள் செய்தார்கள்.

அமைச்சர், அவர்களிடம், "ஏன், வேண்டாம் என்று தடுக்கிறீர்கள்? நீங்களும் வாருங்கள். நேரில் போய் என்னதான் இருக்கிறது என்று பார்க்கலாம். பார்த்துத் தவறு இருந்தால் நேரிலேயே கேட்கலாம்: நடவடிக்கை எடுக்கலாம்; அதை விட்டுவிட்டு அங்கே போகக் கூடாது, அங்கே போகக் கூடாது என்று என்னென்னவோ காரணங்களைச்



சொன்னால் என்ன அர்த்தம்? வாருங்கள். எல்லோரும் போகலாம்" என்று அவர்களையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்கு வந்தார்கள்.

வந்த அமைச்சருக்கு சுவாமிகள் தான் கோயிலுக்கு வருவதற்கு முன் கோயில் இருந்த நிலை: தான் இங்கு வந்ததிலிருந்து இதுவரை செய்திருக்கும் திருப்பணிகள் ஆகியவற்றைக் கோயிலுக்குள்ளும், தன் அறைக்குள்ளும் அழைத்துச் சென்று, காட்டி, விவரமெல்லாம் தெரிவித்தார்கள், காண்பித்தார்கள்.

சிலைகளையெல்லாம் காட்டினார்கள்: நகைகளை எல்லாம் காட்டினார்கள்: கணக்குகளை எல்லாம் காட்டினார்கள். அமைச்சர் கேட்கக் கேட்கப் பலகையில் எல்லாச் செய்திகளையும் எழுதி எழுதிக் காட்டினார்கள்.

அவைகளையெல்லாம் பார்த்து வந்த அமைச்சர், மருத்துவமனையைத் திறந்து வைத்துப் பேசினார். அதை டேப் ரிக்காடரில் பதிவு செய்தோம்.

அந்த டேப்பிலிருந்து எடுத்துத்: இது தனி நூலாகவும் அச்சிட்டு சுவாமிகள் வழங்கினார்கள்.

அமைச்சர் அவர்களின் உரை:

"இந்த இரத்தினகிரி முருகன்க்கு மட்டும் எப்படி இவ்வளவு பெருமை ஏற்பட்டது"

"நான் ஐந்து மணிக்கே இங்கே வருவதற்குத் தயாராக இருந்தவனை ஆறு மணிக்கு வந்தால் போதும் என்று எனக்குச் சொன்னார்கள்.

"அப்படி ஒரு தவறான தகவலை எனக்குத் தந்து என்னை ஒருமணி நேரம் காக்க வைத்திருக்கிறார்கள். சரி அப்படி ஒரு தவறான தகவலைத் தந்து. நான் ஆறுமணிக்குப் புறப்பட்டு வரும்போதும் விடாப்பிடியாக என்னை வேறு ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

எனக்கு எழுந்த சந்தேகம். எப்படி இந்த ஆலயத்திற்கு இந்தப் பத்தாண்டு காலத்தில் இவ்வளவு பெரிய மகிமை எற்பட்டது? முருகன் கோயில்கள் எத்தனையோ இடங்களில் இருக்கின்றனவே. இந்த இரத்தினகிரி முருகனுக்கு மட்டும் இவ்வளவு பெருமை ஏற்பட்டது? அதுவும் 1968ஆம் ஆண்டுக்குப் பிறகு எப்படி ஏற்பட்டது? என்று நான் கேட்டேன்.

"சுவாமிகள் மாயம் இல்லை: மந்திரம் இல்லை: தந்திரமெல்லாம் இல்லை: மனிதன் கட்டுப்பாட்டோடு, தூய உணர்வோடு பிரார்த்தித்தால்" அவர்கள் எழுதிக் காட்டிய வார்த்தையை நான் சரியாகச் சொல்கிறேன் என்றே கருதுகிறேன்.

"பிரார்த்தனை செய்தால், அவன் வாழ்க்கையிலே எண்ணியதைப் பெற முடியும் என்றார்.

"மக்கள் விரும்புகிறார்கள் என்றால்....
"மக்கள் வழங்குவதற்கு வருகிறார்கள் என்றால்...
மக்கள் நம்பித் தருகிறார்கள் என்றால்....
அந்த நம்பிக்கைக்கு உரியவராக பாலமுருகனடிமை அவர்கள் விளங்குகிறார்கள் என்றால்...
அவர்களை நம்புவதற்கு அரசாங்கத்திற்கு என்ன நஷ்டம்?
அரசாங்கத்துக்கு என்ன கஷ்டம்?

"லட்சம் லட்சமாக மக்கள் நம்பித் தருகிறார்கள். மக்கள் தந்ததை இங்கே வைத்திருக்கிறார்.

"ஆபரணமாகக் காட்டுகிறார்!
கோபுரமாகக் கட்டி எழுப்பி இருக்கிறார்!
மண்டபம் கட்டப் போகிறேன்" என்கிறார்!
"திருக்குளம் வெட்டப்போகிறேன்" என்கிறார்!
"தங்கத்தேர் செய்திருக்கிறேன்" என்கிறார்!
"கடைகளைக் கட்டி வைத்திருக்கிறேன்" என்கிறார்!
"காலணி கட்டியிருக்கிறேன்" என்கிறார்!
"பள்ளிக் கட்டிடம் எழுப்பி இருக்கிறேன். பார்!" என்கிறார்
"சித்தமருத்துவமனையை வைத்திருக்கிறேன் பார்" என்கிறார்!

இவ்வளவும் இவரை நம்பித் தந்தவை: இன்றைக்கு இப்படி மக்களுடைய பணிக்காகச் செய்து காட்டிக் கொண்டிருக்கிற அவருடைய முயற்சியையும் நாங்கள் எண்ணுகிறோம்.

"பாலமுருகனடிமை அவர்கள் சேர்த்த இந்த நாற்பது லட்சத்தையும், கணக்கு - அங்கே உள்ளே போனால், கண்ணாடி போல் வைத்திருக்கிறார்கள் என்று சொல்வார்கள். அவர் கண்ணாடியைப் போலத்தான் வைத்திருக்கிறார்.

"அந்தக் கணக்குப் புத்தகத்தை அற்புதமாகப் போட்டோகிராப் எடுத்து அதைப் பக்கத்திலே வைத்து, அந்தப் படமும் இருக்கிறது. அந்தக் கிரீடமும் இருக்கிறது: அந்த கிரீடத்திற்குரிய விவரமும் இருக்கிறது பக்கத்திலே.

"மணிமணியாக, முத்து முத்தாக அவருக்கு ஒரு எழுத்தாற்றல் இருக்கிறது. ஒன்றும் தெரியாத சாதாரண குழந்தைகள் படித்தால் கூடப் புரிந்து கொள்ளும். அவர் அந்த அளவிற்குக் கணக்கு வைத்திருக்கிறார்.

"நிர்வாகத்திற்கோ, அதிகாரத்திற்கோ, அதிகாரிகளுக்கோ, நகைகளை மதிப்பீடு போடுபவர்களுக்கோ, நிறுப்பவர்களுக்கோ, இங்கே வேலையே இல்லை:

இன்னும் இதிலே சொல்லப்போனால் அவரே உண்டாக்கியது இது அவரே உருவாக்கியது: அவரை நம்பித் தந்தது என்றாலும் கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்.



ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட வருமானம் உடையவை மொத்தமே தமிழ்நாட்டில் ஐம்பது அல்லது அறுபது கோயில்கள். அதிலே ஒன்றாக இந்த இரத்தினகிரி கோயிலும் வந்து சேருகிறது.

இரத்தினகிரியில் சமூகப் பணிகள்.



திருமண ஏற்பாடுகளை கவனிக்கும் சுவாமிகள்.



திரு. எம்.ஜி.ஆர் அவர்கள். எம்.எல்.ஏ வாக இருந்தபோது இரத்தினகிரி கோயில் திருப்பணிக்கு நடத்தப்பட்ட நாடகத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகிறார். நாடகம் மூலம் சேர்ந்த பணம் சுவாமிகளிடம் திருப்பணிக்குத் தரப்பட்டது.





சுவாமி - சித்தா மருந்து வழங்கல் - சித்த மருத்துவம் - சித்தர் கைகளிலிருந்து.



பள்ளித்தலமனைத்தும் கோவில் செய்குவோம் எனப்
பாடிப் பரவசமானன் பாட்டுப்புலவன் பாரதி
இரத்தினகிரி கோவில் தலத்திலே ஒரு பள்ளி
அதில் ஏழைக் குழந்தைகளுக்கோ இலவசக்கல்வி
பாலமுருகனடிமையின் பகீரதமுயற்சி செயல்வடிவம் பூண்டது.



ஓட்டல் சரவணபவன் திரு. இராஜகோபால் அவர்களின்
துணைவியார் இரத்தினகிரி மருத்துவமனையில் கண்சிகிச்சை
பெற்றவருக்கு இலவசக் கண்ணாடி அணிவிக்கிறார்.



அன்னம் பிரம்மம் சோறே கடவுள் வேதம்
அந்தக் கடவுளுக்கு சுவாமிகளின் வழியாடு



சுவாமிகள் ஞானம் பெற்ற நாளில், ஆண்டு தோறும் அன்னதான விழா. உணவு பரிமாறுகிறார்கள். அன்னபூரணன், அன்னபூரணி. ஓட்டல் சரவணபவன் உரிமையாளர். திரு. இராஜகோபால் அவர்களும், அவரது துணைவியாரும். சுவாமிகள் பார்த்தபடி நிற்கிறார்.



சுவாமிகளுடன் முன்னாள் முதல்வர் திருமதி. வி.என். ஜானகி ராமச்சந்திரன் அவர்கள் இரத்தினகிரி மருத்துவமனையைப் பார்வையிட்டு, பார்வையாளர் குறிப்பேட்டில் தம் கருத்தை கூறி எழுதச் சொல்கிறார் அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் அமைச்சர் திரு. விஸ்வநாதன் அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் திரு. தமிழ்க் குடிமகன் அவர்கள்.



சுவாமிகளுடன் ஆற்காடு வீராசாமி அவர்கள்.

லட்சத்து எண்பதாயிரம் ரூபாய், இரத்தினகிரியின் ஆண்டு வருமானம் என்கிறார்கள். எண்ணிப்பாருங்கள். இவைகளை எல்லாம் இவர் செய்கிறார் என்கிறபோது.

இவர் யாருக்காகச் செய்தார்?

"இதை ஒருநாள் அவர் குடும்பத்திற்கு எழுதிவைத்துவிட்டுப் போயிருந்தால் ஒன்றுமே செய்வதற்கு முடியாது. பலர் அப்படி எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் எண்ணிப் பார்த்தால் நாற்பது லட்சத்தையும் அவர் அரசிடமே ஒப்படைத்திருக்கிறார் அப்படியே."

"நான் அவரைப் புகழ வேண்டும்: பாராட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இந்த உணர்வு இந்த நாட்டிலே வரவேண்டும் என்ப்தற்காகச் சொல்கிறேன்.

"மற்ற கோயில்களிலே திருப்பணிகள் நடைபெற வேண்டுமானால் குழுக்கள். அமைக்கப்படும். அது அரசாங்க நிர்வாகத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழே இயங்கும். ஆனால், இந்த முயற்சிகளுக்கு அப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இல்லை. சுவாமிகள் விரும்புகிற முறையிலே காரியங்கள் நடத்தலாம் என்று அரசு அதற்கு அனுமதியளித்திருக்கிறது" என்பதை நான் சட்ட மன்றத்திலே தெரிவித்தேன். அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

சத்தியம் வெல்லும் என்பது மெய்யாயிற்று. இரத்தினகிரி கோயில் திருப்பணிகள் புதிய வேகத்திலும் புதிய ஆழத்தோடும் சுழல ஆரம்பித்தன.

சுவாமிகள் மீது வீசப்பட்ட வெறும் பழிகள் காற்றில் பறந்தன.

24. கடிதங்கள்.

ஐந்து லட்சம் பக்தர்கள்.

சுவாமிகள் 1 கி.மீட்டர் சுற்றளவு கொண்ட எல்லைக்குள்ளேயே தன் நடமாட்டத்தைச் சுருக்கிக் கொண்டார். 35 வருடங்களாக அதுதான் அவருடைய உலகம்.

ஆனால் அவரைத் தெரிந்து வைத்துள்ள பக்தர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள்.

ஒரு நாள் பிற்பகல் மூன்றரை மணிக்குச் சுவாமிகளோடு அவர் அறையில் அமர்ந்திருந் தேன். சுவாமிகள் முகத்தில் சாந்தமும், நிம்மதி யும் ததும்பி இருந்தன என்றாலும் மிகவும் களைத்திருந்தார். வலது தோள் மீது கைகளை வைத்து லேசாக வருடியபடி இருந்தார்.

சாமி பொதுவாக அப்படி எப்போதும் இருந்ததில்லை.

"என்ன சாமி. ரொம்ப களைப்பா இருக்கறீங்க? என்றேன்.

"கடிதங்கள் எழுதிட்டு வர்றேன். இரு நூத்தம்பது கடிதங்களுக்கு மேல இருக்கும். இந்தக் கோயில் கட்ற வேலைங்கள்லே நாளைக்கு எழுதலாம். நாளைக்கு எழுதலாம்ன்னு வச்சிட் டேன். அது இவ்ளோ அளவுக்குச் சேர்ந்து போச்சி" கட்டாக இருந்த கடிதங்களைக் காட்டுகிறார்.

"இரண்டு நாளை முன்னே கடிதம் எழுதியவர்கள் சிலபேர் சாமி முன்னே நான் கடிதம் எழுதினேன் சேர்ந்துதான்னு கேட்டு மறுகடிதமே எழுத ஆரம்பிச்சிட்டாங்க. அதுதான் இன்னிக்கி ஒரேயடியா எல்லாத்துக்கும் எழுதி முடிச்சிட்டேன். தோள் எல்லாம் வலிக்குது" என்றார்.

"எதிரே அமர்ந்திருக்கும் சுவாமிகளிடம் கேட்கிறேன். ஏழு கோடித் தமிழர்களில் உங்கள் பக்தர்கள் - முருக பக்தர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்? ஒரு லட்சமா அல்லது ரெண்டு லட்சம் இருக்குமா?

சுவாமிகள் சிரித்தபடி "கணக்கு போட்டுக்கோ, தினமும் 40/50 லெட்டர் வருது. சில நாட்களில் அதவிட அதிகமாகவும் வருது. இதோ பார். ஒரு வாரமாக வந்த கடிதங்களை" ஒரு கட்டாகக் கட்டி வைத்துள்ள பெரிய கடிதக்கட்டை எடுத்துக்காட்டுகிறார்.

"ஒரு நாளைக்கு நாற்பது என்றே வைத்துக்கொண்டாலும் பத்து நாளைக்கு 400. அப்ப ஒரு மாசத்துக்கு 1200 கடிதங்கள். அப்படியே ஒருவருஷத்துக்கு 14400 கடிதங்கள். இப்ப முப்பது வருஷத்துக்கு மேலா நாலு லட்சத்துக்கு மேல வரும். $14400 \times 30 = 432000$

"ஆரம்ப காலத்தில் ரொம்ப கடிதங்கள் வரும். எல்லாத்துக்கும் நானே கைபடவே எழுதுவேன். இப்பவும் எழுதறேன். ரொம்ப அவசியமில்லாத கடிதத்திற்குக் கையெழுத்து இப்படி ஒரு கோடு மாதிரி போட்டு, பேப்பரில் போட்டுக் காட்டுகிறார். அதில் விபூதி வைத்து அனுப்பிவிடுவேன்."

"கல்யாணப் பத்திரிக்கை எவ்வளவு வருது தெரியுமா?

ஒரு வாரத்துக்கு 20 பத்திரிகையாவது வரும். எது வந்தாலும், யாரிடமிருந்து வந்தாலும், கையெழுத்து இப்படி இழுத்து எழுதி விபூதி வச்சி அனுப்பிடுவேன். தெரிஞ்சவங்களா இருந்தா மேலும் நாலு வரிகள். கோயில் திருப்பணிக்கு நிறையச் செய்யும், பக்தர்களா இருந்தா, அவங்களே நேரா வந்து பத்திரிக்கை வச்சிட்டுப் போனாங்கன்னா முருகன் பிரசாதம் குடுத்து இங்கிருந்து நேரா யாரையாவது கல்யாணத்துக்கு அனுப்புவேன்.

அந்தப் பத்திரிகைகளே என்ன ஆச்சி? மாதம் 80 பத்திரிகை. ஒரு வருஷத்துக்கு 12 × 80 ஒரு வருஷத்துக்கு தொள்ளாயிரத்து அறுபது பத்திரிகைங்க. இங்கே மலை மீது ஆபீசிலே இந்தக் கடிதங்களை அனுப்ப மாசத்துக்கு 5000 ரூபாய்க்கு மேல ஸ்டாம்ப் வாங்கறாங்க. இப்பத் தபால் விலை ஏறிடுச்சில்ல. அதிகமாகவே வாங்குவாங்க. கேட்டுப்பாரு. சொல்லிவிட்டு அமைதியாகச் சிரித்தார்.

சுவாமி நம்மிடம் கொடுத்திருந்த - தன்னுடைய மிகுந்த கஷ்டத்தை துக்கமாகச் சொல்லி, அதை நீக்கும்படி ஆசி கேட்டு எழுதியிருந்த கடிதத்தைச் சுவாமியிடம் கொடுத்து, 'இது என்ன ஆச்சி சாமி என்று கேட்டேன். அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்துப்பார்த்தார்.

"நான் இத எப்ப குடுத்தேன்."

"ரொம்ப நாளைக்கு முன்ன சாமி. நான் இங்க வந்தபோது குடுத்தீங்க! சுவாமி பிறகுநிதானமாகச் சொன்னார். மனிதர்களுக்குத்தான் எத்தனை கஷ்டங்கள்! முன்பு நிறைய கடிதங்கள் வரும். கோணி கோணியா வச்சிருந்தேன். சில கடிதங்களை அப்பவே கொளுத்திடுவேன். மத்த கடிதங்களைக் கோணியிலே சேத்துவச்சிப் பிறகு எல்லாத்தையும் ஒண்ணாக் கொளுத்திடுவேன்.

❖

எனக்குச் சிலை வையுங்கள்

சுவாமிகள் பல அன்பர்களுக்குக் கடிதம் எழுதி அனுப்பி இருக்கிறார்கள்.

சுவாமிகளின் கடிதம்:

அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில்
இரத்தினகிரி. கீழ்மின்னல் - 632 517
வ.ஆ.அ. மாவட்டம்., தமிழ்நாடு

11.10.2000

அன்புடையீர்

நால்வாழ்த்துக்கள்

இக்காலத் தலைமுறையினரின் எதிர் பார்ப்புக்குத் தக்கப்படி சிறந்த முறையில் உருவாகி வரும் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில் திருப்பணி நிறைவுறும் கட்டத்தினை நெருங்கிச் சிற்பச் சுதை வேலைப்பாடுகள் நடந்து வருகிறது.

வழக்கமாகத் திருமுருகன் திருக்கோவில்களில் கந்தபுராணக் காட்சிகள் வண்ண ஓவியமாக வரையப்பட்டும், சுதையில் சிற்பங்கள் உருவாக்கியும் அமைந்துள்ளனர். ஆனால் இந்திருக்கோவிலில் ஒரு புதுமையாக இருக்கும்படி "முருகனைப் பாடியும் வழிபட்டவர்களுமாகிய அடியார்களின்" திருவுருவங்கள் படிவங்களாகச் சுதைவேலையில் அமைக்க விரும்புகிறோம்.

கீழ்க்குறிப்பிட்டவர்களின் சிலைகள் அமைப்பதாக எண்ணம். மேலும் சேர்க்கவேண்டிய அடியார்களையும், அவர்கள் திருவுருவங்களை எப்படி அமைக்கலாம் எனவும், தங்கள் ஆலோசனைகளை அன்புகூர்ந்து தெரிவிக்கக் கோருகிறோம்.

சுவாமிகள் கையெழுத்து.

பெறுநர்:

திருமிகு.

திருஉருவங்கள் அமைக்க விரும்பியுள்ள முருகப் பெருமானின் பக்தர்கள்

(1) நக்கீரர் (2) ஔவையார் (3) கச்சியப்ப சிவாச்சாரியார் (4) குமரகுருபரர் (5) அருணகிரிநாதர் (6) நல்லந்துவனார் (7) குன்றம்பேதனார் (8) கடுவன் இளவெயினார் (9) தேவராயர் (10) வள்ளலார் (11) பாம்பன் சுவாமிகள் (12) கழுகுமலை அண்ணாமலைரெட்டியார் (13) வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (14) திருமூலர் (15) மெய்கண்டார் (16) மகாகவி காளிதாசர் (17) வாரியார் சுவாமிகள்.

❖

சுவாமிகளுக்கு வந்த பதில் கடிதங்கள்

சுவாமிகளின் இந்தக் கடிதத்திற்கு பதிலாக நிறைய கடிதங்கள் வந்திருந்தன. சுவாமிகளிடம் ஆழ்ந்த அன்பும் மதிப்பும்; சுவாமி அன்பர்களிடம் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பும் மதிப்பும் அவைகளில் எதிரொலித்தன.

அந்த எல்லாக் கடிதங்களையும் இங்கே தருவது மிகவும் செய்யத்தக்ககாரியம்; என்றாலும், ஏற்கனவே பெரிதாகிவிட்ட நூலை இவை மேலும் பெரிதாக்கிவிடும். எனவே சில கடிதங்கள் மட்டும் தரப்படுகின்றன. அதில் ஒரு கடிதம். அதைப் பார்த்ததும் எனக்கு வியப்பும், மகிழ்ச்சியும், சிரிப்பும் வந்தது. அதோடு அந்த அன்பர் சுவாமிகளோடும் கோயிலோடும் எந்த அளவு ஒன்றி உரிமைப்பட்டுப் போயிருக்கிறார் என்பதும் தெரிந்தது. அவர் பெயரை வெளியிடாமல் கடிதம் மட்டும் தரப்படுகிறது!

அந்தக் கடிதம்:

பெறுநர்.

தவத்திரு அருள்மிகு பாலமுருகனடிமை சுவாமிகள். இரத்தினகிரி.

கிரிராஜகுமாரி மகன் முருகப் பெருமானின், அருமைத் திருமகனும், அடியவரும், அடிமையுமாகிய சுவாமிகளின் திருவடிகளுக்கு வணக்கங்கள்!

தங்களின் அன்பான 'சிலை வைப்புக் கடிதம்! கிடைத்த சில நிமிடங்களிலேயே கீழ்க்காணும் கடிதத்தை எழுதிவிட்டேன்.

சுவாமிகள் கேட்டுள்ளபடி நான் சுட்டும் சிலைகளை அமைக்க வேண்டுமென்றால் சுவாமிகளுக்குத் தைரியம் வேண்டும். அது சுவாமிகளுக்கு நிறையவே இருப்பதாக நினைக்கிறேன். மூன்று சிலைகள் வைக்க வேண்டும்.

1. "திரு. கந்தசாமி முதலியார் அவர்கள் சிலை - சுவாமிகளின் தந்தையார். இன்றைய இரத்தினகிரி கோயில் நின்றிருப்பதற்கும்

நிலைத்திருப்பதற்கும் காரணமான ஆழமான, அடிப்படையான பக்தரும், கோயில் பாதுகாவலரும் அவர்தான்.

2. "தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளின் சிலை.

3. மற்றொன்று, கடிதம் எழுதும் அவரே தனக்கு சிலை வைக்கச் சொல்கிறார்.

"திரு. கந்தசாமி முதலியார் அவர்களின் சிலையைச் சுவாமிகள் வைக்கவில்லையென்றால், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் என்கிற பாலமுருகன் சுவாமி என்கிற ஒரு கடவுளும், அவர் அடிமையாகிய பாலமுருகனடிமை சுவாமிகளும் அந்த மலையில் இருப்பதில் அர்த்தமில்லை.

"தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளுக்குச் சிலை வைக்கவில்லை என்றால், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிகள் என்கிற பாலமுருகன் சுவாமி என்கிற ஒரு கடவுளும், ஆன்மீகம் என்பதும் இந்த பூமியில் இருப்பதற்கு யோக்யதை இல்லை.

"மூன்றாவது ஆளுக்கு நீங்கள் சிலை வைக்க வேண்டியதில்லை. அந்த ஆளுக்குச் சுவாமிகள் தன் நெஞ்சிலும், அதன் மூலம் முருகன் தன் நெஞ்சிலும் கொடுத்திருக்கும் அன்புத் துளிகள், ஆயிரமாயிரம் சிலைகளுக்கும் அதிகப்படியானவை.

"என்றும், என்றும், என்றென்றும் என்தலையும் நெஞ்சும் சுவாமிகளின் திருவடிகளிலும் முருகன் திருவடிகளிலும்."

❖

சுவாமிகளுக்கு வந்த நிறைய கடிதங்களில் ஒரு கடிதத்தைப் பார்த்ததும் எனக்கு வியப்பும் மகிழ்ச்சியும் வந்தது. அது ஆனந்தவிகடன் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களின் கடிதம்.

திரு. பாலசுப்பிரமணியன் அவர்களின் தந்தை திரு. வாசன் அவர்களிடம் எனக்கு மிக ஆழ்ந்த மரியாதையும், அவரின் செயல்

வழிகளை நான் பல நேரங்களில் பின்பற்றிச்செய்யும் நடை முறையும் உண்டு. அவர் மறைந்ததும் அவரைப் பற்றிய வரலாற்றுக்குறிப்பை ஆனந்தவிகடனில் வெளியிட்டார்கள். பிறகு அதைச் சட்டென்று நிறுத்திவிட்டார்கள். அதில் ஒரு செய்தி என் நினைவை விட்டு நீங்கவே இல்லை. என் நினைவு சரியாக இருக்குமானால் அந்தச் செய்தி இதுதான்.

அவர் அந்தக் காலத்தில் திருச்சியிலிருந்து சென்னைக்கு முதன்முதலில் இரயிலில் வர டிக்கட்டுக்குப் பணம் இல்லாமல், தன்னுடைய சைக்கிளிலேயே வந்தார் என்பது. இது மற்றவர்களுக்குச் சாதாரணமான நிகழ்ச்சியாக இருக்கலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழ் அரசியல் வரலாற்றிலும் மகத்தான வளர்ச்சியும், உன்னத வாழ்க்கைப் பண்பாட்டு உயர்வும் அந்தப் பயணம் - அந்த உன்னதமான மனிதர் சென்னை வந்த பயணத்தில் அவருடனே வந்தது என்பதை மிகச்சிலர் மட்டுமே அறியக்கூடும்.

அவருடைய சென்னை வருகை மூலம் ஆனந்தவிகடன்! ஆனந்தவிகடன் மூலம் தமிழ் படிக்கும் மக்களின்தொகை இலட்சம் இலட்சமாய்ப் பெருக்கம்! அதில் தொடராக வந்த கதைகள்; உ.வே. சாமிநாத அய்யரின் உன்னதமான 'வாழ்க்கை வரலாறு; கிருஷ்ணமூர்த்தி என்பவரை 'கல்கி'யாக உருவாக்கிய உன்னதம்; கல்கியால் கல்கி இதழ்; ராஜாஜி, டி.கே.சி என்னும் டி.கே சிதம்பரநாதர், கல்கி முப்பெரும் வீரர்களின் தமிழ் இலக்கியமும், தமிழ் நாட்டு அரசியல் வளர்ச்சியும்; கல்கியின் 'சிவகாமியின் சபத'மும், 'பொன்னியின் செல்வ'னும்,

தமிழ்த் திரைப்படத் துறையில் திரு. வாசன் அவர்களால் ஏற்பட்ட உன்னதமான வளர்ச்சி. அவற்றில் 'அபூர்வ சகோதரர்கள்' என்ன! 'சந்திரலேகா' என்ன!

தமிழ்நாட்டின் சரித்திரம், ஒரு வகையில் இந்தச் 'சைக்கிள் பயணத்தையும், அதில் பயணம் செய்த அந்த மகா இளைஞரையும் சுற்றி அமைந்திருக்கிறது.

திரைத்துறை இல்லை என்றாலும், தமிழ் இதழ்த் துறையில் அன்று திரு. வாசன் அவர்கள் ஏற்றி வைத்த கொடி, காலத்திற்குக் காலம் உயர உயரப் பண்புப் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது.

பாரதி பாடிய, "கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கள் காணரும் வீரர் பெருந்திருக்கூட்டம்" என்பது போல் திரு. வாசன் அவர்களோடு இப்போது இரண்டாம், மூன்றாம் தலைமுறை அதை அழகாகக் காத்து நிற்கிறது.

நான் கல்கியின் 'பொன்னியின் செல்வன்', 'சிவகாமியின் சபத"த்தின் எழுத்து பிரம்மாண்டத்தை எப்போதும் நினைத்து மிகுந்த மனநெகிழ்ச்சியும், திரும்பத் திரும்ப அதன் ஆற்றொழுக்கிற்கும் அப்பட்டமான அதன் தூய்மைக்கும் வியப்பதுபோல்,

திரு. வாசன் அவர்களின் செயல்திறனை நான் என் மனத்தில் தொகுத்து வைத்திருக்கிறேன். அது ஆனந்தவிகடனைப் பார்க்கும்போதும், அவருடைய திரைப்படங்களையும், அவரது படம் மற்றும் அவர் பற்றிய செய்திகளை நூல்வழி, இதழ்வழி காணும்போதும், சென்னையில் அவருடைய ஜெமினி ஸ்டூடியோவைக் கடந்துபோகும்போதும் அந்த 'ரெட்டைக்குழல் வால்'களைப் பார்க்கும்போதும் தோன்றும்.

அவர் புகைப்படங்கள், செய்திகள் எனக்குக் கிடைத்த மட்டில் சேர்த்து வைத்திருக்கிறேன். இன்னும் அவர் மீது கொண்ட தாகம் சிறிதும் தணியவே இல்லை.

பிற்காலத்தில் ஜெமினி ஸ்டூடியோ குடியிருப்பாக மாற்றப்பட்டபோது என் மனம் மிகவும் வருந்தியது.

மக்கள் திலகமாக விளங்கி மக்கள் படையும், திறனும் கொண்ட திரு. எம்.ஜி.ஆர் அவர்களின் அமைச்சரவை எம்.எல்.ஏக்களைப் பற்றி ஆனந்தவிகடனில் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டதற்காக அவரைச் சிறையில் அடைத்ததற்காக அவருக்கு

ஆதரவாகவும் ஆட்சிக்கு எதிராகவும் எழுந்த மக்கள் எழுச்சியின் பரிமாணத்தைக் கண்டு, மக்கள் நாயகர் திரு. எம்.ஜி.ஆர் அவர்களே அவரை விடுதலை செய்ய வேண்டிய நிலைமை தோன்றியது!

எவ்வளவு ஆச்சரியமான, ஆனந்தமான அனுபவம்!

அந்த நிகழ்ச்சியின்போது பலம் வாய்ந்த பலர் அவரைத் திரு. எம்.ஜி.ஆர் அவர்களின் அரசுக்கு எதிராகத் தூண்டுவதற்கு முயன்றார்கள். அதற்கு அவர் 'என் தந்தை பேனாவை எடு. எந்தக் காலத்திலும் மைக்கைப் பிடிக்காதே" என்று சொன்னார். அதுதான் என் நடைமுறை. ஆதரவு தந்தவர்களுக்கு நன்றி என்று, ஆனந்தவிகடன் கூறி 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற விகடன் வழியையே தன் வழியாக மேற்கொண்டார்.

1980ல் நாங்கள் அப்போது இராமகிருஷ்ண மடம், மிஷன் இவைகளோடு சேர்ந்து அதன் கொள்கைகளை, நற்செயல்களை நாட்டில் பரப்பும் வகையில் முதல்மாநாடு சென்னையில் சிறப்பாக நடத்தினோம், மாநாட்டின் முன்நாள் இரவு சென்னை இராமகிருஷ்ண மடத்தின் மேலாளர் சுவாமிகள் மூலம் மாநாட்டுச் செய்திகளை ஆனந்தவிடனில் எழுத அவரிடம் கேட்டுக்கொள்ளும்படிக் கூறினேன். அவர் தொலைபேசி மூலம் கேட்டார். திரு. பால சுப்பிரமணியன் அவர்கள்தான் பேசினார். 'செய்யலாம், பார்ப்போம்' என்று சொல்கிறார்.


"பெரும்பாலும் போடமாட்டார்கள். திரு. பால சுப்பிரமணியன் அவர்களுக்கு நம்மிடம் ஏதோ ஆழ்ந்த மனக்குறை இருக்கிறது என்று அவரோடு போனில் பேசிய சுவாமி சொன்னார்

என்றாலும் இரத்தினகிரி மற்றும் இரத்தினகிரி சுவாமிகளின் உண்மைத்தொண்டும், திருப்பணிகளும் தமிழ்நாடு முழுதும் மிகவும் உயர்ந்த கவுரவமான முறையில் விரைந்து பரவியதற்கு ஆனந்த விகடன் பெரிய காரணம். ஆனந்தவிகடன் மதிப்பிற்குரிய என்றால் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும், திரு. பரணீதரன் அவர்களும் பெரும் காரணம்.

சுவாமிகள் அதை அடிக்கடி நினைவு கூர்வார். திரு. பரணீதரன் அருணாசல மகிமை என்ற அழகான ஆன்மிகக் கட்டுரையால் மிக மேன்மையாகச் சுவாமிகளின் திருத்தொண்டினை எழுதியுள்ளார். இதனால் விகடனிடம் சுவாமிகளுக்கு எப்போதும் கனிவும் அன்பும் உண்டு. ஆசிகளும் நன்றியும் உண்டு. 30 ஆண்டுக்களாக அடிக்கடி நினைவு கூர்வார்.

அவருக்கு திரு. பரணீதரன் அவர்களோடு இருக்கும் நெஞ்சார்ந்த அன்புப் பெருக்கும், அருளும், திரு. பரணீதரன் அவர்களுக்கும் சுவாமிகளிடம் இருக்கும் பக்தியும் இலக்கியத்தில் எழுதி வணங்கத்தக்கவை.

சுவாமி, மலைக்கு அவருடைய அந்த ஆரம்பக்கால பரணீதரன் போன்ற பக்தர்கள் இப்போது வயதாகி மலைக்கு வர இயலாத நிலையை நினைத்து வருந்தினார். அவர்களிடம் உள்ள ஆழ்ந்த அன்பின் காரணமாக, அவர்கள் மலைக்கு இப்போது வந்து தான் கட்டியுள்ள கோயிலைப் பார்த்தும் பரவசப்படவும் வேண்டும் என்பதற்காக, அரசு அறிவித்த ஒரு நல்ல திட்டத்தினை உடனே பயன் படுத்திக்கொண்டு, ஒரு நல்ல மலைபாதையை, மலையின் அடிவாரத்திலிருந்து மலை உச்சிக்குக் முருகன் அருகிலேயே வருவதற்கு அமைத்து விட்டார்.



அமைத்ததும் செய்தியை பரணீதரன் அவர்களுக்கு எழுதிக் கோயிலை வந்து காணும்படி சுவாமி கடிதம் எழுதினார்.

அவரும் ஒரு நாள் பகலில் வந்து சுவாமிகள் இன்று கட்டியுள்ள கோயிலைக் கண்டு ஆனந்தத்தில் தன்னையே மறந்தார். சுவாமிகளுக்கு, பரணீதரன் வந்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி அளவற்றதாகும்.

இப்போது கோயிலில் இந்தச் சிலை வைக்கும் கடிதங்களைப் பார்த்துக்கொண்டே வந்தபோது திரு. பாலசுப்பிரமணியன் அவர்களின் கடிதம் இருந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

ஏனென்றால் அவர் இது போன்ற கடிதங்களை மிகமிக அரிதாக எழுதுவார் என்று கேள்விப்பட்டிருந்தேன். அந்தக் கடிதம் எழுதியுள்ள முறையும் என் மனத்தை, அவரின் அறிவு, செயல் பாட்டை வெளிப் படுத்தியது. ஆனந்தவிகடன் அன்று முதல் இன்றுவரை சீரான சிறப்போடு - கதிரவனின் ஒளிப்பாடு போன்று, காலந்தோறும், காலத்திற்கு ஏற்பப்புதுமையும் இளமையும் பெற்று மக்கள் மனத்தில் பச்சைப்பசுமை கொண்டுள்ளதன் காரணமும் தெரிந்தது. எவ்வளவு அழகாக, அருமையாக எல்லைகளோடு, எத்துணை கண்ணியத்தோடும், அன்போடும் எழுதப்பட்ட கடிதம்! அது

❖

அன்புடையர்,

வணக்கம்.

11.10.2000 தேதியிட்ட தங்கள் கடிதமும் அருட்பிரசாதமும் கிடைக்கப்பெற்றேன்.

இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில் திருப்பணி நிறைவுறும் கட்டத்தினை நெருங்கி வரும் தகவல் அறிந்து மகிழ்ந்தேன்.

படிவங்களாக சுதை வேலையில் அமைக்க, முருகனைப் பாடியும்

வழிபட்ட அடியார்களின் வரிசையில் தாங்கள் கொடுத்திருக்கும் பட்டியலே போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். மற்றபடி திருவுருவங்களை எப்படி அமைக்கவேண்டும் என்பதற்கு எங்களை விட ஸ்தபதிகளே சிறப்பான ஆலோசனைகள் வழங்க முடியும் என்று நம்புகிறேன்.

அன்புடன் கடிதம் எழுதியதற்கு மிக்க நன்றி.

தங்கள்,

எஸ். பாலசுப்பிரமணியன்
ஆசிரியர் ஆனந்தவிகடன்
757, அண்ணாசாலை, சென்னை 600 002.

சுவாமிகளுக்குக் கடிதங்கள். மற்றொரு பார்வையிலிருந்து

இரண்டு தாய்மார்களின் கடிதம்.
"என் கணவரை என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படிக் கூறுனார்."

சுமார் இருபத்தைந்து வருஷங்களாக நான் இரத்தினகிரி கோயிலுக்கு வருகிறேன். அப்போது இரத்தினகிரி சிறிய குன்று; சிறிய கோபுரத்துடன் இருக்கும். பாதை கூடச் சரியாக இருக்காது. என் கணவருக்கு முருகனிடம் ஈடுபாடு அதிகம். அவர் கிருத்திகை தோறும் விரதம் இருப்பது வழக்கம். அதனால்தானோ என்னவோ முருகன் கோயிலுக்குப் போகும் பழக்கம் வைத்திருந்தார். அப்படி இரத்தினகிரி கோயிலுக்கு வரும்பொழுது சாமிகளிடம் அறிமுகம் ஆனது.

தெய்வங்களிடம் அதிக ஈடுபாடு இருக்கும் பொழுது நாம் தெய்வத்திடம் நம் குறைகளைக் கூறுவோம். நம் வேதனைகளைத் தீர்க்க தெய்வம் நேரில் வர இயலாது. அதற்காக தெய்வம் சில மனிதப்பிறவி எடுத்து நம் வேதனைகளைத் தீர்க்கும்.

அதுபோல் நம் குறைகளையும், வேதனைகளையும் தீர்க்க முருகன் சுவாமிகளைத் தேர்ந்து எடுத்துச் சந்நிதானத்தில் நிறுத்தி. நம் குறைகளைத் தீர்த்து வருகிறார் என்பது என் கருத்து.

என் கணவர் என்னைத் திருமணம் செய்ய நினைத்தபோது எல்லாரிடமும் எதிர்ப்புகள் இருந்தன. ஆனால் என் கணவர் என் ஜாதகத்தைச் சுவாமிகளிடம் காட்டிக் கேட்ட பொழுது, சுவாமிகள் என் கணவரை என்னைத் திருமணம் செய்துகொள்ளும்படிக் கூறியுள்ளார். எனக்கும் என் கணவருக்கும் முருகனிடம் ஈடுபாடு உள்ளது. முருகனின் ஆசிர்வாதமும், சுவாமிகளின் ஆசிர்வாதமும் கிடைத்தது.

அன்று முதல் இன்று வரை இருபத்தைந்து வருடம் நான் கோயிலுக்கு வருகின்றேன். சுவாமிகள் பால்குடம், அபிஷேகம், அன்னதானம், ஆடிக்கிருத்திகை, நவராத்திரி விழா, பௌர்ணமிபூஜை என்று நிறைய பூஜைகள் சிறிய அளவில் ஆரம்பித்தது, இன்று மிகப் பெரிய அளவில் நடக்கும் அளவிற்கு வந்துள்ளது.

அதற்குக் காரணம் சுவாமிகள் இறைவனிடம் கொண்டுள்ள முழுமையான தெய்வ ஈடுபாடுதான். சுவாமிகள் சிறிய கோயிலாகக் கட்ட நினைத்து இன்று மிகப் பிரம்மண்டமாக முருகன் சந்நதி அமைவதற்கு அவர்தான் காரணம்.

அதுமட்டுமல்லாமல் கோயிலைச் சுற்றிப் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, திருமண மண்டபம் ஆகியவைகளை அமைத்துள்ளார். எனக்கு எப்பொழுதெல்லாம் வேதனைகளும், பிரச்சனைகளும் எற்படுகிறதோ அப்போதெல்லாம் முருகனையும், சுவாமிகளையும்தான் நினைத்துக்கொள்வேன். இருள் நீங்கி வெளிச்சம் வந்ததுபோல் என் மனது தெளிவாகிவிடும்.

எனது மாமனார், மாமியார், எனது மகள் சிறிய குழந்தையாக இருந்தபொழுது சுவாமிகளிடம் அழைத்து வருவார்கள். அன்றைய தினத்திலிருந்து இன்றுவரை சுவாமிகளிடம் மிகுந்தமரியாதை. என்

மாமியாரும் சிறிய விஷயமாக இருந்தாலும் சுவாமிகளைக் கேட்டுத்தான் செய்வார். சுவாமிகளின் உத்தரவு கிடைத்தவுடன் அந்த வேலையைச் செய்து நல்ல முறையில் முடிப்போம். சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் சுவாமிகளிடம் மிகுந்த அன்பு உண்டு. எங்கள் குடும்பத்தில் முருகக் கடவுளாகத்தான் சுவாமிகளைப் பார்க்கிறோம்.

எங்கள் குடும்பத்தில் உள்ள பிரச்சனைகளையும், வேதனைகளையும் தீர்க்கும் தெய்வப்பிறவியாக அவரை நாங்கள் நினைக்கிறோம்.

❖

ஆட்சியாளரிடமிருந்து. துணைத் தலைவராக இருங்கள்

கடிதம்:

கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், சென்னை - 600 034
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை.

நே.மு.க.எண். 87248/84 ஒய் நாள் 16.10.84

வணக்கத்திற்குரிய சுவாமிகள் அவர்களுக்கு,

வணக்கம்.

அண்மையில் திருமுறை கண்ட சோழமன்னன் இராசராசனின் ஆயிரமாவது முடிசூட்டு விழா தஞ்சையில் சீரும் சிறப்புமாக நடந்தது தாங்கள் அறிந்த செய்தியே. திருமுறை கண்ட இந்த மாமன்னனின் நினைவைப் போற்றும் வகையில் தமிழகத்தில் உள்ள பழமையான சிறப்புவாய்ந்த 60 திருக்கோயில்களில் அடுத்த ஒராண்டு காலத்தில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று. எண்ணுகிறேன். இந்த உயர்ந்த அறப்பணியைப் புரவலர்கள் மற்றும்

உபயதார்கள் உதவிகொண்டே செய்து முடிக்கலாம் என்று கருதுகிறேன். இப்பணியில் தக்க ஆலோசனைகள் வழங்கவும் மற்றும் இயன்ற வகையிலே உதவிகளைச் செய்யவும், ஒரு குழு அமைக்கப்பெற உள்ளது. இக்குழுவில் தாங்கள் அருள்கூர்ந்து பங்கேற்றுத் தங்களின் ஆலோசனைகளை வழங்குமாறும் அன்புடன் வேண்டுகிறேன். இத்திருப்பணி உடனடியாக மேற்கொள்ளப்பட்டு 1985 செப்டம்பருக்குள் முடிக்கப் படுவது நன்று. இக்குழுவில் தாங்கள் துணைத்தலைவராக இருந்து அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் அளிக்கத் தங்களின் மேலான இசைவினைத் தெரிவிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

ஒ - ம் (கு. ஆளுடையபிள்ளை)

பெறுபவர்

ஸ்ரீ பாலமுருகனடிமை சுவாமிகள், அருள்மிகு பாலமுருகன் என்கிற சுப்பிரமணியசுவாமி கோயில்,

சுவாமிகளின் பதில்: நேமு.க. திருப்பணி / 84

அன்பார்ந்த திரு. ஆளுடையபிள்ளை அவர்கட்கு, என் நல்வாழ்த்துக்கள்.

தங்கள் நேர்முகக் கடித எண் 87248 / 84 ஒய் 16.10.84 தேதிய கடிதம் பெற்று மகிழ்வுற்றேன். தங்கள் கருத்தினை மனதார வரவேற்கிறேன். பழமையான சிறப்பு வாய்ந்து 60 திருக்கோயில்களில் இரத்தினகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலினையும் ஒன்றாக ஏற்று, இதன் திருப்பணியினை செப்டம்பர் 85க்குள் நிறைவுற செய்து திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடத்திட அனைத்து நடவடிக்கைகளும் விரைவாக மேற் கொள்கிறேன்.

குழுவில் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுத்தான் கடமையாற்றிட வேண்டுமென்ற நிலையில்லை. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற

அப்பர் பெருமானின் அருள் மொழிக்கேற்பத் தாங்கள் அமைத்திடும் குழுவின் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் செயல்படுத்திட எம்மாலான அனைத்து முயற்சிகளும் இக்குன்றுறைக் குமரனின் திருவருள் துணைகொண்டு வெற்றிகரமாக முடித்திடத் தங்களுக்கு முழு ஒத்துழைப்பும் உதவிடுவேன். தாங்கள் விரும்புகிறபடி பொறுப்பு ஏற்பதில் எமக்குத் தயக்கமில்லை. இறைநலம் நிரம்பிடுக.

பாலமுருகனடிமை.

❖

பெறுநர்.

திரு. கு. ஆளுடையபிள்ளை. ஐ.ஏ எஸ்
ஆணையர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை - 34.

குறிப்பு : சோழர் காலத்துப் பரம்பரையில் கட்டப்பட்டுள்ள எங்கள் ஊர் (கிராமத்தில்) பெருமாள்கோயில் திருப்பணி மேற்கொண்டு முடிவுற்ற நிலை. வர்ணபூச்சு பூசி, குடமுழுக்கு நடத்திட ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளேன்.

2. அடுத்து பழமையான சீரழிந்துள்ள சிவாலயமும் கிராமத்தில் புனருத்தாரணம் மேற்கொள்ளவிருக்கிறேன். அம்மன்கோயில் முழுமையாக பாழடைந்துள்ளது. ஆனால் தினபூசை தடையின்றி 14 வருடமாக நடத்தி வருகிறேன். தங்களது கவனத்திற்காக, குறிப்பாக இதனைத் தெரிவிக்கிறேன்.

❖

இன்னொரு கடிதம் 12.3.97

சென்னை

தவத்திரு பாலமுருகனடிமை சுவாமி அவர்களுக்கு மனமார்ந்த வணக்கங்கள்.

அடியேனுடைய வாழ்க்கையில் மனைவியைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, 25.2.97 செவ்வாய்கிழமை சாயந்திரம் தங்களை நேரில் சந்தித்து தங்கள் கையால் விபூதி பிரசாதம் பெறும் பாக்கியம் வரை, பாக்கியம் பெற்றுள்ளேன்.

அன்று அலுவலகத்திலிருந்து விலகி விடுவது என்ற முடிவில் பாலமுருகனிடமும் வள்ளி தெய்வயானையிடமும் ஆசி வேண்டியபோது, தாங்கள் பிரத்தியட்சமாகி விபூதி பிரசாதம் வழங்கியது மனதிற்கு ஆறுதலாக இருந்தது.

இந்நாட்டுக்குக் கழிவுநீரிலிருந்து குடிநீரை சுத்திகரித்துக் காண்பித்தும் அதை நானே குடித்துக் காண்பித்தும், ஜப்பான் நாட்டிலிருந்து ரூபாய் ஐநூறுகோடிக்கு இத்திட்டத்தினை பெரிய அளவில் செயல்படுத்தச் சென்றும், அங்கு பூகம்பம் நடந்தபோது என் தாய்க்கு ஒரே குழந்தையான நான் அங்கு தங்கி அந்தக் கடனைப் பெற்றுக்கொண்டு வந்தும், எனக்கு மதிப்பே இல்லாமல் கீழ்த்தரமாக நடத்தியதால் மனமுடைந்து விலகுகிறேன்.



25.2.97 அன்று தங்களைச் சந்தித்துவிட்டு வரும்போது கோயிலின் மேல்படியிலிருந்து ஏறத்தாழ 20 - 25 படிகள் இறங்கியவுடன் வலது கை புறம் ஒரு இரண்டு ஆள் உயரம் உடைய பாறை உருண்டை தனியாக நிற்பதைக் கண்டேன்.

இப்பாறை வெகு காலமாக இவ்வாறே இருந்திருக்கிறது. ஆயினும் பின்னொரு காலத்தில் இது உருண்டு கீழ்நோக்கி ஓடிடுமோ என்று தோன்றுகிறது.

இப்பாறையைத் தாங்களும் கவனித்திருப்பீர்கள். தற்போது மலை மேல் கான்கிரீட் வேலைகள் நடப்பதால், தற்போது இதற்கு ஒரு முட்டுச்சுவர் கொடுப்பதோ அல்லது வேறு எவ்வாறு செய்ய வேண்டும் என்று தாங்கள் நினைக்கிறீர்களோ அதற்காகும் செலவை நான் ஏற்றுக்கொண்டு கட்டணத்தை செலுத்த விழைகிறேன்.

இது குறித்துத் தங்கள் கடிதத்தினை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

20.3.97 அன்று நடக்கும் அன்னதானத்திற்காக இத்துடன் ஒரு சிறு காணிக்கையாக ரூ. 500/= ஐநூறுக்கான காசோலையை சமர்ப்பிக்கிறேன்.

❖

இந்தக் கடிதத்திற்கு சுவாமிகளின் பதில்

அன்பரீர்

அருளாசி!

தங்கள் கடிதம் பெற்று மகிழ்ந்தேன். உங்கள் உணர்வுகளை உணர்கிறேன். அதற்கு முன்பே இரு பாறை குண்டுகளுக்கடியில் ஆர். சி. சி கான்கிரீட் போட்டு, கட்ட திட்டமிட்டு டிரில் பண்ணி உள்ளேன். ஒவ்வொரு பள்ளமும் 18" ஆழம் விரையில் அதனைக் கட்டிவிடுவேன். பிற வேலைகள் நடப்பதால் தொய்வு. தங்களின் உள்ளபூர்வமான ஆழ் உணர்வில் ஏற்பட்ட இந்த உணர்வைப் பகிர்ந்து கொண்டதில் மனநிறைவு.

பொதுவாகக் கோயிலுக்குப் பொதுமக்கள், பக்தர்கள் பலதரப்பட்ட அன்பர்கள் வருகிறார்கள். அன்றாடம் அவரவர் சொந்த விருப்பு வெறுப்புகளைப் பகர்ந்து ஆலோசனை பெற்றுச் செல்கிறார்களே ஒழிய,

பொதுவாக கோயில் வளர்ச்சிக்குப் பொருளுதவி அளித்துச் செல்வர். ஒருசிலரே தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வர். அல்லது நானாக அவர்கள் துறை, கல்வி அம்சம், தகுதியறிவு கண்டு சில கருத்துகளைக் கட்டிடம், பிற பணிகளுக்கு ஆலோசனை கேட்பேன். சிலர் முன்வந்து கூறுவர்.

இப்பாறைகளைப் பற்றிய தங்கள் கருத்து நீண்ட நாட்களாக எமது உள்ளத்தில் உண்டு. ஆனால் ஏனோ அதனைச் செயல்படுத்துவதில் தாமதம். இன்று அதற்குத் தாங்கள் தூண்டுகோலாக மனம் திறந்து பகிர்ந்து கொண்டது மகிழ்வு.

இறைநலம் நிரம்பி இன்ப அன்பு பெருகிட வாழ்த்தும்

சுவாமிகள் கையெழுத்து.

❖

ஓரிரு மாதத்தில் முடித்துவிடுவேன் இப்பணியை.

அதன் பிறகு சுவாமிகள் அந்தப் பாறைகளில் ஒன்றை - சிறியதை உடைத்து எடுத்துவிட்டுப் பெரியதைக் கான்கிரீட் மூலம் உறுதிபடுத்தினார்.

அதன் பிறகு சிலநாட்கள் கழித்து. நான் சுவாமிகளிடம் சென்றிருந்தபோது பெரிய பாறைக்குக் கான்கிரீட் போட்டிருப்பதைக் காட்டினார். சாமி சொல்கிறார்.



"முன்ன பூகம்பம் வந்ததில்ல. அப்போ இந்தப் பாறையை நெனச்சி. ரொம்ப

பயந்துட்டேன். மறுபடியும் பெரிய பூகம்பமா வந்தா இது உருண்டுபோய் கீழ யார் மேலயாவது விழுந்திடுமோன்னு பயம் வந்திடுச்சி. உடனே பெரிய பாறைக்கு ஆழமா துளை போட்டு கம்பி கான்கிரீட் போட்டு உயரமா கெட்டிபடுத்திவிட்டேன். அப்போ மேல சொன்ன இந்த அன்பரின் ஞாபகம் வந்தது. அவருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். சுவாமி அந்தக் கடிதத்தின் கார்பன் காப்பி நகலைக் காட்டுகிறார். அதன் ஓரத்தில் பிங்க் கலர் மையினால் எழுதியுள்ளதைக் காட்டினார். அது ஆங்கிலத்தில் இருக்கிறது. அது முன்பு பாறையை ஏதாவது செய்யுங்கள். அதற்குரிய செலவை தந்துவிடுகிறேன் என்று எழுதிய அன்பருக்கு எழுதியதின் சுருக்கம்.

"தாங்கள் குறிப்பிட்டபடி அந்தப் பாறைகள் கீழே விழாமல் உறுதியாக இருக்கும் வேலை முடிக்கப்பட்டுவிட்டது. பெரிய பாறை, சிறிய பாறை முழுதும் கட்டிடம் பகுதியில் மூடப்பட்டுவிட்டது "என்று 12.12.2001ல் கடிதம் எழுதி இருக்கிறார்.

அந்த அன்பரின் கடிதம் கிடைத்த நாள் 12.3.97. சுவாமிகள் அந்தப்பணியை முடித்து விட்டு அந்த அன்பருக்கும் அதைத் தெரிவித்து இருக்கிறார்.

❖

நோய் துயரம்

இன்னொன்று:

21.7.2000

அருள்மிகு பாலமுருகா தங்கள் தரிசனம் கண்டேன் - ஆடிக்கிருத்திகை அழைப்பிதழ் வாயிலாக.

உலகைக்காக்கும் உத்தம தெய்வத்திருவே. அடியேனின் வேண்டுகோள் ஒன்று: - தமிழகத்தில் வறட்சி. பார்த்த பக்கமெல்லாம் மழையில்லை.

நீரில்லை! தண்ணீருக்காக ஏழை மக்கள் கண்ணீர் விடுகின்றனர்! பாலமுருகனிடம் - சுப்பிரமணிய சுவாமியிடம் எடுத்துக் கூறுங்கள்! ஈவு இரக்கம் காட்டட்டும்! மழை பொழிந்து வையகம் செழிக்கட்டும்... மக்கள் முகத்தில் சிரிப்பலை பொங்கட்டும்!

குறிப்பு: -

என் இல்லத்தரசிக்குச் சர்க்கரை ரொம்பவும் பாதித்துக் கோவை அரவிந்த் கண் முருத்துவமனையில் கண் சிகிச்சை பெற்று வந்தும் பயனில்லை.

21ஆண்டுகளாகச் சர்க்கரை நோயால் சிரமப்படுகிறாள். தினசரி காலை 8 மணிக்குள் ஊசிமருந்து. இரண்டையும் டாக்டர்கள் குறிப்பிட்டபடி போட்டுக்கொள்கிறாள். இத்துடன் மாத்திரை காலை - மாலை 2 மட்டும்.

இயற்கை வைத்தியம் - வில்வத்தழை. மாத்திரை 2

உணவு:

காலை கம்பு கூஞ்சி, ராகி கூழ், கோதுமை கூஞ்சி அல்லது உப்புமா. பாகற்காய், தினசரி பருப்பு சாதத்துடன் முருங்கைக்கீரை. மாலையில் அரை மணிநேரம் வாக்கிங். (வீட்டு வாசலில்) கண் பார்வை மிகவும் குறைந்துவிட்டது. என்னை உயிருக்குயிராக நேசிப்பவள்.

நான் வெளியூர் சென்று தங்குவதாக இருந்தால் அவள் துடிதுடித்துப் போய்விடுகிறாள். காரணம்... அடிக்கடி மதியம் 11 மணிக்கு லேசான மயக்கம். "பிளட் சுகர்" குறைவது. திடீரென்று நார்மலுக்குக் கீழே போய்விடுகிறது. அதனால் பயம்.

எப்படியோ இவ்வுலகில் உங்கள் நினைவு மறவாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னைப் பார்த்தவுடன் பக்கத்தில் கூப்பிட்டு உபசரித்து டிபன் கொடுத்து - இதயத்தைக் கொள்ளை கொண்ட தெய்வம் நீங்கள். (எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால்)

சினிமாக்காரர்களின் தொடர்பை விட்டுவிட்டேன். இப்போதும் ஒரு

சில கலைஏடுகளில் ஒரு தினசரி இதழில் (அவ்வப்போது எழுதி வருகிறேன்.)

இவ்வுலகில் தனியொரு மனிதனால் இவ்வளவு "தெய்வத்திருப்பணி" செய்தது யாரும் கிடையாது - உங்களைத் தவிர!

பழனி - திருச்செந்தூர் கோயிலைப்போல் மக்கள் - (தெய்வபக்தர்கள்) படைதிரண்டு போவது போல் நம் கீழ்மின்னல் ரத்தினகிரி பாலமுருகனை தரிசிக்கவும் திரள் திரளாக வருகின்ற செய்தியைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தேன்.

பல புகைப்பட ஆல்பங்களையும் பார்த்து மெய்மறந்து போய்விட்டேன். எப்படியோ உங்களை விரைவில் வந்து தரிசிப்பேன்.

❖

சங்கு ஹாஜி கே.எம். செய்துஅப்துல்காதர் அவர்கள்

குரானில் இறைவன் சிலரைத் தன் முஃமின் - நல்லடியார் என்று குறிப்பிடுகிறான். உலகக் குரான் பல்கலைக் கழகததின் சார்பாகக் குரான் வகுப்புகள் வாரம் தோறும் சென்னையில் பல மாதங்கள் சனிக்கிழமையிலும், பிறகு ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடந்து, வருகிறது.

இதில் நான் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் குரானைப் பாடம் கேட்டிருக்கிறேன். ஓதி இருக்கிறேன். குரா.னை ஓதுவது என்றாலே அதனுடைய சரியான அர்த்தத்தை இறைவனைத் தொழுது அருளும்படி வேண்டுவதும், சிந்திப்பதும், அதன்படி நடப்பதும் என்று ஒவ்வொரு வகுப்பிலும் திரும்பத் திரும்பப் பலமுறை சொல்லப்பட்டது.

என்னுடைய 45 வருட ஆத்மாவைத் தேடுவதில் இந்த வகுப்புகள் மூலம் இறைவனைத் தேடுவதில்; இறைவனைச் சிர வணக்கம் செய்வதில்

இறைவனுக்கு எந்த நேரமும் நன்றி செலுத்துவது; இறைவனிடம் மன்னிப்பு கேட்டபடியே இருப்பது; "இறைவனிடம் எனக்கு வேண்டுவதைத் துல்லியமாகக் கொடு" என்று சொல்லிக் கேட்பது. தியானம் செய்வது ஆகிய அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்வது, எப்போதும் இறைவனைப் பற்றிநிற்பது ஆகியவைகளை எல்லாம் நான் புரிந்து கொள்ளவும், பின்பற்றவும் அதில் நிலைக்கவும் இறைவன் தன் அளவற்ற கருணையால் அருள் செய்தான்.

குரானை எங்களுக்கு விரிவாக்கம் செய்தவர் எப்போதும். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து குரானை இங்கு சிந்திக்கிறோம். பலருடைய சிந்தனை ஒன்று திரளுகிறது. பொருந்தியதை ஏற்போம்" என்பார்.

டாக்டர் சகோதரர்கள் என்று அவர்கள் அழைக்கப்பட்டார்கள்; அழைக்கப்படுகிறார்கள். ஒருவரிடம் குரான் வசனங்களைக் கொண்டு நோய் தீர்க்கும் மருத்துவத்தையும், அவரிடமும் குரானையும்; மற்றொரு டாக்டரிடம் குரானின் விரிவுரையும் நான் கற்றேன்.

ஆங்கிலத்தில் Enligntened Person என்று சொல்வார்கள் இல்லையா? அவர்கள் இருவரும் அதற்கும், மேலானவர்களும்கூட. உபதேசம் மட்டுமல்ல, வாழ்க்கையே அப்படி. ஆன்மீகத்தில் நான் இப்போது எங்கே பார்த்தாலும் ஒரு முழுமையையும், இறைவனின் கருணையையும் அவன் ஆட்சியையும் எல்லாப்புகழும் இறைவனுக்கே என்ற சத்தியத்தையும் பார்க்க முடிகிறதென்றால், அதற்கு அவர்களும் குரானும் பெரும் காரணமாகும்.


இது என்னுடைய அனுபவமும் அனுபவிப்பும்.

இந்த அனுபவத்தின் மூலம் சமயவேற்றுமை, சமயமாறுபாடு என்பது முற்றிலும் மறைந்துவிடுகிறது. எல்லோரும் ஒரே ஆன்மா என்ற உணர்வும், எல்லோரும் வேறு வேறாகத் தோன்றினாலும் ஒரே உடம்பில் உள்ள மூக்கும் கண்ணும் என்பது போன்ற உணர்வும் ஏற்படுகிறது.

இரத்தினகிரிக்கு வந்த இசை மேதைகள்


















திருக்கோயில் இரத்தினகிரி.







ஒருவர் தன்னிடத்திலே இருக்கும் தன் மூக்கின் மீதும் கண்ணின் மீதும் வேற்றுமை பாராட்ட முடியுமா? ஒருமையை ஒரே தன்மையைத்தான் பாராட்ட முடியும். இவர்களிடத்தில் இந்த ஆன்ம நேயம் ஒருமைப்பாடு வந்து விடுகிறது.

இந்த ஒருமைப்பாடு வருவதற்கு "தயை" "அருள்" என்னும் அளப்பரும் சக்தியே காரணமாகிறது. அந்த "தயை" "அருளே" இறைவனாக இருக்கிறான். அந்த தயை என்னும் உணர்வே இறைவன். என்பது குரானின் துவக்கமே "அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவன்" என்பதுதான். இந்த இறைவன் வழிகாட்டுகிறான். இந்த வழி 'நேர்வழி' என்று இறைவன் சொல்லுகிறான். "எங்களை நேர்வழியில் செலுத்தி அருள்வாயாக" "யாரிடம் உன் அருள் சென்றதோ அவர்களுடைய வழி"

இந்த நேர்வழியை இறைவனால் காட்டப்பட்டவர்களும் அதில் இறைவனால் நடத்தப்படுபவர்களும், நடப்பவர்களும் தாம் முஃமின்கள்

"இறைவன் முஃமின்களிடம் மிக்க இரக்கமுடையவனாக இருக்கின்றான்" 33:43 என்பது குரான் வேதம்.

இப்படிப் பட்டவர்களுக்கு மதம் என்கிற பேதமே இல்லை. எந்தவிதமான பேதமும் இல்லை. இவர்கள் அருளாட்சி நடத்துகிறார்கள். எல்லாமே இறைவனின் அருளாட்சியாகவே காண்கிறார்கள். அதிலேயே வாழ்கிறார்கள்.

இப்படிப் பட்டவர் சங்கு ஹாஜி செய்யது அப்துல் காதர் அவர் வாழ்ந்தார். இறைவனிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இந்த உலக வாழ்க்கைக்குப் பிறகு அவனிடம் திரும்புகிறோம் என்ற நம்பிக்கை - ஈமான் அவரிடமிருந்தது. அடுத்து அவர்களிடமிருந்த பெரும் குணமாக ஈகை - தர்மம் செய்வது இருந்தது. பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இறைவன் அருளால் அவருடைய வியாபாரத்தில் பெரும் செல்வம் வந்தது.

ஒருவனுக்குச் செல்வத்தை அளிப்பதை இறைவன் தானே 'செய்கிறேன்' என்று கூறுகிறான். அதை நல்ல அடியான் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறுகிறான்.

"நாம் அவர்களுக்கு அளித்த வற்றிலிருந்தும், மிச்சமானதைச் செலவும் செய்வார்கள் (2:3)

அவர்கள் வாழ்க்கைக்குப் போக மிச்சமானதை இங்கே செலவு என்பது சேர்த்து வைத்துக் கொள்ளாமல் தருமம் செய்வது.

இந்தக் கருத்தை அவர் சுவாமிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பலமுறை குறிப்பிட்டுள்ளார். குர்ரானின் இதயமான கருத்தும் இதுதான்.

"இறைவனே போதுமானவன்." என்பது குர்ரானில் இறைவனின் முக்கியமான கருத்து.

இதையும் அப்துல் காதர் சுவாமிக்கு எழுதியுள்ள பல கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இதே நிலையில் வாழ்ந்தவரும், வாழ்ந்து வருபவரும் தான் பாலமுருகனடிமை சுவாமிகள். இரண்டு பேருக்கும் இடையே நிலவி வந்த சகோதர பாவம் அண்ணன் தம்பி பாவம் பாசம், உணர்வு, உறவுமுறை மிகமிக அழகாக ஆழமாக விளங்கியது.

காதர் அவர்கள் கோயிலுக்கு வந்து சுவாமிகளை கண்டு மகிழ்வார். முருகனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். சுவாமிகளுக்கு அவரிடமிருந்த சகோதர நேயம் அளவிட முடியாததாகும்.

சுவாமிகளின் பெரும் லட்சியமாகிய இரத்தினகிரியில் 6.2.2003 அன்று, 35 ஆண்டுகளாக அவர் உழைத்துக் கட்டிய முருகனின் பெருங் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடந்தது. பெரிய விழா! பெருங்கூட்டம்.

அப்போது சுவாமிகள் கோயிலுக்கு அவருடைய ஆரம்பகாலத்தில் இருந்து தன்னிடம் வந்து அன்பும் நட்பும் காட்டிக் கோயிலுக்குப் பெரும் பொருள் உதவியும் புரிந்த அன்பர் ஒருவர், 17 ஆண்டுகளுக்குப் பிறகு கோயிலுக்கு வந்தார். கோயிலின் அமைப்பைக் கண்டு பிரம்மித்துப் போனார்.

காரணம் அன்று அவர் பார்த்தபோது குழியும் மேடும், காடும் பாழும் பள்ளமுமாக, அந்த இடம் கிடந்தது. இன்று புத்தம்புது கோயில் மண்டபம், ஒளிவீசும் தரை, ஒளிமயமான விளக்குகள், வண்ணமயமான மேல்விதானங்களாக தேவலோகமே அங்கே நிற்பதுபோல் இருக்கிறது.

அவர் இதற்குக் காரணமாக உழைத்த சுவாமிகளை மிகவும் பாராட்டினார். அப்போது சுவாமிகள் அவருடைய பாராட்டுக்களைக் கேட்டு மகிழ்ந்து, 'செய்யது அப்துல் காதர் அவர்கள் ஆரம்பகாலம் முதல் எனக்கு அண்ணனைப்போல இருந்து அன்பும் ஆதரவும் அளித்தார். அவர் இருந்து இந்தக் காட்சியை காணாமலே மறைந்துவிட்டாரே" என்று மனம் கசிந்தார் கண்களில் நீர் நிறைந்தது.

அந்த நிலையில் இருவரும் சகோதரர்களாக, ஆன்மநேய ஒருமைப் பாட்டுச் செல்வர்களாக விளங்கினார்கள்.

காதர் அவர்கள் தம் இறுதிக் காலம் வரை, சுவாமிகளுக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டு இருந்தார். அவர் இறப்பையும் அவர் திருமகனார் சுவாமிகளுக்குக் கடிதம் எழுதினார். 40ஆம் நாள் பாத்தியாவிற்கு அழைப்பும் அனுப்பினார்.

காதர் அவர்கள் தம் இறுதி நாளில் எழுதிய கடிதங்களில் இரண்டு கீழே தரப்படுகின்றன. காதர் அவர்கள் சுவாமிகளிடமும், சுவாமிகள் காதர் அவர்களிடம் கொண்டிருந்த ஆழ்ந்த மதிப்பும் சகோதர நேயமும் அதில் பெருகி நிற்பதைக் காண்கிறோம்.

ஆண்டவன் நல்லருள் பாலிப்பானாகவும்,

எனது அன்பு சகோதரர் அருள்மிகு, தவத்திரு மெய்ஞானியார் பாலமுருகனடிமையார் அவர்களுக்கு

தங்களின் அருளாசி நாடி நிற்கிறேன்.

என் உடல்நிலை சீராக இல்லை. இருதயம் மிகவும் பழுதடைந்துள்ளது. LV Dialated. இது இரண்டு ஆண்டுகளாக உள்ளது. இப்போது RV யும் Dialate ஆகி வருகின்றது. General Health not fit for any Surgery.

அப்படியே காலம் கழிக்க வேண்டும். No Walking; No Climbing; No Car Driving பேரப்பிள்ளைகளைப் பள்ளிக்குக் காலை கூட்டிச்சென்று, பிறகு ஒரு மணி நேரம் ஆபீஸ் வேலைகள் பார்க்கிறேன். மதியம் 11.30 போல் திருவான்மியூர் வீட்டுக்குச் சென்று ஓய்வு - தொழுகை. தொழுகைகூட உட்கார்ந்தபடியே. நிலையாக நிற்பதில்லை. பால்ய வயது முதல் ரம்ஜான் நோன்பு நோற்று வந்த நான், இந்த ஆண்டு நோன்பு நோற்கவில்லை. மிக மனவேதனையாக இருந்தது. மகனாரின் டாக்டர் தொழில் மிக நல்லபடியாக உள்ளது.

கல்கத்தாவிலும் வியாபாரம் நல்லபடி ஆதாயத்துடன் நடைபெறுகின்றது.

மண்ணில் மகிழ்ந்தேன்.

விண்ணில் மகிழ்வேன்.

மனது தெளிந்து, மரணத்திலும் மகிழ்வேன்.

தங்களின் உடன்பிறப்பு.

"ஆண்டவன் போதுமானவன்."

❖

29.11.96 தேதியிட்ட கடிதம்

29.11.96

ஆண்டவன் நல்லருள் பாலிப்பானாகவும்,

அன்பும் பாசமும் நேசமுமிக்க தவமெய்ஞானி எனதன்பு சகோதரர் பாலமுருகனடிமையார் அவர்களின் திவ்ய சமூகத்துக்கு வணக்கம்.

அருளாசி நாடி நிற்கின்றேன். தங்களின் அன்புக்கடிதம் கண்டு கண்ணீர் வடித்தேன். இந்தப் பாவிக்கு இப்படி ஒரு இறைநேசச் செல்வரா சிநேகிதர்? என்ன தகுதி எனக்குள்ளது?

தங்களின் பெரிய மனது பெரிய திட்டங்கள்தான் தீட்டும். மிகப்பெரிய வெற்றியும் கிட்டும். 'I am proud of it which gives some full hearted satisfaction"

தங்களின் மனதில் இப்படி ஒரு நிறைவு ஏற்பட்டால் உடல் நலமும் சீர்படும். **ஆண்டவன் போதுமானவன்.** அங்கு வந்து தங்களுடன் பேசி மகிழ்ந்து உணவருந்தும் பாக்கியம் எனக்கில்லை. மனத்தளவில் அதை செய்து கொண்டுதான் இருக்கின்றேன். என் இருதயநோய் அப்படியே உள்ளது. மிகவும் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றேன். உணவில் இனிப்பு, உப்பு சேர்ப்பதைத் தவிர்த்து வருகின்றேன். ஓடி, ஆடி, திரிந்த எனக்கு இது மிகவும் சிரமமாகவே உள்ளது.

தங்கள் போன்ற நல் உள்ளங்களின் ஆசியால் வாழ்ந்து வருகிறேன்.

தங்களன்பன்

❖

பெறுநர்

தவத்திரு பாலமுருகனடிமையார் அவர்கள்
வேலூர் மாவட்டம்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஉற்)

எனது அன்புத் தகப்பனார்

சங்கு ஹாஜி கே. எம். செய்யது அப்துல் காதர் அவர்கள் ஆகஸ்ட்டு மாதம் 3 - ம் தேதி வியாழன் மாலை இறைவனடி அடைந்தார்கள். (இன்னாலில்லாஉறி)

இன்ஷா அல்லாஉற் அன்னாரின் 40 - ம் நாள் பாத்திஉறா செப்டம்பர் மாதம் 10 - ம்தேதி ஞாயிறு முற்பகல் 11 - 00 மணியளவில் எனது திருவான்மியூர் இல்லத்தில் ஓத நாடியுள்ளோம்.

தாங்கள் குடும்பத்துடன் பாத்திஉறாவிலும், பின்னர் நடைபெறும்

விருந்திலும் கலந்து கொண்டு அவர்களுடைய மறுமை நல்வாழ்விற்கு எல்லாம் வல்ல இறைவனிடம் துஆ செய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

டாக்டர். ஷேக் உறமீது எம். எஸ்., டி.ஓ. மற்றும் குடும்பத்தினர்.

மற்றொரு கடிதம்

தாங்கள் எதைச் சொன்னாலும்
உடனே தொடங்கி விடுகிறேன்.

இது ஆங்கிலத்தில் கம்ப்யூட்டர் அச்சிட்டு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்ப் படுத்தி இருக்கிறேன்.

22.11.2001

புனிதமயமான திரு. அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், வாலாசா வட்டம், வேலூர் மாவட்டம்.

பெருமதிப்பிற்குரிய சுவாமிகளுக்கு!

1. "நான் உங்களிடம் அதிகம் என்பது எவ்வளவோ அவ்வளவு அதிகமான நம்பிக்கை கொண்ட தங்கள் சீடர்களில் ஒருவன்."

2. "1987ஆம் ஆண்டில் தங்களின் தெய்வமயமான கோயிலுக்கு வந்து மேஜர் ஆபரேஷன் செய்துகொண்டு நோயால் மிகவும் நொடிந்துக் கிடந்த என் மனைவிக்கு, நல்ல ஆரோக்கியம் திரும்பத் தங்களிடம் வேண்டிக்கொண்டேன்."

3. "நான் தங்களின் பலன் தருகின்ற ஆசிகளைப் பெற்றேன். தங்களின் அருளாசி மொழிகள் உண்மையில் நடப்பதை நடைமுறையில் கண்டேன். நோயால் வாடி நலிந்து போன என் மனைவி தன் உடல்நலத்தைத் திரும்பப் பெற்றார். இப்போது அவர் நல்ல உடல்நலத்தோடும், உற்சாகத்தோடும் இருக்கிறார்."

4. "நான் இப்போது நடத்தி வரும் பேங்க் தேர்வு எழுதுபவர்களுக்குப்

பயிற்சி தரும் பயிற்சி நிலையத்தை 1989 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறேன்."

5. "முதலில் நான் அதை வாடகைக் கட்டிடத்தில் நடத்திக் கொண்டிருந்தேன். இப்போது அது சொந்தக் கட்டிடத்தில் நடக்கிறது."

1997 ஆம் ஆண்டு அந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பிப்பதற்கு முன்பு தங்களைக் கண்டு வணங்கிக், கட்டிடம் செம்மையாகக் கட்டி முடியத் தங்களின் ஆசிகளைப் பெற்றேன். மிகவும் மேலான தாங்கள் என்னுடைய இந்தக் கல்வி மையம் ஒளிமயமான நட்சத்திரம் போல் வானில் பளிச்சிட்டு ஒளிமயமாகும் என்று வாழ்த்தினீர்கள்.

"அந்தக் கட்டிடம் முழுக் கட்டுமானமும் 1998 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. நாங்கள் அந்த எங்கள் சொந்த இடத்திற்குக் குடியேறினோம். அதன்பிறகுப் பின்பார்வை என்பதே இல்லை. வெற்றி மேல் வெற்றியாக மேலே போய்க்கொண்டே இருந்தோம். 2001 பிப்ரவரி வரை இதே மேல்நோக்கு வெற்றிதான். எங்கள் மையத்தின் மூலம் ஆயிரம் மாணவர்களுக்கு வேலை பெறும் வாய்ப்புகளை உண்டாக்கினோம். துர் அதிர்ஷ்டம் வந்தது."

"நிதி அமைச்சகம் பாங்கிற்குப் பயிற்சி தரும் நிறுவனங்களையெல்லாம் மூடிவிட்டது. இது எங்கள் கல்வி நிலையத்தை மிகவும் பாதித்துவிட்டது. பயிற்சிக்குச் சேரும் மாணவர்கள் மிகமிக மோசமான அளவில் குறைந்துவிட்டார்கள். மாதத்திற்கு நாற்பது, ஐம்பது பேர் சேருவது என்பது 5, பேர், 4பேர் என்றாகிவிட்டது. அரசு நிறுவன வேலை வாய்ப்பிற்கான பேங்க் பயிற்சி நின்றபோனதும், ரயில்வே நிறுவன வேலைகள்; பி.எட், டி.எட், ஐசிஇடி நுழைவுத்தேர்வுகளுக்கான பயிற்சி தரத் துவங்கினோம். எங்களது உழைப்பு எவ்வளவு கடினமாக இருந்தும் முன் இருந்த நிலையில் பத்துவிழுக்காடு கூட அடையவே முடியவில்லை. இதன் மூலம் வரும் வ்ருமானத்தில் நிறுவனத்தின் மேற் செலவுகளைக் கூடச் சரிகட்ட முடியவில்லை."

"இந்தச் சூழ்நிலையில், கொஞ்சம் நல்ல எதிர்காலத்திற்குத் தங்களின்

கனிவான ஆசிகளை வழங்கி எனக்கு வழிகாட்டுமாறு வேண்டுகிறேன்; கெஞ்சுகிறேன். கிழ்க்கண்ட எண்ணங்கள் தங்களின் ஆசிகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் என் மனத்தில் அலை மோதியபடி உள்ளன."

1. "நான் இந்தப் பயிற்சி நிலையத்தையே தொடர்ந்து நடத்தலாமா? அல்லது இதை மூடிவிட்டு இதற்குப் பதிலாக மாணவர்கள் தங்கும் விடுதியோடு கூடிய ஒரு பள்ளிக் கூடத்தை நடத்தலாமா?"

2. "தங்களின் வழிகாட்டுதல், பள்ளிக்கூடம் நடத்தலாம் என்று அமைந்தால், இப்போதைய இந்த இடமும் கட்டிடமும் அதற்குப் பொருத்தமானதா? இல்லையா? இந்தக் கட்டிடத்திற்குப் பக்கத்தில் நான் நிலம் வாங்கி இருக்கிறேன். அது பள்ளிக்குப் பயன்படுமா? அதைத் துவங்குவதற்கான பொருத்தமான நேரத்தையும், என் மனத்தில் காரியத்தைச் செய்யும் துணிச்சலையும், என் எதிர்கால நன்மைகளையும் பற்றி அருள் கூர்ந்து எனக்கு அருளிச்செய்யுங்கள்."

4. "இந்தப் பள்ளிக்கூடம் நடத்தும் திட்டமும் சரியில்லாமல் இருக்குமானால் வேறு மாற்றுத் தொழில் எதனைத் தாங்கள் எனக்கு ஆலோசனை கூறுகிறீர்கள்? பழைய நிலைக்கு எடுத்துச்செல்லும் எந்த மாற்று காரியங்களைத் தாங்கள் சொன்னாலும், அதனை உடனே தொடங்கிவிடுகிறேன்."

"தங்களின் ஆசிகளும் வழிகாட்டுதலிலுமே என் எதிர்காலம் உள்ளது. அருள் கூர்ந்து தங்கள் ஆசிகளை என்மீது பொழியவைக்கவும்; என்னை வழிநடத்தவும்."

தங்கள்; ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட பக்தன்.

❖

மற்றொரு கடிதம். வயதும் 91 ஆகிறது.

தவத்திரு அருள்மிகு பாலமுருகனடிமை அவர்கட்கு, உங்கள் கடிதம் கிடைத்தது. வாசித்து மிகவும் ஆனந்த மடைந்தேன்.

பாலமுருகனின் திருக்கோவில் மகாகும்பாபிஷேகம் வரும் தை 23 ஆங் 6 - 2 - 2003 வியாழக்கிழமை நடைபெறுவதை மிகவும் மகிழ்வுடன் அறிந்து ஆனந்த மடைகின்றேன்.

எனது உடல் நிலை அவ்வளவு சரியாயில்லை. கம்பின் உதவியுடன் தான் நடக்கிறேன். வயதும் 91 ஆகிறது. பிளேனில் வந்தாலும் அனேகமாக அடிபாகம் வரைதான் கார் வரும். என்னால் படிகள் ஏறமுடியாது அத்துடன் உட்காந்து ஓம குண்டத்தில் அருகில் இருந்து ஒன்றும் செய்யமுடியாது.

யாகசாலை பூசையில் கலந்து கொள்ள உபயதாரராக ஏற்க ரூபாய் 5,000 இந்துடன் ஒரு நெ 031814D.D. அனுப்பியுள்ளேன். இப்பூசையிலுள்ள கலசமும் பிரசாதமும் கும்பாபிஷேக நினைவாக அனுப்பி வைத்தால் முருகன் என வீட்டில் இருப்பதாய்க் கருதி வைத்துப் பூசிப்பேன். மிகவும் நன்றி.

கும்பாபிஷேகம் சிறப்புடன் நடக்க அருள் மிகு பாலமுருகன் துணைபுரிவார்.

இங்கண் உங்கள் அடிமை வே. கனகசபை

குருவே,
வனதேவன் என்னும்
பேச்சுவரவில்லை - எல்லாம்
வல்ல முருகனின் அருளை
வேண்டுகிறேன். எப்போ?

❖

அவரே எழுதுகிறார்!

அடுத்த கடிதம். அவருடையதே இதுவும்.

அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில் மலைபாதை திறப்பு விழா அழைப்பிதழ் கிடைத்தது. மிகவும் நன்றி. இப்பாதை கோவிலுக்கு முன்புறம் சுற்றி வருகின்றதா?

ரோட் உயர்த்தப்பட்டுள்ளனவா? வரைபடம் திறப்பு விழா அழைப்பிதழில் பார்த்தேன். மிகவும் அழகாயுள்ளது. என்னால் வந்து பார்க்க முடியவில்லை. எனது மகன் வனதேவனுக்கு பாலமுருகன் அருள் புரிந்தால் அவர் பேச்சுத் திறன் கிட்டினால் அவர் உதவியுடனோ அவரை தனிமையிலோ அனுப்பி வைப்பேன். அவருக்கு முருகனடிமையை நல்லாய் தெரியும். அவர் தொடர்பையும் எனக்குப் பதிலாக முருகன் ஏற்படுத்தலாம் அல்லவா? ஏங்கித் தவிக்கும் தொண்டனுக்கு என் இறுதி வேண்டுகோளாயிருக்கட்டும். முருகா அருள்புரிவாய். நான் துணையின்றி தவிக்கிறேன். என் மகனை எனக்குத் பூரண குணமாக்கித் தந்தால் நான் உன் திருக்கோயிலை வந்து உன்னைச் சரணடைகின்றேன்.

கண்காணாத தெய்வம் நாம் செய்யும் நல்லவற்றை அறிந்துதான் உதவி செய்யும். அப்படியிருக்க என் வாழ்நாளில் தானதருமங்கள் என்னால் முடிந்தளவு செய்து வருகிறேன். தெய்வத்தின் கருணைதான் கிடைக்கவில்லை. வனதேவன் பேசினால் அவருடன் 6.2.03 வர முடியும். எல்லாம் வல்ல திருமுருகனின் அருள் துணை வேண்டும்.

ஆரம்பகாலத்தில் முழுத்திருப்பணியையும் செய்து தர 1,30,000 சம்மதித்தேன். ஆனால் நாளடைவில் கட்டும் பணி அதிகரித்ததால் என்னால் ஈடுகொடுக்கமுடியவில்லை. எல்லாம் நல்லமுறையாய் முடிவுற எம் பெருமானை வேண்டினேன். இன்று எல்லாம் உங்கள் விருப்பப்படியும் மக்களின் விருப்பப்படியும் எல்லாருக்கும் மேலாக திரு முருகனின் விருப்பப்படியும் முடிவடைந்ததை நாம் எல்லோரும் போற்றுகிறோம்.

ஓம் முருகன் அருள் புரிந்தால் நானும் மகன் வனதேவனும் அங்கு வருவோம். எல்லாம் அவன் செயல்.

ஓம் சக்தி, ஓம் முருகா சரணம்

இப்படி,
உங்கள் சீடன்
வே. கனகசபை

❖



கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின் மலை பாதை அமைப்பு வெகுவாகப் பாராட்டுக்குரியது. அவர்கள் தொண்டு மேல்மேலும் முருகனருளால் செவ்வனே நடக்கட்டும்.

எனக்கு வந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. முருகன் நினைத்தால் முடியாதது ஒன்றுமில்லை. முருகா அருள் செய்வாயா? ஓம் முருகா உன் திருவடிசரணம். சரணம்!

25. கோயில் இப்படிக் கட்டப்பட்டது

என்ஜினியர் திரு. பி. குருசாமி அவர்களின் கூடிதம்

நாள் சரிவர ஞாபகமில்லை.. நண்பர்கள் சிலர் மூலமாகத் தெரிந்து இந்த திருப்பணியில் கட்டுமான வடிவமைப்பு, கட்டடப் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் கட்டிடப் பணிகளில் பங்கு கொள்ளத் தவத்திரு சுவாமிகளிடமிருந்து அழைப்பு வந்தது. சென்னையிலிருந்து 75 மைல் தொலைவு பயணம் செய்து பணியை மேற்கொள்வது சற்று மலைப்பாக இருந்தது. இந்த ஒரு முறை வந்துபாருங்கள். மறுமுறை நீங்களாகவே வரத்தோன்றும். என்று அழைக்க வந்தவர்கள் சொன்னார்கள். அவர் சொன்னது அப்படியே ஆயிற்று இந்த எட்டு ஆண்டு களாகத் திருப்பணியைச் சார்ந்து இரத்தினகிரிக்குப் பலமுறை வந்திருக்கிறேன். சில சமயங்களில் நானும் நண்பர் ஒருவரும் வாரக் கணக்கில் அடிகளாரின் ஆசிரமத்தில் தங்கி இருந்து, கான்கிரீட்போடும் வேலைகளை கவனித்தோம். அன்று "ஒரு முறை வாருங்கள் மறுமுறை வரத் தோன்றும்" என்று சொல்லப்பட்ட வார்த்தை அவருடையவை அல்ல. முருகப்பெருமான் சொன்னவை என்று, இப்போது உணர்கிறேன்.!

நான் முதலில் வந்த போது கல்லால் அமைத்த கருவறை பக்கம் இருக்கும் பழைய கோயில் இருந்த இடத்தில் கட்டப்பெற்றிருந்தது.. இடது விழா மண்டபத்தில் கல்தேர் அமைத்து அதில் முருகப்பெருமான் - வள்ளி தேவசேனையுடன் எழுந்தருள வைத்து வழிபாடு நடந்து வந்தது.

வலதுபக்கம் உற்சவர் மண்டபம் கட்டப்பட்டிருந்தது. தங்கத் தேர் நிறுத்துவதற்கு இடமும் கட்டப்பெற்றிருந்தது. இந்த இரண்டு பழைய மண்டபங்களுக்கிடையே இருந்த 75 அடி × 50 அடி நீள, அகலப் பரந்த இடத்தின் நடுவே கருவறைக் கோயில் இந்த இடம் குண்டும் குழியுமாக இருந்தது, பெரும் பாறைகள் சில இருந்தன. தொடர்ச்சியான (solid rock) இல்லை. இதில் ஒரு இடத்தில் நரிக்குழி ஒன்று இருந்ததாக அடிகளார் சொன்னார். இந்த மண்டபத்திருப்பணிகளுக்கான வரைபடங்களும், கட்டுமான வடிவமைப்புகளும் ஸ்தபதிகள் சிலரிடமிருந்தும், பொறியாளர் சிலரிடமிருந்தும் அடிகளார் 1980-85 முதலே கேட்டுப் பெற்று வைத்திருந்தார். அவற்றில் ஒன்று 1986ல் என் மூலமாகப் பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர் கொடுத்ததும் இருந்தது. எல்லாவற்றையும் பார்த்ததில் அடிகளாருக்கு மிக்க திருப்தி அளித்தது திரு.வை. கணபதி ஸ்தபதிகளின் வரைபடம் தான். இதையே ஏற்பது என்று அடிகளார் உறுதி செய்தார். திருப்பணிகள் தொடக்கமும் உறுதி ஆயிற்று.

"அடிகளார் திருப்பணிகளைப் பற்றியே சிந்தித்து கொண்டு இருப்பார். புதுமையான கருத்துகளைச் சொல்லிக்கொண்டே இருப்பார். அதற்கேற்ப மாற்றங்கள் செய்தாக வேண்டும். வரைபடத்தில் தேர் சுற்றிவருவதற்கு முன்புறம் இடம் குறைவாக இருந்தது. தேர் சுற்றி வருவதற்கேற்ப திருச்சுற்று மண்டபம் முன்புறம் விஸ்தரிக்கப்பட்டது. அதற்கேற்ப இந்த மண்டபத்தின் கிழக்குச் சுவர் சுமார் 6 அடிக்குத் தள்ளி வைக்கப்பட்டது. பழைய சுவர்கள் இடித்து மாற்றிக் கட்டப்பட்டன. இதே போல மேற்புறம் சுமார் 20 அடிக்குச் சுவரைத் தள்ளிக் கட்டுவது என்று தீர்மானித்தோம்.

இந்தச் சுவருக்கான கடைக்கால் மேல் மட்டத்தில் இல்லை. சுமார் 45 அடி கீழே மலைச்சரிவிலிருந்து இந்தச் சுவர் எழுப்பப்பட வேண்டும். இது சற்றுக் கடினமான வேலை என்றாலும் சுவாமிகளின் விருப்பமே முக்கியம். 36 அடிக்குக் கீழே கடைகால் தோண்டி மேற்புறச் சுவரின் நான்கு தூண்களின் அடி இந்த மட்டத்தில் இருந்தே அமைக்கப்படவேண்டும். இடையே சில பொய்த்தூண்களும், அவற்றிற்கான பாதங்களும் வடிவமைத்தோம். இந்தத் தூண்கள் யாவும் 10 அடி இடைவெளியில் உத்தரங்களால் இணைக்கப்பட்டு இடைவெளி கனமான கற்களால் நிரப்பப்பட்டது. எவ்வகையிலும் உறுதியாக இருப்பதற்கேற்றது

இவ்வடிவமைப்பு உள்ளே மணல் கொண்டு நிரப்பப்பட்ட போதும், மணலின் அழுத்தத்தை தாங்கும் தாங்கு சுவராகவும் உதவிற்று.

இப்படியே அப்போதிருந்த விநாயகர் கோயிலை மாற்றி முகப்பு மண்டபத்தின் தென் பகுதியில் நிறுவவேண்டுமென அடிகளார் விரும்பினார். அதற்கேற்றபடி முகப்பு மண்டபம் தென்புறம் சுமார் 50 அடி நீளத்திற்கு அப்பால் மாற்றப் பட்டது. ஏற்கனவே 130 அடி நீளத்திற்குக் கட்டப்பட்டிருந்த முகப்பு மண்டபத்திற்கு ஒட்டினாற்போல் விநாயகர் மண்டபம் அழகுற அமைந்தது. முகப்பு மண்டபம் பாறைச் சரிவில் 10 அடி கீழாகத் தளம் வைத்து அமைக்க வேண்டியதாயிற்று. அதனால் இதன் அகலம் 27 அடி அளவே கிடைத்தது. எனவே முன்புறம் சுமார் 6 அடிக்கு cantilever slab மூலமாக மண்டபம் அகலப்படுத்தப்பட்டது. இத்தகைய மாற்றங்கள் அவ்வப்போது அடிகளாரின் சிந்தனைக்கேற்ப செய்யப்பட்டன.

கட்டிடவேலைக்கள்:

வலுவூட்டப்பட்ட கான்கிரீட் சிமெண்ட் - மணல் - கல் ஜல்லி 1:11/2:3 என்ற அளவில் தூண்களுக்கும் 1 : 1½ : 3½ என்ற அளவில் உத்திரம் தளம் இவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டன. தளம், உத்தரம், எல்லாவற்றிற்கும் கான்கிரீட் 1½, 2½ வைப்பேரட்டர்களால் அதிர்வு செய்யப்பட்டது. இப்படி வைப்ரேட் செய்த கான்கிரீட் ஜல்லி, மணல், சிமெண்ட் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு (consolidate) திடப்படுத்தப்படுகின்றன. இந்த தொழில்நுட்பங்கள் மிக்க ஈடுபாட்டுடன் பின்பற்றப்பட்டுக் கண்காணிக்கப்பட்டன. கான்கிரீட் போடப்படும் ஒவ்வொரு நாளும் இந்தியத் தர நிர்ணயக் கழகத்தின் விதிமுறைகளுக்கேற்ப கான்கிரீட் சாம்பிள் எடுத்து 6X6X6 அளவிலான இரும்பு அச்சுகளில் வார்த்துக் கியூபுகள் தயாரிக்கப்பட்டன. இவை முறையாக நிழலில் கியூப் செய்யப்பட்டு குறைந்தபட்சம் மூன்று கியூபுகள் 7/14/28 நாட்களில் சோதிக்கப்பட்டன. இந்த சோதனை முடிவுகளிலிருந்து போடப்பட்ட கான்கிரீட் ஒரே சீராகவும் இந்திய தரக்கட்டுப்பாடு கழக தரத்தை விட மிகக் கூடுதலாகவும் இருந்ததைக் கண்டோம்.

எந்த வேலையாயினும் தரக் கட்டுப்பாடு நல்ல பயன் தரும் என்பதற்கு இரத்தினகிரியில் போடப்பட்ட கான்கிரீட் வேலைகள் ஒரு சான்றாகும். உதாரணமாக 15 / ச.செ.மீ. வலுவே போதுமானதெனினும் மேல் தள கான்கிரீட் (1 : 2½ : 3½) 20 / சதுர செ.மீ. முதல் 25 / சதுர செ.மீ வரை வலுவைக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

கான்கிரீட் தளவேலைக்குச் சென்டரிங் ஏற்பாடுகள் மிக நேர்த்தியாகவும் செய்யப்பட்டன. சுற்றுமண்டபக் கூரைத்தளம் 26 அடி உயரத்திலும் முகப்பு மண்டப தளம் 36 அடி உயரத்திலும் அமைக்கப்பட்டன.

கம்பிவேலைகள். சுற்று மண்டபக் கம்பிவேலைகள் கடுமையான வெய்யில் காலத்தில் செய்ய வேண்டி வந்தது. இந்த வெய்யிலில் தரை, பாறை எல்லாமே சுடும், கம்பிகளோ இவையெல்லாவற்றிற்கும் மேலாகச் சுடும். கோயில் வேலைக்களத்தில் காலணிகள் கூடாது என்ற கட்டுப்பாட்டை எல்லோரும் பின்பற்றினோம். இந்தச் சூட்டைத் தாங்கிக்கொண்டு, பாதத்தில் சாக்கைச் சுற்றிக் கொண்டு கம்பியாட்கள் வேலை செய்தார்கள்.

இத்துணை உழைப்புக்கும் ஈடுபாட்டுக்கும் காரணம் அடிகளாரின் இடைவிடாத ஊக்கமும், ஊக்குவித்தலும் தாம். அடிகளார் வேலைத்தளத்திற்குச் சுற்றி சுற்றி வந்து பார்வையிடுவார். கையில் பிரம்புடன் வலம் வந்து செல்லமாகத் தொழிலாளர்களைத் தட்டுவார்! அவர்கள் முகம் மலர்வார்கள்! இவை நான் நேரில் கண்டு ரசித்த காட்சிகள்!

இரத்தினகிரி திருப்பணி வேலைகளின் தனிச்சிறப்பு தொழிலாளர் களின் பக்தி இணைந்த உழைப்பு! உழைப்பாளர்கள் உழைப்பிலே இங்கு உறைகின்ற முருகனைக் கண்டவர்கள் போல் பணியாற்றினார்கள்.

முருகன், குமரன், அழகன், வீரன் என்று அறிவோம்! **முருகன் என்றால் உழைப்பு என்பதை இரத்தினகிரியில் கண்ணுற்றோம்!**

26. பங்குனி உத்திரமும் நூற்றிஎட்டுப் பால்குட அபிஷேகமும்.

28.03.2002 வியாழக்கிழமை. இன்று பங்குனி உத்திரம். நான் நேற்று மாலை வேலூரிலிருந்து வந்து கொண்டிருந்தேன். இரத்தினகிரி, வேலூருக்கும், ஆற்காட்டிற்கும் மையத்தில் உள்ளது.

பாலமுருகன் கோயிலின் மேற்கே பத்து கிலோ மீட்டர் தொலைவிற்கும், கிழக்கே ஆற்காடு வரை பத்து கிலோமீட்டர் வரைக்கும் நெருக்கமான சாலையில் இரண்டு புறங்களிலும் இரத்தினகிரி பாலமுருகன் 108 பால்குட அபிஷேகம் என்று பெரிய பெரிய, சுவரொட்டிகள் அதிகமாக ஒட்டப்பட்டிருந்தன. அதாவது நாளை பங்குனி உத்திரம் - பால்குட அபிஷேகம்.

மலைக்குப் போன் செய்து கேட்டதில் நாளை காலை 7.30 மணிக்கே கீழே கல்யாணமண்டபத்தில் நிகழ்ச்சி துவங்குவதாகச் சொன்னார்கள்.

எப்படி நடக்கிறது? என்னதான் செய்கிறார்கள்? என்று பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டேன்.

தமிழ் மாதங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பௌர்ணமியும் ஒவ்வொரு நட்சத்திர நாள் சேர்ந்து அன்று சிறப்பான விழா நாட்களாக அமைத்திருக் கிறார்கள்.

தைபூசம், மாசிமகம், ஆடிகிருத்திகை, ஆவணி அவிட்டம் இப்படியாக.

பங்குனி மாதம் என்றதும் உத்திரம் நட்சத்திரம் சிறப்பான நாளாகக் கொண்டாடப்படுகிறது.



பங்குனி உத்திரம் என்றாலே எனக்குச் சுந்தரரும், திருவாரூர் தியாகராஜப் பெருமானும், அங்கு நடக்கும் திருவிழாவும், அதன் அளவற்ற ஈர்ப்புச் சக்தியும் நினைவிற்கு வரும்.

திருவொற்றியூரும், திருவாரூர் பங்குனி உத்திரம் விழாவும், அதைக் காணத் தான் செய்த சத்தியத்தை மீறிப் போனதால் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டியதும் சுந்தரரின் இரண்டு கண்களும் குருடாகிப் போனது.

இதனால் கோபத்தால் சுந்தரர், ''மகத்தில் புக்கதோர் சனி எனக்கானாய்'' "நீ ஒரு சனியன் அதுவும் மகநட்சத்திரத்தில் புகுந்த மகா சனியன்'' என்று சிவபெருமானைத் திட்டுகிறார், தட்டுத் தடுமாறித் திருமுல்லைவாயில் வந்து, சிவபெருமானைப் பாடிப்பார்வை கேட்கிறார், அவர் அமைதிமூர்த்தியாக இருந்து விடவும், சுந்தரர் அழுதுகொண்டே - அதன் அருகில் இருக்கும் திருவெண்பாக்கம் சிவன் கோயிலுக்கு நடந்து சென்று, அங்குக் கண்ணிழந்த தன் நிலையைக் குறித்து, அழுது பாடுகிறார்,

"சிவபெருமான் தன் தோழரான சுந்தரருக்குப் போனால் போகட்டும் என்று ஊன்றுகோல் மட்டும் தருகிறார். சுந்தரர் கோபத்தோடு சிவனை "எங்கும் ஒழிந்து போகாமல் நீர் இங்கேதான் உள்ளீரா'? என்று கேட்கிறார். சிவபெருமான், "நாம் இங்குதான் உள்ளோம், நீர் இங்கிருந்து போம்" என்று கூற ஊன்று கோலைப் பிடித்து நடந்தபடி திருவாலங்காடு வந்து சேர்கிறார். அங்குள்ள சிவனைப் பாட அங்கும் பார்வை கிடைக்காமல் போனது. பிறகு அங்கிருந்து காஞ்சிபுரம் சென்று அங்கு ஏகாம்பரநாதர் கோயிலில் ஏகாம்பர நாதரையும் ஏலவார்குழலி அம்மையையும்ப்பாடி மாமரம் அருகே இடக்கண் பார்வை பெறுகிறார்.

வலக்கண் குருடராகத் திருவாரூர் பயணமாகிறார், வழியில் பல ஊர்களிலும் சிவபெருமானைப் பாடி வலது கண் பார்வை வேண்ட

ஊஹூம்... சிவபெருமான் மசியாமல் இருக்கிறார். இறுதியில் தியாகராஜர் முன்புபோய் வணங்கி மிகுந்த கசப்போடு - அந்தக் கசப்பைத்தான் எவ்வளவு ஆழமாக, எவ்வளவு வயிற்றெரிச்சலோடு தன் குற்றத்தை முற்றிலும் மறைத்தவராய் சுந்தரர் இறைவன் மீது பழிபோட்டுப் பாடுகிறார்!

இவையெல்லாம் என் நினைவிற்கு வந்தன. பெரியபுராணம் ஈடு இணையில்லாத ஆன்மிக நூலாவதற்கு ஈடு இணையற்ற சுந்தரர் வரலாறு அதில் கூறப்படுவதுதான். ஆண்டவனும்; அடிமையும் என்னமாய் இணைந்தும், பிணைந்தும் அதே நேரத்தில் அன்பு மயமான ஆண்டவன், சத்தியத்தின் ஆட்சியை எப்படி பூமியில் உறுதியாக நிலைக்க வைக்கிறார் என்பதும் அதில் அழகாகக் கூறப்படுகிறது.

நான் கோயில் திருமணமண்டபத்தை அடையும்போது, காலை மணி எட்டு.

அதற்குள்ளாகவே பால்குட அபிஷேகத்தில் பங்குகொள்ளும் முருக அன்பர்கள் - ஆண்களும், பெண்களுமாகத் திருமணமண்டபத்தில் உள்ளும் வெளியிலும் கூட்டமாக உட்கார்ந்திருந்தனர். மண்டப வாயிலில் பெயர்ப்பதிவு நடந்து கொண்டிருந்தது. மண்டபத்தின் உள்ளே அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. சுவாமிகள் இன்னும் வரவில்லை. அதனால் அருகில் உள்ள கோயில் அலுவலகம் சென்று அமர்ந்தேன். சுவாமி மண்டபத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். எழுந்து வாசற்படி அருகே வந்ததும், சுவாமிகள் எதிரில் வந்துவிட்டார். அவர் அறையில் போய் அமர்ந்ததும், நானும் உடன்சென்று எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தேன்.

உடனே எதிரில் மேசையில் இருந்த சிறிய லெட்டர்பேடை எடுத்து ஒரு காகிதத்தைக் கிழித்து, அதில் தற்போது முருகனின் பாலாலயமாக அமைத்து மூலவரை வைத்திருக்கும் மண்டபத்தைக் கோயில் போன்ற தோற்றத்தோடு திருத்தி அமைக்கப்போகும் டிசைனை வரைந்து காட்டியபடி, அதனை "உற்சவர் வைக்கும் கோயிலாக அமைக்கும்

யோசனை இருக்கிறது" என்று தொடர்ந்து அதுபற்றிக் கூறியபடியே படங்கள் வரைந்தார்.

பிறகு அதே பேடிலிருந்து மற்றொரு தாளை கிழித்து எடுத்துக் கோயிலின் கும்பாபிஷேக நாள் தேதியை எழுதிக்காட்டிப் "புத்தகம் போடுவதிலும் ரொம்ப அவசரம் வேண்டாம். கொஞ்சம் டைம் இருக்கிறது. நாம் நிதானமாக அதன்மீது வேலை செய்யலாம்" என்றார்.

நான் "திடீரென்று ஏதோ காரணத்துக்காக இந்தத் தேதிக்கு முன்பாகக் கும்பாபிஷேகம் வந்துவிடாதே" என்றேன்.

"ஆஹா! நிச்சயமாக வராது. அது மட்டுமல்ல கோயிலுக்கு அந்தப் பக்கம் வடவண்டை ஒரு மண்டபம் இருக்கு இல்லியா? அதையும் கூட அப்படியே வெறுமையாக விட்டுவிடாமல் கோயில் கட்டிட அமைப்பாகச் செய்யும் திட்டமும் இருக்கிறது. பொருளாதார நிலை பற்றி விரிவாக யோசிக்கிறேன். திட்டம் மனத்திற்குள் வந்து கொண்டிருக்கிறது" என்றார்.

புத்தகம் வெளிவரும் நாளும் தள்ளிப்போகிறது. சுவாமியிடம் நாம் கொடுத்திருக்கும் புத்தகக் கையெழுத்துப் பிரதியில் சாமி பார்த்துக் கொடுத்திருக்கும் வரையில் பெரும்பாலான் பகுதிக்குச் சரி என்று மார்க் போட்டிருக்கிறார். சிலவற்றில் கொஞ்சம் மாற்றவேண்டும் என்று எழுதி இருக்கிறார்.

புத்தகத்தின் தலைப்பு பற்றி மறுபடியும் யோசிக்கவேண்டும் என்று எழுதியிருக்கிறார். புத்தகம் வெளியிடுவது பற்றித் தனி நோட்டீசும், வார இதழில் விளம்பரம் தந்ததும் பலர் அதன் பெயரை மாற்றுவது குறித்து எழுதியும், நேரில் கேட்டும் வருகிறார்கள்.



மாற்றுவது என்று நானும் முடிவைச் சொல்லி விட்டு வேறு நல்ல பொருத்தமான. பெயரை வைக்கும்பொறுப்பை அவர்களிடமே கொடுத்துவிட்டேன்.

அவர்களையே வைக்க வேண்டிய பெயரை எழுதித்தரும்படிக் கேட்டு வாங்கித் தரும்படி சுவாமிகளிடமும், அப்படிச் சொல்லும் எல்லாரிடமும் விட்டு விட்டேன். அதனால் இப்போது முதலில் புத்தகத்தில் "எதை விடுவது? எதைச் சேர்ப்பது? என்று பார்த்து விட்டால் அதற்கு ஏற்ப மேற்கொண்டு செய்யவேண்டிய காரியத்தைத் துவங்கிச் செய்யலாம்" என்றேன்.

சாமி "ஓ, செய்யலாம்". என்றார்.

முகமும் தலையும் சிரிப்பும் அமர்க்களமான தோற்றம்.

"சரி! செய்யலாம்" என்று ஏற்கும்போதும் சிரிப்பு. "பார்க்கலாம்" என்று மறுக்கும்போதும் சிரிப்பு; மறுக்கும்போது முகத்தின், மனத்தின் தளர்ச்சி தெரியும். முன்னைக்கு மலர்ச்சிச் சிரிப்பு; பின்னதற்குக் தளர்ச்சிச் சிரிப்பு. சிலவற்றுக்கு யோசிப்புச் சிரிப்பு.

மனம் ஆழ்ந்து செல்லச் செல்லக் கண்கள் அப்படிக் கூர்ந்து அச்சாக நிற்கும் வடிவம். "ஆசிரமத்திலே பாக்கலே? பத்துப் பதினைந்து கோணிப்பையில கடிதங்களை கோபுரத்தின் மேல் உள்பக்கமாக இருக்கும் அறைகளிலிருந்து உனக்காக - புத்தகத்திற்காக எறக்கிக் கட்டிவச்சிருக்கேன். அதிலே நிறைய விஷயமுள்ள கடிதங்கள் இருக்கு - தேடனும். தேடித்தரேன்."

திருப்தியும், சம்மதமும் கலந்தவொரு சிரிப்பு.

"சரிங்க சாமி." அந்தக் கடிதங்களை எடுக்கத் தும்பும் தூசியும் குப்பையும் கிடக்கும் ராஜகோபுரத்தின் மேல்நிலை அறைக்குச் சுவாமி மற்றவர்களுடன், ஏறிப் போனபோது, "நானும் வருகிறேன்" என்று, சொன்னேன் "வேண்டாம். உன் உடம்பு கெட்டுவிடும். இப்பதான் நீ கொஞ்சம் உடம்பு தேறி இருக்கிறாய்,"என்று சொல்லிவிட்டு ஒரு பத்துநாட்களுக்கு முன்பு அவரே உடன் இருந்து எல்லாவற்றையும் இறக்கிக் கொண்டு வந்தார்,

இப்போது நான் அந்தப் புத்தக விஷயமாகப் பேச, இந்த நேரத்தில் வந்திருப்பதாக நினைத்துக்கொள்ளப்போகிறார் என்று "சாமி பால்குடம் நிகழ்ச்சி பார்க்கலாம்னு வந்தேன். இங்கே இரத்தினகிரியில் என்னென்ன - நிகழ்ச்சிகள், விழாக்கள் நடக்குதுன்னுப் புத்தகத்தில் குறிப்பிடனும். அதுக்காக வந்தேன்" என்றேன்.

சாமிக்குப் பாலும் நமக்குக் காபியும் கொண்டுவந்தார்கள். பக்தர்கள் சரம்சரமாக அறைக்குள் வந்து வணங்கிகொண்டிருந்தார்கள். எல்லோருக்கும் சாமி விபூதி கொடுத்துக் கொண்டே இருந்தார். பக்தர்கள் கூட்டம் சற்று நின்றதும். "வாங்க போவோம்" என்று சொல்லி எழுந்தார். உடன் எழுந்து சென்றேன். வெளியே பாதையில் இருபுறமும் அமர்ந்திருந்த பக்தர்கள் எழுந்து நின்று சாமியைப் பார்த்து வணங்கினார்கள்.

மண்டபத்தில் நுழைந்தோம். மண்டப மேடையில் முருகன் - உற்சவமூர்த்தி அம்மாக்களுடன் அலங்கரித்துக்கொண்டு அழகாக அமர்ந்திருந்தார். அவர் எதிரில் பெஞ்ச் போடப்பட்டு, அதன்மேல் துணியும், அதன் மேல் வாழை இலைகளும், அதன்மேல் அரிசி கொஞ்சம் கனமாகவும் பரப்பப்பட்டிருந்தது.

நூல் சுற்றிய சிறிய செப்புக்குடங்கள்; பால் நிரப்பி அதன் வாயில் மாவிலையும் தேங்காயும் செருகப்பட்டுக், கழுத்துக்களில் பூக்கள் சுற்றப்பட்டு. மஞ்சள குங்குமம் வைக்கப்பட்டு, மிக அழகாக வைக்கப்பட்டிருந்தன.

சுவாமி மேடை அருகே சென்று செய்திருக்கும் அலங்காரத்தையும், ஏற்பாடுகளையும் பார்த்தார். மண்டபத்தில் பால் குடம் தூக்கிச் செல்லும் பக்தர்கள் மட்டும் அமர இடம்விட்டுக் கயிறு கட்டப்பட்டு இருந்தது. மண்டபத்தில் தென்னண்டை ஓரம் பம்பை, உடுக்கை அடிப்பவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்குச் சற்று மேற்கு தூரத்தில் தவில், நாயனம் வாசிப்பவர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். மேடையில் பெரிய குத்துவிளக்குகள் வலது ஓரத்தில் ஒன்றும், இடது ஓரத்தில் ஒன்றுமாக ஏற்றப்படாமல் திரிகள் போடப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

முருகன் கிழக்கு முகமாக வாயிற்படியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். நடுவில் ஓமம் செய்வதற்கான சிறிய செங்கல் ஓம அடுப்பு

அமைக்கப்பட்டிருந்தது. அர்ச்சகர்கள் நான்கு, ஐந்து பேர் மேடையில் நின்றபடியும், உட்கார்ந்தபடியும், நடந்தபடியும் வேலையைச் சரிசெய்து கொண்டிருந்தர்கள்.

பச்சைவேட்டி கட்டிய இரத்தினகிரி ஆறுபடை வீட்டுப் பேரவை உறுப்பினர்கள், மண்டபம் முழுதும் உள்ளும் வெளியிலும், ஆங்காங்கே நின்று பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

சுவாமி நிகழ்ச்சி ஏற்பாடுகளைப் பார்த்துவிட்டுக் கல்யாண மண்டபம் உள்பகுதியில் இருக்கும் சமையல் கூடத்திற்குச் சென்றார். சுவாமிகள், உடன் வந்தவரோடு கோயில் பணிமண்டபத்தின் வடக்கு மூலைக்குச் சென்றார். நம் வழக்கப்படிச் சுவாமிகளோடு யாராவது போனால் நாம் கூடப்போவது இல்லை. சுவாமி மற்றவர்களுடன் பேசும் பேச்சைக் கேட்பதோ, கேட்கும் விருப்பம் மனத்தில் ஏற்பாடுவதோ இல்லை. அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.



சில நிமிடங்களில் சுவாமியும் உடன் இருந்தவரும் நான் நின்றிருந்த இடத்திற்கு வந்தார்கள். சுவாமி என்னிடம் "நிதானமாகவே நன்றாகவே செய்யலாம். அந்தக் கடிதங்கள் எல்லாம் எடுத்து அப்படியே வைத்திருக்கிறேன்" என்றார். இவ்வளவு நேரமும் அலுவலக அறையில் என்னிடம் சொல்லிய செய்தியைத்தான் சுவாமி அவரிடம் சொல்லிக் கொண்டிருந்திருக்கிறார் என்பது தெரிந்தது. "சரி சாமி" என்று நான் சொல்லச் சுவாமி திருப்தியோடு மறுபடியும் மண்டபத்தின் மேடைக்குச் சென்றார். பிறகு பின்புறம் இருந்த அறைக்குள் சென்று மேடையில் வைக்காமல் மேலும் பல பால் குடங்கள் தனியாக அங்கு வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துச், சரியாக இருக்கிறதா என்று கவனித்தார்.

மண்டபத்தில் வாத்ய இசை முழங்கியபடி இருந்தது. தாய்மார்களும், ஆடவர்களும் நல்ல ஆடைகளை அணிந்துகொண்டு குழந்தைகளோடும், கொண்டவர்களோடும், உறவுகளோடும் பளிச்சென்று உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அர்ச்சகர் ஒருவர் மட்டும் மந்திரம் ஓத ஆரம்பித்து, "சுக்லாம் பரதரம் விஷ்ணும்" என்று மைக்கில் சொல்ல மண்டபம் முழுதும் அது ஒலித்துக்கொண்டிருந்தது.

சுவாமி சுவர் ஓரத்தில் போட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி மண்டபத்தில் அமர்ந்திருப்பவர்களையும், நடக்கும் வேலைகளையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் மேடை அருகே நிற்பதைப் பார்த்து அருகில் நாற்காலி ஒன்று கொண்டுவந்து போடச்சொல்லி, அதில் அமரச்சொன்னார். நான் சற்றுத் தொலைவில் இருந்த நாற்காலியில் அமர்ந்தேன். கூட்டம் - விழாக்களில் பளிச்சென்று தெரியும் விதத்தில் கட்டாயம் ஏற்பட்டால் தவிர, நான் சுவாமிகளின் அருகில் அமர்வதில்லை. அவசியமானால் சற்று தள்ளி நிற்பதோ, உட்காருவதோ நடைமுறையாகிவிட்டது. மேடையில் மந்திரம் முடிந்ததும் இரண்டு தாய்மார்கள், மேடையில் வடகோடியிலும், தென்கோடியிலும் வைக்கப்பட்டிருந்த இரண்டு பெரிய குத்துவிளக்குகளின் ஒவ்வொரு திரியையும், தீப விளக்குகள் மூலம் ஏற்றி நிகழ்ச்சிகளைத் துவக்கினார்கள். அப்போது வாத்தியங்கள் மிகச் சத்தமாக ஒலித்தன. பிறகு பால்குடம் எடுக்கும் அனைவருக்கும் சங்கல்பம் செய்விக்கும் நிகழ்ச்சி துவங்கியது. முதலில் சுவாமிகள் தர்ப்பை மோதிரம் அணிந்துகொண்டு சங்கல்பம் செய்து கொண்டார்.

சுவாமி எதிரே அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். அரைமணி நேரம் ஆயிற்று, நான்கைந்து குழுவிற்குத்தான் சங்கல்பம் ஆயிற்று. சுவாமி மேடையில் இருந்த அர்ச்சகர்களை அழைத்துச் சைகையால் கடிகாரத்தைக் கையில் காட்டி, இன்னும் கொஞ்சநேரத்தில் முருகர் ஊர்வலம் புறப்பட வேண்டும். "சங்கல்பத்தை எல்லா அர்ச்சகர்களும் அமர்ந்து சீக்கிரம் முடியுங்கள்" என்று சைகையில் சொன்னார். நமக்கு இது ஒரு புதிய காட்சி. மற்ற இரண்டு அர்ச்சகர்களும் பஞ்சபாத்திரம், தட்டுக்களோடு வந்தார்கள்.

எதிரில் அமர்ந்திருந்த பக்தர்கள் கூட்டத்தில் இருந்த பக்தர்கள் ஐந்து, ஆறு பேர்களாக வந்து, அர்ச்சகர்களைச் சுற்றி அமர்ந்தார்கள். விரைவாகச் சங்கல்பம் செய்வது நடந்தது. எட்டரை மணிக்குத் துவங்கியது ஒன்பது - நாற்பத்தைந்துக்கு எல்லோருக்கும் சங்கல்பம் முடிந்து, மேடையில் மந்திரம் சொல்வதோடு பால்குடங்களுக்கு - உற்சவருக்கும் வழிபாடு செய்து - அதில் கடவுள் சக்தி உயிரூட்டும் நிகழ்ச்சி துவங்கியது.

அப்போதும் பல பக்தர்கள் மிகவும் காலதாமதமாக வந்து, வந்த பரபரப்பில் எல்லோரையும் பார்த்துத் திகைத்தபடி, என்ன செய்வது என்று தெரியாமல் நின்றார்கள். அவர்களும் அன்போடு அழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, அமர்த்தப்பட்டு, தூய்மைச்சடங்கு செய்விக்கப்பட்டனர். மாலை அணிவித்து, அணியச்செய்து, சங்கல்பம் செய்விக்கும் நிகழ்ச்சி நடந்தபடி இருந்தது. ஒன்பது மணி. மேடையில் பூஜை முடிந்து ஆரத்தி காட்டப்பட்டது. சமஸ்கிருத மந்திரத்திற்குப் பிறகு தமிழ்ப் பாடல்களைத் திரு. கலைமணி தன் கணீரென்ற உரத்த குரலில் பாடி ‘ஆறிருத் தடந்தோள் வாழ்க’ என முருகப்பெருமானை வாழ்த்தி - ‘குருவாய் வருவாய் அருள்வாய் குகனே’ என்று நிறைவுசெய்து, மகோன்னத சக்தியான முருகப் பெருமானைப் பால் குடங்கள் அனைத்திலும் வந்து நிறையும்படி வேண்டினார். முருகன் குருவாய் - வழி நடத்துபவராய்; அருவாய் - கண்ணுக்குத் தெரியாத அருப சக்தியாய்; இணைப்புச் சக்தியும், ஈர்ப்புச் சக்தியுமாகப்; பால்குடங்களிலும் சங்கல்பம் செய்துகொண்ட பக்தர்கள் உடல், மனங்களிலும் வந்து நிறைந்தாரா?

சுவாமிகள் செங்கோலையும், திறவுகோலையும் மற்றவரிடம் கொடுத்துவிட்டு, மேடை மீது ஏறி நின்றார். அர்ச்சகர்கள் பால்குடச் செம்பை - முருக சக்தி நிறைந்திருக்கிற செம்பை அவரிடம் எடுத்துக்கொடுத்தார்கள். பக்தர்கள் ஒவ்வொருவர் தலைமீதும் சுவாமிகள் வைத்தார். பெண் பக்தர்கள் தலைமீது வைத்துக் கொள்ளும்படி அவர்களிடம் கொடுத்துவிட்டார்.

கூட்டம் “விழுந்தடிக் கூட்டமாக” மாறாத வகையில், அணுக்க அன்பர்கள் அன்போடும், மெதுவாகவும், வரிசை வளையம் அமைத்து

நடத்த, வேகமாகவும், அழகாகவும் சுவாமிகள் தன் முருகசக்தி நிறைந்த கைகளால் எடுத்துச் சங்கல்பத்தாலும், ஓதப்பட்ட மந்திரங்களாலும், செய்த ஓமத்தாலும், மனத்திலும் உடலிலும் முருகசக்தி அவரவர்கள் பக்தி உணர்வுகளுக்கும் - கொள்ளளவிற்கும் - மனத்தில் ஏற்பட்ட காலிஇட அளவிற்கும் நிறைந்து; உச்சித் தலைமீது, இப்போது குடத்திற்குள் ஏற்றிக் கொண்டார்கள்.

அனைவரும் மேளம், நாயனம், பம்பையோடு வெளியே, மூன்று மூன்று பேராக வரிசையாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மேடையில் இருந்த கலசங்கள் - குடங்கள் யாவும் பக்தர்களின் தலைமீது ஏறின. 194 பேர் பணம் கட்டிப் பெயர் பதிவு செய்ததில் 150 பேர்தான் வந்திருந்தார்கள். மீதிப் பால் குடங்கள் நிகழ்ச்சிக்குக் கூட்டமாக வந்ததிருந்த முருக பக்தப் புண்ணியவான்களின் தலைமீது அமர்ந்தன. அறைக்குள் வைக்கப்பட்டிருந்த பால்குடங்களும் எடுத்துவரப்பட்டு இந்த முருகப் பெருமானின் திடீர் அருளுக்கு - முயற்சி இல்லாத அருளுக்குப் பாத்திரமானவர்கள் தலைகள் மீதும் அமர்த்திவைக்கப்பட்டன.

குடங்கள் ஏற்றித் தீர்ந்ததும், அங்கு வைக்கப்பட்டிருந்த அரிசி, வாழையிலை திரட்டப்பட்டு, ஓரமாக எடுக்கப்பட்டு, போடப்பட்டிருந்த பெஞ்சுகள் அகற்றப்பட்டன. மேடை மேல் வைக்கப்பட்டிருந்த அலங்கார உற்சவ முருகப்பெருமான் மலைவலம் செல்ல பக்தர்களின் தோள்களின் மீதேறி அமர்ந்தார். "பாலமுருகனுக்கு அரோகரா" என்ற ஒலி எழுந்தது. மண்டபத்துக்கு எதிரில் ரோடில் வைக்கப்பட்டிருந்த தேரில் முருகன் போய் அமர்ந்தார்.

பக்தர்கள் தலையில் குடம் வைத்தபடி அருகில் இருந்த பிள்ளையார் கோயிலைப் பம்பை, உடுக்கை நாதஸ்வரம், தவில், சிலம்பத்தோடு சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். சுவாமி அவர்களுக்கு முன்பாகக் கையில் பிரம்பும், சாவிக் கொத்தோடும் நிதானமாக நடந்து வந்து கொண்டிருந்தார்.

தார் போட்ட சாலை. வெய்யில். கால் வைக்க முடியவில்லை. சூடு பறக்க ஆரம்பித்து விட்டது. சுவாமிகளின் கால்களையும், நடையையும்

கவனிக்கத் துவங்கினேன். சுவாமிகளின் உடம்பு முழுவதும் வெள்ளையாகி விட்டிருந்தது. கால் பாதங்களும், உடம்பு முழுதும் அப்படியே, இடுப்பில் கோவணமும், தோளின் மீது வியர்வையைத் துடைத்துக் கொள்ளும் சிறிய டவல் மட்டுமே அவர் ஆடை. வெய்யில் பட்டதும் உடம்பில் கெட்டியானதோல் இல்லாததால் உடம்பு எரிகிறது என்பார். இப்போதோ வெய்யிலின் சூடு மிகக் கொடுமையாக - உடம்பில் கடூரமாக நேரடியாகத் தாக்கிக் கொண்டிருந்தது. இது எரிச்சலை உண்டாக்கும். அதைப் பொறுத்துக்கொள்ள மிகவும் கஷ்டப் படவேண்டும். அதன் வேதனை சுவாமிகளின் முகத்தில் தெரிகிறதா என்று பார்த்தேன்.

இல்லை. சாதாரணமாக மலைமீது, ஆசிரமத்தில் நிழலில் இருந்தால் எப்படி இருப்பாரோ அப்படியேதான் அவர் முகம் புன்முறுவலோடு இருந்தது. உடம்பே மறந்து போய்விட்டதா? மரத்துப்போய்விட்டதா?

அந்த நேரத்தில் நீர் நிரம்பிய தண்ணீர் லாரி உள்ளே பின்னோக்கி வந்தது. பக்தர்களின் வரிசைக்கு முன் வந்து நின்றது. அதன் பின்புறம் அதில் பொருந்தி இருந்த ரப்பர் பைப் திறந்து விடத் தண்ணீர் பாதை முழுதும் பாய்ந்து சென்றது. யாரோ புண்ணியவானின் புண்ணியம்.

பால்குட பக்தர்கள் கூட்டம் வரிசையாக விநாயகர் கோயிலைச் சுற்றிக்கொண்டு, தேரில் அமர்ந்த முருகப் பெருமானின் பின்னே வந்து நின்றார்கள். தார் சாலையில் வெய்யில் கொதிப்பிற்கு லாரியின் பின்பகுதியிலிருந்து ஒரு குழாய் மூலம் தண்ணீர் - பக்தர்கள் நடப்பதற்குமுன் பாதையில் பாயவிடப்பட்டது கொஞ்சம் இதமாக இருந்தது. சிறிது சூடு தணிகிறது.

உடுக்கை, பம்பை ஆட்டம் ஜோராக ஆடக் கூட்டம் நின்று மலையை வலம்வரத் துவங்கும்முன் பூசணிக்காய் வெட்டி பலி தரப்பட்டது. தேங்காய் கற்புரம் ஏற்றிச் சுவாமி உடைத்தார். ஒருவர் எலுமிச்சைப் பழத்தில் கற்பூரம் ஏற்றி உடைத்தப் பிழிந்து போட்டார்.

ஊர்வலம் - மலைவலம் மலையைச் சுற்றிக் கிளம்பியது.

முருகர் டயர்வண்டியில் இழுத்துச்செல்லப்பட்டார். சுவாமிகளும், கூட்டமும் கோயிலின் நுழைவு வாசலுக்கு முன்னால் நடைசாலையில் இருந்து பஸ் செல்லும் பாதையில் மேற்கு நோக்கி மலை வளைவிற்குச் சென்றனர்.

பத்து மணி. வெய்யிலின் கொடூரம் தார்ச்சாலையில் எதிரொலித்தது. லாரியிலிருந்து தண்ணீர் பாய்ந்து சாலையில் சென்றாலும் கூட, வெய்யிலின் கடும்சூடு பாதங்களைத் துன்புறுத்தியது; சுவாமிகள் பாதம் இதனால் அதிகமாக துன்புறும். அவர் முகத்தையும், பாதங்களையும் பார்த்தேன். எந்தவித எதிரொலிப்பும் இல்லை. ரொம்ப சகஜமாக நின்று நிதானமாக நடந்து கொண்டிருந்தார். நான் கொஞ்சம் துன்பப்பட்டேன்.

கூட்டம் மூன்று, மூன்று பேராக அழகாக வந்தபடி இருந்தது. முதலில் சுவாமி மற்றும் குடம் தூக்கித் தலையில் வைத்த, மூன்று ஐயர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். தார்ப் பாதையிலிருந்து மலையைச் சுற்றி மண்பாதையில் ஊர்வலம் திரும்பியது. திருப்பத்தில் சுவாமி எலுமிச்சைப்பழம் - தேங்காய் கற்பூரம் ஏற்றித் தேரில் அமர்ந்து செல்லும் முருகர், பின்னால் வரும் பக்தர்கள் கூட்டத்திற்கு திருஷ்டி சுற்றி உடைத்தார்.

தார்ச்சாலையும் முடிந்துவிட்டது. மண் தரை. நான்குதிசை வெட்டவெளி. மேற்புறம் காற்று. லாரியில் இருந்து தண்ணீர் ஊற்றிவருவதால் மண்ணைத் தண்ணீர் நனைக்கப் பாதை குளிர்ச்சியாகி, சூடே இல்லாமல், கால்கள் குளிர்ச்சி அடைந்தன. இந்தத் தண்ணீர் ஊற்றியது ஒரு மகா புண்ணியம். ஐநூறு பக்தர்களின் பாதங்களைத் தண்ணீர் விட்டுக் குளிர்ச்சியும், தூய்மையும் பெறச்செய்வது பெரும் புண்ணியம். இந்தப் புண்ணியத்தை யாராவது தருமமாகச் செய்திருந்தால், அந்த மனிதர் சுலபமாக அந்தப் புண்ணியத்தை அடைந்திருப்பார். சுவாமி காசு கொடுத்து ஏற்பாடு செய்திருந்தால் அது புண்ணியத்தோடு புண்ணியமாய் அவரைப் போய்ச் சேர்ந்திருக்கும்.

வடக்காக நடந்து சென்ற பால்குட பக்தர்கள் ஊர்வலம் கிழக்காக மலையின் திருப்பத்தில் திரும்பியது. அங்கும் சுவாமி ஒரு தேங்காய், கற்பூரம்

ஏற்றி திருஷ்டி சுற்றி உடைத்தார். அதற்காக நின்ற ஊர்வலம் மறுபடியும் புறப்பட்டது.

குழந்தைகள், இளவயது, நடுவயது, நாற்பது, ஐம்பது வயது, வயதுப்பெண்கள், மணமானவர்கள், ஆகப்போகிறவர்கள், ஆகி முடிந்து விட்டவர்கள் ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தனர்.

ஆண்களிலும் அப்படியே.

துர்க்கையம்மன் கோயில் அருகே ஊர்வலம் வந்ததும் முருகப்பெருமான் நின்றார். சூரைத்தேங்காய் சுற்பூரம் ஏற்றி சுவாமிகள் உடைத்தார். அங்கிருந்து சுவாமிகள் நடந்து மலைமீது ஏறும் படிகள் அருகே நின்றார்.

தேரிலிருந்து முருகர் கட்டு அவிழ்க்கப்பட்டுக் கோயில் கருவறைக்குத் தூக்கிச் செல்லப்பட்டார். அவருக்குப் பின்னால் வெய்யிலில் களைத்து வருகின்ற பக்தர்களைச், செங்குத்தாக இருக்கும் மலைபடி மீது இரண்டிரண்டு பேராக பக்தர் கூட்டத்தை வரச்சொல்லிக் கொண்டே சுவாமிகள் நிதானமாகப் படிகளில் ஏறிச்சென்றார். பத்து படிகள் நடந்து சென்று நின்று, பின்னால் நடந்து வரும் பக்தர்களைப் பார்த்தார்.

பக்தர்கள் தலையில் பால்குடத்தோடும், பால்குடத்தில் முருகசக்தியோடும் வந்து கொண்டிருந்தார்கள். சுவாமி மறுபடியும் மேலேறினார். பக்தர்களும் உடன் ஏறினார்கள். பத்து படிக்குப் பிறகு நின்றார். பக்தர் கூட்டமும் நின்றது. அது மனத்திற்கு மிகவும் இதமாக இருந்தது. நாமும் உடன் ஊறினோம். இப்படியே 138 படிகளையும் அதற்கு மேல் உள்ள உயரப் படிகளையும் ராஜகோபுரவாயிலையும் கடந்து, உள்ளே சென்றோம். முருகர் சந்நதி முழுதும் ஏற்கனவே அன்பர்களின் கூட்டம் அமர்ந்திருந்தது.

நாம் வசந்த மண்டப வாயில் வழியாக உள்ளே சென்று, முருகர் கோயிலை தரிசித்து பாலாலயத்தில் முருகரைப் பார்க்கப் படிக்கட்டில் இறங்கி, நடு படியில் நின்றோம். முருகன் சந்நிதானத்தில் தெரிந்தார்.

பின்னால் இதற்கு முன்பே வந்துவிட்ட வாத்ய கோஷ்டிகள் மேளம் அடித்தபடியும், நாதஸ்வரத்தில் நல்ல முருகர் பாட்டு பாடியபடியும் உட்கார்ந்திருந்தனர்.

மூலஸ்தானத்தில் ஓர் அர்ச்சகர் ஏணியில் ஏறி முருகரின் காலடிக்கு அருகில் நின்றார். சுவாமிகள் கீழே நின்றுகொண்டு முருகசக்தி ஏற்றிவரும் பால்குடத்தோடு அன்பர்கள் வருவதைப் பார்த்தபடி இருந்தார். பிறகு கருவறைக்குள் சென்றார்.

குடம் ஏந்திய அன்பர்கள் பால் குடத்தோடு மண்டபத்தின் தென்பகுதி ஓரமாகக் கருவறை எதிரேவர அமைக்கப்பட்டிருந்த வழிப்பாதையில் மூலவரின் எதிரேவர ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். நான்கு இடங்களில் தடைகள் ஏற்படுத்தி இரண்டிரண்டு பேராகப் பத்து பேர்களை ஒரே நேரத்தில் உள்ளே அனுமதித்துப், பிறகு வரிசையாக அவர்கள் முருகர் முன் வந்து பால்குடம் கொடுத்துவிட்டு முருகர் முன் அமர ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மேலே முருகர் பீடத்தின் அருகே படியில் ஏறி நின்று கொண்டிருந்த அர்ச்சகரை, நம் கோயில் அர்ச்சகர்கள், சுவாமி இனிமேல் நின்று காரியங்கள் செய்யவேண்டும், என்று கீழே இறங்கிவிடும்படி சொன்னார்கள்.

அவர் இறங்க சுவாமிகள் மெல்ல படியில் ஏறி முருகர் முன் அந்த வெள்ளை உடம்பில் வெள்ளைத்தாடியுடன், வெள்ளை வெளேரென்று கோவணத்துடன் அம்மாக்கள் வள்ளி, தெய்வானையுடன் அவருடைய ஏஜமான், அரசன், ஆண்டான் - அத்தனையுமானவன் முன் நிற்கிறார். படிகளில் நின்று நாம் கண்ட காட்சி கண்கொள்ளாப் பெரும் காட்சியாக இருந்தது.

பால்குடம் வருவதற்கு முன்பு பெருங்கூட்டமாக வந்து மண்டபத்தில் நிறைந்திருந்த பக்தர்களையெல்லாம் மேலே புதிய கோயில் சுற்று மண்டபத்தில் சென்று அமரும்படிக் கூறி அனுப்பிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் படியேறி மேலே போய்க்கொண்டே இருந்தார்கள். கூட்டம்

குறைந்தது. படியில் நின்றிருந்ததால் சாமி தெரிந்தாரே தவிர, முருகப்பெருமானும் அம்மாக்களும் நமக்குச் சரியாக தெரியவில்லை. அதோடு மண்டபத்தில் கூட்டம் மிகக் குறைந்திருந்தது. மண்டபத்தில் முருகர் முன்போய் உட்கார்ந்துகொண்டோம்.

முருகப்பெருமானையும், அம்மாக்களையும் கண்களும் மனமும் நிறைந்து வழியப் பார்க்க முடிந்தது. அதற்குள் முருகனுக்கு அபிஷேகம் செய்வதற்காக, மேலே அங்கு வந்து தடுத்து நிறுத்திப்பட்டிருந்த பக்தர்கள், பால்குடத்தோடு சந்நிதி வர அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களின் பால்குடங்களை வாங்கி முருகர் சந்நிதானத்தில் வைக்கப்பட்டது. பால் குடங்களைக் கொண்டு வந்து பக்தர்கள் முருகர் முன்னால் உட்காரவைக்கப்பட்டார்கள். பால்குடத்தில் மாவிலையோடு செருகி வைக்கப்பட்ட தேங்காய் எடுக்கப்பட்டு ஒரு பெரிய நீல நிற பிளாஸ்டிக்கில் போடப்பட்டு, சுவாமிகளிடம் பால்குடம் மட்டும் தரப்பட்டது.

சுவாமி வெள்ளை வெளேர் என்ற தன் உடம்பின் நிறத்தின் ஒளியில் - ஆடையின் ஒளியில் ஜொலித்தபடி கன்னங்கரிய நிற முருகன், அம்மாக்கள் மீது குடம் குடமாகப் பால் ஊற்றினார். பால்குதித்துத் தழுவி கும்மாளமிட்டபடி அவர்கள் தலைகள், முகம், உதடு, மார்பு, பாதம் ஆகியவைகள் மீது சலசலத்து ஓடுகிறது.

ஒரு குடம்; பிறகு ஒரு குடம்; பிறகு ஒரு குடம். இன்னொரு குடம். பிறகு இன்னொரு குடம் என்று பத்துக் குடங்கள் ஊற்றியபடியே இருக்கும் காட்சியை என்னவென்று சொல்வது!

பக்தர்கள் தலைமீது வந்த முருகசக்தி சுவாமிகளின் கைகளுக்கு இறங்கி மறுபடியும் முருகன் சிலை மீது நிறைந்துகிடக்கும் சக்தியோடு சேர்ந்து, அணைத்து, ஓடும் இந்தக்காட்சி, சக்தியோடு கலந்து ஆறாகச் சக்தி பெருகுகின்ற காட்சி.

பாலையும், முருகனையும், சக்தியையும் சுமந்து வந்து, சுவாமி கையில் கொடுத்து அவர் அதை முருகன் மீது வார்க்க அந்தக் காட்சியில் அவர் உள்ளமும், அதன் வெளிப்பாடாக முகத்தில் மின்னும் பெருமிதமும்,

பெருமையும், அப்பனுக்குப் பிள்ளை செய்யும் அழகான சேவையாக நன்றாகத் தெரிந்தது. இந்தச் சேவையின் சக்தி பால்குடத்தை எடுத்துவந்த எல்லா பக்தர்களுக்கும், அடுத்த ஆண்டு பால்குடம் எடுத்து வரும்வரை நீடிக்கும்.

இந்த நேரத்தில் அவர்கள் தங்கள் மனத்தில், தங்கள் பொருளாதார வளம் குறித்தும், குடும்பநலம் குறித்தும், தெய்வபக்தி குறித்தும் பெருமையோடு நினைத்து, அதனையே தியானிப்பார்களானால், அவர்கள் நினைத்த அத்தனையும் நூற்றுக்கு நூறாய் பலிதமாகும், பலிக்கும், பலித்தாக வேண்டும்.

பத்து குடங்கள் ஊற்றி நிறைந்தது. சுவாமி அந்த அபிஷேகம் நிறைவுபெற முருகன் நெற்றியிலும், அம்மாக்களின் நெற்றியிலும், வேலின் நடுவிலும் மஞ்சளை இடது கையில் எடுத்து நிறைய வைத்துக்கொண்டு, அதிலிருந்து வலது கையில் எடுத்து வைத்து, அதன் நடுவில் குங்குமம் வைத்து ஆரத்தி காட்டினார். அமர்ந்திருந்த பக்தர்கள் அனைவரும் "முருகா" "வெற்றிவேல் முருகா வீரவேல் முருகா" என்று வெற்றிக்குரல் எழுப்பினார்.

இப்போது சுற்றி உட்கார்ந்திருந்த பால்குட பக்தர்கள் அனைவரையும் எழுப்பிவிட்டு, மேலே புதியகோயில் பிரகாரத்தில் இருக்கும்படிக் கேட்டுக்கொள்ளப் பட்டனர். பக்தர்கள் மகிழ்ச்சியோடும்; திருப்தியோடும் எழுந்து சென்றார்கள்.

உடனே அடுத்த குழுவினர் உள்ளே நுழைந்தனர். அவர்கள் தலையிலிருந்த முருகசக்தி கலந்த பால்குடம் வாங்கப்பட்டுச் சிறிதுநேரம் முருக சந்நிதியில் வைக்கப்பட்டது. பிறகு சுவாமிகளிடம் எடுத்துக் கொடுக்கபட, அவர் முருகர் மீதும், அம்மாக்கள் மீதும் ஊற்ற, அவர்கள் மூவர் மீதும் பாலாறு அலைவீசி சலசலத்து ஓட ஆரம்பித்தது.

ஒன்று... இரண்டு என்று பத்து குடங்களின் பால், பாலாற்றங்கரை முருகன் மேல் பாலாய் ஓடுகிறது. முருகனின் உடல் மீது பால் பட்டதும் அந்தப் பாலில் மேலும் முருகசக்தி பெருகுகிறது. பக்தி சிரத்தையோடு அதை அருந்தும் மக்களின் நோய்நொடிகள், கஷ்டங்கள், வறுமை,

வெறுமை நீங்குகிறது. என்ன நினைக்கிறார்களோ அது பெருகிறது. நல்லது நினைத்தால் நல்லது; ஆகாதது நினைத்தால் ஆகாதது.

பாலாற்றங்கரை முருகன் பாலாற்றில் ஆடுகிறான். பக்தர்களின் தாகங்களை... பாவங்களை நீக்குகிறான். பத்துக் குடங்களும் ஊற்றி ஆயின. சுவாமி மஞ்சளை, முருகர் அம்மாக்கள் மற்றும் வேலின் நடுவில் இடுகிறார்; குங்குமம் வைக்கிறார். பிறகு நெய் தீப ஆரத்தி காட்டும்போது எதிரே அமர்ந்திருக்கும் பால்குடம் கொண்டு வந்த பக்தர், பக்தையர் முகங்களில் மகிழ்ச்சி.

எல்லோரும் எழுந்து புதிய சுற்றுமண்டபத்திற்குப் போய் அமர்ந்தனர். காற்று அழகாக வீசுகிறது. கஷ்டங்கள் தீர்ந்து களிப்பு மேலிடுகிறது.

இப்படியே 203 குடங்களின் பாலும் முருகன் மீது ஊற்றுவது என்ன அழகான காட்சி! என்ன என்ன புண்ணியமான காட்சி! ஒவ்வொரு குடம் பாலும் ஊற்றப்பட எடுக்கும் போது, அதில் இருந்த தேங்காய் உள்ளே பக்கெட்டில் தூக்கிச்செல்லப்பட்டு சரியான அளவில் கத்தியால் தட்டப்பட்டதும் அழகாய் பாதியாக உடைகிறது. பாலமுருகன் கோயில் பெயரிடப்பட்ட பெரிய பைகளில் அவை போடப்பட்டு வரிசைவரிசையாக வைக்கப்படுகின்றன. அதில் ஒரு எவர்சில்வர் பாத்திரம்போடப்பட்டு அதில் முருகன் பிரசாதமாக புளியஞ்சாதம் போடப்பட்டு, வைக்கப்படுகிறது.

மணி பன்னிரண்டரை: பால் அபிஷேகம் நடந்தபடியே இருந்தது. முருகரின், அம்மாக்களின் உடல் தழுவிய பிரசாதமான பால் பெரிய பாத்திரங்களில் பிளாஸ்டிக் டம்ளரில், யாளிகள் நின்று கொண்டிருக்கும் பெரிய முன் மண்டபத்தில் பக்தர்களுக்குக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பக்தர்கள் அதை வாங்கித் தான் குடித்தபடியும், குழந்தைகளுக்குக் கொடுத்தபடியும், வீட்டில் உள்ள தாய் தந்தையர்க்கும், உற்றார் உறவினர்களுக்கும் எடுத்துச்செல்ல ஆங்காங்கே நின்று பிளாஸ்க்குகளிலும், பாட்டில்களிலும் ஊற்றியபடியும் இருந்தனர்.

மண்டபத்தில் கொஞ்ச தூரம் வாயிற்படிக்குக் கொஞ்சம் முன்னால் பெரிய பாத்திரத்தில் வைக்கப்பட்ட சுவையான தயிர் பிரசாதம், வாழை இலையில் ஊறுகாயோடு வைத்து, வந்து நிற்கும் பக்தர்களுக்கெல்லாம் வாயாற உண்ணத் தரப்பட்டுக் கொண்டிருந்தது.

இரத்தினகிரிக்கு வந்த அரசியல் தலைவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.




சுவாமிகளுடன் முன்னாள் தமிழக ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் கர்நாடக
முதல்வர் தேவராஜ் அர்ஸ் அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் தமிழக ஆளுநர்
திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள்.



சுவாமிகளுடன் முன்னாள் கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள்.

குழந்தைகள், சிறுவர்கள், சிறுமிகள் இளைஞர்கள், இளைஞிகள், வயது இருப்போர், போனோர் எல்லோருக்கும் தரப்பட்டுக்கொண்டே இருந்தன. வாங்கி உண்டபடியே இருந்தனர். என்ன ஆனந்தக் காட்சி! என்ன முருகனின் மாட்சி! கோயில் உள்ளே "இரத்தினகிரி பாலமுருகனுக்கு அரோகரா" இரத்தினகிரி பாலமுருகனுக்கு அரோகரா, "வெற்றிவேல், வீரவேல்" "வெற்றிவேல், வீரவேல்" என்று முழங்கும் முருக அருள்ஓசை வெளியில் கேட்கிறது.

கோயில் வெளியே நின்று படிகளைப் பார்த்தேன். படிகளில் இன்னும் தலைமீது பால்குடம் வைத்த தாய் தந்தைமார்கள் நின்று கொண்டிருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக அந்த வரிசை உள்ளே சென்று கொண்டிருந்தது.

மொத்தம் எத்தனைப் பால்குடம்? எண்ணிக்கை வைத்துக் கொண்டிருந்தவர்களை போனில் கேட்கிறேன். தியாகராஜன் சொல்கிறார். மொத்தம் 205 பால்குடங்கள் சார், 205 குடம் பாலும் அதில் கலந்துள்ள முருகசக்தியும் முருகப்பெருமான் மீது சாமிகளால் பொழியப்படுகிறது. முருகன் கண் கொள்ளாத காட்சியாக மூழ்குகிறான். பாலாறு தோன்றுகிறது. முருகன் அதில் நீராடிக் குளிக்கிறான். பார்ப்பவர் மனம் குளிர்கிறது. 35 ஆண்டுகளுக்கு முன்னால் வெற்றுக்கோயிலில் சுவாமிகள் அதை வெறும் காட்சியாகக் கண்டிருக்கலாம். இன்று கண் எதிரே நடப்பதையும், அவரே செய்விப்பதையும் அவர் கண்கள் காண்கின்றன.

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்" என்ற திருமூலர் பாடல் நினைவிற்கு வருகிறது.

இங்கு பூசை முட்டவில்லை.

❖

திரையில் ஓடும் படம் போல் எழுதப்பட்டிருந்த நிகழ்ச்சிகளைச் சுவாமி படித்து முடித்ததும், அவர்முகத்தில் திருப்தியும் மகிழ்ச்சியும் தோன்றியது. பிறகு அதற்குக் கீழே எழுதப் பட்டிருந்ததைப் படித்தார். கீழே இருந்தது:

"சுவாமி! இவ்வளவு பால் முருகர் சிலைமேல் ஊற்றப்பட வேண்டுமா?

இதனால் என்ன பலன் கிடைக்கிறது என்று சுவாமி நினைக்கிறார்?"

இதைப் படித்ததும் சுவாமி எனக்குக் கேள்வியோடு முடித்திருக்கிறீர்கள்? என்றார்.

பிறகு ஆழ்ந்த உணர்வோடு இவ்வளவு பால், அபிஷேகத்திற்குப் பயன்படுத்த வேண்டியதில்லை தான். ஆனால் இது பரவாயில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு குடமாக நிறைய பேர் கொண்டு வந்தார்கள். நிறைய பால் ஆயிற்று.

ஆனா, தனியா பாலாபிஷேகம் செய்யறாங்க இல்லியா? அவங்க ஒரே ஆளே அம்பது லிட்டர்! அறுவது லிட்டர்னு அபிஷேகம் செய்யணும்னு வராங்க. சிலநேரங்கள்ள பணம் இல்லேன்னா கூட, சுவாமி நீங்க வாங்கி வையுங்க. நாங்க கொண்டு வர்ரோம்னு போனிலும் சொல்லாறாங்க. இங்கே வாங்கி வைக்கிறாங்க! அது ஒண்ணும் பெரிய காரியம் இல்லே. ஆனா நானு அவங்க கிட்ட அவ்வளவு பால் வேண்டாம்னு சொன்னாலும், அவங்க கேக்கறது இல்லே.

இந்த அபிஷேகத்திலே என்ன பலன்னு கேட்டே இல்லியா? அபிஷேகம் பண்ணும்போது கவனிச்சிப்பாருங்க. பால் தலைமீது கொட்டிக் கண்கள் வழியா ஓடி; டக்குன்று பால்நிக்கும்போது முருகன் கண் திறந்து நம்மைச் சட்டென்று பாக்கற மாதிரி இருக்கும்.

"இது சந்தன அபிஷேகத்திலே இன்னும் நல்லாத் தெரியும்! இந்தக் காட்சியிலே நம்ம மனசே அப்படியே முருகன் நம்மைக் கண்ணைத் திறந்து பாக்கிறான்னு ஒரு உணர்ச்சிப் பெருக்கை உண்டாக்கும். "இது முருகன் தருகின்ற தெய்வீக எழுச்சி; காட்சி உணர்ச்சி" என்றார்.

அவர்கண்கள் இந்தக் காட்சியில் மூழ்கி இருப்பதுபோல் எதிரே வெட்ட வெளியைக் கூர்ந்து நோக்கியபடி இருந்தது.

நானும் பலமுறை இதை கவனித்து இருக்கிறேன் இதுதான் அபிஷேகத்தின் பலன்! இதைவிட வேறு என்ன பலன் வேண்டும்?

27. நாட்டுப்புறத்து நல்லவன்

ஒருநாள் பிற்பகல் இரண்டு மணி இருக்கும். சுவாமிகளோடு அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தேன். அப்போது அந்த அறைக்குள் ஓர் ஆயிரம் மடங்கு அசல் நாட்டுப்புறத்தான் வந்தார். வயசு அம்பது இருக்கும். அழுக்கு வேஷ்டியும், பரட்டைத் தலையும், தாறு மாறான மீசையும், குடுமியும், குளிக்காம, சொக்காய் போடாம, மேல ஒரு அழுக்கு வேஷ்டியப் போர்த்தியபடி, கையிலும் ஒரு சின்ன அழுக்குப் பையுடன். பின்னால் ஒரு பதினைந்து வயது மதிக்கத்தக்க அவரைப் போன்ற அழகோடு, அரை நிஜார் போட்ட ஒரு மாங்காய் தலைக் கிறுக்கையும் பிடித்துக் கொண்டு, உள்ளே வந்து சுவாமியின் முன்னால் உட்கார்ந்தார்.

சுவாமி "என்ன வேணும்?" என்று சைகையால் கேட்டார்.

அதற்கு அந்த ஆயிரம் விழுக்காடு நாட்டுப்புறத்தான் ஒரு மாதிரியாகப் பல்லைக் காட்டிச் சிரித்தபடி "சாமி, நாந்தெரியலையா சாமின்னு" தன் பேரைச் சொல்லி, நான் பாஞ்சி வருஷத்துக்கு முன்னே வந்தேன! புள்ள இல்லேன்னு! சீட்டெழுதி வேப்பிலை - துன்னூர் குடுத்துப் புள்ளப்பொறக்கும் போ!ன்னு சொன்னியே! இதோ இந்தப் பையன் பொறந்தான்.



சாமி அந்தப் பையனை உற்றுப் பார்த்தார்.

முன்னெல்லாம் நாங்கப் பத்து, பன்னிரண்டு வயதாக இருந்த காலத்தில் அதாவது ஒரு ஐம்பது வருஷத்துக்கு முன்னால் கிராமத் துக்குப் பிச்சைக்கு ஒரு பையனை அழைத்துக்கொண்டு வருவார்கள்.

அவன் நூத்தியம்பது மடங்கு பேக்கு மாதிரி இருப்பான். அவன் கண்ணும் மாங்கா வடிவத் தலையும் மிகவும் தமாஷாக இருக்கும். ஒன்னும் பேசமாட்டான். வீடுகள் முன்னே போய் அம்மா 'அச்சி' (அரிசி) என்று சத்தம் போட்டுக் கேப்பான். அதுக்குமேல பேசமாட்டான். அவன் மூக்கும் முகமும் விசித்திரமா இருக்கும். கிராமத்துப் பசங்க எல்லோரும் அவனை மொய்ச்சிக்கிட்டு நிப்பாங்க. அவன் வரும்போது ஊரெல்லாம் ஒரே கொண்டாட்டம். அவன் போகிற வீட்டுக்கெல்லாம், தெருவுக்கெல்லாம் அவன்கூடவே ஓடுவாங்க. ஒரே கூட்டம்; உற்சாகம். அன்னைக்கு கிராமத்துல அவர்தான் பெரிய ஹீரோ.

ஓர் அதிசயத்தப் பாக்கற மாதிரி பாப்பாங்க. பெரியவங்களும், பெண்களும் வந்து பாப்பாங்க. யாரையும் லட்சியம் செய்யாமல் பெரிய மகாசக்கரவர்த்தியைப் போல நாலு அடி உயரத்தில், பூமியைப் பார்த்தபடி அவன் நடப்பதையும் 'அச்சி' கேட்பதையும் மிகவும் ரசித்து ரசித்துச் சிரிப்பார்கள். நிறைய அரிசியும் வீட்டுக்கு விடு போடுவார்கள். நிறைய குவியும். மூட்டைகளாத் தூக்கிட்டுப்போவாங்க.

இவன் கிராமத்த விட்டுப் போனதும், இந்த கிராமத்துப் பொடிசுங்கெல்லாம் ஏன் பெண்களும் பெரியவர்களும்கூட ஒரு நாலு நாளைக்கு எந்தப்பக்கம் திரும்பினாலும் 'அம்மா அச்சி 'அம்மா அச்சின்னு ஊரையே கலக்கும்.

ஒரு நாலு வருஷம், அஞ்சி, ஆறு வருஷத்துக்கு ஒருமுறை அந்த மாங்காத்தலை ஊருக்குள் வரும். அப்படி இருந்தான் அந்தப் பையன்.

அவங்க அப்பா நாட்டுப்புறம் பேசினார். "நெல்ல பெய்யந்தான். புத்திதான் கொஞ்சம் சரிஇல்ல. அவன் புத்திய கொஞ்சம் சரியாக்கு சாமி".

"இதோ" என்று தான் கொண்டு வந்திருந்த அழுக்குப் பையிலிருந்த படு அழுக்கான ஒரு துணியை எடுத்தார். அதில் பெரிய முடிச்சி இருந்தது.

"நீ புள்ள பொறக்கும். பொறந்தா காணிக்கை முடிஞ்சது முருகனுக்குக் குடுன்னு" சொன்னியே. அப்புறம் தகராறுல இருந்த என் மனையும் நீ சொன்னாப்பல எனக்கே வந்திடுச்சி. அதக் கடகட்டி வாடகைக்கு விட்டேன். அந்த வாடகைப் பணத்தை அப்படியே முடிஞ்சி, போட்டு வச்சிருக்கேன். இந்தா எடுத்துக்கோ"ன்னு சாமி முன்னால முடிச்சிய அவிழ்த்து எடுத்து வைத்தார்.

சாமி அதை எண்ணினார். எல்லாம் பழைய பழைய ஐதர் கால நோட்டு. பல வருஷமா முடிஞ்சி கிடந்ததால மடிஞ்சிம், பழுப்பு ஏறியும், கசங்கி, நசுங்கி, மஞ்சள் பூத்தும் கிடந்தன. நாணயங்களும் அப்படியே இருந்தன.

ஏறக்குறை 450 ரூபாய் இருந்தது. இது நடந்தது பல ஆண்டுகளுக்கு முன்னால். அப்ப 450 என்பது மிக அதிகமான பணம்.

சுவாமி அந்தப் பணத்தையே ஊன்றிப் பார்த்தார். அவர் கண்களில் ஈரப்பசை படிந்தது இன்னும் எனக்கு நன்றாக நினைவிற்கு வருகிறது.

விபூதி எடுத்து அந்த நாட்டுப்புறத்தார் நெற்றியிலும், அந்த மாங்காத்தல பேக்கின் நெற்றியிலும் இட்டார். அது ஹி.. ஹி என்று சிரித்துக்கொண்டு நாலுபக்கமும் பார்த்தது.

'நாங்க வர்றோம் சாமி.' டேய் பையா எழுந்திர்றா, சாமிய கும்புடறா' என்று தன் தங்கமகனின், வைர மகனின், கடவுளிடம் வரங்கேட்டுப்பெற்ற மகனின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வெளியே போய்விட்டார். சுவாமி அந்தக் கள்ளங்கபடம் தெரியாத, நாட்டுப்புறத்து, உண்மையான

மனிதன் பக்தன் கொண்டுவந்து வைத்துவிட்டு, வந்த சுவடு தெரியாமல் போன, பணத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு சொன்னார் "பார்! இந்த முருகன் எப்படிப்பட்டவன்னு பார்! பதினஞ்சி வருஷத்துக்கு முந்தி இவன் எந்த ஊரோ! என்ன பேரோ, எப்ப வந்தானோ, ஒன்னுமே எனக்கு நினைவில்லே. முருகன் என்னவோ செய்திருக்கான். செய்கிறான். இப்பப் பார் பணத்தைக் கொண்டு வந்து குடுக்கிறான். இவன்தான் இரத்தனகிரி பாலமுருகன். அந்த ஏழையும் மறக்காம நான் சொன்ன காணிக்கையை சிறுகச் சிறுகக்குருவி மாதிரி சேர்த்து, பத்திரமா காப்பாத்திக் கொண்டாந்து குடுத்திட்டு, ஒரு பெரிய பாரம் தீர்ந்த மாதிரிப் போறான். அவன் பிள்ளையையும் எனக்கு முருகனுக்குக் காட்ற மாதிரி காட்டிட்டுப்போறான். இதையெல்லாம் பாக்கும்போது ஒடம்பு சிலிர்க்குது" என்றார்.

இப்படிப்பட்ட பல மாயாஜாலங்களை இந்த முருகன் இந்த சுவாமிகளை வைத்துச் செய்து கொண்டிருக்கிறான்.

28. கோயிலும் நானும்

இந்தக் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்து முடிந்தன. எந்த நேரமும் கூட்டமும் கொண்டாட்டமுமாக இருந்த கோயில், கூட்டம் வராமல் அமைதிமயமாக ஆகிவிட்டது. இந்தக் காலகட்டத்தில் ஒரு நாள் மாலையில் நான் கோயிலுக்கு வந்தேன்.

எங்கள் கல்லூரியில் இருந்த அஞ்சல் நிலையத்தில், அஞ்சலகத் தலைவராக இந்த திரு. தங்கவேலனார் என்பவர் சாமிகளிடம் மிகுந்த பக்தி உடையவர். கோயிலில் நடந்த நிகழ்ச்சியும், சாமிக்கு ஏற்படுத்தப்பட்ட துன்பங்களும் அவரை மிகவும் பாதித்துவிட்டன. அடிக்கடி அது பற்றிச் சொல்லி வருந்துவார். கோயில், அரசு, வழக்கு என்று நடந்த நிகழ்ச்சிகளால் என் மனம் மிகவும் வருத்தத்தில் ஆழ்ந்தது.

சுவாமி மீது எனக்கு இயல்பாகவே இருந்த அன்பாலும், இப்போது கோவிலில் என்ன நடக்கிறது என்பதை அறியும் கவலையாலும் சுவாமிகளைப் பார்க்கச் சென்றேன். இதை என் நாட்குறிப்பில் குறித்து வைத்திருக்கிறேன்.

"இன்றுதான் நான் இரத்தினகிரி கோயிலுக்குச் சென்று முதன் முதலாகச் சுவாமிகளைச் சந்தித்தேன். பழைய கோயில். அதைச் சுற்றி உயரமான அளவில் கூரையாகப் போட்டிருந்தார்கள். நான்கு புறமும் கோயிலைச் சுற்றிவரும் இடம், ராஜகோபுரம் கட்டப் பட்டு

இருந்தது. அதற்கு எதிரே இப்போது உள்ள, புதிய கோயிலின் வாசற்படிக்கு எதிரே ஓர் அழகான மண்டபம் அதில் காற்று அவ்வளவு சுகமாக வீசியது!

அந்த மண்டபத்தில் சுவாமி அமைதியாக உட்கார்ந்திருந்தார். நான் அப்போது பார்த்த காட்சி இன்றும் என் மனதில் அப்படியே இருக்கிறது. நெருப்பில் மூழ்கிக் குளித்து "பவித்ரதா சொரூபின்யை" என்று சமஸ்கிருதத்தில் அன்னை சாரதா தேவியைப் பற்றிச் சொல்வார்கள். தூய்மை எடுத்து வந்திருக்கிற வடிவம்" என்று. அப்படி அமர்ந்திருப்பவராக சுவாமிகள் என் கண்களுக்குத் தென்பட்டார். தட்சணா மூர்த்திபோல் அமர்ந்திருந்தார். தூய்மை ஞானம் இவைகளின் வடிவமாய்த் தலையில் சடையோடு அமர்ந்திருந்தார். இது என் மனத்தில் படிந்த ஆழமான தோற்றம். தங்கவேலனார் நான் செய்யும் இராமகிருஷ்ண இயக்கப் பணிகளைச் சுவாமிகளிடம் சொன்னார்.

"இராமகிருஷ்ண மன்றத்துப் பணியாக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று சுவாமி பலகையில் எழுதிக் கேட்டார்.


நான் சுருக்கமாக "விவேகானந்தர் சொன்னார். கடவுளைப் பரப்புங்கள் கடவுளைக் காட்டிலும் விஞ்ஞானம் எதுவுமே இல்லை. கடவுளைப் பரப்புங்கள்" என்று, அதைச் செய்து கொண்டிருக்கிறேன். என்றேன்.

அதைக் கேட்டதும் சுவாமி சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பிறகு அவர் வைத்திருந்த பலகையில் எழுதிக் காட்டினார்.

இதுவரையில் பொன் வேண்டும்; பொருள் வேண்டும்; நோய் போக வேண்டும்; அதுவேண்டும்; இது வேண்டும்" என்றுதான் மக்கள் கூட்டம் கூட்டமாக என்னிடம் வந்தார்கள்.

ஆனால்"கடவுள் வேண்டும்" என்கிற ஒருத்தரை இப்போதுதான் நான் பார்க்கிறேன்."

பிறகு கையில் வைத்திருந்த சாவியால் இரும்புச் சட்டத்தின் மீது தட்டிக் கோயில் அர்ச்சகரை அழைத்து, எதையோ கொண்டு வரும்படி சைகை செய்தார். அவர் போய் சிறிய எவர் சில்வர் பக்கட் ஒன்றைக்



கொண்டு வந்தார். அதில் கையை விட்டுப் பார்த்தார். காசுகள் கொஞ்சமாகவே இருந்தன. என்னிடம் கொடுக்க அவைகளை எடுத்தார்.

நான் அப்போதெல்லாம் இராமகிருஷ்ண மன்ற நிகழ்ச்சிகளுக்கும், இராமகிருஷ்ண விவேகானந்தர்; அன்னை சாரதா தேவி விழாக்களுக்கும் என் சொந்தப் பணத்தை அது ஆயிரக் கணக்கில் ஆனாலும் நானே செலவழித்துத் தான் விழா நடத்துவேன். யாரிடத்திலும் கேட்கும் பழக்கும் இல்லை. கொடுத்தாலும் வாங்குவது இல்லை. அதனால் "வேண்டாம்" என்று சொல்ல வாயெடுத்தேன்.

உடனே தங்கவேலனார் "சுவாமிகள் கொடுக்கும் போது மறுக்க வேண்டாம்'' என்று கண்டிப்பான ஜாடை காட்டினார். சுவாமி பக்கட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தார். ஒன்பது ரூபாய்கள். ஒரு ஐந்து ரூபாய் நோட்டு; நான்கு ஒரு ரூபாய் நோட்டுகள் "என்னிடம் பணம் அதிகமாக இருந்தபோது நீங்கள் வரவில்லை. ஓராண்டுக்கு முன்னால் நீங்கள் வந்திருக்க வேண்டும்.' என்று எழுதிக் காட்டினார்.

தான் சிறு நூல் நிலையம் வைத்திருப்பதாகவும், அதில் இராமகிருஷ்ண, விவேகானந்த நூல்கள் அனைத்தையும் வாங்கி வைத்துப் படித்து வருவதாகவும் சொன்னார். அவருடைய அந்த நூல் நிலையம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவர் எனக்குக் கொடுத்த அந்தப் பணத்தை அப்படியே கொண்டு போய், "சுவாமிகள் தந்த நன்கொடை" என்று பெயர் எழுதி, அழகாகக் கண்ணாடிச் சட்டம் போட்டுப் படமாக ஆக்கினேன். மறுமுறை சுவாமிகளிடம் சென்றபோது, அவரிடம் கொண்டு போய் கொடுத்தேன். "சாமி! இது கும்பிட; செலவிட அல்ல" என்று சொன்னேன்.

குழந்தையாகச் சிரித்தபடி சுவாமி மகிழ்ச்சியோடு, அதை வாங்கிக் கொஞ்சநேரம் தடவியபடி கையில் வைத்திருந்து கொடுத்தார். அதைக் கொண்டு போய் ராமகிருஷ்ணமன்ற அலுவலகமான என்வீட்டு பூஜை அறையில் மாட்டி வைத்தேன்.

இராமகிருஷ்ண மன்றமும் இயக்கமும் தமிழ் நாடு முழுதும் ஆலமரம் போல் பரவித் தழைத்தது. அந்தப் படத்தை இன்றும் நான் என் அன்னை சாரதா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில், அம்மா சாரதா தேவியின் கோயிலில் மாட்டி வைத்திருக்கிறேன். அன்றாடம் பூ வைத்து பூஜை நடக்கிறது.

அதன்பிறகு அடிக்கடி கல்லூரிவேலை முடிந்ததும் மாலையில் கோயிலுக்குப் போக ஆரம்பித்தேன். கோயிலில் கூட்டம் இருக்காது. ஆனால் மிகுந்த அமைதியாகவும் ரம்மியமாகவும் இருக்கும். மாலை நேர வழிபாடுபெரும் மேளம் தாளம், மணி சத்தங்களோடு மனத்தில் ஆழ்ந்த உணர்வை ஏற்படுத்தும்.

கோயிலும் படிகளும் அவ்வளவு தூய்மையாகவும், அழகாகவும் இருக்கும். பார்ப்பதற்கு மனம் கவரும். அவ்வளவு அதிகமான மலைப்படி களையும், பரந்த கோயில் முற்றங்களையும் சுற்றும் இடங்களையும் சுவாமி அவ்வளவு தூய்மையாக வைத்திருந்தார்.

இன்றும் கோயில் அந்தத் தூய்மை மாறாமல் இருக்கிறது.

ஒருநாள் பூமிக்குள் ஆழமாக அமைந்திருந்த அவருடைய தியான அறைக்கு அழைத்துச் சென்றார். படிகள் வைத்துக் கட்டப்பட்ட சிறிய அறை. பெரிய கண்ணாடி ஒன்று வைக்கப் பட்டிருந்தது. நீண்ட அழகான வேலொன்றும் வைக்கப் பட்டிருந்தது. புலித்தோல் ஒன்று தரையில் பரப்பப் பட்டிருந்தது. ஒரு விளக்கைக் கண்ணாடி முன் வைத்து ஊதுவத்தியும் ஏற்றி வைத்து தியானம் செய்வதாகச் சொன்னார். மிகமிக ஆழ்ந்த அமைதியாக அந்த தியான அறை இருந்தது.

நான் இவ்வாறு கோயிலுக்கு வந்துபோய்க் கொண்டிருந்த போது, ஒருநாள், ஓர் அன்பர் "ஏன் அடிக்கடி இந்தக் கோயிலுக்கு வருகிறீர்கள்.

இப்போது சி.பி.சி.ஐ.டி விசாரணையும் கண்காணிப்பும் நடக்கிறது. நீங்களும் அதில் சிக்கிக் கொள்ளலாம்" என்றார்.

அவர் எதற்குச் சொன்னார் என்று தெரியவில்லை. நான் வரும் போது போலீசார் யாரும் என் கண்ணில் படவில்லை. நான் அவருக்குச் சொன்னேன். "நான் கல்லூரிப் பேராசிரியர். இந்தக் கல்லூரியில் வேலை செய்கிறேன். சுவாமிகளைப் பார்க்க வந்து போகிறேன். போலீசார் கேட்டால் இதை நான் சொல்கிறேன்" என்றேன்.

என்னை யாரும் ஒன்றும் கேட்கவில்லை.

அண்மையில் அந்தக் நிகழ்ச்சியைப் பற்றிச் சுவாமிகளோடு பேசிக் கொண்டிருந்த போது சென்னை உயர்நிதி மன்றத் தீர்ப்பில் சி.பி.சி.ஐ.டி விசாரனைக்கு உத்தரவு இடப்பட்டிருந்ததும், விசாரணை மிக ரகசியமாகவும், மிகவும் ஆழமாகவும் நடந்து கொண்டிருந்தது. உண்மை என்றும்,

சாதாரண உடையில் ஒரு போலீஸ் இங்கே இருந்து கொண்டு நாள் முழுதும் பல நாட்கள் இங்கு வருவோர் போவோரை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்ததாகவும் சுவாமிகள் சொன்னார்.

இவ்வாறு அடிக்கடி வந்து மிகுந்த பயனுள்ள பேச்சுக்களைச் சுவாமிகளோடு பேசிச் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு நாள் "நான் ஆற்காட்டில் இராமகிருஷ்ண விவேகானந்த மன்றத்தில் மாதந்தோறும் சொற்பெழிவு நடத்துகிறேன். நாளைக்கு இருக்கிறது சாமி' என்று அழைப்பிதழ் கொடுத்தேன்.

வாங்கிப் பார்த்த சுவாமிகள் இங்குக் கோயிலிலும் அதபோல் ஒன்று ஏற்பாடு செய்யலாம் என்றார். அதற்கான ஏற்பாடுகள் செய்தேன். சமயச் சொற்பொழிவுக் கூட்டம் மாதந்தோறும் நடக்கத் துவங்கியது. கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகப் - படித்தவர்களின் கூட்டம், கல்லூரி, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்கள்; மற்றும் பல நிலைகளில் இருந்த படித்த பக்தர்களின் கூட்டம் வரத்துவங்கியது.

அப்போது துவக்கப்பட்ட சொற்பொழிவுதான் தொடர்ந்து மாதந் தோறும் இப்போதும் நடந்து வருகிறது.

இப்படி இராமகிருஷ்ணரிடத்திலும், இராமகிருஷ்ண இயக்கத்திலும் ஒன்றிப் போய் அந்த வெள்ளத்தில் சென்று கொண்டிருந்த நான், இரத்தினகிரி சாமிகளிடத்திலும், இரத்தினகிரி முருகன் இயக்கத்திலும் ஒன்றி, அந்த வெள்ளத்திலும் இரவும் பகலும் என்று ஆழ்ந்து செல்லத் துவங்கினேன்.

"இராமகிருஷ்ணரையும் சைதன்ய மகாப்பிரபுவையும் காண்கிறேன்."

- பாஸ்கர்சென், கல்கத்தா.

(ஆங்கிலக் கடிதம். பேராசிரியரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.)

என் பெயர் பாஸ்கர் சென். கடந்த 40 ஆண்டுகளாகக் கப்பல் கட்டும் தொழிலிலும் அதற்குத் தொடர்பானகப்பல் தொழிலிலும் கால் ஊன்றிச் சிறந்து விளங்கி வருபவன். என் தந்தையின் உடன்பிறந்தவரின் மகன் வங்காளத் திரைப்பட உலகில் மிகவும் புகழ்பெற்ற இயக்குநர்களில் ஒருவரான மிர்னால்சென்.

எங்கள் பி.சி.சி. கப்பல் கட்டும் நிறுவனமும், கப்பல்களைப் பழுது பார்க்கும் நிறுவனமும், பல்வேறு வகையான அமைப்பு கொண்ட உலகின் பல்வேறான துறைமுகங்களில் பயன் படும்படியான கப்பல்களை அமைப்பதிலும், அவற்றைப் பழுது பார்ப்பதிலும், உலகளாவிய புகழ்பெற்ற கம்பெனிகளான பிரிட்டன் நாட்டின் கிளார்க் மற்றும் பல கம்பெனி களோடு வாணிபம் செய்து வருகிறது.

முதலில் நான் 'இண்ட்லாக்' என்ஜினியரிங் கம்பெனியில் மேனேஜிங் டைரக்டராக இருந்தேன். இது பலவகையான கப்பல்களைக் கட்டி விற்பனை செய்துகொண்டிருந்தது. என் மனைவி திருமதி சென் கல்கத்தாவில் குறிப்பிடத்தக்க ஆசிரியராக இருந்தவர்.

தூய்மையும் மேன்மை மயமான திரு. பாலமுருகனடிமை சுவாமிகளை நான் முதன்

முதல் கண்டதை நினைத்தால் மகத்தான வியப்பிற்குரியதாக உள்ளது. இவ்வரும், ராபர்ட் ஸ்டிபன்சன் சொன்னதைப்போல அவர் "அத்தகைய, காண்பவர்களை அப்படியே தன்னுள் ஈர்த்துக்கொண்டு மேன்மையான மகானாக" எனக்கும் என் குடும்பத்தவர்க்கும் விளங்குகிறார். வில்லியம் - வோர்ட்ஸ்வொர்த்தின் நடையில் சொன்னால் "அவரைக் காணும் போதெல்லாம் என் மனத்தில் ஒருவிதமான தாக்கம் ஏற்பட்டு, மிகமிக உன்னதமான எண்ணங்களையும் ஆனந்தத்தையும் பொங்கச் செய்கிறது."

"மிக அழகான, மிகமிக கம்பீரமான உணர்வுகளால் இழைத்த, இணைந்த உணர்வை என் மனத்தில் ஏற்படுத்துகிறது."

1992ஆம் ஆண்டின் இறுதியில் நான் அவரைச் சந்தித்த நாளிலிருந்து ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும், இதே மனநிலை என்னிடம் தோன்றியபடியே உள்ளது.

1992ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், அப்போதைய என் ஒரே குழந்தையான என் மகள் சங்கீதா, மருத்துவத்துறையில் நோயின் அகராதி யிலேயே மிகவும் கொடூரமான நோய்க்கு ஆட்பட்டு மரணத்தோடு கடும்போராட்டம் நடத்திக்கொண்டிருந்த வேளையில், நான் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.

அவர் மனிதர்களின் எதிர்காலம்பற்றி என்னவெல்லாம் சொல்கிறாரோ, அது அப்படியே நடப்பதாகக் கேள்விப்பட்டேன். தென்னிந்தியாவில் வழிபடப்படும் ஒரு கடவுளான முருகர் அவர் மூலம் பேசுகிறார் என்று கேள்விப்பட்டேன்.

அவரை நான் முதலில் சந்தித்த அந்த நாளிலிருந்து குறிப்பாக 1992 முதல் 1997 வரை, அந்தக் கோயிலுக்கு அடிக்கடி சென்று வருகிறேன். அதுதான் இப்போது எங்களுக்கு மிகுந்த வலிமைதரும் கோட்டையாக உள்ளது.


சில காலங்களில் சி.எம்.சி. மருத்துவமனையில் எங்கள் குழந்தையின் நிலை மிகமிக ஆபத்தான நிலையை அடைந்தபோது, நான் நாள்தோறும் 2முறை கோயிலுக்கு வருவேன். ஒவ்வொரு முறையும் அவரிடம்

சென்றிருக்கிறேன். சென்றுதிரும்பும்போது புதுப்பிக்கப்பட்ட புத்துணர்வு வலிமையோடும், அழிக்கவே முடியாத நம்பிக்கையோடும் துயரத்தால் துடித்துக் கொண்டிருக்கும் என் குடும்பத்திற்குத் திரும்பி வருவேன்.

அப்போதெல்லாம் அவர் எனக்கு நம்பிக்கையே ஒரு வடிவம் தாங்கி வந்ததாகவே தோன்றினார். கொஞ்சம்கூட அசைக்கமுடியாத ஆகான்பாறை அவர்.

காலம் காலமாக எல்லாப் பக்கங்களிலும் கடல்நீர் வந்து மோதியபோதும் சிறிதும் ஆடாமல் அசையாமல், அந்தநாள் முதல் இன்றுவரை நின்றபடி இருக்கும் ஆகான் பாறை. இப்படி நம்பிக்கை வடிவமாக சுவாமிகள் இருப்பதை உணர்ந்தேன்.

நானும் என் குடும்பமும் பல ஆண்டுகளாக எதிர்கொண்டு போராடிக் கொண்டிருந்த வாழ்க்கையின் மேடு பள்ளங்கள்; சுகதுக்கங்கள்; பயமுறுத்திய தலைகீழ் வீழ்ச்சிகள்; அனைத்திலும் சேக்ஸ்பியர்; கூறுவதுபோல "அலை பொங்கும் கடலில் கன்னங்கரிய இருளில், வானத்தில் எப்போதும் வடக்கு திசையை நிலையாகக் காட்டி மரக்கலங்களை வழிநடத்திச் செலுத்துகிற, துருவ நட்சத்திரமாக" அவர் எங்களை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறார்.


சுவாமிகளுடன் திரு. பாஸ்கர்சென் குடும்பத்தினர்.

நான் என் குடும்பத்தோடு திரும்பி, பெங்களூருக்கும், கல்கத்தாவிற்கும் போய்விட்ட பிறகும், சுவாமிகளிடம் வந்து போவதை வழக்கமாக வைத்திருக்கிறேன். ஏனென்றால் நாங்கள் வரும் போதெல்லாம் எங்களின் உயிர் -

உற்சாகப் பேராற்றலை, முடுக்கி விடுகின்ற மேலும் அதிகரிக்கச் செய்கின்ற, மனித மேம்பாட்டுச் சக்தி நிலையமாக அவர் இருக்கிறார்.

இன்றுவரை நாங்கள் எல்லோரும் அவரைப்போய் தரிசிக்கிறோம். அவரைத் தரிசிக்கும் ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு நிமிடமும் பௌர்ணமி நிலவின், சந்திரனின் கதிர்கள் கடல் அலைகளை மேல்நோக்கி எழச் செய்து, துள்ளி மகிழ்ச்சி ஆரவாரம் செய்விப்பதுபோல், எங்கள் உள்ளங்களையும் அவர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும்படிச் செய்கிறார்.

அவர் என் மகளுக்கு உயிரை அளித்துப் புதுவாழ்வை அளித்தார். அவர் அவளுக்கு ஆழ்ந்த நம்பிக்கையையும், உறுதியையும் அளித்தார். அதன் விளைவாக அவள் மருத்துவமனையில் இத்தனை ஆண்டுகளாக பட்டுக்கொண்டிருந்த கடும் நோயின் வேதனைப்போராட்டங்களில் இருந்து வெற்றிகரமாக மீண்டிருக்கிறாள்.

அங்கே அவள் சவ அடக்கத்திற்குச் சேர்க்கப்பட்டதுபோல சேர்க்கப்பட்டு, மனம், உடல் நோய், காயம் வேதனைகளுக்காகத் தாங்கமுடியாத கொடூர வேதனைகளோடு எல்லாமே முடிந்து என்மகள் "இறந்தே போய்விட்டாள்" என்ற நேரங்கள் எல்லாம் வந்துவிட்டன. அந்தநேரத்தில் சுவாமிகள் கடவுளின் வடிவாகத் தோன்றினார். அவ்வளவு நேரங்களிலும் அவள் உயிர்பெற்றாள்.

வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையிலிருக்கும் மருத்துவர்கள், குறிப்பாக டாக்டர் டி. ரகுபதி: அவர் சாதாரண நிலையைவிட மிகமிக அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டார். அவர் ஓய்வு ஒழிவு இல்லாமல், அவளுடைய உயிரை மீட்கப் போராடினார். அவள் உயிர் மீண்டாள். நாங்கள் அதை சுவாமிகள் அளித்த ஆசிகளாகவே நம்புகிறோம்.

இந்த எல்லாவகையான கொடூர மனவேதனைகளுக்கும், சொல்ல முடியாத துன்பங்களுக்கும் நடுவே, சுவாமிகள் எங்களுக்கு ஒரு மகன் திவ்யனை தன் ஆசிகள் மூலம் வழங்கினார். அவன்தான் எங்கள் வாழ்வின் மகத்தான மகிழ்ச்சியின் மூலதனமாக அமைந்திருக்கிறான். அவன் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் முன்பகுதியில் மிகவும் புண்ணிய நாளில் பிறந்தான்.

பல வருடங்களாக இரத்தினகிரி மிக அதிகமான பணிகளில் மூழ்கி இருப்பதை நான் அறிவேன். இலவச மருத்துவமனை, குழந்தைப்பேறு மருத்துவம், இலவசக் கண் சிகிச்சை முகாம்கள், மெட்ரிகுலேஷன் பள்ளி வங்கிகள் இப்படிப் பல செயல்கள் துவங்கி முடிந்து செயல்பட்டபடி உள்ளது. இந்தக் கோயிலின் மூலக்கிருகத்தில் இருக்கும் முருகக் கடவுள் எல்லா வல்லமைகளும் உடையவர். கருணையே வடிவானவர். அன்புமயமானவர்.

மகானாகிய சுவாமிகள் எல்லோருக்கும் நன்மைகளைச் செய்கிறார். அவர் ஏழை பணக்காரன் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே அருள் செய்கிறார். எந்தவிதமான வேறுபாடுகளையும் அவர் எவரிடமும் காண்பதில்லை. எல்லோருடைய கேள்விகளுக்கும், வேண்டுதல்களுக்கும் அவர் அருள் செய்கிறார். வழிகாட்டுகிறார்.

கோயிலுக்குள் அவரிடம் செல்பவர் யாரும் தங்கள் குறை தீராமல் வெறுங்கையோடு திரும்புவதில்லை. அவர் கருணை, பணக்காரர் - ஏழை அனைவர்மீதும் பாய்ந்து ஓடுகிறது. பஞ்சைப்பராரியிடமும், திக்கற்ற அநாதைகளிடமும், அன்பையும், இரக்கத்தையும் காட்ட இவர் ஒருவர் இருக்கிறார். துன்பங்களால் தாக்கப்பட்டவர்களுக்கு ஆசி தந்து தேற்றிப் பாதுகாக்கிறார். இதனால் அவர்களுக்கு வாழ்க்கையில் கொஞ்சம் நம்பிக்கையும், அர்த்தமும் ஏற்படுகிறது. கீழே விழுந்து அழிந்துபோகாமல் ஊன்றிக்கொள்கிறார்கள். ஊன்றிக்கொள்ளும் கோலாகச் சுவாமிகள் விளங்குகிறார்கள்.

அவரில் நான் இந்த பூமியில் பிறந்து இங்கு புனிதத்தையும் கருணையையும் பரப்பிய மகத்தான அவதார புருஷர்களாகிய, கருணைமயமான நம் இராமகிருஷ்ண பரமஹம்சரையும் அன்பும் சாந்திமயமுமான சைதன்ய மகாப்பிரபுவையும் காண்கிறேன்.

எங்களுடைய வாழ்க்கை மற்றும் தொழில், வியாபாரச் சிக்கல்களில் எல்லாம் சுவாமிகளை நேராக வந்தோ, அல்லது தொலைபேசி மூலமாகவோ நாங்கள் அணுகுகிறோம். அவருடைய குரல் எங்கள்

ஆத்மாவின் கவலைகளைப் போக்கித் தூய்மை செய்து புனிதமாக்கி, புத்துணர்ச்சியையும், எழுச்சியையும், புதிய சக்தியையும் தருகிறது. ஒவ்வொரு முறையும் அவர் எங்களை ஆசீர்வதிக்கும்போது எங்கள் வேதனைகள்; அவை உடல் சம்பந்தமானதாக இருந்தாலும், மனம் சம்பந்தமாக இருந்தாலும், மறந்து போகிறோம்.

அவர், ஒரிசாவில் மூன்று பெரிய பிரிட்டிஷ் கப்பல் கம்பனிகளோடு சேர்ந்து, ஒரு மிகப்பெரிய கப்பல்களைப் பழுதுபார்க்கும் கம்பெனி நிறுவனத்தைத் துவங்க எனக்கு ஆசி தந்தார். அவருடைய அருளாசியாலும், முருகக்கடவுள் வழிகாட்டுதலாலும், வீழ்ச்சிகளையும் துன்பங்களையும் கடந்து நிலைப்பட்டு விடுவோம்.

எப்போதெல்லாம் நானும் என் குடும்பமும் தெய்வவடிவமான சுவாமிகளின் முன்னிலையில் முருகனைத் தரிசிக்கிறோமோ, அப்போதெல் லாம் எங்கள் இதயம் நம்பிக்கையாலும், அதைத் தாண்டிய உணர்வாலும் நாங்கள் நிரப்பப்படுவதை எங்களால் மறக்க இயலவில்லை.

முருகனின் அந்தப் பார்வையொன்றே எங்களைத் துயரங்களிலிருந்து விடுவித்துவிடுகிறது. அவருடைய பெயரை நுகர்வது என்பது பிஸ்சரின் வார்த்தையில் சொன்னால் "எங்கள் கண்முன் தெய்வீக நினைவுகளையும் தெய்வீகக் காட்சிகளையும், உலகத்தையும்" எழவைக்கிறது.

இந்தக் கோயிலில் எழுப்பப்படும் வெற்றி முரசின் ஓசை மகத்தான சத்தியத்தையும், புனிதத்தையும், பரவும்படியும், நிலைத்திருக்கும்படியும், செய்கிறது. இசை இந்தக் கோயிலின் விடியலாகவும், நம்பிக்கையைத் தோற்றுவிப்பதாகவும் உள்ளது. ஏனென்றால் அது மறுஎழுச்சிக் குரல்; அமைதியின், ஆசீர்வாதத்தின், பல்வேறு தெய்வ நம்பிக்கைகளின்; நம் சுவாமிகளுக்குச் சொந்தமான அக்கறைக்கு உட்பட்ட குரல்.

எங்களுடைய வழிபாட்டிற்குரிய குலகுருவான **சாது சுதின்குமார் மித்ரா** அவர்கள் வங்காளத்தின் மகத்தான சக்திக்கடவுளின் சாதகர். அவரால் அனுப்பப்பட்டவராகவே சுவாமிகளை நான் உணர்கிறேன். எனவே இப்போது எங்கள் குலகுரு தன்னுடைய எலும்பு, தசைகளால்

ஆன இந்த உடலை விட்டு விட்டாலும், அவர் எங்கள் இதயங்களில், வாழ்வில் எல்லாம் வாழ்கிறார். அவர் தவிர்க்கமுடியாத, அழிவில்லாத ஆசிகளின் ஊற்றாக நம் சுவாமிகளின் வடிவில் எங்களுக்குத் தேவையான வாழ்வையெல்லாம் இப்போது வாரி வழங்குகிறார்.

போர்க்கடவுளாகவும், போர்க்கடவுள்களின் தலைவனாகவும், இடைவிடாத தீமைகளுக்கு எதிரான புனிதப்போரை நடத்துகின்ற இறைவன் முருகன். தன்னுடைய எல்லையற்ற கருணையால், தான் பெற்ற பிள்ளையான சுவாமிகளைத் தன்னுடைய செய்தியான அன்பையும் சமாதானத்தையும் அளிக்கும் தூதுவனாக அனுப்பி உள்ளான்.

அன்பும், சாந்தியும், நன்மைகளும், உதவியும், ஆறுதலும் அவரிடமிருந்து வரும் நம்பிக்கையின் அதிர்வுகளும்; யாரெல்லாம் அவரிடம் போகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் அவர்கள் எதிர்காலம் பற்றி எழும் அழிக்கமுடியாத ஓர் அழுத்தமான நம்பிக்கையை உருவாக்குபவராகவும்

ஷெல்லியின் வார்த்தைகளில் சொன்னால் “மகிழ்ச்சி ஆத்மாவாக” நம் சுவாமிகள் எப்போதும் இருக்கிறார்கள்.

மனிதர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்ல நினைக்கும் எல்லோரும் இந்த மகத்தான ஆத்மாவை, ஆச்சரியமும், மிகுந்த மரியாதையுமான கண்கொண்டு காணமுடியும்.

இந்தப் பூமியின் மீதே அமைந்துள்ள ஒப்பற்ற உலக சகோதரத்துவம், மனிதநேய அமைப்பு, முழுமையான பொறுமை, அன்பு ஆகியவைகளைக் கொண்டு எல்லாவற்றையும் வளர்க்கும்.

மாறக்கூடிய இந்த பூமியில், மனிதர்களின் விதியை உருவாக்கக்கூடிய, மனிதனின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்குமானால், அப்படிச் சொல்லப்பட்ட, சக்தி மகத்தான மனித சமுதாயத்திற்கு தந்த நன்கொடை பரிசு இந்த மகத்தான ஆத்மாவான சுவாமிகளாகும்.

பாலமுருகனடிமை என்னும் இந்த மகத்தான ஆத்மாவைப் பற்றி இனிவரும் தலைமுறைகள் இப்படிப்பட்ட ஆத்மா எப்போதாவது தசையோடும், இரத்தத்தோடும் இந்த பூமியில் கால் கொண்டு நடந்திருக்குமா?

என்று குழம்பக் கூடிய அளவு அவ்வளவு மகத்தான ஆத்மாவாக சுவாமி இருக்கிறார்.

மகாத்மாகாந்தியைப் பற்றி ஐன்ஸ்டீன் கூறியது போல.

மனச்சோர்வடைந்த, சுதியற்ற, பாழ்படுத்தப்பட்ட, உடைந்துபோன, கணக்கற்ற மக்கள் கூட்டம் தங்கள் துயர் தீர அவரைச் சூழ்ந்து சுற்றிக் கொண்டிருக்கிறது.

கோல்ட்ஸ்மித்தின் கவிதையில் வரும் கிராமத்தின் ஏழை மக்களை சமயப் பிரசாரகர் கூட்டும் கூட்டம்போல இவர் எல்லோருடைய துன்பங்களையும் தீர்த்து வைக்க முயலுகிறார். கோல்ட்ஸ்மித் கவிதையில் வரும் சமயப் பிரச்சாரகர், பரிகாசத்திற்கு ஆளானாலும் அவர் பிரார்த்தனைக்காக மக்கள் அவர் பின் கூடுகின்றனர்.

கோல்ட்ஸ்மித்தின் "கிராமத்துக்குக் கோயில் பிரசாரகர்" என்ற கவிதையில் வரும், மக்களின் நம்பிக்கையை எழுப்பும் நிகழ்ச்சி போல் இரத்தினகிரியில் இப்போது நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தெய்வாதீனமாக, தெய்வக்கருணையோடு மற்றொருவர் இதுபோல் எங்கிருந்து வருவார்?

"எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறதோ? எங்கே பொது அறிவு சுதந்திரமாக உள்ளதோ? அந்தச் சுதந்திரச் சொர்க்கத்தில், எங்கள் தந்தையே இந்த நாடு விழிப்பதாக!" என்று நம் உலகக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் பிரார்த்தனை செய்தார்.

நம இரத்தினகிரி சுவாமிகள், நாம் அந்தச் சுதந்திரச் சொர்க்கத்தில் விழிப்படைய நம்மை நீண்ட நடைபோட்டு அழைத்துச் செல்கிறார். அது தாங்க முடியாத பாரமான நம் சுமைகளை நெம்புகோல் கொடுத்து உருளுமாறு செய்கிறது.

29. என் பாதை! என் இலக்கு! என் நடைமுறை!

1-10-1989 ஆம் அன்று கோயிலின் ஒரு நிகழ்ச்சிக்கு அப்போதைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் வருகை தந்தார். சுவாமிகள் அவரிடம் ஒரு கடிதம் எழுதித் தந்தார். அதில் எழுதுகிறார்:

என் பாதை அப்பர் பெருமானின் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை என்னும் அப்பர் பெருமானின் பெருமிதக் குரலே"

"எம் இலக்கு ஏழ்மைக்கு இரங்கலும், ஏற்றமுறும் பணிகளுக்கு உரமாதலும், மட்டுமே. எம் வாழ்வின் இலக்கு. இதற்காகவே எம் நாட்களை அர்ப்பண உணர்வோடு காணிக்கையாக்கி உழைத்து வருகின்றனம்.

"எம் சமய சமுதாயப் பணிகள் மானிட நல வாழ்வை மட்டுமே நாட்டமாகக் கொண்டு இயங்குபவை.

"எம் திருக்கோயில் செயற்பாடுகள் இறைவன் திருமுன் மனிதமையின் முழுச் சமன்பாட்டைக் கவனத்துடனும் கண்டிப்புடனும் போற்றி வருகின்றன.

"யாம் நம்பும் மேற்கண்ட இலக்கை அடையவும், போற்றவும் எந்த இடர்பாட்டையும் பாராட்டாது தொண்டு வழி யாம் இயங்குகிறோம்.

"அதைத் தாங்களும் கண்டு அறிவீர்கள்.

"மிகவும் மனம் நொந்து வரும் அடியவர்கள் விரும்பினால், அவர்களே திருக்கோயிலின்

கருவறைக்குள் சென்று அவர்களே திருநீறு அணிந்து, தெய்வத்தின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கும் வாய்ப்பு வசதிகளையும் இத்திருக்கோயில் தந்துள்ளது.



“பூசைத் தமிழே ஆகும்” என்பது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு எம் கோயில் தமிழ்வழி பாட்டையே போற்றுகிறது.

“விரும்பும் அடியார்க்கு வட மொழிப் பூசனை மறுக்கப்படுவதும் இல்லை.

“எம் சமய சமூகப் பணிகளின் சீர்மையையும் ஒழுங்கையும் கண்ட அரசு, விதி 46 மற்றும் 47ன்படி எம்மைக் கோயிலின் தக்காராக நியமித்து உள்ளது. இந்த நிலையில் இருந்தபடி அரசுநிர்வாக அலுவலர்களின் கூட்டுப் பொறுப்போடு செயல்பட்டு வருகின்றோம்.”

இதுதான் பாலமுருகனடிமை.

இதுதான் சுவாமிகளின் செயலாக்கம்

இதுதான் அவர் வாழ்க்கை வழி

அஞ்சாமை

அருமைப் பாடு

ஆணித்தரம்

கடும் உழைப்பு

கனிவு

தெளிவு

எளிமை

எவரும் தன்னை வந்து காணும் எளிமை

மறைவு, திரைவு இல்லாத வெளிப்பாடான நெஞ்சம்

வெளிப்பாடான பேச்சு

இதோடு,

ஏழைமக்களின், துயர் அடையும் பக்தர்களின் துயர்கண்டு உருகும் உருக்கம்.

அந்தத் துயர்தீர்க்க முருக சக்தியோடு அன்போடும்

கனிவோடும் செயல்படும் செயல் எழுச்சி.

இவைதான், இதற்கு மேலும் மேலும் மேன்மைகளும் கனிவுகளும் கண்ணியங்களும் தாம் பாலமுருகனடிமை சுவாமிகள்.

30. இராஜராஜன் பூமியில் இரத்தினகிரி.

காலை நேரம். சுவாமிகளைப் பார்ப்பதற்காக நான் ஆசிரமத்திற்குள் சென்றேன். என்னைக் கண்டதும் சுவாமிகள் ஆச்சரியத்தோடும் ஆழ்ந்த உணர்வோடும் நீங்க எப்பப் பார்த்தாலும் நான் கட்டறது ராஜராஜன் பெரிய கோயில் மாதிரின்னு சொல்லிக்கிட்டு இருக்கீங்க. ராத்திரி டி.வி. யிலே ராஜராஜனின் பெரிய கோயிலைக் காட்டினாங்க. அப்பா! என்ன கட்டுமானம். அதிலே இருக்கிற தூணின் ஒரு தூசுகூட நம் கோயிலில் இல்லே... என்றார்.

"டி.வி.யிலே எங்கப் பாத்தீங்க" என்றேன். "டிஸ்கவரியிலே போட்டாங்க" என்றார் சாமி.. டிஸ்கவரியில் காட்டப்பட்ட பிரமிடுகள் கிளியோபாட்ரா நிகழ்ச்சிகளைப் பார்த்து நான் பிரமித்துப் போயிருக்கிறேன். எவ்வளவு முயன்றும் மறுபடியும் டிஸ்கவரியில் சுவாமிகூறிய அந்த இராஜராஜனின் பெரியகோயில் நிகழ்ச்சிகளை என்னால் பார்க்க முடியவில்லை.

தமிழ் நாட்டின் இரண்டாயிரம் ஆண்டுகளின் நடப்புக்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால்...

நிற்பது ஒன்றே ஒன்றுதான் அது கோயில்கள்

நிற்கும் ஆள் ஒரே ஒருவர்தான்

அவர் பேரரசன் இராஜராஜன்.

கோயிலை மையமாக வைத்த வாழ்க்கை முறையும், தமிழை மையமாக வைத்த பண்பாட்டு முறையும்தாம் தமிழ் நாட்டில் இதுவரை ஆயிரம் ஆண்டுகளும், இனிமேல் வரப்போகும் ஆயிரமாயிரம் ஆண்டுகளும் நிலைபெறும்படிச் செய்த மாமன்னன் இராஜராஜன்தான்.

மாமன்னன் இராஜராஜன் மட்டும் இல்லையென்றால், இந்த இரத்தினகிரி, ஆர்க்காடு, வேலூர், சோளிங்கர், குடியாத்தத்திலிருந்து கர்நாடக எல்லைவரை, காஞ்சி மாநகரம், தென் ஆர்க்காடு மாவட்டம் முன்பு தொண்டை நாடு என்று வழங்கப்பட்ட, பரந்த தமிழர் வாழும், தமிழ் வழங்கும் பகுதி முழுவதும்.

இன்று சித்தூர், திருப்பதி, திருக்காளத்தி முதலான தமிழ்ப்பகுதிகள் தெலுங்கர்களின் ஆளுகைக்கும், தெலுங்கின் ஆக்ரமிப்புக்கும் போய் விட்டதுபோல், ஆட்பட்டும் அடிமைப் பட்டும் போயிருக்கும் நாமெல்லாம் தெலுங்கை 'மாட்லாடிக்' கொண்டிருப்போம்.

இப்போது தமிழ் நாட்டின் மேலே முதலில் கூறிய பகுதிகளில் எல்லாம் தெலுங்கை மாட்லாடிக் கொண்டுத் தங்களைத் தெலுங்கர்களாகவே நினைத்துக் கொண்டு: தமிழிடமும் தமிழர்களிடமும் கும்பல் கும்பலாக குரோதமும் விரோதமும் பாராட்டிக் கொண்டு, தெலுங்குப் பெயரால் அரசியல் கட்சியையும், சமுதாயக் கூட்டமைப்பையும் உருவாக்கித் தமிழர்கள் எதிர்ப்புணர்வையும், தமிழின்மீது எதிர்ப்புணர்வையும், இந்தத் தமிழ்நாட்டில் உருவாக்கி, அவைகளைத் தமிழர்கள் எதிர் கொள்ளும் படிச்செய்யும் எல்லோருமே பச்சைத் தமிழர்கள்தாம். இவர்கள் தெலுங்கர்களாக - வடுகர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள்.

தெலுங்கு குலகாலன்

இராஜராஜனின் நாற்பது சிறப்புப் பெயர்களில் ஒன்று தெலுங்கு குலகாலன் என்பது. இராஜராஜன் என்ற சிறப்புப் பெயரைப் போலவே கல்வெட்டுகளில் பதிக்கப்பட்டுள்ள முக்கியமான சிறப்புப் பெயர்களில் இதுவும் ஒன்று. நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரெட்டி பாளையத்துக்

கல் வெட்டில் இராஜராஜனது (கி.பி. 993) ஆட்சிப் பிரதிநிதியான மும்முடி வைதும்ப மகராசன், தான் செய்த தானத்தைக் குறிக்கும் கல்வெட்டில் தான் தெலுங் குலகாலன் என்றும் விருதுப் பெயரில் முதன் முதலில் இராஜராஜன் குறிக்கப்பட்டுள்ளான்

இரத்தினகிரி - திருவலம் எல்லையில் தெலுங்கரின் ஆக்ரமிப்பு,

தமிழ்நாடு முழுவதும், வேங்கடம் வரை தமிழர்களின் ஆட்சியில் இருந்தது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" தமிழ் பேசம் நல்ல உலகம் என்று தமிழ்நாட்டின் பரப்பளவையும் எல்லைகளையும் தொல்காப்பியம் என்னும் மிகப்பழைய தமிழ்நூல் கூறுகிறது. தமிழ்கூறும் என்றால் தமிழ் பேசப்படும் என்று அர்த்தம். உலகம் என்பதற்கு நிலப்பகுதி; நாடு என்ற அர்த்தங்கள்.

இந்தப் பரந்த நாட்டைச் சேர, சோழ பாண்டியர்கள் என்னும் மூன்று பேரரசர்களும், மற்றும் பல சிற்றரசர்களும் ஆண்டு வந்தனர். வேங்கடம், காளத்தி, சித்தூர், திருத்தணி ஆகிய பல பகுதிகள் சோழ நாட்டின் வடஎல்லைப் பகுதிகளாக அமைந்திருந்தன.

12வது கி.மீ தொலைவில் இரத்தினகிரியின் பாலாற்றங்கரையில் ஆர்க்காடு நகரம் அமைந்துள்ளது. இது சோழர்களின் இரண்டாம் தலைநகரமாக 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சங்ககாலத்திலேயே அமைந்திருந்தது.

இது பற்றிய செய்திகளைச் சங்கநூல்களில் ஒன்றினை குறுந்தொகையில் பரணர் என்னும் சங்ககாலப் பெரும் புலவர் பாடியுள்ளார்.

வடுகர்கள்.

சங்கப் பாடல்களில் வடுகர்கள் என்ற ஓர் இனம் வாழ்ந்தது பற்றிய செய்திகள் பாடப்பட்டுள்ளன. இவர்கள் கோதாவரி கிருஷ்ணா நதிகளுக்கு இடையே வாழ்ந்தவர்கள். அதனைப் பல அரசர்கள் ஆண்டுவந்தார்கள். இந்த மன்னர்கள் வடுகர் என்ற பொதுப் பெயரில் அழைக்கப்பட்டனர்.

பல்லவர்களின் காலத்தில் சாளுக்கியர் என்ற இனப்பெயரையும் பெற்றிருந்தார்கள்.

ஆக்ரமிப்பாளர்கள்:

இவர்கள் எப்போதும் தமிழ் மண்ணை ஆக்ரமிக்கும் கொடிய மண்ணாசை பிடித்தவர்களாக இருந்தார்கள்.

கல்கி திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுடைய "சிவகாமியின் சபதம்'' என்ற நூலில் இதைத் தெளிவாகக் காட்டுகிறார். கல்வெட்டுகளிலும் இந்தச் செய்திகள் உள்ளன.

இதனைத் திரு. சாண்டில்யனின் “ராஜதிலகம்” என்னும் நாவலிலும் “மன்னன் மகள்” என்னும் நாவலிலும் மேலும் தெளிவாகக் காணலாம். பல்லவ மன்னர்களான நரசிம்மர், சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி தமிழ்நாட்டின் மீது படையெடுத்து நடத்திய கொடூரத்துக்காக: அவன் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, அதனை வென்று அழித்து, அதன் தலைநகரான வாதாபியை நெருப்பிட்டுக் கொளுத்தித் தமிழ் மக்கள் பட்ட பெரும் கொடூரங்களுக்கு ஈடு செய்தார். செய்ய வேண்டி நேரிட்டது.

நரசிம்மவர்மருக்குப் பிறகு தமிழ் நாட்டைப் பரமேஸ்வரவர்மன் ஆட்சி செய்தபோது, வடுகு சாளுக்கிய மன்னன் விக்ரமாதித்தன் காஞ்சி வென்று , அதனை முற்றுகையிட்டுப் பாண்டிய நாடு வரை தொண்டை நாடு முழுவதையும் கொடுமைப் படுத்தினான்.

இந்த வடுகர்கள் மேலும் வலிமை பெற்றுப் பல்லவர்களை அழித்துச் சோழநாட்டுப் பகுதிகளைக் காஞ்சிபுரம் வரை ஆக்ரமித்துத் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் மக்களின் நல்வாழ்வையும் அழித்து அநியாயம் செய்தார்கள்.

பல்லவர்கள் வலிமை குன்றிய காலத்தில் சோழர்கள் சிறிது சிறிதாகத் வலிமை பெற்று இந்த வடுகத் தெலுங்கர்களிடமிருந்து தமிழ்நாட்டை விடுவிக்கத் துவங்கினார்கள்.

இவர்களில் மிகச்சிறந்தவன் வீரநாராயணன் என்னும் சிறப்புப் பெயர் பூண்ட முதலாம் பராந்தகன். இவனுடைய இந்த வீரநாராயணன் என்னும் பெயரால் அவன் மூத்தமகன் அமைத்த ஏரி வீரநாராயணன் ஏரி. இதுதான் இப்போது வீராணம் ஏரி என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவன் போராற்றல் மிக்க மன்னன். இவன் தன் நாட்டைத் தமிழ்நாட்டின் வடபகுதியான திருத்தணி, திருப்பதி, திருக்காளகத்தி மற்றும் அதைத் தாண்டிய தமிழ்ப்பகுதிகளை எல்லாம் வடுகர்களை வென்று கைப்பற்றினான். அங்கிருந்து கிருஷ்ணா நதிக்கரை வரை ஆண்டு வந்த வடுக இனத்துச் சிற்றரசரை எல்லாம் தோற்கடித்தான்.



அரிஞ்சயன் நினைவுக் கோயில்
- மேல்பாடி கிராமம்

இவன் காலத்தில் இரத்தினகிரி, ஆர்க்காடு, வேலூர் உள்ளிட்ட தொண்டை மண்டல நாடுகளை ஆக்ரமித்துக் கொள்ளத் தெற்கே பாண்டிய நாட்டிலிருந்து பாண்டியனும், சிங்கள மன்னனும் சேர்ந்து படையெடுத்து வந்தார்கள்.

வேலூரில் இந்தப் போர் நிகழ்ந்தது. இது நடந்த ஆண்டு கி.பி. 912. பாண்டியனும் சிங்கள மன்னனும் துரத்தியடிக்கப்பட்டனர். இந்தச் செய்தி இரத்தினகிரிக்கு 25 மைல் தொலைவில் திருப்பாற்கடல் என்னும் ஊரில் உள்ள கோயில் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் சோழன் பராந்தகனின் வயது முதிர்ந்த காலத்தில் கிருஷ்ணா நதியை அடுத்து ஆண்டு வந்த மூன்றாம் கிருஷ்ணன் என்னும் வடுக அரசன் பராந்தகனால் தோற்கடிக்கப்பட்ட சிற்றரசர்களையும் மற்றும் சில அரசர்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு தமிழ்நாட்டின் சோழ மன்னர்கள் மீது போர் தொடுத்தான். அப்போது, இன்று வீராணம் ஏரி என்று சொல்லப்படும் அப்போதைய வீரநாராயணன் ஏரியை வெட்டி நாட்டின் வேளாண்மை வளத்தைப் பெருக்கியவனும், பெரும் போராற்றல் மிக்கவனும் பராந்தகனின் மூத்த மகனும், அவனுக்குப் பின்

முடிசூட்டப் பட்டவனுமாகிய இராஜாதித்தன் வடஎல்லைப் படைகளின் தலைவனாக இருந்தான்.

கிருஷ்ணனின் தலைமையில் வந்த பெரும் படைக்கும் இராஜாதித்தன் தலைமையேற்று நடத்திய சோழற்படைகளுக்கும் காஞ்சி புரத்திற்கு வடக்கில் 35 மைல் தொலைவில் இருக்கும் தக்கோலம் என்னும் ஊரின் அருகே பெரும்போர் நடைபெற்றது.

அந்தப் போர் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் கல்கி தன் மகா வரலாற்று இதிகாசமாகிய பொன்னியன் செல்வனில் மிகச் சிறப்பாக எழுதுகிறார்.

போரில் இராஜாதித்தன் கொல்லப்பட்டதும், வெற்றியில் வெறி கொண்ட இராஷ்டிரகூடன் தமிழ் நாடு முழுவதையும் கைப்பற்றதுவங்கினான். காஞ்சிநகர் முதல் திருத்தணி, திருப்பதி, காளத்தி முதல் சித்தூர்ரையும், வள்ளி மலையையும் தாண்டி, இப்போது மேல்பாடி என்று சொல்லப்படுகின்ற பொன்னி நதியின் கரையில் உள்ள ஊர் வரையும் வந்து விட்டான்.

அது இரத்தினகிரிக்குப் பதினெட்டு பத்தொன்பது மைல் தொலைவிலும் திருவலத்துக்கு பதினாறு பதினேழு மைல்களக்குப் மட்டுமே. அப்பால் உள்ள இடமாகும். இதற்குள் தலைவன் இறந்த அதிர்ச்சியில் தோல்வியைக் கண்ட சோழர் படைகள் தெளிவடைந்து திருவலத்தில் ஒன்று திரண்டு இராஷ்டரக்கூடத் தெலுங்கர்களை எதிர்த்து முன்னேற விடாமல் தடுத்தன.

பத்து ஆண்டுகள் தன் பெரும் படைகளை அங்கு குவித்துக் கொண்டு தமிழ்நாட்டின் உள்ளே புகுந்து, தமிழ்நாட்டையே ஆக்ரமித்து ஆட்சி செய்ய அங்கேயே தன் ஆட்சியைச் செலுத்திக் கொண்டு போரை நடத்திக் கொண்டிருந்தான் வடுக மன்னன்.

இந்த காலகட்டத்தில் முதலாம் பராந்தகன் இறந்தபின் அவனுடைய அடுத்தமகன் கண்டராதித்தன் அரசனானான். போரிலோ, ஆட்சியின் அமர்க்களங்களிலோ நாட்டமில்லாமல் கடவுளையும் அமைதியையும்

விரும்பும் மனம் கொண்டவன் அவன். அவனுக்குத் துணையாக ஆட்சியை பராந்தகனின் அடுத்த மகனும் கண்டராதித்தனின் தம்பியுமாகிய அரிஞ்சயன் நடத்திக்கொண்டிருந்தான். கண்டராதித்தன் மறைந்ததும் அரிஞ்சயன் மன்னனானான். இவன் பெரும் வீரமும் போர் புரிந்து நாட்டைக் காப்பதிலும் நாட்டு எல்லைகளைப் பெருக்குவதிலும் மிகுந்த எழுச்சி கொண்டான்.

தமிழ்நாட்டின் உள் புகுந்து, இத்தனை ஆண்டுகளாக ஆட்சியை அமைத்து கொண்டு பெரும்படைகளுடன் உள்ளே நுழையக் காத்துக் கொண்டு அடிக்கடிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் இராட்டிரகூடர்களோடு கடும் போரைத் துவக்கினான். பெரும் படைக்கும் சிறு படைக்கும் நடந்த போரில் மன்னன் அருஞ்சயன் மேல்பாடிக்கு அருகே போர்க்களத்தில் கொல்லப்பட்டான்.

சுந்தரசோழன்

அரிஞ்சயன் மரணமடைந்ததும் அவனுடைய மகன் இரண்டாம் பராந்தகன் என்று அழைக்கப்பட்ட சுந்தர சோழன் ஆட்சிக்கு வந்தான். இவன் தன் தந்தை அரிஞ்சயனைப் போன்றே பெரும் வீரன். இவனுடைய பிள்ளைகள் தாம் மாபெரும் வீரர்களும், மகோன்னதமான அரசப் பண்புகள் அனைத்தும் நிரம்பியவர்களுமான ஆதித்த கரிகாலனும் இராஜராஜனுமாவர்.

ஆதித்தகரிகாலன்

கல்கியின் மாபெரும் வரலாற்று இதிகாசத்தைப் படித்த மேன்மை மிக்கவர்கள் அனைவரும் ஆதித்த கரிகாலனின் போராண்மையையும் போர்திறத்தையும் அறிவார்கள். 16 வயதிற்குள்ளாகவே, போரிடுவதிலும் போர் நடத்துவதிலும் இணையற்று விளங்கிய அவன் சோழநாட்டின் வடபகுதியைக் கவர்ந்து கொண்டு உருமிய புலியாகப் பதுங்கியபடியும் பாய்ந்தபடியும் இருந்த இராஷ்டிரக் கூடர்களின் படைகளைத் தன் தந்தை சுந்தரச் சோழனோடு இணைந்து போரை நடத்தினான்.

இராட்டிரகூடனின் பெரும் படை சிதைந்து சிதறி கிருஷ்ணா ஆற்றின் கரைக்கு ஓடின. சோழ மன்னன் ஆளுகைக்கு திருப்பதி வரையிலான தமிழ்ப்பகுதிகள் மீண்டன. போரில் தன் மகனின் மாபெரும் திறத்தையும் இயல்பான தகுதியையும் கண்ட மன்னன் சுந்தர சோழன் ஆதித்த கரிகாலனுக்குச் சோழ நாட்டின் வடஎல்லையின் படைத்தலைவன் என்னும் பெருமையும், பெருமதிப்பும் மிக்கப் படைத்தலைவனாக நியமித்தான். பெரும் படைகளோடு அங்கே தங்கி இராட்டிரகூடன் வேங்கடமலைக்கு அப்பால் கிருஷ்ணா நதியின் ஓரத்தில் மட்டுமே ஆட்சியை நடத்தும்படிச் செய்து, அதைக் கண்காணிக்கும் காரியத்தையும் ஆதித்த கரிகாலனிடம் தந்தார்.

ஆதித்த கரிகாலன் வஞ்சகமாக கொலை செய்யப்பட்டான். அதுவும் தொண்டை நாட்டில் இப்போது புகழ் பெற்றதாக விளங்கும் செஞ்சிக் கோட்டை என்னும் பகுதிக்கு அருகிலேயே நடந்தது. இந்த அரசியல் படுகொலையைப் பொன்னியின் செல்வனில் அவ்வளவு அழகாகவும் ஆழமாகவும் மகாபாரதத்தில் நடந்த அரவான், அபிமன்யுவின் கொலைகளுக்கு இணைப்பு தந்து படிப்பவர் நெஞ்சம் அதிர்ந்தும் கலங்கியும், தமிழ் நாட்டுக்கு நேர்ந்த மாபெரும் இழப்பின் பரிமாணத்தைக் காட்டி இருக்கிறார் கல்கி.

இதனால் நாட்டில் மாபெரும் குழப்பம் எழுந்து. சாம்ராச்சியமே அழிந்து, பகைவர்கள் மறுபடியும், தெற்கில் பாண்டியர்களும் சிங்களவர்களும், வடக்கில் சாளுக்கியர்களும் தமிழ்நாட்டை ஆக்ரமிக்கும் கடும் சூழல் தோன்றியது.

மகன் மறைந்த துயரம் ஆற்றமுடியாமல் பேரரசன் சுந்தர சோழன் இறந்தான். கணவனோடு, ஆதித்த கரிகாலன், இராஜராஜனின் தாயாயும் இறந்து போனாள். முறைப்படி பேரரசனாக முடிசூட்டப்பட வேண்டிய இராஜராஜனின் முடிசூடும் நிகழ்ச்சி தடைபட்டது, அவனுடைய சிற்றப்பாவாகிய உத்தம சோழன் என்னும் மதுராந்தகன் முடி சூட்டப்பட்டான். இராஜராஜன் இளவரசனாக 20 ஆண்டுகள் மதுராந்தகனின் ஆட்சியை கவனித்துக் கொண்டு இருந்தான். இந்தக்

காரியத்தில் அவனுக்குப் பெரும் துணையாக இருந்தவன் வந்தியத்தேவன். இராஜராஜன் தமிழ்நாடு முழுவதும் தமிழர்களின் ஆட்சியையும் தமிழ் ஆட்சியையும் நிலைநிறுத்தினான். தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் எப்போதும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த வடுகர்களின் ஆட்சியையும் அரசையும் குஜராத்திற்கும் அப்பால் தடுத்து நிறுத்தினான். சோழநாட்டின் தமிழ அரசின் எல்லையை நீட்டித்து நிலைப்படுத்தி வைத்தான்



கல்கியில் வெளியிடப்பட்ட ஆதித்த கரிகாலன் படைத்தலைமையில் தமிழகத்தின் வடவெல்லை நாட்டுப் பகுதிகள். இதில் இரத்தினகிரி குறிக்கப்பட்டுள்ளது. கல்கி இதழில் வந்த படம். கல்கி இதழுக்கு ஆழ்ந்த நன்றி

இராஜராஜ சோழனின் நிலையான பேரரசின் படம் இங்கே தரப்பட்டுள்ளது.

இந்தப் பேரரசின் வடஎல்லையைக் காக்கும் பெரும் படைவீட்டை இராஜராஜன் திருவல்லத்தில் அமைத்திருந்தான். படைவீடு எப்படி அமைந்திருக்கும் என்று சாண்டில்யன் தன் மன்னன்மகள் என்ற நாவலில் இவ்வாறு கூறுகிறார்.

இரத்தினகிரியும் கீழ்மின்னலும்

இப்போது இரத்தின கிரியிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவு வடக்கில், பாலாற்றங்கரையில் கீழ் மின்னல் என்னும் ஊர் உள்ளது. அந்த ஊரின் எல்லைக்கு உட்பட்டதாகவே இரத்தினகிரி அரசுபட்டாக்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தக் கிழ்மின்னல் கிராமம் மற்றும் இதனோடு சேர்ந்த நாட்டுப்பதியான தொண்டைநாடு முழுதும் கிபி. 1311ல் மாலிக்காபூராலும் 1319ல் அல்ஷாஜியாலும் 1324ல் முகமதுபின் துக்ளக்காலும் தமிழகத்தின்

மீது நடத்தப்பட்ட படையெடுப்பால் ஏற்பட்ட முஸ்லிம்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு ஆளப்பட்டது.

இதற்குப் பிறகு சம்புவராயர்கள் என்னும் பெயர் கொண்ட தமிழ் அரச குலத்தவர் படவேடு என்று இன்று வழங்கப்படும் படைவீடு என்னும் பகுதியில் தலைநகரம் அமைத்து ஆட்சி புரிந்தவர்கள். இவர்கள் வீரமும் அரசியல் திறனும் படைவலிமையும் மிக்கவர்களாக விளங்கினார்கள் இவர்களின் ஆட்சியில் தமிழகத்தின் வடபகுதியான இரத்தினகிரி அமைந்துள்ள கீழ்மின்னல் முதலான ஊர்களையும், ஊர்ப்பகுதிகளையும் நாட்டையும் மீட்டுத் தங்கள் நாட்டோடு இணைத்து ஆட்சி நடத்தினார்கள்.

இதில் வெற்றி கொண்ட சம்புவராயர் என்னும் மன்னனின் கல்வெட்டில் இந்தக் கீழ் மின்னல், வாலாஜாபேட்டை தொத்திமங்கலம் என்னும் ஊர்கள் "அஞ்சினான் புகலிடமாக" விளங்கிய ஊர்கள், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை அந்த ஊர்களில் உள்ள கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. கீழ் மின்னலில் அமைந்துள்ள பெருமாள் கோயிலில் இந்தக் கல்வெட்டு உள்ளது. அஞ்சினான் புகலிடம் என்றால் சுற்றிலும் போர் நடக்கும்போது அதில் பாதிக்கப்படாமல் பெண்கள், முதியோர்கள், இளம் சிறுவர்கள், நோயாளிகள் ஆகியோரைப் போரிடும் நாடுகள் துன்புறுத்தாமல், சில குறிப்பிட்ட ஊர்ப்பகுதிக்குள் அவர்கள் வாழும்படிச் செய்வது. அந்த ஊர்களை, அவர்களின் புகலிடமாக ஆக்குவது அந்த ஊர்களின் எல்லைக்குள் போர்வீரர்களே போகக்கூடாது என்றும், எந்தவிதமான போரும் செய்யக்கூடாது என்றும் உறுதிமொழி எடுத்துக் அதன்படி போர் நடந்துகொள்வார்கள்.



கீழ்மின்னல் ஊரிலிருந்து-

இப்படிப்பட்ட ஊராக முருகன் அருள்பெற்ற இரத்தினகிரி அமைந்த கீழ்மின்னல் ஊர் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே விளங்கியது.

இராஜராஜன் கட்டிய பள்ளிப்படைக் கோயில்

7.11.2001லி நண்பகல் 12.00 மணி மேல்பாடியிலிருக்கும் ராஜராஜசோழனின் பாட்டன் அரிஞ்சயனுடைய பள்ளிப்படை - சமாதிக்கோயிலைக் காண்பதற்கு வேனில் புறப்பட்டுச் சென்றோம்.

நீண்ட நேர பயணத்திற்குப்பிறகு கோயிலை அடைந்தோம். மழைக்காலமாக இருந்ததால் வழியில் இருந்த ஏரிகள் நிரம்பி, வாய்க்கால்களும், வயல்காடுகளும் பசுமையாய் இருந்தன.

ஆங்காங்கே குன்றுகள், மலைப் பாறைகள் ஊர்களுக்கு அருகே இருந்தன. மேல்பாடிக்கு வலது புறத்தில் ஒரு பெரிய குன்று இருக்கிறது. கிழக்குப் பகுதியில் அழகான ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அது பெண்ணை நதி -நீவா நதி என்று சொல்லப்படுகிறது. இது பாலாற்றிலிருந்து பிரிந்து மறுபடியும் திருவலம் பகுதியில் பாலாறுடன் சேரும் பாலாற்றின் ஒருபகுதி.

அதன் கரையில் அருகே சாலையில் இரண்டு பக்கமும் பெரிய ஆலமரங்கள் இருக்கின்றன. உயரமான ஆற்றங்கரை. ஆற்றிலிருந்து ஊருக்குள் செல்லும் வழியில் நிழல் நிறைந்த மரங்கள் அடர்ந்த பாதையின் இடது புறத்தில் அந்தப் பள்ளிப்படை இருக்கிறது.

பிற்கால சோழர்களின் வரலாறு உலக வரலாற்றிலேயே மகோன்னதம் நிறைந்ததாகும். இந்தியா முழுவதையும் ஏறக்குறைய எட்டிப் பிடித்த அசோகன், ஔரங்கசிப் ஆட்சியின் மேம்பாட்டை விட கிரீஸ் மாசிடோனியாவிலிருந்து முதன் முதலில் ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த அலெக்ஸாண்டர் ஆட்சியைக் காட்டிலும் அழகும் எளிமையும் பொலிவும் மக்களின் பூரிப்பும் நிறைந்த மாபெரும் சாம்ராஜ்ஜியம், மாபெரும் சாம்ராஜ்ஜியமாக விளங்கியது சோழர்களுடைய சாம்ராஜ்யமாகும்.

429 ஆண்டுகள் அந்தச் சோழ பரம்பரை தமிழகம் முழுவதையும், இலங்கையையும், வட இந்தியாவில் விந்தியமலை வரையிலும் கடல் கடந்து ஆயிரம் தீவுகள், முதல் இன்று இந்தோனேஷியா என்று சொல்லப்படும்

ஜாவாசுமத்திரா நாடுகள் வரை பரவி, அந்தந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் ஆட்சியை அழகாகச் செய்து வந்தது.

பாலைவனத்துக் கொடூரமான அரேபியர்கள் கடற்கொள்ளைக் காரர்களாக, கண்ட மனிதர்களையெல்லாம் அவர்கள் தின்னுகிற ஆடு, ஒட்டகம், பசுக்கள் இவைகளின் மாமிசம் போலத் துண்டுதுண்டாடிய வெறியர்களை ஒரு 200 ஆண்டுகள் பரந்த கடற்கரையின் பக்கமே தலையெடுக்கவிடாமல் செய்து நாட்டு மக்களைக் காப்பாற்றிய ஆட்சி அது.

ஒரிசா வரையிலும் தன் ஆட்சியை நிலைநிறுத்திக் கங்கை வரையிலும் படையெடுத்துச் சென்று, அரசர்களை வென்று, இமயமலையில் தன் அதிகாரத்தைப் பதிய வைத்த ஆட்சி. அது கங்கையிலிருந்து ஆயிரம் பொற்குடங்களில் கங்கை நீரைக் கொண்டுவந்து வெற்றி கொண்டாடி கங்கை கொண்ட சோழபுரமும், சோழக் கங்கையும் உருவாக்கிய ஆட்சிஅது.

இந்த வம்சம் ஏற்படுத்திய கோயில் பண்பாடுதான் இன்று ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளும் தமிழ்நாட்டின் தேசிய பாரம்பரியமாக வேரூன்றிவிட்டது. இந்தப் பரம்பரையில் ஒரே ஒரு மன்னன் மட்டும் எழுபது கோயில்கள் கட்டி இருக்கிறான். தஞ்சாவூர் இவர்களது பெரும் தலைநகரமாக விளங்கியது. அடுத்த தலைநகரம் காஞ்சிபுரமாக அமைந்தது. பிறகு அவர்கள் எந்தக் காலமும் போரிடுகின்ற போர்க்களமாகவும், படைகளை குவித்து, பிரித்து பயிற்சி அளிக்கும் படைவீடாகவும் திகழ்ந்தது. இந்தத் தொண்டை மண்டலப்பகுதி.

பொதுவாகத் தொண்டை மண்டலம் என்றும், ராஜராஜசோழன் காலத்திலிருந்து ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்றும் பெயரமைந்த இந்தப் பகுதியில் மகோன்னதமான சோழமன்னர்கள் போரிட்டு உயிர் துறந்து இருக்கிறார்கள்.

தக்கோலத்தில் ராஜாதித்தனும், மேல்பாடிக்கு அருகே அரூரில் ராஜாதித்தன் தம்பியும், மாபெரும் மன்னன் சுந்தர சோழனின் தந்தையும்

பிரம்மாண்டமான மன்னர் மன்னன் ராஜராஜனின் பாட்டனுமாகிய அரிஞ்சய சோழ தேவனும் போரிட்டு அந்தப் போர்க் களத்திலேயே உயிர் துறந்திருக்கிறார்கள். இந்த அரிஞ்சய மன்னனுக்கு, மன்னன் ராஜராஜன் அமைத்த படைவீடு இந்தப் பொன்னை ஆற்றங்கரையில் உள்ளது.

அவ்வளவு புண்ணியவானும், அவ்வளவு சிறந்த போர்வீரனும், அவ்வளவு சிறந்த நாட்டு நிர்வாகியும், அவ்வளவு மேலான கலைஞனும், தஞ்சையில் 221½ அடி உயரம் உள்ள பெரியகோயில் என்னும் மகா கோயிலை கட்டியவனுமாகிய ராஜராஜனின் காலடிகள் நம் மாவட்டத்தில், நம் ஊருக்கு இருபது மைல் தொலைவில் இருக்கிறது என்பதை அறியும்போதே உடம்பெல்லாம் மெய்சிலிப்பு ஏற்படுகிறது. அதைக் காண்பதற்காக போய்க கொண்டிருக்கிறோம்.

அந்தப் பள்ளிப்படைக்கு எதிரே அரிஞ்சய சோழ தேவனுடைய தந்தை முதலாம் பராந்தக சோழன் கட்டிய சோமநாதேஸ்வர ஆலயமும் உள்ளது. அதன் இரண்டு புறமும் இரண்டு பெரிய அரசமரம் நூறு ஆண்டுகளுக்கும் மேலான வயதை உடைய மிக அழகாக, செம்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

பச்சைக்கற்களால் கட்டப்பட்ட மிகவும் சிறிய கோயில். சோழர்கள் காலத்து கோயிலுக்குள் அமைக்கப்படும் லிங்கம் உள்ளே அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு அடி உயரமும், நல்ல பொருத்தமான கனமும் உள்ள கருப்புக் கற்களால் செதுக்கப்பட்டிருந்தது. அதன் அருகே சென்று தொட்டுப்பார்த்தேன்.

இரத்தினகிரியைப் பற்றி **பாலமுருகனும் அடிமையும்** என்ற நூலை எழுத வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டதால் இரத்தினகிரி இத்தகைய இடத்தின் மையத்தில் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முற்பட்டபோது இந்த கோயில் பற்றிய செய்தி தெரிந்தது. சிதைந்த பழம்பெரும் கோயில்களைச் சிறப்பாகக் கட்டி முடிக்கும் மகானாக விளங்கியவர் திரு. ஏ.என். சேஷாத்திரி அவர்கள். அவர் ஒரு பெரிய மகானாக விளங்கிய திரு சேஷாத்ரி அவர்கள் எழுதிய வேலூர்க்கோட்டை

என்ற நூலில் இது பற்றிய குறிப்பை படிக்க நேர்ந்தது. அவரே எழுதிய செஞ்சிக்கோட்டை என்னும் நூலிலும் இது பற்றி எழுதப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பு.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இந்தக் கோயில் முழுதும் ஐந்தடி உயரத்துக்கு மண் மூடப்பட்டு ஊரின் ஆடுமாடுகள் உள்ளே வந்து மேய்ந்து கொண்டிருந்ததாகச் சொன்னார்கள். அவ்வளவு மண்ணையும் இந்திய அகழ்வாராய்ச்சி நிறுவனம் தன்னிடம் எடுத்துக்கொண்ட பிறகு தூய்மை செய்து அழகாக அமைத்துள்ளது. கற்கள் சரிந்து கிடந்த மண்டபம் முழுவதையும் திரு சேஷாத்ரியின் நிர்வாகத்தின் கீழ், அவர் வேலூர்க்கோட்டையின் முதன்மை கண்காணிப்பாளராக இருந்த காலத்தில் அழகாக புத்தம் புதிய கோயில் போல் கட்டப்பட்டுள்ளது.

அந்தக் கோயிலின் சிற்பங்களின் அமைப்பையும், சிறப்பும் தஞ்சை பெரியகோயிலில் காணப்படுகின்ற சிற்பங்களின் அமைப்போடு ஒத்துள்ளது கோயிலின் கோபுரம் பச்சைக்கற்களால் அமைந்துள்ளது. பல சிலைகள் உள்ளன.

ஒன்றுமே புரியாமல் இருட்டடிப்பு நிலையில் எவ்வளவு பெரிய மாமன்னர்கள் கட்டிய கோயில், அங்கே அவ்வளவு நல்ல பராமரிப்பில் இருப்பதைக் கண்டு மனம் பூரிப்பில் ஆழ்ந்தது.

31. இப்படி ஆயிரம் குடும்பங்கள்!

"நான் கல்யாணம் பண்ணிக் கொண்டதும், என் மனைவியிடம் இருக்கும் குணங்களைச் சுவாமிகள் வரிசையாக எழுதி என்னிடம் கொடுத்தார். "இதுபோல் உன் மனைவி இருப்பாங்க" என்றார். ஏன்னா நான் சுவாமி களிடம் எனக்குக் கல்யாணம் வேண்டாம். நான் ஆன்மீகத்திலேயே இருந்திடப்போறேன்னு சொன்னேன்.

"ஏன் அப்படிச் சொல்றே? கல்யாணம் பண்ணிக்கோ. உனக்கு ஏற்ற பெண் உன் மனைவியா வரும்ன்னு சொன்னார்." ஆனா அம்மா இப்ப பாக்கற பொண்ணுங்களை யெல்லாம் பார்க்கட்டும். வேணாம்ன்னு சொல்லாதே"ன்னார். சுவாமி சொன்னா சொன்னதுதான்.

"ஏன் சுவாமி இப்படி அம்மா பார்க்கறது பார்க்கட்டும்ன்னு சொன்னார்ன்னு அப்போ எனக்குத் தெரியலே! கொஞ்சநாள்லே தெரிஞ்சது. அம்மாவுக்கு நெஞ்சிலே தீரமுடியாத- தீர்க்க முடியாத நோய். அதுவும் மூன்றாவது ஸ்டேஜ்லே இருந்த போதுதான் கண்டுபிடிச்சோம். அம்மாவின் திருப்திக்காக அவர் பார்க்கற பெண்களை அவர் பார்க்கட்டும்னு சொல்லியிருக்கார் சுவாமி என்று அப்பத்தான் புரிந்தது.

அப்புறம் ரெண்டு மூணு மாசத்துக்கெல்லாம் அம்மா காலமாயிட்டாங்க. அதற்கு முன்பே இந்த

என்மனைவியைப் பார்த்து, சரி இவங்களைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு சொன்னாங்க. சொன்ன கொஞ்ச நாளிலே - பேசமுடியாத - நினைவில்லாத நிலைக்கு ஆளாயிட்டாங்க.

சுவாமி, "உனக்குப் பெண் வடநாட்டிலிருந்து வருவாங்க"ன்னு எழுதிக் காட்னாரு. அப்படித்தான் இந்த அம்மாவும் வந்தாங்க என்று அவர் மனைவியும் அவர் குடும்பமும் தன் குடும்பத்திற்கும் அறிமுகமான நிகழ்ச்சிகளையும் டாக்டர் சுகுமார் சொல்லிக்கொண்டே வந்தார்.

நான் அவர் வீட்டில் சோபாவில் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். காபி கொண்டு வந்து கொடுத்த அவர் துணைவியார் அவர்களுடைய கல்யாணம் குறித்து நாங்கள் அந்த இளம்பிராயத்து நினைவுகளைப் பேசிக்கொண்டிருந்தபோது எங்களுக்குப் பின்னால் மகிழ்ச்சியோடு நின்றுக்கொண்டிருக்கிறார்.

நான் எல்லோரையும் கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ளும் என் இயல்பில் டாக்டரைக் கேட்டேன். "உங்க துணைவியாருக்கு சுவாமி எழுதிக்காட்டிய அத்தனை நல்ல குணங்களும் இருக்கா?" அவர் துணைவியார் இதைக்கேட்டு மகிழ்ச்சியோடு சிரித்தார். டாக்டர் ஆனந்தமாக என்னைப் பார்த்தபடி, "பின்னே, அப்படியே இருக்குது. எல்லா நல்ல குணங்களும் இருக்கு. இப்ப சாமி சொல்வார், "அப்ப சொன்னனே இப்பப் பார்த்தியா"ன்னு சிரிப்பார் என்றார்.

எல்லோருக்கும் பெரிய மகிழ்ச்சி. பிறகு கொஞ்ச நேரம் பொறுத்து டாக்டர் சொன்னார். நீங்க இப்ப சாமி எழுதிக் கொடுத்தது சரியா இருக்கான்னு கேட்கும்போது எனக்கு இந்த நினைவு வருது. ஒரு முனிவர் இன்னொருத்தருக்குச் சொல்லிக் கொடுத்தாராம். இந்தப் பேரு கடவுளுடைய மந்திரம், இத மூணு முறை சொன்னா உனக்கு மோட்சம் கிடைச்சிடும்ன்னு. அதைக் கேட்டுக்கொண்டிருந்த இன்னொரு மகான் அவர்கிட்டே கோபிச்சிக்கிட்டாராம். கடவுள் மந்திரம் இது. இத ஒரு தடவை சொன்னாலே முக்தி கெடச்சிடும் நீ மூணு தடவை சொல்லுன்னு சொல்றயேன்னு அவருக்குச் சாபம் குடுத்தாராம். அப்படி சாமி

சொன்னாலே அப்படியே பலிக்கும். எழுதி வேற குடுத்திருக்கார். அத நீங்க சரியா நடந்ததான்னு கேக்கறீங்களே. நீங்க இதைக் கேட்டதும் எனக்கு அந்தப் புராண நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது" என்றார்.

நான் சொன்னேன். அந்த ரிஷி மூணு தடவை சொன்னார்ன்னா அவங்க அப்பாகிட்டதான் சொன்னார். மகன் இதை இன்னொருத்தருக்குச் சொன்னபோது அவங்க அப்பா, அவர் ஒரு மகரிஷி. அவர் வெளியே போயிருந்தார். அவர் ஆசிரமத்திற்கு வந்ததும் அவர் மகன் தான் இப்படிச் சொன்னதைத் அப்பாவிடம் சொன்னார். அப்பாவுக்கு அடக்கமுடியாத கோபம் வந்துட்டது.


ஒருமுறை ஒருத்தன் கடவுள் பெயரைச் சொன்னாலே அவனுக்கு மோட்சம் கிடைச்சிடும். உனக்கு எவ்வளவு நம்பிக்கைக் குறைவு இருந்தா மூணுமுறை சொல்லுன்னு சொல்லியிருப்பே. நீ நீசத்தனமானவன். அடுத்த பிறவியில் நீ நீசனாக, நீசன் என்றால் உடல்நாற்றம் அடிக்கிறவனாகப் பிறப்பாய் என்று சாபம் கொடுத்தார் அப்படிப் பிறந்தவன்தான் இராமாயணத்திலே வரும் குகன்னு சொல்லுவாங்க' என்றேன்.

டாக்டர் மகிழ்ச்சியோடு 'அப்படீங்களா' என்றார்.

நான் சுவாமி பற்றி இந்தச் சுண்டெலிக் கேள்வியை இவரிடம் கேட்டதுக்கே இப்படிக் கோபத்திலே கொதிக்கிறார். நல்லவேளை என் பெருச்சாளிக் கேள்விங்களையெல்லாம் நான் அவரிடம் கேட்கும்போது இவர் கூட இல்லாமல் இருந்தாரே என்று நினைத்துக்கொண்டேன்.

பல செய்திகள் சுவாமிகள் பார்த்தே, நினைத்தே நான் புரிந்துகொள்ளுகிறேன். என் நிலைக்கு அது போதும். ஆனால் அது பற்றிப் புத்தகத்தில் எழுதுகிறேன். படிப்பவர்களுக்கு அது நம்பிக்கையைத் தரவேண்டும் - அதனால் இப்படிப்பட்ட கேள்விகளை நான் கேட்க வேண்டி இருக்கிறது. இது பெரும்பாலும் எனக்காக அல்ல. புத்தகம் படிப்பவர்களுக்காக. என் கேள்விகளுக்கெல்லாம் சுவாமி புன்னகை மாறாமலேயே, கேள்விகளுக்கு ஏற்பச் சிரித்தபடியும் அல்லது ஆழம் காணமுடியாத அமைதிக்குப் போனபடியும், ஓர் அன்பான தாய் - தன் சின்னக்குழந்தைக்குச் சொல்வதுபோல் பதில் சொல்வார்.


இப்படி ஆயிரம் குடும்பங்கள்



சுவாமிகள் அருள் தவழும் காட்சி. தன் அன்பான மூன்று
தலைமுறை பக்தர்களுடன் - நூலாசிரியரின் குடும்பம்.




முதன் முதலில் சுவாமிகளுக்கு
மண்டபம் கட்டித் தந்த குடும்பம்.



தவத்திரு. சுவாமிகளுடன் பெங்களூர்
திரு. முனுசாமி ரெட்டியார் அவர்களின் குடும்பம்.




தவத்திரு. சுவாமிகளுடன் திரு. கிருஷ்ணன், திருமதி சாந்தா கிருஷ்ணன் அவர்கள்.



தவத்திரு. சுவாமிகளுடன் திரு. எம்.கே. ராதா அவர்களின் குடும்பம்.



தவத்திரு. சுவாமிகளுடன் திரு. எம்.கே. ராதா அவர்களின் மகன் டாக்டர். சுகுமார் அவர்கள்.



தவத்திரு. சுவாமிகளுடன் திரு. எம்.கே. ராதா அவர்களின் பெயரன் திரு. குமரன் அவர்கள்.



குடமுழுக்கு விழாவுக்கு வருகை தந்த அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. ராமசாமி மற்றும் இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்திரசேகரன்.



குடமுழுக்கு விழாவுக்கு வருகை தந்த தமிழக அரசு கைத்தறித் துறை அமைச்சர் மாண்புமிகு வடிவேலு மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு. மோகன்தாஸ் ஐ.ஏ.எஸ் ஆகியோருடன் சுவாமிகள்.



குடமுழுக்கு விழாவில் ஊரன் அடிகளாருடன் சுவாமிகள்.



குடமுழுக்கு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த மெய்யன்பர்கள்.

















சைவ சித்தாந்தப் பெருமன்றம்
95 ஆண்டு விழா


























திறப்பு விழா




















சுவாமிகளிடமிருந்து இரத்தினகிரி வரலாற்று நூலினை வேள்வி
பூசையில் வைத்துப் பெறுகிறார் நூலாசிரியர் பேராசிரியர்
திரு ஏ.சுப்பிரமணியன் உடன் கட்டிட வல்லுனர் திரு பி. குருசாமி.



விழாவில் கலந்துகொண்ட மெய்யன்பர்கள்.



திரு கௌரிசங்கர் இ.ஆ.ப சிறப்பு ஆணையர் & ஆணையர், இந்து
சமய அறநிலையத் துறை, சென்னை - குடமுழுக்கு விழாவில்
கலந்துகொண்டு சிறப்பித்தார்



குடமுழுக்கு விழாவில் கலந்துகொண்ட முன்னாள்
சட்டமன்ற உறுப்பினர் ஆர். காந்தி அவர்கள்










INDIA



INDIA






CANARA BANK



















குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்ட வாஸ்து விஞ்ஞானி டாக்டர். வை. கணபதி ஸ்தபதி, சட்டிட வல்லுநர் திரு பி. குருசாமி, சிற்பக்கலைஞர் திரு. பி. பெருமாள் மற்றும் திரு மது (எ) செல்வரத்தினம் அவர்களுடன் சுவாமிகள்





சிவாச்சாரியப் பெருமக்களுடன் கோபுர விமானத்தில் தங்கக்கலசம் ஸ்தாபனம் செய்ய புறப்பாடு.



சுவாமிகளுடன் சித்த மருத்துவர் டாக்டர். ஆனந்தகுமார் அவர்கள்











17 ஆண்டுகளாக மூலவர் கல்தேரில் காட்சி.



இக்கருவறையினை கலைவண்ணமுடன் வடித்த மயன் பரம்ப
சிற்பி பெருமாள் தங்கக் கலசத்தை ஸ்தாபனம் செய்கிறார்.



இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் அலுவலர்கள் - குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டனர்.

சில நேரத்தில் அந்த நிகழ்ச்சிகளின் வேகச் சுழற்சியில் சுழன்றுக்கொண்டே மிகமிக வேகமாகச் சொல்வார். அதன் ஆழத்தைப் புரிந்துகொள்ள நான் திணறுவேன்.

அதைப்பார்த்துவிட்டு 'ஹாங்' என்று சொல்லிக்கொண்டே அன்போடு எழுதிக்காட்டுவார். அந்த எழுதிக்காட்டுவதைக் கூட நான் சரியாகப் புரிந்துகொண்டேனே என்று என்னை நான் சரிப்படுத்திக்கொள்ள சுவாமி சொல்லியும், எழுதியும் காட்டியதை மறுபடியும் நான் கொஞ்சம் விரிவாக எழுதிகொடுப்பேன் அவரிடம். "சரியா இருக்கு" என்று மகிழ்ச்சியில் தலையை ஆட்டுவார்.

நான் அதை எழுதியிருக்கும் முறையைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைவார். இந்த நிகழ்ச்சியைப் காணக் கண்கோடி வேண்டும்.

சுவாமிகளிடம் டாக்டர் கொண்டிருக்கும் பக்தி என் மனத்தை மகிழவும், நெகிழவும் செய்தது.

உண்மையில் இப்படிப்பட்ட ஒருவரை சந்தித்ததற்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். நானாக யாரையும் போய் தானாகச் சந்திப்பது என்பது என் வாழ்க்கையில் பெரும்பாலும் இருப்பதில்லை. இதே டாக்டர் இருபது ஆண்டுகளுக்கு மேலாகச் சுவாமிகளிடம் வந்துக்கொண்டு இருக்கிறார்.

நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இவரிடம் நான் பேசியது கூட இல்லை.

இவர் தந்தை திரு. எம்.கே. ராதா அவர்கள் புகழ்பெற்ற ஒரு நடிகர் என்பதோடு, சுவாமிகளிடம் அடிக்கடி வரும் மிக ஆழ்ந்த பக்தர் என்பதாலும், சுவாமிகளிடம் அவருக்கிருக்கும் அன்பும், மரியாதையும் கண்டு அவரிடம் என் மனம் சென்றது. அவர் முகம் அந்த முதிய வயதிலும் இரண்டு வயது மகிழ்ச்சி பொங்கும் சிரிப்பு மயமான குழந்தை முகமாகவே இருக்கும். சிறுவயதிலிருந்து நாடக நடிப்பில் ஊறியதாலோ என்னவோ அந்தச் சிரிப்பு முகத்தின் மீது எப்போதும் பொங்கியபடியே இருக்கும். ஆனால் இப்போது டாக்டரைப் பார்ப்பதற்காக ஒரு வாரமாகப் பெரும்

முயற்சி செய்துக்கொண்டிருந்தேன். ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை காலை நேரத்தில் ஓய்வாக இருப்பேன். வாருங்கள் என்றார். வருவதற்கு முதல்நாள் இரவு போன் செய்தால் இரத்தினகிரி கோயிலிலே கும்பாபிஷேக யாகசாலை கால் நடறாங்க நாங்க போகிறோம் .என்றார்.

சரி போய் வாருங்கள்.

மறுநாள் சாயங்காலம் வந்திடுவோம்.

நீங்களும் சாயங்காலம் வந்துடுங்களேன் என்றார். அவ்வளவு இனிமையாக மறுநாள் அவர் வீட்டுக்குப் போக நானும் பத்திரிக்கை நண்பர் ஒருவரும் புறப்படுகிறோம். அந்த நேரத்தில் போன் செய்தி வருகிறது. டாக்டர் இன்னும் இரத்தினகிரியிலேயே இருக்கிறார். நீங்கள் வரும் நேரத்திற்குள் அவர் வீட்டிற்கு வரமுடியாது. உங்களுக்குத் தகவல் சொல்லும்படி போன் செய்தார். உங்களுக்கு நேராகத் தகவல் சொல்ல உங்கள் ஆர்க்காடு வீட்டிற்குப் போன் செய்தாராம். இங்கே சென்னை வீட்டில் இருப்பதாகச் சொன்னார்களாம். இங்கும் நீங்கள் கிடைக்கவில்லையாம். என்னிடம் சொல்லி தகவல் சொல்லிடச் சொன்னார். வருத்தப்படுகிறார்கள் என்ற செய்தியை அவர் மகன் சொன்னார். நல்லது செய்தி கிடைத்துவிட்டது. மறுபடியும் மறுநாள் இரவு நிச்சயம் வந்திருப்பார் என்று வீட்டிற்குப் போன் செய்தேன்

இத்தனை முறை இவரைத் தேடி நான் வந்ததற்குக் காரணம், சுவாமிகள் மலையில் முருகனின் அடிமையாக அமர்ந்த ஆண்டிற்கு அடுத்த ஆண்டிலிருந்து சென்னை மருத்துவக் கல்லூரியில் முதலாண்டு மாணவராகப் படித்துக் கொண்டிருந்த, அந்த இளம்பருவத்திலேயே சுவாமிகளிடம் பெரிதும் ஈர்க்கப்பட்டு அவரிடம் வந்துவிட்ட நிகழ்ச்சியால்தான்..

"வெள்ளிக்கிழமை மாலையில் கல்லூரி முடிந்ததும், என் நண்பரின் விடுதி அறைக்குப்போய் குளித்துவிட்டு, அங்கே எப்போதும் தயாராக ஒரு செட் ஆடை வைத்திருப்பேன். அதை அணிந்து கொண்டு, இரத்தினகிரிக்குப் புறப்பட்டு விடுவேன். இரவு ஒன்பது மணிக்கு

இரத்தினகிரிக்குச் சுவாமிகளிடம் வந்து விடுவேன். இங்கே சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் தங்கிவிட்டு திங்கட்கிழமை விடியற்காலையில் சென்னை புறப்படும் 4.30 மணி பஸ்ஸில் புறப்பட்டு கல்லூரி வகுப்பிற்குப் போய்விடுவேன். விடுமுறைக் காலங்களில் சுவாமிகளுடன்தான் இருப்பேன். சிலகாலங்களில் இரண்டு மாதங்கள் வரை சுவாமிகளுடன் தங்கியிருந்திருக்கிறேன்." என்றார்.

இங்கே கோயிலில் என்ன செய்வீர்கள்? கோயிலில் மணி அடித்துக்கொண்டும், சுவாமி விபூதி கொடுக்கும்போது அவர்கைக்கு அருகே விபூதி தட்டைத் தூக்கிக் கொண்டும் மற்றும் என்னென் வேலைகள் அங்கே உண்டோ, என்னென்ன வேலைகள் என்னால் செய்ய முடியுமோ அவைகள் எல்லாவற்றையும் செய்வேன். சாமிக்கு வரும் மணியார்டர், கடிதங்கள் குறித்து நோட்டில் எழுதி வைப்பேன். இதுபோன்ற வேலைகளைச் செய்தபடியே இருப்பேன்."

எங்களுக்கிடையில் புரிந்துகொள்ளும் பழக்கம் ஏற்பட்டபோது, சுவாமிகளோடு அவருக்கிருக்கும் ஆரம்பகால வாழ்க்கையும், சுவாமிகளின் ஆரம்பகாலப் போட்டோக்கள் அவரிடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் அவைகளைப் பற்றி அவரிடம் கேட்டேன். தன்னிடம் நல்ல போட்டோ ஆல்பம் இருப்பதாகச் சொன்னார். மேலும் சுவாமிகளைப் பற்றிய பழங்காலச் செய்திகள் நிச்சயம் அவரிடம் இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. அதனாலேயே அவரிடம் நான் அத்தனை முறை வந்தேன். அவர்களும் அந்த நிகழ்ச்சிகளை எழுதவும் உடனுக்குடன் அந்த விவரங்களை அவருக்குக் காட்டிச் சரிபார்த்துக் கொள்ளவும்.

மேலும் விவரங்களைக் கேட்டுக் கொள்ளவும் சுவாமிகளின் அன்றாட வாழ்க்கையை கவனிக்கவும் கோயிலில் ஒருமாதத்திற்கும் மேலாகத் தங்கி இருந்தேன். காலையில் வந்தால் இரவு நெடுநேரம் கழித்தே வீடு திரும்புவேன்.

அந்த நேரத்தில் சிற்பக்கடவுளின் கருணையால் கணபதி சிற்பிகளுக்குத் துணையாக அவர் கூறுகின்றபடிச் சிற்பங்களைச் சிற்பிகளின் குழுவை வைத்துக்கொண்டு அமெரிக்கா முதலான அயல் நாடுகளுக்கும் சென்று கோயில் பணிகள் செய்துவரும் திரு பெருமாள் சிற்பி அவர்கள் புதிய

கோயிலின் வெளிப் புறத்தின் வாயிலின் இரு புறங்களிலும் அவர்செய்து அமைத்துள்ள சுவாமிகளின் சிலைகளுக்கும் மற்றும் கோயில் வெளிச் சுவரில் அமைத்திருக்கும் சிலைகளுக்கும் அழகுச் செதுக்கலைச் செதுக்கிக்கொண்டிருந்தார்.

ஓவியர் திரு தனுசு அவர்கள் புத்தகத்தின் மேல் அட்டைக்காக முருகர் படத்தையும் சுவாமிகளின் வடிவையும் கோயிலின் தோற்றத்தையும் மேலும் புத்தகத்தின் உள்பக்க ஆர்ட் ஓவியங்களையும் அங்கே வந்து வரைந்து கொண்டு இருந்தார்.

கும்பாபிஷேகம் நடக்கப் போகும் கோபுரங்களுக்குப் பொருத்தும் கலசங்கள் மீது 2 கிலோ 300 கிராம் தங்கி மெல்லிய மிக மெல்லிய தகடுகளாக அடிக்கும் வேலையும் அதைக் கலசத்தின் மீது பொருத்தி மெருகு போடும் வேலையும் புதிய கோயில் கதவுகளுக்கு வெள்ளித் தகடுகளைப் பொருத்தக் கதவிற்கு ஏற்றாற்போல் அதில் இருக்கும் மரச்சிற்பங்களுக்கு ஏற்ப வெள்ளித் தகட்டைக் காய்ச்சி சிற்பம் செய்து பொருத்தும் வேலையும்

கோயில் சுவர்களுக்கு வண்ணங்கள் தீட்டும் வேலையும் முகப்பு மண்டபமும், விநாயகர் கோயில் மண்டபமும், முருகனின் பால ஆலயம் எனப்பட்ட சுல்தேர் பீடம் அமைத்து முருகன் அமைந்துள்ள மண்டபமும் மற்றும் கோயில் பகுதிகள் முழுவதும் தரைக்கு வண்ணமயமான கிரேனைட் கற்கள் பதியவைக்கும் வேலையும் நடந்து கொண்டிருந்தது.

அதோடு மட்டுமல்லாமல் அன்றாடம் முருகனின் அதிசயம் அதிசயமான அருள் நிகழ்ச்சிகளும் காட்சிகளும் நடந்து கொண்டிருந்தன. கலசத்திற்குத் தங்கப் பூச்சோ, ஒட்டோ செய்ய 2¼ கிலோ தங்கம் வேண்டும். கும்பாபிஷேக நாளோ வேகமாக நெருங்கிக் கொண்டே வந்து கொண்டிருந்தது. வந்து கொண்டிருக்கவில்லை. ஓடிவந்து கொண்டிருந்தது.

அதுவரை கிடைத்திருந்த தங்கமோ கால்கிலோவிற்குக் கொஞ்சம் மேல் இருக்கும். சுவாமிகளின் மனம் கோயிலுக்கு வெளியே எல்லோரும் பார்க்கும்படி வைத்திருக்கும் அந்தக் கலசங்களைப் பார்க்கும் போதெல்லாம் கொஞ்சம் கவலை கொள்ளும்.

அந்தக் கலசங்களின் அருகில்தான் விரிப்பை விரித்துக் கொண்டு போட்டோ ஆல்பங்களையும், புத்தகங்களையும், பைல்களையும், பேப்பர் களையும் வைத்துக்கொண்டு, நானும் ஓவியரும் மற்றவர்களும் புத்தகம் எழுதும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருப்போம். சுவாமி அடிக்கடி எங்களோடு வந்து உட்கார்ந்து நாங்கள் செய்யும் வேலைகளைப் பார்த்து எங்களுக்குத் தேவையான தகவல்களைச் சொல்லியும், எங்களின் மற்ற தேவைகளையும் கவனித்தபடியே இருந்தார்.

ஒருநாள் இருட்டிய நேரம் சுவாமி அருகில் இருக்கும் அருடைய அறையிலிருந்து வெளியே என்னிடம் வந்து நின்றார். நான் சட்டென்று எழுந்து நின்றேன். சுவாமி கசலங்களைப் பார்த்தபடி மகிழ்ச்சியோடு சொன்னார்.

இன்னிக்கு மத்தியானம் ரெண்டுபேர் வந்தாங்க. பார்த்தாலே பெரியவங்க, பணத்திலே பக்தியிலேன்னு தெரிஞ்சிது. கொஞ்சநேரம் அவங்களோடு பேசிய அவ்வளவு பெரிய செல்வந்தர்களாகவும், உலகவாணிபத்திலே ஈடுபட்டவங்கன்னும் தெரிஞ்சுது. ரொம்ப முருக பக்தர்கள். அவர் இந்தத் தாமிரக் கலசங்களையும் நம்ம புதுக்கோயில் அமைப்பையும் அழகையும் பார்த்திட்டு அவங்களும் அவங்க நாட்லே பெரிய கோயில் ஒண்ணு கட்றாங்களாம்.

ஏன் சாமி இந்தக் கலசங்களைத் தங்கத்திலேயே செய்து போடக்கூடாதா என்று அவர் கேட்டார். நான் சிரிச்சிட்டேன். இதுக்குத் தங்கமுலாம் பூசவே பெரிய கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கேன்னு சொன்னேன். எவ்வளவு தங்கம் ஆகும்னு கேட்டார். சொன்னேன். நான் அந்தத் தங்கம் முழுவதற்குமான செலவை ஏத்துக்கிறேன். எவ்வளவு சாமி செலவாகும்னு கேட்டார். அவரே கணக்கு போட்டார் பத்து லட்ச ரூபாய்க்கு மேலே வந்தது. சுவாமி நான் அடுத்த வாரம் வரும்போது நான் கொண்டுவந்து தர்றேன். எங்க நாடு அமைதியா. நல்ல இருக்கவும், நாங்க கட்டுகிற கோயில் சீக்கிரம் முடியவும் முருகனை நீங்க பிரார்த்தனை செய்யனும் சாமின்னு சொன்னார். என்றார்.

இப்படி நாள்தோறும் அதியங்கள் இந்த முருகன் செய்து கொண்டு இருக்கிறான். இதையெல்லாம் நான் பார்த்தபடி இருக்கிறேன்.

ஒருநாள் கோயில் கட்டுவது, சாமி சிற்பத்தை எப்படிச் செய்தார் என்று ஒருநிமிடம் கூட சுத்தி, உளி, சிலையை விட்டுப் பிரியாத பெருமாள் சிற்பிகளைச் சாமி என்னிடம் அழைத்து வந்தார். "இதபார் இந்தச் சிற்பம் என்னா? இதன் அளவு என்னா? கோயில்லே இத எப்படி அமைச்சாங்க? இது எப்படி? அது எப்படின்னு ஓவியங்களையும் சிற்பங்களையும் பற்றி ஆயிரம் கேள்விங்களைக் கேட்டுகிட்டு இருக்கீங்களே! இத எல்லாத்தையும் செய்யறவரு இவருதான். இவர பிடிச்சிக்கிங்க என்று கையைப்பிடித்து அவரிடம் கொடுத்துவிட்டு, மகிழ்ச்சியோடு சிரித்தபடி ஒரு பெரிய விடுதலை கிடைத்ததுபோல் எழுந்து சென்றுவிட்டார்.

பெருமாள் சிற்பிகளோடு எனக்குக் கிடைத்த சுவாமிகளின் அறிமுகம் என் சிற்பக்கலை தாகத்திற்கும், பெருமாள் சிற்பியின் மூலம் சிற்பக்கலையின் தகவலுக்கும் ஒரு பெரிதும் மகா அமானுமான ஒரு புதிய சிற்பக்கலையின் பரிமாணமாகும்.

அதன்விளைவாக மகாபலிபுரம் அருகே திரு கணபதி சிற்பிகள் நடத்தும் மிகுந்த நான்கு ஏக்கர் பரப்பளவு நிலத்தில் ஏறக்குறைய 100 சிற்பிகளோடு நடத்தும் சிற்பக் கூடத்தின் மாட்சியையும் அதில் உருவாக்கப்படும் சிற்பங்களின் தொழில் நுணுக்கங்களையும் பார்க்கும் பேறு கிடைத்தது.

இவைகளோடு அன்றாடம் வரும் வி.ஐபிக்கள் ஆழ்ந்த பக்தர்கள், எளிய ஏழை பக்தர்களின் குழந்தை மனமும் பக்திகளையும் காணும் பெரிய பேறும் அதனால் மனம் விரிந்து களியும் களிப்பும் கிடைத்தன.

அவைகளை யெல்லாம் நான், முருகன் மடியில் முப்பது நாட்கள் என்ற தலைப்பில் குறிப்புகள் எழுதி வைத்திருக்கிறேன். அந்தக் காலக்கட்டத்தில் டாக்டர் சுகுமாரையும், அவருடைய பெரிய அழகிய முருகபக்தி நிரம்பிய குடும்பத்தவர்கள் பலரையும் அங்கு காணும் காட்சியை முருகன் கொடுத்தான்.

ஒருநாள் மாலை ஐந்துமணி இருக்கும் ஏதோ கேட்பதற்காக சுவாமிகள் அமர்ந்திருக்கும் அறைக்குள் நுழைந்தேன். என்னைப் பார்த்ததுமே மிகுந்த மகிழ்ச்சியோடு எந்தப் புண்ணியவான் இவ்வளவு பணம் இந்தப் பெரிய காரியத்துக்கு கொடுத்ததுன்னு கேட்டீங்களே அந்தப் புண்ணியவான் இவர்தான் என்று மனம் நிறைந்தபடி சுவாமிகளுக்கு அருகே சற்று தூரத்தில் அமர்ந்திருந்த இளைஞர் ஒருவரைக் காட்டினார். மிஞ்சிப் போனால் ஒரு முப்பதஞ்சி வயசுகூட இருக்காது. களையான முகம் நெற்றியில் பட்டடையான திருநீறு, கொஞ்சம் தாடி இவைகளோடு ஓர் இளைஞன் மிகமிக அமைதியாக உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்ப்பதே மனதுக்கு ஒரு சுகமாக இருந்தது.

கோயிலுக்குப் பின்புறம் இருந்தது 15 அடி இடம்தான். இவ்வளவு கோயில்கட்டி அதன்பின் இடம் 15 அடி நீளம் இருந்தால் வரும் கூட்டம் என்ன ஆகும். 'சுவாமி' இத எப்படியும் இன்னும் பெரிசாக்கணும் அப்போது அந்தப் 15 அடியில் பின்புறம் உயரமான மதில் இருந்தது. இந்த மதிலுக்குப் பக்கத்திலே என்ன இருக்குசாமி. 45 அடி ஆழம் பள்ளம் இருக்கு என்றார். கொஞ்சநேரம் பேசாமல் இருந்தோம், இருந்தாலும் தூர்ந்து அந்த இடத்தையும் இதோடு சேர்த்துத் தரையா போடறதுதான் நல்லது சாமி என்றேன்.

சாமிகள் மனதிலும் அதே எண்ணம் பல நாட்களாக ஓடிக் கொண்டிருக்கிறது. நானும் அப்படித்தான் நெனைக்கிறேன் ஒரு எண்ணிக்கையைச் சொல்லி அவ்வளவு ரூபாய் ஆகும் என்றார். அவ்வளவு பணம் தரமுடியாத என் அப்போதைய சூழல் பற்றி மிகவும் வருத்தப்பட்டேன். பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து நான்வந்ததும் சுவாமி அந்த மதிலை இடித்து விட்டிருந்தார். கீழே பார்த்தால் 45 அடி பாதாள பள்ளம்! எந்தப் புண்ணியவான் சுவாமி என்றேன். விவரம் சொன்னார். அப்போது நான் கேட்டதைத்தான் இப்போது சொல்லி அந்தப் புண்ணியவான் இவர்தான் என்று அந்த இளைஞரைக் காட்டினார்.

ஆழ்ந்த தெய்வ குணங்களில் ஒன்று நன்றி பாராட்டுதல். மற்றவர் செய்த சிறு நன்மையும் மனதாரப்பாராட்டுவது. மற்றவர்கள் மனமாற என்றால் சுவாமிகள் உலகமாற - உலகமே நிறைந்து போகும்படி காலம்,

நேரம், சூழல் பொருந்தப் பாராட்டுவார். அந்த இளைஞனின் பெயர் குமார். டாக்டர் சுகுமாரின் அக்காவின் மகனும் எம்.கே. ராதா அவர்களின் மகள் வயிற்றுப் பேரனும் ஆவார்.

அவர்களுடைய குடும்பமே அப்படிப்பட்ட குடும்பம். மிக மிகமிகப் பணிவு. ஆனது, அடங்கிய சான்றான்மை என்கிறார்களே அப்படிப்பட்ட சான்றான்மை ஆண்மை என்பது அடக்கும் தன்மையும் அடங்கும் தன்மையும், நன்றி பாராட்டும் தன்மையும்.

சுவாமிகளும் மிகமிக ஆழ்ந்த பக்திமட்டுமல்ல அவருக்கு பணஉதவியும், பக்கபலமும், மருத்துவபலமும் தேவைப்பட்ட காலங்களில் எல்லாம் அந்தக் குடும்பம் ஓடோடி வந்து செய்த செய்கிற குடும்பம்.

அந்தக் குடும்பம் பெரிய பெரிய கோடீஸ்வரக் குடும்பம் அல்ல அவர்கள் நிலைக்கு அவர்கள் கொடுத்து வரும் பணம் கோடிகளைக் கூடத் தாங்கும்.

கும்பாபிஷேகத்தின் கடைசி நேரத்தில் சுவாமிகள் படும் நெருக்கடி கண்டு சுகுமார், தன்னிடம் தன் பேரில் பேங்கில் தன் குடும்பத்திற்கு தன் அவசரச் செலவிற்குப் போட்டு வைத்திருந்த சிறுசிறு தொகைகளை எல்லாம் எடுத்து சில லட்சங்களாக தான் இப்படித் தருவதை, தான் நேரில் வந்து கொடுத்தால் வாங்காமல் நிச்சயம் திருப்பிக் கொடுத்துவிடுவார் என்பதை அறிந்து சுவாமிக்கு மிக வேண்டியவரிடம் சாமிகளிடம் எப்படியும் கொடுத்துவிடுங்கள். சுவாமிகள் முருகனின் இந்தக் கும்பாபிஷேகத்திற்கு உதவாத பணம், என்ன பணம் என்று கொடுத்தனுப்பி இருந்தார்.

சுவாமி இதைக் கண்டு மிகவும் கோபித்துக் கொண்டார். இந்தக் குடும்பத்தைப் பற்றி எழுத இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிறைவே இருக்கின்றன.

தமிழ்நாடு முழுதும், உலகம் முழுதும் ஆயிரக்கணக்கான பக்தியும், பணியும் வாரிவாரிக் கொடுக்கும் துணிச்சலும் நிறைந்த குடும்பங்கள் பால

முருகனுக்கும் சுவாமிகளுக்கும் உருவாகி இருக்கிறார்கள். முருகனும் சுவாமிகளும் உருவாக்கி இருக்கிறார்கள்.

அந்தக் குடும்பங்கள் சுவாமிகளும் பாலமுருகனும் வாழ்க!

ஓம்சரவணபவ! எல்லாப் புகழும் பால முருகனுக்கே!

இந்த முருகன் மடியில் முப்பது நாட்களில் நான் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தேன். கோயிலுக்கு வந்திருந்த டாக்டர் சுகுமார் என்னிடம் ஓர் அழகான போட்டோவை என்னிடம் கொண்டுவந்தார். அவர் மருத்துவக் கல்லூரியில் படித்து வந்தபோது விடுமுறை நாட்களில் சுவாமிகளோடு தங்கி இருந்தபோது எடுத்த படம்.

இந்த படத்தை ஒருநாள் விடியற்காலம் மூணு மணிக்கு சுவாமி எடுக்கச் சொல்லி எடுத்த போட்டோ இது அன்னிக்கு ஏதோ கோயில்லே நிகழ்ச்சி. போட்டோகிராபரும் அப்ப அங்க இருந்தார் என்றார்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சாமி நாங்கள் இருவரும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து எங்கள் பக்கத்தில் உட்கார்ந்தார் எங்கள் கையில் இருக்கும் போட்டோவை வாங்கிப் பார்த்து “எப்படிச் சாமியார் கணக்கா இருக்கிறான் பார்” என்றார்.

32. கடவுள் மங்கலம் அல்லது தெய்வநீர் நீராட்டு விழா அல்லது மகாகும்பாபிஷேகம்.

கடவுள் சிலையைப் பீடத்தில் நிறுத்தி தெய்வ சக்தி நிறைந்த நீரைக் கோயிலின் கோபுரத்துக் கலசங்கள்மீது ஊற்றி, நீராட்டும் விழா சிலப்பதிகாரத்தில் நடக்கிறது.

இளங்கோவடிகள் அந்த விழாவைக் கடவுள் மங்கலம் என்ற அழகான சொல்லால் குறிப்பிடுகிறார். "கடவுள் மங்கலம் செய்த பின்னர்"


அத்தகைய கடவுள் மங்கலப் பெருவிழா இரத்தினகிரி கோயிலில் 6.2.2003 ஆம் ஆண்டு வியாழக்கிழமை காலை 10 முதல் 10-15 மணிக்கு நடைபெற்றது. 34 ஆண்டுகள் 16 நாட்களாக இதற்கான பணிகளை பாலமுருகனடிமை சுவாமிகள் இரவும் பகலும் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்.

கையை வெறுங்கையாகவும் இடுப்பில் முழத்துண்டோடும் 20.3.1968ஆம் ஆண்டு காலை 9 மணிக்கு ஆரம்பித்த இந்த கும்பாபிஷேகம் 5 நாட்களாக ஒரு லட்சம் பேருக்கு உணவுதானம் செய்வது உள்பட, கலந்து கொண்ட 200 யாகம் நடத்துவோருக்கு அன்பளிப்பும், மரியாதையும், போக்குவரத்துப் படியும் கோயில் கட்டுமானம் உள்ளிட்டு நான்கு கோடி ரூபாய்க்கும் மிக அதிகமாகத் திட்டமிட்டு வீண் விரயம் ஆக்காமல், ஆகாமல் செலவிடப்பட்டுள்ளது.

அழகான யாக மண்டபத்தில் நான்கு நாட்களாக ஐந்தாம் கால யாக வழிபாடு வரை நேற்று நடந்தது. இன்று ஆறாம் கால யாக வழிபாடு இப்போது துவங்குகிறது. இந்த யாக வழிபாடு நிறைந்ததும் கும்பாபிஷேகம் கடவுள் மங்கலம் துவங்கும்.



புதிய கோயிலில் முருகப்பெருமானையும், அம்மாக்களையும் நிலை நிறுத்துவதற்காக, இதுவரை இருந்த பீடத்திலிருந்து பெயர்த்து வந்து, கோயில்முன் மெத்தையில் படுக்க வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. தவத்திரு. சுவாமிகள், திரு. வை. கணபதி சிற்பிகள் மற்றும் கோயிலையும், சிலைகளையும் உருவாக்கிய சிற்பி பெருமக்கள்.



புதிய விநாயகர் கோயிலில் தவத்திரு. சுவாமிகள், விநாயகரை வைத்து நிலைப்படுத்துகிறார். சுவாமிகள் அருகில் திரு. பெருமாள் சிற்பிகள்.



முருகனைப் பழையபடி புதிய கோயிலின் பீடத்தில் அமர்த்திப் பீடத்தோடு சிலையை அழுத்தமாகப் பிணைக்க மூலிகைகளைக் கலந்து உரலில் இட்டுச் சுவாமிகள் அஷ்டபந்தன மருந்து இடிக்கும் காட்சி.



புதிய முருகன் கோயிலில், முருகன் சிலையை நிலை நிறுத்துவதற்கு முன், பீடத்தில் தன் கையால் தான் செய்தமைத்த சக்கரத்தை அமைக்கிறார் நம் தவத்திரு. சுவாமிகள்.



முருகனுடைய சிலையை சுவாமிகள், பீடத்தில் வைத்து அஷ்டபந்தனம் செய்து நிலைநிறுத்துகிறார்.



கும்பாபிஷேக விழா, சுவாமிகளின் யானை வழிபாட்டோடு துவங்குகிறது.




யானைமுகக் கடவுள் நம் தவத்திரு. சுவாமிகளை வாழ்த்துகிறார்.



மேல் கோபுர மண்டபத் தங்கக் கலசத்திற்கு நம் தவத்திரு. சுவாமிகள் தன் தங்கக் கரங்களால் பட்டாடை கட்டுகிறார், கும்பாபிஷேகத்திற்குச் சிறிது நேரத்திற்கு முன்பாக.



கும்பாபிஷேகம் ஆரம்பமாகிறது. கோபுர உச்சியில் நின்று சுவாமிகள் கீழே நிற்கும் பக்தர் பெருமக்களுக்குப் பெருமிதத்தோடு பச்சைக் கொடியை உயரத்தூக்கி அசைக்கிறார்.




கோயில், மேல்கோபுரக் கும்பாபிஷேகக் காட்சி, கோபுரத்தின் உச்சியில் பலகையால் போடப்பட்ட பந்தலில், கும்பாபிஷேகம் துவங்குவதற்குச் சற்று முன்னர், கலசத்திற்குப் பட்டாடைப் பரிவட்டம் கட்டிச் சுவாமிகள் கும்பாபிஷேக நீரினை கலசத்தின்மீது ஊற்றத் தயாராக இருக்கிறார்.



தங்கம் மெருகிட்ட
கலசங்களுடன்
நம் தவத்திரு. சுவாமிகள்.



கும்பாபிசேக விழாவில் தவத்திரு. சுவாமிகளுடன்
சரவணபவன் தம்பதியினர்.



மேல் கோபுர கும்பாபிசேகம் முடிந்து விட்டது. உள்ளே கோயில் கோபுரத்திற்குக் கும்பாபிசேகம் செய்யத் தவத்திரு. சுவாமிகள், மேல் கோபுர கும்பாபிசேகத்தில் கலந்து கொண்ட பெருமக்களோடு கீழே இறங்கி வருகிறார்.



கோயில் கோபுரக் கலசத்தின் மிது தவத்திரு. சுவாமிகள் கும்பாபிஷேகம் செய்கிறார்.



இரத்தினகிரி கோயில் - 1968



இரத்தினகிரி கோயில் - 2003



திரு. பி.கே. துரைசாமி தம்பதியர், கோயம்புத்தூர்.




கீழ்மின்னல் கிராமப் பொதுமக்கள் மண்டலாபிஷேக விழாவிற்கு வரிசைத் தட்டுக்கள் கொண்டு வருதல்.




இக்கோயில் கருவறை, இராஜவிமானம் தங்கக் கலசம்,
ஸ்தாபனம் செய்திட உதவிய அன்புள்ளங்கள்.



அன்னதானப் பெருவிழாவில் கலந்து கொண்ட
செட்டிநாடு இளவரசர் திரு. ஐயப்பன் (எ) எம்.ஏ.எம்.ஆர்.
முத்தையா அவர்கள் மற்றும் கோவிலூர் மடாதிபதி
தவத்திரு நாச்சியப்ப சுவாமிகள்.



முருகனின் அருகில் நித்யவழிபாடு செய்யும் புண்ணியம் செய்த அர்ச்சகர்கள். தவத்திரு. சுவாமிகளின் இடது பக்கம் நிற்பவர் தலைமை அர்ச்சகர் திரு. ச.பிரசாத்.



கோயில், மற்றும் கோயில் அலுவலகத்தில் பல நிலைகளில் பணிபுரியும் அலுவலர்கள். தவத்திரு. சுவாமிகளின் வலதுபக்கம். கோயிலின் செயல் அலுவலர் திரு. எம். மகாலிங்கம். இடதுபக்கம். மேலாளர். திரு. தே. சிவனார் அமுது.



சென்ற பிறவிகளில் செய்த புண்ணியங்களின் பலனால், பாலமுருகன் ஆசிகளோடு, கோயிலுக்கும் தவத்திரு சுவாமிகளுக்கும் திருப்பணி செய்யும் அணுக்கத் தொண்டர்கள். சுவாமிகளின் வலதுபக்கம் கோயிலின் செயல் அலுவர் திரு. எம். மகாலிங்கம் அவர்கள்.



கோயில் அலுவலகத்தில் பணிபுரியும் அன்பார்ந்த அலுவலர்கள்.



பற்களை பயங்கரமாகக் காட்டும் யாளி. "தமிழ்நாட்டுக் கோயில்களிலேயே மிகப்பெரிய யாளிகள்" என்ற தனிப்புகழ் பெற்றுக் கொண்ட யாளிகள்.



தவத்திரு. சுவாமிகள். புதிய கோயிலின் வாயில் அருகில்.



தாமே ஒரு யாகமான
சுவாமிகள் இந்த
யாகங்களையும்,
அதன் காட்சியையும்,
மாட்சியையும்
கண்டவாறு
அமர்ந்திருக்கும் காட்சி.



கோலாகலமான விளக்கு அலங்காரங்களுடன்
கும்பாபிசேகம் நடைபெறுகிறது.

சுவாமிகள் அந்த விழாவிற்கு தன் அன்பான 34 ஆண்டுகால பக்தர்களுக்கு - முருக பக்தர்களுக்கு மனம் கனிந்து அழைப்பை விடுத்தார்.

அதில் நமக்குத் தேவையும் என்றும் நின்று நிலவும் இலக்கியமாகவும் அமைந்த பகுதியைக் காண்போம்.

"வள்ளி தெய்வானை உடனாய திருக்கோலத்தில் இரத்தினகிரியில் எழுந்தருளியுள்ள முருகன் 1968 மார்ச் திங்கள் 20ஆம் நாள் எம்மை ஆட்கொண்ட பிறகு, அவன் அருள் நோக்காலும் என்பால் அவன் செலுத்திய அருட் கிளர்ச்சியாலும், அயர்வுறா சீரிய தூய உணர்வோடு ஆற்றிவரும் திருத்தொண்டால் குன்றின் உச்சியில் ஒரு சிறுகோயில் இன்று குன்றுமேல் மற்றொரு குன்றுபோல் விளங்குகிறது.

யாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே எழுப்பியுள்ள இத்திருக்கோயில் எம் உள்ளுணர்வில் உருவானது. ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கி உருவாக்கியது. பாலமுருகனின் திருவருள் சென்று, எட்டாத இடத்தையெல்லாம் எட்டியது. தட்டாத கதவுகளை எல்லாம் தட்டியது. அன்பர்கள் பலரைத் திருக்கோயிலுக்கு அழைத்து வந்தது. அவர்களையெல்லாம் தங்கள் பொருளை அருளாக மாற்ற உதவியது.

ஒரு கட்டத்தில் கோயில் பணிகள் எல்லாம் முடங்கி, செய்வதறியாது நின்ற வேலையில் எமது வேண்டு கோளினை ஏற்று தமிழக அரசு 1994-95ல் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் வட்டியிலாக் கடனாக ரூ 10 லட்சம் அரசு மான்யம் ரூ 5 லட்சம், அறநிலையத்துறை ஆணையில் பொதுநல நிதிமூலம் ரூ 3 லட்சமும் உதவிபுரிந்தது.

விரிவாக்கம் பணிகளால் நிதிபற்றாக்குறையால் தொய்வு ஏற்பட்ட நேரத்தில், இப்போது கட்டி முடித்த செலவில் பெரும்பகுதி தங்கள் கையால் ஒரு ரூபாயும் தராமல் தங்கள் அன்பர்கள் கைகளில் தந்துத் புண்ணியமெல்லாம் அவ்வன்பர்கட்கும், அவர்களின் குடும்பத்திற்கும் சேரட்டும் எனத் தங்களுக்கென்று புண்ணியத்தைக் கூட நாடாமல், எமது முயற்சிக்கு ஊக்கமும், ஆசியும் உற்சாகமும் கொடுத்து எம் மனம் போலக் கட்டி முடிக்கப் பேராதரவு அளித்த இக்குன்றுரை முருகன்பால் பக்தியும்,

அன்புணர்வும் கொண்ட பக்தர்களது அறஉணர்வை நினைவு கூறும்போது தோன்றும் மகிழ்வைத் தங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

யாம் அவனுக்காக முயன்றெடுத்து வருவது சுதையாலும் இரும்பாலும் ஆகும் வெறும் கோயில் அன்று என்னையே உருக்கி, எழுதி, இருந்து, பார்த்திருக்கும், பார்த்திருந்து எழுதிக் கொண்டிருக்கும், உயிரோவியமான கோயில் என்பது யாவருக்கும் விளங்கும். இத்திருக்கோயில் கருவறை, தொடக்கத்திலிருந்த அதே இடத்தில், அதே திசையில், அதே அளவு முறையில் சிற்ப சாஸ்திரப்படி. கற்கோயிலாகச் சோழர் காலத்து முறையில் அமைத்திருக்கிறோம்.

கோயிலைச்சுற்றி பள்ளம், படுகுழியிருந்த இடங்களைச் சமதளப்படுத்தி எழில்மிகுந்த, எடுப்பான ஒரு சுற்றுப்பிரகாரமும் மற்றும் முகப்பு மண்டபமும் கட்டியிருக்கிறோம். கோயிலை நிர்மாணித்திட எடுத்துக்கொண்ட காலம் 17 ஆண்டுகள். அழகு மிளிரும் கருங்கற்காளாலான கருவறை, சுவரின் வெளிப்புறத்தே 6 படை வீட்டு முருகப்பெருமானின் திருவுருவங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. திருமுருகன் தங்கரதம் ஏறிச்சுற்றிவர ஒரு மகாமண்டபம் வானத்தைத் தொடும் கூரை. கருவறை விமானத்துக்கு மேல் ஒரு விமானம். இது ஓர் உலக அதிசயம். பால முருகனுக்கு வலப்பக்கத்தில் கற்பக விநாயகருக்கு தனிக்கோயில். அதை சுற்றிவர அழகுமிகு சுற்று மண்டபம்.

நீண்ட நெடு மண்டபத்திலே, நட்ட நடுவிலே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகான கொடிமரம். கருவறைக்கும் கொடி மரத்திற்கும் நடுவில் பலிபீடம். மயில் வாகனம் சிறப்பாக அமைந்துள்ளது. மண்டபத்தினைத் தாங்கி நிற்கும் யாளிகள் பத்து அவைகளின் அழ கண்கொள்ளாக் காட்சி. 200 சதுர அடி பரப்பளவு மட்டுமே கொண்டதாக இருந்த இக்கோயில் தற்போது 30,000 சதுர அடி பரப்பளவு கொண்டதாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இக்குன்றுறை பாலமுருகன் திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா உத்தம பட்ச யாகசாலை நிர்மாணித்து 54 யாக குண்டங்கள் அமைத்து நிகழும் 2003 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள்

6 ஆம் நாள் தமிழ் சித்ரபானு வருடம் தை மாதம் 23ஆம் நாள் வியாழக்கிழமை வளர்பிறை பஞ்சமி திதி உத்திரட்டாதி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினம் காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மீன லக்கினத்தில் நடைபெற உள்ளது.

34 ஆண்டுகளுக்கு முன் பிருந்தே இன்று வரையில் உடனிருந்து இந்தக் கோயிலை கட்ட உதவி வந்த தொடக்கக் கால பக்தர் களையும், அதற்குப் பிறகு இடைக் காலத்தில் அலை அலையாக வந்து கோயிலின் வளர்ச்சியிலும், வாழ்விலும் உறுதுணையாக இருந்த முருகனின் பக்தர்கள் அனைவரையும் தாங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்து இந்த யாகசாலை வேள்வி பூசையிலும், மகாகும்பாபிஷேகப் பெருவிழாவிலும் கலந்து கொண்டு அருள்மிகு பாலமுருகனை வணங்கி வழிபட்டுப் பிறவா பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்ய வேண்டி விரும்பி அழைக்கிறோம்."

மகா கும்பாபிஷேகம் நிறைந்தது

காலை எட்டு மணி. சுவாமி யாகம் நடந்து கொண்டிருக்கும் மண்டபத்தை ஒட்டிய யாகத்தில் பங்கு கொள்ளும் பக்தர்கள் அமரும் விரிப்பில், பக்தர்களோடு மனையில் அமர்ந்திருக்கிறார். பக்தர்கள் அவருக்கு இரண்டு பக்கங்களிலும் எதிரிலும் அமர்ந்திருக்கின்றனர்.

மந்திரங்கள் ஒலிக்கின்றன. அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு யாகக் குழியிலும் இருந்து யாகத்தீ எரிந்து கொண்டிருக்கிறது.

நிகழ்ச்சிகள் நடப்பதைப் பார்த்தபடியும், கண்காணித்த படியும், அன்பர்கள், பணி செய்பவர்கள் கூறுவதைக் கேட்டு பதில் சொல்லியபடியும், எழுதிக் காட்டிய படியும் இருக்கிறார்.

ஓர் அன்பர் சுவாமிகளின் மிக அருகில் வந்து முழங்காலிட்டு அவர் பக்கத்தில் அமர்ந்து தான் எழுதிக் கையில் வைத்திருந்த தாள் ஒன்றைக் கொடுக்கிறார். அதை வாங்கி உன்னிப்பாகப் படித்த சாமி அதில் ஏதோ ஒன்று எழுதி அவரிடம் காட்டி என்னவோ சொல் கிறார். உடனே கடிதம் கொடுத்தவர் அங்கிருந்து எழுந்து யாக மண்டபத்துக்கு வெளியே சென்றுவிட்டார்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு நானும் யாக சாலையிலிருந்து வெளியே வந்து விட்டேன். யாகசாலை, மலையடிவாரத்தில் படிக்கட்டின் ஆரம்ப மண்டபத்துக்கு எதிரே சற்று தள்ளி அமைந்திருக்கிறது.

நேற்று இரவு முருகர் சிலையும், அம்மாக்களின் சிலையும் இவ்வளவு நாட்கள் வைத்து வழிபாடு செய்யப்பட்ட, இடத்திலிருந்து பெயர்த்து எடுத்துப் புதிய கோயிலில் அமர்த்துவதற்கு, அந்தக் கோயிலின் வாசற்படியின் முன் கொண்டு வந்து வைக்கப்பட்டது. சுவாமிகளும் சிற்பிகளும் இதைச் செய்தார்கள்.

முருகரும் அம்மாக்களும் இத்தனை வருடங்களாகச் சுண்ணாம்பு உளுத்துப் போய் கொட்டிக் கொண்டிருந்த செங்கல் கோயிலில் இருந்து, இனி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆனாலும் உளுக்கவோ, உதிரவோ செய்யாத சோழப் பெரு மன்னர் கட்டிய கற்கோயிலின் கலை அமைப்புப்படி, சுவாமிகள் பார்த்துப் பார்த்துக் கட்டிய கோயிலில் அதற்குரிய முறைகளின் படி அமர்த்தப் பட்டார்கள் அமர்ந்தார்கள்.

அமர்த்துவதற்கு முன் சுவாமிகள் தன்னிடமிருந்து தானே யந்திரத் தகடு ஒன்றை முருகன் பீடத்தில் பொருத்தினார். அதன் மீது முருகன் சிலையும், பக்கங்களில் அம்மாக்களின் சிலைகளும் பொருத்தப்பட்டன. சிலையைப் பீடத்தில் இருக்கிப் பிடிக்கும் மருந்தை இடிக்கச் சுவாமிகள் முதலில் உரலுக்கு வழிபாடு செய்தார். பிறகு அதில் இட்டு இடித்தார். பிறகு பக்தர்கள் இடித்தார்கள்.

இடிக்கப்பட்ட மருந்தால் முருகர், அம்மாக்களின் சிலைகள் பீடத்தில் அழுத்தி இணைக்கப்பட்டது.

இதற்கு முன்பாக," விநாயகர் கோயிலில் விநாயகர் சிலை நிறுவப்பட்டது. சுவாமிகள் பீடத்தில் தன்கையால் தன்னுடைய யந்திரம் ஒன்றைப் பீடத்தில் வைத்தார். அதன்மீது விநாயகர் சிலை நிறுவப்பட்டது. சுவாமிகளும், சிற்பிகள் பெருபாலோரும் மிகவும் உடனிருந்து நிறுத்தினார்கள்.

கும்பாபிஷேக விழா முதல்நாள் செல்வத்தின் வடிவமும் விநாயகரின் வடிவமும் ஆகிய யானையின் வழிபாட்டிலிருந்து துவங்கியது. சுவாமி யானை பூஜையைத் துவங்கி, மனம் நிறைந்து நிறைவுசெய்தார்.

யானைக் கடவுள், விநாயகர் சுவாமிகளை அன்போடு வாழ்த்தினார்.

தெய்வ நீராட்டு விழாவிற்கு முன்நாள் இரவு அமைச்சர்கள் கோயிலுக்குத் தனித்தனியே வந்தார்கள். சுவாமிகள் அவர்களை எதிர் கொண்டு அழைத்துச் சென்று யாகசாலையையும் மலைமீது கோயில்களையும் காட்டினார்.

காலை பத்துமணி. யாகத்தில் வைத்து மந்திரங்கள் மூலமும் வழிபாட்டாலும் தெய்வத்தன்மை ஏற்றப்பட்ட நீர்குடம் மேலே கோபுரத்திற்குக் கொண்டு போகப்படுகிறது. சுவாமிகள் உடன் செல்கிறார். பக்தர் கூட்டமும் உடன் செல்கிறது.

10.10 சுவாமிகள் கோயிலின் மேல் கோபுரத்தைச் சுற்றி அமைந்திருந்த பலகைப் பந்தலில் கலசத்தின் முன் நிற்கிறார். அவரோடு பல்வேறு கோயில்களிலிருந்தும், மடங்கள் ஆசரமங்களில் இருந்தும் வந்திருந்த காவியணிந்த பெருமக்களும், காவி அணியாத பெருமக்களும், அமைச்சரும் மற்ற அன்பர்களும் நின்றிருந்தனர்.

கலசம் நீராட்டும் விழா துவங்கியது. கோயில் கோபுரக் கலசங்கள்மீது தெய்வநீர் ஊற்றி நீராட்டுவதற்கும், மலையடிவாரத்திலும், மலைகள் மீதும் உள்ள மற்ற கோயில்களின் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளைத் துவங்குவதற்கும், கோயில்படிகளிலும் மலையைச் சுற்றிலும் ஆங்காங்கே எல்லா இடங்களிலும் மலையடிவாரத்திலும் திரண்டிருந்த பக்தர்களுக்குக் கும்பாபிஷேகத் துவக்கத்தை தெரியப்படுத்துவதற்கும், சுவாமிகள் அடையாளமாக கோபுர உச்சியிலிருந்து பச்சைக் கொடியை தூக்கிப் பலமுறை நிதானமாக அசைத்தார்.

தெய்வ நீரைக் கலசங்கள் மீது கலசங்களின் வழியாகக் கோபுரம் முழுவதையும் ஊற்றப்பட்டது. கோபுரத்தின் கீழ் அமைந்துள்ள கோயிலையும், கோயில் பிரகாரத்தை சுற்று மண்டபத்தையும் கோயிலின் உட்புறத்தையும், அந்த நீர் நனைத்தது.

கோயிலுக்குள் நிலைப்படுத்தப்பட்டிருக்கும் தன்னிகரில்லாத கடவுள் முருகனிடமும் அம்மாக்களிடமும், வானத்தில் எப்போதும் பரவிச் செல்லும் தெய்வ அருள்: பக்தர்களின் துன்பங்களைத் தீர்க்கவும்,

செல்வத்தையும் திருப்திகரமான மனத்தையும் அருளவும் அந்த நீர்மூலம் நிறைந்தது.

அதற்கு முன்பு சுவாமி கலசத்திற்கு மாலை சூட்டியும், பட்டாடை அணிவித்தும் வழிபாடு செய்தார்.

மேல் கோபுரக் கலசங்களுக்கு நீராட்டு விழா நிறைவடைந்து, சுவாமிகள் வேகமாகக் கீழ் இறங்கி, உள்ளே கோயிலின் கோபுரக் கலசங்களுக்கு நீராட்டு விழா செய்ய வேகமாக இறங்கி வந்தார்.

வேகமாக வந்தவர் கோயில் கோபுரக் கலசத்தின்மீது ஏறப் போடப்பட்டிருந்த மரப் பலகைகளால் கட்டிய படிக்கட்டுகளில் வேகமாக ஏறி அதைச் சுற்றிப் போடப்பட்டிருந்த பலகைப் பந்தலில் நின்று தெய்வநீர் நிறைந்த குடத்தை எடுத்து கலசத்தின்மீது ஊற்றி நீராட்டுகிறார்.

எங்கும் "முருகா! முருகா! அரோகரா" என்ற ஒலி எழுகிறது.

நீராட்டு விழா நிறைவடைகிறது.

நான் மேலே கோபுர நீராட்டு நிகழ்ச்சியிலும் மற்றும் எந்த ஆரவார அமர்க்கள நிகழ்ச்சிகளிலும் என் இயல்புப்படி கலந்து கொள்ளவில்லை. சுவாமி கோயிலின் கோபுரக் கலசத்தின்மீது தெய்வநீரை ஊற்றி நீராட்டும்போது சரியான கோணத்தில் படம் எடுப்பதற்காகக் கோயிலின் பின்புறம் உயரமான ஏணியின் உச்சியில் அமர்ந்தபடிச் சுற்றிலும் நிகழ்ச்சிகளைப் பார்த்தபடி இருந்தேன்.

சுவாமிகள் வேகமாக வந்து மரப்படிகள்மீது ஏறிக் கோபுரக் கலசத்திடம் சென்றார். காமிராவில் காட்சியைச் குவிக்கும் பகுதியை சரியான அமைப்பில் வைத்தபடி இருந்தேன். சுவாமிகள் வந்த வேகமும் இடையில் இருந்த தூரமும் சரியான படியாகப் படம் எடுக்க முடியவில்லை.

மேலே கோபுரக் கலசத்தைச் சென்றடைந்த சுவாமிகளை அங்கிருந்த கூட்டம் சுற்றிக் கொண்டது. அங்கும் படம் எடுப்பது எதிர்பார்த்தபடி அமையவில்லை. சுவாமி தெய்வநீர், நீராட்டு விழா முடித்ததும் வேகமாகப்

படிகள் வழியே இறங்கிக் கீழே வந்தார். படிகளில் இறங்கும் நிகழ்ச்சி எடுக்க முடிந்தது.

படிகளில் இருந்து இறங்கியதும், அவருடைய அறையின் முன்னால் நின்று கொண்டு, முதன் முதலாகக் கோபுரக் கலசத்தை நிமிர்ந்து பார்த்தார். அந்தக் காட்சியை எடுத்த படம் நன்றாக அமைந்தது.

அவர் முகத்தைப் பார்த்தேன் 35 ஆண்டுகள் அந்த நிகழ்ச்சியைக் காண அவர் தேக்கி வைத்திருந்த உணர்வுகளும், உணர்ச்சிகளும், அது மிகமிக அழகாக, ஆழமாக நிறைவேறியதால் நிறைவு பெற்ற பெருமிதமும், பெரும் நிலையும் ததும்பி ரோசா மலராக முகம் எங்கும் மலர்ந்திருந்தது.

அதற்குள் பக்தர்களின் பெருங்கூட்டம் சுவாமிகளை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு சூழ்ந்து கொண்டது. காலில் விழுந்து ஆசிகள் கோரினர். கைகளைத் திருநீறுக்காக நீட்டினர். பக்தர்கள் சுவாமிகளைச் சுற்றிப் பாதுகாப்பாக நின்றனர்.

சுவாமிகள் மிகுந்த மகிழ்ச்சியோடும் பொறுமையாக, மலர்ந்த முகத்தோடும் விபூதிகொடுத்து ஆசிகள் வழங்கியபடியே இருந்தார். இன்னார், இனியார், தெரிந்தவர், தெரியாதவர் என்று எல்லோருக்கும், கொடுத்துக் கொண்டிருந்தார். இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக இது நடந்தபடியே இருந்தது. நான் ஏணியின் உச்சியில் மறுபடியும் உட்கார்ந்து கொண்டு பார்த்தபடியே இருந்தேன்.

திடீரென்று முருகா! ஒரு லைட்டைக்கூட உன்னுடைய இந்தக் கோயிலில் எரிய வைக்கமாட்டாயா? என்றும்

“சுவாமி இவ்வளவு பிரம்மாண்டமாக் கோயில் கட்றார். இந்தக் கோயில் கும்பாபிஷேகத்தைப் பார்த்திட்டுச் சாகணும். இந்த முருகன் என்ன பண்ணுவானோ” என்று என்னிடம் கூறிய, இந்தக் கோயில் ஆதி தர்மகர்த்தாவும், இந்தக் கோயிலுக்கு .இதற்குமுன் கும்பாபிஷேகத்தை நடத்தியவரும், இந்தக் கோயிலின் முன்னேற்றத்திலும் முருகன் மீதும் உயிரையே வைத்திருந் மறைந்து போன சுவாமிகளின் தந்தை கந்தசாமி முதலியாரின் நினைவு வந்தது.

தொடர்ந்து சுவாமிகள் ஞானநிலை உற்றபோது உடன் இருந்து, இருபது ஆண்டுகளாகச் சுவாமிகளின் நிழலாகவே கோயிலில் வாழ்ந்து, "சுவாமி கோயில் கட்டறார் திருப்பணிக்கு நன்கொடை தரலாம்" என்று தன் கரகரப்பான குரலில் கோயிலின் திருப்பணிக்குப் பணம் திரட்டிக் கும்பாபிஷேகத்தை பார்க்கவேண்டும். அதற்கான காரியங்களைத் தன் கைகளால் செய்ய வேண்டும் என்று மிகுந்த ஆவலோடு இருந்து திடீரென்று மறைந்துவிட்ட சந்தான குருக்களின் நினைவு வந்தது.

பிறகு ஒன்றரை வயது குழந்தையாக இருந்தது முதல், தந்தையின் சீராட்டும், முறையான அன்பும் கிடைக்காமல் அன்பிற்காக ஏங்கிப், பல்வேறு துன்பப்பட்டு, இறுதியில் ஒரு தொழிலைப் பிடித்து, அதில் வசதி ஏற்பட்டதுமே, இந்த முருகன் கோயிலில் ரோடில் இருக்கும் வளைவு முதல், படிகள் ஏறும் பாதைகள் வரை இப்போது உள்ள பாதையைப் போட்டுக் கோயிலுக்கு அழகையும் ஆரோக்கியத்தையும் தந்த பகீரதனின் நினைவு தோன்றியது.

என் கண்கள் கண்ணீரால் நனைந்தன.

மூன்று சின்னஞ்சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு ஆபிசுக்குத் தன்னிடம் மத்தியானச் சாப்பாட்டை வாங்கிக் கொண்டு போனவர். ஊர் எல்லையைத் தாண்டுவதற்குள்ளே கோயிலில் நுழைந்து, முருகனுக்கு அடிமையாகி வீட்டுக்குள் அடிவைக்காதத் தன் அடிவயிற்றைக் கலக்கிய கொடும் துயரத்தையும், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட சூழலையும் இத்தனை ஆண்டுகள் தாங்கிக் கொண்டு, குழந்தைகள் நினைவாகவும், கணவர் நினைவாகவுமே வாழ்ந்துவரும் சிவகாமி அம்மையாரின் நினைவும் வந்தது.

ஆழ்ந்த அமைதி என்னை மூடிக்கொண்டது. நீண்ட நேரம் அமர்ந்திருந்தேன்.

பக்தர்கள் கூட்டம் மேலும் மேலும் வந்து சுவாமிகளைச் சூழ்ந்தபடியே இருந்தது. சுவாமிகள் அனைவருக்கும் முருகனின் அருளாசி வடிவமான

திருநீற்றை அளித்தபடியே இருந்தார். ஏணியின் உச்சியில் இருந்து மெல்ல இறங்கி கோயிலைச் சுற்றிக் கொண்டு முகப்பு மண்டபத்திற்கு வந்தேன். என்ன மகிழ்ச்சியான கூட்டம்! மலர்ச்சியானகூட்டம்! மண்டபம் முழுதும் அமர்ந்து கொண்டும்; மலைபாதை வழியாக மிகுந்த சுகத்தோடு கூட்டம் கூட்டமாக போய்க்கொண்டும் இருந்தார்கள்.

வானத்தில் மேகமூட்டம் அதிகமாக இருந்தது. வெய்யிலே தெரியவில்லை.. விடியற்காலை நேரம்போல் ஒன்றிரண்டு மழைத்துளிகளும் லேசாகத் தூறத் துவங்கின. இராஜகோபுர வாசல் வழியாக இறங்கி, மலைப் பாதைக்கு வந்து சரசரவென்று கீழே இழுத்துச் செல்லும் தூய்மை மயமான மலைபாதையில் கால் வைத்தேன் சில்லென்று காற்று வீசியது.

மனநிறைந்து பொங்கியது. சக்கரவர்த்தி நடை நடந்து கீழே மெல்ல ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து,

“சக்கரவர்த்தி நடையில் முருகன் என்னை நடக்க விட்டான்.

சுவாமி சாம்ராச்சியத்தின், முருக சாம்ராச்சியத்தின் முடி சூட்டு விழாவை இனிமையாக முடித்து விட்டார்.


முருகன் முடி சூட்டிக் கொண்டான்.

பாலமுருகன் முடிசூட்டிக் கொண்டான்.

ஊர் அறிந்து, உலகம் அறிந்து அருளாட்சி துவங்கி விட்டது.

எல்லாப் புகழும் முருகனுக்கே! எல்லாம் புகழும் அவனடிமை சுவாமிகளுக்கே!

ஓம் சரவண பவ...



தவத்திரு . பாலமுருகனடிமை சுவாமிகள்